# தேம்பாவணி

(மூன்றாங் காண்டம்)

தமிழ் இலக்கியக் கழகம்,

தூத்துக்குடி.

# தம்பாவணி

(மூன்றுங் காண்டம்)

தமிழ் இலக்கியக் கழகம்,

தூத்துக்குடி.

வீரமாமுனிவர் அருளிச்செய்த

# தேம்பாவணி

## மூன்றுங் காண்டம்

வித்துவான் :

ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை

எழுதிய

விளக்கக் குறிப்புகள் முதலியவற்றுடன்

தமிழ் இலக்கியக் கழகம்

தூத்துக்குடி

முதற் பதிப்பு: 2 டிசம்பர் 1964.

[பதிப்புரிமை]

தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.

[விலை ரூ. 3-50

ST. JOSEPH'S PRESS, TUTICORIN.

CONNEMARA PUBLIC LIBRARY
1 - SEP 1965
MADRAS

# பதிப்புரை

—:0:—

தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காப்பியத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் பயின்று பயன்பெற வேண்டுமென்பது தமிழ் இலக்கியக் கழகத்தின் நோக்கங்களுள் ஒன்று. இந்நோக்கத்தை நிறைவேற்றத் தமிழ் இலக்கியக் கழகம் பல முயற்சிகள் எடுத்து வந்துளது. அவற்றுள் தேம்பாவணி முழுவதையும் புதிய முறையில் வெளியிடுவ தொன்றாகும். 1961–இல் இம்முறையில் முதற் காண்டம் வெளி வந்தது. இவ்வாண்டின் தொடக்கத்தில் இரண்டாங் காண்டம் வெளி வந்தது. இப்பொழுது மூன்றாங் காண்டம் வெளிவருகின்றது.

இத்தாலி நாட்டினின்று இந்நாடு போந்து நம் தாய்மொழியாம் தமிழை நன்கு பயின்று தமிழிற் பெரும் புலமை பெற்றுத் தமிழ் மகனாக வாழ்ந்து சமயத் திருப்பணியாற்றிய ஜோசப் கான்ஸ்டான்சியுஸ் பெஸ்கி (Joseph Constantius Beschi) என்னும் வீரமா முனிவர், தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்க்குத் தந்த காப்பியக் கருவூலம் தேம்பாவணி. கிறிஸ்து மறைக் கொள்கைகளை அறிய விரும்பும் பிற சமயத்தவர்க்கும் தேம்பாவணி ஓர் இனிய விருந்து.

உலக இரட்சகராம் இயேசு பெருமான் வரலாற்றையும், அவரது திருத் தாயார், அவரை வளர்த்த புனிதர் சூசையப்பர் ஆகியோரைப் பற்றிய வரலாறுகளையும் போற்றும் முறையில் வீரமா முனிவர் காப்பிய நெறிப்படி தேம்பாவணியை இயற்றியுள்ளார். இம்மூவருள் தேவ குமாரனையும் அவர் திருத் தாயாரையும் பாதுகாத்தவரும் தம் பெயர்கொண்ட புனிதருமாகிய சூசையப்பரையே தேம்பாவணியின் காப்பியத் தலைவராகக் கொண்டுள்ளார்.

புனிதர் சூசையப்பரைப் பற்றி வேதாகமத்துள் ஒரு சில குறிப்புக்களே காணப்படுகின்றன. ஆகிருத மரியாள் எழுதிய சூசைமாமுனிவர் வரலாற்றைத் தம் நூலுக்கு ஆதாரமாகக் கொண்டதாக வீரமாமுனிவர் கூறுகின்றார். அந்நூல் யாதெனத் தெரியவில்லை. எனினும், வீரமாமுனிவர் அறிந்த சூசை முனிவர் வரலாறு அவரது கற்பனைத் திறனால் இந்நூலில்

ஒளிபெற்றுத் திகழ்வதைக் காணலாம். பழைய புதிய வேதாகமங்களையும் கிறிஸ்து சமய உண்மைகளையும் இலக்கியச் சுவையோடு தெளிவாக எடுத்துரைத்துச் சமயமும் தமிழும் தழைக்க வீரமாமுனிவர் ஆற்றிய தொண்டினுக்கு வணக்கம் செலுத்தி இம் மூன்றாங் காண்டத்தை வெளியிடுகின்றோம்.

நம் இந்திய நாட்டில் – பம்பாய் நகரில் உலக சற்பிரசாத மாநாடு நடைபெறும் பொற்காலத்தில் கிறிஸ்து பெருமானின் மாபெரும் பிரதிநிதியாகிய பாப்பரசர் நம் இந்திய நாட்டுக்கு எழுந்தருளுகின்றார். "புனித தலத்திற்கு யாத்திரை சென்றது போல ஆசியாக் கண்டத்தின் தலைவாயிலாக உள்ள இந்தியாவுக்குச் செல்லுவதிலும் நாம் பெருமையடைகிறோம். அந் நாட்டில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேத போதக அலுவலில் பாடு பட்ட புனிதர்கள், வேத சாட்சிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே இத்திருயாத்திரையை மேற்கொள்ளுகிறோம்" என்று கூறி அன்புடன் எழுந்தருளிவரும் நம் பரிசுத்த தந்தை ஆறும் சின்னப்பர் அவர்களின் பொன்னடிகளில், வீரமாமுனிவர் ஆற்றிய சமயத் திருப்பணியின் சின்னமாக விளங்கும் இந்நூலைப் பணிவுடன் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

2—12—1964
தூத்துக்குடி.

தமிழ் இலக்கியக் கழகத்தார்.

# புறவுரை

திருமறை அறிவும் ஒழுக்கமும் பன்மொழிப் புலமையும் வாய்க்கப் பெற்றுச் சேசு சபைக் குருவாகி வேதபோதகராய்த் தமிழ் நாட்டுக்கு வந்த ஜோசப் கான்ஸ்டான்சியுஸ் பெஸ்கி என்னும் இயற் பெயருடைய வீரமா முனிவர், வடநூற் கடலும் தமிழ் நூற்கடலும் நிலை கண்டுணர்ந்து அருளிச் செய்த நூல்கள் பலவற்றுள் சூசைமா முனிவரின் திருக்கதை கூறும் தேம்பாவணி பெருங்காப்பிய வரிசையில் வைத்துப் போற்றப்படும் கிறிஸ்துமறைக் கருவூலமாகும். அண்மைக் காலம் வரையிலும் காப்பியங்கள் சமயச் சார்புடையனவாகவே தோன்றினவாதலின் வீரமாமுனிவர் பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகக் கிறிஸ்தவர்களும் பயின்று பயன்பெறு நோக்கோடு இந்நூலை இயற்றியருளினார்.

இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த புலவர்கள் இயற்றும் காப்பியங்கள் பத்து அழகுகளும் எழுவகை மதமும் பொருந்தி, பொருள்கோள் வகை, செய்யுள் விகாரங்கள், ஆகுபெயர், இலக்கணை, அருத்தாபத்தி முதலியன அமைந்து, இயற்சொல்லோடு திரிசொல் திசைச்சொல் வடசொற்களும் கலந்து தொடை நயமும் அணிநயமும் செறியத் தொடுத்துப் புணர்ச்சி நெறி வழுவாது எழுதப்படுதலின் புலமை மிக்கார்க்கேயன்றி மற்றையோர்க்கு அவற்றின் பொருளைப் புரிந்து கொள்ளுதல் இயலாது. இதுபற்றியே இத்தகைய நூல்களுக்கு உரைவல்லார் பதவுரை பொழிப்புரை விளக்கவுரை முதலாயின எழுதலாயினர். வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி மேற்கூறிய முறையில் அமைந்ததுமன்றிக் கிறிஸ்துமறைத் தத்துவங்களுமுடைமையான் படிப்பவர் திகைத்தல் இயல்பே. இதனாலேயே வீரமா முனிவர் தம் மாணாக்கரொருவரைக்கொண்டு பொழிப்புரை எழுதுவித்தார். பழங்கால முறையில் தமிழ் பயின்றவர் அவ்வுரையுடன் கூடிய அந்நூலைப் படித்துத் தாம் இன்புற்றதோடு தேம்பாவணிப் பொருளை விரித்துரைத்துப் பிறரையும் மகிழ்வித்து மேன்மேலும் பயின்று வந்தனர் என்பதைப் பலர் அறிவர். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வித்துவான் ஜெகராவு முதலியார் எழுதிய விருத்தியுரையுடன் கூடிய தேம்பாவணி முதற் காண்டம் அதனைப் பயில்வார்க்கு மேலும் ஊக்கமளித்தது. எனினும், வீரமாமுனிவர் விரும்பியவாறும் தேம்பாவணியைப் புதுவையில் முதன்முதல் பதிப்பித்த சுவாமியவர்கள் விரும்பியவாறும் இதனைப் படிப்பவரும் பொருள் விரித்துரைப்பவரும் கிறிஸ்தவருள்ளும் பெரும்பாலார் காணப்படாமை

வருந்தத்தக்கதாகும். அதனைப் படித்து இன்புறும் ஒரு சிலருள் நண்பர் வி. மரிய அந்தோனி M. A. அவர்கள் சூசையப்பரின் வரலாறு கூறும் செய்யுட்களைத் தொகுத்துப் பதவுரையும் விளக்கவுரையும் எழுதியுதவ தமிழ் இலக்கியக் கழகத்தார் அதனை வெளியிட்டுத் தேம்பாவணி மாநாடு கூட்டி அரங்கேற்றினார்கள் என்பது இங்குக் குறிக்கத்தக்கது.

பழந் தமிழ் இலக்கியங்களை மாணவர்களும் படிக்கும் அளவில் எளிய முறையில் அமைத்து வெளியிடுவதனால் மாணவர் பலர் அதனை விருப்பிப்படிக்க முன்வருகின்றனர் என்பதனை உணர்ந்த சிறியேன் உள்ளத்தில் இந்நூலைப் புதிய முறையில் வெளியிட்டால் படிப்பவர் பலராகி நற்பயன் விளையும் என்று ஒரெண்ணம் தோன்றியது. இறைவன் திருவருளால் அவ்வெண்ணம் வேட்கையாக வளர்ந்து தமிழ் இலக்கியக் கழக ஆதரவைப் பெற்றது. தேம்பாவணி மாநாட்டின்போது முதற் காண்டம் வெளிவரும் நிலையிலிருந்தது. இப்பொழுது மூன்று காண்டங்களும் வெளிவந்துவிட்டன. செந்தமிழ்க் கடலின் ஒரு துளியையே பருகிய சிறியேன் தேம்பாவணியை மாணவரும் பயிலும் பொருட்டுச் செய்த இம்முயற்சியில் குற்றம் காணின் பொறுத்துக் குணங் கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இந்நூல் வெளியிடும்பொழுது என்னுள் தோன்றாத் துணையாயிருந்து ஊக்குவித்த இறைவனை மனமொழி மெய்களால் இறைஞ்சி, வீரமாமுனிவரின் திருப் பணியை வாழ்த்தி வணங்குகின்றேன். தமிழ் இலக்கியக் கழகத்தாரின் இசைவைப் பெற்று இந்நூலை வெளியிடுதலாகிய அரும்பணியைச் செய்து என்னை ஊக்குவித்த கழகச் செயலாளர் சங். மிக்கேல் சுவாமியவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். அவர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் உரியன இந்நூலை வெளியிட்ட கழகத்தார்க்கும் தொடக்கமுதல் ஆசியளித்தும் அன்புமொழி கூறியும் ஊக்குவித்த பெரியார்களுக்கும் நண்பர்களுக்கும் என் வணக்கமும் நன்றியும் உரியனவாகுக. குறித்த காலத்துக்குள் இந்நூலைத் திருத்தமாக வெளியிட இயன்றவரை ஒத்துழைத்த அச்சகத்தார்க்கும் என் நன்றி உரியது.

**ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை,**
தமிழாசிரியர்,
புனித சவேரியார் உயர்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

தூத்துக்குடி,
8–11–1964

# உள்ளுறை


| | | பக்கம் | மொத்தச் செய்யுள் |
|---|---|---|---|
| | பதிப்புரை | iii | |
| | புறவுரை | v | |
| | தேம்பாவணி மூன்றாங்காண்டம் படலச் சுருக்கம் | க | |
| 1. | குழவிகள் வதைப்படலம் | 1 | 100 |
| 2. | கருணையன் மாட்சிப் படலம் | 23 | 183 |
| 3. | ஞாபகப் படலம் | 57 | 175 |
| 4. | வாமன் ஆட்சிப் படலம் | 97 | 158 |
| 5. | வேதக் கெழுமைப் படலம் | 129 | 130 |
| 6. | மீட்சிப் படலம் | 156 | 160 |
| 7. | பிரிந்த மகவைக் காண்படலம் | 193 | 100 |
| 8. | புரோகிதப் படலம் | 212 | 108 |
| 9. | பிணிதோற்று படலம் | 236 | 28 |
| 10. | தூதுரைப் படலம் | 241 | 60 |
| 11. | உத்தானப் படலம் | 252 | 86 |
| 12. | முடிசூட்டு படலம் | 267 | 133 |
| | | | 1421 |
| | செய்யுள் முதற் குறிப்பகராதி | 295 | |
| | பிழைதிருத்தம் | 309 | |

# சந்தம் வேறுபடும் செய்யுள் எண்கள்

| | | |
|---|---|---|
| 1. | குழவிகள் வதைப் படலம் | 1, 11, 19, 29, 39, 57, 74, 85, 91. |
| 2. | கருணையன் மாட்சிப் படலம் | 1, 15, 27, 40, 54, 77, 91, 118, 139, 144, 158, 171. |
| 3, | ஞாபகப் படலம் | 1, 9, 19, 29, 37, 46, 61, 66, 80, 93, 102, 118, 129, 137, 145, 155, 166. |
| 4. | வாமன் ஆட்சிப் படலம் | 1, 20, 36, 54, 75, 86, 97, 113, 127, 141, 149. |
| 5. | வேதக் கெழுமைப் படலம் | 1, 18, 26, 35, 49, 55, 66, 77, 89, 97, 109, 121. |
| 6. | மீட்சிப் படலம் | 1, 9, 20, 35, 42, 61, 85, 91, 101, 115, 123, 140, 146, 151, |
| 7. | பிரிந்த மகவைக் காண்படலம் | 1, 9, 15, 24, 36, 47, 61, 80, 85, 94. |
| 8. | புரோகிதப் படலம் | 1, 11, 22, 32, 39, 48, 51, 72, 90, 97. |
| 9, | பிணி தோற்று படலம் | 1, 12, 23. |
| 10 | தூதுரைப் படலம் | 1, 13, 23, 33, 45, 53, |
| 11. | உத்தானப் படலம் | 1, 20, 27, 39, 56, 68, 74, 81. |
| 12. | முடி சூட்டு படலம் | 1, 17, 28, 44, 50, 74, 81, 94, 102, 107, 117, 129. |

# 1. குழந்தைகள் வதைப் படலம்

(ஏரோதரசன் குழந்தைகளைக் கொன்ற செய்தியைக் கூறுவது)

ஏரோதன் கொடுமைக்கு அஞ்சி சூசைமுனிவரும் மரியும் திருமகனும் எகிப்து நாட்டிற்கு ஓடியதும், வழியில் பழைய வேத வரலாற்றுத் தொடர்புடைய இடங்களைக் கண்டு மகிழ்ந்ததும், எகிப்து நாட்டவர்க்குச் சூசை முனிவர் திருமறை உபதேசம் செய்ததும், பேய்கள் அவரைத் துன்புறுத்த முயன்று தோல்வி யுற்றதும் ஆகிய செய்திகள் இரண்டாங் காண்டத்தில் கூறப் பட்டுள்ளன. திருக்குடும்பத்தார் எகிப்தில் வாழ்ந்த போது யூதேய நாட்டில் நிகழ்ந்த செய்திகளும் சூசைமுனிவரின் திரு மறையொழுக்கமும் பற்றி இப்படலத்திற் காண்போம்.

யூதேய நாட்டை ஆண்ட ஏரோதன் என்பவன், வானில் தோன்றிய புதிய விண்மீனாலும் மூவரசர் மொழியாலும், வேத நூல் வல்லார் உரையாலும் 'யூதேயாவின் மன்னன் பிறந்திருக் கிறான்' என்று தெளிந்து, அக் குழந்தையைக் கண்டு பிடித்துக் கொல்வதற்காகச் சிலபோர் வீரர்களை அனுப்பினான். அவர்கள் அந்நாடெல்லாம் தேடியும் காணாமல் திரும்பி வரவே, அரசன் பெருங்கவலையுற்று ஊணுறக்கமின்றி யிருந்தான். இந்நிலையில், எல்லாக் குழந்தைகளையும் கொன்றுவிட்டால், பிறந்திருக்கும் யூதேயாவின் மன்னனும் அதிலுட்பட்டு இறந்து போவான் என்ற ஒரு பேய் எண்ணம், அவன் மனத்துள் குடி புகுந்தது. அதனைத் தானே செய்ததாகப் பிறர் எண்ணுதபடி, அமைச்சர் களை அழைத்துத் தன் கவலையைத் தெரிவித்துத் தக்க ஆலோ சனை சொல்லுமாறு கேட்டான். அவர்களுள் நாபன் என்பவன், "பகையை அழிப்பது செங்கோல்முறை; ஆதலால், அக் குழந் தையைக் கண்டுபிடித்துக் கொன்றுவிட வேண்டும்" என்றான். அதற்கு அரசன், 'அவன் இருக்குமிடம் தெரியாமல் இருப்பதால் நாம் செய்யத் தகுவது யாது?' என்று வினவ, மதியான் என்பவன், "ஒரு பலாப் பழத்தினுள் ஒரு சுளை நஞ்சாயிருப் பின், அதனை அறியமுடியாதவிடத்து அவையனைத்தையும் நீக்கி விடுவது போல, நம் பகைவனாய் வரும் குழந்தையை அறிய முடியாத நிலையில் எல்லாக் குழந்தைகளையும் கொன்று விடுவதே முறை" என்றான்.

பின்னர், அருகிலிருந்த ஏலியன் என்னும் நீதிமான் எழுந்து, 'ஐயங்கொண்டு ஓர் உயிருக்காகப் பல உயிர்களைக் கொல்வது நீதியோ' என்று வினவ, கிசலன் என்பான், 'அரசுரிமையைக் காக்க அவ்வாறு செய்வது தவறன்று' என்றான். பின்னர், ஏலியன் அரசனை நோக்கி, "உலகையாளும் இரட்சகர் பெத்லேம் நகரில் பிறப்பார் என்றும், அப்போது புதிய விண்மீன் தோன்றும் என்றும் வேதத்தில் கூறப்பட்டுளது. அவரைக் காண வந்த மூவரசர்களை நீர் கண்டீர்; இடையர் காட்சி கண்டதையும், சிமையோன் சான்று பகர்ந்ததையும் பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கிறீர். வானுலக அரசன் நும்பூவுலக ஆட்சியை விரும்பினான் எனல் நீதியன்று. எனவே, நும்செயல் தக்கதன்று" என்றான். அதுகேட்ட காலியன், "வீரமுள்ள அரசர் பகைவரை வென்றும், கொன்றும் முடி சூட்டிக்கொள்வது வழக்கம். இதனை அறியாதவன் போல் நீ பேசுகின்றாய்" என்று கடிந்துரைத்தான். அப்பொழுது ஏலியன், "மோயிசனை இகழ்ந்தவர்கள் அழிந்தார்கள்; எலிசேயுவை இகழ்ந்தவர்கள் கரடிகளால் கொல்லப்பட்டார்கள். இறைவனின் பத்துக் கட்டளைகளைத் தாங்கிய பேழையை மதியாமல் நின்றவர்கள் மாண்டார்கள். எனவே, இறைவனுக்கு எதிரான செயல் புரியாமல், அவனை வணங்குவீராயின் நல்வாழ்வு பெறுவீர்" என்றான்.

ஏரோதன் இதற்கொன்றும் செவி கொடாமல் மலக்கன் என்பவனை அழைத்துக் குழந்தைகளையெல்லாம் வெட்டிக் கொல்லுமாறு கட்டளையிட்டான். உடனே கொலைஞர்கள் சென்று, ஓநாய்களைப்போல் தாய்மார்கள் மேற் பாய்ந்து குழந்தைகளைப் பறித்து வெட்டிக் கொன்றார்கள். குருதி ஆறாக ஓடியது. இதனை மரியும் சூசையும் ஒரு காட்சியிற் கண்டு இரங்கி அழுதனர். அவ்வமயம் மற்றொரு காட்சியில், அக்குழந்தைகள் விண்ணுலகில் மகிழ்ந்திருப்பதுபோல் கண்டனர்; அதனால் துயர் நீங்கித் தம் திருமகனைப் போற்றி வணங்கினர்.

## 2. கருணையன் மாட்சிப் படலம்

(கிறிஸ்துநாதரின் முன்னோடி எனப்படும் கருணையன் (யோவான்) வரலாற்றைக் கூறுவது)

யூதமாபுரத்தில் அறநெறி வழுவாத சக்கரியன் என்பவர் கற்புக்கு அணிகலமாம் எலிசபெத்தை என்னும் தம் வாழ்க்கைத் துணைவியோடு இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். அவர்கள் இருவரும் கொடையிலும் தவத்திலும் சிறந்து நல்லற முயற்சியும் வேத நூலறிவும் மிக்கவராய் விளங்கினர். எனினும் மக்களில்லாக் குறையொன்று இருந்தது. 'அதுவும் இறைவன் திருவுளமே' என்று எண்ணி அமைந்தார். ஒரு நாள் இல்லற துறவறத்தை இணைத்து வாழ்ந்த இவர்க்குத் தம் தூதனுக்கும் ஒருவன் பிள்ளையாய்த் தோன்றுமாறு இறைவன் திருவுளங் கொண்டார். எனவே, சக்கரியன் வேள்வி செய்து கொண்டிருக்கையில், இறைவனால் அனுப்பப் பட்ட காபிரியேல் என்னும் தூதன்வந்து, "நின் அறத்திற்கு ஏற்ப நினக்கொரு மைந்தன் பிறப்பான். அவனைக் கருணையன் என்று அழைப்பாயாக. அவனே இறைவனின் வழிகளைச் செப்பனிடுவான்" என்றான். அதற்குச் சக்கரியன், "வயது முதிர்ந்த நாங்கள், இனி ஒரு பிள்ளையைப் பெற்று மகிழ்வேமோ" என்று கேட்க, அவ்வானவன், "இறைவன் திருவுளத்தின் மீது ஐயங்கொண்ட நீ, அதனைக் காணும்வரை ஊமையாயிருப்பாய்" என்று கூறி மறைந்தான். அவ்வாறு அவர் வாய் பேசாதிருந்த நாளில் எலிசபெத்தைக் கருவுற்றாள். ஆறு திங்கள் நிரம்பியது. இதனை வானவனால் அறிந்த இரட்சகரைக் கருவுற்ற மரியாள், தான் எலிசபெத்தைக் கண்டால், அவள் பிள்ளை, பெரும் பயனடைவான் என்று உணர்ந்தாள். உடனே மரியாள், தானும் வாழ்க்கைத் துணைவர் சூசையுமாக எலிசபெத்தை வாழ்ந்த ஊருக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் யூதமாபுரத்தை அடைந்ததும், எலிசபெத்தையும் சக்கரியனும் எதிர் கொண்டு மகிழ்ந்தனர். மரியாள் எலிசபெத்தையைத் தழுவி, "கோடையில் வற்றிய தடாகம் மழையால் நிரம்பியது போல நீ உன் முதிர்ந்த பருவத்தில் இறைவன் அருளால் கருவுற்றாய்." என்று உரைத்துக் கருவிலிருந்த கருணையனின் பழவினைமாசை அகற்றினாள். அவ்வமயம்

எலிசபெத்தை வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிக் கன்னிமரியாளின் திருவயிற்றில் அவதரித்த திருமகனின் திருவடியை வணங்கியது. இதனை அகக்காட்சியால் உணர்ந்த எலிசபெத்தை "பிரிந்த கன்றினைத் தேடிவரும் பசுவைப் போலவும், காய்ந்த பயிர்க்கு உயிராய் வரும் மழையைப் போலவும் எனக்கு அளவற்ற வரங்களைத் தரும்படி என்னைத்தேடி வந்த கன்னித்தாயே! பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீயே. உணர்தற்கரிய வாழ்த்துதலுள் முழுகி ஆசி நிறைந்தவர் உன் கருவினுள் இருக்கும் திருமகன். மறைமொழியாவும் உன்னிடத்து நிறைவேறும்; உன் புகழ் எங்கும் போற்றப்படும்" என்றார்.

எலிசபெத்தை கூறிய புகழ்மொழிகளைத் தேவதாய் தன் திருமகனுக்கு உரிமையாக்கி, "இவ்வடிமையை இறைவன் தயையோடு பார்த்ததனால், எல்லாரும் என்னைச் 'செல்வி' எனப் புகழ்வர். இறைவன் தன் நீதியால், உயர்ந்தவரைத் தாழ்த்தினார்; தாழ்ந்தவரை உயர்த்தினார். செல்வரை வறியராக்கி வறியவரைச் செல்வராக்கினார். தமக்குப் பயந்தவர்களைக் காப்பாற்றினார். அவரது வல்லமையின்முன் நிற்பவர் யார்?" என்று புகழ்ந்தாள்.

மரியாள் தன் துணைவருடன் எலிசபெத்தை மனையில் மூன்று மாதம் தங்கியிருந்தாள். திங்கள் நிறையவே, எலிசபெத்தை கருணையனை ஈன்றாள். மரியாள் அக்குழந்தையை மார்போடணைத்து வரங்களை ஊட்டினாள். கருணையன் களிப்பால் துள்ளித் தலைவணங்கினான். குழந்தை பிறந்த எட்டாவது நாளில் வேத விதிப்படி 'கருணையன்' எனப் பெயரிட்டனர். சக்கரீயன் ஊமைத்தன்மை நீங்கப்பெற்றார். சூசையும் மரியும் அக்குழந்தைக்கு ஆசீரளித்துத் தம்மூருக்குத் திரும்பினர்.

இஃது இவ்வாறிருக்க, முற் படலத்தில் கூறியவாறு ஏரோதனது கொலைக்கு அஞ்சி திருமகனோடு எகிப்து நாடு சென்றிருந்த மரியாளும் சூசையும், எருசலேம் நகரில், ஏரோதன் கொடுமையால் குழந்தைகள் கொல்லப்பட்டதைக் காட்சியிற் கண்டதும், அக்குழந்தைகளோடு கருணையன் இறவாதபடி செய்விக்க ஒரு வானவனை எலிசபெத்தையிடம் அனுப்பினர். அவ்வானவன் சொன்னவைகளைக் கேட்டு, கணவனை இழந்து வருந்தி வாழ்ந்த எலிசபெத்தைத் தனக்கு உரிய பொருள்களை இரப்போர்க்கு ஈந்து தன் செல்வ மகனை எடுத்துக்கொண்டு

கானகம் அடைந்தாள். அங்குக் காய் கனிகளையருந்திக் காலங் கழித்து வருகையில், ஒருநாள், தான் இறக்குங் காலம் நெருங்கியது என உணர்ந்து, மகனைத் தன் அருகில் அழைத்து, "மகனே, வஞ்சனை குடிகொண்ட மனிதர்கள் நடுவே இருப்பதினும் விலங்குகள் வாழும் காட்டில் இருப்பது நலமாம். 'ஊக்கமே தந்தை, தவமே தாய், மெய்ஞ் ஞானமே தோழன், அருளே மணத் துணைவி, பொறுமையே மகன்' எனக் கொண்டு நீ வாழ்வாயாக. கதிரவன் தோன்றியதும் காவின் மலர்கள் மலர்ந்தும், பறவைகள் இனிதாய்ப் பாடியும் இறைவனை வாழ்த்துகின்றன இவை, நீயும் இறைவனை வாழ்த்த வழிகாட்டும் குருக்கள். மதுமலர்க் காடுகளின் அழகினில் மயங்காமலும் நெடுவழியிற் கிடந்த பெரிய கற்களுக்கு அஞ்சாமலும், கடலை நாடி ஓடும் அருவியை வேத நூலாகக் கொண்டு, உலக இன்பத்தை விரும்பாமலும் துன்பத்துக்கு அஞ்சாமலும் இறைவனை நாடுவாயாக" என்று பலவாறு அன்புரைகள் கூறி மகனைத் தழுவினாள். இந்நிகழ்ச்சியைத் திருமகனும் மரியும் சூசையும் காட்சியிற் கண்டு எலிசபெத்தை இறக்குங் காலம் அண்மியது என உணர்ந்து வருந்தினர். மரியாள், வானவரை அவர்களுக்குத் தேறுதல் மொழி கூறுமாறு அனுப்பினாள். எலிசபெத்தை அவ்வானவரிடம், "அன்னை மரி ஏவிய அண்ணலரே, நீரே, என் மகனை ஓம்பும் தாயும் தந்தையும் ஆவீர்," எனக் கூறித் தன் மகன் மேற்சாய்ந்து உயிர் துறந்தாள். பெற்ற தாயை இழந்த கருணையன் உற்ற துயர்க்கோர் அளவில்லை. பிறகு வானவர் தேற்றத் தேறி ஒரு சோலையில் அவள் திருவுடலை அடக்கம் செய்தான்.

தாயின் பிரிவாற்றாது வருந்திய கருணையன், "இவ்வுலக வாழ்வு நிலையற்றது. நான் என் தாயின் வயிற்றில் இருந்த போதே பழம்பழி நீங்கப் பெற்றேன். இறைவன் தாயும் மரியென்பவள் கையில் நானும் சாய்ந்து அடைந்த வரங்கள் அளவில. எனினும், எனக்கு நாலு வயது நிரம்பு முன்னே என்னைப் பெற்றுப் பேணி வளர்த்த தாயும் இறந்தாள். தாயற்ற சிறுவனாகிய யான், தவ வழியிற் சென்றாலும் என் உடல் என்னை அறவழியிற் செல்லாது தடுத்தலும் கூடுமே. கோபம் நீதியாகவும், காமம் அன்பாகவும், பொருட் பற்று உலகில் துணையாகவும் தோன்றி என்னைப் பாவ வழியிற் புகுத்தலும் கூடும்' என்று பலவாறு கலங்கிப் புலம்பியழுதான். அவன் வருந்துவதைக் காட்சியிற் கண்ட சூசையும் மரியும் அவனுக்கு ஆறுதல் அளிக்கத் திருமகனை வேண்டினர். அவர் வானவரிடம், "தாயின் வயிற்றில் இருக்கும்போதே பரம குருவாய்ப் பழம்பழி நீங்கிய நீ, இவ்வுலகையும் உடலையும் வெல்வதரிதன்று"

என்று சொல்லுமாறு பணித்தார். மரியாள் சில உணவுகளைக் கொடுத்தனுப்பினாள். வளனார், 'தாழ்ச்சியால் உயர்ந்தார், மாட்சியில் உயர்வர்' என்று கூறுங்கள் என்றார்.

வானவர் சென்றபோது கருணையன் பேரீந்திலை ஆடையால் தன் உடலைப் போர்த்தித் துயின்று கொண்டிருந்தான். வானவர் ஒளியால் அவன் துயில் நீங்கி எழுந்து, 'நீவிர் யார்' எனக் கேட்டான். வானவர், திருமகனும் சூசையும் உரைத்தவைகளைச் சொல்லி மரியாள் தந்த உணவையும் அளித்தனர். கருணையன், வானவரை வணங்கி ஏற்று உளமிக மகிழ்ந்தான். இறைவன் அடியாரின் பெருமையைப் போற்றினான். இதன் பின்னரும் மரியாள் இவ்வாறு இடைக்கிடையே வானவர் வழியாய்க் கருணையனுக்கு உணவளித்து வந்தாள்.

இது நிற்க. ஒரு நாள் வளனார் திருமகனிடம், கருணையன் காட்டில் வாழ்ந்து வருந்தாதபடி அவனை நின் திருவடியிற் சேர்த்தலாகாதோ?' என்றார். அதற்குத் திருமகன், "நான் உலகம் தீவினையாற் கொண்ட துயர்களைத் தீர்க்கும் இரட்சகனாய் வந்தேன். எனக்கு வழியமைக்கும் தூதனாகக் கருணையனைத் தேர்ந்தேன். அவன் கானகத்தில் வளர்ந்து யோர்தான் நதிக்கரையில் வேத உண்மைகளை விளக்குவான். அவன் உரையை அரசனும் விரும்பிக் கேட்பான். ஏரோதரசன், தன் தம்பியாகிய பிலிப்புவின் மனைவியைக் காமக்கிழத்தியாக்கிப் பாவ வழியில் ஒழுகுதலை அறிந்து, அவனைக் கண்டிப்பான். அரசன் சினங்கொண்டு அவனைச் சிறையில் அடைப்பான். அவளும் கருணையனைக் கொல்லக் காலம் பார்த்திருப்பாள். அரசன் பிறந்த நாள் விழாவில், அவன் காமத்துணைவி தன் மகளை அரசவைக்கு அனுப்பி ஆடல் பாடல்களால் அவனை மயக்குவிப்பாள். அப்பொழுது அவன் 'நீ விரும்பிய பொருளைப் பரிசாகத் தருவேன்' என்பான். அவள் கருணையன் தலையைக் கேட்குமாறு மகளிடம்கூறுவாள். மகள் அவ்வாறேகேட்க, மன்னன் "கருணையன் தலையைக் கொய்யக் கட்டளையிடுவான். அந்நாளில் அவன் நம் திருவடியடைவான்." என்றான். இதனைக் கேட்ட மாதவன் சூசை, காமத்தின் கொடுமையைக் கூறி, அக் கொடுமையுடையார்க்கு அஞ்சாத நிலையைக் கருணையன் பெறுவதை நினைந்து போற்றினார்.

# 3. ஞாபகப் படலம்

(வளனார் நல்லொழுக்க உபதேசம் செய்த
செய்தியைக் கூறுவது)

சூசை முனிவர் மரியாளோடும் திருமகனோடும் எகிப்து நாட்டில் இரவிமாபுரத்தில் ஒரு சிறுமனையில் வாழ்ந்து மக்களுக்கு அறநெறியின் வழி காட்டியாக விளங்கினர். அவர், மறவினைப் பேயை வென்ற நாளில், திருமகன் முதன்முறை தரையில் தன் திருவடியை வைத்து நடந்தான். அந்நாளில் மரியன்னை தையலும் இசைப்புமின்றித் தான் பின்னிய மெய்ப்பையை அவனுக்கு அணிவித்து மகிழ்ந்தாள். திருமகன் சென்ற இடமெல்லாம் அவன் பின்னே செல்வது அவர்கட்குப் பேரின்பமாக இருந்தது. அன்று, திருமகன் சூசை முனிவரை அன்புடன் நோக்கி, "நான் இந்நாட்டில் மொய்த்து நின்ற பேய்களாகிய முட்களை நரகில் விழும்படி செய்தேன். இனி நீவிர் அறங்களை விதைத்து வான் வீட்டின்பமாகிய பயிர் விளையும்படி செய்வீர். நான் அருள்மழை பொழிவேன். அவ்வாறு நாம் செய்யும்போது பேய்கள் வந்து மக்களின் மனத்தைக் கலக்கி ஆசைகளை வளர்க்கும். அதனால் உண்டாகும் பாவக் களைகளை வேரோடு பிடுங்கி நல்லற ஒழுக்கங்கள் நற்பயனை விளைக்கும்படி செய்வீராக" என்றான். அதற்கு அவர், வேத நூலை விளக்கும் அருளாற்றலைத் தருமாறு வேண்டினர். "கதிரவனுக்கு ஒளி வீசவும், நறுமலர்க்கு மணம் வீசவும் கற்பிப்பார் இல்லை. நிறைந்த அன்பும், உயர்ந்த அறிவும் உடையவர் நீர். நான் தேடிவந்த உயிர்கள்மேல் அன்பு வைத்து வேத நூலை உணர்த்துவீராக," என்று கூறி ஆசியளித்தார் திருமகன். சூசை முனிவர் தம் இறை பணியைத் தொடங்கினர். நாடகத்தில் புறக்கோலத்தால் மட்டும் அரசனாகத் தோன்றுபவனும், உள்ளே நஞ்சினைக் கொண்டு புற அழகால் கவர்ச்சியளிக்கும் எட்டிக் கனியும், நரம்புகளுக்கு இன்னோசையூட்டித் தான் இன்னோசை பெற இயலாத முறுக்காணியும் போலாகாமல், சூசை முனிவர், உள்ளும் புறமுமொத்த நல்லொழுக்கமுடையவராய்த் தம் அருள் நிறைந்த உள்ளத்தின் உணர்ச்சிகளை மக்களுக்கு எடுத்துரைத்தும் வந்தார். பிறர்க்கு உதவி செய்பவர், அவர்

அன்பைத் தமக்கு உரியதாய்க் கொள்வர் என நினைந்து, பிறரைப் பேணி அவர் பொருட்டுத் தன்னையே அளிக்கும் அருள் நிறைந்த உள்ளத்தோடு அவர்களை நேசித்தார். உடல் தளர்ந்த வறியவர்க்கு இரந்தும் உணவளித்தார். எல்லோர்க்கும் உற்ற துணையாய் உறுவழி காட்டியாய் விளங்கினார். சூசை முனிவரின் அறவுபதேசத்தைப் புலனடக்கமுடைய மெய்யுணர்வுடையார் பலர் பின்பற்றி அறிவிலோங்கினர்.

ஒரு நாள், பெருஞ் செல்வர் பலர் சூசை முனிவரிடம் வந்து, அவரை வணங்கி, ஈகையால் வரும் பயனை விளக்குமாறு வேண்டினர். அதற்கு அவர், "மேகம் முழங்கி இடித்து இருண்டாலும், அதனை எண்ணாது, அது மழை பொழியுங் காரணத்தால் அதனை எல்லோரும் புகழ்வர். அதுபோல, ஒருவன் குற்றமுடையவனாயினும், அவன் கொடையுடையவனாயின் அவனை எல்லோரும் புகழ்வர். ஈகையால் வீண் புகழை நாடுவது வணிகர் தொழில். கொடையால் நற்பயனை விரும்புகிறவர், தம் குற்றம் மறைக்க கொடை பயன்படும் என்று எண்ணவும் அஞ்சுவர். எனவே, அத்தகையார் பிறரறியக் கொடுக்கமாட்டார். வயலுக்கு மழைபொழியும் வான் மேகம் போல் வறியவர்க்கே உதவுவார். ஈகை, மறுமையில் மட்டுமன்றி இம்மையிலும் பயன்விளைக்கும் என்பதற்கு யான் கூறும் வரலாற்றைக் கேளுங்கள்.

கலிலேயா நாட்டில் நெற்றலிமாபுரத்தில் தோபியன் என்ற ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் அன்னம்மாள். இவரிருவரும் அறநெறிப்படி இல்வாழ்க்கை நடத்தி தயோதரன் என்னும் ஒரு நன்மகனைப் பெற்று இனிது வாழ்ந்து வந்தனர். சில காலத்துக்குப் பிறகு அவர்கள் நினிவே நகரிற் குடியேறினர். இறைவன் அவர்களது அறத்தின் பயனை அனைவருக்கும் விளக்கத் திருவுளங்கொண்டார். திடீரென அவர்கள் செல்வம் குறைந்து வறியவராயினர். சின்னாளில் தோபியன் கண் பார்வை இழந்தார். இந்நிலையிலும் அவர் உள்ளங் கலங்கவில்லை.

இவ்வாறிருக்க, அவர், தமது சொந்த நாடாகிய கலிலேயா நாட்டிற் சிலர், தமக்குத் தர வேண்டியதாயிருந்த கடனைப் பெற்றுக்கொண்டு வரவும், அங்குத் தன் மகனுக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து மணமுடித்து வரவும் தகுதியான ஓர்

ஆளைத் தேடிக் கொண்டிருந்தார். அப்பொழுது இறைவன் அனுப்பிய வானவனொருவன் ஓர் ஆள் வடிவில் அங்கு வந்து அவரோடு உள்ளங் கலந்து உரையாடினான்.

தோபியனும், அவர் மனைவியும் அந்த ஆளோடு தன் மகனைக் கலிலேயாவுக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் ஓர் ஆற்றைக் கடந்து செல்லுகையில் ஒரு பெரிய மீன் அவர்களை விழுங்க வந்தது. வானவன் அம்மீனைப் பிடித்துக் கிழித்து, அதன் ஈரலையும், பித்தப் பையையும் தயோதரனிடம் கொடுத்து "இதனைப் பத்திரமாய் வைத்துக் கொள்க' என்றான். இருவரும் கலிலேயாவை அடைந்ததும், வானவன் தோபியனுக்கு வர வேண்டிய நிலுவையெல்லாம் பெற்று, நிவலன் என்னும் பெருஞ்செல்வன் மகளைத் தயோதரனுக்கு மணமுடித்து வைத்தான். நிவலன் தன் மகளுக்குப் பெருஞ் சீதனம் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தான்.

கலிலேயாவுக்குச் சென்ற அவர்கள் திரும்பி வருவதற்குப் பல நாட்களாயின. தோபியன் மனைவி தன் அருமை மகனை நெடுநாட்களாய்க் காணாததால், கணவரிடம், "ஐயா, நாம் முதலில் பொருளை இழந்தோம்; பின்பு நீர் குருடரானீர். இப்பொழுது அருமைப் புதல்வனையும் காணோம். நாம் செய்த தவத்தின் பயன் இவைதானோ" என்றாள். தோபியன், "பேதாய்! இவையெல்லாம் துன்பம் தருவனவோ? செய்யும் தீமை ஒன்றே துன்பம் தரும்; அறத்தால் வருவது இன்பமேயாகும். இறைவன் அருளை நம்பு. அவர் நம்மைக் கைவிட மாட்டார்" என்றார்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மகனும் மருமகளும் வந்து அவர்களை வணங்கினார்கள். தோபியன், "மகனே! உங்களைக் காண எனக்குக் கண்களில்லையே என்று சொல்லி இன்பக் கண்ணீர் உதிர்த்து ஆசி அளித்தார். அவ்வமயம் துணைவனாய்ச் சென்ற வானவன் மீனின் பித்தப்பையை எடுத்து தோபியன் கண்ணில் பிழியுமாறு தயோதரனிடம் கூறினான். தயோதரன் அவ்வாறு பிழியவே, தோபியன் கண் பார்வை பெற்றுப் பெருங் களிப்புற்றார். பிறகு தயோதரன் தாங்கள் சென்ற இடத்தில் நிகழ்ந்தவைகளையெல்லாம் கூறினான். அவற்றைக் கேட்ட தோபியன், துணையாகச் சென்ற அவ் வானவனை நோக்கி, "ஐயா, நீர் செய்த பேருதவிக்கு

யான் என்ன கைம்மாறு செய்வேன். நீங்கள் கொண்டு வந்த செல்வத்தில் பாதியாவது பெற்றுக்கொண்டால்தான் என் மனம் மகிழ்ச்சியடையும்'' என்றார். அதற்கு அவ்வானவன், "வள்ளலே நீர் செய்த அறத்தின் பயனை அடைந்தீர். நான் இறைவன் தூதன்" என்று சொல்லி மறைந்தான். இங்ஙனம் வளனூர் தோபியன் வரலாற்றைக் கூறி முடித்ததும், அதனைக் கேட்டவர்கள் மிக மகிழ்ந்து அறம் புரிவதில் மேலும் விருப்பம் உடையவராயினர்.

சூசையின் உபதேசத்தைக் கேட்டவருள் சிவாசிவன் என்பவன், "ஐயா, நீர் சொல்லியது உண்மை. அல்லியை அறுத்தபோது அதன் நூலும் உடன் செல்லுதல்போல ஒருவன் இப்பிறப்பில் செய்த தருமம் அவனை மறுபிறப்பிலும் தொடரும்" என்றான். அவனுக்குச் சூசை, "வீண் கதைகளை வேதம் எனக் கொள்ள வேண்டா; முற்பிறப்பில் தனக்கு நேர்ந்தவைகளைத் தன் தெளிந்த ஞானத்தால் அறிந்து கூறியவர் இது வரையில் எவரும் இலரே" என்றார். 'இறந்தவர் மீண்டும் பிறவாமல் இருப்பாராயின், அவர் முன்கொண்ட தீவினை எங்ஙனம் ஒழியும்' என்றான் சிவாசிவன். அதற்கு அவர், "பெருந் தீவினையோடு இறந்தவர், தீச் சிறையாகிய நரகில் வீழ்வர். தவமெனும் வாளால் தீவினையறுத்தவர், இறைவனைக் காணும் பேரின்பமுறுவர். தீயோரும் நல்லோருமாகாமல் நடுவே நின்றவர், ஒப்பனைத் தீயுலகில் தீவினை ஒழியுமட்டும் கிடந்து வருந்திப் பின் வானின்பமுறுவர். இதுவே, எழுபத்திரண்டு வேதாகமங்களுள் காணக் கிடக்கும் உண்மை" என்றார். இதனைக் கேட்ட சிவாசிவன், 'உறுப்பழகும் உறுப்புக் குறைவும் செல்வமும் வறுமையும் உலகில் அமைந்திருப்பது இறைவன் நீதிக்குப் புறம்பானதே' என்றான். அதற்கு மறுமொழியாக, சூசை, "தீவினைகளைச் செய்யுமுன் மாசற்ற உயிர், முதல் உடலில் எவ்வாறு புகுந்தது? படைப்புக் காலத்தில் எல்லோரும் அரசராய் வாழ்ந்தாரா? — இல்லை — பலவிதமாய்த் தோன்றினரெனில், அதுவே இப்பொழுதுள்ள வேற்றுமைக்குக் காரணமாய் இறைவன் நீதியாய் அமையுமன்றோ?" என்றார்.

இப்பதிலைக்கேட்டதும் சிவாசிவன், 'இறைவன் தலையில் எழுதிய விதியே வேற்றுமைக்குக் காரணம்' என்றான். "நீதியும் அன்புமுடையகடவுள், ஒருவனை உயர்மகனாகவும், மற்றொருவனை இழிமகனாகவும் ஆகுமாறு தலையெழுத்து அமைத்தார் என்பது

அவரது அருளுக்குப் பொருந்துவதாகுமா?" என்று கேட்க, 'அது அவரது திருவுளம்' என்றனர். "அத்திருவுளமே உலகில் மக்களிடம் காணப்படும் வேற்றுமைக்கெல்லாம் காரணமெனில் தவறு யாது?" என்று வினவ, சிவாசிவன் திகைத்தான். அந் நிலையில் சூசை முனிவர் அவனை நோக்கி, "மதி வல்லோய்! உலகிற் பொருட் செல்வமுடையவரும் உளர். அருட் செல்வ முடையவரும் உளர். பொருட் செல்வம் நல்லோரிடத்தும் தீயோரிடத்தும் உண்டு. அருட் செல்வம் மாண்பு மிக்கவரிடமே உண்டு. பொருட் செல்வம் மக்களை மயக்குவிக்கும் செல்வம். அருட் செல்வமொன்றே அவனவன் ஆசைக்களவாக அழியா மல் வளர்ந்து வரும் செல்வமாகும். உலகில் எல்லாப் பொரு ளிலும் வேற்றுமை இருப்பதுபோல மனிதர்க்குள்ளும் வேற் றுமை இருக்கிறது. நல்லறமொன்றே எல்லோர்க்கும் பொது வான செல்வமாகும். வறுமையும் செல்வமும் மனித குலத்தின் இரு கைகள். எப்பொழுதும் நல்லோர் வாழவும் தீயோர் வருந்தவும் இறைவன் வகுக்காமைக்குக் காரணம், அவரவர் தாம் தாம் செய்யும் நல்வினை தீவினைக்கேற்ப முடிவில்லாத பயனை பெறுதற்கேயாகும்" என்றார்.

சூசை முனிவர் இவ்வாறெல்லாம் எடுத்துச் சொல்லியும், சிவாசிவன், 'இவையெல்லாவற்றிற்கும் காரணம், விதியின் செயல்தான்' என்று மறுத்துக் கூறினான். உடனே, அருகி ருந்த நுமான் என்பவன், 'எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது' என்று சொல்லி எழுந்து சிவாசிவனைப் பிடித்து இழுத்து அடித்து, 'அழாதே, அடா, இது விதியின் செயல்' என்று சொன்னான். எல்லோரும் சிரித்து அக் கொடிய விதியை விலக் கினர். பின்பும் சிவாசிவன், 'இது என்னைக் கொல்லவிருந்த விதிதான்.' என்று சொல்லி முனிவரை நோக்கி, 'ஐயா, எனக்கு ஓர் ஐயமுளது, கற்றறிந்த எங்கள் முன்னோர், ஊழ் வினை உண்டென்று சொல்லியிருக்கின்றனரே, அது தலைவிதி யன்றி வேறென்ன' என்று கேட்டான். அதற்குச் சூசை முனிவர் பின்வருமாறு விளக்கமாகப் பதிலுரைப்பாராயினர்.

கற்றோர் கூறிய ஊழ்வினை, நீ சொன்ன தலையெழுத்தின் விதியன்று. வேதநூற் கருத்தைக் கூறுகிறேன் கேள். இறை வன் உலகத்தைப் படைத்த பின் முதல் மனிதராகிய ஆதம் ஏவையைப் படைத்து ஓர் அழகிய சோலையின்கண் வைத்தார்.

வைத்து, "இச்சோலையின் நடுவிலுள்ள ஒரு மரத்தின் கனியைத் தவிர மற்றெல்லாவற்றையும் நீவிர் உண்ணலாம். நும் வணக்கத்தின் இறையாக இதன் கனியை மட்டும் உண்ணுதல் கூடாது. உண்பீராயின் நீவிர் என்றும் சாவீர்" என்றார். ஒரு நாள் ஏவை அம்மரத்தின் அருகில் நின்ற போது, அலகை வந்து, 'பெண்ணே, நீ இக்கனியை உண்ணுததேன்?' என்று கேட்க, அவள் 'எங்களைப் படைத்த இறைவன், இதைத் தின்றால் துயருற்றுச் சாவோம் என்று விலக்கியுள்ளார்' என்றாள். அலகை, 'ஒளிதிகழ் பெண்ணே, கலங்காதே. நீ இக்கனியை உண்டால் மிக்க வரங்களையடைந்து தேவரைப்போல் ஆவாய்' என்றது. ஏவை, அக்கனியின் மேல் ஆசையுற்று அதனைப் பறித்து உண்டாள். வானின்பம் இழந்ததை உணராத அப்பெண், அக்கனியை உண்டதும், தான் சாகவில்லையே என்று மகிழ்ந்து, மற்றொரு கனியைப் பறித்துக் கணவனிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் அதைக்கண்டு அஞ்சினான். எனினும், தன் துணைவியின் முகத்தைப் பார்த்து வருத்தத்துடன் வாங்கினான். அவ்வேளையில், 'இதனை நீ உண்ணுவிட்டால் உன்தேவி இறந்து படுவாள்' என்றது அலகை. அவனும் அதை உண்டான். ஒரு பெண்ணழகே ஆதாமின் நஞ்சாகி, வான்வீட்டு நன்மைகள் யாவற்றையும் ஒழித்தது. மனித குலத்தின் முதல்வர் செய்த தீவினை மனிதகுல முழுமைக்கும் உரிய ஊழ்வினையாய் மலர்ந்தது. இதனையே பெரியோர் 'ஊழ்வினை' என்று கூறினர் என்றார்.

இதைக் கேட்ட விகரன் என்பவன், 'ஐயா, அவர்கள் அக்கனியை உண்டு கெடுவார்கள் என்று அறிந்தும், இறைவன் அக்கட்டளையை இடுவானேன்' என்று வினவ, சிவாசிவன் 'கனியைத் தீண்ட வேண்டா' என்றதும், தீண்டியவரைத் தண்டித்ததும் கொடுமையா? அறிவற்றவனே' என்று விகரனை இகழ்ந்தான். அப்பொழுது சூசை முனிவர், 'இறைவன் மனிதர்க்குப் பகுத்தறிவும், மனச்சுதந்தரமும் கொடுத்து, அவரை வழிபடுதற்கு ஓர் ஆணையாகவே அம்மரக் கனியை உண்ணக் கூடாது என்றார். அவ்வாணையை மீறியதே அவர்கள் குற்றம். அம் முதல் மனிதரால் மனிதகுலம் முழுவதும் பாவச் சிறையுள் விழுந்தாலும், வான்பேறு இழந்துவிடாதபடி அவர்களை மீட்க இரட்சகரை அனுப்புவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார்' என்றார். இதனைக் கேட்டதும் சிவாசிவன் மனந்தெளிந்து, 'எந்நாட்டில் எக்குலத்தில் இரட்சகர் பிறப்பார்?' என்று கேட்டான். 'சில நாட்களுக்குமுன் அறிஞர் ஆராய்ந்து கூறியபடி,

என் நாட்டில் என்குலத்தில் இந்நாளில் இரட்சகர் பிறந்திருக்க வேண்டும். அவர் செல்லுமிடமெல்லாம் பேய்கள் நில்லாது ஓடிப்போகும்' என்றார். இம்மறைமொழியைச் சிவாசிவன் நன்கு ஆராய்ந்து சூசை முனிவரிடம் இருக்கும் பாலகனே இரட்சகன் என்று உணர்ந்து, அத்திருமகனை நோக்கி வணங்கினான். இரட்சகரின் அருட் பார்வையால் அவன் ஞானத் தெளிவடைந்தான். மற்றவர்கள் சூசை முனிவரை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார்கள்.

இவ்வாறு, இரவிமாபுரத்தில் சிவாசிவன் சூசை முனிவரின் திருமறையிற் சேர்ந்ததை அறிந்து, பலர் அவ்வேதத்தைப் பின்பற்றத் தொடங்கினர். வேறு சிலர், சூசை முனிவரிடம் வந்து, 'இப்பொழுது, நாங்கள் வணங்கி வந்த தேவர்கள், எங்கள் வேண்டுதலைக் கேட்காமல் ஓடிப் போய்விட்டார்களே' என்றனர். 'அவர்கள் பிழைக்க வழியில்லாமல் போயிருப்பார்கள்; உங்களுக்கு ஒரே கடவுள் வேண்டுமா? அஞ்சி ஓடிய தேவர்கள் வேண்டுமா?' என்று கேட்க, விநாதத்தன் என்பவன் 'இருவருந்தான் வேண்டும்' என்றான். அதற்கு முனிவர், 'ஒரே தேவனுக்குரிய ஆராதனைகள், பொய்த் தேவர்களுக்குத் தகுமா' என்றார். அப்பொழுது வசிட்டன் என்பவன், விநாதத்தனிடம் 'இருட்டறையில் அரும் பொருளைத் தேடுவதுபோல் தேவ இலட்சணங்களை அறியாமையால் இவ்வாறு கூறுகிறாய்,' என்று சொல்லி, முனிவரை நோக்கித் தேவ இலக்கணங்களைச் சொல்லி விளக்குமாறு வேண்டினான். அப்பொழுது சூசை முனிவர், 'தன் வயத்தனாதல், தொடக்கமிலனாதல், பொறியிலனாதல், நிலைபெற்ற நன்மையுளனாதல், எங்கும் நிறைந்தவனாதல், எல்லாவற்றையும் பிறப்பித்த காரணனாதல்' முதலிய தேவ இலட்சணங்களைக் கூறி விளக்கினார். வசிட்டன், 'இவைகளையெல்லாம் நம் முன்னோர் உணரவில்லையே' என்று வருந்தினான். அப்பொழுது, அவர், "நம் முன்னோரும் இறைவனின் நற்குண நிறைவையும், ஒப்பின்மையையும், மனித உணர்வினைக் கடந்த நிலையினையும் பற்றிப் பேசியுள்ளனர். ஆயினும், கதிரவன் முன் மலராத அரும்புகளைப் போல இறைவனையும் இறை நெறியையும் குறையற உணராமல் பல தேவர் உண்டென்னும் கொள்கையையும் சேர்த்துக் கூறினர். இதற்குக் காரணம், ஆசை வலைப்பட்டு ஐம்பொறிகள் தளர்வுற்றமையே. இந்நிலையில், கற்றவர் நல்லவைகளை நினைத்தாலும் அந்நினைவில் நிலை கொள்ளுதல் அரிது" என்றான். சூசை முனிவர் கூறிய ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்டவரனைவரும் தெளிந்த உணர்வோடு வீடு திரும்பினர்.

# 4. வாமன் ஆட்சிப் படலம்

(கல்வியிலும் வில்வீரத்திலும் வல்ல வாமனை வளனார் ஆட்கொண்ட செய்தியைக் கூறுவது)

ஒருநாள் சூசை முனிவர் ஒரு சோலையிலுள்ள மண்டபத்தில் வீற்றிருந்து மக்களுக்கு வான்வீட்டு வழிகளை உபதேசித்துக் கொண்டிருந்தார். அங்கு அமர்ந்திருந்தவர்களுள் ஒருவனாகிய வாமன் என்பவன் கல்வியிலும் வில்வித்தையிலும் தேர்ந்தவன். அவன் முனிவரது நீதிமொழிகளை ஆர்வத்துடன் கேட்டான். ஆயினும், சிற்றின்ப நாட்டம் மிகக் கொண்ட அவனுக்கு முனிவரது போதனைகளின்படி நடப்பது அரிதாகத் தோன்றியது. ஆதலால், அவன் 'வேதநூற்படி ஒழுகுதல் இயலுவதன்று' என்றான். முனிவர் அவனை நோக்கி, "கல்வி கற்குமுன் அரியது; கற்றபின் எளிது. அதுபோலவே, வேத நூற்படி ஒழுகுதலுமாகும். போர்க்களத்தில் விற்போர் வாட்போர் செய்தலும், யானை குதிரைகளைக்கொண்டு போர் செய்தலும் எளிதன்று. பாடுதலும் வீணை மீட்டுதலும், ஓவியம் தீட்டுதலும் பழகாதவர்க்கு அரியதன்றோ. எனவே, எத்தொழிற்கும் பழக்கம் முக்கியம். அற முயற்சிக்குப் பழக்கமும் ஆவலும் மனத் துணிவும் இன்றியமையாதவை. ஆதலால் தீவினையை நீக்கி அறத்தில் துணிவுடன் ஒழுகுக" என்றார். அதற்கு வாமன், "இறைவன் இவ்வுடலைப் படைத்து இதனுள் நல்லுயிரைப் பிணித்து இசைத்தான். பாலில் நஞ்சைக் கலந்ததுபோல உயிரைக் கொல்லும் மாதரையும் படைத்தான். உடலைக் கொலை செய்து உயிருண்ணும் அப்பகையை வெல்லுதல் அரிது. மாதர் தம் மொழியாலும் அணியாலும் ஆடவரை மயக்குவர். அவர் நட்பால் கேடுண்டாகும் என்பதை நான் நன்கு அறிவேனாயினும், கற்ற கல்வியெல்லாம் அவர் முன் பயனற்றுப் போதலைக் காண்கிறேன். ஐம்பொறிகளை வென்ற நீ இவற்றை அறியாய்" என்று கூறி வணங்கினான்.

வாமன் மொழிகளைக் கேட்ட முனிவர் அவனை அருளோடு நோக்கி, "நீரால் உண்டாகிய சேறு நீரால் ஒழிவது போல மனத்தாற் செய்த பாவம் மனம் நொந்தால் தீரும். நீ அதனை விடாமல் இருக்கின்றாயே. ஆசையை வளர்த்துக் காமத் தீயைத் தூண்டுவானேன்? மாதர் முகம் நஞ்சென்றாய்;

அதனை ஏன் பார்க்கின்றாய்! ஐம்பொறிகளை இழிவுபடுத்து முறையில் அவற்றை மனம்போன போக்கில் விடுவானேன்? புலவர் புனைந்துரைக்கும் மாதர் முகம் இறுதியில் சுடு காட்டில் எறியும் வெண்தலை என்று எண்ணு" என்று அன்போடு கூறிய போது, வாமன் மனத்தில் அசைவு ஏற்பட்டது. ஆனால், பாவத்தை ஒழிக்கும் துணிவு ஏற்படவில்லை. அந்நிலையில் முனிவர், 'பழம்புண்ணை ஆற்றுவதற்கு அழல் வேண்டும்' என்று எண்ணி, 'நீ மனவூக்கத்துடன் நன்னெறியில் ஒழுகா விட்டால், துன்பம் நிறைந்த நரகத்திற் சேர்வாய்' என்றார். அப்பொழுது கூடி நின்றவர், நரகத்தையும் பேயையும் பற்றி விளக்கிக் கூறுமாறு கேட்டனர்.

'இறைவன் எல்லா உலகங்களையும் படைத்த காலத்தில் பூவுலகில் உவமை கூற முடியாத +மனங்களை, வானுலகில் படைத்தார்' என்று சொல்லி சூசை முனிவர் பேசத் தொடங்கு கையில், வாமன் குறுக்கிட்டு, 'ஐயா, நாங்கள் அவர்களைக் கடவுளர் என்றும் தேவர்கள் என்றும் கூறுகிறோம்' என்றான். அதற்கு அவர், அவர்களைத் தேவர்கள் எனலாமோ? படைக்கப் பட்ட அவர்கள் தேவர்கள் ஆகார். இறைவனின் ஏவற்படி நடக்கவும், நமக்கு உறுதிகளைச் சொல்லவும், அறவழித் துணை யாய் நிற்கவும் மட்டுமே அவர்களுக்கு உரிமையுண்டு. அவர் களைப் பெண் என்றும், ஆண் என்றும் பாகுபடுத்தல் ஆகாது. அவர்களுக்குப் பிறப்பில்லை. கருவி ஏந்திப் போர் புரிதல், வெற்றி தோல்வி ஆகியவற்றை அவர்க்குக் கற்பித்தலும் ஆகாது. வானுலகினைப் பூவுலகம்போல் வகுத்தலும் கூடாது. வானவரை மனிதரைப்போல் புனைந்துரைத்தல் இருகண் குருடர் யானையினை உறுப்புக்களைத் தடவி உவமை கூறுதல் போலாகும். இது நிற்க. மண்ணுலகோரால் உணரமுடியாத வானுலக வாழ்க்கையை பெற்ற அவ்வும்பருட் சிலர், தெளியா மையால் அகங்காரங் கொண்டு ஆண்டவன் ஏவிய கட்டளையை மறுத்தனர். மனத்துள் தீவினை கொண்ட அந்நேரத்திலேயே அவர்கள் தீநரகின் குடியிருப்புக்கு உட்பட்டார்கள். அவர்களே பேய்கள். தீவினை நம் உயிர்ப்பகை என்பதை இதனால் அறிந்து கொள்ளுங்கள். பேய்கள் வேறு, அசுரர்கள் வேறல்லர். அசுரர், தவம் செய்து வானவர்க்குத் துன்பம் இழைத்தார் என்பது மயக்கவுரையாகும்.

+ சம்மனசுக்கள், Angels.

+ மலக்கேகள்

இனி அசுரராகிய பேய்களைப் பற்றியும் அப்பேய்கள் ஆட்சி புரியும் காணியாகிய நரகினைப் பற்றியும் சில கூறுவேன். நரகத்தில் ஒரு நொடி நேரம் நூறு வருடமாகும். பூவுலகின் துன்பமெல்லாம் அங்கு இன்பமாகத் தோன்றும். காமம், களவு, கொலை முதலிய குற்றம் செய்தவரெல்லாம் நரகத்தில் விழுந்து எக்காலமும் வருந்தி வெகுவார். கொடிய துணையேயன்றி நற்றுணை அங்கில்லை. நரகத் தீயின் ஒரு கொழுந்து பெரிய மலையிற்பட்டால் அம்மலை வெந்துருகும். இறைவன் இவ்வுலகில் தீயை மனிதர்க்கு உதவியாகவும், நரகத் தீயைத் தன் நீதியில் தோன்றிய சினத்தீயாகவும் படைத்தார். நரகில் விழுபவரை அத்தீ அவனவன் செய்த தீவினைக்குத் தக்கவாறெல்லாம் வருத்தும். தீவினை செய்தவர்க்கு படுக்கையும், உணவும், அணியும், மூச்சும், நீரும் அத்தீயே. தீயோர் நரகத்தீயில் அடுக் கடுக்காய்க்கிடந்து பிறழ முடியாமல் வெந்து எரிவார். பேய்கள் பாவிகளை வருத்தும் முறையைக் கூறுகிறேன் கேளுங்கள்:

பேய்கள், பாவிகள் மீது விடா மழைபோல் அழலைப் பொழியும்; தோலை உரிக்கும்; அழல் மெத்தையிற் கிடத்தும்; உருகின ஈயத்தால் குளிப் பாட்டும். தீயில் கருகின உடல்களைக் கண்டங் கண்டமாய் அறுக்கும். அழலை வாயில் ஊட்டும். உருகின ஈயத்தை உடம்பில் எண்ணெயாய்ப் பூசி அழலுள் முழுக்காட்டும். காய்ந்த இரும்புச் சட்டையிட்டுப் பாம்புகளைச் சூட்டி நெருப்பு மஞ்சத்தின்மேல் இருத்திக் காமுகரை வருத் தும். 'பூம்பட்டால் உன்னுடலை நீவுகிறோம்' என்று கூறி, இரும்புத் துறட்டியால் கீறி, 'இது காம நோய்க்கு மருந்து' என்று கூறும். நரகில் பாவிகளுக்குப் பேய்கள் செய்யும் கொடுமை, நம்மால் நினைத்தற்கும் அரிது. எனவே, தீவினை மனிதர்க்குச் செய்யும் பகையாகி நரகத்தில் தோன்றும். அங்கே தண்டனைக்குள்ளாகும். துன்பம் எக்காலமும் ஓயாது. நரகில் விழுந்தவர் தாம்தாம் செய்த தீவினையெல்லாம் சொல்லிப் புலம்புவர் என்று விரிவாக எடுத்தியம்பி வாமனை நோக்கி, "நீ உன் மனத்துட் கொண்ட காமத்தை அடக்குவது அரிது என்றாயே; இத்தகைய நரகில் புதைந்து வருந்துதல் உனக்கு எளிதோ? என்றார். சூசை முனிவர் தம் கற்பனையாற்றல் தோன்ற வேதநூற் கொள்கையை விளக்கியமையைக் கேட்ட மக்களெல்லோரும் கண்களைப் பொத்தி அழுது விம்மி வேட்கைத் தீயை அவிப்பதற்கு இந்நரகத் தீயை நினைப்

பதுவே வழி'' என்று கூறினர். வாமன் கண்ணீர் விட்டு அழு தான்; முனிவர் பாதத்தில் விழுந்தான். 'இந்த மதயானையின் மதம் மாறிற்று' என்றுன். பின்னர்த் தான் செய்த குற்றங்களை யெல்லாம் தன்னெஞ்சை நோக்கிக் கூறினுன்.

இதன்பின் சூசை, "ஐம்பொறியை அடக்குமின். பாவம் விளைதற்குரிய இடத்துக்குச் செல்லன்மின். பேய்கள் விரிக்கும் வலையைத் தவத் துணையால் அறுத்து ஒழிமின். உடலாகிய வண்டியில் ஞானமும் மனத் துணிவுமாகிய எருதுகளைப் பூட்டு மின். அவ்வண்டியில் ஆசைச் சரக்கை ஏற்றிப் பாவச் சேற்றில் அமிழ்ந்தாதபடி அறமாகிய சரக்கை ஏற்றி உயிராகிய அச்சு முறியுமுன் பரம கதியில் நடப்பீராக" என்று பல உபதேசங் களைக் கூறினர். சூசை முனிவரின் உபதேசத்தால் எகிப்து நாடு வான்வீடு அடையும் பெரு வழியாய் விளங்கியது.

# 5. வேதக் கெழுமைப் படலம்

(வளனுரின் வேத ஒளி பரவிய வகையைக் கூறும் பகுதி.)

ஒருநாள் சூசைமாமுனிவர், ஒரு சோலையில் வேதப் பொருளை விளக்கி மக்கள் மன மாசகற்றி நின்றபொழுது கண் ணொளியிழந்து மெலிந்த சுரமி என்ற ஒரு கிழவி கோலையூன்றிக் கொண்டு அங்கு வந்தாள். அவள், சூசைமுனிவர் கூறிய வேத மொழிகளைப் பழித்துக் கூறி, ஒருவன் தொன்றுதொட்டு வணங்கி வந்த தேவரை விட்டுப் புதியதொரு நெறியைப் பற்றுதல் தகுதியோ என்றாள். அதற்கு முனிவர், மேற்கே போக வேண் டியவன் வழிதவறி வடக்கே போனால், ஒருவன் சொல்லும் பொழுது தன் பிழைக்கு வருந்துவதுதான் முறை என்றார். 'என் வழி தவறு என்று நீ சொன்னாற்போதுமோ?' என்று அவள் வினவ, 'ஞானத்துக்கு ஒத்திருந்தால் மட்டும் அதன்படி நட' என்றார். பின்னர்ச் சுரமி, 'உன் மொழியைக் கேட்டு இந்த நாடே அழிந்ததுபோல் கனவு கண்டேன்' என்றாள். அங்கு நின்றவர்கள் யாவரும், 'பகலிற் காணக் கண்ணில்லாத கிழவி இரவில் கனுக்காட்சியைக் காண்பது இயல்புதான்' என்று கூறி நகைத்தார்கள். கிழவிக்குச் சினம் பொங்கியது. 'கனவு பொய்யா? அப்படியானால், கனுத் தோன்றுவதற்குக் காரண மென்ன, சொல்லுங்கள்' என்றாள். முனிவர் அதற்குப் பதில் கூறுகிறார்: பகலில் மதயானையையும் பறக்கும் காக்கையையும் கண்டவர்கள், கனவில் யானை பறப்பதுபோல் காண்பார்கள். இதற்கு முன் நினைவு காரணம். அன்புடைய தாய் பிரிந்த தன் மகனைக் கனவிற் காண்பாள். காய்ச்சலில் தாகத்தால் வருந் தியவர், தடாகத்தைக் காண்பார்; பிறர்மேல் பகைகொண்டவர் அவர் ஒழியக் காண்பார்; வறுமை மிகுந்தவர் செல்வம் வரக் காண்பார். இவற்றிற்கெல்லாம் மனப்பற்றுதலே காரணம். பித்தம் அதிகப்படும்பொழுது ஒழுங்கற்ற கனவுகள் தோன்றி, வெருவிப் பதைத்து அஞ்சுவார்கள் என்றார். சூசை முனிவர் அருளுடன் சொன்னவைகளைக் கேட்டும் வஞ்ச நெஞ்சுடைய சுரமியின் சினம் மாறவில்லை.

இவ்வுரைகளைக் கேட்ட கிழவி, பதில் சொல்ல முடியாமல் வீடு போய்ச் சேர்ந்தாள். மறுநாட் காலை நாவகன் என்னும் படைத்தலைவனிடம் சென்று அவன் பாதத்தில் வீழ்ந்து, "ஐயா, இந்நாட்டில் வளன் என்னும் ஒரு யூதன் வந்து, நம்

சமயக் கொள்கைகளை இடித்துரைக்கிருன். இவன் பேச்சில் பெரிய மனிதர்களும் மயங்கிப் போய் விடுகிருர்கள். இவனை அடக்கி ஒடுக்காமலிருந்தால் நம் முன்னேர் கொண்ட தெய்வங் களும், தெய்வக் கொள்கைகளும், அழிந்து போம். போர் முகத் தில் பெரு வீரராக விளங்கும் தாங்கள் நம் முன்னேரின் சமயத் தைக் காக்கும் வீரராகவும் விளங்கவேண்டும்'' என்று பணிவு டன் வேண்டினுள். அதற்கு நாவகன், 'அப்படியே செய்கிறேன்; நீ அஞ்சாதே' என்று அவளுக்குத் தேறுதல் உரை கூறி அனுப்பிவைத்தான்.

### தெய்வ பலம்

அக்கிழவி போன பின்பு நாவகன் வளனைரைத் தண்டிப் பதற்குத் தக்கவழி யாது என்று எண்ணிக்கொண்டிருந்தான். அவன் கருத்தை அறிந்த அவன் தந்தை, 'மகனே! யூதர்களின் சமயக்கொள்கை மிகச் சிறப்பானது தான்; அவர்கள் பகை வர்கள் இறைவனுல் தண்டிக்கப்பட்டிருப்பதற்குப் பல சான் றுகள் உள்ளன.

அசீரிய நாட்டை ஆண்ட சினக்கரன் என்பவன் யூதேயா நாட்டை அழிக்கத் திட்டமிட்ட அன்று இரவிலே அவனது நால்வகைப் படைகளும் யாதெனை அறியப்படாத ஒரு சக்தியால் மடிந்தன. அவன் காலத்துக்குப் பின் அந்நாட்டை ஆண்டுவந்த நபூக்கன் என்னும் மற்ருேர் அரசன், 'யூதர்கள் பொன்ஞற் செய்த தன் உருவத்தையே வணங்க வேண்டும்; தங்கள் கடவுளை வணங்கக் கூடாது' என்று கட்டளையிட்டான். அக்கட்டளைக்கு உடன்படாத மூன்று யூத இளைஞர்களை அக்கினிச் சூளையிற் போட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டான். அப்படியே அதில் போடப்பட்ட அவர்கள், குளிர் நிழற் சோலை யில் இருப்பவர்களைப் போல இனிதமர்ந்து இறைவனைப் பாடிக் கொண்டிருந்தார்கள். இதனைக் கேள்விப்பட்ட அரசன் அங்கு வந்து பார்த்த போது, அக்கினிச் சூளையில் நால்வரைக் கண்டான். அவர்களைத் தன்னிடம் வருமாறு கூறவே, மூவர் வந்து நின்றனர். 'நாலாமவன் எங்கே?' என்று கேட்டான் நபூக்கன். "அவன், எங்களுக்கு உதவியாகக் கடவுளால் அனுப் பப்பட்ட வானவன்'' என்ருர்கள். இக்காட்சியைக் கண்ணுரக் கண்டும் நபூக்கன் தன் செருக்கை விட்டுவிடவில்லை; மேலும் யூதர்களைத் துன்புறுத்தி வந்தான். அதனுல் இறைவன், அவன் நாடு நகரை இழந்து விலங்கு வடிவாகி ஏழு வருட காலம் காட்டிலே அலையும்படி செய்தாராம். பின்னர் அவன் நல்லுணர்வு அடைந்து அரச பதவி ஏற்றுக் கடவுளின் மாட்சி விளங்க ஆட்சி செய்து வந்தான்,

அசீரிய நாட்டின் மற்றொரு மன்னன் யூதர் கோவிலில் கொள்ளையடிக்கும்படி எல்லியோதுரன் என்பவனைச் சேவகர்களுடன் அனுப்பினான். அவர்கள் கோவிலுக்குள் நுழைந்த அளவில் வான வீதியில ஒரு வீரனால் செலுத்தப்பட்டுப் பாய்ந்து ஓடிவந்த ஒரு வெள்ளைக் குதிரை, அவர்களை உதைத்து வீழ்த்தியது. இரு வானவர்கள் அவர்களை அடித்து உதைத்தனர்.

இவ்வாறெல்லாம் யூதர்கள் இறைவனின் அருட்பலம் உடையவர்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆதலால், நீ இக்கிழவியின் பேச்சைக் கேட்டு, அவ்யூத குலப் பெரியாரைப் பகைத்துக் கொள்ளாதே" என்றார்.

நாவகன் செயல்

தந்தையின் சொல்லைக் கேட்ட நாவகன், 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு, வளனார் அறவுரை நிகழ்த்திக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்றான். அப்போது அவர் அங்குள்ளவர்களுக்குச் சொல்வதுபோல, "ஒருவன் செய்யும் தீமையே, அவன் உயிரைக் கொல்லும்; அவன் பிறர்மேல் கொள்ளும் பகையே அவனது நன்மையை அழிக்கும். அறத்தால் வரும் புகழுக்கு அழிவில்லை. நல்லவர்கள் உண்ணும் நஞ்சும் அமுதமாம்; தீயவர்கள் உண்ணும் அமுதமும் நஞ்சாம். ஒருவன் செய்தவினை அவனை விடாது தொடர்ந்து பற்றும். பிறர் குற்றம் பொறுப்பவரை இறைவனும் பொறுப்பார். அத்தகையார் வானவராலும் கொண்டாடப்படுவர்" என்று சொன்னார்.

இதைக் கேட்ட நாவகன் சினங் கொண்டு, தீமை செய்பவருக்குத் தீமை செய்வதால் நன்மை ஏற்படுமேயன்றி தீமை ஏற்படுமோ' என்றான். அதற்கு வளனார், "ஒருவர் சொல்லும் பொய்யை மெய்யென்று நம்பினால் அது மெய்யாகுமோ? அன்புடையவரது கடுஞ்சொல் இன்பந் தரும். அன்பில்லாதவருடைய இன்சொல் துன்பந்தரும். ஆதலால் தேறாற்றத்தின் அளவில் எதையும் செய்யாமல் ஆராய்ந்து செய்ய வேண்டும்" என்றார். வன்முறைச் செயலில் பற்றுடைய நாவகனுக்கு இவ்வறவுரை சினத்தை ஊட்டியது. உடனே அவரைக் கன்னத்திலறைந்தான். வளனார் அவ்வறையை ஏற்றுக் கொண்டு மனத்தில் சிறிதும் வெறுப்பின்றி அவனை அருளோடு நோக்கினார். அவரது அருட் பார்வையால் அவன் உள்ளம் உடைந்து வருந்தி மன்னிப்புக் கேட்டு அவரை வணங்கினான். "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்பது, பொய்யாமொழியன்றோ?

# 6. மீட்சிப் படலம்

(திருக்குடும்பத்தார் எகிப்து நாட்டினின்று தம் நாடு திரும்பியதைக் கூறும் பகுதி)

வளனும் மரியாளும் தம் திருமகனோடு எகிப்து நாட்டில் ஏழு வருட காலம் தங்கினர். அக்காலத்தில் அருட் கடலாகிய திருமகனின் அருளால் வளன் மதுமொழி வாயால் வேத உபதேசம் செய்து அந்நாடு நன்மையிற் பொலிந்து விளங்குமாறு செய்தார். ஒருநாள் இறைவன் கட்டளைப்படி வானவன் ஒருவன் வந்து, 'மலர்க் கொடியுடைய மாதவனே, திருமகனைக் கொல்ல நினைத்த ஏரோதன் இறந்துபோனான். இனித் தாயையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு நும் நாட்டுக்குச் செல்வீராக" என்றான். சூசைமுனிவர், தம்மிடம் வழக்கம்போல் வரும் சிலர்க்குச் சில அறிவுரைகளைக் கூறியனுப்பிவிட்டு, இறைவன் கட்டளைப்படி, தாயையும் மகனையும் அழைத்துக் கொண்டு நள்ளிரவில் புறப்பட்டார். மூவரும் தம் நகரைவிட்டு நீங்கினரென அறிந்ததும் அந்நகரத்தார் கொண்ட துயர்க்கோர் அளவில்லை. 'இவர் அன்பால் அமுதம் உண்டவர்போல் மகிழ்ந்த நாம், இவர் பிரிவால் நஞ்சுண்டவர்போல் ஆனோம்' என்று வருந்திக் கூறி அவர்களை முன்நிறுத்திச் சொல்வார் போல "நீங்கள் பேரன்புடன் வளர்த்த பூங்கா, தீந்து அழியவோ எம்மை விட்டுச் சென்றீர். கதிரவன் மறைந்தாலும் மீண்டும உதிக்குமே; எம்மை விட்டுச் சென்ற நீவிர் திரும்பி வருவீரோ" என்று பலவாறு புலம்பி அழுது, அவர்கள் சென்ற வழி நோக்கிச் சென்றார்கள். வழியில் மயில், குயில், கிளி, மரம், மலை, அருவி, பொய்கை, பொழில் ஆகியவற்றை நோக்கி, 'அவர்கள் இருக்குமிடத்தை எங்களுக்கு அறிவியுங்கள்' என்று கூறி அழுதார்கள். ஆங்காங்கே மூவரின் கால் தடங்களைக் கண்டு, அவற்றின் மீது மலர்களை வைத்து வணங்கினார்கள். அவர்கள் புலம்பி அழுத காட்சியை மூவரும் கண்டனர். அப்பொழுது முனிவர், தேவபாலனை அவர்களைத் தேற்றுமாறு வேண்டினார். அவ்வளவில் அவர்கள் கொண்ட துயர் நீங்கி இன்பக் கடலில் மூழ்கி 'மூவரும் சென்றது இறைவன் திருவுளச் செயல்போலும்' என்று எண்ணி ஆறுதலுற்றுத் தம் ஊரை அடைந்தனர்.

## மாட்சி பெறும் பாலை நிலம்

இரவிமாபுரத்தை விட்டுப் புறப்பட்ட மூவரும் வழியி லுள்ள சில சோலைகளிலும், மலர்த் தடாகங்களிலும் தங்கிப் பாலை நிலத்தை அடைந்தார்கள். அவர்கள் அந்நிலத்தை அடைந்ததும் அந்நிலம் மலர் வனம்போல் காட்சியளித்தது. முல்லைச் செடிகள் பூத்து நறுமணம் வீசின. வண்டுகள் மதுவை உண்டு களித்தன. குயில்கள் பாட மயில்கள் ஆடின. அவர்கள் அப்பாலை நிலத்தைவிட்டு அகன்றதும் அது பழையநிலையை எய் திற்று. இக்காட்சி, தன் கணவனைக் கண்ட கண்ணால் வேறொரு வனைப் பார்க்காத கற்புடையாள் தன்மை போன்றிருந்தது. அவர்கள் நெடுந்தூரம் நடந்து சண்பகச் சோலையில் வந்து தங்கினார்கள். அப்போது திருமகன் முனிவரை நோக்கி, நமது வருகைக்காக மலர் பூத்து விளங்கிய இவ்விடம், பழைய நிலையை அடைந்தாலும் இவ்வனத்தில் நாம் நடந்ததனால் நெடுந் தவ முடைய பல முனிவர்கள் வந்து குடியிருப்பார்கள். வானோரும் இங்கு வருவர். தவமெனும் மரக் கலத்தில் ஏறி வினைக் கடலைக் கடக்கக் காக்கையிடமிருந்து உணவு பெற்று கடுந் தவம் புரிய பாவுளன் என்பவன் ஒருவன் இங்கு வந்து மலைக் குகையுள் வாழ்வான். சிங்கம், புலி முதலிய கொடிய மிருக வடிவில் தோன்றும் பேய்களை அந்தோணி என்பவன் தன் தவத்தின் வலிமையால் வென்று அம்மலையில் வாழ்வான். மூவாயிரம் முனிவர் தன்னைத் தொடரும் அளவுக்குப் பெருந் தவனாய் விளங்கும் இலரியோன் என்பவன் ஆண்டவனை முன் வைத்து தவத்தில் சிறந்து வாழ்வான். சோண மாமுனி என்பவன் ஐம்பொறிகளை வென்று விளங்குவான். அவர்களைப் போல கடுந்தவம் புரிய அயோதரன், மவாவனமுனிவன், மதித்தகன், அசோகன், குரோதரன், எசிசிய மரியாள், முதலிய பலர் இப் பாலை நிலத்தை அடைந்து கடுந் தவம் புரிந்து அனைவராலும் போற்றப்படுவர். அவர்களால் இக்கானகம் வானுலகமாய்ச் சிறப்புறும்" என்றான். தவமெனும் மரக் கலத்தைப்பற்றி மன வூக்கமும் இறையன்பும் அச்சமும் கொண்டு வாழ்ந்தவர் வானுலகடைவர். தவம் கெடுமாறு ஒழுகியவர், கவிழ்ந்த மரக் கலத்தில் இருந்தவர் நிலையை அடைவர் என்றான். வளனார் இவைகளைக் கேட்டு வானவருடன் திருப்பாலகனை வணங்கி அவன் செய்யப் போகும் திருவருட் செயல்களை நினைந்து வியந்து கொண்டாடினர்.

மோரியா மலை

மூவரும் அக்கானகத்தைக் கடந்து முல்லை நிலத்தை அடைந்து ஒரு சோலை மணலில் இளைப்பாறினர். அப்போது ஆங்கு எதிரே தோன்றிய மோரிய மாமலையைக் கண்ட திருமகன் கண்ணீர் சிந்தி அம்மலையை அவர்களுக்குக் காட்டினான். மரியாள், 'நீ கண்ணீர் வடிக்கும் காரணம் என்ன?' என்று கேட்க, அவன் பின்வருமாறு கூறினான்.

அதோ தெரிகின்ற மோரிய மாமலையில் முன்னாளில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. ஆபிரகாம் அருந்தவம் செய்து பெற்ற திருமகனாகிய நகுலனை (ஈசாக்) தனக்குப் பலியிடுமாறு ஆண்டவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார். ஆபிரகாம், கடவுளின் கட்டளை தன் உயிரை அறுப்பதுபோல் இருந்தாலும் மகனை அழைத்துக் கொண்டு அம்மலைமேற் சென்று ஒரு பீடம் அமைத்தார். விறகு கொண்டு வந்த நகுலன், 'பலிப் பொருள் எங்கே?' என்று கேட்க, இறைவன், 'உன்னையே பலிப்பொருளாகக் காட்டினான்' என்று கூறி மகனைக் கட்டி அழுதார். அவன், 'எனக்கு உயிர் தந்த இறைவனுக்கு என்னையே தந்தால் என்ன?' என்று கூறித் தந்தையைத் தேற்றிப் பலிபீடத்தில் ஏறிக் கைகுவித்து வணங்கினான். ஆபிரகாம் தம் மகனை வெட்டுவதற்கு வாளை வீசினார். அப்பொழுது இறைவன் உலகெலாம் மகிழவும் அவ்விருவரும் பெருமகிழ்ச்சி கொள்ளவும் அச்செயலைத் தடுத்து ஆசி அளித்தார். இந்நிகழ்ச்சி என்னைக் குறித்த முன் அடையாளமாகும். நான் மற்றொரு மலைமேல் என் உயிரை அளிப்பேன். என் பலி பீடமாகிய சிலுவை மரத்தை இப்போது காணாமையால் துயருற்றேன்'' என்றான். வானவர் வானில் ஒரு சிலுவையைக் காட்ட திருமகன் சிலுவையைப் புகழ்ந்து தாவிப்பற்றித் தழுவினான். மரியாளும் சூசை முனிவரும் அழுது, ஓவியங்கள் போல் நின்றனர். பின்னர் திருமகன் கீழிறங்கினான். மூவரும் துதி பாடிக்கொண்டு இருளடர்ந்த ஓர் மலைச் சாரலை அடைந்தனர்.

அங்கு வேடர்கள் பலர் வந்து பலவகைக் கனிகளை அவர்கள் முன்வைத்து வணங்கினர். அப்பொழுது, 'நீங்கள் யார்?' என்று சூசை கேட்க, வேடர் தலைவன், முன்னாளில் இக்கானகத்தில் மக்க பேயர் ஒளித்து வாழ்ந்தபோது அவர்களைக் காப்பாற்றிய குலத்தவரை ஆள்கின்ற தலைவன் நான். அதோ காணும்

அவ்வெளியிலேதான் மக்கபேயர் தம் பகைவரை வென்றனர். மக்கபேயர் தலைவனான யூதாஸ் போர் செய்யும்போது ஐந்து குதிரைகளின் மேல் நின்ற வானவர் பகைவர்களை வெட்டி வீழ்த்தினர். அந்த மக்கபேயர் வணங்கிய கடவுளையே நாங்களும் வணங்குகிறோம். என்றாலும், நாங்கள் இடை விடாமல் பிணி, துன்பங்களை அனுபவித்து வருகிறோமே, காரணமென்ன என்று கேட்டான். அதற்கு வளனார் பொருட் செல்வம் தீயோரிடத்தும் உண்டு. எக்குலத்துக்கும் பொதுவாகிய அறத்தின் மாட்சியையே நாம் விரும்புதல் வேண்டும். இவ்வுலகில் பாவம் ஒன்றைத் தவிர பயன்படாதது இல்லை. ஆதலால் நீங்கள் காமம், கோபம், கொலை முதலியவற்றை நீக்கி அறத்தின் மாட்சியைத் தேடுங்கள்" என்றார். சூசை முனிவர் அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தபோது வேடர் குலப் பெண்கள், மலர் அரும்புகளை மாலையாகக் கட்டி திருப்பாலன் முன்வைத்து வணங்கினர். அப்பொழுது அவன், 'வாடும் மலரைக் கொண்டு வரவா ஓடினீர்' என்று சொல்லிச் சிரித்தான். 'வாடாத மலர் நீர்தானே, வேறு எங்கே கிடைக்கும்' என்றாள் ஒரு பெண். 'தவமெனும் சோலையில் பூக்கும் கற்பும், நல்லொழுக்கமும் வாடாத மலர்கள்தானே; ஐம்பொறிகளைக் காத்து கற்பைப் பேணுங்கள்' என்று கூறினான். அவர்கள் எல்லோரும் பெரிதும் மகிழ்வுற்று மூவர் பாதத்திலும் வீழ்ந்து வணங்கினர். அதன்பின் மூவரும் பயணம் தொடங்கினர். வழியில் ஏரோதன் இறந்தான் என்றும் அவன் மகன் நாட்டை ஆள்கின்றான் என்றும் இடையர் கூறக்கேட்ட சூசை, உள்ளங்கலங்கினார் வானவர், 'இறைவன் அருளால் ஏரோதன் மகன் உங்களைப் பகைக்க மாட்டான்' என்று சொல்லித் தேற்றினர். பின்னர் மூவரும் நசரேத்தூர் மகிழ்வுறச் சென்றனர். அவ்வூரார் அவர்களை நல்வரவு கூறி அழைத்தனர்.

# 7 பிரிந்த மகவைக் காண் படலம்

(மரியாளும் சூசை முனிவரும் எருசலேம் கோவிலிற் பிரிந்த தேவ குமாரனைக் காணும் பகுதி)

நாசரெத்து என்னும் ஊரில் மரியும் சூசையும் திருமகனும் வாழ்ந்து வரும் நாளில், அவர்கள் குடியிருந்த சிறுமனை, கருணையின் உறைவிடமாயிருந்தது. திருமகனின் கண்பட்ட இடமெல்லாம் பாவங்களும் துன்பங்களும் ஒழிந்தன. தேவபாலனுக்குப் பன்னிரண்டு வயதாகியபோது மூவரும் எருசலேம் நகரில் நடைபெற்ற பாஸ்குத் திருவிழாவுக்குப் புறப்பட்டார்கள். அக் கோவிலுக்கருகே வந்தபோது தேவ பாலன், அக் கோவிலின் சிகரத்தை மகிழ்ச்சியுடன் நோக்கி, இருவரிடமும் பின் வருமாறு கூறினார்: முற்காலத்தில், யாக்கோபு என்பவர் நித்திரை செய்கையில், பூமியிலிருந்து வானமண்டலம் வரை நாட்டப்பட்ட ஓர் ஏணியைப் பிதா தமது கரத்தால் தாங்கியிருக்க அதன் வழியாக வானவர் இறங்கி ஏறி உலாவுதல் போல் ஒரு காட்சி கண்டார். அவர் காட்சிகண்ட இடத்தில் இவ்வாலயம் எழுப்பப் பட்டது. யாக்கோபு இக் காட்சியைக் கண்டபொழுது, 'உன் குலத்தில் பிறக்கும் பிள்ளையால் நீ கண்ட அதிசயமெல்லாம் நிறைவேறும்' என்று ஆண்டவன் சொன்னார். 'ஆண்டவன் யாக்கோபுக்குச் சொன்ன பிள்ளை நானே; அவர் கண்ட ஏணி நான் இறக்கும் சிலுவை மரமே' என்று அவர் சொன்னதும், மரியும் சூசையும் திருமகன் படப்போகும் பாடுகளை நினைந்து மிக வருத்தமுற்றனர். பின், திருமகனோடு கோவிலுக்குட் புகுந்து உலகோர்க்காக வேண்டுதல் செய்தனர்.

பின்னர், மரியாள் பெண்களோடும், வளனார் ஆண்களோடும் வெளியே வந்து நெடுந் தொலைவு சென்று சந்தித்தனர் 'திருமகன் உங்களோடு வரவில்லையே' என்று இருவரும் ஒருவரொருவரை வினவினர் 'இல்லை' என்ற பதிலை இருவரும் சொல்லி இடியேறுண்டது போல் ஏங்கினர். தேவ மைந்தன் பிரிவால் உயிரில்லாத வெற்றுடம்பு போல் ஆயினர், பின்பு, கன்றைத் தேடிக் கரைந்து அழும் கறவைபோல தம் உயிராகிய தேவ மகனைத் தேடிக் கலங்கி அழுதனர். கல் நெஞ்சமும் கரையும்படி பலவாறு சொல்லிப் புலம்பி அழுதனர். அப்பொழுது வானவர், 'உங்கள் மகன் இறந்திலன்; மயங்கி வருந்த வேண்டா' என்றனர்.

பொழுது விடிந்தது. மரியாள் நகரெங்கும் சென்று மகனைத் தேடினாள். வளனார், சோலை முதலியவைகளிற் சென்று தேடினார். ஆறு, பூங்கா, பொழில், தடாகம், மலை முதலியவை களையும் பறவைகளையும் விளித்துப் பலவாறு புலம்பினார். மரியாளும் "மகனே! நீ உன் அன்னை மறந்தாயோ? எங்களை விட்டு அகன்ற நீ, இவ்வுலகை விட்டும் அகன்றாயோ? இப்படிச் செய்வது அறமாகுமோ? என் உடலினின்று உயிர்பிரியும் நிலையில் உளது. என் கண்ணே, என் மகனைக் காட்டுங்கள்" என்று பலவாறு புலம்பி அழுதாள். அப் பொழுது ஒரு பெண் மணி மரியாளிடம் வந்து, "உன் மகன், எத்தன்மையன்' எனக் கேட்டாள். உடனே மரியாள், அம்மா என் மகன் செந்தாமரை போன்ற முகமும், கருங்குவளை மலர் போன்ற விழியும், முத்துப் போன்ற பல்லும், காந்தள் போன்ற கையும், மாந்தளிர் போன்ற நிறமும் உடையவன். அவன் பன்னீராண்டு பருவத்தையுடைய வன். அவன் அன்பு மொழியைக் கேட்டால் சாதல் துன்பம் நீங்கும், தனக்கு நிகரில்லாதவன் அவன். நீ அவனைக் கண்டி ருந்தாயாகில் நான் சொன்னவைகளை உண்மை எனக் கொள் வாய்" என்றாள். இதைக் கேட்ட அப் பெண், 'அம்மா நீ கூறிய தோற்றத்தை யுடைய ஒருசிறுவன், நேற்று என் சிறு மனையில் உணவினுக்கு இரந்து நின்றான். அவனுக்கு நான் உணவளித் தேன். அவன் என் மனத்தில் அமிர்தத்தை ஊட்டினான். அவனது அருள்முகம் என் கண்ணில் நின்று அகலவில்லை. அவன் ஐயமின்றி, நின் மகன்தான்" என்றாள்.

இச் செய்தியைக் கூறிய பெண்ணை வாழ்த்தி மரியாள் மகனைத் தேடிச் செல்லும்போது சூசைமுனிவரைக் கண்டாள். தான் கேட்டவைகளை அவரிடம் சொன்னாள். பின்னர் இரு வரும், 'கோவிலுக்குள் சென்று வேண்டுதல் செய்வோம்' என்று கூறிக் கோவிலுக்குச் சென்றனர். மூன்று நாட்களாக மகனைக் காணுமல் அவர்கள் அலையத் திருமகன் தேவாலயத் துள் இருந்து, வேத நூலோரிடம் பல வினாக்களைக் கேட்டு, எல்லோரையும் வியப்பினுள் ஆழ்த்தினார். மூன்றும் நாளில் வேத நூலோர், 'கடவுள் மனிதனாய்ப் பிறந்தாரோ, இல்லையோ' என்று தெளியாமல் பிதற்றிக்கொண்டிருந்தபொழுது, திரு மகன், "நான் தெய்வத் திருமகன் பிறந்திருப்பதாகக் கேள்வி யுற்றேன். பன்னீராண்டுகளுக்கு முன் இடையர் வானில் ஓர் இன்னிசை கேட்டு, அரிய காட்சி கண்டதாகக் கேள்விப்

பட்டேன். மேலும், அன்று வானம் ஒரு புதிய 'விண்மீனைத் தோற்றுவிக்க, அது கண்ட மூவரசர் பூவுலக நாதனை வணங்க, அவ்விண்மீன் காட்டிய வழியே இங்கே வந்தபோது, நீங்கள் 'பெத்திலேம் நகரில் ஆண்டவர் பிறப்பார்' என்று சொன்னீர்க ளல்லவா?" என்றார். அப்பொழுது வேத நூலோர், "அரசர் வந்து வணங்குமாறு பிறந்தநாதன், மிக்க வல்லமையோடு உலகை ஆள்வார் என்று வேதநூல் கூறுகின்றது. அதனை நாங்கள் காணாமையால் அவர் பிறக்கவில்லை" என்றனர்.

அப்பொழுது இயேசு, 'அவதரித்த நாதன் ஆளவும் பாடு படவும் வருவான்' என்று வேதம் முரண்படக் கூறும் மொழியை சிறுவன் கூறுவதால் நீங்கள் பொருட்படுத்தவில்லை யென்றால் கற்றவர் கூறுகிறபடி, 'உலகம் அழியும்போது இரண்டாம்முறை இங்கே வருவார்' என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதல் லவா? அக்காலத்தில் எழுந்தருளும் கடவுள், எளிமையும் பொறுமையும் வெறுமையும் ஆகிய இவற்றை மனத் துணி வுடன் தேடினால் அவை அழியாத செல்வமாகும் என்று தெளி வான வேதப் பொருளாய்க் கற்பிக்க வருவானல்லவா?" என் றெல்லாம் கேட்டார். வேதநூல் வல்லோர், சிறுவனாய்த் தோன்றிய அவரது கேள்விகளால் மிகவும் வியப்புற்று 'பாலனே உன் தாய் தந்தையர் யாவர்? உன் ஊர் எது? உன் குலம் யாது?' என்று கேட்டனர். அதற்கு அவர், "எனக்கு தந்தையுண்டெனில் தாய் இல்லை; தாயுண்டெனில் தந்தை இல்லை. நான் இருக்குமிடம் நோக்கில் எனக்கு ஓர் ஊரில்லை; * இருகுலத்திற் பிறந்தவனாயிருந்தாலும் குறை கொண்ட குல மன்று" என்று இவ்வாறு பதில் சொல்லவே, அனைவரும் அவரைப் புகழ்ந்து கொண்டே மெல்ல எழுந்து போயினர்.

வளனும் மரியாளும் கோவிலினுட் சென்று அங்குத் திருமகனைக் கண்டு தழுவி அழுதனர். அப்பொழுது அவர், 'என் தந்தையாகிய இறைவனின் பணியைச் செய்ய இக்கோவி லில் தங்கினேன்' என்று முக மலர்ச்சியுடன் கூறி அவர்களை நட்பால் தேற்றி இன்பத்தை யூட்டினார். பின்னர் மூவரும் காப்பியங்களிற் காணும் பிரிக்கப்படாத பாத் தொடை போல ஒருப்பட்டு நாசரெத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

---

* தேவ-மனித குலம்.

# 8. புரோகிதப் படலம்

(வருங்காலத்தில் திருமலை வளரும் வகையைக் கூறும் பகுதி)

வளனும் மரியாளும் தம் திருமகனோடு அன்று மாலையில் எருசலேம் நகர் விட்டுப் புறப்பட்டார்கள். தென்றல் நறுமணம் வீச பறவைகள் இனிது பாடச் சிறிது தூரம் சென்றதும், வானில் இருள் பரவியது. விண்மீன்கள் பூத்தன. வானவர் சூழ்ந்து ஒளி வீச வந்தனர். அவர் தம் ஒளியைக் கதிரவன் ஒளியாகக் கருதி மலர்கள் பூத்தன. இரவு ஆகிவிட்டதால் வழியில் ஓர் இடையர் சேரியில் தங்கினர். மறுநாள் கதிரவன் உதித்ததும் மூவரும் நாசரேத்தூருக்குப் பயணமாயினர். வானவர் தேவ பாலனின் திருநாமங்களைப் பாடிப் புகழ்ந்து கொண்டாடினர். அதைக் கேட்ட வளனார், திருமகனை நோக்கி, "பாலை நிலத்து முள் மரத்தில் குவளையும் தாமரையும் பூத்தது போலக் கடையேனாகிய யான் வானுலகடைய என்பால் வந்த உனக்கு நன் என்ன கைமாறு செய்வேன். தீமையை விரும்பினால் தீமை விளைவது போல நீ என்னை விரும்பி தக்க வீடுமில்லாத வறியவன் ஆனாயே" என்றுசெல்லி அழுதார். அப்பொழுது திருமகன், ஐயா, வானுலக செல்வமுடைய யான், பூவுலக செல்வத்தில் திளைத்து வாழவோ பிறந்தேன்? இன்பமும் துன்பமும் வேண்டுமென்றே இச் சிறுமனையைத் தெரிந்து கொண்டேன். மனிதர்களின் பாவப்பகையைத் தீர்க்கவந்த இச்சிறுமனை, பிற்காலத்தில் பெறும் சிறப்பைக்கேளும்:

"இயற்கை வளமும், இருவகையறமும், மூவகைச் செல்வமும், எழுவகையின்பமும் பொருந்திய இத்தாலிய நாடு, நான் வேதமாக விதிக்கும் தேவ நூலை ஏற்று இவ்வுலகிற்கெல்லாம் ஒரு திருவிளக்காக ஒளிரும். காலஞ் செல்ல, இவ்வெகிப்து நாட்டினர் வேத நெறியை விட்டு விலகிக் கொடியவராய் நடப்பர். அக்காலத்தில் இச் சிறுமனை அழிவுறாதபடி இதனை வானவர் எடுத்துச் சென்று இத்தாலியிலுள்ள ஒரு மலைமேல் வைப்பார்கள். அங்கே அது வானுலகேறும் வழிகாட்டியாய், புண்ணியத் தலமாய்ப் பொலிவுற்று விளங்கும்" என்றார். அப்பொழுது சூசை முனிவர் "ஆண்டவனே, உன்னால் ஆகாததில்லை என்பதை நான் அறிவேன். ஆயினும், இத்தாலிய நாட்டவர் உலகப்பற்று மிகுதியால் ஒரு கரம் இழந்து, பொய்த்

தேவர்களை வழிபடுகின்றனர் என்று கேள்விப்பட்டேன். இவ்வாறிருக்க, அந்நாட்டில் நீ சொன்னவாறு நிகழ்வதற்கு வழியாது?" என்று கேட்டார்.

தேவகுமாரன் அதற்கு விடையாக, "மனிதர்களை மீட்க மனிதனாய்ப் பிறந்த நான் நல்லொழுக்க முறைகளைப் போதிப்பேன். அப்பொழுது பலர் என்னைப் பகைப்பர். அவர்கள் செய்யும் துன்பங்களைப் பொறுமையோடு அனுபவிப்பேன். பாவிகள் வான்கதியடைய அனுபவிக்க வேண்டிய அளவில்லாத துன்பங்களை நான் ஒருவனே அனுபவித்து என் இரத்தத்தைச் சிந்தி உயிர் விடுவேன். இவ்வாறு என்னை, மனிதர்கள் செய்த பாவத்தின் பலியாகப் பரமனுக்குத் தருவேனாதலின், அவர்கள் மீட்பின் வழியில் நடந்து வான் வாழ்வு பெறுவர் என்றார். உடனே வளனார், "மனிதர், நீ காட்டின வழியில் உறுதியாய் நிற்பதற்கு வழியாது என்று விளக்கிக் கூறுவாயாக" என்றார். திருமகன் சொல்வார்: மக்கள் அனைவரும் தேன்பொழியும் மாலைபோலவும், திரையடிக்கும் ஆறுபோலவும் அசைந்து வலிமையின்றி, உள்ளத்தில் நல்லொழுக்க உறுதியின்றி இருப்பவரே. ஆயினும், என் திருமறை உலகமெங்கும் பரவும். என் சீடர்கள் பெற்ற அற்புத வரங்களால் அவர்கள் மொழியை அரசரும் கேட்டுப் பணிந்து நடப்பர். அவர்கள் அறநெறியில் நிலைத்து நிற்க, பல அருட் கொடைகளை ஈவேன். தேவ அருள் நீராடல், திரு நெய் பூசுதல் ஆகியவற்றால் என் திருமறையிற் சேர்ந்து திடம் பெறுவர். என்னை அவர்களுக்கு நற்கருணை என்னும் விருந்தாகக் கொடுப்பேன். மேலும் அவர்கள் தீவினை நஞ்சுக்கு உட்பட்டால் பாவ வெளியீடு எனும் தேவ மருந்தினைக் கொடுப்பேன். இறக்குங் காலத்தில் பேயின் சோதனையை மேற்கொள்ள மற்றொரு தேவ நெய்பூசுதல் என்னும் வரம் ஈவேன். இவைகளையெல்லாம் நிறைவேற்றி வேத ஒளி காட்ட குருக்களை ஏற்படுத்துவேன். சிற்றின்பம் நுகரும் மணவாழ்வு தூய்மையாய் இலங்க மணமக்களை அருட் பிணிப்பு உடையவராக்குவேன். இவ்வரங்களை விரும்பிப் பெற்றவர் பாவத்துயர் நீங்கி வாழ்வர்" என்றார். இது கேட்ட வளனார், திருமகனை வணங்கி வாழ்த்தினார்.

மற்றொரு நாள் தேவமகன் சூசை முனிவர்க்கு அளித்த காட்சியில், உலகில் தம் திருமறையைத் தழுவும் அரசர்களையும்,

அவர்கள் சின்னங்களையும், அவர்கள் ஆளும் நாடுகளையும் காண்பித்து, அவர்களால் தம் வேதம் எங்கும் பரவும் என்றார். வேறொரு காட்சியில் ஏழு தலையும், ஏழு கொம்பும், இரண்டு சிறகுமுடைய ஒரு பெரும் பூதம், பெரியதோர் பாம்பின்மீது ஏறிக்கொண்டு கண்டோர் அஞ்சும்படி வந்தது. அதன் இரு மருங்கிலும் தீயவர்கள் ஊளையிட்டு வெற்றியொலி கிளப்பினர். இவர்களை இன்னார் என்று அறிய முடியாமல் வளனார் மயங்கித் திருமகனைக் கேட்க அவர், "நான் உலகில் பேயாட்சியைப் பிடுங்கி எறிவேன். என் வானுலக அரசைப் பிடுங்க பேய்க் கோட்பட்ட மக்கள் முயல்வர். அவர்கள் என் வேத முறையையும் வேதத்திற் சேர்ந்தவரையும் இகழ்ந்துரைப்பர். நல்லோர், அவர்கள் செய்யும் வேதனைக்கு அஞ்சார். நஞ்சை அமுதாகக் கொள்ளும் நாகரிகமுடையவராய்க் கொடியவர் தமக்குச் செய்யும் துயரை இன்பமாய்க் கொண்டு மகிழ்வர். ஒருவர் வேதத்துக்காக இறப்பின், ஆயிரவர் திருமறையினுட்படுவர்" என்றார். அப்பொழுது, சூசைமுனிவர், 'நின் பாடுகளில் நானும் பங்கு கொண்டு குருதி சிந்தி நின் வானுலக அரசைப்பெற அருள் செய்' என்று வேண்டினார். அதற்கு அவர், 'உமது ஆவல் ஒன்றே போதும்; குருதி சிந்திப் பெறும் அரசு என்னுடையது. வரும் நோயைப் பொறுமையுடன் தாங்கிப் பெறும் அரசு உம்முடையது' என்றார். முனிவர் அதற்கு இசைந்தவர்போல் வணங்கினார்.

# 9. பிணி தோற்று படலம்

( சூசை முனிவர் நோயுற்றதைக் கூறும் பகுதி )

தீயோர் கையால் வெட்டுண்டு இறப்பவர் அடையும் துன்பத்தினும், பலகாலம் நோயால் வருந்துபவர் துன்பம் பெரிதாம். இது பற்றியே, இறைவன் எளியவனாய்த் தோன்றி, வறுமையில் தன்னை வளர்த்த தந்தையாம் சூசை முனிவர் பல நோய்களை அனுபவிக்கவும் திருவுளங்கொண்டார். முனிவர், தம் ஐம்பத்திரண்டாம் வயதில் பல நோய்களால் பீடிக்கப்பட்டு எட்டாண்டுகள் வருந்தினாலும், சித்தத்தை இறைவன்பால் வைத்து மனத் தளர்ச்சியின்றி இருந்தார். நரம்புகளை இழுத்து உறுப்புக்களைக் குடைந்து வருத்தும் கொடிய நோயிலும், புண்ணிய மலர்பூத்த வேதக் கொடி படர்ந்த கொழுகொம்பாக விளங்கிய சூசை, அவதரித்த நாதனைத் தாங்கிய பெருமையால் நம் துன்பங்களுக்கெல்லாம் இனிய மருந்தாக விளங்கினார். இறை நட்பில் இன்பமுற்ற அவர்க்கு, உலகியலான இன்ப துன்பங்களில் வேற்றுமை இல்லை, தொன்றுதொட்டு வரும் துன்பம், இறைவன் தம் அவதாரத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட ஒன்றேயன்றோ?

துன்பத்தில் மூழ்கிய சூசை முனிவர், அதனைப் பொறுமையுடன் அனுபவித்து வரும்பொழுது, வானவர் சிலர் அடிக்கடி தோன்றி இறைவன் புகழ் பாடுவர்; அதனை அவர் கேட்டு அவர்களோடு பாடுவார். அவர் மிக மெலிந்து போவதைக் கண்ட மரியன்னை, "மகனே, நும் கைத்தாதை நோயால் வருந்துவது போல நானும் வருந்துதல் ஆகாதோ?" என்று இரங்கிக் கேட்க, "இவ்வுலகில் துன்பம் பலவகைப்படும். பொறுமையோடு நோயால் வருந்துதல், பிறருக்காகக் குருதி சிந்தி உயிர் துறத்தல், இவற்றைக் கண்டு உள்ளம் நொந்து அழுதல் இம் மூன்றினுக்கும் நாம் மூவருமே சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டும் என்பது இறைவன் திருவுளம்' என்றார். இதைக் கேட்டதும், மரியன்னை தம் துணைவர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகள் அனைத்தும் செய்து, மருந்து கொடுத்துப் பேணி வந்தார். அதனால் சூசை முனிவர் உடல் வாடியும் உளம் வாடாதவராய் பொறுமைக்கோர் அணிகலனாய் விளங்கினார்.

# 10. தூதுரைப் படலம்

முற்படலத்தில் கூறியவாறு சூசை முனிவர் எட்டு ஆண்டுகள் நோயால் வருந்திய பிறகு, வான் வாழ்வு அடைய வருமாறு வானவர் அவரை அழைக்க வந்தனர். தோத்திரப் பாக்கள் பாடினர். பத்தாம் நாள இறைவன் அவர் அகக் கண்ணில் நின்று, "சூசையே, உலகத்தை மீட்க அவதரித்த நம் குமாரனையும் அவரது திருத தாயையும் நீ இனிது காத்தாய். திருக்குமாரன் மக்களுக்காகத் தம் உயிரைப் பலியாகத் தந்தாலன்றி எவரும் வான்வீடு அடையார் ஆதலின், அதுவரையில், நீ புண்ணிய ஆன்மாக்கள் இருக்குமிடத்துக்கு நம் தூதனாகச் சென்று இரட்சகர் வருகையையும், மீட்பின் காலம் அண்மித்திருப்பதையும் அறிவிப்பாய்" என்றார். முனிவர் அக்காட்சியால் பரவசமுற்றார். பின்னர், திருமகனை நோக்கி, 'உன்னோடு ஒன்றாகிய கடவுள் எனக்குக் கற்பித்த ஏவலை, நீ அறிவாய். உங்களை விட்டுப் பிரிதல் என்னை வருத்துமாயினும், இது தேவ திருவுளம்' என்று பலகூறித் தளர்ந்து விழுந்தார். தேவ குமாரனும் தேவ தாயும் இருபுறம் நின்று தாங்க, அவர் கைகுவித்து வணங்கினார். 'உனக்கு என்னால் விளைந்த குறைகளைப் பொறுத்துஆசீர்வதித்தருள்' என்று தேவதாயிடம் வேண்டினார். இருவரும் ஆசியளித்து அருளுரை கூற, முனிவர் உயிர் பிரிந்தது. இருவரும் வானோர் புடைசூழ்ந்துவர வளனாரை மலர் வனத்தில் அடக்கம் செய்தனர். திருக்குமாரன், 'இவ்வுயிர் திரும்பி வருமளவும் இவ்வுடலை நன்கு பாதுகாப்பாயாக' என்று கல்லறைப் பூமிக்குக் கட்டளையிட்டார்.

சூசை முனிவர் ஆன்மா, நல்லான்மாக்கள் இருந்த மோட்ச வாயிலை அடைந்தது. வளனார் அங்குப் புகுந்ததும், மற்ற ஆன்மாக்கள் 'இவன் ஒரு வானவனோ' என்று ஐயுற்றனர் அவர்களுக்கு வளனார் "நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இறைவன், உலகிற் பிறந்து இருபத்தாறு ஆண்டுகள் ஆகின்றன அவரை ஈன்ற கன்னி மரியாளுக்கு யான் மணத்துணைவனாயிருந்து, அவரை வளர்க்கும் பேறு பெற்றேன். விரைவில் அவர் வந்து, எல்லோர்க்கும் முத்தியின்பத்தை அருள்வார்." என்றார். வரங்கள் நிறைந்த வளனாரை எல்லோரும் வாழ்த்தி வணங்கினர். பின்பு, அவர்கள் நரதேவனின்

இயல்பை விளக்கிக் கூறுமாறு கேட்க. அவர் அன்பும் அருந் தவமும் ஆற்றலும் அழகும் அருளும் அறமும் வழுவாதவன் என்பதை அழகுபடக் கூறி, 'நீங்கள் முன்பு கூறிய தீர்க்கத் தரிசனமெல்லாம் தன்பால் நிறைவேறச் செய்தவன்' என்றார்.

இவைகளைக் கேட்டு அவர்கள் மகிழ்ந்திருக்கையில், மரியன்னையின் தாய் அன்னம்மை வந்து தேவகுமாரன் அவத ரித்தது முதல் அன்று வரை நடந்த செய்திகளைத் தெரிவிக் குமாறு வேண்டினள். வளனார், 'மரியாள், இறைவனின் அன்பில் கன்னிமை கெடாமல் கருவுற்றதும், தான் ஐயத்தால் வருந்தியதும், இறைவனருளால் ஐயம் நீங்கியதும், மலைக் குகையில் இயேசு பிறந்ததும், இடையரும் மூவரசரும் வந்து பணிந்ததும், ஏரோதன் கொடுமைக்கு அஞ்சி எகிப்துக்கு ஓடியதும், அங்கு ஏழு வருடம் வாழ்ந்ததும், நாசரெத்தூருக்குத் திரும்பியதும், எருசலேமுக்குச் சென்றதும், திருமகனை மூன்று நாள் காணாமல் பின்னர்க் கண்டதும், 'சிலுவைமரமே என் அரியணையும் செங்கோலும்; அதில் இறப்பது வரை எனக்கு நிலையில்லை' என்று சிலுவை மரத்தில் இயேசு துயின்று வரு கிறார்' என்பதுமாகிய செய்திகளைக் கூறக் கேட்டு எல்லோரும் இரங்கி, இரட்சகரின் கருணைப் பெருக்கை வியந்து கூறி வாழ்த்தினர்.

# 11. உத்தானப் படலம்

**(கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்ததும் சூசை முனிவர் உயிர் பெற்றெழுந்ததுமாகிய கதையைக் கூறும் பகுதி)**

மேற் கூறியவாறு முற்பிதாக்கள் தேவ குமாரன் வருகைக்காக ஆவலோடு காத்திருந்த காலத்தில், திருக் குமாரன் உலகத்தை இரசிக்கத் திருவுளங் கொண்டு எங்கும் வேத உண்மைகளைப் போதித்து வந்தார். 'கடவுள் ஒருவர்; கடவுள் அருளிய வேதமும் ஒன்றே. அவ்வேத முறைப்படி யொழுகி இல்லறத்தையோ துறவறத்தையோ கடைப்பிடித்தால் பேரின்ப வீட்டைப் பெறலாம். இரப்பவர்க்கு ஈதலே பொருள் வரும் வழி. வேத விதிப்படி ஒழுகுதலே வான் கதிதரும் ஒழுக்கம். புகழ்ச்சியை விரும்புவர்கள் இகழ்ச்சியை அடைவார்கள். அடக்கமும் பொறுமையும் உடையவர் அடையும் புகழே மெய்யான புகழாம்' என்னும் கருத்தமைந்த போதனைகளை எல்லோரும் பின்பற்றுமாறு எடுத்துரைத்து மக்களின் உடற் பிணியையும் உள்ளப் பிணியையும் அகற்றி எல்லோர்க்கும் நன்மை செய்து வந்தார்.

இவ்வாறொழுகு நாளில், நாவால் நக்குமளவான இனிமைக்கு ஆசைப்பட்டு உணவை மறந்த அறிவற்றவரைப் போல உலகச் சிற்றின்பங்களுக்கு ஆசைப்பட்டு மக்களெலாம் நரகத்துயர்க்குட்படுவதை எண்ணி வருந்திய தேவ குமாரன், தன் பிதாவை நோக்கிப் "பிதாவே! மனிதர்களுக்குத் தீவினை விளைவித்துக் கொடுங்கோன்மை செலுத்தும் பேய்களை அவர்கள் வெல்ல என்னுற் செய்யத் தகுவது யாது? மனித குலத்திற்கு முன்னுளுற்ற பழியைத் தீர்த்து உன் சினத்தை ஆற்றத்தக்க குற்றமில்லாத பலி உலகில் இல்லாததால் என்னையே பலியாகத் தந்து பழம் பழியைத் துடைத்து உலகை இரட்சிக்க எண்ணியுள்ளேன்" என்றார். பிதாவும் 'நன்று' என்றார்.

மனித இயல்பையும் தேவ இயல்பையும் ஒன்றாய் இணைத்து நின்ற நரதேவன், இவ்வாறு தன் குருதியைச் சிந்தி உயிர் விட்டுப் பூவுலக மாசுகளைக் கழுவ முன்வந்தார்.

மக்களின் பாவங்களைத் தீர்க்க தேவதிருமகன் பாடுபட்டு இறத்தல் வேண்டா. அவரது ஒரு பரிவுரையே போதும்.

எனினும், நாம் பெறும் வான் வீட்டின் மேன்மை எத்தகையது என்று காட்டுவதற்கே சொல்லரிய துன்பங்களைத் தாங்கி இறக்க முன்வந்தார் என்பது மறை நூலுண்மை.

கிறிஸ்து பெருமானைப் பலியாகப் பெற இறைவன் திருவுளமானார் என்றவுடனேயே பேய்கள், அவர்மீது கொண்டிருந்த சினம் வஞ்சம் பகை முதலிய யாவற்றையும் தீயோர் வழியாய்ச் செலுத்தத் துணிந்தன. பேய்களால் ஏவப்பட்ட அத்தீயோர் செய்த கொடுமையால், அவர் உடலினின்று நம் பாவத்தைக் கழுவும் வெள்ளமாகக் குருதி பாய்ந்தோடியது. நச்சு மரத்தினின்று இறங்கிய நஞ்சை ஒழிக்க ஒரு நெடுமரத்தின் தேவ மருந்து வேண்டுமென்றாற்போல, இறைவனும் இயேசு ஒரு நெடிய சிலுவை மரத்தில் அறையுண்டு பழம் பழியைத் தீர்த்தார். மக்கள் தாம் செய்த குற்றங்களையெல்லாம் நீக்கி, வான் வீடு அடைவதற்கு ஒரு குருநாதனாக இவ்வுலகில் அவதரித்து அளவற்ற துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கி நமக்காக உயிர் விட்டார்.

இவ்வாறு மீட்பின் வேலையை முடித்த பிறகு அவர் முற்பிதாக்கள் இருந்த இடத்தையடைந்தார். அங்கு ஆன்மாக்களின் மனம் தெளிய ஒளியும் ஆசியும் அருளும் நிறைந்த மோட்ச தரிசனம் அளித்தார். எல்லாம் வல்ல இறைவனைக் கண்ட பேரின்பத்தால் அவர்கள் மாட்சியும் வரங்களும் தெளிவும் மிக்கவராய் இறைவன் திருவடியை வணங்கித் தேவ துதிகளைப் பாடினர். அப்பொழுது சூசை முனிவர் ''என்னுயிர்க்குயிராய் நிற்கும் அருள் நிறை வல்லோய், நீ உன்னுயிரை ஈந்து எங்களை இரட்சித்தாய். நாங்கள் பேரின்ப வாழ்வுபெற நீ இறந்தாய். சொற் கடந்த அழகுடன் நீ விளங்குதலைக் காணும் இவ்வேளையில், உன்னை வளர்த்ததனால் நான் அடைந்த அளப்பரிய பயனைக் கண்டு மகிழ்கிறேன்' என்று கூறி இயேசு இரட்சகரின் திருவடிகளை வணங்கினார். இவ்வாறு அங்குள்ளோர் அனைவரும் பேரின்பத்துள் மூழ்கியிருக்கும்போது, இரட்சகரின் கட்டளைப்படி சில வானவர் உத்தரிக்குந் தலம் சென்று, தூசு போக்க உலையிலிடும் பொன்னைப்போல் தாம் செய்த சிறு குற்றமெலாம் போக்க ஒப்பனைத் தீயில் வருந்தி வெந்து கொண்டிருந்த ஆன்மாக்களை அழைத்து வந்தனர். அவர்களும் ஆயிரம் தேவ நாமங்களைச் சொல்லி இரட்சகரைப் போற்றினர்.

பின்பு இரட்சகர் அவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு தம் கல்லறையை அடைந்து தம் உடலிற் போர்த்தியிருந்த துகிலை நீக்கி, இப்போது நான் உங்களுக்குத் தந்த பேரின்பத்தைக் கொள்ள நான் தந்த விலை இதோ! என்று சொல்லி, நீசர்கள் முள்முடி வைத்து அடித்த கொடுமையையும், நகையரசனுக்கிய உருவத்தையும், கண்ணொளியிழந்த காரணத்தையும், குருதி படிந்த திருவாயின் இதழ்களையும், தூணில் கட்டி அடிபட்ட பழி சுமந்த உடலையும், சிலுவை சுமந்து சென்ற நிலையையும், சிலுவை மரத்தில் இருப்பாணிகளால் அறைபட்ட விதத்தையும், தம் திருவிலாவை ஈட்டியால் ஒருவன் குத்திய போது திறந்த காயத்தையும் காட்டி, ஒரு பெண்ணால் உலகுக்கு உற்ற தீமையை — ஒரு கனியால் வந்த கேடுகளைத் தீர்த்து உலகை இரட்சிக்க நான் செய்த தியாகச் செயல்கள் இவை. இவற்றுக்கு உங்களால் நான் அடையும் பயன் யாதும் உண்டோ? என்று கேட்டார். வயிர மலையும் உருகுமாறு நாதன் கூறிய சொற்கள் வேலைப் பாய்ச்சித் திருகிய பெரும் புண்ணில் தீ நுழைந்தாற்போல ஆயிற்று. சூசை முனிவர் பெருமூச்சு விட்டுப் புலம்பினார். மற்றவர்களும் இரட்சகரின் திருக் காயங்களைக் கண்டு உள்ளங் கசிந்து உருகி, 'தாயும் நீயே, தந்தையும் நீயே, தவறாமல் நன்மை தருபவனும் நீயே—என்று அறிவோமேயல்லாமல் எம் பாவத்தின் தன்மையும் உன் அன்பின் தன்மையும் நாங்கள் அறியோம்' என்று பலவாறு ஏத்தி வணங்கினர்.

இதன் பின்பு இரட்சகர் தம் திருவுடற் காயங்களை மாற்றித் தெய்வ ஒளியோடு உயிர்த்தெழுந்தார். எழுந்ததும், சூசை முனிவரை நோக்கி, 'பேய்க்கு இணங்காதவர் அனைவரும் உலக முடிவில் இவ்வாறே உயிர்பெற்றெழுவர் என்பதற்கு அடையாளமாக இங்கே உள்ள நும் உடலிற் புகுந்து எழுக' என்றார். அப்பொழுது சூசைமுனிவர், தேவகுமாரனைப் போற்றி மணம் வீசும் மலர்க்கொடி ஏந்தி நின்றார். வானவர் இசைபாடி மகிழ்ந்தனர். கோபமும் பகையும் ஒழியவும், அன்பும் ஆர்வமும் பெருகவும், பாவம் ஒழிந்து ஞானம் ஒளிரவும், உலகின் துன்பமெலாம் ஒழியவும் ஒளியுருக் கொண்டு எழுந்தருளிய ஆண்டவன், சூசை முனிவரும் பிற புண்ணிய ஆன்மாக்களும்

தம்மைச் சூழ்ந்துவரத் தம் திருத்தாயாருக்குத் தரிசனமளித்தார். அப்பொழுது மரியன்னை, அவர்களை வணங்கி அடைந்த இன்பம் கடலினும் பெரிதாயிற்று. திருமகன் பட்ட பாடுகளை நினைந்து நொந்து அழுத தாய், அப்பாடுகளால் மனிதர்களுக்கு விளைந்த நன்மையை எண்ணித் தன் துயரை ஆற்றினாள். இவ்வாறு பல நாட்கள் இரட்சகரும் சூசையும் பிறபுண்ணிய ஆன்மாக்களும் இவ்வுலகிற் செஞ்சுடர் உருவாகத் தோன்றிப் பேரின்பம் விளைத்து வந்தனர்.

# 12. முடி சூட்டு படலம்

(சூசைமா முனிவர் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் முடிசூட்டப் பெற்றார் எனக் கூறும் பகுதி)

## விண்ணுலகில் முடி சூட்டுதல்

தேவகுமாரன் இறந்தபோது துன்பக் கடலில் மூழ்கியவர் அவர் உயிர்த்தெழுந்து காட்சி தந்தபோது பேரின்பமுற்றனர். நாற்பது நாட்களுக்குப் பின், திருமகனும் சூசைமுனிவரும் மரியன்னையை வாழ்த்தி ஆன்மாக்கள் குழாத்துடன் பெரிய தோர் மலையை அடைந்தனர். சீடரும் தொடர்ந்து சென்றனர். இயேசு பெருமான் எல்லோரையும் ஆசீர்வதித்து, சூசை மாத வரை நோக்கி, 'தாவிதன் மரபிற் பிறந்த நீர் ஒளிமுடி சூடி வானுலகில் அரசாளுவீர். நான் மனிதரை இரட்சித்த பெருமை மனிதனிடத்தில் விளங்குதல் வேண்டுமன்றோ? என்று கூறி, 'விசும்பில் எழுந்து வருக' எனலும் சூசை முனிவர் பூவுலகை விட்டெழுந்தார். எல்லோரும் வியப்புடன் நோக்கி நிற்கையில், ஒரு மேகம் அவர்களை மறைத்தது. திருக் குமாரன் மோட்ச வாயிலைத் திறந்து எல்லோரும் சூழ்ந்து வர உட்புகுந்தார். பின்பு பிதாவை நோக்கி, "பிதாவே, நும் கட்டளைப்படி பேய்களை வென்று, அவ் வெற்றியின் பயனாக இவர்களை இங்கே கொணர்ந்தேன். மனிதர்கள் இனி என் இனத்தவர், ஆதலின் அவர்களைப் பேய்க்கு அடிமையாக்காமல் இங்கேவர அருள் புரிக" என்றார். இதன்பின், வளனார் தம்மை வளர்த்த தந்தையாய் நின்று செய்த உதவிகளை எல்லாம் சொல்லி, 'என்னால் வந்த பயனைக் காட்ட இவர்க்கு முடி சூட்ட வேண்டும்' என்றார். உடனே பிதா சூசைமுனிவரைத் தழுவி ஏழு மணிகள் பதித்த முடி சூட்டி மகிழ்ந்தார். தேவ குமாரனும் பரிசுத்த ஆவியும் அவ் வாறே முடி சூட்டினர். பின்னர்ப் பிதா வளனாரை இருத்தித் தான் சூட்டிய மகுடத்திற் பதித்த ஏழு மணிகளின் பொருளை விளக்கினார். 'அவ் வேழு மணிகளும் கற்பு, தீவினை விலக்குதல், தேவதாயின் உதவி பெறுதல், பேய் வெல்லுந்திறன், பிள்ளை யில்லாக்குறை தவிர்த்தல், துயரத்தில் ஆறுதல், நோய் தீர்த்தல் ஆகிய ஏழு வரங்களின் அடையாளம். இவ் வரங்களால் உன்னை வேண்டுவோர்க்கு நீ நன்மை புரிவாயாக' என்றார். பிறகு இறைவனின் சுதன் - இரட்சகர், "பூவுலகில் நும் சொல்

தவருமல் நடந்த நான், இவ்வானுலகிலும் மனிதர்க்காக நீர் கேட்கும் வரங்களை எக்காலமும் தருவேன்" என்று வரமருளினுர். நேயமுகிய இறைவன், "நின் திருமண நாளில் இந் நறுமலர்க் கொடியைத் தந்தேன். இனி உன்னை வணங்கியவர் உன் கொடி நிழலில் குறைவற்று வாழ தேவ அருளை வெள்ளமாகத் தருவேன்" என்ருர். இறைவன் ஆசியால் உயர்ந்த சூசை, மூவாளாகிய ஒரு கடவுளைப் பணிந்து, 'என் சிறுமை மாட்சிமை பெறச் செய்த உங்களுக்கு என் அருச்சனை" என்று கூறி வணங்கினுர். அன்று முதல் சூசைமாதவன் இவ்வுலகோர்க்குச் செய்து வரும் நன்மைகள் அளவில. அவற்றுள் ஒன்றை இங்குக் காண்போம்.

## மண்ணுலகில் முடி சூட்டுதல்

லெயுய் போல்து என்னும் மன்னன் உரோமை நாட்டை நீதி நெறி தவருது ஆட்சி புரிந்து வந்தான் அருளும் ஆற்றலும் மிகுந்த அவன் சூசை மாதவனை வழிபட்டு அவர் பூங்கொடி நிழலில் இன்புற்று வாழ்ந்தான். ஒரு நாள் அவனது பகைவர் அவனை நஞ்சிட்டுக் கொல்ல நினைந்து, அரசனது ஊழியன் வழியாக உணவில் நஞ்சு கலந்து வைத்தனர். அரசன் உணவுண்ண அமர்ந்தபோது, சூசை மாமுனிவர் அவன் முன் தோன்றி 'இவ்வுணவைத் தீண்டாதே' என்றுகூறி மறைந்தார். உணவில் நஞ்சிருக்கக்கண்ட அரசன், தன் உயிர் காத்த சூசை மாமுனிவர்க்குக் கைம்மாறு செய்ய நினைந்து எல்லா அரசர்களையும் தருவித்து, நிகழ்ந்ததைக் கூறி, "இனி, இந்நாட்டை என்றும் இறவா நிலையடைந்தவனும் நீதிமானும் அருட்கொடையும் வாடா மலரழகும் அன்புமுடைய சூசை மாமுனிவரே ஆள்வார். அவர்க்கு யான் முடிசூட்ட நினைத்தேன்." என்ருன். மன்னரும், 'சூசை முனிவர்க்கு முடிசூட்டி அவர் ஏவிய பணியை அவர் ஆளாக எங்களுக்கு அறிவித்து எங்கள் குறைதீர்த்து ஆள்க' என்றனர்.

நாடெங்கும் முரசறையப்பட்டது. வியென்ன மாநகர் வீதிகளில் எல்லாம் மகர தோரணங்களும் பூப்பந்தர்களும் இடப்பட்டன. பூங்காவனம் போலவும் விண்மீன்கள் பூத்த வானம் போலவும் அந்நகர் காட்சியளித்தது. பவளத் தூண் நிறுத்திப் பளிங்குச் சுவர் எழுப்பி பல நிலைக் கண்ணுடிகள் வைத்துக் கதிரவன்போல் ஒளிரும் ஒரு மண்டபம் அமைத்து,

பொன்னுற் செய்த பன்னிரண்டு சிங்கங்கள் தாங்கிய ஆசனம் இயற்றி, அதன்மீது சூசை மாமுனிவரின் திருவுருவை எழுந்தருளச் செய்து, குருக்கள் வழிபாடுகளை நிறைவேற்ற மன்னன் சூசை மாதவனுக்கு முடிசூட்டினுன். அரசரெலாம் விழுந்து வணங்கினர். மக்களெலாம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். அரசன் அன்று 'கொடு' என்னும் சொல்லை மீண்டும் கேளாதபடி பொன்னை மாரிபோல் வழங்கினுன். ஒன்பது நாட்கள் விழா முடிந்தபின், பத்தாம் நாள் பொன் அச்சில் வெள்ளி உருளைகள் இட்டு மரகதமலைபோல் மேடு அமைத்து அதில் வாழும் குடிகளைப் போல் மணிப்பாவைகள் இருத்தி முத்தாரங்கள் தொங்கவிட்டு இயற்றிய அழகியதோர் இரதத்தில், பொன்னுற் செய்த ஆகிலப் பறவையின் சிறகின்மீது சூசை முனிவரின் திருவுருவை எழுந்தருளச் செய்தான். அன்று அந்நகர் வீதி, மாலைகளும், மணிப்பொடிகளும், மணிவிளக்குகளும் கொண்டு கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது. வானத்தெருவிலே கதிரவன் வருவதுபோல வியென்னமா நகர் வீதியில் அப்பொற்றேர் நடந்தது. அன்று சூசை முனிவர் அந்நகரத்தாரைத் தம் அருட் கண்களால் நோக்கி அவர் தம் துயர் நீக்கினுர். பின்னர் அத்திருவுருவைக் கோவிலின் பொற்பீடத்தில் எழுந்தருளுவித்தனர். அரசன் முதல் அனைவரும் பணிந்து போற்ற அந்நாடு புனித சூசையப்பர் பாதுகாவலில் வைக்கப்பட்டது.

"சூசைமா முனிவரின் பூங்கொடியிற் பூத்த மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து மலர்களைக் கொண்டு தொடுத்த முப்பத்தாறு மாலைகள் இவை" என வானவர் சொல்லி வளனுர் திருவடியில் வைத்து வணங்கிய பின், "கன்னித் துணைவி மகிழ்ந்துரைத்த தேம்பாவணி இது. இதனை உரைப்பவரும் கேட்பவரும் வானுலக வாழ்வு பெறுவர். அவர்க்கு மரியும் சூசையும் தம் திருமகனோடு அருள் புரிவார்" என்று கூறி மறைந்தனர்.

# தேம்பாவணி

## ( மூன்றும் காண்டம் )

## 1. குழவிகள் வதைப் படலம்

முன்னுரை

செல்முகத்துஇடிச் சினத்து,ஒலி முழங்கிய வெம்போர்,
கொன்முகத்து,எரிக் குணுக்கினம் இயற்றிய காலே,
பொன்முகத்துஒளிப் புரிசைமா நகரில்ஆ யவை,நாம்
சொல்முகத்து,இவண் தொடையொடு தொடருதும் உரைத்தே. 1

எரோதன் மூவரசர் மொழிகளை ஆராய்தல்

புராத னம்தரும் புகழ்மறை யூதர்நாடு அளித்து,
தராத ரம்தரும் தடத்ததோள், உரும்உமிழ் தனுக்கை,
நிரோ ருகம்தரும் நீண்டதார், கரிக்கொடி தாங்கும்
எரோதன் என்றரும்சடத்தகோன், எருசலேம் ஆண்டான். 2

ஆளஆசையால் அல்லவைக்கு அஞ்சிலான், தன்கோல்
நீளஆசையால் நீதிக்கோல் கோட்டிய கயவன்,
காளஆசையாற் கலங்கிய வெருளினன், உணர்வும்
மாள,ஆசையால் மயங்கிய சிந்தையிற் கொடியான். 3

மன்னுநீர்உயர் மன்னவர் மூவர்வந்து உரைப்ப,
மின்னுநீர்நவ மீன்உயர் உதித்தலும், வேந்தன்
என்னும்நீர் உலகுஇனிதுஅளித்து ஆள்பவன் பிறந்தாங்கு
உன்னுநீர்கடந்து உதித்தலும் கேட்டு,உளம் மருண்டான். 4

---

1. செல்முகத்து - மேக முகத்தில். கொன்முகத்து - வீணாய்.
2. தராதரம் தரும் - மலைபோன்ற. நிரோருகம் - நீரோருகம் - தாமரை. சடத்தகோன் - கொடுங்கோலன். சடம் - வஞ்சகம்.
3. அல்லவை - தீயவை. காள ஆசை - இருண்ட ஆசை.
4. உன்னு நீர் கடந்து - எண்ணும் தன்மையைக் கடந்து.

மருள்கொள் நெஞ்சினன், மறைவலோர் யாரையும் விளித்துத்
"தெருள்கொள் நன்மறைச் செப்பம் ஆய்ந்து, உலகளித்து ஆள்வோன்,
இருள்கொள் இந்நிலத்து எவ்விடத்து உதிக்குவன்?" என்ன,
வெருள்கொள் நெஞ்சுஅற, 'வெத்திலத்து உதிக்குவன்' என்றார். 5

என்றவாசகம், எறிவை வேல் என உளம் போழ்ந்து,
குன்றமார்பிடைக் கொண்டவெங் கொடுமையை மறைத்து,
சென்றமூவரைச் செப்பி,"நீர் வணங்கிமீண்டு, அங்கண்
நின்றயாவையும் நீர்சொல, போவல்யான்" என்றான். 6

மீன்மு கத்து,அவர் மேவி, மீண்டிலர்எனக் கண்டும்,
கான்மு கத்துஅலர் முல்லையார் கண்டதும், கடந்த
நூல்மு கத்துஉயர் சீமையோன் உரைத்ததும் நுதலி,
கோன்மு கத்துஅனுர் குவிந்தெழ, வெருவினைக் கொண்டான். 7

எரோதனின் அச்சம்

பிறந்த முன்னிடம் பெயர்ந்துவந்து, எருசலேம் தன்னைத்
துறந்த பின்,அவன் தொடர்ந்தபல்இடம் தொடர்ந்து, அவனைப்
'பறந்தது என்னினும் பற்றிமொய்த்து அடுக'என்று ஏவ,
திறந்த கும்சிலர் தேடலிற் காண்கிலாது, அயர்ந்தான். 8

"நான்அ ளிக்கும் இந் நாட்டில்,மற் றொருவன் வந்து,அவற்கே
மான்அ ளிக்கும்இக் கோன்மைஈந்து இறைஞ்சவோ? வளம் ஊழ்த்து
ஊன்அ ளிக்கும்இவ் வுடல் விட நாள்இதோ" என, வான்
கோன்அ ளிக்கும்இக் கொள்கையில், தான்மயல் கொண்டான். 9

விட் புலம்தகை வேய்ந்தது; தான்வினை வேய்ந்தான்;
மட் புலம்குறை மறந்தது; தான் உயிர் மறந்தான்;
உட் புலம் தழல் உண்டது; தான் உணவு உண்ணான்;
கட் புலம் துயில் கடிந்தது;தான்கொலு கடிந்தான். 10

---

5. வெருள்கொள் நெஞ்சு - அச்சம் நிறைந்த (அவன்) நெஞ்சு, அற - அற்றுப்போகும்படி.

6. குன்றமார்பு - மலைபோன்ற மார்பு. சொல - சொன்னவுடன்.

7. முல்லையார் - இடையர், நுதலி - ஆராய்ந்து. அனுர் - துன்பம்.

8. பறந்தது என்னினும் - (வானிற்) பறந்து போனாலும் அடுக - கொல்க.

9. மான் அளிக்கும் - பெருமை தரும். வளம் ஊழ்த்து - செல்வம் பதமழிந்து. வான்கோன் - கடவுள். அளிக்கும் இக் கொள்கையில் - (உலகை) இரட்சிக்கப் பிறந்த தன்மையில்.

10. விட்புலம் - வானுலகு. தகை வேய்ந்தது - பெருமை கொண்டது.

எரோதன் மனத்தினைப் பேய் தூண்டுதல்

மாலை ஏந்து இருள்மொய்த்து எங்கும் மல்கிய காலை, கள்வர்
வேலை ஏந்துபு,வெங் கோறல் விளைப்பதுபோல,கோடும்
கோலை ஏந்து எரோதன் நெஞ்சில் கொடிதுஉணர்ந்து, இருண்டு மாழ்ந்த
காலை,ஏந் தலைப்பேய் சேர்ந்து, கடிதுஉணர்வு அழற்றிற் றன்றே. 11

"உருட்டிய செங்கோல் ஈந்தே, உயிர் உய்வர் எவரும் உண்டோ?
மருட்டிய பகைமுற்றுமுன், வளர்திறத்து அடியில் ஈர்த்து,
தெருட்டிய நீரார், கோன்மை திறம்பெறத் தாயும்மேவார்;
வெருட்டிய முறையில் வந்த வேந்தனைக் கோறல் நன்றே." 12

"விடுதியேல், முடியின்வாழ்க்கை விடுத்தனை; அவன்காணாதேல்,
சடுதியே, இடங்கள்தோறும் ததும்பிய குழவி எல்லாம்
அடுதியே; ஒருங்குதானும் ஆவிஅற்று இறப்பன்; இல்லால்,
கெடுதியே" எனப்பேய், கோவும்கேடுற, 'நன்றுஈ து'என்றான். 13

உள்ளொளியில் தன் கொடுமை உணர்தல்

இருள்சொரிந்து அடர்ந்த கங்கு லிடை,முகில் இருகண்கூசத்
தெருள்சொரிந்து இடித்துமின்னும் திறத்து,உளத்து ஆளு(ம்)நாதன்
அருள்சொரிந் திடுமெய்ஞ் ஞானத்து அவிர்கதிர் மின்ன, அன்னான்
மருள்சொரிந்து இருண்டநெஞ்சில், வடுமுகம் கூசிக்கண்டான். 14

ஆலோசனைச் சங்கம் கூட்டல்

தேம்புஉளம் கூசத் தோன்றும் திருவிளக்கு அவித்து,மீண்டும்
சாம்புஉளம் கருதும் தீமை தன்னையே சாரா, தோன்றக்
கூம்புஉளம் கடுத்த வஞ்சம் குணம்எனச் சொல்வார் தேடி,
ஓம்புஉளம் தெளிந்த நூலோர் ஒருங்குடன் அழைத்தல் செய்தான். 15

---

11. இருண்டு மாழ்ந்த காலை - (மனத்தில்) இருள் பரவிய காலத்து.

12. வளர்திறத்து - மிக்க வல்லமையோடு. ஈர்த்து - அறுத்து. தெருட்டிய நீரார் - தெளிந்த உணர்வுடையோர். திறம்பெற - நிலைபெற. தாயும் மேவார் - தாயையும் எண்ணார்.

13 கேடு உற - தான் முழுதும் கெட.

14. வடு முகம் - கொடுமையின் கோரம். கூசிக் கண்டான் - கண்டு கூசினான்.

15. தேம்பு - தேம்பி, மெலிந்து, திருவிளக்கு:- ஞான உணர்ச்சி. சாம்பு உளம் - சாய்ந்த உணர்வில். தோன்றக் கூம்பு - தோன்றாதபடிக்கு. கடுத்து - மிக்குத் தோன்றிய ஓம்பு - (நன்னூல்) ஓம்பி.

சொரிசுமந் திடும்கார் ஒப்பத் துளிக்கையின் சலமோன் நின்ற
எரிசுமந்து இலங்கி மின்னும் இனமணி நிரைத்திட்டு, ஈராறு
அரிசுமந்து எழுந்த பைம்பொன் ஆசனத்திருந்து தோன்றி,
வரிசுமந்து அடும்வெம் வேங்கை மறத்தொடு,பொலிய நின்றான். 16

மந்திரிமாரும், வாய்ந்த வளம்தரும் தவரும், நன்னூல்
தந்திரி மாரும்,தானைத் தலைவரும் ஒருங்குகூடி,
இந்திரி அலைபொங்கு ஒத்தது இடையிடை மொய்ப்ப நின்றான்—
சிந்திரி மலைமேல் ஆடும் செழுங்கொடி யொத்த நெஞ்சான். 17

நாறிய மணியின் வாய்ந்த நன்முடி பெயர்தற்கு அஞ்சி,
ஊறிய கொடிய வஞ்சத்து உணர்வினை ஒளித்துத் தானே
கூறிய உரைகள் கோட்டிக் குனித்தவை முடித்தற்கு ஒல்கா,
தேறிய உதவி தேடும் திறத்தென, விளம்பல் செய்தான். 18

பற்றார் வெம்பகை பட்டுஅற, நான்ஆள்,
கற்றார் கல்வி கடந்து எழு நாட்டில்,
மற்றா ரோஒரு மன்னன்உ தித்து,ஈங்கு
உற்றான் என்றது—ஒருங்குஉல கெல்லாம். 19

அன்னான் ஈங்குளன் என்றுஅறை வாரை,
முன்னால் நானும்ந கைத்துமு னிந்தேன்;
பின்னாள் ஆயின பெற்றியை எண்ணி,
என்னால் ஆவது இயம்புமின்-என்றான். 20

---

16. சொரி சுமந்திடும் - (மழையைச்) சுமந்து சொரிந்திடும். எரி - ஒளி. வரி சுமந்து - வரிகளையுடைய.

17. தவர் - தவசிகள். இந்திரி அலை - கீழ்த்திசைக் கடல். சிந்து இரி - புனல் பாயும்.

18. நாறிய - விளங்கிய. ஒல்கா - தளராமல். தேடும் திறத்தென-தேடினாற் போல.

19. பற்றார் -பகைவர். கல்வி கடந்து எழு- நூல்களால் உரைக்க முடியாத (செல்வத்தினும்) மிஞ்சிய.

20. பின் நாள் ஆயின பெற்றி-பின்னர் நிகழ்ந்தவை:— இடையர் கண்ட காட்சி, புதிய நட்சத்திரம், திருப்பாலனை வணங்க வந்த மூவரசர், சிமையோன் கூறிய புகழ்மொழி.

அமைச்சர்கள் நிலை

என்றான், ஆடிஅடுத்தவை என்னத்
தன்தா ழாமுகம், உள்ளவை தந்து
நின்றான்; கோட்டம் உணர்ந்து, இடை நின்றார்,
குன்றா நேர்நெறி கோடி, உடைந்தார். 21

"கோல்கொண் டாரவர் கொள்கையை நோக்கி,
மேற் கொண் டாரும்வி ளம்புவர்" என்றார் —
நூல்கொண் டார்;என நூல்அற, யாரும்
மால் கொண்டார்,அறம் மாற்றுஉரை கொண்டார். 22

நாபன் கூறிய ஆலோசனை

வள்வாய் மாமுரசு ஆர்ப்பொலி மாறா,
கள்வாய் ஆளும்எம் மன்னவ! காதல்
கொள்வாய், வாய்மொழி கொள்(க)என, மீண்டே
எள்வாய் நாபன் இயம்புத லுற்றான். 23

துஞ்சித் திண்பகை முன்துடை யாதார்,
விஞ்சித் திண்பகை முற்றிய வேலை,
எஞ்சித் திண்திறல் எள்ளுறல் காண்பார்;
நெஞ்சில் திண்திறல் நேர்,மதி வல்லோய்! 24

அன்றுஉற்று எகின அண்ணல ரோடும்
சென்றுஉற் றே,பகை தீர்கிலம் நாமே;
இன்றுஉற்று ஈர்கில மேல்,பழி வெள்ளம்
பின்றுஉற்று, ஆழ்குதும் — பேதையர் போன்றே. 25

---

21. ஆடி-கண்ணாடி. தாழா முகம்-(கோபம்) தணியாத முகம். உள்ளவை-மனத்தில் உள்ளவை. கோட்டம்-அரசனின் மனக்கோட்டத்தை. நேர் நெறி கோடி-நீதிநெறி வளைந்து.

22. கோல்கொண்டாரவர்-அரசர். கொள்கையை நோக்கி-எண்ணத்திற்கு ஏற்றபடி. மேற்கொண்டார்-மேலோர். நூல் அற-நூல்வழிவிட்டு. அறம் மாற்று உரை-அறவழி மாற்றிய உரை.

23 வள் வாய்-அகன்ற வாயையுடைய. கள்வாய்-தேன் பொழியும் நாடு. காதல் கொள்வாய்-ஆசையைக் கொண்டு (உரைத்த). எள்வாய்-இழிவான வாய்ச் சொலலுடைய.

24. துஞ்சி-சோம்பியிருந்து. எள்ளுறல்-பழிக்கப்படுதல்.

25. அண்ணலர்-மூவரசர். ஈர்கிலமேல்-(பகையை) அறுத்தொழிக்காமலிருந்தால்.

நடுவொக்கும் தகை நாட்டரசர்க்கு,ஓர்
வடுவொக்கும் துயர் வந்தனவேலை,
கடுவொக்கும் பிணி போல்,அது காப்பார்,
உடுவொக்கும் கலை ஒள்ளொளி நீரார், 26

ஆக்கத்து, ஆருயிர் யாவும் அளித்த
நோக்கத்து, ஒருயிர் கொன்று,இகல் நூறும்
ஊக்கத்து அஞ்சுவை யோ?உல கெல்லாம்
காக்கப் பெய்நிறை கார்,இடி யாதோ? 27

'பாயா வேங்கையை' என்புளி, பைம்பூ
வீயாப் புண்டரி கம்என எண்ணல்,
ஆயாப் பேதமை யாம்;பகை கோறல்
ஓயாக் கோல்வழு வோ?—'கடன்' என்றான். 28

மன்னன் நாபனை மகிழ்ந்து நோக்க பிற அமைச்சர் இசைதல்

விரும்பித் தேடிய விலைப்பொருள் கண்டென, உள்ளம்
அரும்பித் தேறிய அரசன்,ஆங்கு அவன்மிசை, மலர்க்கண்
திரும்பித், தேறலின் காட்டிய திளைநயம் கண்டு,
சுரும்பின் தேக்கிய மற்றவர், ஒத்துரை சொன்னார். 29

எரோதன் வினா

'நன்று'என் றுயினும், நடுக்குறப் பெத்தில நகர்க்கண்
அன்றுஅங்கு எய்திய அன்னவன் இல்லையால், அகன்றே
இன்றுஎங்கு உள்ளன்என் றுயினும் இயம்புவர் இல்லை;
பின்று, 'இன்றுஆம்தொழில் பேசுமின்' என்றனன்—பெருமான். 30

---

26. நடு ஒக்கும் - நீதியோடொத்த. தகை - பெருமை. கடு - நஞ்சு.

27. ஆக்கத்து - மேன்மையோடு. இகல் நூறும் - (வந்த) பகையை ஒழிக்கும். மேகம் இடித்தாலும உலகைக் காப்பாற்றுகிறது. நீயும் உயிரைக் கொன்றாலும் உலகைக் காப்பாற்றுவாய்.

28 பாயா வேங்கையை - வேங்கை மரத்தை வீயா - மலராத. புண்டரிகம் - புலி.

29. உள்ளம் அரும்பி - மனம் மலர்ந்து. தேறலின் - தேனைப்போல். நயம் - மகிழ்ச்சி. தேக்கிய - நிறைந்திருந்த.

30. நன்று என்றுயினும் - (கொல்வது) நல்லது என்றாலும்.

மாதியான் மறுமொழியும் மற்றொரு வினவுக்கு விடையும்

நகைத்து மாதியன், 'நரபதி வாழ்க'என நவிலும்:
"துகைத்து மொய்த்தவெந் துயர்அறச் சொன்னதற்கு அமைகில்,
பகைத்து வந்தவன் பழிஅறுத்து, உன்முடி பெயரா,
முகைத்து நாடெலாம் முரணில வாழ்வது காண்பாய்." 31

"வளைகள் ஆர்பொழில் வனை அணிக் கரமித மலைமேல்
கிளைகள் ஆர் நிழல் கெழும்பலாக் கனிஎலாம், தீந்தேன்
சுளைகள் ஆயிரம் தரவும்,ஒன்று உயிர்அடும் விடமாம்;
திளைகள் ஆர்கனி சேர்கில்,ஈங்கு எவன்செய்வாய்?" என்றான். 32

'கொல்லும்அச் சுளை இன்னதென்று அறிகிலேல், குவிதேன்
புல்லும் அச்சுளை ஒருங்குஒழிப் பேன்'எனப் பொருநன்;
'சொல்லும் நீர்மையில், துறும்பகை தோன்றில தென்னில்,
ஒல்லும் நீர்மையில் ஒருங்கு அடல் குழவிகள்' என்றான். 33

அரசன் மௌனம்

கேட்ட வாசகம், கெழுங்குணம் எனப்பலர் வாழ்த்த,
'கோட்ட மாம்' எனக் கூறிய சிலர் உளத்து அஞ்ச,
நாட்டம்வாய்,உறு நயம்ஒளித்து அரசுஉரை நவிலான்;
மீட்டு,அம் மாதியன் வினைவிளை மருளுரை விரித்தான். 34

மாதியான் கூறிய விளக்கம்

"திருந்த ஆய்ந்து,அறம் திறம்பிலாச் செய்யினும்,எவர்க்கும்
பொருந்த ஆற்றுவர் பூவுலகு உண்டுகொல்? மன்ன!
வருந்த ஆம்பலே, மனமகிழ் முளரிவாய் மலரும் —
இருந்த மாஇருள் ஈர்த்த ஓர் இரவியின் முகத்தே. 35

பிரிந்ததோர் நிலம் பெறக்,கொடும் போர்முகத்து இறப்பத்
தெரிந்த வீரரைச் செலுத்தலே கொடிதுஅல என்பார்;
வரிந்த கோலொடு நாடுகொள் வழுஅறச்,சில ஈங்கு
இரிந்த சிறுயிர் இறத்தலே கொடிதென்பார் கொல்லோ?" 36

---

31. துகைத்து மொய்த்த - வருந்தும்படி வந்த. முகைத்து - மலர்ந்து.
32. வளை - சூழ்ந்த. கள்ஆர் - மது நிறைந்த. வளை அணி - செய்யும் அழகிற் சிறந்த.
33. பொருநன் - அரசன். அடல் - கொல்லுக.
34. கோட்டம் ஆம் - குற்றமாகும். நாட்டம் வாய் - கண்வழியாய்.
35. முளரி - தாமரை.
36. வரிந்த கோல் - ஆட்சி செய்யும் அரசன். வழு - கேடு. சிறு + உயிர் - சிறுயிர் - குழந்தைகள்.

பகைத்த வெம்பசி பரிந்துஅற, மலையொழிந்து ஒழுகி,
முகைத்த பன்மலர் முருக்கிய நீத்தமும் கொடிதோ?
துகைத்த தீதறச் சொன்னவை விடுதியேல், ஐயா!
தகைத்த வாழ்வொடு தாங்குஅரசு இழந்தனை—என்றான். 37

ஏலியன் பேசத் தொடங்குதல்

கான்மு கத்துஉயர் கல்மலை அனைய, வெங்கொடிய
கோன்மு கத்திலும், கொலும்துயர் முகத்திலும்,கோடா
நூல்மு கத்துஉரை ஏலியன் நுவன்றவை கேட்டு,
தான்மு கத்துஇடர் தளிர்ப்பநொந்து, இயம்புத லுற்றான். 38

தன்உயி ராகமற் றுயிர்கள் தாங்கிட
மின்னுயிர் மணிமுடி வேய்ந்த பார்த்திபன்,
கொன்னுயிர் வழுவென அய்யங் கொண்டு,பல்
மன்னுயிர் ஒழித்தலோ வடுவிலாது? என்றான். 39

கிசலன் கூற்று

போழ்வினை யாயினும், முடிபு ரந்திடத்
தாழ்வினை உண்டெனச் சாற்று வார்உண்டோ?
வாழ்வினைப் பிறர்க்குஅளித்து அரசன் வாழ்வுறக்
கீழ்வினை இலையெனக் கிசலன் கூறினான். 40

ஏலியன் அறிவுரை

"கண்ணிலான் ஓவியம் வரைந்த காதைபோல்
எண்ணிலா இளைஞனாய் இசைத்தி நீ" என
ஒண்ணிலா அரசடி இறைஞ்சி, ஓதியின்
தெண்ணிலா ஏலியன், மீண்டு செப்பினான். 41

---

37. பரிந்து அற - அறுத்து ஒழிக்க. துகைத்த - வருத்திய. இழந்தனை - இழந்தவனாய்.

38. கோடா நூல் முகத்து - வளையாத நீதிநூல் முறைப்படி.

39. உயிர் வழு என - உயிர்க்கு இடையூறு வந்ததென. கொன் ஐயம் கொண்டு - வீணாய்ச் சந்தேகங்கொண்டு. வடு இலா(த)து? - குற்றமில்லா நீதியோ?

40. போழ்வினை - கொல்லுந் தொழில். முடி - அரசு. தாழ்வினை - தாழ்வு. கீழ்வினை - வசை.

41. எண் இலா - எண்ணமின்றி. ஓதியின் தெள்நிலா - கல்வியின் தெளிந்த ஒளியுடைய.

மண்ணளவு ஒளிப்புகழ் மருவும் மன்னவ!
கண்ணளவு அறிவுளோர் கதைத்த மாசுரை,
எண்ணளவு இழிவுறும் என்று கேட்கிலர்,
விண்ணளவு ஒளிமறை விளம்பக் கேட்டியால். 42

வையகத்து ஒருவனாய், வாய்ந்த முத்தொழில்
செய்யகத்து, இணையிலான், சிறந்த அன்பொடு
பொய்யகத்து உறும்செயிர் போக்க, மைந்தனாய்,
மெய்யகத்து உறும்திறன், மறையின் மெய்ம்மையே. 43

"ஊன்முகத்து உதித்தபோது, உலகின் தீதுஇருள்
நான்முகத்து ஒழிப்பன்'என்று, உதிக்கும் நாள்தனில்,
வான்முகத்து உடுநவம் வழங்கும்"என்று மெய்ந்
நூல்முகத்து எழுமறை நுவல்வது, ஆய்ந்துளாய். 44

"அக்கணம் காண்டலும், அரசர் மூவர்வந்து,
இக்கணம் காட்டிய (இ)யூதர் மன்னவன்,
எக்கண்அங்கு அவன்பிறந்து இயைந்து ளான்?" என,
மிக்குஅணங்கு அலங்கலோய்! வினவ, கேட்டியால்: 45

"மீட்சியும், கோவலர் வியப்பக் கண்டதோர்
காட்சியும், கடும்வினை கடிந்த சீமையோன்
சாட்சியும் புகழ்ச்சியும், மற்றச் சால்புறும்
மாட்சியும் பெருமையும் வழங்கக் கேட்டியால். 46

"மன்அரசு இழந்தென, வானி னின்று,வான்—
தன்அரசு எமக்கெலாம் தரவந் தான்,பகைத்து
உன்அரசு எடுப்ப,ஈங்கு உணர்ந்து உற்றான்," எனக்
கொன்அரசு இழிவுறக் குழைந்து,உள் எண்ணவோ? 47

---

42. கண்ணளவு அறிவுளோர் - கண்பார்வை செல்லுமளவுக்கு மட்டும் அறிவுடையவர்–புல்லர். எண் அளவு - எண்ணிய அளவுக்கு. கேட்கிலா - கேளாமல். விண்அளவு - விண் அளாவு. ஒளி - புகழ்.

43. செய்யகத்து - செய்யுமிடத்து. பொய்யகத்து உறும் - பொய்யின் வழியாய் வந்த. மெய்யகத்து உறும் திறன் - உடலெடுத்த தன்மை.

44. ஊன்முகத்து - உடலெடுத்து. நான்முகத்து - பலவகையிலும்.

45. கணம் - வட்டம் – நட்சத்திரம். எக்கண் - எவ்விடம். அணங்கு - அழகு. கேட்டியால் - கேட்டாய்.

46. மீட்சியும் - மீளவும் என்ற வினையெச்சத்தின் திரிபு.

47. கொன் - வீணாய். அரசு இழிவுற - அரசியல் கெட.

எண்ணினும், அவன்பெயர் இசைத்த நீர்மையால்,
மண்ணினும் வானினும் மன்அர சாட்சியாய்,
கண்ணினும் இனிதுஉயிர் கடிதல் பண்ணவோ?
பண்ணினும், அரசியல் நிலைக்கும் பான்மையோ? 48

ஆயினும், அவனை நீ காண்டி லாமையால்,
தாயினும் அன்புஅமை அரசன் தன்மையாய்,
தீயினும் கொடும்வினை தெரிந்து, 'சேயெலாம்
வீயினும், நலது'என விரும்பிச் செய்யவோ? 49

வீய்வினை அஞ்சினர் விளிவுஇ லாவரோ?
தீய்வினை அஞ்சினர், செத்தும் செத்திலா,
தூய்வினை எஞ்சிலா, துதியின் வாழ்வரே;
காய்வினை எஞ்சிலாக் கருத்தினோய்! என்றான். 50

காலியன் சீற்றம்

ஏலியன் என்பவன் இவையெ லாம் மறை
நூல்இயன் று, உளத்துஅஞ்சா நுவல்வ தாயபின்,
காலியன் என்பவன், கதங்கொடு ஓதினன்:—
மால்இயன்(ற) இறையவன் வதனம் நோக்கியே. 51

"வீரியர் தொழிலிதோ; வெருவிப் புன்மைசேர்
நாரியர் தொழிலிதோ; நவைஇ லாமறை
ஆரியர் தொழில்என அரசியல் படப்
பூரியர் தொழிலினைப் புகன்று ளாய்;அரோ. 52

"இன்வளர் தயைமலி இறைவன் ஏவலால்,
மின்வளர் படைமுகத்து இரத்த வெள்ளமாய்,
முன்வளர் தகைமையோர் பகைமு ருக்கியே,
பொன்வளர் முடிநலம் புனைவ தாயினர். 53

---

48. உயிர் கடிதல் பண்ணவோ - (அவன்) உயிரைக் கொல்லமுடியுமோ?

49. தன்மையாய் - தன்மையிலிருந்து வீயினும் - இறந்தாலும் விளிவு - சாவு. நலது - நல்லது.

50. வீய்வினை - சாவுக்கு. காய்வினை எஞ்சிலா - காய்மகாரத்திற் குறையாத.

51. மால் இயன்ற - மயக்கங்கொண்ட.

52. வீரியர் - வீரர். அரசியல் பட - அரசியல் கெடும்படி.

53. முன் வளர் தகைமையோர் - (என்) முன்னோர்.

"செய்வினை புரிவரைச் சேர்த்தி ஓம்ப,ஓர்
தாய்வினை புரிதலே தரும மாம்,பகை
நோய்வினை புரிவரை நூறலும், கொடுந்
தீய்வினை புரிதலோ?" என்று செப்பினன். 54

பிறர் இசைவுரை

பொன்தொழில் வனைமரப் பாவை பொற்பென
மல்தொழில் ஒளியொடு, வஞ்சம் கோடிய
புன்தொழில் அனைவரும் புகன்று, கோல்வளை
முன்,தொழில் அற்றன முறியச் சொல்லினர். 55

ஏலியன் மீண்டும் விளக்கம் கூறுதல்

வழுக்குடை இவையெலாம் வழங்கக் கேட்டலும்,
'இழுக்குடை வழு,அரசு எய்து வான்'என,
ஒழுக்குடை ஏலியன் உளத்து நொந்துளாய்,
விழுக்குடை அரசியல் விரும்பிக் கூறினன். 56

"தப்புற உரைத்த மாற்றம் தந்தன கடுநோய் தீர்க்கும்–
கைப்புற உரைத்த மெய்ம்மை, கனிவெனக் கேட்கிற்பார்க்கே;
துப்புற விளங்கும் மௌலி சூடினோய்! அன்னைச் சூடிச்
செப்புற நினைத்த வாய்மை சினந்துஇ(ன்)னும் உரைப்பேன் நானே. 57

நூல்இயல் நுணங்குகேள்வி நோக்கினர், முகத்தைநோக்கார்;
கோல்இயல் கோடக்கோடிக் கூறுவர், பகையில் தீயார்;
கால்இயல் நோக்கிஆடும் கலைக்கொடி யன்னர்,கேட்பின்,
வேல்இயல் பகையி லானும், வேரொடு கெடும் உன் வாழ்க்கை. 58

---

54. செய்வினை புரிவரை – சிறுபிள்ளைத் தனமாய் நடப்பவரை. பகை – பகைவராக.

55. மல்தொழில் ஒளியொடு – வீரத் தொழில் என்று புகழும்படி. முன் வளைகோல் – முன் தானே வளைந்த செங்கோல். தொழில் அற்றன முறிய – செயலற்று ஒடிந்து கெடும்படி.

56. வழுக்கு–பொய். இழுக்குடை வழு–மிகக் கேடுள்ள. விழு–விழுமிய. நொந்துளாய் – நொந்து.

57. கைப்புற – இருசெவியும் கசக்கும்படி. துப்பு – செங்கதிர்.

58. கோல் இயல் – அரசியல். கால் இயல் நோக்கி – காற்று வீசும் தன்மையில்.

கற்றுறும் மாட்சிபூண்டு, கசடறு மறையின் நூலால்,
உற்றுறு பொருள்கள் தேர்ந்தே உணர்த்துவ தொன்று கேண்மோ;
சொற்றுறும் எனது சூழ்ச்சி, துணிவுஇழி வாகத்தோன்றின்,
முற்றுறும் மொழியைக்கேட்டு முனிதியே, முருகு வேலோய்! 59

தேறிய தவத்தின்நீண்டு சிறந்தமோ யிசனை, நிந்தை
கூறிய அபிரோன் தாத்தான் கோரன் என்றவரை, ஈண்டே
கீறிய புவிவிழுங்கிக் கேடுற, அவரைச் சார்ந்தோர்,
ஊறிய அழலின், வெள்ளத்து, ஒருங்குஐயைம் பது-அவர், வெந்தார். 60

பின், இயற் பொருவா அன்னோன் பெருந்தகை இகழ்ந்து பேசும்
அன்னியத்து, அவண்ஓர் ஈரேழ் ஆயிரத் தேழு நூறும்,
வன்னியத் தடத்தில் உம்பி, வயச்சினத்து இறைவன் நீதி
உன்னியற்கு, உள்ளம் கூச, ஒருங்குவெந்து அடலை யானார். 61

தொகையிலாத் தகவிற் காட்சிச் சுடர் ஏலிசேய் என்பானை
'சிகையிலாத் தலைய' என்று, சிறுவர் எண்ணைந்து இரண்டும்
தகையிலாச் சொன்ன பாலால், சடத்து இரு கரடி பாய்ந்து,
நகையில்ஆற்றியஓர் சொல்லால், நடுங்கிஆர்த்து ஒருங்கு மாய்ந்தார், 62

ஈறுஅடி இல்லான், குன்றத்து எழுதிய மறைக்கற் பேழை,
தேறுஅடி அடிகள் ஏந்திச் செல்ல, மற்றெவரும், எண்ணைந்
நூறுஅடி அகல, நாதன் நுவன்றுதான் செய்த ஏவல்,
ஆறடி ஆர்க்கும் தாரோய்! ஆரணத்து அறிதி யன்றோ? 63

---

59. துணிவு இழிவாக -தெளிவு இல்லாத நிலை —பேதமை. முற்றுறும் மொழியை - சொல்லின் முடிவு வரை. முனிதியே - கோபிப்பாயாக.

60 ஐயைம்பது அவர் - இருநூற்றைம்பது பேர்.

61. பொருவா இயல் அன்னோன் - நிகரிலா இயல்புடைய மோயிசனது. பெருந்தகை - பெருமை. அந்நியம் - அயல்-இடம். வன்னியம் தடத்தில் உம்பி - செந்தீ பரந்தெழுந்து உன்னு இயற்கு - உணர்ந்த மாத்திரத்தில். அடலை - சாம்பல்.

62. சடத்து - கொடிய. சடம் - கொடுமை.

63. ஈறு அடி - முடிவும் ஆதியும். தேறு அடி அடிகள் - சிறந்த அடிப் படைக் குணம் அமைந்த குருக்கள். ஆறு அடி:-ஆறு கால்களையுடைய வண்டு.

செம்பதின் பிறப்புஐந் தோடும், சிறப்பணி வளைஅப் பேழை,
தம்பதி வரக்,கை கூப்பாத் தருக்கொடு நோக்க, கால்முன்
கொம்பதின் நிலைகள் போலக் குழைந்த பெத்சமித்தார், அங்கண்
ஐம்பதினாயி ரத்துஏழ் அமைந்தபத்து, ஒருங்கு வீழ்ந்தார். 64

அள்ளிய அபயர் நாப்பண் அரசனும் இறைஞ்சிச் செல்ல,
தெள்ளிய மறையின் பேழை தேர்மிசை வரலின், சாய்ந்து,
விள்ளிய அலங்கல் ஓசனை, விழும் எனக் கையால் தீண்ட,
உள்ளிய உலகம் அஞ்ச, உருமுபட் டன்ன, மாண்டான். 65

ஆதி,நீடு உடன்ற காலத்து, அம்புவி கூசச் செய்த
நீதி,நீ அறிதி யன்றே? நினக்குயான் உரைப்ப தென்னோ?
ஏதில்நீ இறைஞ்சும் வேதத்து, இவையெலாம் புரிந்த நாதன்,
தீதில்நீ, உயிர்ஈ ருகத் தேடுகின் றவனே யன்றோ? 66

அறத்துஉறும் தகையும் செங்கோல்
ஆண்மையும் ஒளியும் நீங்க,
மறத்துஉறும் தீங்கு,தன்பால்
வந்தபின் ஆவது உண்டோ?
புறத்துஉறும் துயர்கண்டு உய்வார்,
பொலிந்தநூற் புலமை நீரார்;
திறத்துஉறும் தொடையின் மார்ப!
திகர்ப்பரும் நிலைஇ தன்றோ? 67

கட்புலன் உணர்த்தும் காட்சிக்
கசடர்சொல் உதவி கேளேல்;
'மட்புலன் அளிப்ப,நாதன்
மைந்தனாய் உதித்தான்' என்ன,
உட்புலன் தெளிந்து,அன் னானை
ஒருங்குநீ தொழுதி; பின்னர்,
விட்புலன் வேந்த னாக
விளையற வாழ்வாய்—என்றான். 68

---

64. செம்பதின் பிறப்பு ஐந்து - செம்பு முதலாய பஞ்ச லோகங்கள். பதி - (பெத்சமித்தார்) நாடு.

65. அபயர் - வீரர் அரசன்-தாவிதன். விள்ளிய-மலர்ந்த. சாய்ந்து விழும் எனக் கூட்டுக.

67. ஒளி-புகழ். புறத்து-அயலார்க்கு. உய்வார்-(தமக்கு வராதபடி) தப்பிப் பிழைப்பார்.

68. விட்புலன் வேந்தனாக—வானுலகரசனாக.

எரோதன் சீற்றமும் கட்டளையும்

நாற்கடல் கவியின் பாடல்
நயம்பெருக் கேட்ட கோகோ?
பாற்கடல் திரிந்து, நச்சுப்
பயன்பெறும் பாந்தள் தானோ?
நூற்கடல் கேள்வி நல்லோன்
நுவன்றவை கேட்டு, கால்முன்
மேற்கடல் சினத்து வேந்தன்,
மிக்குஉளம் வெகுண்டு சொன்னான். 69

மெய்யுண்ட திறத்த வீரர்
விளிவதற்கு அஞ்சு வாரோ?
கையுண்ட பசும்பொற் செங்கோல்
கடிதலின் இறத்தல் நன்றே;
நெய்யுண்ட படைகொண்டு, ஒன்னான்
நிறைஉயிர் உண்டு, நானும்
மொய்யுண்ட மடிவுற் றாலும்,
முடியுடன் இனிது மாள்வேன். 70

என்றனன் இறைவன்; மீட்டும்
இழிமத யானைச் சீற்றம்
வென்றனன் ஒருவன், தானை
மிடல்தலை மலக்கன் என்பான்,
நின்றனன்; அவனை நோக்கி,
நீதிநீத்து உரைத்த காதை
சென்றன எவணும் கூசத்
திசையெலாம் உருமிற் சொன்னான். 71

---

69. கடல் நாற் கவி—அமிர்தக் கடல்போன்ற நால்வகைக் கவி. கோகு—கழுதை. கால் முன்—பெருங்காற்றின் முன்.

70. மெய்யுண்ட திறத்த—உண்மையான வலிமையுடைய. கடிதலின்—(பிறர்க்கு) விடுவதைவிட. நெய்—குருதி.

71. தானை மிடல் தலை—படை வலிமையுடைய தலைவனாகிய. காதை—செய்தி. சென்றன எவணும்—சென்ற எல்லாவிடமும்.

"பொருந்தலர் தடிந்து,எஞ் ஞான்றும்
புள்ளினம் இனிது மாந்த,
விருந்துஅமர் அசனி வேலோய்!
விரிந்த என்நாட்டில், எங்கும்
இருந்துஅமர் சிறுவர் யாரும்,
எவனேயும் நீங்காது, ஒல்லற்கு
அருந்தமர் பிறர்என் றெண்ணுது,
அடுதியே சடுதி"என்றான். 72

*ஏரோதன் அரண்மனைக்குப் போதல்*

"குன்றுஇணை இயையின்,குன்றக்
குவவிய தோளினானும்,
மின்திணை அடியைச் சூடி,
விரும்பிய நிலையி னாங்கும்
உன்திணை எங்கும், வேரோடு
உன்பகை ஒருங்கு தீர்ப்பேன்"
என்று,இணை யறக் காய்ந்து ஏக,
எழுந்து இறை, கோயில் புக்கான். 73

*சேவகர் செய்த கொடுமைகள்*

புலக் கதம் பொதிர் அரியி னம்கொடு,
புலியி னம்கொடிது ஒலிஎழ,
கலக்கம் ஒன்றிய வெறிகள் தம்பறழ்
கடுகி வந்து உணும் கதம்என
மலக்கன் என்றவ னொடு,முனிந்து அதிர்
மறவர் வெங்குலம் மருவி,ஆங்கு,
இலக்கம் ஒன்றில சிறுவர் பொன்றிட,
இறைவன் என்றவை அயர்குவார். 74

---

72. அசனி—இடி. ஒல்லற்கு அரும்—பொருந்துதற்கரிய.

73. குன்ற-குறையென்று தோன்றும்படி. குவவிய-திரண்ட. மின்திணை —மின்னல் ஒளியின் இடமாக விளங்கிய. உன்திணை—உன் நாட்டில்.

74. புலக்கதம் — மிக்க சினத்தோடு பொதிர்—திரண்ட, வெறிகள் — ஆடுகள். பறழ்—குட்டி. இறைவன் என்றவை-அரசன் சொன்ன கட்டளையை. அயர்குவார்—செய்வார்.

முலைமு கக் கதிர் தழுவி மொய்த்தன
முகைமு கப் பல சிறுவரே,
உலைமு கக்கனல் எரிக கதத்தனர்,
உவணி கள் கொடு ஒழிதரும்
கொலைமு கத்தொடு,குருதி யைத்தொடர்,
குழவி துய்த்துஉணும் அமுதுஉக,
அலைமு கத்துஒளி அவிழும் முத்தொடும்,
அவிரு(ம்)துப்பென மருளுமே. 75

கரமும் அற்றனர், தழுவு கின்ற மொய்
கதிரும் அற்றனர்; கசடிலா
உரமும் அற்றனர், நிரைதுமிந்து உடல்
உதரம்அற்றனர், உயிர்படச்
சிரமும் அற்றனர், சிதறவம்பு இதழ்
முளரி அற்றெனச் சிறியதோர்
புரமும் அற்றனர், கடிகை யும்பல
புடையில் அற்றுஉக-எவனுமே. 76

அடாவி டாதன கொடுமையார்;தரு(க)
அரியசேயனைஎன, அருள்
விடா,வி டாதுஅது தழுவி னுள்;அவன்,
வெகுள மார்பொடு மகவினைக்
கடாவி னன்;உரு ஒருவை வாள்வழி
கடிதில் ஈருயிர் பட,மதுப்
படாவி ளாமுகை எழிலொடு ஓர்கொடி
படுவபோல், அவர் விழுவரே. 77

---

75. கதத்தனர்—கோபமுடைய சேவகர். உவணி—வாள். குருதியும் பாலும் துளிதுளியாய்ச் சிந்தியமை, முத்துக்களும் பவளங்களும் கலந்த தன்மை போல் தோன்றின.

76. கதிர் : முலை (ஆகுபெயர்). கசடு—வடு. துமிந்து—பிளந்து. புரம்—உடல். கடிகை—துண்டங்கள்.

77. அடா விடாதன - கொலைத்தொழில் விடாத. அடா—அடாதசெயல். வை—கூர்மை.

இப்பு றத்து,இவள், 'விடுதி' என்று,அது
இழுத்துஇழுத் தனள்;எரிகதத்து
அப்பு றத்து,அவன், 'விடுதி' என்றுஅது
இழுத்து அறுத்தனன்; அவள் முகம்
துப்பு றத்தனி மகவு,துண்டு
துமித்து,உடற்குறை எறிகுவான்;
செப்பு றத்தகு முறைஅகன்ற,
சினத்துஅழற்றிய நினைவினன். 78

நஞ்சி ஞர்தொழில் கண்டதாய்,'மறைவு'
என்று நாடினும், நாகுகொண்டு,
அஞ்சி ஞர்,தொழில் கண்டிலாமையில்,
அன்பி னல்உயிர் பேணிய
நெஞ்சி னள்தொழில் கண்டிலாமகன்,
நின்று நீடழ வே,பகை
விஞ்சி ஞர்தொழில் கொண்டு,வாள்வழி
வெம்புண் நீருக-வீவனல். 79

இடிக்குவார்சிலர், இகழ்வினேடு எதிர்
உடற்றுவார்சிலர், இணையடி
பிடிக்குவார்சிலர், தரையினேடு உடல்
புடைக்குவார்சிலர், பிளிரநெய்
அடிக்குவார்சிலர், அணைகையோடு உடல்
துமிக்குவார் சிலர், அணுவெனத்
தடிக்குவார்சிலர், தறிக்குவார்சிலர்,
தணிக்குவார் உயிர் எவருமே. 80

உருவி எந்திய உவணி, மின்விழி
உருவ வெய்துநீஇ, உளையுளம்
வெருவி மாழ்கிட, இடிமுழங்கொலி
மெலிய, மேவலர் உரறவே
கருவி மாசனைகுழலின் அன்னையர்
கலுழும் கண்மழை கடுகலோடு,
அருவி யாகிய குருதி நெய்மகர்
அணையிலாதுஉக, விடுவரால். 81

---

78. செப்புறத் தகுமுறை அகன்ற—சொல்லும் தன்மையைக் கடந்த.

79. நஞ்சினர் — நஞ்சொத்த சேவகர். நாகுகொண்டு — இளமையால். வீவன்—சாவான்.

80. தடிக்குவார்—துண்டிப்பார். உயிர் தணிக்குவார்—கொல்வார்.

81. மின்விழி-ஒளிபொருந்திய கண். உரற-முழங்க கருவி மாசு அணை - தொகுதியான மேகம் போன்ற.

தாய்மார் துயர்

முலை அணிச்சுதர் அகலவே,அழும்
முலையெனச் சொரி அமுதுஉக,
தலை அணிச்சுதர் அகலவே,கமழ்
தலையி ருட்கவின் அழிவிட,
நிலை அணிச்சுதர் அகலவே,'இனி
நிலையி லேம்'என விழவிழ,
விலை அணிச்சுதர் அகலவே,வினை
வினைவில் தாயவர் மெலிவரே. 82

"என்கணே! உயிர்அமுத மே!எனது
இதய மே! உயிர் இனிமையே!
நின்கணே உயிர்மடியவே, நினை
நினைய வே, அகல் நிலையுழி
தன்கணே உயிரொடும்இ ரேன்இனி"
எனலொ டே, மகர் தணர்வரே;
புன்கணே உயிர்பருகவே, ஒரு
புனல்அரு விழி பொழியுமே. 83

தாயர் ஓதையும், மடிதரும் பல
தனையர் ஓதையும், உதிரமே
பாயல் ஓதையும், வதைசெ யும்பல
படைகள் ஓதையும், மறம்மலி
தீயர் ஓதையும், இனைவ ரும்பல
திசையில் ஓதையும், வெருவுறும்
தூயர் ஓதையும், இடியொ டுங்கடல்
துதையும் ஓதையும்—இணையிலா. 84

---

82. முலை அணி - முலை ஆபரணமாகிய. இருள் கவின் அழிவிட - இருண்ட கூந்தல் அழகை அழிக்க. 'அழும்' என முலைசொரி அமுது எனக் கூட்டுக. விலை - விலையேறப் பெற்ற.

83. நிலையுழி - பூவுலகில் மகர் தணர்வர் - பிள்ளையைப் பிரிந்தவர்.

84. தாய்மார் அழுத ஓசை முதலாயினவற்றுக்கு இடி முழக்கமும் கடல் முழக்கமும் ஒப்பாகா.

கவிக்கூற்று

வெவ்வினை விதைத்த காலை
 வினைவினை வாகும் தன்மை,
மைவ்வினை உணர்ந்த தீய
 மன்னன்,இத் திறத்திற் செய்த
அவ்வினை நினைத்து,நிந்தை
 அனைவரும் உரைப்ப தல்லால்,
செவ்வினை உளத்து வந்த
 திருமகன், விளிந்தான் கொல்லோ? 85

திருமகன், மரித்த மாசிலாக் குழந்தைகளைக் காட்சியிற் காட்டல்

தேனுகும் எசித்து நாட்டில்
 சேர்ந்துஉறை நாதன்,அங்கண்
மீனுகும் முடியின் தாயும்
 வெண்மலர் வளனும் காண,
ஊனுகும் கொலையின் தன்மை,
 உளம்பனித்து எஞ்சக் காட்டி
வானுகும் நிறையை நீத்தார்
 வழுக்கது காண்மின்! என்றான். 86

சூசையும் மரியும் இரங்குதல்

போர்முகத்து ஒன்னார் மார்பில்
 புதைத்தவேல், உயிர்சால்பு உண்ணும்
சீர்முகத்து அவன் தன் நாட்டிற்
 சிந்திய குருதி யோட,
ஏர்முகத்து ஒருமா சில்லா
 இளைஞரைக் கொல்லுந் தன்மை,
பார்முகத்து, இணையாத் தீமை
 பார்த்து,உளத்து இரங்கி நொந்தார். 87

---

85. மை வினை - தீய செயல்.

86. ஊன் உகும் - குருதியைச் சிந்தும். வான் உகும் நிறை - நீதி. வழுக்கு - கேடு.

87. இணையா - நிகராகாத.

"கடலுடைத் தரணி யாவும்
களித்து இனி தெழ,ஈங்குற்ற
உடலுடைக் கடவுள் தன்னை
ஒழிக்குப, பகைத்த கோமான்,
அடலுடைத் தன்நாடு எஞ்சல்
அடைபெரும் பயனே! நாதன்
மிடலுடைத் திறத்தில் என்னும்
மேவலர் சூழ்ச்சி" என்றார். 88

கொழுமலர்ப் பள்ளிப் பார்ப்பு,
கொடியபுள் பறிப்ப, அன்னம்
அழுமலர்த் தடமொத்து, அந்நாட்டு
அன்னைமார் அழுநோய்க்கு ஏங்கி,
செழுமலர்க் கொடிகள் ஈன்ற
தேன்முகை முகிழா முன்னர்,
எழுமலர், பகைக்கால் முன்பட்
டென, மகர்க்கு இரங்கி நொந்தார். 89

கண்பொழி கலுழி போற்றிக்
களிப்புகும் காட்சி யுற்று
புண்பொழி உதிரத்து ஆவி
போக்கிய மகவர் யாரும்,
விண்பொழி ஒளியின் வாழ்ந்து
வினையறுங் கதியிற் கண்டு,
பண்பொழி உரையின் நாதன்
பணிந்து, இவர் வாழ்த்திச் சொன்னார். 90

*திருமகனை வாழ்த்துதல்*

ஆல மே,அமு தாக்கிய பான்மையால்,
சீல(ம்)மே விலன் செய்பகை, தம்உயிர்
கால, மே னிஇ றந்தனர், காந்திசெய்
கோலமே உருக் கொண்டு,எழ நல்கினாய். 91

---

88. அடல் - வலிமை, எஞ்சல் - வருந்தி மெலிதல்.

89. பார்ப்பு - அன்னக் குஞ்சுகள்.

90. கலுழி - நீர்ப்பெருக்கு. போற்றி - துடைத்து

91. மேவிலன் - பொருந்தாதவன் (ஏரோதன்) உயிர்கால - உயிர் நீங்கி, மேனி இறந்தனர் - உடலைவிட்டு இறந்த குழந்தைகள்,

தேர்எ ழும்கதி ரோன்திரி வான்தெரு,
கார்எ ழுந்துஇருட் காலம்ஓர் காலமோ?
பேர்எ ழும்தயை பெற்றுஉனைச் சேர்ந்தனர்,
சூர்எ ழும்கயம் துய்த்திலர்—வாழ்வரே. 92

தணிவ ரும்தடம் தாமரை பூத்தென,
மணிவ ருந்துஉரு மைந்தன் இறங்கி,நீ
பிணிவ ருந்துஉயிர் பேணிய பெற்றியே,
பணிவ ருங்கலை யோர்,அடை பான்மையோ? 93

அஞ்சி னல்என ஈங்குவந்து அண்மினுய்,
எஞ்சி னர்இவர்க்கு, ஈங்குஅருள் ஈந்துளாய்;
'துஞ்சி னர்'என ஆங்கவர் தோன்றி,வாழ்
நெஞ்சி னர்உயிர் நீடுற,—நல்கினுய். 94

வளி,விள் ளாமுகை கொய்தென மாய்ந்து,தேன்
துளிவிள் ளாமுகைத் தேந்தொடை யாக,நீ
அளிவிள் ளாதுஅணிந்(த) அம்மகர் யாவரும்,
களிவிள் ளா,உயர் செல்கதி வாழ்வரே. 95

எண்ணின் மேலெழும் சூழ்ச்சி இயற்றி,நீ
விண்ணின் மேலெழும் வீடிட வந்து,உனை
மண்ணின் மேலெழும் மாக்கள் பகைப்பரோ?
புண்ணின் மேல்,எழும் தீப்பொறி ஈட்டியே. 96

---

92. கார் எழுந்து - மேகம் எழுந்ததால் (உண்டான)

93. தணிவரும் - தாழ்ந்த. உயிர் - மனிதர் - பெற்றியே - தன்மையை. பணி வரும் கலையோர் - குறையற்ற கல்விமான்கள். அடைபான்மையோ - சொல்லமுடியுமோ.

94. எஞ்சினர் - மெலிந்தவர். துஞ்சினர் - (வெட்டுண்டு) இறந்தவர். வாழ் நெஞ்சினர் - வாழும் மனத்தவராய்.

95. விள்ளாமுகை - மலராத அரும்பு. களிவிள்ளா - பேரின்பம் அகலாத.

96. வீடு இட வந்து - பேரின்ப வீட்டை (எமக்குத்) தரவந்து. எழும்தீப் பொறி ஈட்டியே - சுடரெழும் தீப்பொறியைக் குவித்தாற் போல.

மின்னைக் காட்டிய வேகத்துற்று, ஒல்கிப்போய்,
கொன்னைக் காட்டிய கோலம்வி ரும்பினர்,
பொன்னைக் காட்டுஅழல் போன்று,அரிது உன்தயை
தன்னைக் காட்டினர்–நோய்செயும் தன்மையால். 97

கடல்வண் ணத்துஅமு தே,கதி வாயிலே,
உடல்வண் ணத்துஒளி யே,உயி ரே;உயிர்க்கு
அடல்வண் ணத்துஅணி யே,அரு ளேஎனு
மடல்வண் ணத்துஅலர் தாளை வணங்கினர். 98

வில்லின் மாரியின் விண்ணவர் நின்று,இசைச்
சொல்லின் மாரியின் தூய்புகழ் பாடியும்,
செல்லின் மாரியின் தேன்மலர் சிந்தியும்,
எல்லின் மாரியின் ஒள்ளடி ஏத்தினர். 99

வரும் பொருள்

நாதன் அன்றியும், நாதன் தெரிந்ததன்
தூதன் என்ற கருணையன், துஞ்சிலாது–
ஆதல், அன்பெழுந்து ஆங்குஅவர் கண்டு,அடை
சீத இன்புஇயல்பு, ஈங்குஇனிச் செப்புவாம். 100

---

97. கொன்னைக் காட்டிய - வீணை. வீணை. மின்னல்போல் மறையும் பூவுலக வாழ்வுகளை விரும்பிய மனிதர், பொன்ருகிய உனக்குத் துன்பஞ்செய்து உன் தயை ஒளியைக் காட்டும் தீப்போன்றவராவர்.

98. மடல் - பூவிதழ்.

99. செல் - மேகம். எல் - ஒளி.

100. துஞ்சிலாது ஆதல் – சாகாமையை. சீத இன்பு – குளிர்ந்த இன்பத்தை.

# 2. கருணையன் மாட்சிப் படலம்

மகப்பேறில்லாத சக்கரீயனும் எலிசபெத்தும்

அல்லறத் துளங்கு திங்கள் அணிந்தமீன் பசப்புப் போலப்
பல்லறத் தொகுதி வாய்த்த பணிபுனை சக்கரீயன்,
இல்லறத் துணைவி, குன்றத்து இணைய கற்பு எலிச பேத்தை
சொல்லறத் துணையாய்த் தம்முள், துணைபுறத்தின்றி நின்றார். 1

கைவளர் கொடையோடு ஒன்றக் கான்வளர் தவத்தின்மிக்கோர்,
பொய்வளர் உலகின் ஆசை போற்றிய புதல்வ ரின்றி,
மெய்வளர் திருவுளத்தின் வினையி தென்று உணர்வில் தேறி,
மைவளர் துயரற்று ஓங்கி, வயதுமுற் றியராய் நின்றார். 2

பூட்சியின் துணையாம் இன்பப் புதல்வரை யின்றி, தூய்நல்
ஆட்சியின் துணையை நேடி, அருமறை உணர்ந்த ஓதிக்
காட்சியின்துணையோடு,அன்னார் கனிந்துஉயர்ந்து எவர்க்கும்ஞானச்
சூட்சியின் துணைதாம் ஆகி,துகள்தவிர் புகழின்வாய்ந்தார். 3

பரவுஅலர் மலர்ந்த சோலை படர்ந்ததண் ணிழலோடு ஒத்தார்;
கரஅலர் மலர்ந்து நல்கும் கனிந்ததேன் எவர்க்கும் ஊட்டி,
புரவல ராக,நொந்து புலம்பினர்க்கு உயிரே யாகி,
இரவலர் உயிராய்ப்பேணி, எவர்க்கும் ஓர் உடம்பென்றுஆனார். 4

வானவன் தூதுரை-சக்கரீயன் ஊமையாதல்-எலிசபெத்து கருவுறுதல்

பேரறக்கன்னிவையின் பிறக்குமுன்,தனக்குத் தூதென்று
ஆரறத் தொகையோன்மைமைக்கு அரிய?தார்புதல்வன் தோன்ற,
ஈரறப் படலைக் கண்ணி ஏந்து(ம்)இவர்க்கு, இறைவன்அந்நாள்
நேரறக் கருப்பம்தந்து, நெடும்புகழ் அளித்தல் ஓர்ந்தான். 5

---

1. சொல் அற-சொல்ல முடியாத. துணையாய் - முறையோடு. துணை-நிகர்.

2. போற்றிய—காத்தற்கு. மைவளர்—மயக்கத்தால் வரும்.

3. பூட்சி—உடல். ஓதி—ஞானம்.

4. கரஅலர்—கையாகிய மலர். தேன்—தேனுகிய கொடை.

5. வையின்—வயின் என்பதன் முதற்போலி. வயின்—வயிறு. ஆர் அறத்தொகையோன்—அரிய அறம் நிறைந்தவன். மைமை—மலடு. படலைக் கண்ணி—கோலைமாலை.

கேள்வியின் புலமை மூத்தோன், கெழுமிய முறையில்,தூம
வேள்வியின்முகத்துநிற்ப, வேய்ந்தவிண்ணவன்கண்டுஅஞ்ச,
சூழ்வினை அறிந்த வானேன்,சொல்லெடுத்து, "அஞ்சேல்அஞ்சேல்,
வாழ்வினை உரைப்பத் தூதாய் வந்தனென்,கேட்டி"-என்ருன். 6

மாண்டகை அறத்தின் பாலால், மைந்தனே நினக்குத் தோன்ற,
காண்டகை உரிய பண்பால் 'கருணையன்' அவனை என்பாய்;
ஆண்டகை முகத்து,முன்னி, அவற்குஅதர் செப்பம் செய்து,
சேண்டகை அடையத்,தீயோர் செலுத்துவான் நெறியில் என்ருன். 7

"முதிர்ந்தன காலம் சாய்ந்த முகத்திலோ, உவப்ப நானே,
எதிர்ந்தன பிள்ளை காண்பேன்-?" என்றனன் மூத்தோன், என்று; "உள்
பொதிர்ந்தன அயிர்ப்புற்ருயே, புகன்றவை கண்டா லல்லால்,
அதிர்ந்தன துயரில்,ஊமை யாதி" என்று ஒளித்தான் வானேன். 8

இவ்வழி, எவரும் அஞ்ச, இருந்தவன், கையாற் பேசிச்
செவ்வழி உளத்துத் தேவ திருவுளம் போற்றி, ஐயம்
அவ்வழி ஒழியத் தூது வந்தகா பிரியேல் சொன்னது –
அவ்வழி கருப்ப மாகி, அதிசயித்து ஓங்கி ஞனே. 9

கருவுற்ற எலிசபெத்தைக்காண மரியாள் செல்லுதல்

இலங்கெழு விசும்பின், வெண்கோட்டு இளம்பிறைக் குழவிபோல,
நலங்கெழு கருவில்,தோன்றல் நவிவளர்ந்து, ஆரும்திங்கள்
அலங்கெழு பருவத்து,எம்மை அளிப்பதற்கு இரங்கி,நாதன்
வலங்கெழு கன்னி தன்வாய் மைந்தனே தானும் ஆனன். 10

கண்கவர் வனப்பில்,தூது கபிரியேல் உரைத்தகாலை,
பண்கவர் மொழிநற் கன்னி,பயன்பட எலிசபெத்தை
மண்கவர் கருப்பம் தாங்கி மகிழ்ந்தன காதை கூற,
விண்கவர் அரசாள் ஓங்கி, விளைந்தபல் லுணர்வும் உற்ருள். 11

---

6. மூத்தோன்—சக்கரியன். சூழ்வினை—நினைவை.

7. மாண்தகை—மாட்சியிற் பொலிந்த. முன்னி—முன்தோன்றி. அதர்—வழி. சேண்தகை—வானுலகப் பெருமையை.

8. அயிர்ப்பு—சந்தேகம்.

9. இருந்தவன் : சக்கரியன். சொன்னது அவ்வழி — சொன்னஅத் தன்மையில். ஒளித்தான்—மறைந்தான்.

10 நவி தோன்றல்—அழகிய பிள்ளை. நவி—நவ்வி, அழகு. அலம்—அமைவு. அளிப்பதற்கு—இரட்சிப்பதற்கு.

11. பண்—வீணை. மகிழ்ந்தன காதை—மகிழ்ந்த செய்தி.

பூவிடைக் குளித்ததேன்போல் புதல்வனைத் தான்சூல் பூண்ட
மூவிடைப் புரக்கும் கோன்முன், முதிர்அருள் தூதாய் எய்தி,
கூவிடைப் பொதுவற்று உற்ற குழவியை மருவத் தானே,
பாவிடைப் புகழின்மிக்க பயன்கொள்வான் எனக்கண்டுற்றாள். 12

பான்நலம் சினைகொள்மேகம், பகல்செய விளங்கா தென்னே,
தேன்நலம் சினைகொள் பைம்பூத் தேங்கம ழாதோ?தேவ
சூல்நலம் சினைகொள் கன்னி, துளங்குஅருள் புரிதல் உள்ளி,
வான்நலம் சிவணிச் சூல்கொள் மைமையை அணுகல் ஓர்ந்தாள். 13

ஓர்ந்தவை, அறத்தின் ஆட்சிக்கு உரித்துணை யவற்கும் கூற,
தேர்ந்தவை உயர்ந்த கேள்வி செறிந்(த)அருட் புலமையோனும்,
கூர்ந்தவை இமிழிற் கேட்டுக் 'குணம்இது' என்று இருவர்,வானத்து
ஆர்ந்(த)அவை சூழ,நீண்ட அதர்கடந்து ஏக லுற்றார். 14

சூசையும் மரியும் புறப்பட்டுச் செல்லுதல்

தேசிகப் பாவையிற் சிறந்த கோதையாள்,
மாசுஇகல் பானொளி கமலம் மாந்தல்போல்
ஆசுஇகல் சூல்அணிந்து, அல்கல் நான்குமாய்,
ஏசுஇகல் பாய்ஒளி பரப்ப ஏகினார். 15

ஆரண வடிவினோன், அரிய சூல்எனும்
காரணம் அறிகிலா, கருத்தில் ஓங்கிய
பூரண அருளினால் பொலிந்து,இன்பு ஆர்அலை
வாரண(ம்) நீந்தி,உள் மகிழ ஏகினார். 16

கயில்துணை படலை,அம் கலனிற் சேர்ந்து,இவர்
குயில்துணை குயிலும்இன் னிசையில், கூத்தெழ
மயில்துணை ஆடிய பொழில்வளைத்த,நீள்
எயில்துணை உயர்நகர் அகல ஏகினார். 17

---

12. மூவிடை—மூவுலகு. கூ—பூமி.

13. பான்—பானு, சூரியன். நலம்—ஒளி. சினைகொள்—உட்கொண்ட. கன்னி : மரியாள். துளங்கு—விளங்கிய. சிவணி—கலந்து.

14. புலமையோன் : சூசை. இமிழில்—இன்பமாய்.

15. தேசிகம்—அழகு. அல்கல்-நாள். ஏசு இகல் பாய் - தீவினையைப் பகைத்துப் பாயும்.

16. ஆரணவடிவினோன் : சூசை. வாரணம்-கடல்.

17. கயில்-மூட்டுவாய். படலை-மாலை. கொக்கியில் இருபுறமும் இணைந்த மாலைபோல இருவரும் மனமொத்தவராய், நசரேத்தைவிட்டுச் சென்றனர்.

செண்பகம் மலர்ந்தகாத் திரளும், பொய்கையும்,
வண்பகடு உழைத்தபூ வயலும், நாடும்,தம்
பண்பக விசையொடு,அப் படிகடந்து போய்,
விண்பக லவன்என வெற்பின் ஏறினர். 18

கண்புதைத் தனஇருள் கலந்த சோலை சூழ்
மண்புதைத் தனமணி வளர்குன்று உச்சிமேல்,
நண்புஉதைத் தனநசைச் சிறைந லங்கொடு,
விண்புதைத் தனமினின் விரைவுற்று, ஏறினர். 19

பிழையிடைக் குளித்தநோய் பெயர்க்கல் ஓர்ந்து,வான்
உழையிடைக் குளித்தபல் உறைவிண் தாண்டி,மின்
மழையிடைக் குளித்தென வளர்ந்த பன்மலை
நுழையிடைக் குளித்து,அருள் நுதலிப் போயினர். 20

தீய்முகத்து இணங்கிலா தில்லை; செஞ்சுடர்
காய்முகத்து இருளிலை; கழுமும் நீத்தமே
பாய்முகத்து அலையிலை; அன்பு பற்றிய
வாய்முகத்து அரியதோர் வருத்தம் இல்லையால். 21

துணியுடை உணர்விடும் துணிவுற்று, அன்பினல்
அணியுடை அலர்அடி வருத்தத்து அஞ்சிலார்,
பிணியுடை வரைகளும் பிரிந்த நெட்டிடைக்
கணியுடை நெறிகளும் கடிதின் நீந்தினர். 22

யாப்புஉரி அன்பினர் 'ஐ'என்று ஏகலும்,
தூப்புரி முத்துஅணி தோன்ற, சூழ்முகைக்
காப்புரிவு அலர்ந்தநீள் நெறிக டந்துபோய்,
பூப்புரி எயில்நலம் பொலிய நோக்கினர். 23

---

18. வண்பகடு—வலிய கடாக்கள். பண்பு அக விசையொடு—மனத்தின் இயல்பான வேகத்தோடு.

19. நண்பு உதைத்தன—அன்பினல் தூண்டப்பட்ட. நசைச்சிறை—ஆசையாகிய சிறகு.

20. பிழையிடை-பாவத்தால். வானுழையிடை-வானத்தில். உறைவிண்—துளிமேகம். அருள் நுதலி—அருள் நினைவோடு.

21. இணங்கிலாது இல்லை ;— வேகாததில்லை. கழுமும்—நிறையும்.

22. துணியுடை — துணிவுடைய, தெளிந்த. பிணியுடை — துன்பம் நிறைந்த. கணி—மருதநிலம்.

23. யாப்பு உரி அன்பினர் — (தம்முள்) கட்டப்பட்ட அன்புடையோர். தூ முத்து அணி புரி—தூய முத்தணி வடம். கா புரிவு அலர்ந்த - சோலைகள் அன்புடன் மலர்ந்த. பூ புரி—அழகிய பூதமாபுரம்.

வரவேற்பு

மின்எதிர் விளக்கென, விரிந்து வில்செயப்
பொன்எதிர் மணியென, புரிந்த அன்பினல்
தன்எதிர் இலார்க்குமுன், சக்க ரீயனும்
துன்எதிர் துணைவியும் தொழுதுஎ திர்ந்தனர். 24

நீர்த்தமெய், உயிரினைத் தழுவும் நீர்மையால்,
சீர்த்(த)அருந் தவர்தமைத் தழுவித் தேன்மலர்
போர்த்தகொம்பு அணைத்தபூங் கொடியைப் போல்,அருள்
கூர்த்தநன் மாதரும் குடங்கை வீக்கினர். 25

அள்ளிய அலர்களும் அலருள் வாசமும்
தெள்ளிய கனிகளும் கனியுள் தேறலும்
வள்ளிய மணிகளும் மணியுள் வாமமும்
உள்ளிய நிலத்து;—அவர் உறைந்த சீர்மையே. 26

மரியாளின் இன்மொழி

'வற்றியே, முகில் மாரிசெய் வாரியால்
பெற்றியே பெறும் ஓடையில், பெற்றநாள்
முற்றியே, நய முற்றுறச் சூல் அருள்
உற்றியே' எனக் கன்னி உரைத்தனள். 27

கருணையன் களிவு

உரைத்த வாய்மை இருசெவி யூடுஇனிது
இரைத்த ஆண்மையில் ஏந்திய சூலுற
வரைத்த வாம மகன்,கரு மாசறக்
கரைத்த; வாய்இலன், உட்களித் தான்;அரோ. 28

---

24. தன் எதிரிலார்—மரியும் சூசையும்.

25. நீர்த்த—முறையமைந்த. அருந்தவர்—சூசையும் சக்கரீயனும், நன் மாதர்—மரியும் எலிசபெத்தும். குடங்கை வீக்கினர்—கையால் அணைத்துக் கொண்டார்.

26. தேறல்—தேன். வள்ளிய—பெருமை பொருந்திய. வாமம்—ஒளி.

27. வாரி-வெள்ளம். பெற்றியே பெறும் ஓடையில்-(நிறைந்த) தன்மை பெறும் ஓடைபோல். பெற்ற நாள்—வாழ்நாள்.

28. இரைத்த ஆண்மையில் — ஒலித்த வல்லமையால். வரைத்த — (ஒளியால்) எழுதப்பட்டாற்போல. கருமாசு—சென்மப் பாவம். எலிசபெத்தின் செவி வழியாய் உட்புகுந்த மரியின் ஒலி, கருணையன் சென்மப் பாவத்தைக் கடிந்தது; வெளிப்படப் பேசும் வாயில்லாத கருணையன் மனத்துட் களித்தான்.

நிருதி வாய்திறந்து, அம் கையின்நேர், அருள்
கருதி, வாய்திறந்து ஆசி கதைத்தலால்,
பருதி வாய்திறந்து அள்ளிருள் பட்டெனச்
சுருதி வாய்திறந்து ஆசுது டைத்தனள். 29

துடைத்த ஆசறச் சூல்உறை தோன்றல்,ஆங்கு
உடைத்த யாநிகரும் தவிர்ந்து, உள்ளுணர்வு
இடைத்,த யாபமோடு ஈந்த வரத்தொகை,
படைத்த நாதன் அருட்பயன், எய்தினன். 30

முகையின் முற்றிய வாசமள ஞ,முதிர்
தகையின் கன்னி வயிற்றிடை, தற்பரன்,
நகையின் தன்மையில் கண்டுந யந்துஅருள்
தொகையின்,அங்குஅவன் தாள்தொழுது ஏத்தினன். 31

ஏற்ற ருங்குணத்து ஏத்திய நாதனும்,
மாற்ற ருங்குணத் தாய்வயிற்று,இன்பொடு
தூற்ற ருங்குணத் தோன்றலை நோக்கலால்,
சாற்ற ருங்குணத்து ஆரருள் தாங்கினன். 32

எலிசபெத்து மரியாளை வாழ்த்துதல்

மாரி யாற்பிறழ் ஆறென, மைந்தன்உள்
தாரி யால்தகு சால்புஅருள்தன்மை,மேல்
வாரி யால்பிரண்டு,அன்னையும் மல்குஒளி
மூரியால் துதி முற்றெடுத்து, ஓதினள். 33

மக்கள் தங்கிய மாசற, மைந்தனைத்
திக்குஅ டங்கில தேவனைச் சூலொடு
தொக்குஅ டங்கிய தாய்,இவண் தோன்ற வந்து,
இக்குஅடங்கில இன்புஅளிப் பாள் கொலோ! 34

---

29. நிருதி-ஒரு வள்ளல். வாய்திறந்து-(அன்புடன்) பேசி. அம் கையின் நேர்—(கொடுக்கும்) அழகிய கைபோல.

30. உடைத்த-உள்ள. யாநிகரும்-எல்லா உவமைகளையும். எய்தினன்-அடைந்தான்.

31. நகையின் தன்மையில்—மணி நகை அழகோடு.

32. தூற்ற அரும்—சொல்லில் அடங்காத.

33. உள்தாரியால்—உள்ளத்தின் வழியால். மூரியால்—மிகுதியால்.

34. தொக்கு—ஒருப்பட. இக்கு—தேன்.

பிரிந்த கன்றினை நேடிய பெற்றமோ,
எரிந்த கூழ் உயிர் என்று,இயை மாரியோ,
சொரிந்த தன்மைவ ரத்தொகை ஈக,நீ
விரிந்த நீள்நெறி வந்து,எனை மேவினாய். 35

வேய்ந்த, மாட்சியின் மேவரு மேன்மையால்,
வாய்ந்த மாதருள் ஆசிம லிந்த நீ,
ஆய்ந்த வாய்மை கடந்து,அரிது ஆசியுள்
தோய்ந்த, நீஅணி சூல்கனி தானுமே. 36

நின்தன் வாய்மொழி என்செவி நேர்பட,
என்தன் வாய்உறை என்மகவு இன்புறீஇ,
மின்தன் வாய்என மேவி,உ கண்டு,உளத்து
உன்தன் வாய் அருள் ஆண்மையில், ஓங்கினன். 37

"நீத வாய்நெகிழா நெறி நாயகன்,
வேத வாய்மொழி யாக விளம்பிய
சாத வாய் மை,உன் வாய்தக, உன்புகழ்
கீதவாயில் எங் கும் கிளைப் பார்"—என்றாள். 38

தன்புகழை மரியாள் இறைவனுக்குப் படைத்தல்

பட்ட செங்கதிர் மீட்டு,அவை பானின் மேல்
விட்ட வெண்பளிங்கு ஒத்து,இவள்,மேவலோடு
இட்டதன் புகழ், தன் இறை யோன்தனை
ஒட்ட, மீட்டனள்—கன்னியும், ஓதியே. 39

மரியாள் இறைவனைப் போற்றிய முறை

தெருளால் தெளிந்த என் உளம்என்
திருநா யகனைப் புகழ்ந்துஇறைஞ்ச,
அருளால் உயர்என் னுயிர்,என்னை
அளித்தோன் முகத்திற்கு எழுந்து உவப்ப,
மருளால் தளர்ந்த இவ்வடிமை,
மனந்தான் இறங்கிப் பார்த்த,தயைப்
பொருளால், எவரும் முறைமுறையால்
புகழுற்று,என்னைச் 'செல்வி'என்பார். 40

---

35. உயிர் என்று இயை—உயிராக வரும்.

36. ஆசி மலிந்த நீ-ஆசி நிறைந்தவள் நீயே. தோய்ந்த-தோய்ந்தவன். கனி-கனியாகிய சேசு.

37. மின் தன் வாய் என—மின்னலைப்போல. உகண்டு—குதித்து.

38. சாத வாய்மை-எல்லா உண்மைகளும் (சாதம்-கூட்டம்) உன்வாய்-உன்னிடத்து. தக-தகும்படி. கிளைப்பார்-பரப்புவார்.

39. மேவலோடு—ஆசையோடு ஓதியே—சொல்லி.

40. தெருள்—ஞானம் அளித்தோன்-இரட்சித்தவன்.

விண்பால் முதல் மூ வுலகு அசைக்கும்
மிடலின் மிக்கோன், என்னிடத்துத்
திண்பால் வளமே செய்தமையால்,
திருத்தன் நாமம் புகழ்படவே,
நண்பால் இணையாக் குணத்தொகையோன்,
நயந்து,எஞ் ஞான்றும், முறைஎஞ்சா,
மண்பால் தன்னைத் தொழுது இறைஞ்சும்
மக்கட் கே,தான் தயை செய்வான். 41

கேழ்வார் தடக்கை வலி காட்டிக்
கிளர்தீ யுணர்வில், செருக்கு உளத்துச்
சூழ்வார், சிதைத்தான்; வயத்து உயர்ந்தோர்
துகள்செய் நிவப்பின், நூக்குகின்றான்;
தாழ்வார் உயர்த்தான்; பசித்து அயர்வார்
சால நிறைத்தான்; திருமல்கி
வாழ்வார் வறியோர் ஆக்கு கின்றான்
மாறாநீதி வயம்மிக்கோன். 42

அண்ணத் தலையின் முறைகடந்தே.
அபிரம் முதன்மூத் தோர்க்குஉரைத்த
வண்ணத்து,அருந்தன் தயைஉள்ளி,
வழுவாஅன்பிற் பணித்தொழும்பன்
எண்ணத்து ஒழுகும் இசறயலை,
இரங்கிக் கைக் கொண் டான் என்றாள்;
கண்ணத் தகுதி கடந்(து) எனைஆள்
கருணைமிக்க வானரசாள். 43

---

41. நயந்து—மனம்பொருந்தி.

42. கேழ்வார்—ஒளிபொருந்தி நீண்ட. துகள் செய் நிவப்பு — பாவ வழியால் பெற்ற உயர்ந்த இடம். நூக்குகின்றான்-தள்ளுகின்றான்.

43. அண்ணத்தலையின் முறை—அணுகும் தலைமுறை. கண்ணத் தகுதி-கருதும் தன்மை.

கவிக் கூற்று

இனைய பலவும் இசைத்துஇசைப்ப,
இன்பக் கடலூடு உளம்மூழ்க
தனையர் அருளால்தெளிந்து,எதிர்ப்பில்,
தாயார்,இவ் வாறுஅன்று உவந்தார்,
நனைய கொம்பார் குயிலன்னம்,
நயப்ப, வளர்தேய் மும்மதி,மற்று
அனையர் இனிதுஆங்கு உறைந்து, உற்ற
தனைத்தும் அறைதற்கு எவர்பாலார்? 44

கருணையன் பிறப்பும் மரியாள் அருளும்

அங்கண் படர்வான் செஞ்சுடர்முன்,
அருகே சுங்கன் உதித்ததுபோல்,
இங்கண் சுடரொத்து அவதரித்த
இறைவன் பிறக்கும் முன்,எவரும்
தங்கள் சிறுமை தீர்ந்ததெனத்
தகும்கா ரணம்கா ணுது உவப்ப
திங்கட்குழவிக் கோட்டு உருவிற்
சிறந்து,அத் தோன்றல் தோன்றினனுல். 45

பிணித்த நரதேவு – இறையவற்கே
பீடமாக வனைந்த,மதுப்
பணித்த கமலச் செங்கரத்தில்,
பயந்த மகவை ஏந்தி,அருள்
குனித்த கன்னி அணைத்தனகால்,
குழவிக்கு ஊட்டும் வரத்தொகையைக்
கணித்த திறத்துஊட் டினள்அல்லால்,
கதிர்வா னவரும் அறிகுவரோ? 46

---

44. தனையர் — சேசு, கருணையன். உள் உவந்தால் — உளம் உவந்த பொழுதே. மும்மதி—மூன்று மாதம். உறைந்து—தங்கியபொழுது.

45. சுங்கன்—வெள்ளி.

46 மதுப்பணித்த-மதுவைச் சொரிந்த.

கனியே பார்த்தான், திருமுகத்தைக்
கண்டான்,உவந்தான், அருள்குளித்தான்,
துனியே தீர்ந்தான்,உரை உதவாத்
துள்ளித் துதித்தான், உணர்வோங்கிப்
பனியே கிளர்பூங் கரத்துஒல்கிப்
பணியச் சிரத்தைக் கோட்டுகின்றான்;
நனியே வாழ்ந்தான், வரப்பவ்வம்
நயப்பத் தாழ்ந்தான் இளமுத்தோன். 47

சக்கரியன் மகிழ்ச்சி

மெய்கொள் மறைநூல் நெறிவழுவா
விளைந்த உவப்பில்,எட்டாம்நாள்,
கைகொள் முறைகள் திருந்தலொடு,
கருணை யன்பேர் இட்டனபின்,
ஐகொள் குழவி கருணையினால்,
அவிழ்நாப் புரிவுதீர்ந்(த)ஐயன்.
மொய்கொள் உணர்வோடு உரைகொண்டே,
முதலோன் மேல் வாய்த் துதிமுடித்தான். 48

மரியும் சூசையும் தம் ஊருக்குத் திரும்புதல்

நிதியில் தோய்ந்த அழகு இளையோள்
நீர்ப்ப ஆசி ஓதியபின்,
துதியில் தோய்ந்த உரைஎவர்க்கும்
சுவையில் கனிந்து, கனிகூறி,
மதியில் தோய்ந்த பதத்தாளும்
மறைதோய் மாட்சி மாதவனும்,
நுதியில் தோய்ந்த வாள்உயிர் ஈர்
நோய் கொண்டு, அகன்று போயினரால். 49

---

47. துனி—துயர். பவ்வம்—பௌவம்—கடல்.

48. திருந்தலொடு—திருந்தச் செய்து. ஐகொள்குழவி—அழகிய பிள்ளை. நாப்புரிவு—நாவின்கட்டு. ஐயன்—சக்கரியன்.

49. நிதி—பொன். இளையோள்-மரியாள். நீர்ப்ப-ஒளியுற. நுதி-நுனி.

எசித்துக்கு ஓடியபொழுது கருணையனைக் காக்க வானவனை அனுப்புதல்

கொலைகொள் வாளால் உயிர் பிரிந்த
கொள்கைத்து, அன்னார் பிரியினும்,வெண்
கலைகொள் பதத்தாள், பிரியா(த)ஓர்
கருணை விளைத்த அன்புஒழியாள்,
உலைகொள் அழலில் துயர்கொண்டே,
ஒளிப்ப எசித்து மேவியகால்,
அலைகொள் உணர்வோடு, அன்பு உணர்ந்தே,
அருளின் பெயரோன்—தனை, உணர்ந்தாள். 50

செய்த உதவி, பாசமெனத் திருந்துஈ ருயிரை விசித்திடுமால்;
பெய்த உதவி கொண்டசிலர் பேணாதுஒ ழிந்தால், பிறர்துயரைக்
கொய்த உதவி செய் உரவோர், குன்றாத் தங்கண் நட்புரிமை,
எய்த உதவிக்கு அளவு,அன்பும் எய்திப் பிறரை மேவுவரால். 51

மாறா அருளோடு, இன்னணமே, "மறைந்த திருஎம் மகன் காண,
தேறா வெகுளி அரசு,எல்லாச் சிறுவர் கொல்வான் என்ன, உயிர்
ஈறாய் மாள்வன் கருணையனே, எய்தி அவனை ஒளிக்குதும்"என்று,
ஆறா அன்போடு, அருந்தவனோடு அறைந்தாள் கருணை நிலை நெஞ்சாள். 52

வெருவின் மிக்கோர், ஒலித்ததெலாம் 'விண்ணேறு' என்பார்; அன்ன,மறை
உருவின்மிக்கோன், எய்தியஅன்புரிமைக்கு அஞ்சி மறுத்தமையால்,
செருவின் மிக்கோன் உணர்ந்தபகை செப்பி,சிறுவன் ஒளிக்குப,வான்
திருவின் மிக்கோர், வானவனைச் செலுத்துகின்றார்—அருள்மிக்கார். 53

வானவன் உரைகேட்ட எலிசபெத்தின் வாட்டம்

அடைந்த வானவன் அறைந்தவை கேட்டு,எலி சபெத்தை,
குடைந்த நோய்உளம் கொடுந்தழல் குடித்தென,கொண்ட
மிடைந்தபாசறை பொறாமையில், வீழ்ந்தனள்—உயிர்கெட்டு
உலைந்தகாலையின், உடல்நிலை விழுவதுபோன்றே. 54

---

50. அருளின் பெயரோன் — கருணையன்.

51. உரவோர் — பெரியோர்.

52. அருந்தவன் — சூசை.

53. விண் ஏறு — மேகத்து இடி. மறை உருவின் மிக்கோன் — வேத வடிவினனாகிய சூசை. செருவின் மிக்கோன் - பகைத்த எரோதன்.

54 பாசறை - துன்பம். பொறாமையில் - பொறுக்கமாட்டாமல்.

எம்மை ஈங்கு அளித்து, இருவிசும்பு உயர்ந்தவான் நயங்கள்
தம்மை, நீரொடு தான்தர, இளவலாய்ப் பிறந்த
செம்மை யோன்தனைச் செகுத்திடப் பகைப்பரோ என்ன,
வெம்மை பாய்அழல் விழுங்கின விருப்பினள், உளைந்தாள். 55

"சொரிந்த சீர்பொருத் தன்மை,இந் நாடுசெய் துகளோ?
அரிந்த நோய்கெட எசித்தனர் ஆற்றிய அறமோ?
விரிந்த நீள்நெறி விளைத்தநோய் கொடுதளர்ந்து, 'இங்கண்
பிரிந்த நாயகன், பெரிதுஉளை வான்'—என அழுதாள். 56

எலிசபெத்து மகனுடன் கானில் உறைதல்

உவணியால் உயிர் உளைய ஈர்த்(த) உடலென உளைந்தே,
சிவணி வானவன் 'திருவுளம் இது'வெனத் தேற்றி,
கவணி யால்அலை கருத்துஅமைந்து, ஐயனை இழந்த
அவணி ஆர்தனது அருமகவு ஒளிப்பதும் உணர்ந்தாள். 57

சூர்முகத்துஉரித் துணையிலாள், நிகர்ப்பரும் துணிவால்,
கார்முகத்து மின் கடுகலோடு, அழிபொருள் அளித்து,
சீர்முகத்த தன் சேய்எடுத்து, அருந்தவம் உள்ளி,
நீர் முகத்த நாடு அகன்று,கான் ஒளிப்பதே நினைத்தாள். 58

அன்பும் அச்சமும் காட்டிய வழிதொடர்ந்து அகல,
முன்பு கா,இடர் முயன்றநீள் நெறிகளைக் கடந்து,
துன்பும் அல்லும் உள் குடியலால், மன்னுயிர் தொடரா,
இன்புஉ குத்ததோர் இருண்ட கானிடை, ஒளித்து உறைந்தாள். 59

---

51. நீரொடு - இனிய தன்மையோடு விழுங்கின - விழுங்கிய தன்மையில். விருப்பினள் - அன்புடைய எலிசபெத்து.

16. சீர் - செல்வம். இங்கண் பிரிந்த - இந்நாட்டை விட்டுச்சென்ற.

17. உவணியால் - வாளால் சிவணி - பொருந்திய - வந்த. கவணியால் அலை - மெல்லிய சீலைபோல் (துன்பத்தால்) அலைந்த. ஐயன் - தகப்பன்: சக்கரியன். அவணி ஆர் - நன்மையால்நிறைந்த.

18. கடுகலோடு அழி - தோன்றி ஒழியும். நீர் முகத்த நாடு - நீரிற் குளிர்ந்த நாடு.

19. முன் புகா - முன்நிகழாத. அல் - இருள்.

தெண்ணம் சூழியில் செவ்விதழ்த் தாமரைப் பள்ளி
வண்ணம் பார்ப்பொடு மகிழ்வெழத் துஞ்சிய அன்னம்,
எண்ணம் தூவிய வேடனுக்கு அஞ்சிவந்து, எரிகான்,
-கண்,அம் பார்ப்பொடு கலுழ்ந்தென,மகவொடு கலுழ்வாள். 60

மெழுகி னால்வனை பாவை,தீ வெம்மைபட்டு உருகி
ஒழுகி னால்என, உளமெலிந்து, அருந்துயர்க்கடலில்
முழுகி னால்என, மொய்யரு நெஞ்சினாள்,முரலும்
கழுகி னால்இமிர் கானிடை, உடல்தளர்ந்திருந்தாள். 61

இருந்த காலையில்,வானவர் இசைத்தலால், தான்உள்
வருந்த, வெந்துஎலா மகரையும் துமித்தனன் எனக்கேட்டு,
அருந்த யாபரன் தன்மகவு அளித்தலால், புகழைத்
திருந்த நீடுநாள் வாழ்த்(தி)இசைத்து, உறுதியிற்சிறந்தாள். 62

*தளர்ந்த நிலையில் கானக வாழ்வினிமைபற்றி மகனிடம் உரையாடல்*

காட்சியோடுஉள அறத்தொகை அனைத்துமே, கதிர்செய்
ஆட்சியோடு,உடு அம்புலி தொடர்ந்தெனத் தொடர,
மாட்சியோடு உயிர்வளர்ந்தன தன்மையின், இளைத்த
பூட்சியோடு இனிப் புணர்வதும் அரிதென அறிந்தாள். 63

சொரிந்த தேனினும் சுவைகொள் தன்உயிரினும்,இனிமை
புரிந்த சேயொடு புகல்செயா, கண்டுகண்டு உருகி,
பிரிந்த காலையில் பெருந்துயர் உள்ளி,உள் அயர்ந்து,
விரிந்த காட்சியில் துணிந்தபின், குழவியை விளித்தாள். 64

"இனிய யாவிலும் இனியஎன் தனையனே! உன்னைக்
கனிய ஈன்றநான் கருதிய செல்கதி செல்ல,
நனிஅ வாவிய நாளிதே, இதுதிருவுளமாய்
முனிய மாறுமோ? முரிந்துஅழ மாறுமோ?—மகனே! 65

---

60. *தெண்ணம் சூழியில் -தெண்ணீர்த் தடாகத்தில். எண்ணம் தூவிய-* எண்ணுதற்கரிய (கொடிய). கான்கண் - காட்டில். முரலும் கழுகு - ஒலிக்கும் வண்டு.

63. பூட்சியோடு - உடலோடு. புணர்வது - (உயிர்) பொருந்தி வாழ்தல்

64, புகல் செயா - சொல்லாமல்.

61. முரிந்து அழ - குழைந்து அழுதாலும்.

மற்றி யாதுநான் வகுப்பது?உன் வயதுஒரு நான்கு
முற்றிஆகுமுன் பிரிவதென்று அயர்விலை; முன்னர்
பெற்றியே உணர் வினைத்தையும்; பிறக்குமுன், வரம்சால்பு
உற்றியே; உரைக்குஉயர்ந்தவற்கு உவகைசெய் அருளோய்! 66

திலம்கலந்தமா, செல்லிடத்து உறைவதும் எண்ணேல்;
அலம் கலந்ததேன் அனையதீஞ் சொல்லொடு, வஞ்சச்
சலம் கலந்தகால் தகுதிகொள் மாக்கள்தம் துணையின்
புலம் கலந்தகான் பொதிர்,விலங்கினத் துணை—இனிதே. 67

நாடுஇ ழந்து,உள நட்பிழந்து, யாவையும் இழந்தே,
கோடுஇ ழந்தபூக் குழைந்தென நசைக்கொடு குழையேல்;
வீடுஇ ழந்ததீ வினைகொடு செல்வமுற்று, அறம்செய்
பீடுஇ ழந்தபுன் மாக்களின் பேதையர் இலையே. 68

ஊக்க மேபிதா,உவவுதாய், உணர்ந்தமெய்ஞ் ஞான
நோக்க மேஒரு நுசுப்புஅருத் தோழனு, தயையின்
நீக்கமே மணத்துணைவியா, நெடும்பொறை மகனு,
ஆக்கம் மேவிய அறத்துற வோரொடு வாழ்வாய். 69

ஊக்க வித்தினுல் உதித்தமெய்ஞ் ஞானமே மரமாய்,
வீக்க நற்றவ வேர்விழ, பொறைதயைக் கவட்டால்
நீக்க முற்றியே, மகிழ்வுபூத்து, உயர்ந்த வானிலை வீட்டு
ஆக்க(ம்) நற்கனி அருந்திவாழ்ந்து, உணர்வின்மேல் கனிவாய். 70

வான்க லந்தவில் வனப்பொடு செஞ்சுடர் வயங்க
தேன்க லந்தபூ மலர்தலும், செழுஞ்சிறை புடைத்துக்
கான்க லந்தபுட் கணம்கனி பாடலும், கதிர்வான்
கோன்க லந்தசீர் வாழ்த்து,உனக்கு உணர்த்து(ம்) இரு குருவே. 71

---

66. அயர்விலை - வருத்தமில்லை.

67. திலம் கலந்த மா—காட்டிலுள்ள மிருகம். அலம்—மாலை. புலம்கலந்த—தனிமையுள்ள.

68. நசைக்கொடு - (இழந்தவற்றை) விரும்பி. பீடு- மாட்சி. உவவு - தவம்.

69. தயையின் நீக்கம் - அருள் நிழல்.

70. வீக்க - கூட்டின. நீக்கம் - நிழல்.

விரைசெய் கான்நலம் வெஃகில, நெடியதோர் நெறியில்
கரைசெய் சால்சிலைக்கு அஞ்சில, கருதிய கடல்சேர்
திரைசெய் நூல்இவண் தெளியஆய்ந்து, அனைத்தையும் கடந்து
நிரைசெய் சீர்கெழும் நிமலனை, நேடல்கற்று, உயர்வாய். 72

என்னை உன்னைமுன் இனிதினிற் பேணிய கன்னி
அன்னை,ஈங்குதன் அருளொடு நிழற்றிய தன்மைத்து,
உன்னை ஓம்புவள்; உன்னுயிர்க்கு உயிரென அளிப்பள்;
பின்னை ஓர்துணை பெறுவதும் வேண்டுமோ மகனே. 73

தெளிகொள் ஆரணத் திருவினுள் அகன்றனள் என்னேல்;
அளிகொள் ஆர்வலர்க்கு அகன்றதோர் சேணிலை;வான்மேல்
துளிகொள் கார்முகில் தோன்ற,ஈங்கு அகவி,வாழ்ந்துஆடும்
களிகொள் தோகைகள் கானிடைக் கண்டனை இலையோ'' 74

எலிசபெத்தின் இறுதிநிலையும் கருணையன் அழுகையும்

என்று கூறினள், இமிழ்த்தமெய் யோடு உயிர் ஆர்வம்
ஒன்றுவான்,அழுந் துறநனி தழுவினுள்,தழுவி
நின்று நீவினுள், நெடியகண் அருவிநீராட்டிக்
கன்றுவாள்,உளம் கலங்குவாள், உருகுவாள் கலுழ்வாள். 75

தீயின்மூழ்குஅலர் போல்உளம் வாடியும்,செந்தீ
வாயின்மூழ்குஅலர் வருங்கொடி போல்உடல் சுருண்டும்,
மீயின் மூழ்கின மின்னென ஒல்கியும்,குழவி,
நோயின் மூழ்கினன், நுரையெனக் கரைந்து,ஒன்று(ம்) நுவலான். 76

எலிசபெத்தைக் காட்சியிற்கண்ட மரியும் சூசையும் வானவரை அனுப்புதல்.

நூறு காவத மேல் நுகர், சேண்உறை
தேறுகாவல் எசித்திடைச் சேர்ந்துமே,
ஊறு காதல்உணர்வினோடு, இற்றை,ஆம்—
ஆறு,மாறில அறிந்தனர் மூவரே. 77

---

72. வெஃகில—விரும்பாமல். சிலை—கல். நேடல்—தேடுதல்.

74. சேண்—தூரம்.

75. கன்றுவாள் - குழைவாள்.

77. இற்றை - இவை. செம்புனல்—குருதி.

கரிந்த நெஞ்சு கடுத்த கடுந்திறல்,
சொரிந்த செம்புனல் துன்றிய வாரியில்
பிரிந்த தன்மை, கருணையன்-பேருயிர்
அரிந்ததில்லை–என்று அன்பெழக் கண்டனர். 78

கண்ட வேலையில், கண்டது வேலையை
உண்ட பான்மைஉ வந்து,கை ஏந்திய
அண்டர் நாதனை வாழ்த்தி,இன்பு ஆழ்ந்தனர்–
கொண்ட கோதையும் பூங்கொடி யோனுமே. 79

'படலையாய், நயம் பீடை பயத்தல்,வான்
விடலை நீதி'யெ னுவினை இன்புஅயல்
நடலை யாகநைந்து, எலிச பெத்தை,தன்
உடலை நீக்குவது ஓர்ந்து,உளத்து ஏங்கினர். 80

வீயும் வீமலர் மென்கொடியும், தழல்
தோயும் தன்மை துவண்டு சுருண்டெனு,
தாயும் பிள்ளையும் தாவுஇடர் நோக்கி,உள்
தீயும் தன்மையில் தேம்பி இரங்கினர். 81

வான்வழங்கு அரசாள் வகுத்து ஏவலால்,
தேன்வ ழங்கும லர்ச்சினை நீடிய
கான்வ ழங்கினர் கண்,உளம் தேற்றிட,
மீன்வ ழங்குவிண் ணேர்விரைந் தெய்தினர். 82

எலிசபெத்தின் வேண்டுகோள்

கண்க னிந்து களிப்பமெய் காட்டினர்;
பண்க னிந்தஇ சைக்கொடு பாடினர்;
புண்க னிந்தம ருந்தெனப் பொங்குஅருள்,
விண்க னிந்தஉ றுதிவி ளம்பினர். 83

---

78. கரிந்த நெஞ்சு – ஏரோதனது கரிய நெஞ்சு.

79. கண்டது வேலையை – இனிய பாகின் கடலை.

80. படலையாய் – மாலையாய். நயம் பீடை – இன்பமும் துன்பமும். வான் விடலை – வான்வேந்தன். நடலையாக – துன்பமாக.

81. தாவு இடர் – கொண்ட துன்பம்.

பெறுதி யாகம்அருப் பெரிது அன்பிஞள்,
உறுதி யாக,அன்று ஏவிய உம்பர்கேட்டு,
இறுதி யாகநின்று ஏங்குஉயிர் தேறி,உள்
குறுகி, ஆகம வாயொடு கூறிஞள். 84

"அன்னை ஏவிய அண்ணல ரே!இனிது
என்னை ஆண்டகை தன்பதத்து ஏவிய
பின்னை, பேர்கிலர், பெற்றியோடு என்மகன்
தன்னை ஓம்பிடத் தந்தையும் தாயு(ம்)நீர்" 85

எலிசபெத்தின் மரணம்

என்றுஇ ரங்கி, இரங்கிய சேயின்மேல்
நின்றுஇ ரங்குகண் ணீரொடும் ஆசிதந்து,
அன்றுஇ லங்கிய அம்கொடி வீழ்ந்தெனப்
பொன்றுஇ லங்கிய பூட்சி வீழ்ந்ததே. 86

கருணையன் சோகம்

வீழ்ந்த கொம்பொடு சேர்கொடி வீழ்ந்தென
மாழ்ந்த தாயொடு மாழ்ந்தென வீழ்ந்தசேய்,
ஆழ்ந்த துன்புஉளத்து ஆற்றிலன், ஒற்றைவாள்
போழ்ந்த ஈருயிர் போல் கிடந் தான்;அரோ. 87

தேற்றரும்துயர் தேற்றிய வானவர்,
ஏற்றரும் துணை யாகஎழுந்து,உயிர்
ஆற்றரும்பரி வாய்உடல் நாடல்போல்,
போற்றரும்துயர் கொண்டு, புலம்பிஞன். 88

பருகுதேனினைக் கான்றெனப் பண்ணிசைக்கு
அருகு தேனினும், இன்புஅளி பாடிய;
முருகு தேஞெடு(ம்) முற்றுஅலர் பூவனம்
உருகுவான், இளையோன், உளத்து ஏங்கிஞன். 89

---

84. உம்பர் கேட்டு - வானவர் சொன்னதைக் கேட்டு.

86. பொன்று - செத்து. பூட்சி - உடல்.

87. மாழ்ந்த - இறந்த.

89. பண் - வீணை.

புல்லுடம்பிற் புதைத்தன பேருயிர்,
வில்லுடம்பென வேய்ந்தன காட்சியால்,
கொல்உடம்பிடி கொண்டு குடைந்தபுண்,
நல்லுடம்பெனத் தேறி,நடந்ததே. 90

கருணையன் தன் தாயை அடக்கம் செய்தல்

கதிர்செயும் உருவில் தோன்றிக் கனிவொடு சூழ்ந்த விண்ணோர்
உதிர்செயும் கனிபோல்வீழ்ந்த உடற்கு,நன் முறைகள் யாவும்,
முதிர்செயும் அன்பின் பாலால் முடித்தபின், குழவி மோனன்
பொதிர்செயும் உளத்தைத் தூண்டும் புரிவில்தன் முறைகள் தீர்ந்தான். 91

புன்மலர்க் கண்கள் தூவும் புனலில் நீராட்டி,மார்பில்,
பன்மலர்ப் படலைக் கண்ணி பல்லறம்புனைந்தாய் என்று
தன்மலர்க் கரத்தாற் சூட்டி, சாய்பகலொடு குவ்வேடு
துன்மலர்க் கமலக் கையைத் தொழக்குவித்து, இறைஞ்சிட்டானே.92

அளிஅழ, குயில்கள் மஞ்ஞை அயர்ந்துஅழ, அழஅன்னங்கள்,
கிளிஅழ, அழப்பூம் பூவை, கிளைஅழ, இரங்கி வீசும்
வளிஅழ, புனல்ஈண்டுஓடி வந்துஅழ, வனத்தில் எல்லா
உளிஅழ, அழவே தோன்றல், உம்பர்மெய் எடுத்துப் போனார். 93

பூக்கையைக் குவித்து, 'பூவே!புரிவொடு காக்க' என்று,அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி,இங்கண், திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்றாக, இனிதில்உள் அடக்கி,வாய்ந்த
ஆக்கையை அடக்கிப்பூவோடு அழுங்கணீர் பொழிந்தான் மீதே. 94

தாய்முறை திருந்து யாக்கை தகுமுறைக்கு அடக்கி,பின்தன்
நோ[illegible]றை அடக்க லாற்ற [illegible]கிய தவத்தின் மாட்சி,
து[illegible]ம், தன்கண் துணையிலாது அஞ்சி ஏங்கி,
தீய்முறை அழல்நெஞ்சு ஒத்த திரைச்சுனை தனித்துச் சென்றான். 95

90. புல் உடம்பில் - சிற்றுடம்பில். பேருயிர் - கருணையனது பேருயிர். வில் உடம்பென வேய்ந்தன-ஒளிவடிவம் பொருந்திய-தெளிந்த. உடம்பிடி - வேல். நல்உடம்பு என - நல் உடம்பு ஆனாற்போ[illegible].

91. முதிர்செயும் - முதிரும். குழவி மோனன் - குழந்தை முனிவனாகிய கருணையன். புரிவில் - அன்பின்.

92. குவ் ஏடு - குவி ஏடு - குவியும் இதழ்கள்.

93. தோன்றல் — கருணையன்.

94. பூவே — பூமியே. யாக்கை — ஆக்கை — உடல்.

95. தீமுறை அழல் — தீப்பற்றி வேகும். திரைச்சுனை - அலைகளுடைய தடாகத்துக்கு.

*கருணையன் பல நினைந்து புலம்பித் துயில்தல்*

எழும்சுனை அகட்டுப் பாய்நீர், இனிதுஇவற்கு இரங்கி விம்ம,
கொழுஞ்சுனை கண்க ளாய குவளைகள் இமையா நோக்க,
தெழுஞ்சுனை வரம்பில் வைகிக் கிளைத்தநோய் அழன்ற நெஞ்சான்
அழுஞ்சுனை பெருகக் கண்ணீர், அகல்கடல் வெள்ளம் ஆற்ரு. 96

மண்நரம்பு இசையின்பாடல் மாறி,வண்டு இரங்கி விம்ம,
உள்நரம்பு அழுந்த தன்மைத்து உருக்குயில்அழுது தேம்ப,
விண்நரம்பு அருளின் மார்பன், விழுங்கிய துயர்,கால்வான்போல்
பண்நரம்பு இளகி, ஏங்கும் பரிசொடு விம்மிச் சொல்வான். 97

சொல்லிய இசையின் பெட்போ, துயரமோ, வியப்போ, ஏதோ?
புல்லிய கொம்பிற் புள்ளும், பூவில் வண் டினமும், காற்றும்,
இல்லிய புனலும், மற்றது யாவும்வாய் விடாமை கேட்ப,
கல்லிய கவிர்ச் செவ் வாயான், கருதிய துயரம் கான்ருன். 98

நீரெழும் குமிழி போலும் நெடியதேர் நேமிபோலும்
காரெழும் மின்னல் போலும் கடலெழும் திரைகள் போலும்
பாரெழும் செல்வத்துஇல்லைப் பதியுமோ நிலையும் என்ருர்;
சீரெழு ஞானத் திற்கும், திரைதிரண்டு அலைவது உண்டோ? 99

வெண்ணிறத் துகில்கொள் மாசு வெண்மதி கதிருள் தோய்த்துத்
தெண்ணிறத்து ஒழிக்கல்போல்,சூல் சிறைஅகன்று உதிக்கும் முன்னர்,
தண்ணிறப் பிறைசூழ் தாளாள், தளிர்த்ததன் தயையிற் சொன்ன
பண்ணிறக் கிளவியால்,யான் பழம்பழிக் களங்கம் தீர்ந்தேன். 100

---

96. *சுனை அகட்டு - தடாகத்தின் நடுவே. ஆற்ரு - ஒப்பாகா.*

97. *மண் நரம்பு* - ஒப்பனை செய்த வீணையின் நரம்புகள். உரு குயில் - அழகிய நிறத்தையுடைய குயில். நரம்பு உள் அழுந்த - (அச்சத்தால்) நரம்புகள் நெருக்குண்ட. உள்தரம் பழுத்த-மனத்தில் அச்சம் மிகுந்த (எ-ம் பாடம்.)

98. இல்லிய புனலும் - ஒழுகிய புனலும். கல்லியம் - மது. கவிர் - முருக்கலர்.

99. 'செல்வத்து இல்லைப் பதியுமோ நிலையும்' என்பதைச் 'செல்வப் பதியும் நிலையும் இல்லை' என பொருளுக்கேற்ப மாற்றுக.

100. தெள்நிறத்து - தெளிந்து விளங்கும்படி. வெண்மையான ஆடையிற்பட்ட மாசினை சந்திரன் கதிர்களுள் தோய்த்து ஒழித்தாற்போல, நான் பிறைமிதித்த பாதத்தாளாகிய மரியாள் சொன்ன மொழியால், சன்மப் பாவத்தின் களங்கத்தை ஒழித்தேன்' என்ருன்.

உலைவளர் தீயின், தீய உலைப்பிடும் பாவம் தீர்ந்து,
கலைவளர் உணர்வும் ஞானக் காட்சியும் உணராது எய்தி,
அலைவளர் உலகில், ஒவ்வா அதிசயத்து, என்தாய் வையின்,
மலைவளர் வெள்ள மென்ன வரத்தொகை உவப்பக் கொண்டேன். 101

தூங்குயர் கனிகள் தீம்பால் தோயவீழ்ந் தென்றோ,வானின்
நீங்குயர் துளிமுத் தாக நிறத்தசங் கிடைவீழ்ந் தென்றோ,
பாங்குயர் வரத்தில் என்னைப் பயந்ததாய் உதரம் நீங்க,
ஓங்குயர் இறைவன் சாயும் ஒண்கரத்து இமிழிற் சாய்ந்தேன். 102

மைவகை தளிர்த்த பாவ வடுவொடு சனித்தநான்,உள்
பொய்வகை யன்றிப் பேறு புணர்கில னாகி,எந்தை
மெய்வகை தெளிந்த ஞானம் விளைத்தபல் வரங்கள்தந்தே,
உய்வகை தந்த தன்மை, உரைப்பவோ?–மூகை நானே. 103

வளர்ந்தவெண் மதிதேய்ந் தன்ன வளங்கொடு பிறந்தபின்,நான்
உளர்ந்தகண் அருவியோட்டி, உலந்துஎனை ஈன்றோன்மாள,
கிளர்ந்தவெம் பகையைக் கொன்னே கிளைத்தகோன் கொடுமைக்கு அஞ்சி,
தளர்ந்தமெய் அவலித்து,என்னை, தாயும்இவ் வனத்தில் உய்த்தாள். 104

நீட்டிடை நெறிகள் நீக்கி, நீரிடை மலர்ந்த கஞ்சத்து
ஏட்டிடை அன்ன மென்ன ஈன்றனள் கரத்தில்வைகி,
காட்டிடை இருந்த தன்மை காண்கிலன், வையம்நீங்கி,
வீட்டிடை உவந்த தன்மை விருப்பெழ, வளர்ந்தேன் அன்றோ. 105

வாய்மணி யாகக் கூறும் வாய்மையே மழைநீராகி,
தாய்மணி யாக மார்பில் தயங்கிஉள் குளிர வாழ்ந்தேன்;
தூய்மணி யாகத் தூவும் துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகும் முன்னர்க் கா்ய்ந்தென, காய்ந்தேன்; அந்தோ. 106

---

101. உலைப்பிடும் — வேதனை செய்யும். தாய் வையின் — தாய்வயிற்றிலிருந்து. வையின்—வயின் என்பதன் போலி.

102. மைவகை தளிர்த்த—மயக்கம் செய்வித்த.

104. உளர்ந்த—சுழன்ற. உலந்து—வற்றி. அவலித்து—வருந்தி.

106. காய்மணி—காய்த்த தென்மணி.

விரிந்தன கொம்பிற் கொய்த வீயென உள்ளம் வாட,
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு, இரும்புழைப் புண்போல் நோக,
பிரிந்தன புள்ளின்,கானில் பெரிதழுது இரங்கித் தேம்ப,
சரிந்தன அசும்பில்,செல்லும் தடமிலாத் தனித்தேன்;அந்தோ. 107

துள்ளிவாழ் உழைகாள்!கொம்பில் துன்னிவாழ் குயில்காள்! தூய்தேன்
அள்ளிவாழ் அளிகாள்! தேன்காள்! அழல்நிறக் கமலப் பைம்பூம்
பள்ளிவாழ் ஓதிமங்காள்! பறித்துவாழ் கொடிகாள்!கோறல்
உள்ளிவாழ் வரிகாள்! சொன்மின், உயிர்தனித்தலில் தீதுண்டோ. 108

உய்முறை அறியேன், சேர்ந்த உணர்வினைத்(த) உறுப்புமில்லா
மெய்முறை அறியேன், மெய்தான் விரும்பிய உணவு நேடச்
செய்முறை அறியேன், கானிற் செல்வழி அறியேன், தாய்தன்
கை முறை அறிந்தேன், தாயும் கடிந்துஎனைத் தனித்துப் போனாள். 109

காய்முதிர் கனியின் ஊழ்த்துக் கனிந்துவீழ் இம்மெய் வாட்டி,
வேய்முதிர் வனத்தில் நோன்பின்வித்தினால் விளைமெய்ஞ்ஞானம்
—ஆய்,முதிர் உவப்பில் உள்ளத்து ஆண்டகை யொருவன் ஆள,
நோய்முதிர் உலகம் நீக்கல் நுதல்வரும் இனிமை தானே. 110

ஊக்க(ம்)ஏர் பூட்டி, நோன்பால் உடற்செறு உழுது,நன்றி
வீக்கமேல் விரதச் செந்நெல் வித்தி,நல் லொழுக்க நீரைப்
போக்கநீடு இறைத்து,தன்ஐம் பொறியெனும் வேலி காக்கில்,
ஆக்கமாய்ப் பெரும்வீட்டின்பம், அண்ட(ம்)மேல் விளைக்குந் தானே. 111

ஆயினும்,வயதுஓர் நான்கும் ஆகுமுன் தனித்த நானே,
வீயினும் கொடிய பேய்கள் வினைசெய ஒருபால்,ஓர்பால்
பேயினும் தீய தன்மெய்ப் பெரும்பகை செய,இவ் வாயிற்
போயினும், வழுவாச் செல்லல், புணவரிது,-அறத்தின் ஆறே. 112

---

107. அசும்பு—வழுக்கு நிலம்.

108. வரிகாள்—புலிகளே.

109. மெய்முறை—உடம்பை இயக்குமுறை. கடிந்து—இறந்து.

110. நோய் முதிர்—துன்பம் நிறைந்த.

111. செறு—வயல். நன்றி வீக்க—நன்மை சேர்ந்த.

112. இவ் வாயில்—இத்தவத்தின் வழியில். எனக்கு நான்கு வயதாகு முன்னே பேய்களும், அவற்றினும் கொடிய என் உடலும் பகை செய்ய, நான் தவத்தின் வழியே சென்றாலும் வழுவாமற் செல்லுதற்கு அறநெறி அரிது.

தன்முகம் படிகம் இன்றித் தரணியிற் காண்பான் இல்லை;
பன்முகம் காட்டும் இன்பம் பற்றலின்,திரி தம்நெஞ்சம்
துன்முகம் தம்மில் தாமே துகள்அற,எவரும் காணூர்;-
வில்முகம் காட்டும்நூலோர் வெயிற்பளிங்கு இன்றி,-அன்றோ? 113

மொய்யொடு கடுத்த கோபம்-முதிர்அறநீதி என்ன,
மெய்யொடு விளைந்த காமம்-விழுமனக் கேண்மை என்ன,
மையொடு வளர்பொன்ஞசை-வழித்துணை ஆசைஎன்ன,
பொய்யொடு பொங்கும் பற்றல்-புரைபுகுத்து அரியவாறே. 114

இன்னவாறு, ஒருவன்நானே, இடறுஇலாது ஒழுகும் பாலோ?
துன்னவாறு இடறி வீழ்ந்தால், துணைவன்நின் றெடுத்து, பின்ருது,
'அன்னவாறு ஒழுக' என்(ற)ஓர் அருங்குரு வில நிற்பேனு?
என்னவாறு, ஒழுகும் வெள்ளத்து, இளமுனி அழுது சொன்னுன். 115

நவமணி வடக்க யில்போல், நல்லறப் படலை பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன தன்னிசைக்கு, இசைகள் பாட,
துவல்மணி மரங்கள் தோறும், துணர்அணிச் சுனைகள்தோறும்,
உவமணி கானம், 'கொல்'லென்று ஒலித்துஒலித்து அழுவபோன்றே. 116

பனிமதி பொழிந்த கற்றை பருகிய ஆம்பல் போல,
தனிமதி துய்த்த நெஞ்சில், தான்தனை நம்பாத் தன்மை,
துனிமதித்து,அயர்ந்த தல்லால், துணிவுஅரு வயிரக் குன்ருய்,
முனிமதிக் குழவிசோர்ந்து, முளரிமேல் துயில்கின் ருனே. 117

கருணையன் புலம்பலையறிந்த மூவரும் வருந்துதல்

படம்புனைந்து எழுதிய பாங்கில், பங்கயத்
தடம்புனைந்து இளமுனி சாற்று கின்றெலாம்,
வடம்புனைந் தெனப்புனை மறைநல் லோர்,எசித்(து)—
இடம்புனைந்து, இருளற உணர்ந்து, இரங்கினூர். 118

113. படிகம்—கண்ணுடி. பற்றலின்—பற்றின தன்மையாக. வில்முகம் காட்டும் நூலோர்—ஒளி காட்டும் கற்ருேர்.

114. மொய்யொடு கடுத்த—பகையோடு பொங்கின. பற்றல்-பற்றுதல்கள். புரை புகுத்து ஆறு அரிய-பாவத்தைக் கொண்டு விடும் வழி அறிவதற்கு அரியது.

116. கயில்—கடைப்பூட்டு. துவல்-அருச்சனைப்பூ-மலர். உவம் அணி-(ஒன்றொடொன்று) உவமைப் பொருத்தமாயிருந்து

117. துனி மதித்து — துன்பத்தை நினைத்து. முளரிமேல் — தாமரைக் (குவியலின்) மேல்.

118. தடம் புனைந்து - குளக்கரையில் இருந்து. இளமுனி -கருணையன். இருள் அற - மறைவின்றி.

திருமகன், கருணையனிடம் கூறுமாறு வானவரிடம் சொல்லிய செய்திகள்

இரங்கிய தன்மையின் உதவி ஈந்து,அருள்
அரங்கிய நாயகன், ஆங்கு அடர்ந்துசூழ்
குரங்கிய உம்பரை விளித்து, குட்டனுக்கு
உரம்கிளர் உறுதிகள் உரைப்ப ஓதினன். 119

பேர்ந்தபூ கரையின்மேல் வாடும் பெற்றியால்,
ஆர்ந்தபூந் தடங்கரைக்கு அயர்ந்து துஞ்சி,உள்
கூர்ந்தநோய் அலைவுகொள் குழவி தன்மையில்,
தேர்ந்தமா முனி,மனம் தேற்றச் சென்மினே. 120

அறவினு விளைத்தநல் ஆசை யால்,உளம்
துறவினுல் உயரிய விரதம் சூழ்ந்தபின்,
நறவினுல் அலர்ந்தபூ முறுக்கி நைந்தென,
உறவின்ஆ சையின் அயர்ந்து, உளைவ தேதுஎன்பீர். 121

செருக்கிடை, கோடுஉளம் சிதைக்கும் ஐம்பொறிப்
பெருக்கிடைப் பெரும்பகை பெறும்இவ் யாக்கையை,
முருக்கிடைத் துறவற முயற்சி வேண்டுவர்,
நெருக்கிடைத் தோலுரித்(த) அரவு நேருவார். 122

மெய்த்துணை இழுக்கெனத் துறவின் மேன்மையோர்,
பொய்த்துணை என்று,தம் பொறிகள் போழ்குவார்;
அத்துணை கடிந்தபின், அனையர், மற்றுஇவண்
எத்து ணைகொள்பவர் என்ன, ஓதுதீர். 123

உருத்துணை பொன்மணி புணர்ச்சியோ, துணர்,
மருத்துணை மலர்தலோ, – குருவின் வாய்த்துணை;
கருத்துணை புரையொடு சனித்த காலையில்,
'குருத்துணை இலாயினன் — குருடன் ஆயினன்.' 124

---

119. அருள் அரங்கிய - கருணை அழுந்திய. குரங்கிய - வணங்கி நின்ற. குட்டன் — சிறுபிள்ளை.

120. கரைக்கு — கரைமேல்.

122. கோடு உளம் — கோணிய மனத்தை. முருக்கிடை — வாட்டிய. வேண்டுவர் — விரும்புவர்.

123. மெய்த்துணை — உடம்பின் துணை. போழ்குவார் — அழிப்பார் — வருத்துவார்.

124. உருத் துணை — வடிவழகின் துணையாக. துணர் — மலர். மரு — வாசனை. புரையொடு — பாவத்தோடு.

என்பவன், ஆயினான் எனினும், கூர்உளத்து
இன்புஅவன் நுகர்ந்துஎழ, இதயத்து ஆண்டு,அரு
அன்புஅவன் உணர்வின்மேல், இயற்ற ஆண்டகை,
பின்பு,அவன் குருத்துணை பெறலும் நேடவோ? 125

போதுவாய் மதுவெனப் பொலிந்த சூல்,அணி
மாதுவாய் இருந்தபோது, உணர்ந்த வான்கலை
காதுவாய் உரைப்ப,ஓர் குருக்கண்டான் கொல்?அன்று
ஓது,வாய் மலர்ந்தனன் – இன்றும் ஓதுவான். 126

உள்ளூறத் திருவுளம் இதுவென்று ஓர்ந்தபின்,
தெள்ளூறத் தேற்றுரை செப்பல் வேண்டுமோ?
அள்ளூறப் பொலிவயத்து அணிந்த தேவருட்கு,
எள்ளூறத் தோன்றிய இடுக்கண், ஏதுஎன்பீர். 127

‘தான்தனது’ என்றுஇரு தகுதிப் பற்றலும்,
நோன்றன அடல்கொடு நூக்கி, வானுயர்
கோன்-தனது அருள்நிலை சார்ந்த கொள்கையில்,
ஆன்றன மதுகை,மூ வுலகும் ஆட்டுமே. 128

“திரை, எலாநயன் அடைகடல் நீர்மையால்,
திரையிலா நிலையுடைத் தேவ(ன்) மார்புழி,
மரையெனா, மலர்ந்தன மனம்து யின்றென,
புரையிலா வாழ்க”எனப் புகன்மின்நீர்—என்றான். 129

மரியாள் விருந்துணவு ஆக்கியளித்தல்

இவையெலாம் இளம்தவற்கு, இளம்பிரான் உரைத்து,
அவையெலாம் வணக்கொடும் அமரர் கேட்டலின்,
நவையெலாம் அறப்,பொலி உம்பர் நாயகி,
சுவையெலாம் மலிய,ஓர் விருந்து தோற்றினாள். 130

---

125. என்பவன் - என்ற கருணையன். நேடவோ - தேடுவானோ?
126. காதுவாய் - காதில். கண்டான்கொல் - கண்டானல்லவோ.
127. அள்ளூற — நிறைந்த.
128. நோன்ற அடல்கொடு — தவம் செய்த வல்லமையால்.
129. திரை - ஒழுங்குபட. மரை - தாமரை – (முதற் குறை).
130. நவை - குற்றம்.

கன்னலும் தேறலும் கனியும் பாலொடு
பன்னலும் அரியதோர் பாகும் சேர்த்தி, 'இஃது
இன்னலும் பசியும்ஆற் றிடும்' என்று ஈந்தனள்,—
உன்னலும் அரிதுஅருள் உருத்த நெஞ்சினள். 131

சூசை சொல்லிய செய்தி

தாய்வளர் அன்பின்மேல் தயைவ ளர்ந்து,கான்
போய்வளர் தவர்க்கெலாம் திலதம் போன்றுளான்,
வீய்வளர் கொடியினன், தாழ்ச்சி மேன்மையின்
வாய்வளர் உணர்வினை வகுத்துக், கூறினன். 132

"மண்ணுறக் கிடந்தநான், வரைவி லாவளம்
நண்ணுற, எனக்கு அருள் நாதன் செய்தவை
கண்ணுறக் கண்டபின், கலங்கித்,தான் உளம்
புண்ணுறக் குழைவதோ புலன்"என் பீர்—என்றான். 133

வானவர் வருகையும் கருணையன் மகிழ்வும்

இனையன பலவும் அன்று இசைத்து, மூவரும்,
நனையன இளமுனிக்கு ஆசி நல்கலும்,
அனையன உணர்ந்தபல் அமரர், ஓர்கணம்
புனையன உடைக்கதிர் பொதுளச் சென்றனர். 134

குரவமே பின்னிய கூறையால், உடல்
கரவ,மேல் உடுத்து,மென் கமலப் பாசிதழ்
பரவ,மேல் துயின்றனன்; பாலனைத் தவம்
விரவ, மேவியர்க்கெலாம் விளக்கொத்தான்;அரோ. 135

விழுந்தன கதிர்த்திரள் விழிகள் கூச,உள்
அழுந்தின வெருவுறீஇ அயிர்ப்பொடு 'ஐ' என
எழுந்தனன், 'சொல்லுமின் வந்தது'என்று,பின்,
தொழும் தனது இருகரம் குவித்துத் தோன்றினன். 136

---

131. உன்னலும் அரிது - நினைப்பதற்கரிய. அருள் உருத்த - கருணை மிகுந்த.
132. வாய் வளர் - சிறப்புமிக்க.
133. புலன் - அறிவு.
134. உடை புனையன - உடையாக அணிந்த. கதிர் பொதுள-கதிர்வீசி.
135. குரவம் - பேரீந்து (இலை). கூறை - ஆடை. உடல் கரவ - உடலை மூட. பரவ - பரப்பி. மேவியர்க்கு - ஆசையுடையவர்க்கு.

மூவரும் உணர்த்திய உறுதி முற்றவும்,
தூவரும் உணர்விஞேன், செவியில் துய்த்தபின்,
மேவரும் கருணையாள் விருந்து துய்த்து,உளம்
தேவரும் தெளிவுஒளி துய்த்துத் தேறிஞன். 371

தெண்ணிறக் கவிஞெடு செறிந்த உம்பருள்,
ஒண்ணிறக் கதிர்முகத்து ஒருவன்போன்றுஇரீஇ,
பண்ணிறத்து இசைகளைப் பாட வானவர்,
விண்ணிறக் களிப்பெழ விரும்பிப் பாடிஞன். 138

கருணையன் பாடிய கனிவுப் பாடல்கள்

அடல்வண்ணத்து, அருள்வெள்ளம் ஆர்ந்தொழுக மல்கிஎழும்
கடல்வண்ணத்து, எவ்வுயிரும் தேற்றல்தரும் காவலனே;
தேற்றல்தரும் காவலனைச் சேர்ந்து,அவிர் தன்கமலத்தாள்
ஏற்றல்தரும் சிந்தையவர், ஈங்குஇழிவு நண்ணுரே. 139

வான்தோய்ந்த மகிழ்வுஉளனுய் மன்னுயிர்கள் உய்வதற்கே,
ஊன்தோய்ந்த துயர்கொண்ட உம்பர்தொழும் கோமானே;
உம்பர்தொழும் கோமானை உள்ளி,நெறியுட் பிறழாது,
இம்பர்,தொழும் சிந்தையவர், ஈங்குஇழிவு நண்ணுரே. 140

பால்நேரா அருட்கடலின் பதுமம்என நான்வாழ,
தான்நேரா இடுக்கணுறீஇத் தயைஉணர்வின் மிக்கோனே;
தயைஉணர்வின் மிக்கோனைத் தவிர்நசையைத் தவிர்ந்துஉயர்ந்தோர்,
இயைஉணர்விற் பிறழாதார், ஈங்குஇழிவு நண்ணுரே. 141

விண்கனிய விண்ணுறைந்தோன் விளைத்தஅருள் உளம்தூண்ட,
மண்கனிய மனுவாகி மணிக்கலத்துஏந்து அமுதன்ஞேன்;
மணிக்கலத்துஏந்து அமுதன்ஞேன் மணிக்குடைக்கீழ் ஒதுங்கினர்,அன்பு
அணிக்கலத்து ஏந்துஅடிபெயரார், ஈங்குஇழிவு நண்ணுரே. 142

137. தூவரும் — கெடாத.

138. பண் நிறத்து-வீணைபோல்.

139. வல்லமையும் அருளும் நிரம்பி, எவ்வுயிரையும் தேற்றும் கடவுளின் கமல பாதத்தைப் போற்றும் சிந்தையுள்ள எல்லோரும், இவ்வுலகிற் கேடடையார். 'ஏத்தல்' என்பது எதுகை நோக்கி 'ஏற்றல்' என வந்தது.

140. இம்பர் - இவ்வுலகில்.

141. பால் நேரா - பாலும் நிகராகாத் - மிக இனிய.

அவ்வுலகும் உவந்துஏத்தும் ஆன்றகுணத் தொகையோனை,
இவ்வுலகும் ஏத்தாதால், ஈங்குஇழிவு நண்ணுரே?
ஈங்குஇழிவு நண்ணுரே இக்கருணைக் கடலோனை
நீங்குஇழிவு நண்ணுத நெறிநீங்காச் சிந்தையரே. 143

கானகக் காட்சி

என்று கூறி இளமுனி யோடு,இடை
நின்று வாழ்த்திய வானவர் நீங்கினும்,
மன்று மாலை மணத்துஅணி கோதைபோல்
அன்று கான மெலாம் அலர் பூண்டதே. 144

தும்பி தேனொடு தூங்கிசை யாழ் செய,
கொம்பில் ஆர்குயில் கூவிசை பாட, மேல்
பம்பி ஆர்ந்த புள் பார்க்க,உ வந்துசூழ்
உம்பி வான்மயில் ஆடின ஓகையே. 145

கருணையன் இறைவனை மனத்துள் காணுதல்

கைஅடங்கில காந்திமின் போன்று, புன்
மெய்அடங்கில பேருயிர் மேல்எழீஇப்
பொய்அடங்கிய ஐம்பொறி நீக்கி, வான்
ஐஅடங்கிய ஆண்டகை,—நேடுமால். 146

போர்ந்தபே ருயிரைப் பெற ஒல்கி, நோய்
கூர்ந்த தாயுடன் நேடிய கொள்கையால்,
ஆர்ந்த ஆசை அலைந்து உளம் ஆட, உள்
நேர்ந்த நாதனை எங்கணும் நேடுவான். 147

மழையின் ஆர்ப்பென வண்டுஇமிர் நீள்தரு,
மழையின் நீரெனத் தூய்மதுத் தூவலும்,
மழையின் நீல நிறத்த வனத்திடை
மழையின் மின்னென வந்துஇரி வான்;அரோ. 148

---

145. பம்பி ஆர்ந்த-நெருங்கிக்கூடிய. உம்பி-உயர்ந்து. ஓகை-உவகை.

146. காந்தி மின் — ஒளிபொருந்திய மின்னல். வான்ஐ — வானுலக வனப்பு

147. ஒல்கி—குழைந்து வருந்தி.

148. கனத்துள்—மேகத்துள்.

‘மனத்துளே உறைந்துஆள் வய நாதனை,
வனத்துளே தொடர்ந்தால் மருவான்’ எனக்
கனத்துளே நுழை மின்னிற் கடிந்து, உளத்து
இனத்துளே திருத் தாள் அடைந்து, ஏத்தினன். 149

நெடிது நேடிய நீரிய தோர் பொருள்,
கடிது காண்டலும், காதல் களித்தென,
நொடி துதைந்த நுணங்கிய நோக்குஅருது,
அடி துதைந்த அகத்து, அரிது ஓங்கினன். 150

மோயீசன் கண்ட மரம்—கருணையன்

மின்னின் மின்னிய வெள்ளியின் தீயென,
வன்னி, மின்னிய வாள்முகம், தண்ணமே
துன்னி மின்னிய தூயுளம், தீச்சுடர்
முன்னில், மோயிசன் காண்மரம் ஒத்ததே. 151

மரியாள் அனுப்பிய உணவால் மகிழ்தல்

விண்டின் மாரி வரத்து,அருள் மீவிளைந்து,
அண்டி ஆர்ந்துஉண்டு,ஆங்கு உயிர் வாழ்கினும்,
உண்டி நாட உறுப்புஉத வாப்,பசி
மண்டி வாடிய பூவுடல் மாழ்குமால். 152

உய்யநீள் கிழங் கோடு,உயர் தீங்கனி
கொய்ய நீரிய குட்டனும், நொய்யதன்
கைய தால்உத வியில கால்எலாம்,
வெய்ய வான்அர சாள்,விருந்து ஓம்பினள். 153

ஓம்புகின்ற விருந்துஉளம் நாள்தொறும்
சாம்புகின்ற விண்ணோர்தரத், தாமரை
கூம்புகின்ற கரத்தொடு கொண்டுஉண,
காம்புகின்ற உடல்,கனி வாழுமால். 154

---

149. மருவான்—அகப்படான்.

150. துதைந்த நொடி — நெருங்கிய நொடிப்பொழுது — ஒவ்வொரு நொடிப்பொழுதும். அடியகத்து — (ஆண்டவன்) பாதத்தில்.

151. தண்ணம் துன்னி—குளிர்ச்சி பொருந்தி வன்னி—பிரமச்சாரி — கருணையன்.

152. விண்டு—மேகம், பூ உடல்—பூப்போன்ற உடல். உண்டி நாட— உணவைத் தேட. உறுப்பு உதவா—உடலுறுப்புக்கள் உதவாமையால்.

154. சாம்புகின்ற—வாடிய. காம்புகின்ற—சோர்ந்து மெலிந்த.

கருணையனை இறைவனடி சேர்த்துத் துயர்நீக்க சூசை வேண்டுதல்

இனைய யாவையும் இன்பெழக் காண்டலும்,
நனைஅ ளாவிய வாகை நறுந்தவன்
புனைஅவா உளம் தூண்டிய பொம்மலால்,
தனைய னுயினை நாதனைச் சாற்றினன். 155

வரிவ ளர்ந்தவ னத்துஇள மாமுனி,
எரிவ ளர்ந்து,இடர் மாந்தல்எந் நாளுமோ?
உரிவ ளர்ந்தஉன் தாளுறச் சேர்க்குதி;
சொரிவ ளர்ந்தஅருள்தொடர்போய்! என்றான். 156

அருளின் காணியி னன்,அருளிச் சொலும்
பொருளின் காணிய பொற்புஅளிக்கு இன்புறீஇ,
கருளின் காணும் முக்காலே கடந்து,ஒளிர்
தெருளின் காணியி னான்,இவை செப்பினான்: 157

திருமகன், 'கருணையன் என் முன்னோடி' எனல்

கோதணிந்த உளம்கோடி, கோடாநிற்கும் கூவுலகம்,
தீதணிந்த துயர்தீர்ப்பப் பிறந்தேன்நான்; என்திருமுகத்தில்
தூதணிந்த தவவடிவாய், வழிதான்முன்னித் துடைப்பதற்கே,
போதணிந்த வனம்வைகும் அவனைத்தேர்ந்தேன்; பொறிவென்றோய்! 158

'இனம் சேர்ந்தார் இனம் சேர்ந்த
இழிவும் சேர்வார்' என்று,அருளை
மனம் சேர்ந்தாய், வடுச்சேராக்
குழவிதான்,என் மனப்பணியால்
வனம் சேர்ந்தான்; அங்கண் எனது
அருள் அங்கைமேல் வளர்ந்து, அன்னுள்
புனல் சேர்ந்(த) ஆர்கனித் தருவின்
பொலிசை மிக்கோன் பொலிவானே. 159

---

155. பொம்மல்—மிகுதி.

156. இடர் மாந்தல்—துன்பங்களை அனுபவித்தல்.

157. பொருளின் காணிய — பொருளில் தோன்றிய. அளி — அன்பு. கருள்—இருள்.

158. கூவுலகம்—பூவுலகம். போதணிந்த வனம் வைகுமவன் :— கருணையன்.

159. சேர்த்தாய் — சேர்ந்து. பொலிசை மிக்கோன் — செல்வத்திலும் மிகுந்தவன். பொலிசை - இலாபம் - செல்வம்,

127208

மீன் கறிகற்(ற) ஒளிவேற்கு அஞ்சில,
காள்நின்று வெளிப்பட்ட
ஊன் கறிகற்(ற) அரியன்ன
தவத்தின் மிக்கோன், உலகுஅஞ்சத்
தேன் கறிகற்று இமிர்வண்டார்
வனத்தி னின்று, செழு ஞானம்
தான் கறிகற்று உமிழ்ந்தென்னத்,
தவறு நீதி சால்புரைப்பான். 160

சொல்லாரும் மலர்சிந்தும்
குன்றத்து உச்சி துறந்துஓடி,
வில்லாரும் திரைசிந்தும்
சேர்தான் என்னும் வெண்ணதிக்கண்,
எல்லாரும் உய்வழியைக்
காட்ட நான்வந்து இயைந்தநிலை,
கல்லாரும் கற்றுய்ய,
விரலால் என்னைக் காட்டுவனல். 161

புண்துதைந்த தீயன்ன
சுடுஞ்சொல் வாளால், புரையீர்த்து,
விண்துதைந்த இடியன்ன
முழங்கி, நீதி வெருவு உய்த்து,
கண்துதைந்த இருள்தீர
விளக்கிட்டன்ன கதிகாட்டி,
மண்துதைந்த மன்னுயிர்கள்
பலவும் உய்க்கும் வரங்கொள்வான். 162

காமத்தில் ஆழ்ந்த அரசனுல் கருணையன் தலை வெட்டப்படுதல்

பாடலோடுஇ யைந்(த)ஆடல்,
முடவற்கு(ம்) இன்பம் பயந்தெனக், கோல்
கோடலோடுஇ யைந்த புகர்
கொண்டு, அன்று, ஆண்ட கோமானும்,
ஆடலோடுஇ யைந்தொழுகி,
அரிய எல்லா அறத்தொகையோன்,
வீடலோடு,இ யைந்து எதிர்க்கும்
வினைசால்பு ஓதக், கனிகேட்பான். 163

---

160. மீன் கறிகற்ற — விண்மீனை விழுங்கிய — விண்மீனினும் விளங்கிய.

163. அறத்தொகையோன் - அறங்களிற் சிறந்த கருணையன். வீடலோடு — (பாவிகள்) இறக்கும்பொழுது. வினை- பாவம். கனி-கனிவாய்-இனிமையாய்.

எரிகாய்ந்த இரும்பின்மேல்
துளிவீழ்ந் தன்ன, எரிகாமம்
புரிகாய்ந்த மனத்து உணர்வுற்று
ஒழுகல் செய்யாப் புகைந்து அழிய,
வரிகாய்ந்த உணர்வோன, தன்
தம்பி இல்லாள் வைத்துமதம்
சொரி, காய்ந்த கரியன்ன
காமப் பவ்வம் தோய்ந்து ஆழ்வான். 164

நஞ்சு இனிதாய் நெடுநாளும்
நக்கி நக்கி, நா மரத்து,
விஞ்சு இனிதாய் அமுதூட்டின்
சுவைகொள்வாரோ? வினைவென்ற
நெஞ்சு இனிதாய் அமுதுஉமிழ்ந்தே,
அன்னுன் ஓதும் நீதிமுறைக்கு
அஞ்சிலனாய், அன்று, அவனைச்
சிறையுட் பெய்வான்— அறப் பகையான். 165

கலைசெய் தூய் உணர்வுரைத்தோன்
பிரிதல் சொன்ன காரணமாய்,
உலைசெய் தீ விளைகாமத்
துணைவி, தேருது உணர் பகையால்,
கொலைசெய்வான் அமைதியைக் காத்
திருந்த காலை, கோன் பிறந்த
நிலை செய் நாள், விருந்தோம்பி,
நிருபர் எல்லாம் நின்று உவப்பர். 166

குழல் எடுத்துஇன் னிசை குயில,
அரசன் காணக் குழுச்சூழ,
நிழல் எடுத்துஒண் மணி மின்ன,
நிருபன் பாவ நிலைமகளே,
அழல் எடுத்து,இன் பெனச்சுடும்வேற்
கண்ணால் நோக்கி, அறம்அழியக்
கழல் எடுத்து,ஒண் சிலம்புஆர்ப்பக்
கனத்து மின்போல் ஆடுகிற்பாள். 167

---

164. வரி—புலிபோல். பவ்வம்—கடல்.

165. அறப் பகையான்—ஏரோதன்.

166. அமைதி—காலம்.

167. கனம்—மேகம்

தேன்குழைய, மலர்குழைய,
இடைகண் கைகால் திறம்குழைய,
மாண்குழையக் குழைந்துஇழைந்து இன்
னமிர்தம் ஊற, மகிழ்வுறீஇ, உள்
கோன்குழைய, குழுப்புகழ,
உணராது, ஆணை கூறினன், வான்
மீன்குழையக் கவின்மகளே!
கேட்டதுஈவேன் விழைந்து' என்பான். 168

தாயுணர்வால், கருணையம் தன்
தலையை, அன்னாள் தரக்கேட்டு,
தூயுணர்வால் வருந்தினும், தான்
மறுக்கல் தேற்றாத் தொடர்காமம்
காயுணர்வான் உட்கலங்கிக்
'கொணர்மின்' என்னக், கடுங்கசடர்
போய்,உணர்வால் பகைத்தமுனி
தலைகொய்து, அங்கண் பொறுத்து உய்ப்பார். 169

பகைதீர்ந்தது எனத்தாய்உள்
உவப்ப, நீதி பகர்ந்ததுபோல்
தொகைதீர்ந்த வரத்தோன்வாய்
தோன்ற, யாரும் துதைந்து அஞ்ச,
தகைதீர்ந்த தீயரசன்
குழைய, 'குன்றாத் தவத்துஉயர்ந்தோன்
மிகைதீர்ந்த செல்கதி சேர்ந்து
உவப்பான்,' என்றான்—வினை தீர்ப்பான். 170

கூசை காமத்தின் கேட்டினைக் கூறுதல்

முருகு வாய்மொழி முற்றவும் கேட்டு,உளத்து
உருகும் மாதவன், ஓங்கிய ஓதியால்
பருகும் வாய்மையின் பால்நலம், பண்பொடுஆங்கு
அருகு கான்றென, ஆய்ந்துஅறைந் தான்;அரோ. 171

---

168. மாண்—மாட்சிமை. பொறுத்து—சுமந்து.

170. தகை—மாட்சி. வினைதீர்ப்பான் :— திருக்குமாரன்.

171. மாதவன் : கூசை.

கொல்லும் வேலினும் கொன்று உயிர், மெய்உணப்
புல்லும் வியினும் புன்கண் புகுத்தி, மேற்
செல்லும் கூற்றினும் நஞ்சினும் தீயதாம்—
ஒல்லும் மாதர்உ ணர்ந்துடை ஆசையே. 172

கனிநுழைந்(த)அமு தோடுஉணும் காளமே,
துனிநுழைந்து நுகைத்துஉயிர் துய்த்தென
நனி நுழைந்த நசை,இனிது உண்டபின்,
இனி நுழைந்த இடுக்கண் வருத்துமே. 173

சிலையின் மேன்மையும் சீர்த்தியும், சீலநன்
னிலையின் மேன்மையும் வாழ்க்கையும் நீதமும்
கலையின் மேன்மையும் காமம் நினைத்த கால்,
உலையின் மேல்வழுது ஒத்து,எரிந்து இற்றவே. 174

கண்அ வாவு கதிர்,கடல் மூழ்கு மு...,
பெண்அ வாவு கொணர்பிணி தன்மையின்,
புண்அ வாவு புலால் உணும் குந்தமும்
விண்அ வாவு விண்ணேறும் ஓர் தீமையோ? 175

அரிந்த போது குழைந்தென, ஆகுலம்,
பிரிந்த போது, நசைபெறு மாம்என்பார்;
விரிந்த போது குடைவினை வண்டென,
புரிந்த போது, நசை உயிர் போழுமே. 176

தசைசெய் மெய்ப்பகை தாங்கிய மாக்கள்,தம்
நசை செய் அப்பகை நாடினர் தாம்;என
விசைசெய் விற்பகை வில்தொழில் காக்கினும்,
வசைசெய் அப்பகை மாற்றரி தாம்;அரோ. 177

---

172. வீ — புலி. புன்கண் புகுத்தி — துன்பங்களை விளைவித்து. கனி நுழைந்த—இனிதாய் நுழைந்த.

173. காளம்—நஞ்சு. துனி—துன்பம். துகைத்து — வருத்தம் செய்து.

174. நீதமும்—நீதியும். வழுது—வைக்கோல்.

175. கண் அவாவு கதிர் :— சூரியன் பெண் அவாவு — பெண்ணாசை. பிணி தன்மையின்—காமநோயின் கொடுமையைவிட.

176. போது—மலர். ஆகுலம்—துன்பம்; பிரிந்தபோது நசை ஆகுலம் பெறும் எனக் கூட்டுக. வண்டு குடைவினை என—வண்டுகள் குடையும் செயல் போல. நசை புரிந்தபோது—ஆசைபுரிந்த அளவில்.

177. தசை செய் மெய் — ஊனுடம்பை அப்பகை — அவ்வாசையாகிய பகையை. உடலைப் பகையாகக்கொண்ட மனிதர், ஆசையால் அப்பகையை விரும்புகின்றனர். வில் செய்யும் பகையை வில்லாற் காத்து வெல்லலாமாயினும், ஆசை செய்யும் பகையை மாற்றி வெல்வதரிது.

ஒல்லும் தன்மையை ஓர்ந்தில, மானிடர்
கொல்லும் தம்பகை யேகுணம் என்பது,
சொல்லும் தன்மையன் றேல்,அருள் சூழ்ந்து,நீ
வெல்லும் தன்மையை யாவர் விளம்புவார்? 178

இறையருள்முன் தீச்செயல் நிலையாது எனல்

மின்னல் நேர் ஒழி இன்பம் விரும்பிய
அன்ன நேரலன், கோடணை ஆற்றலோடு,
இன்னது ஆரருளோன், இரும் வீட்டிடை,
மன்ன,நீ செயும் வல்லருள் ஆண்மையே! 179

கடுவுயிர்த்து அடும் கட்செவி நாகமே
கொடு,மருத்துவர் கொல்விடம் கொல்லுவார்;
வடு மருட்டிய வஞ்சினர் செய்ததீ
அடுவினைக்கொடு, நீ அருள் ஆற்றுவாய், 180

தீய தம்வினை, தீயர் முடித்தலால்,
தூய நல்வினை சூழ்ந்து முடித்து, அருள்-
ஆய நின் வினை ஆதரவாய், இனிக்
காய வெவ்வினைக் கையருக்கு, அஞ்சவோ? 181

உலகு யாவும் உடற்றினும் அஞ்சவோ?
அலகுயாவும் அகன்(ற)அருள் ஆற்ற நீ,
விலகு(ம்)யாவும்; விளங்கிய வெஞ்சுடர்
இலகி ஆர்இருள் இற்றது போல்—என்றான். 182

என்ன மாதவன், எண்அகன்று இன்புறீஇ,
அன்ன நாகில் அருந்தவன் மாட்சியை
உன்ன, நாஅமுது ஊற்றென, நாள்தொறும்
மன்ன நாதனை மாறில வாழ்த்தினான். 183

---

178. ஓர்ந்தில — ஆராயாமல். பகை—காமம். தன்மை அன்றேல் — தன்மையல்ல என்றாலும்.

179. அன்ன நேரலன் — அப்பகைவன். கோடணை — கொடுமை. ஆற்றலோடு—செய்ததைக்கொண்டு. இன்னது—இவ்விதம் வாழச் செய்வது. அருளோன்-கருணையன். வல்அருள் ஆண்மையே-அருளின் வல்லமைதானே

180. கடு உயிர்த்து—நஞ்சினை உமிழ்ந்து. வடு—பாவம்.

181. முடித்தலால் - முடித்த வழியிலேயே. காயவெவ்வினை — உள்ளங் காய்ந்து பகைத்த கொடிய வினையுடைய. கையருக்கு—நீசருக்கு.

182. அலகு யாவும் அகன்ற—அளவு கடந்த. இலகி—விளங்கி.

183. நாகில்—இளமையில். அருந்தவன்—கருணையன்.

# 3. ஞாபகப் படலம்

முன்னுரை

மனையிடை இவையெலாம் வழங்குங் காலையில்,
கனையிடை முரசுஅதிர் களவிமா புரம்,
வினையிடை வினைசெயிர் விலகி, ஞாபகச்
சினையிடை மலர்ந்தநற் சீலம் செப்புவாம். 1

திருமகன் 'அப்பா' என்ற நாளில் அடியெடுத்து வைத்தல்

போர்முகத் துற்றபேய், புதையப் பூதியுள்,
கார்முகத்து இடியெனக் கறங்கி வீழ்ந்துற,
தார்முகத்து இக்கென முதற்சொல் சாற்றிய
ஏர்முகத்து இளவல்,அன்று அடிவைத்து ஏகினான். 2

பூவிடைப் புதிமதுப் பூத்த பூவென
நாவிடைத் தேன்உக நவின்றுஉ லாவலின்
பாவிடைப் புகழ்எழ உம்பர் பாடி, மேல்
கோவிடைத் திருவிழாக் கொண்கைத்து ஆயதே. 3

திருமகன் அணிந்த சட்டையின் விசேடம்

துன்னமும் இசைப்பும் ஒன்று இன்றித் தூய்நிறத்து
அன்னமும் மறுவென, மெய்ப்பை, அன்னைதான்
பின்ன, மும் முறைதொழுது இட்டுப் பேரருள்
மின்ன மும் முடியி னேன் வேய்ந்து தோன்றினான். 4

---

1. கனையிடை - ஒலியுடன். களவிமாபுரம் - இரவிமாபுரம். வினையிடை வினை - வினையை விளைவிக்கும். ஞாபகம் - நற்பொருள். ஞாபகச் சினையிடை- நற்பொருள் உபதேசமாகிய பூங் கொம்பில். செயிர் விலக்கி - பாவத்தை விலக்கி. சீலம் - ஒழுக்க முறைகள்.

2. பூதி - நரகம். தார் - மாலை இக்கு - தேன்.

3. கோவிடை - வானுலகில், புதி - புதிய. நவின்று - பேசி

4. துன்னம் - தையல். மறு என - களங்கம் உள்ளது என்னும்படி. மெய்ப்பை - சட்டை. பின்ன - பின்னி.

கானுலகு அலரொடு கதிர்வி ளக்கிய
வானுலகு உடுவொடு வனைந்த நாயகன்,
மீனுலகு இரங்க, ஓர் மிடிகொள் கஞ்சுகம்
தானுலகு அளித்துறீஇத் தரித்துத் தோன்றினான். 5

உருவளர் மதியொடும், ஒளிவ ளர்ந்தன
மருவளர் முளரிமெய் வளர்ந்து, மெய்ப்பையும்
தருவளர் வொடு புதி தன்மை தோன்றின ;—
வெருவளர் முறையில்தான் விளிந்த வேலையே. 6

குழல்நிகர் தேமொழிக் குழவி கண்டவர்,
நிழல்நிகர் நீங்கிலா நிமிர்ந்த காதலால்,
கழல்நிகர் அடிமலர் புல்லி, காய்உளம்
அழல்நிகர் அடுந்துயர் குளிர்ப்ப, ஆற்றுவார். 7

போதுவாய் மலர்ந்து, உரை முதல் புகன்றபோது,
ஏதுவாய் மடங்கவும், இனிதுஉ ளத்தொடு
காதுவாய் குளிரவும், கனிய சூசைபார்த்து,
ஓதுவாய் இளவல்,இன்று உணர்த்தினான்;அரோ. 8

அறவுரையாற்ற அருந்தவன் சூசையைத் திருமகன் தூண்டுதல்

கள்ளுண்ட எசித்து நாட்டில், கடவுள ராக நின்று,
தள்ளுண்ட பழியிற் பொங்கும் சடத்து,முன் பொருத போரில்
எள்ளுண்ட பேய்கள், அந்நாடு இழிவுறக் குனித்த யாவும்,
தெள்ளுண்ட உணர்விற் காட்டித் திருமகன் சொன்னான்மீண்டே. 9

---

5. கான் உலகு - சோலைகளையுடைய உலகத்தை. அலர் - மலர். கஞ்சுகம் - சட்டை. அளித்து உறீஇ - இரட்சிக்கும்படி வந்து.

6. தரு வளர்வொடு - மேனி வளர்ந்த அளவாக. வெரு வளர் முறையில் - (உலகெலாம்) வெருவும்படி. விளிந்த வேலை - இறந்த பொழுது.

7. கழல்நிகர் - மிதியடிபோல். காய் உளம் - காய்ந்த மனம்.

8. முதல் - முதற் சொல். ஏது - ஏதம் - குற்றம். வாய் மடங்கவும் - வாயை அடைக்கவும். ஓதுவாய் - மறையோதும் வாயால்.

9. சடத்து- வஞ்சனையோடு. தெள்ளுண்ட- தெளிவான.

புண்தக வெறிகள் ஓட்டிப் புரைபொதிர் நாட்டின் மொய்த்த
கண்டகம் கொய்தேன் நானே; கசடறும் உணர்வின் நீயும்
மண்தக உழுது, சீலம் மலிஅறம் வித்தி, யாரும்
விண்தக வீட்டின் ஆக்கம் விளைவது பேணல் நன்றே. 10

மும்மழை மதியிற் பெய்யா முகில்என. அருளின் வாய்ந்த
கம்மழை பொழிய, நானே களிப்புற, விளைவு காண்பாய்;
மைம்மழை யாகப் பேய்கள் வளர்த்ததீ மருளும் நீக்க
அம்மழை, குளிர்ப்ப தன்றி அகத்து,ஒளி விளக்க தாமே. 11

ஆசை ஏ ராகப்பூட்டி, அறிவழித்து. உளம்சே றாக்கி,
ஓசையே கலங்க வீக்கி. உழுதுபல் புரையே வித்தி,
மாசையே முதற்பல் வாழ்வின் வளர்பயிர் முகத்தைக் காட்டி,
காசையே உதவா பூதிக் கனல் விளைவு இயற்றும் பேயே. 12

தெள்ளிய வரத்தின் மாரி திளைத்தவன் தவத்தின் குன்றத்து,
உள்ளிய ஓதி நீத்தம் ஒழுகிவந்து, அலகை வஞ்சத்து
எள்ளிய புரையின் பைங்கூழ் இற்றுஅறச் சிவையிற்கொய்து,
விள்ளிய கொடியோய்! 'சீல விளைவு உணர்ந்து ஒழுக' என்றான். 13

கூசை வரம் வேண்டுதல்

“கூகையே ஒளியை வெஃக, கொடும்புலி இரங்க, செந்தீ
வாகையே குளிர்ப்ப, நச்சு மரம் உயிர் காக்க, மற்றை
ஓகையே உணர்ந்த காலை உனக்கு அரிது என்கொல்?வேதம்
மூகையே நானும் கூற, முயல்வியே” எனத்தான் நேர்ந்தான். 14

---

10. புண்தக-புண்பட்ட. வெறி-பேய் மண்-உலகோர். கண்டகம்-முள். விண்தக-விண்ணுலகடைந்து வீட்டின் ஆக்கம்-பேரின்பம்.

11. மதியில்-மாதந்தோறும். பெய்யா-பெய்யும். கம்-மேகம். மைமழை-இருண்ட மேகம். அம் மழை-அவ்வருள் மழை.

12. ஓசையே கலங்க வீக்கி- (அச்சுறுத்தும்) ஓசைகளை மனங்கலங்கும்படி வளர்த்து. மாசை-பொன். காசையே-நாணற்புல் கூட. பூதிக்கனல்-நரகத்தீ.

13. ஓதி நீத்தம்-ஞான உபதேசமாகிய வெள்ளம். சிவையின்-வேரோடு.

14. வாகையே-வெற்றியோடு. ஓகையே-உவகையோடு மூகை-ஊமை

*திருமகள் ஆசியால் சூசை துணிதல்*

"அணித்தகு உருவில் எங்கும் அனலியே விளக்கு மாறும்,
மணித்தகு மலர்பூ, வாசம் மதுநலம் பொழியு மாறும்,
பணித்தகு பயிற்றல் வேண்டா, படர்ந்தஅன்பு உணர்விலேற்கே;
பிணித்தகு உயிரோம்புஆறும் பேசுவேன்?"என்றான் நாதன். 15

நான்முகத்து, அருளின் ஆக்கம் நாட்டி,மேற் கதியில் உய்ப்ப,
ஊன்முகத்து நீஇ, நான் தேடும் உயிரென உணர்ந்த நட்பின்,
நூல் முகத்து உணர்த்தி யென்ன நுவன்று,இறை ஆசி தந்தாள்;
தேன்முகத்து அலர்த்தாள், சூசை சென்னிபூண்டு, இறைஞ்சினனே. 16

நாடக அரசன் ஒவ்வா, நவிக் கனி எட்டி ஒவ்வா,
மாடக ஆணி ஒவ்வா, மடக்கிளி உணர்த்தும் தீஞ்சொல்
சூடக மகளிர் ஒப்பச் சொன்னவை பொய்யா, சீலத்து
ஈடக மரபோன், வான்வீட்டு இன்பு உகும் ஓதி ஓர்ந்தான். 17

வாய்ந்தன மணியின், பூவின் மலர்ந்தன, விரைசெய் தீந்தேன்
தோய்ந்தன, அமுதில் யாரும் துய்ப்பன, வழுவாச் சீலம்
ஈய்ந்தன, அரும் வீட்டின்பம் இடுவன, கருணை நெஞ்சத்து
ஆய்ந்தன, எவர்க்கும், சூசை அறைகுப வலித்தான்; அன்றே 18

*சூசை அன்பால் மக்களைக் கவர்ந்து தருமத்தின் பயனை விளக்குதல்*

"ஈர மொன்றில இறைத்தன பயனில விரையாம் —
வாரம் ஒன்றில மனத்தவர்க்கு ஓதிய மறை" என்று,
ஆரம் ஒன்றிய அருள்அணி மார்பனே, உடற்கும்
ஓரம் ஒன்றிய உதவியோடு, அன்புறல் உணர்ந்தான். 19

---

15. அனலி-சூரியன். பணித்தகு—பணித்து, ஆணையிட்டு. உயிர் ஓம்பு ஆறும் — உயிர்களைக் காப்பாற்றும் வழியையும்.

16. நான்முகத்து-நான்கு திசைகளிலும். ஊன்முகத்துஉறீஇ-உடலெடுத்துவந்து. உணர்த்தி-உணர்த்துவாயாக.

17. நவி-அழகிய. மாடக ஆணி-யாழின் முறுக்காணி. ஈடு-பெருமை ஈடகமரபோன்-சூசை. ஓதி - ஞான உணர்ச்சி.

18. வாய்ந்தன — நன்கமைந்தனவாய்.

19. ஈரம் ஒன்று இல—ஈரமில்லாத நிலத்தில். வாரம்-அன்பு. ஓரம்-ஒரு பக்கம். உடற்கும் ஒன்றிய - (மற்றவர்) உடலை பேணிச் செய்த. உதவியோடு - உதவியால். அன்பு உறல் - அன்பினை அடைதல்.

‘அன்புவித்தினர், ஆங்கதின் விளைவென, அன்பைப்
பின்பு கொள்பவர்’எனப், பிறர், உயிரெனப் பேணி,
என்பு வேண்டினும் இடும் தயை மலர்முகத்து, எவர்க்கும்
முன்பு காண்டில முகைமது மொழிநலம் உரைப்பான். 20

கைதளர்ந்தனர்க்கு இரந்து தான் அளித்து, நோய் கடுத்த
மெய் தளர்ந்தனர் மெலிவுஅறும் மருந்தென, பொறி செய்
பொய் தளர்ந்தனர் புலனுற விளக்கென, எவர்க்கும்
மை தளர்ந்தன மனத்து, உரித் துணையென ஆனான். 21

கொடுந் தொல் புண்ணினைக் கொந்துஅழல் ஆற்றினது அனைய,
சுடுஞ் சொற் கொண்டு,அறும் துகள்வடு ஆற்றுதல் வேண்டின்,
விடுஞ் சொல் பூவென, விள்ளிய நயமுகத்து, அருளே
படுஞ் சொற் கொண்டு, உளம் பனிப்படக் குளிர்த்து இனிது உரைப்பான் 22

தீயொக் கும்துயர் தீக்குஉளத்து, இழி மழை ஒக்கும்,
நோயொக் கும் கடை, நுனித்தநன் மருந்தொக் கும் இருளை,
பேயொக்கும் கடை, பெயர்த்துஉளத்து ஒளிவிளக்குஒக்கும்,
தாயொக் கும், பயன் தரு மறை ஒக்கும்—தன் தயவே. 23

பாசமாம் அரும் பரிவு,உளம் இன்னணம் பிணித்தே
வாச மாமையின் மதுமலர் மொய்த்தவண்டு அனைய,
காசுஅம்மாமையின் காமரு மலர்க்கொடி, தயைத்தேன்
வீச, மாதவன் விளம்பியது, உளத்துஉண மொய்ப்பார். 24

---

20. முகைமது – மலர் மதுப் போன்ற.

21. நோய் கடுத்த – பிணியால் வருந்தின. பொய் தளர்ந்தனர் – பொய்யால் தளர்ந்த உணர்வினர்க்கெல்லாம். புலனுற – நல்லறிவுறும்படி. மை – மயக்கத்தால். உரி - உரிய.

22. கொந்து - திரள். சொல்விடும் - தேன் சொரியும். வள்ளிய-மலர்ந்த. குளிர்த்து - குளிரும்படி.

23. தீக்கு உளத்து - சுட்டமனத்தில். மழைஒக்கும் - மழைபோலவும் நோய் ஒக்கும் கடை - நோய் வந்தவிடத்து. பேய் இருளை ஒக்கும் கடை - பேய் (உள்ளத்தில்) மயக்கம் செய்யும் பொழுது. தன் தயவு - அவன் அருள்.

24. பரிவு - அன்பு. காசு அம் மாமையின் - பொன்போல் அழகிய நிறத்தையுடைய.

அருள்திறந்தவாய் அறைந்தவை ஒத்ததோர் அன்பின்
தெருள்திறந்த காது அருந்தலின், தெளிவுஉகும் சீலப்
பொருள்திறம்தகா, பொறிநெறி விலகி, மெய்யுணர்வின்,
மருள்திறம்தகா வரும் பலர் காட்சியிற் பொலிந்தார். 25

"ஓர்என் பான்,உலகு ஒருங்குடன் படைத்தபின், நீதிச்
சீரின்பால் நெறி சிதைவிலா நடவிய நிலையை,
பாரின் பால் நலம் படுவகண்டு இறைஞ்சலே, கல்விப்
பேரின்பான் உறும் பெரும் பயன் இது'' என உரைப்பான். 26

நனிஅ வாஇருள் உளம் புகாத் தெளிதலும், நயப்ப
இனிய கூறலும், எமர் பிறர் இன்றி ஓம் பலும், உள்
முனிய மாறலும், முரிந்தனர் நிறுத்தலும், மற்றக்
கனிய சீலமும் காட்டி,ஓர் பெருவிளக் கானான். 27

சாற்றிக் காட்டிய தகைநெறி, விரும்பிவந்து ஒருநாள்
ஏற்றி, காதலோடு இருந்து, இருஞ் செல்வரே வினவ,
"போற்றிக் கேண்மின்நீர்; புகையென ஒழிபொருள், ஈகை
ஆற்றிக் கேடில அமர் பயன் கூறுதும்'' — என்றான். 28

தருமம் செய்தற்குரிய முறைகள்

பொய்த்த பல்வழிக் கானிடைப் போதல்போல்,
மொய்த்த நீர்உல கில், முரியாது அறம்
வைத்த நல்வழி வாய்ப்பு அரிதாம்; கொடை
உய்த்த நன்முறை முற்பட ஓதுவாம். 29

---

25. தெருள் அன்பின் - தெளிந்த அன்பினால். சீலப்பொருள் - ஒழுக்கம். திறம் தகாத - முறை அறியாமல். மருள் திறம் - மயக்கம். தகாவரும் - பொருந்தாத.

26. ஓர் என்பான் - ஒன்றாய் நிற்கும் கடவுள். நீதிச் சீரின்பால் - நீதிச் சிறப்பு முறைகள். நடவிய - நடத்தி வரும். நலம்படுவ - நன்றாக. பேர் இன்பான் உறும் - மிக இனிதாய் வரும்.

27. அவா இருள் - ஆசையாகிய இருள். உள் முனிய மாறல் - (கோபிக்கும் பொழுது) உள்ளம் கோபங்கொள்ளுதலை நீக்கும்படி. முரிந்தனர் - (தம்) நிலை விட்டழிந்தவரை.

28. தகை நெறி - நன்னெறி. ஈகை ஆற்றி - (பிறர்க்குக்) கொடுத்து, கேடில அமர்-அழிவில்லாமல் வரும். ஏற்றி-ஏத்தி. அமர்பயன்-பெறும்பயன்.

29. முரியாது - தவறாதபடி. கொடை உய்த்த - தானம் செய்வதற்குரிய,

மனமாசுடையவர் செய்யும் அறம்

வெருள்த ருங்குரல் வெஞ்சின ஏறு உமிழ்ந்து,
இருள்த ரும்புயல், பெய்தலின் ஏத்துவார்;
மருள்த ரும்புகர் மல்கினும், மாறிலாப்
பொருள்த ரும் கையைப் போற்றுவர் யாருமே. 30

நஞ்சு 'நல்லமுது' என்று அதை நக்கினும்,
எஞ்சு நஞ்சுஅமு தாங்கொல்? யாவரும்
மஞ்சு நேர்கொடை வாழ்த்தலின், தன்புரை
விஞ்சு வெவ்வினை, இற்றுஅற வீயுமோ? 31

அறவோர் புகழுக்கு அஞ்சுவர்

'விஞ்சும் ஈகையில் விண்புகழ் கோடலே,
எஞ்சு வாணிகர் புல் தொழில்' என்றலால்,
நெஞ்சு மாசுற மேற்புகழ் நீவுதற்கு,
அஞ்சு வார்,—கொடை யாற்பயன் வேண்டுவார். 32

'கொடைவரும் பயன் கொண்டு,க வர்ந்திடும்
இடைவரும் புகழ்' என்று,உயர் நீர்மையார்,
உடைவரும் பொருள் கள்வர்க்கு ஒளித்தென,
மிடைவ ரும்கொடை, வேய்ந்தில ஈவரே. 33

வறியார்க்கு ஈவதே ஈகை

வீழ்ந்த வர்க்குஉத வியில,மேன்மையில்
வாழ்ந்தவர்க்குஇடு வார்,வயல் பாய்கிலா
ஆழ்ந்த நீர்க்கடல் அண்டி, நலம்கெடத்
தாழ்ந்த நீர்ப்புனல் தன்மையின் ஆயினர். 34

---

30. வெருள் - அச்சம். புகர் - குற்றம்,

31. மஞ்சு - மேகம். அறஇற்று வீயுமோ - அடியோடு ஒழிந்து போகுமோ

32. ஈகையால் விண்புகழைப் பெறுதல், வாணிகர் தொழிலாம்; அறப் பயனை விரும்புவோர், மனம் மாசுறும் வகையில் புகழ்ப் பூச்சு பூசுதற்கு அஞ்சுவர்.

33. மிடைவரும் - மிக்க. வேய்ந்து இல - அழகுபடுத்தாமல் - புறத்துத் தோன்றாமல்.

34. வறுமையிலார்க்கு ஈபவர் கடலில் வீணாய்ப் பாயும் நதி போன்றவ ராவர்.

வளர்ந்த பூங்கதிர் மாழ்கிய நெற்கு,உயிர்
உளர்ந்த வான்புயல் ஊட்டிய நீர்எனத்
தளர்ந்த வாழ்க்கையைத் தாங்கி,இல் லோர்க்குஇடும்
கிளர்ந்த வான்கொடை—கேழ்த்தெழும் ஈகையே. 35

ஒருகைம் மாறுஉணா ராக்கொடை, வான்மிசை
வருகைம் மாறுமுன், வையகத்து ஆண்டகை
தருகைம் மாறுஇயல் சாற்றிடக் கேண்மின் நீர்
இருகைம் மாறுஇல—ஏழ் கொடை போற்றியே. 36

## தருமத்தின் பயனை விளக்கும் நேரியன் வரலாறு

### காவிலேய நாடு

முரல் வாய்ச் சங்கு உளைந்து ஈன்ற முத்தும் செந்நெல் முத்தும்உறழ்,
நிரல்வாய்ப் பூங் கமழ்கழனி அணிந்த, தேன்பூ நிழல் குளிர்த்த
குரல்வாய்ப் புள் சோலைநலத்து, அறமும் சீரும் குடிதுஞ்ச,
நரல் வாய்ப்பண் கீதம்எழும் காவி லேய நாடுளதே. 37

### நெற்றலிமா நகர்

படம்புனைந்த பூஞ்சுனைநன் ஞெட்டின் மூதூர், பார்முகமோ?
வடம்புனைந்த மார்பணியோ? மணியோ?வையவனப்புஅவிக்கும்
தடம்புனைந்த மணிப்புரிசை தழுவும் மாடம் தவழ்கொடிசெய்
நடம்புனைந்த நெற்றலி மா நகரமாம் அந் நாட்டணியே. 38

---

35. மாழ்கிய - வாடிய. உளர்ந்த - சுழன்ற. கேழ்த்து - ஒளிபொருந்தி.

36. ஒருகைமாறு உணாா - ஒரு பயனும் கருதாத. கைமாறுமுன் - பயன் அடையுமுன். இருகைமாறு இல - இம்மை மறுமைப் பயன் மட்டுமன்று. ஏழ் – பல (பயன்தரும்).

37. முரல்வாய் - முழங்கும். பண்வாய்நரல் - வீணையில் ஒலிக்கும்.

38. படம் புனைந்த - படத்தின் தன்மையாய் மலர்ந்த. நடம் புனைந்த — கூத்தாடாநிற்கும்.

தொபீயன் குடும்பம்

*சீர்ச் செல்வத்து அருட்செல்வம்*
*சேர்த்தி, ஒவ்வாத் திருமிக்கோன்,*
*பேர்ச் செல்வத்து ஒளிக்கொடைக்கை*
*தொபீயன் என்பான், பிறழாக் கற்பு*
*ஏர்ச் செல்வத்து அன்னம் என்பான்*
*ஈன்ற நம்பி — தயோதரனே,*
*நீர்ச் செல்வத்து அலரன்னன்*
*வளர்ந்தே, வாழ்ந்தார் நிகரில்லார்.* 39

வாழ்ந்த முறை

*பண்ணழகாம் இன்குரல்போல்,*
*அழகாம் நாவில், பனிச் சொல்லே;*
*விண்ணழகாம் பெய்துளிபோல்,*
*அழகாம் சீர்க்கு, வினைகொடையே;*
*கண்ணழகாம் கண்ணோட்டம்*
*என்ன, வீயாக் காட்சியொளி*
*நண்(ணு)அழகாம் தவவிளக்குஉள்*
*எறிப்பக் கண்டான்,—நடந்து ஒத்தான்.* 40

நீனிவை நகரில் வாழ்தல்

*வீ(ய்)வரம்பாம் கோதையினுள்*
*உணர்வில் ஒப்ப விழைந்து, இருவர்,*
*தீ(ய்)வரம்பாம் வினைசெகுக்கும்*
*மறையின், நீழல் செய்து, அங்கண்*
*தோய்வரம்பாம் மிடியெவர்க்கும்*
*செகுத்த பின்னர், நுனித்து அகன்று*
*போய்,வரம்பாய் நீனிவை மா*
*நகரில், கைகார் பொழிந்திருந்தார்.* 41

---

39. *சீர்ச் செல்வத்து* - பொருட் செல்வத்தோடு; *நீர்ச் செல்வத்து* - நீர் ருகே செல்வமாய் வளர்ந்த.

40. பண் அழகாம் - வீணைக்கு அழகாகும். நாவில் - நாக்குக்கு. பனிச் சொல் - ( உள்ளம் ) குளிரும்படி கூறும் இனிய சொல். *சீர்க்கு* - செல்வத் திற்கு நடந்து ஒத்தான் - ( கண்டதற்கு ) ஒப்ப நடந்தான்.

41. *வீவரம்பாம் கோதையினுள்* — மலர்களை ஒன்று சேர்த்த மாலையின் தன்மையுடையவள் — தொபியன் மனைவி. வரம்பாம் — எல்லையாகிய. மறையின்—வேதம் போல.

மின்சுடரப் பொழிமுகில்போல், புறநாட்டு, அன்னூர் விளக்காகி,
கொன்சுடரப் பொன்புதையா விளங்க ஈந்த கொடைமிக்கோர்,
பொன்சுடரச் சுடும்தீப்போல், பொன்றுந் தேவ பொலிவருளில்
பின் சுடரப், பலவினையே பெற்றூர் மாட்சி பிரியாதார். 42

வறுமையும் கண்ணெளி இழத்தலும்

ஏமம்சால் ஈதலில், தாம் இல்லோ ராஞர்; தாதையும், நோய்த்
தூமம்சால் மூடியகண் குருடனுனன்; துகள் ஒன்றே
வீமம்சால் குறையெண்ணிக் கை கண் உதவா, மெய்யெல்லாம்
காமம்சால் அருள்வாயாய் கனிய யார்க்கும் உதவுவான். 43

வருங் கடனைப் பெறவும் மகனுக்குப் பெண் கொள்ளவும் வானவனேடு
மகனை அனுப்புதல்

கால்முகத்து வயிரக்குன் ருெப்ப நோயிற் கலங்காதான்,
வான்முகத்து திருவுளம்' என்று ஓம்பி, பொன்சால்வருங்கடனை
தேன்முகத்து மலர்தன் நாட்டு எய்திக்கொள்ளச் சேர் இனத்துள்
மீன்முகத்து நல்லாளை மகற்குச்சேர்ப்ப, விழைவுற்றுன். 44

பூமுற்று முகத்து, ஆர்வம் புனைநெஞ்சான் என்(ற) அசரியன்,
காமுற்று வந்து,'உணர்ந்த நிலையின் நம்பி கைகூட்டின்,
ஏமுற்று மணமுற்று மீள்வாம்' என்ன, இருகுரவர்
தா(ம்)முற்று களியில்விட, தனையன் போற்றித் தடங்கொண்டான். 45

நம்பியும் துணையுமே, கையும் நாட்டமும்,
கம்பியும் குரல்மணிக் கலனும் போல், த(ம்)முள்
பம்பியும் வினைத்ததீம் பணியின், நல்லறம்
உம்பியும் படர்வழி உவந்து போயினர். 46

---

42. கொன் சுடரப் பொன்-(புதைத்த கால்) விணுய்ச் சுடரும் பொன்னை. புதையா—மறைவின்றி, தெளிவாய். பலவினை—பல துன்பங்கள்

43. ஏம்—ஏமம்—இன்பம். தூமம்—புகை. துகள்—பாவம். வீமம்—அச்சம். கனிய—கனிவுடன்.

44. கால்முகத்து—காற்றின் முகத்தில் இனத்துள்—இனத்தாருள்.

45. முற்று பூ முகத்து — முழுதும் மலர்ந்த பூப்போன்ற முகத்தினையும். காமுற்று—ஆசையோடு.

46. நாட்டம்-கண். கம்பி-பொற்கம்பி. பம்பி-சேர்ந்து. பணி-சொல். உம்பியும்-எழும்படியாகவும்.

வழியில் மீனின் பித்தும் ஈரலும் பெறுதல்

திரைவளர் தீம்புனல் சென்று, தேமலர்க்
கரைவளர் நிழலுறீஇக் கவின்கொள் நம்பிமேல்,
புரைவளர் வினையெனப் புழுங்குஒர் மீன்வர,
விரைவளர் தாரினன் வெருவி, விம்மினன். 47

மேவிய துணையவன் மீனைக் கொன்று,பின்
ஏவிய முறை,அதின் பித்தும் ஈரலும்
தீவிய மருந்தென எடுத்துச் செலவயர்ந்து,
ஆவிய நாட்டெழில் அணுகி எய்தினர். 48

பேய்வினையால் மணம் பெருச் சாரமியை மணத்தல்

'வள்ளலின் மகன்'என மகிழ யாவரும்,
கொள்ளலின், உவர்ப்புஇல கடன்கைக் கொண்டபின்,
எள்ளலில் மரபினன் இயையும் மன்றலை
உள்ளலின், முகலிமா நகருற் றுர்;அரோ. 49

மதிஅகடு உரிஞ்சிய கொடியின் மாட(ம்),நீள்
நிதிஅகடு ஆர்கொடை நிவலன், நோன்று,தேன்
புதியகள் தார்அணிப் பொற்பில் ஈன்ற,அப்
பதிஅகடு, இணையிலாச் சாரமிப் பாவையே. 50

காவிநோய் செய்தகண் விழைந்து,ஏழ் காதலர்,
ஓவிநோய் செய்தபேய், ஒருங்கு மாய்த்தலால்,
நாவிநோய் செய்தபூங் குழலின் நங்கை,உள்-
ஆவிநோய் செய்து,அழல் அருந்தி வாடினள். 51

வாடிய ஒருமகள் வளர்ச்சி கண்டு,உளம்
கூடிய துயர்க்கு,இரு குரவர், நாள்தொறும்
நீடிய நசைக்கொடு நிமலனைத்தொழுது,
ஆடிய சிந்தையின் அரற்றி, விம்முவார். 52

---

47. புரைவளர் வினை என—பாவத்தால் வளரும் வினைபோல. புழுங்கு—சினங்கொண்ட.

48. தீவிய—திவ்விய. ஆவிய—விரும்பிய. செலவயர்ந்து—போய்.

49. கொள்ளலின் — கொள்ளுமுறையால். உவர்ப்பு இல — வெறுப்புத் தோன்றாதபடி. எள்ளல் இல் மரபினன்—இகழ்ச்சியற்ற குணமுடையவன்.

50. நிதி அகடு ஆர் — செல்வச் சிறப்பு நிறைந்த. அப்பதி அகடு — அந்நாட்டினுள்.

51. காவிநோய் செய்த — கருங்குவளையை வருத்திய. ஓவி — வருத்தி. (ஓவுதல் — வருந்தல்) நாவி—கஸ்தூரி. ஆவி நோய் செய்து — தன் உயிர் வருந்தி.

52. நசைக் கொடு — ஆசையுடன்.

தம்துயர் மூவரும் தகைப்ப, அன்றுஅவர்
வந்து,உயர் மணிக்கொடி மன்றல் கேட்டலும்,
நொந்துஉயர் கிளைஞரை நிவலன் நோக்கி,முன்
வெந்துயர் விளைத்தபேய் வினைவி ளம்பினான். 53

'பேய்வளர் வினையெலாம் பெயர்ப்பன் நான்'எனத்
தீ(ய்)வளர் குரவர்உள் சிறந்து, நேர்தலால்,
போய்,வளர் கோலமிட்டு, அரிவை, பொற்புறீஇ
மீ(ய்)வளர் மலர்க்கொடி பூத்து வேய்ந்ததே. 54

செங்கதிர் மதியொடு,ஓர் அணையிற் சேர்ந்தென,
அங்கதிர் ந(ல்)லாளொடு காளை ஆங்குஉறீஇ,
இங்குஎதிர் தோழன்முன் கொணர்ந்த ஈரலை,
பொங்குஅதிர்வு எழப் புகைத்து எரித்துப் போக்கினான். 55

போக்கிய புகையொடு புழுங்கு பேயினம்
நீக்கிய நிலையின்,ஆங்கு எவரும் நீர்த்தெழ,
வீக்கிய கொடிநலம் மேய்ந்த காளை,உள்
தேக்கிய மகிழ்வுஅருச் சிறந்து மூழ்கினான். 56

வீடு திரும்புதல்

இருமணிப் படலையின் இருவர் வாழ்ந்துராய்,
பருமணிக் களிப்பின்,நாள் பலவும் சென்றபின்,
திருமணிக் கொடியொடு திரும்பச் செலஉணர்ந்து,
அருமணிக் குன்றனான் அமைதி கேட்டனன். 57

விடையொடு வருந்தினும், தாதை, 'மேவுஅரு
ளிடையொடு வளர்க'என்று, இளமின்கூட்டி,வான்
கொடையொடு வளர்ந்தசீர் குவிதன் அன்புஉரி
நடையொடு, வேண்டுவ, வெறுப்ப நல்கினான். 58

---

53. தகைப்ப—தடுக்கும்படி. மணிக்கொடி—பெண்: சாரமி.

54. உள் சிறந்து—மகிழ்ந்து. நேர்தலால்—உடன்பட்டதால். அரிவை-பெண் : சாரமி. பூத்து வேய்ந்தது - பூத்தது போல் தோன்றினாள்.

55. அங்கதிர்—அம் + கதிர். காளை—தயோதரன்.

56. நீர்த்து எழ—ஒளியோடு எழ

57. படலையின்—மாலையாக. வாழ்ந்துராய் - வாழ்ந்திருந்து. அமைதி-உத்தரவு.

58. விடையொடு-விடைதர. இளமின் : மகள். அன்பு உரி நடையொடு-அன்பின் அளவாக. வெறுப்ப—மிகுதியாக.

"பறவையும் நிழலுமாய் உம்முன் பற்றுநீஇ
உறவையும் மறக்கினும், உவந்து,இல் லோர்க்கெலாம்
கறவையும் மிக,அருள் காமின் என்றனன் —
நறவையும் மணத்தையும் நவில்பைந் தாரினன். 59

தூம்புடைக் கையமா, துரகம், சாடுஉயர்
கூம்புடைத் தேர்,தசம், கொடி, குடைக்கொடு
தேம்புடை அலங்கல்வேல் சேனை சூழ்வர,
வீம்புடை மரபினோர் விரைவிற் போயினர். 60

மனைவியின் துயரைத் தொபியன் ஆற்றுதல்

பண்நடையால் ஆடலெனப் பரிவற்று, இங்கண்
உள்நடையால் உவப்பஇவை ஒழுகுங் காலை,
புண்நடையால், மகற்கு அவண்தாய் புலம்பி நோக,
பெண்நடையால் உள் மயங்கிப் பெரிதும் நைந்தாள். 61

'பொருள் இழந்தேம், மகன்இழந்தேம், புலம்ப நீகண்
தெருள் இழந்தாய், இதோகொடையின் செய்கை',என்றாள்;
'அருள் இழந்தே சொல்லல்'என அழும்தொபியன்
மருள் இழந்தே கலங்காதான், மறுத்துச் சொன்னான். 62

'அறமொன்றே பயன்,பேதாய்! அஞர்தீது அல்ல,
மறமொன்றே வினை,காணாய்; வழங்கும் அன்பின்
திறமொன்றே, நயம் பீடை சேர்த்தி ஈவான்—
புறமொன்றே ஒ(வ்)வாக்கருணைப் பொலிவோன்" என்றான். 63

'மைத்திறத்தால் நொந்து அழுவது எளிதே, வாடும்
மெய்த்திறத்தால் இறப்பு எளிதே, வினைநோய் தந்த
கைத்திறத்தால் தேறி உளம் காய்ந்த துன்பம்,
அத்திறத்தால் இன்பமென்பது அரிதே' —என்றான். 64

---

59. கறவையும் மிக—பசுவினும் மிக்க. நறவு—தேன். நவில்-தாங்கு.

60. கைய-கையையுடைய. சாடு - வண்டி. தசம்-தண்டிகை-பல்லக்கு. தேம் - மது. வீம்பு - மேன்மை.

61. பண்நடையால் ஆடல் என—வீணை இசைக்கொப்ப ஆடுதல்போல. பரிவு—துன்பம். புண் நடையால் — புண்பட்டாற் போல. பெண் நடையால் — பெண் புத்தியால்.

62. கண் தெருள் — கண் ஒளி. மருள் இழந்தே — மயங்காமல்.

63. அஞர்—துன்பம். மறம்—பாவம். திறம் ஒன்றே—திறத்தால் மட்டும். நயம்பீடை—இன்பமும் துன்பமும்.

64. மைத்திறத்தால்—மயக்கமுற்று. கைத்திறத்தால் — (ஆண்டவனது( கையை நோக்கி

'காய்பதம்கண்டு, அருங்கொல்லன் கரும்பொன் காப்பான்;'
'நோய்பதம் கண்டு ஆற்றானோ? நுனித்த அன்பின்
தாய்பதம் கண்டு எந்தை'யெனச் சாற்றும் வேலை,
சேய்பதம் கண்டு, ஈண்டொருவன் தூது சென்றான். 65

தயோதரன் பெற்றோரை வணங்குதல்

'திங்கள்நாண் அரிவையோடு சென்றனன் காளை' என்றாற்கு,
'எங்கணால் நம்பி?' என்றார், எழும்விரைவு இவரும் சென்றே,
'இங்கண்நாம் அடிகள்'என்ன, இருவர்தாள் தழுவி வீழ்ந்து,
தம்கண்நாள் மலர்நீராட்டித் தகும்துயர் ஆற்றினாரே. 66

தொபீயன் கண்ணொளி பெறுதல்

ஏற்றினான், உயிரோடு ஆக்கை
இமிழ்த்தென அணைத்தான், கண்ணீர்
தூற்றினான், 'அழுங்கண் அன்றித்
துலங்குகண் இலனோ' என்னச்
சாற்றினான், அரிய தோழன்
தழுவினான், அவனும் இந்நோய்
ஆற்றிநான் உவப்பச் செய்வேன்,
அரிகஇக் கவலை' என்றான். 67

நூல்வழி கொணர்ந்த பித்து
நோம் இரு கண்ணிற் பூசிச்
சேல்வழி சிலாம்பில், புல்லம்
சிந்தி வீழ்ந்து, இருளும் நீங்க,
நால்வழி அனைத்தும் தோன்றி,
நவை அறத் தொபீயன் காண,
'மேல்வழி உதவி' யென்ன,
விமலன்பின், இவனைத் தாழ்ந்தான். 68

---

65. கரும்பொன்-இரும்பு. சேய் பதம் கண்டு-மகன் மொழியைக் கேட்டு.

66. நம்பி : தயோதரன். சென்றனன்-வந்தனன்.

67. ஆக்கை இமிழ்த்தென — உடலைப் பிணித்தாற்போல.

68. நூல்வழி — சாத்திரப்படி. நோம் — நோகும். சேல் : கண் புல்லம்—பூ. நால்வழி — நான்கு திக்கிலும். மேல் வழி உதவி — வானுதவி விமலன் பின் — இறைவனுக்குப் பின்.

திருமணிக் குன்றின் சாயற்
சிறுவனும், ஒளிமீன் பூத்து
வருமணிச் சாய லாளும்,
வளர்நிதிக் குப்பை யோடு
பெருமணிப் பேழைச் சால்பும்
பெற்ற மற்று எவையும், தன்கண்
இருமணிக் களிப்பிற் கண்டான்
இருங் கொடைப் பயனின் மிக்கான். 69

தொபீயன் வினவும் தயோதரன் விடையும்

நல்வினை விளைவு கண்ட
நகரெலாம் நயப்ப, தோன்றல்
பல்வினை வழியி லாய
பயனெலாம் பணிப்ப, தாதை
வில்வினை வளைக்கை பற்றி
வேறிருந்து, 'உரைமோ, காளாய்!
வல்வினை உணர்வில் தோழன்
வழங்குகைம் மாறுஏது?' என்றான். 70

"கொடிய ஓர் வகுலி கொன்றான்;
கொள்கடன் கொண்டான்; பேய்கள்
கடிய,ஓர் கவின்நல் லாளைக்
கடியொடு சேர்த்தான்; செல்வம்
பொடியஓர் அளவற்று உய்த்தான்;
புலம்பு(ம்) உனக்கு இருகண் தந்தான்;
படியஓர் கைம்மா றேர்?சீர்
பாதியிட்டு இறைஞ்ச" என்றான். 71

தொபீயன் துணைவனைப் போற்றி முகமன் கூறல்

'கோதைவாய் விரைசெய் மார்பன்
கூய்மின்'என்று, அவனும் வந்தான்;
தாதை,வாய் அமிர்தம் ஊறத்
தன் கையால் முன்கை பற்றி,
"காதைவாய் மடங்கச் செய்தாய்;
கடிப்புகழ் இங்கண் வித்தி,
மேதைவாய்ப் பெருஞ்சீர் வான்மேல்
விளைத்தி; மற்றறிய நாறே?" 72

---

69. பேழைச் சால்பும் — பெட்டிகளின் மிகுதியையும்.

70. பணிப்ப—உரைப்ப. வில்—ஒளி. வல்வினை—வல்லமையுடைய.

71. வகுலி—ஒருவகை மீன். கடிய—கடிந்து. கடி—மணம். பொடிய—விளங்க. படிய—முறையான.

72. கோதைவாய் — மாலையணிந்த. காதை—சொல். கடி—மிகுதியான. மேதைவாய் — அறிவோடு. அறியநாறே—நான் அறிவேனே.

'அடிப்பணி செய்க நாமே, அரும்பொரு ளோடும் உய்த்த
கடிப்பணி பகுந்துஓர் பாகம் கைக்கொள்க' என்னப் போற்றிக்
கொடிப்பணி உலவும் மார்பன், குளிர்ப்பஓர் முறுவல் காட்டி,
துடிப்பணி மொழியாற் சொன்ஞன்–சுருதிநூல் அமிர்த வாயான். 73

வானவன் தன் வரலாறு கூறி மறைதல்

"உருக்கொடு தோன்று நானே, உருவிலா வானேன்; இன்பப்
பெருக்கொடு தேவ பாதம் பெற்றஇ ரபயேல் என்பேர்;
மருக்கொடு மலர்ந்த பூப்போல் வளர்அருட்கொடையின் பாலால்
திருக்கொடு புகழ்நீ எய்தச் செலுத்தினன் என்னை நாதன்." 74

இரவலர் தம் கைவேலி யிடத்து,அரும் பொருளை வித்திப்,
புரவலர் புகழும், பொய்யாப் பொலிவொடு விளைத்தி வாழ்வும்;
பரவலர் மலர்ந்த சோலை படர்நிழல் மங்கா, யாண்டும்,
கரவலர் முகத்து,இல்லோர்தம் கைக்கொளும் கொடைவித்து,எஞ்சா.75

பொன்ஞெளி சுடரச்செய்தீப்புரை, அறத்து உயர்ந்தாய் என்ன,
உன்ஞெளி சுடரத் துன்பத்து உளைதியே, துன்பம் தாங்கி
மன்ஞெளி சுடர நெஞ்சின் மயக்குஇலாப் பொலிந்தாய் என்னப்
பின்ஞெளி சுடர,இச்சீர் பெற்றியே, கொடையின் மிக்கோய்! 76

"ஓர்திறத்து இன்பதுன்பம் ஒருகையாற் பகுத்த நாதன்
பேர்திறத்து இணங்கி வாழ்த்தி, பெறும்வினை களைக" என்னக்
கார்திறத்து ஒளிரும் மின்போல் கதிர்எறித்து ஒளிப்ப வானேன்
சீர்திறத்து அருளின் மிக்கோர், திருவுளம் இறைஞ்சி வீழ்ந்தார். 77

---

73. கடிப்பணி—சிறந்த ஆபரணம். கொடி—கொடியாக. துடிப்பணி மொழியால்—முரசொத்த ஒலியோடு.

74. திரு - செல்வம். திருக்கொடு—செல்வத்தோடு.

75. வேலியிடத்து — வயலிடத்து. பொய்யா — பொய்யாதமுறையில். மங்கா - குறையாது. கரம் அலர் முகத்து — கை மலர்ந்து ஈந்த காலத்து. எஞ்சா—குறைவின்றி விளையும்.

76. தீப்புரை — தீப்போல. பின் — பிற்காலத்தும். ஒளிசுடர—புகழப் படும்படி.

77. வினை—துன்பம். கார் திறத்து—மேகத்தின் முகத்து. ஒளிப்ப—ஒளிக்கவே. பேர்திறத்து—புகழுக்கேற்ப.

மிடிமுகத்து எஞ்சாச், செல்வம் விளைமுகத்து ஓங்கா நீரார்,
படிமுகத்து இணையா அன்பில், படுங்குறை எவர்க்கும் நீக்கி,
கடிமுகத்து அடைந்த வாழ்க்கை கனிபொதுப் பயன், நன்றாக
இடிமுகத்து உறைதீது என்ன, இமிழுறப்பகுத்து வாழ்ந்தார். 78

'கொடைதரும் பயனே இஃதேல், குளித்தகால் கெடுமென்று ஈந்து,
மிடைதரும் பொருளின் ஆக்கம் மேவுமின்' என்றான் சூசை;
கடைதரும் அளவற்று, அன்னார் களிப்புற, இரப்போர் வாழ
மடைதரும் நிறைவில் தானம் வழங்குநல் உணர்வில், தேர்ந்தார். 79

அறப்பயன் மறுவுடலிலும் புகும் எனச் சிவாசிவன் கூறல்

கோலமிட்ட அங்கக் குடம் ஒத்து, அவண்
சூலம் அக்கணி கொக்கணி தொக்கணி
சால மிக்க தவத்துருத் தாங்கி, நற்
சீலமற்ற சிவாசிவன் செப்பினான். 80

அற்ற வல்லி அருதுஉறு நூலென,
பெற்றஇப் பிறப் பின்கொடை, எப்பிறப்
புற்ற தென்னினும், புக்கு, ஒழி யாது, உயிர்
பற்ற வந்து, பயன்தரு மேளன்றான். 81

முற்பிறப்பு என்பது கதைஎனச் சூசை கூறுதல்

பேதை வாய்மொழி கேட்டுளி, பேரருட்
கோதை வாய்மொழி மாதவன் கூறினான்:
"காதை வாய்மொழி கண்ணணி, உளம்கெட,
மேதை வாய்மொழி வேதமது என்பவோ?" 82

"பிறப்பதும் பிறந் தார்எவ ரும்பினர்
இறப்பதும் பொதுவன்றி, இறந்த பின்,
புறப்படும் புரம்புக்கு, முன் ஆயவை
மறப்பதும் தவிர்ந்து, ஆர்வகுத்தார்?"—என்றான். 83

---

78. படிமுகத்து—பூவுலகில். கடிமுகத்து — (செல்வ) மிகுதியால். கனி—இ˘தாய். இமிழ்—இனிமை.

79. குளித்தகால்—மறைத்துவைத்த காலத்தில். மிடைதரும்-திரண்ட. ஆக்கம்—வளர்ச்சி.

80. அங்கக் குடம்-அங்கப் பானை. தொக்கு அணி-எல்லாம் அணிந்து.

81. வல்லி—வல்லிப் பூ. அருது உறும்—அறுபடாமல் தொடரும்.

82. காதை—வீண் கதைகள். கண்ணணி—நினைத்து மேதை—அறிஞன்.

83. புரம்—உடல். மறப்பதும் தவிர்ந்து—மறவாதபடி.

சிவாசிவன் மறுப்பு

"முன்பிறந்தனர் முற்று(ம்) இறந்தா ரெனில்,
பின் பிறந்திலர், முன்பெறும் தீவினை
என்பு இறந்தபின் எவ்வழி வீயும்?" என்று
அன்பு இறந்த சினத்தவன் கூறினான். 84

குசையின் விளக்கம்

மருள்வி ளைத்த வழுக்குரை கேட்டலும்,
தெருள்வி ளைத்த திருவிளக் காயினோன்
அருள்வி ளைத்ததன் அன்பொடு, நூல்மறைப்
பொருள்வி ளைத்தப யன்,புகன் றான்;அரோ. 85

வினைமுதிர்ந்து விளிந்தனர் ஆவிபோய்,
முனைமுதிர்ந்த அழல்முதிர் பூதியில்,
கனைமுதிர்ந்த பனிப்பொடு,எக் காலமும்
புனைமுதிர்ந்த சிறைபுதைந்து ஒவுமால். 86

செய்த நற்றவ வாள்கொடு, தீவினை
கொய்தபின்,இறந்து ஆவிகுளிர்ந்து,அருள்
பெய்த நெஞ்சு, பெயர்கில பேரின்பம்
எய்த, ஆண்டகை கண்டுஎன்றும் வாழுமால். 87

இருவ கைப்படும் இவ்வுயிர் விட்டு,இடை
வருவ கைப்படும் மற்றுயிர், தன்வினை
ஒருவ,கைப்படும் ஒப்பனைத் தீயுலகு
அருவகைப் படும்அல்லலில், வீயுமால். 88

---

84. என்பு இறந்தபின்—உடம்பு இறந்த பின். அன்பு இறந்த—அன்பில்லாத.

85. மருள் வினை—மயக்கத்தோடு கூடிய. வழுக்கு—பொய். தெருள்—தெளிவு.

86. பூதி—நரகு. முனை முதிர்ந்த — (பேய்களின்) போர் மிகுந்த. கனை—ஒலி. பனிப்பு—நடுக்கம். புனை—கால் விலங்கு. ஒவும்—வருந்தும்.

87. குளிர்ந்து — (மகிழ்ச்சியால்) குளிரும்படி.

88. இருவகைப்படும் — தீயோர், நல்லோர் எனும் இருவகைப்படும். ஒப்பனைத் தீ உலகு — பாவனைத் தீ உலகு — உத்தரிக்கும் தலம்.

கோதுகொள் நிதி பொன்செயும் கொல்லரே,
ஊதுகொந்துஅழல் ஒப்பனை செய்தென,
தீது கொள்உயிர் தீதுஅளவு, அன்னதீ,
போது மட்டும் பொருந்த வருத்துமால். 89

'பொன்வி ளக்கிய போதில்,அக் கொல்லரே
மின்வி ளக்கிய மென்னகை செய்தென,
இன்வி ளக்கிய அவ்வுயிர், எம்பிரான்
மன்வி ளக்கிய மார்பணி ஆகுமால். 90

சொன்ன முற்கதிகள்,கடை தோன்றிலா;
இன்ன பிற்கதி ஈறுள தாய்,இறந்து,
அன்ன தீஉறை அவ்வுயிர்க்கு, ஈங்கு,நம்
பன்னல் ஆட்சியின் பாசறை குன்றுமால். 91

'அரிய வேதம்எட் டெட்டும்எண் ணாகமத்து
உரிய இவ்வழி ஒன்றலது இல்லையால்;
பிரிய மாண்(ட)உயிர், பின்பு பிறத்தலே
கரிய கங்குல் க னு'என ஓதினன். 92

வறுமைக்கும் செல்வ வேற்றுமைக்கும் சிவாசிவன் காரணம் கேட்டல்

கூறியஇந் நிலையுளதேல், குன்றுஉடலும் உடல் வனப்பும்,
 குறையும் வாழ்வும்,
மாறியஇந் நிலைஉலகில் வழங்கியகால், நீதியிதோ
 வழுவோ கூறாய்;
தேறியஇந் நிலைமிக்கோய்! என்றுசிவா சிவன்கேட்ப,
 தெளிந்த ஆர்வத்து
ஊறியஇந் நிலைமதுச்சொல் பூங்கொடியோன்,
 உரிமறைநூல் உரைத்தான் மீண்டே. 93

---

89. கோதுகொள் நிதி—கலப்புள்ள பொன்னை. பொன் செயும்—பொன்னுக்கும். கொந்து அழல்—உலைத் தீ. ஒப்பனை—அழகு.

90. மென் நகை — நுண்ணிய நகை இன் விளக்கிய — இனிதாய் விளங்கிய.

91. கதிகள்-நரகம், மோட்சம். கடை தோன்றிலா-முடிவில்லை. பிற்கதி-உத்தரிக்குந்தலம். பன்னல் ஆட்சியில் - (நம் முன்னோர்) சொல்லிய வழக்கின்படி செய்யும் தருமங்களால். பாசறை—துன்பம்

92. எட்டு எட்டும் எண்ணாகமம் — $8 \times 8 + 8 = 72$ ஆகமங்கள். மறுபிறப்பு என்பது தூங்கினவர் இரவிற் கண்ட கனு போல்வது.

93. குன்று உடல் — குறை உடல். வழுவோ—கேடோ.

சூசை விடை கூறுதல்

"ஆதியிலா ஈறும்இலா, இணையின்றி என்றும் உளோன்
அமலன் ஒன்றே,
பேதுஇலா வானவரும் எம்முயிரும் படைப்புண்ட
பின் ஈறில்லா;
ஓதியிலா மற்றுயிர்கள் முதல்ஈறுஉள் ளன"என்ன
உரிநூல் ஈதாய்,
நீதியிலா நவையுறு(ம்)முன், முதற்படைப்புஎம்
உயிர்கொண்ட நிலைமை என்றோ? 94

பார்முகத்து முதல்உடல்புக்கு எம்முயிர்கள் தோன்றியகால்,
பரிவற்று, எல்லாச்
சீர்முகத்து வாழ்அரசர் யாவரும்கொல், பன்முகத்துச்
சென்றார் என்னில்,
பேர்முகத்து வயத்துஇறையோன் நீதியதோ? நீதியதேல்,
பிறழா நீதி —
ஓர்முகத்து, முன்வினைகள் இன்றி,இன்றும் இவ்விகிர்தம்
உளதாம்" என்றான். 95

தலைவிதியும் திருவுளமும்

"முற்பிறப்பின் விடங்கமுறத் தலைவிதிகா ரணம்" என்றான்
முன்பான்;"நீதி
தற்பிறப்பின் அன்புயர்ந்தோன், வேறுபட விதிஎழுதல்
தயவோ?" என்ன
"சொற்பிறப்பின் அடங்காதான் திருவுளமே" என அன்றான்
சூசை மீண்டே,
"பிற்பிறப்பின் வீற்றுஇயற்கும் திருவுளமுந் தான் என்றால்
பிழையோ?" என்றான். 96

---

94. பேது இலா—வேற்றுமையின்றி. ஓதி—அறிவு. நவை — பாவம். பாவஞ்செய்யுமுன் மனித உயிர்களின் நிலைமை என்ன என்பது ஈற்றடியின் கருத்து.

95. பரிவு - துன்பம். பன்முகத்து - பலவிதமாய். சென்றார் எனில் - தோன்றினரெனில். விகிர்தம் - வேற்றுமை. வாழ்கொல்-வாழ்ந்தார்கொல் என்பதன் மரூஉவாய் முன்பின் மாறி நின்றது.

96. விடங்கம் உற - வேற்றுமை பெற. முன்பான் - முன்னவன்- சிவாசிவன். பின் பிறப்பின்—பின் தோன்றிய. வீறு - வேற்றுமை.

வைகறையொத்து அள்ளிருளும் ஒளியுமில சிவாசிவன்உள்
மயங்கி நிற்ப,
"மொய்கறையற்று உணர்க"என, முந்நீர்சூழ் பூதலத்தில்
முயலின் மிக்கோன்,
செய்கறையற்று உயர்நீதித் திறங்காட்டி, நெடிதுண்ட
தெளியா மையல்,
பெய்கறை யற்று, ஒளிமொய்ப்ப, பெருஞ்சுருதி விளக்கேந்திப்
பெரியோன் சொன்னான். 97

பொருளும் அருளும்

தெருட் செல்வம் மிக்(க)இறையோன், முள்நிலத்தும்
பெய் முகில்போல், சிந்திப் பெய்த
பொருட் செல்வம் வறிதென்னப் பூரியர்க்கும் சால்புஇறைப்பான்
பொருவா மாட்சி
அருட்செல்வம்,நசைக்கு அளவா யாவரும்கைக் கொண்டுஒங்க,
வயமே தந்தான்;
'மருட் செல்வம் மற்றெவையுமாகியது; அறப்பயனே,'
மதியின் மிக்கோய்! 98

அறமே பொது

சலத்தெல்லாம் ஓர் நிலையோ? தருக்கெல்லாம் ஓர்கனியோ?
தரணி எங்கும்
நிலத்தெல்லாம் ஓர் விளைவோ? நமக்கெல்லாம் ஓர் முகமோ!
நிலையும் பல்லாய்க்
குலத்தெல்லாம் பொதுநின்று குன்றாச்சீர் அறமொன்றே
குறையொன்று இன்றிப்
புலத்தெல்லாம் ஆகுமெனில், புறவிகிர்தம் என்று எண்ணார்
புலமை மிக்கார். 99

---

97. கறை அற்று - மாசறும்படி. முயலின் மிக்கோன்—முயற்சி மிக்கோனாகிய கடவுள். கறையற்று உயர் - குறையின்றி உயர்ந்த. மையல் பெய்கறை- மயக்கத்தைத் தரும் இருள்.

98. முள்நிலத்தும்-முள்ளுள்ள காட்டிலும். வறிது-வீண். பூரியர்க்கும்- கீழோர்க்கும். சால்பு - மிகுதியாய். வயம் - வல்லமை.

99. சலத்து எல்லாம் - நீரெல்லாம். ஓர் நிலையோ - ஒரு நிலத்திற் சேருமோ. பல்லாய் - பலவாய் புலத்து எல்லாம் - இடமெங்கும். புறவிகிர்தம் - பிற வேற்றுமைகள்.

வறுமையும் செல்வமும் மனித குலத்தை அணைக்கும் இருகைகள்

கூறுபடும் திறத்து,இவன்கைப் பொருள் அவற்கே;
    இவற்குஅவன்கைக் கருமம் வேண்டும்;
வேறுபடும் மனுக்குலமே ஒருப்படுத்தும் இருகையாம்
    மிடி வாழ்வு; அன்றிக்
கூறுபடும் திறத்து,என்றும் வாழ்ந்து அறவோர்
    அழத் தீயோர், குவலில் காண்கின்,
ஈறுபடு நாளில்,வரும் இருவினை வீ யாப்பயன், பின்பு
    இல்லை என்பார். 100

திறம்தகா வாழ்வுஇதுவாய், திறம்பா வான் வாழ்வதெனத்
    தெளிய நாமே,
பிறந்த கால் உயர்குலமும் சீர்த்திறமும் தெரிந்து,இங்கண்
    பிறப்பார் இன்றி,
இறந்தகால், உயர்வான்மேல் இணையாவாழ் வுற்று,ஆளும்
    இயல்பொன்று அன்றோ?
மறம்தகா, நல்வினை நாம் செய்அளவொத்து, அன்றுஎவர்க்கும்
    வழங்கும் என்றான். 101

'உன்விதி இது' என்று அடித்தான் — நுமான்

இற்றெலாம் இயம்பியும், இவைசி வாசிவன்
'முற்றெலாம் விதிவிதி முயலின் ஆம்என,
அற்றெலாம் பொருநுமான் அதற்கொர் ஞாபகம்
உற்றெலாம் தீர்ப்பலென்று, உரைத்து,எழீஇயினன். 102

பிடித்திழுத்து இருத்திப்'பேர் விதியடா'என,
அடித்தடித்து உதைத்து'இது விதியடா'என,
இடித்திடித்து 'அழற்கநீ, விதியடா'என,
வெடித்தவர் நகக்,கொடும் விதி விலக்கினர். 103

---

100. காறுபடும் திறத்து - அளவுக்குத் தக்கபடி. மிடி, வாழ்வு - வறுமையும் செல்வமும். குவவு—உலகு. வாழ்ந்து—வாழவும். ஈறுபடும் நாளில் - இறந்த பின்பு.

101. திறம் தகா-திறம் அமையாத. திறம்பா-குறையாத. மறம் தகா - பாவத்தை நீக்கி. 'இவ்வுலக வாழ்வில் நன்மை இல்லை; வானுலக வாழ்வே நன்மையுடையது' என்பதை நாம் தெரிந்துகொள்ளுவதற்காகவே, இவ்வுலகில் குலத்தாலும் செல்வத்தாலும் உயர்ந்த குடும்பத்தைத் தெரிந்து பிறப்பவர், இலர் என அறிக. நாம் பாவத்தை விலக்கிச் செய்த நல்வினையின் அளவே, வானுலக வாழ்வு உண்டு என்பதை உணர்வாயாக.

102 முயலின் ஆம் - செயலால் உண்டாகும். ஞாபகம் உற்று - ஞாபகச் சூழ்ச்சியைக் கொண்டு.

103. அழற்க - அழாதே. வெடித்து நக - வெடிப்பச் சிரித்து.

*சிவாசிவன், விதியே ஊழ்வினை எனல்*

'கூன்முகத்து அடும்விதிக் கொடுமை ஈது'எனத்
தான்முகத்து ஒருநகை தரும் சிவாசிவன்,
நூல்முகத்து உரைத்தவை நுதலித், தேற்றரும்
பால்முகத்து, ஒருமொழி பகர்வல் கேள்—என்றான். 104

ஏற்றரும் உணர்வினோய்! இயைந்த நூல் நலோர்
'போற்றரும் ஊழ்வினை' எனப்புகன்றபின்,
மாற்றரும் தலைவிதி மறுப்பவோ?என்றான்;
தேற்றரும் அயிர்ப்புற வளனும் செப்பினன். 105

*சூசை, ஊழ்வினை என்பது ஆதித் தாய்தந்தையரால் வந்த வினை எனல்*

ஊழ்வினை என்னினும், உரிமை ஓர்ந்துழி,
மாழ்வினை இயற்ற,நீ வகுத்த அக்கரத்து –
ஆழ்வினை என்பவோ? இறைவன் சாற்றிய
கீழ்வினை இலமறை விரும்பிக் கேட்டியால். 106

தீட்டிய விதியலால், செயப்படா; செயும்
கோட்டிய வினை,விதிக் கோட்டமாம்; அலால்,
வாட்டிய மனம்செயும் வடுவதோ? இவ்வாறு
ஈட்டிய அறம்மறம் இரண்டு இலாம்;அரோ. 107

இவ்விதி இலைஎன, இயம்பும் ஊழ்வினை
மெய்விதி, மறையினால் விளங்க, மாக்களை,
செவ்விதி இறைவன்முன் சிருட்டித் தாயகால்,
உய்விதி இழந்தவர்க்கு, உற்றது ஓதுவாம்: 108

---

104. கூன்முகத்து — கோணி நுதலி — ஆராய்ந்து. பால்முகத்து - தன்மையால்.

105. அயிர்ப்பு - சந்தேகம்.

106. மாழ்(கு)வினை - மயக்கம். நீ வகுத்த - நீ சொன்ன. அக்கரம் - தலையெழுத்து.

107. கோட்டிய - கோணிய. இலாம் - இல்லையாகும். இறைவன் தீட்டிய தலைவிதிப்படியே யாவும் நடக்குமெனில், அதற்கு மாறாக நாம் எதையும் செய்ய இயலாது. நாம் பாவ வினை செய்தால், அது அத்தலைவிதியின் குறையேயன்றி நம் குறையன்று. எனவே, மனம் பொருந்திச் செய்யாத புண்ணியமும், பாவமும் மனிதர்க்கு இல்லை என்றாகும்.

108. உய்விதி - பிழைக்கும் தன்மை. உற்றது - நிகழ்ந்ததை.

உருமணிக் குன்றனன், ஒருவன் ஆணலால்,
திருமணிக் கொடியனள் தெரிவை ஆக்கினேன்,
இருமணிப் படலையின் இருவர் சேர்த்து, அலர்
மருமணிச் சோலைகண் வைத்து,'வாழ்(க)'என்றான். 109

காதல்மிக்கு, இமிழ்எலாம் கலந்த வாழ்க்கை, உண்
டாதல்மிக்கு, ஆண்டகைக்கு இறைய தாகவே,
சாதல் மிக் குறும் எனத் தகைத்த ஓர்கனி,
நாதன் மிக்கு உரைத்து,உறு நனிவி லக்கினன். 110

புண்தகா விளிவுறுப் புதல்வ ரோடு,நீர்
மண்தகா நலத்தொடு வாழுவீர்; மறுத்து
உண்டகால், உவர்ப்பு, உளைப்பு, உலப்பு, மற்றநோய்,
விண்டகா அகன்று உறீஇ,விம்முவீர்—என்றான். 111

மொய்த்ததோர் வான்நலம் முரிந்து இழந்து,உளம்
தைத்ததோர் பழிவிடாச் சவம் "மனுக்குலம்,
வைத்ததோர் அளவில வாழுமோ?" எனப்
பைத்ததோர் அரவுருப் பட,வந்து-ஆயதே. 112

பேதையாய்ப் பிரிந்தபெண், பிணங்கண்டு, "இக்கனி,
கோதையாய்! உறுமை என்? குணம் இதே"என,
"வாதையாய் இறத்தலாய் வரம் இலேம்என்றான்—
தாதையாய்க் கடவுள்"என்று அரிவை சாற்றினள். 113

---

109. உருமணிக் குன்றனன்-ஆண்டவன் ஒருவன்-ஆதாம். தெரிவை-பெண்: ஏவாள். படலை - மாலை.

110. உண்டாதல் மிக்கு - மிக உண்டாகி. இறையதாக - வரியாக. தகைத்த - தடுத்த.

111. புண்தகா-நோயின்றி விளிவு உறு-சாவின்றி. மண்தகா நலம் - பூவுலகின் மிகப் பெரும் மேன்மை. உவர்ப்பு - வெறுப்பு. உளைப்பு - துயர். உலப்பு - சாவு. விண்ட - மலர்ந்த.

112 சவம் - பேய். பைத்தது ஓர் - படம் விரித்ததொரு.

113. பிணம் - பசாசு.

கழீஇயின மணிநலாய்! கலங்கல்;தேன் துளி
தழீஇயின இக்கனி அருந்தின் சாவிலாது,
எழீஇயின உணர்வுறீஇ இறைவர் மானுவீர்
குழீஇயின வரத்து"எனக் கூளி கூறிற்றே. 114

கண்வழி புக்(க)அவாக் கழுமி, அக்கனி,
பண்வழி மொழியினுள், பரிந்துஉண் டாள்;அது
தண்வழி இமிழலால், சாவிலாது, மற்று
ஒண்வழி ஆடவற்கு உய்த்து,'உண்மோ' என்றுள். 115

கனிமுகம் கண்டுழி வெருவி, காந்தைதன்
பனிமுகம் கண்டுழி பரிவுற்று ஏங்கினுன்;
துனிமுகம் கண்டபேய், துறக்கின், மாதுஇறீஇத்
தனிமுகம் காண்டி'என்று உளத்தில் சாற்றிற்றே. 116

மண்நலம் பொறித்ததோர் வதனம் வெஃகியே,
உள்நலம் கெட,ஒருங்கு உலகெ லாம்கெட,
பெண்நலம் கொடியதோர் பெருநஞ் சாகி,மேல்
விண்நலம் கெடும்கனி விழுங்கி னுன்-என்றுன். 117

விகரன் வினவும், சிவாசிவன் சிரிப்புரையும்

'பொன்னுர் மணிப்பூம் சாயலில்தேம்
பூங்கொம் பனையார் திருமுகத்தின்
முன்,ஆர் நிற்பார்' என்று, எவரும்
மொழிந்து, பனிக்கும் உளத்துஎஞ்ச,
"அன்னுர், அன்று அக் கனியருந்தி
அழிவார் என்ன அறிந்து, இறையோன்
இன்னு உகும்அப் பணிசெய்வது
என்னை" என்றுன் விகரன் என்பான். 118

---

114. கலங்கல்-அஞ்சாதே, சாவிலாது எழீஇயின-சாகாமல் உயர்ந்த. குழீஇயின - திரண்ட

115. கழுமி-மயங்கி. தண்வழி-குளிர்ந்து. ஒண்வழி-அழகு பொருந்திய. உய்த்து-கொண்டுபோய் உண்மோ-உண்க

116. பனிமுகம் - குளிர்ந்த முகம் துனி - மனக்கலக்கம். இறீஇ - இறந்து. தனிமுகம் - தனியே.

117. நலம் பொறித்த - அழகு பெற எழுதிய.

118. இன்னு உகும் - கேடு வரும். பணி - கட்டளை.

"பூண்தார் அரசன் வளர்த்த மதுப்
பொழிகாய் 'உண்பார்' என்றறிந்தும்,
'தீண்டாது' எனலும், தீண்டினரைத்
தெண்டித்திடலும், கொடிதெனவோ?
வேண்டாச் சொல்லாய்! சொன்மின்" என
விளம்பி நக்கான் சிவாசிவன்தான்;
தாண்டா உணர்வின் மறைவாயோன்,
தயவே தளிர்த்து மீண்டு உரைத்தான். 119

முற்பிறப்பும் ஊழ்வினையும் இது எனல்

மாறுவிடமுண்டு, அன்று அன்னார்
வான்பேறு இழந்தே, வரம் இழந்தே,
தேனூர் அலர்க்கா இழந்தே,தாம்
சிந்தைபனிப்ப, நாமும் அழ,
நாறு நஞ்சும், நல்குரவும்,
நகவும்நோயும், கொடுங்கூற்றும்,
காறூர் முள்ளும் கொல்விலங்கும்,
கடிதுஇவ் வுலகில் படர்ந்தனவே. 120

வாயே உறும் நஞ்சு, உறுப்பெல்லாம்
மருவி வருத்தும் வண்ணமெனத்
தாயே தாதை கொண்டவினை,
தனைய ராம் நாம் கொண்டு அழுங்க,
தீஏவிய தீ தொடு சனித்துத்
தெளியா உணர்வின் மனம் கலங்க,
நோயே பால்உண்டு, இடர்க்கரத்தில்
நுடங்க, வினையின் விளைவுற்றோம். 121

சொன்ன குரவர் காலமதைத்
துதிநூலோர்முற் பிறப்பு' என்றார்;
முன்னம் அவரால் எமக்குற்ற
முதிய வினை, ஊழ் வினையென்றார்;
இன்ன வினையல் லாது,தலை
யெழுத்தும் வேறுஊழ் வினையும் இலை;
அன்னபிறப்பல் லாது,இறந்தே
அயர்ந்து பிறப்பார் இலைஎன்றான். 122

---

119. தயவே தளிர்த்து - அருள் மிகுந்து.

120. மாறுவிடம் - நிகரற்ற நஞ்சு. நகவும் - இகழ்ச்சியும்.

121. தீ ஏவியதீது - தீச்செயலால் வந்த பாவம். நுடங்க - அடங்கி. நோயே பால் உண்டு - நோய்களைப் பாலாக உண்டு.

122. குரவர் காலம் - ஆதித்தாய் தந்தையின் காலத்தை.

சிவாசிவன் உளம் தெளிந்து உரைத்தவை

விரிந்துஆய் கதிர் செய்விடியலென
விளம்பும்—தெளிந்த சிவாசிவனே:
"பரிந்தாய் என்றோய் உரைவாளால்;
பசுமட் பகைவன் கைநாணின்
அரிந்தாய் உளத்தின் மருளெல்லாம்;
அமுதே உயிரே ஊட்டி, அருள்
'புரிந்தாய், புரந்தாய்; சுடர்த்தவத்துப்
புலமை புல்லாக் கலை நல்லோய்! 123

கனியே உண்டு வந்தவினை
கண்ணி, கற்றோர் ஓதியநூல்
நனியே உணரா, பொய்கலந்தே
நன்னீர் கடலுட் கலந்ததுபோல்
துனியே தளிர்ப்பத் தலைவிதியும்
தொலையாப் பிறப்பும் புக்கனவோ?
இனியே, வந்த வினைபரியும்
இயல்பு ஒன்றுஇலையோ, காண்;என்றான். 124

சூசையின் மறுமொழி

விரைசெய் கொடியோன், விழாஅணியின்
விரும்பி நோக்கி, "மீண்டுஉய்யப்
புரைசெய் வினை,எம் மால்ஆற்று;
பொதிர்அன்பு ஆற்றுஅருட்கடவுள்,
மரைசெய் உடல்கொண்டு அவதரித்து,எம்
வடுத்தீர்த்து, உயர்வீட்டு எமை உய்பக்
கரைசெய் கடல்மிக்கு இடர்கொண்டு,
காப்பான் என்னும் மறை" என்றான். 125

---

123. ஆய்கதிர்-அழகிய கதிர்களையுடைய சூரியன். பரிந்தாய்-அறுத்தாய். பசுமண்பகைவன் : குயவன். புலமை புல்லா – புலமை அடையாத.

124. கண்ணி – கருதி. துனியே தளிர்ப்ப – துன்பம் வளரும்படி. வினை பரியும் – பாவந்தீரும்.

125. உய்ய – பிழைக்க. எம்மால் ஆற்று – நம்மால் இயலாது. பொதிர் அன்பு ஆற்று – மிகுந்த அன்பிற் கடந்த. மரை செய் – தாமரையொத்த.

"எந்நாட்டு எந்நாள் எக்குலத்தே
இறையோன் பிறப்பான் என—அன்னான்;
அந்நாட்டு ஒளிப்பத் திருவுளமென்று
அறிந்த சூசை, மறைநூலோர்
முன்னாட் சொன்ன நிலை நோக்கின்,
முகைத்த என்நாட்டு என்குலத்தே
இந்நாள் கடவுள் மகனானன்
என்பது, உரிய இயல்பென்றான். 126

பருதி முன்னி இரவுஅஃக,
பருவ மின்றி வனம்பூப்ப,
இருதி நாக்காய் ஓர்நவமீன்
இலங்க, இறையோன் அடிவீழ்ச்சி
கருதி அரசர் மூவர் உற,
காட்சி அமுதர் கண்டு உவப்ப,
சுருதி நாதன் பிறந்தது எனத்
துணிவில் தெளிந்தார் சிலர்—என்றான். 127

கானார் கொடிமேற் பூவனைய
கரத்திற் பொலிந்த திருமகனும்,
மாறா உறுதி மனத்து உரைப்ப,
மருள்தீர்ந்து அன்னான் தெளிந்துவப்பத்
"தேனார் இந்நாடு இறைஞ்சிய பொய்த்
தேவர் ஒளித்த திறம்கண்டேன்;
ஈனார் எழ,வான் வேந்து உதித்தான்"
என்ன, உளத்தில் தேறுகின்றான். 128

**சிவாசிவன் மனத்திரும்புதல்**

இற்றுஎலாம் இயம்பினான்—இக்குஉலாம் பதாகையான்;
மற்றுஎலாம் மனத்துளாய், வான நாதன் ஓதலால்,
உற்றுஎலாம் சிவாசிவன் ஓங்கியோங்கும் ஞானம்உள்
பெற்று,எலாம் வெறுத்தனன்—பீலிபெற்ற பாணியான். 129

---

126. அந்நாட்டு - அந்த எசித்து நாட்டில். முகைத்த - மலர்ந்த.

127. பருதி முன்னி - சூரியன் வருகையைக் கருதி. அஃக - குறைய. இருதி நாக்காய் - முனிவன் நாக்குப்போல. இருடி என்பது இருதி என வந்தது. அமுதர் - இடையர்.

128. மாறா - திகராத. ஈனார் எழ - மனிதர் வாழ. அன்னான் - சிவாசிவன்.

129. இக்கு உலாம் பதாகையான் - தேன் பொருந்திய மலர்க் கொடியோன். பாணியான் - கையினன்.

கரம்அணிந்த சூலவேல், காதணிந்த குண்டலம்,
உரம்அணிந்த அக்குஅணி, உள்ளணிந்த மாசொடும்,
சிரம்அணிந்த கொக்கிறை, தீதணிந்த கோலமாய்ப்
புரம்அணிந்த மற்றெலாம் போட்டுஉதைத்து இரட்டினன். 130

உற்றகோலம் வீணடா, ஒண்தவங்கள் வீணடா,
கற்றநூலும் வீணடா, கையுதாரம் வீணடா,
பெற்றபேறும் வீணடா, பேரறங்கள் வீணடா,
மற்றயாவும் வீணடா, மண்ணைப் போற்ற லால்—அடா. 131

சிவாசிவன் இறைவனை வாழ்த்துதல்

ஆதியீறுஇ ரண்டிலோய், ஆசிலோய் அமைந்த முப்
போதிலோய், உறுப்பிலோய், பொற்பெலாம் அணிந்துளோய்
கோதிலோய், எதிர்ப்பிலோய், கோவணங்கும் ஒன்றுளோய்,
நீதியாதி நீரெலாம் நீர்த்தணித்த நாதனே! 132

இங்கும் அங்கும் எங்கும்ஒன்று என்றுநின்றுஒ ருங்குளோய்,
தங்குகின்ற என்குறை தாங்கிநீங்கி, வீடிட,
அங்கம் ஒன்றி உற்றியே, அங்கு ருது, நான்,இவண்
பொங்குகின்ற இன்பொடு,உன் பூம்ப தங்கள் போற்றினேன். 133

தீஅளித்த காமுறீஇத் தீதுஅ மிழ்ந்தி மூழ்கி,யான்
பேய்அளித்த மாலிருள் பெற்று,அருச் செருக்குறீஇத்
தாய்அளித்த அன்பினும் சாற்றரும் தயாபரா!
நீஅளித்த கைக்கொடு நீசரைக் கு ரங்கினேன். 134

கோவில் வீற்றி ருந்தநீ, கோதுகொள் எனைக்கொள
மேவி வீற்றிருந்து, யான் வீட்டில்வாழ மைந்தனுய்ப்
பூவில் வீற்றிருந்திரா, பொங்குஅ ரந்தை பூண்டியோ?
நாவில் வீற்றிருந்தநூல் நாடி வாழ்த்த அன்பிதோ? 135

---

130. உரம் - மார்பு. அக்கு - உருத்திராக்கம். இறை - இறகு. புரம் - உடல் இரட்டினன் - முழங்கினன்.

131. மண்ணை - பேயை - மண்ணுலகக் கொள்கையை.

132. கோ - வான். ஒன்று - ஒப்பற்ற தன்மை. நீர் - தன்மை. நீர்த்து - இயல்பாய்.

133. வீடு இட - வான் வீட்டிற் செலுத்த. அங்கம் - உடல். அங்கு - நீ பிறந்த இடத்து.

134. காம் உறீஇ - காமமுற்று. குரங்கினேன் - வணங்கினேன்.

135. இரா - இராமல். அரந்தை - துன்பம்.

ஆசெனும்பெருங்கடல் ஆழ்ந்து நீந்தி ஏறினேன்;
தேசெனும்பெருங்கதிர் செய்துஎறித்த சோதியோய்!
மாசெனும்பெருங்கறை மாறினாய்எனை,நினைத்
தாசெனும்பெரும்பெயர் தாங்கி,வாழ்த்துவேன் என்றான். 136

சூசை இறைவனுக்கு நன்றி கூறிச் சிவாசிவனைத் தழுவுதல்

தான்உயிர்த்த தவத்தினால்
கான்உயிர்த்த கொடிக்கையான்,
ஊன்உயிர்த்த உருப்பிரான்—
மான்உயிர்த்(த)அருள், வாழ்த்தினான். 137

தூக்கினான், விழி தூவுநீர்
நீக்கினான், நிறை மார்புற
வீக்கினான், விளை ஆர்வமாய்
நோக்கினான்—மறை நூலினான். 138

உருஒளித்து உறை நாயகன்,
மருஒளித்த மலர்க்கணால்,
திருஒளித்த தெருட்கொடு
பொருவொழித்(த) அருள் போக்கினான். 139

சூழ நின்றவரும் தெளிவடைந்தார்

திறங் கொளீஇத் தெருள் தாசன்,உள்
பிறங்கொள் ஈடுறு பெற்றியால்,
புறங்கொளீஇப் பொதிர் யாவரும்
அறங் கொளீஇத்தெளி வாயினார். 140

---

136. எறித்த - (உள்ளத்தில்) வீசிய. மாறினாய் - துடைத்தாய். தாசு - தாசன்.

137. உயிர்த்த - செய்த, வீசிய, எடுத்த. கான் - வாசனை. ஊன் உயிர்த்த உருப்பிரான் - உடலெடுத்த திருமகன். மான் உயிர்த்த அருள் - பெருமை மிக்க தயையை.

138. விளை ஆர்வமாய் - மிக்க அன்போடு.

139. திரு ஒளித்த தெருள் – திரு ஒளியுடைய ஞானத் தெளிவால். பொருவு ஒழித்த – ஒப்பற்ற. போக்கினான் - அவன் மனத்துட் போக்கினான்.

140. பிறங்கு ஒள் ஈடு - விளங்கிய பெருமை. புறங்கொளீஇ - புறத்துச் சுற்றி நின்ற.

கலை வரும் கன மின்னென
விலை வரும் பொருள் மேவிலார்,
புலை வரும் புகழ் வேதநூல்
அலை வரும் துதி பாடினர். 141

நஞ்சி னோடுறு நல்லமிர்து
எஞ்சி, நோயிட மாய்ந்தெனத்
துஞ்சி னார்துணி வோடு,பொய்
விஞ்சி, வேத நஞ்சு ஆயதே. 142

மெய்வ கைப் பொருள் வீக்கிய
பொய்வ கைப் பொருள் பேர்த்தில,
மைவ கைப் பொருள் மண்டுளம்,
உய்வ கைப் பொருள் ஒன்றிலா. 143

இருளடர்ந்(த)இ ராஅறத்
தெருளடர்ந்(த)ஒளி சென்றென,
அருளடர்ந்(த)இவன் ஓதியால்,
மருளடர்ந்த பொய் மாய்ந்ததே. 144

மனந்திரும்பிய சிவாசிவனால் மற்றையோரும் சூசையைப் போற்றுதல்

பேர்நல மணிக்குன்று உச்சி,
பெருவிளக்கு இட்டதேபோல்,
சீர் நலம் பொலிமுதூரில்,
சிவாசிவன் விளங்கித் தோன்ற,
கூர்நலம் தெளித்த காட்சி
கொளீஇச்சிலர் குளிர்ப்பத் தேறி
ஆர்நலம் புதைத்த மெய்ந்நூல்
அருச்சலை கொண்ட தன்றே. 145

---

141. கலைவரும் – இடியொலியுடன் வரும். கனம் - மேகம்.

142. எஞ்சி – கெட்டு. நோய் இட - நோய் செய்து. துஞ்சினார் துணிவொடு – தூங்கியவர் கண்ட கனவை மெய்யென்று துணிவதுபோல.

143. மெய் வகைப் பொருள் - வேதப் பொருளோடு. வீக்கிய - சேர்த்த. பேர்த்தில – பிரிக்க முடியாமல். மைவகைப் பொருள் – மயக்கம் உய்வகைப் பொருள் – உயிர் பிழைக்கும் வழி. ஒன்று இலா – ஒன்று இல்லை.

144. தெருள் அடர்ந்த ஒளி – தெளிந்த (பருதி) ஒளி.

145. குளிர்ப்ப - குளிர. நலம் புதைத்த – நன்மை நிறைந்த.

குவி மதத்து, அயிர்ப்பிற் கற்ருேர்,
குழாங் குழாம், நகரத்து எங்கும்
கவிமதத்து எழுந்த அந்நூல்
கடக்கிலாது அலைய, ஓர்நாள்
சவிமதத்து அலர்ந்த சோலைத்
தடத்துஉறும் வளனைக் கண்டு,
செவிமதத் தீஞ்சொல் வெஃகி,
'செல்க ஈங்கு அடிகள்' என்ருர். 146

நாம் செய்த குறையோ, பன்னுள்
நாம் இவண் தொழுத தேவர்
தாம் செய்த குறையோ, இக்கால்
தளர் உணர்வு எஞ்ச, 'ஐ' என்று
ஆம் செய்த மலர்கொய் இந்நாடு
அகன்று ஒருங்கு ஒளித்த தென்னே?
தேம் செய்த மதுச்சொல் நல்லோய்!
செப்புதி, என்ருர்; மாதோ. 147

உய்வகை யின்றி, மற்ருே
ருழிஅடுத்து, உய்வார் என்று,
பொய்வகை முறுவல், காட்டிப்,
புகன்றனன் சூசை; 'ஐயம்,
மொய்வகை அருளிக் கேண்மோ,
முதிர்தவத்து இறைவ!' என்று,
மெய்வகை உணர்வு நாடி,
விறுதந்தன் சொன்னுன்—மீண்டே. 148

---

146. குவி மதத்து-(அங்குப்) பரவிய வேதக் கொள்கையால். கவி மதத்து எழுந்த - கவிஞர் கருத்தைக் கடந்த. சவி மதத்து - அழகு மிகுந்து. மதத்தல் - கொழுத்தல். செவி மதத் தீஞ்சொல் - காது மகிழ்தற்குரிய இனிய சொல். வெஃகி - விரும்பி.

147. ஐ என்று - சீக்கிரமாய். ஆம் செய்த மலர் - நீர் மலர். தளர் உணர்வு எஞ்ச - தளர்ந்து உணர்வு மெலியும்படி.

148. ஓர் உழி-ஓரிடத்தில். ஐயம் பொய்வகை-சந்தேகம் தோன்றும்படி.

விஜுதத்தன் ஐயவிஜு

எல்லையிற்று உயர்ந்(த) ஓர் நாதன்
இவண்வர, மற்றத் தேவர்
ஒல்லையில் தளர்ந்த வண்ணத்து
ஒருங்கு ஒளித்து அகலும் என்னத்
தொல்லையிற் பொறித்த எம்நூல்
சொன்னவாறு, இந்நாள் ஆகி,
வல்லையிற் பொதிர்ந்த ஐயம்
வளர்வினை யாயிற்று"—என்றான். 149

சூசையின் கேள்வியும் விஜுதத்தன் பதிலும்

"விஞ்சிய வயத்து ஒன்றாகி
வென்றன கடவுள் தானோ,
அஞ்சிய பலரோ வேண்டும்,
அறைதியே!"என்றான் சூசை;
"எஞ்சிய எமக்கே வேண்டும்
இருவகை" என்ன—முன்பான்;
துஞ்சிய கனவின் சூழ்ச்சி
சூசைகேட்டு, உரைத்தான் மீண்டே. 150

சூசை, பலதேவர்களை வணங்கலாகாது எனல்

குலநலம் எண்ணு, ஆய்ந்த
குணநலம் உணரா; காவல்
இலநலம் விற்கும் மாதர்
இழிப்படும் நினைவு ஈதன்றோ!
வலநலம் புணர் மெய்ந்நாதன்
மரபுறாது, ஒருவனன்றிப்
பலநலம் பிரிந்த தேவர்
பணிதல் பேதைமையாம்—என்றான். 151

---

149. எல்லைஇற்று - அளவிறந்து. வல்லையில் பொதிர்ந்த - விரைந்து மிகுந்த. வளர்வினையாயிற்று - வளர்ந்தது.

150. முன்பான் - மேற் கூறியவன் - விஜுதத்தன். கனவின் சூழ்ச்சி - கனவிற் கண்ட சூழ்ச்சி போன்ற மொழி.

151. வலம் - வல்லமை. மரபு - இயல்பு.

குருசிலர்க்கு அமைச்சர் வீரர்
கொள்கையின், முதல்வன் சூழ்ந்து
வருசிலர், தேவ ரென்னில்
வழுவதோ? என்ன, அன்னான்,
குருசிலர் நாமந் தானும்,
கோவுரிப் பணிவும் சூழ்ந்து,
வருசிலர்க்கு இட்ட காலை,
வழுவன்றோ? என்றான் —சூசை. 152

இரவலர் மாட்சி யொப்ப
ஈடுஅறிவின்மை காட்டும்—
புரவலர் சூழ்ந்த வைவேல்
பொருநரும், அமைச்சர் தாமும்;
உரவல நாதன், தன்னால்
உணரவும் செயவும் வல்லாய்,
பரவலன் நூலும் வேலும்,
பரிசிலாது இழிவாம் என்றான். 153

விஞதத்தனை அடக்கும் வசிட்டனின் தெளிவும் ஆர்வமும்

"அரும் பொருள் இருளில் தேடி
அயர்வதென்" தேவதன்மை
வரும் பொருள் அறியா தன்றோ,
மருண்டசொல் வளர்த்தி," வேதம்
தரும் பொருள் அனைத்தும் வாய்ந்த
தவவிளக்கு எறிப்பக் கண்டோய்!
அரும் பொருள் இறைமை சொல்லாய்—
என்றனன் வசிட்டன் என்பான். 154

---

152. குருசிலர் - அரசர். முதல்வன் - கடவுள். கோ உரிப்பணிவு - அரசர்க்குரிய வணக்கம். ஈடு - பெருமை.

153. உரவல நாதன் - மிக்க வல்லமையுள்ள கடவுள். வல்லாய் - வல்லவனுதலால். பரவலன் - மற்றொருவன். நூலும் வேலும் - நூலும் வேலுமாகிய (உதவியுண்டெனில்) பரிசு இலாது - பெருமையின்றி.

154. அரும் பொருள் இறைமை-அரும் பொருளாகிய தேவ தத்துவத்தை.

சூசை கடவுளின் இயல்புகளை விளக்குதல்

மற்றவர், 'இனிது ஈது அடிகளே' என்ன,
மதுமலர் வாயினன் அருளி,
கற்றவர் பருகப் பகர்குவ புகழ்வ
காமுறீஇக் கேட்டனர் களிப்ப,
முற்றவர் தெளிய, முளரி வாய் மதுவின்
முகைப்பன, குளிர்ப்பன, சலமற்று
உற்றவர் வான்மேல் உய்ப்பன, தெய்வ
ஓதிகள் நுவலிய வலித்தான். 155

ஈறில நன்மை நிறைவும், ஓர் குறைமுற்று(ம்)
இன்மையும், தொழத்தகும் தெய்வம்
மாறில இயல்பே; வேர் இதாய்க் கிளைத்து
வரும்பலசினையென, நூலோர்
ஆறு இலக்கணங்கள் உரைத்து, "அவையுள்ளோன்
ஆண்டகை, இலன்—அலன்" என்றார்,
தாறில சுடரை மைவரிந் தென்ன,
சாற்றுதும் புன்சொலால் —அவையே. 156

இறைமையின் ஆறு இலக்கணங்களும் விளக்கமும்

தன்வயத் தாதல், முதலில னாதல்,
தகும்பொறி உருவில னாதல்,
மன்வயத் தெல்லா நலமுள னாதல்,
வயின் தொறும் வியாபக னாதல்,
பின்வயத் தின்றி ஒருங்குடன் அனைத்தும்
பிறப்பித்த காரண னாதல்,
பொன்வயத்து ஒளிர்வான் முதல் எலா உலகும்
போற்றும் மெய் இறைமையின் நிலையே. 157

---

155. முகைப்பன - மலர்ந்தனவும். சலம் - பிடிவாதம். நுவலிய வலித்தான் - சொல்லத் துணிந்தான்.

156. மாறில இயல்பு - மாறாத குணம். வேரிதாய் - வேராகக் கொண்டு. தாறு - அளவு. மைவரிந்தென்ன - மையால் எழுதினாற் போல.

157. பொன் வயத்து ஒளிர் - பொன்னென ஒளிர்.

மிக்கதும் தன்னோடு ஒப்பதும் இல்லா
　　மேன்மையே இறைமையின் இயல்பாய்,
ஒக்கது படைத்த காரண மின்றி
　　ஒருங்குதாறுதலும் நிலையே;
தக்கதும் தன்னாலன்றி மற்றொருவன்
　　நடக்கையால் வரின்வழு வென்னத்
தொக்கது நீக்கி,தன்வயத் தாதல்
　　சொல்லிய ஆறினுள் முதற்றே. 158

அன்னவாய், தன்னை ஆக்கினோன் இல்லாது,
　　ஆயின காலமும் இல்லாது;
உன்னவா யாகி வந்த நாள் உளதேல்,
　　தோற்றுவித்து இயற்றினோன் உளதாம்;
என்ன,வாய்ந்து இணையாச் சிறப்புமெய் இறையோன்,
　　'இன்றுளன், அன்றிலன்' என்று
மன்னவாய் என்றும் தானுள னாகி,
　　மாய்ந்தநாள் அனைத்தையும் கடந்தோன். 159

எல்லையே இடும்ஓர் காரணம் இறைவற்கு
　　இல்லதால், எல்லையும் இல்லை;
குல்லையே நின்று,ஒவ் வோர் உறுப்பு எல்லை
　　கொண்டன இல்லதேல், வடிவும்
இல்லையே; அவ்வாறு, 'அளவுளதுஅன்றி,
　　இடரிடும் உருவுடல்' என்ன,
வல்லையே மிக்(க)ஓர் அளவிலாற்கு, இல்லை—
　　வழங்கும் ஐம்பொறிக்கு உரி வடிவே. 160

---

158. ஒக்க அது – அமைந்த அத் தேவ தத்துவம். நிலையே தக்கதும் – நிலை பெறுவதும்.

159. இணையா – நிகரிலாத. மன்னவாய் – நிலைகொண்டு மாய்ந்த நாள் – இறந்த காலம்.

160. குல்லையே நின்று – தொகுப்பாய் நின்று. குல் – தொகுப்பு. இடர் இடும் – துன்பம் விளைவிக்கும். வல்லையே மிக்க - வல்லமை மிகுந்த.

சீர் வளர் ஞானம் நீதி அன்பு ஊக்கம்
திறன்தயை ஆனந்தம் மற்றை
ஏர்வளர் குன்று நன்னர்உண் டாகி,
எலாம் அனைத் தாகி, ஒன்றாகி,
நேர்வளர் பொலிவின் மிகைகுறை பன்மை
நீப்பன நிறைப்பன வாகி,
பேர்வளர் இறைவற்கு உருவிதே, உரிய
பிணைவில இயல்பிதே யன்றோ. 161

எப்பொரு ளனைத்தும், எவ்வுல கனைத்தும்
இடைவிடா நிறைப்பட நின்றே,
அப்பொருள் தொறும், தான் குறுகிலா முழுநின்று,
அப்பொருள் அழிவில், தான் அழியா,
மெய்ப்பொருள் ஞானத்து அனைத்தையும் உணர்ந்து
வினைதிறன் நீதியால் நடவி,
மைப்பொருள் அடராச் சோதியாய், நிலையாய்
மன்னனாய் அனைத்துமாய் நின்றோன். 162

இருவகை வழங்கும் காரணமின்றி,
இயைவினையின்றி, நாளின்றி,
வருவகை காட்டும் மாத்திரை யின்றி,
வரும்பொருள் என்னளவின்றி,
திருவகை பொறித்த வீற்றுவீற் றனைத்தும்
செய்தளித்து அழிப்பவல் லொருவன்,
அருவகை வயத்து, ஓர் காரண முதலாய்,
ஆதியாய் அந்தமாய் நின்றோன். 163

இறைமையில் ஒன்று குறைந்தவன் கடவுள் ஆகான்

சீரிய சவிய மிக்கன அமான
சிறப்பன தூயன யாவும்
நீரிய முறையில் உளன்அவன் தேவன்;
நீங்கிலொன்று அவனலன்' ஆகி,
காரிய நலத்துஅவ் இலக்கணம் ஆறும்
கடவுள்வாய் உளவென்பார், அவற்றொன்று
ஆரிய வனப்பில் தன்னிடத் தில்லான்,
ஆண்டகை அவனலன் அன்றோ. 164

161. பன்மை - பலவகை நீப்பன - இல்லாமல்.

162. நடவி - நடத்தி. மைப்பொருள் அடரா - அஞ்ஞானமற்ற.

163. இருவகை-முதல் துணை எனும் இருவகையாக. மாத்திரை-அளவு.

164. சவிய - அழகான. அமான - அளவில்லாத. அரியவனப்பில் - சிறிய அழகில்.

சீரெலாம் ஒருவற்கு இயல்பென ஆகிச்
    சேர்த்திய பலர்க்கு, எவன் உண்டாம்?
ஊரெலாம் ஒருவன் ஆள் அரசாய், மற்று
    ஒருவர் கேட்டு ஒழுகுதல் அரசோ ?
ஏரெலாம் உளபல் தேவர்வே ருக,
    இவற்குஉள தொன்று, அவற்கு இலதாய்,
நீரெலாம் இல ஒவ்வொருவற்கு; ஒன்றின்றி,
    நீர்த்த ஓர் இறையும் இல் என்றுன். 165

முன்னோரின் குருட்டுக் கொள்கைக்கு அனைவரும் வருந்துதல்

ஒள்கை நீட்டி, அல் ஒருவி, வெஞ் சுடரெழுந்து ஒளிர,
அள்கை நீட்டிய அம்புயம் அக்கதிர் அருந்தும்
கொள்கை, நீட்டிய கொழுங்கதிர் ஓதியைச் செவியாம்
விள்கை நீட்டினர், வேட்டுளத்து அருந்துபு, தெளிந்தார். 166

விண்செய் வெஞ்சுடர் விலக, எண் ணிலசுடர்த் தீபம்
மண் செய் மாக்களே வளர்த்தென, காப்பியக் கவிகள்
பண் செய் பாஅகப் படா(த)உயர் இறைமையை உணரா,
எண் செய் ஈறிலா இறைவரை விகற்பித்தார் என்றார். 167

நதி தள்ளிக்கரை நாடிலாது, அலையினோடு உறல்போல்
மதிதள் ளிப் பலர் வாரியோடு இழிவுற, ஒழுகி,
கதி தள்ளிக் கொடும் கடவுளர் இறைஞ்சினம், இன்னே,
பொதிதள் ளிக், குணப் பொருவிலான் உணர்ந்தனம்—என்றார். 168

---

165. நன்மையெல்லாம் இறைவனின் இயல்பாம். எனவே, அவனோடு பல தேவர்களைச் சேர்ப்பதாற் பயன் என்ன? அரசன் ஏவலைக் கேட்டு நடப்பவர் அரசராவரோ? தேவர்களுள்ளும் ஒருவர்க்கொருவர் ஒரு நன்மையிலேனும் குறையுடையராயிருப்பராதலால், அவருள் ஒருவரும் இறைவனுகார். ஆகையால் பல தேவருண்டென்றால், ஒரு மெய்யான தேவனும் இல்லையென்றாகும்.

166. அல் ஒருவி - இருளைத் துடைத்து. அள் - நெருக்கம். ஓதியை - ஞானத்தை.

167. பா அகப்படாத - பாவினுள் அடங்காத. விகற்பித்தார் - வேறுபட விரித்துரைத்தார்.

168. நதி - நதியின் நீரை. வாரி - வெள்ளம். கொடும் - கெடுக்கும். இன்னே - இன்று. பொதி தள்ளி - பிணிப்புக்களைத் தள்ளி.

இற்றைநாளளவு இராவிருள் இருது,உலகு உதித்த
அற்றை நாளுள ஆரணம், எங் கணும் பொழிந்த
கற்றை, நாமும், நம் முந்தையர் காண்கிலாது என்னே?
மற்றை நாத(ன்)நீ ரிதோ என வசிட்ட(ன்) நொந்து உரைத்தான். 169

சூசை குருட்டுக் கொள்கை பரவியதற்குக் காரணம் கூறல்

"நனைவரும்பல நளினம்விள் ளா, கதிர்க் குறையோ?
'புனைவருங்குணம் முழுதுளான், பொருவிலான், பொலிந்த
நினைவரும்திற நிமலன்'என்று அறைதிரே; அறைந்தும்,
சினைவரும் பலர் சேர்த்தினீர்''—என், வளன் சொன்னன். 170

"வினைசெய் பாவ(ம்),உள் விளைத்த நள்ளிருட் புகை மொய்ப்ப,
புனைசெய் ஆசையில் பொறிதளர்ந்து அறிவெலாம் மயங்க,
சுனைசெய் பாசியில், தொகுநிலை யிலமனம் தளம்ப,
முனைசெய் பேயுறீஇ, முழுவதும் மருட் டினது" என்றான். 171

வெறியிற் சூழ்ந்தபல் விழைவதே,கொடிதென, தாழ்ந்த
தறியிற் சூழ்ந்துழி தடம்உணர் ஒடுங்கென, நசைதாழ்
பொறியிற் சூழ்ந்துஉளம் பொங்கிய துயர் உறீஇ, கற்ற
நெறியிற் சூழ்ந்த நன் னிலை, உறும் பால்அரிது என்றான். 172

சுனைய நீகமே துளிமது உணுதென, முன்னோர்
நனைய தாமரை நவிழ்ந்தவாய் நல்கிய தீந்தேன்
அனைய, ஓதிய அரும்பொருள் கைக்கொளா, பொய்யே
புனைய வாயின, புரைவளர் வெளிறு இதே—என்றான். 173

---

169. இருள் இருது - இருள் நீங்கி விடியாதது போல. நீரிதோ - முறை இதுவோ.

170. நனைவரும் - அரும்பாய் நின்ற. நளினம் - தாமரை. விள்ளா - மலராமை. சினைவரும் - அரும்புகளைப் போல. கடவுளின் இயல்பைக் கூறினீர்கள்; ஆனால், பல தேவர்களை வணங்கினீர்கள் என்றான் வளன்.

171. பாவப்புகை மண்டி, ஆசையால் பொறிகள் தளர்ந்து, நீர்போல மனம் தளம்பு நிலையில், பேய், பகை செய்ய வந்து, முழுவதும் மயக்குவித்தது.

172. வெறியின் - பசாசுகளினும். விழைவு - ஆசை. ஒடுங்கு - ஒடுங்கி - ஆமை. உறும் பால் - அடையும் முறை. தறியிற் கட்டப்பட்ட ஆமை, அதனைச் சுற்றி வந்தாலும் பொய்கையை நினைப்பது போல, கற்றவர் நலலன வற்றை நினைத்தாலும் ஆசையின் காரணமாக அவற்றில் நிலை கொள்வது அரிது.

173. நீகம் - தவளை. நவிழ்ந்த - மலர்ந்த. புரை - பாவம் வெளிறு - அறியாமை.

நாதன் மிக்குஉரி நலமு(ம்)நன் மறையும்,ஈங்கு உணர்வது—
ஆதல் மிக்குற, அவா இருள் உளம்புகா வேண்டும்;
காதல் மிக்குழி, கற்றவும் கைகொடா என்ன,
ஓதல் மிக்குழி, உணர்வு மிக்கு அனைவரும் தெளிந்தார். 174

*மாலைவேளை—அனைவரும் பிரிதல்*

சோலை வாய், பறை துவைத்தபுள் களிப்பெழீஇச்சுடர்போய்
மாலை வாய்இருள் விம்மி,வான் மீன்பரப்பு அரும்பும்
வேலை வாய், பினர் வெஃகுரை விளைகெனப் பிரிந்து,
காலை வாய் ஒளிக் கருத்து எழீஇ, அனைவரும் போனார். 175

---

174. மிக்கு உணர்வதாதல் உற - நன்றாக உணரும்படி. ஓதல் மிக்கு உழி - சொன்ன உணர்ச்சி மிகுதியால்.

175. பறை துவைத்த - பறையடித்தாற்போல. வேலைவாய் - வேளையில். வெஃகு உரை - யாம் விரும்பிய உரைகளை. விளைக - விளையச் செய்வாயாக. காலைவாய் ஒளிக் கருத்து - விடியற்கால ஒளிபோன்ற உணர்ச்சி.

# 4. வாமன் ஆட்சிப் படலம்

மக்களின் மாசகற்றிய சூதை

தண்தவத் தனைய பைம்பூந் தருத்திரள் நிழற்றிக் கவ்வும்
மண்டபத்து, ஒருநாள்வைகி, மதுநலம் பொழிவாய் கஞ்சம்
விண்டு,அவத்து எழியும் மாந்தர் விடுறச் செப்பம் காட்டி,
ஒண்தவத்து இறைவன் சூதை, உரைவிரித்து இமிழிற் சொல்வான். 1

போது,வாய் மலர்ந்த போது, பொதிர்த்து அளி மிடைதல் போல,
ஓதுவாய் மலர்ந்த நன்னூல் ஒழுகிய அமிர்தத் தீந்தேன்,
காதுவாய் அருந்தல் வெஃகிக் கணங்கொடு எவரும் கேட்ப,
கோதுவாய் கிழிந்த புண்மேல் குளுமருந்து உறழச் சொல்வான்: 2

வாமன் மனநிலை

படம்புனைந்து எழுதப்பட்ட பங்கயம் எழுவாய்ப் பைம்பூந்
தடம்புனைந்து உறைந்து, எஞ்ஞான்றும் சைவலம் சிவைகொள்ளாப்போல்,
வடம்புனைந்து ஒளிறு மார்பின் வடுப்புனைந்து இருண்ட நெஞ்சோடு
உடம்புனைந்து அனைத்தும் கேட்டு,ஒத்து ஒழுகிலான் வாமன்என்பான். 3

சிலைவளர் தடக்கை வீரன், செருமுகத்து அசனி அன்னான்,
கலைவளர் உணர்விற் காமம் காய்முகத்து அனுங்க மாழ்கி,
உலைவளர் அழல்முன் பைம்பூ உலந்தென, மனதிற் சோர,
விலைவளர் மகளிர் போரில் வீரமற்று எஞ்சும் நெஞ்சான். 4

---

1. தண் தவத்து அனைய - (உயிரைக்) குளிரச் செய்யும் தற்றவம்போல. கஞ்சம் வாய் விண்டு-தாமரை மலர் போன்ற தன் வாயைத் திறந்து. அவத்து ஒழியும் - வீணாய்க் கெடும்.

2. காதுவாய் - காதினால். கோதுவாய் கிழிந்த - பாவத்தால் (உயிர்) பட்ட. உறழ - போல.

3 பங்கயம் எழுவாய் - தாமரை முதலான. சைவலம் - பாசி. சிவை - வேர். வடு புனைந்து - பாவமுற்று உடன் + புனைந்து - உடம்புனைந்து என வந்தது புனைந்து - சிறப்பாக, விரும்பி

4 அனுங்க மாழ்கி - மயங்கி வாடி எஞ்சும் - மெலியும்.

விதுமுகத்து எறித்த கற்றை, மிடைமிருள் மூழ்கிற் றன்ன
பொதுமுகத்து உரைத்த யாவும் பொதுவறத் தனக்கென்றுஉள்ளி,
மதுமுகத்து உணர்த்தும் நூலால் மனத்து,அறம் விரும்பி, பின்றை
முதுமுகத்து உருத்த காமம், முதிர்வினை ஆற்ரு, நொந்தான். 5

பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியம் ஒருபால், ஓர்பால்
செறிகுலாய்க் கிடந்த காமம் செருப்பட, நடுவிற்பட்ட
வெறிகுலாய்க் கிடந்த மாலை விகன்றென நெஞ்சம் சோர,
நெறிகுலாய்க் கிடந்த சீல நிலைவிழைந்து, உரைக்கலுற்ருன்: 6

*கேட்டவண்ணம் செய்தலரிது என வாமன் கூறல்*

சுருதிநூல் உயிர்பெற் றன்ன சுடர்த்தவத்து உணர்வின் மிக்கோய்
கருதிநூல் உரைப்பக் கேட்டுக் களிப்புறின், சிலம்ப வீரத்
திருதிநூல் முடவன் கேட்ட தென்ன,நான் களிந்த தல்லால்,
பொருதுஇ(ந்)நூல் ஒழுக்கத்து, அஞ்சாப் போதலே ஆற்ருது என்ருன். 7

மனத்துணிவும் பழக்கமும் வேண்டும் என்பதை சூசை விளக்குதல்

துறைகெழும் அருநூற்கேள்விச் சுருதியின் வடிவோன் கேட்டு,
நறைகெழும் அலங்கல் மார்பன் நயப்புற, முகமன் நோக்கி,
நிறைகெழும் அரிய காட்சி நிலைமையால், உளமும் கண்டு,
முறைகெழு வழுவா நீதி முகைத்த நூல் மொழிந்தான் மன்னே. 8

"கற்றநூல் எளிய தோன்றிக் கற்குமுன் அரியதன்ரே?
மற்றநூல் போல, வாய்ந்த மறைநெறி யொழுகல்; வில்லாற்
பெற்றநூல், வீர வல்லோய்! பிறந்தபோது அறிந்தாய் கொல்லோ?
உற்றநூல் உறுமுன், நீ அஃது உணர்ந்து உனக்கு எளிது என்ருயோ? 9

---

5. விதுமுகத்து எறித்த கற்றை - சந்திரனிடத்திருந்து வீசிய கதிர்கள். பின்றை - பின்பு. மதுமுகத்து - தேன்போல் இனிதாய் முதுமுகத்து உருத்த -நெடுநாளாக விளைந்த முதிர்வினை ஆற்ரு - மிகுந்த வினையை ஆற்ருமல்.

6. பொறி-பொலிவு. செருப்பட-(தம்முள்) போர்செய்ய. வெறி-மணம். விகன்றென-வேறுபட்டாற்போல, மெலிந்தாற்போல சீல நிலை-ஒழுக்க நிலை.

7. சிலம்பவீரத் திருதிநூல் - சிலம்ப வித்தைக்குத் துணையாகும் நூல். திருதி - துணை. களிந்தது அல்லால் - மகிழ்ந்தேனேயன்றி. பொருது - பொருந்தும்.

8. நறை கெழும் - வாசனை பொருந்திய. நீதி முகைத்த நூல் - நீதி முறைகளை மலர்ந்து தரும் நூற்பொருளை.

9. எளிய தோன்றி - எளியதாய்த் தோன்றினும்.

வில்செய்வார் கொண்ட வாறும், வெங்கணை தொகுத்த வாறும்,
கல்செய்தோள் இருந்த வாறும், கண்பொருத்துகின்ற வாறும்,
கொல்செய்கோல் பாய்ந்த வாறும் குறிப்பட லன்றிக் காணு,
மல்செய்வார் தொழிலைக் கண்டார், 'மைந்தர் செய்தொழிலோ' என்பார். 10

புகன்றஅம்பு எழுது மாறும், பொருது அவை விலக்குமாறும்,
இகன்று அமர் நீந்து மாறும், எஃகினுள் காக்கு மாறும்,
அகன்று அமர் வளைக்கு மாறும், அதிரவாள் சுழற்று மாறும்,
விகன்று அமர் காணுர் கண்டால், வியந்து உளம் மாழ்வ ரன்றே. 11

சூல்புறத்து அழல மின்னிச் சூழெலாம் அதிர்ப்ப ஆர்த்து,
மேற்புறத்து எழுங்கா ரொத்த வேழமேல் எதிர்த்த போழ்தில்,
காற்புறத்து ஒளிக்கு மாறும், கைப்புறத்து இரியு மாறும்,
வாற்புறத்து ஒழுகு மாறும், வாயுரை வழங்கு மாறே? 12

நிரப்புஅற நெடுந்தேர்ப் போரும், நிணமருப்பு இபத்தின்போரும்
பரப்புஅற இவுளி பாய்ந்து படர்துகட் போரும், மற்றக்
கரப்புஅறக்கற்ற போரும் கடிது உனக்கு இவையே தோன்றுது;
உரப்புஅர சர்உளம் மூழ்கி ஊன்நுகர்ந்து ஒளிகால் வேலோய்! 13

ஏர்விளை மணியின் சாயல், எண்ணிய அளவிற் சொல்லும்
சீர்விளை இனிய யாப்பில் செய்யுளைப் பொருத்து வாரும்,
கூர்விளை துறையின் நன்னூல் கொளுமுனர், அன்னார் தாமே,
பார்விளை குன்றம் தாங்கல், பாடலில் இனியதென்பார். 14

ஆடகம் ஒளிறும் ஆணி அலமரத் திண்ணென்று எங்கும்
மாடக நரம்பை நோண்டி மாத்திரை நிறைய வீக்கித்
தோடகடு இழிதேன் கீதம் தொகுவிரல் உலவி, ஆர்க்கும்
நாடகம் கண்ட யாரும் நமக்கு எளிது என்பார் கொல்லோ? 15

---

10. வில் செய்வார் - விற்போர் செய்பவர். மல் செய்வார் - வலிமையோடு (விற்போர்) செய்பவர். மைந்தர் - மனிதர்.

11. இகன்று-பொருது. எஃகு-கேடயம் விகன்று-(மனம்) வேறுபட்டு.

12. சூல் - (உள்ளே) கருப்பமாகி. வேழம் - யானை.

13. நிரப்பு அற - குறையற. இபம் - யானை. இவுளி - குதிரை. கடிது - அரியதாக. உரப்பு அரசர் - மனத்திண்மையுடைய பகையரசர்.

15. ஆடகம் - பொன். மாடகம் - வீணை. வீக்கி - இழுத்து. தோடு அகடு இழி - மலரினுள்ளிருந்து இழியும்.

பகைபடக் கலந்த வண்ணம் பழுதில்-ஓவியம் தோன் றுறும்,
நகைபடப் பசும்பொன் வீக்கி நவிர் அணி அமைக்கு மாறும்,
வகைபட நரம்பின்பாலால் வந்தநோய் உரைக்கு மாறும்,
தொகைபடப் பழகாத் தன்மை தொழில்எலாம் அரியதன்றே? 16

பல் தொழிற்கெல்லாம் இஃதே பாலெனில், அறத்தின் தூய
நல் தொழிற்கு இதுவுமன்றி, நசைக்கு இணை பயன் உண்டாமால்;
சில் தொழில் பலநாள் கற்றும் திருந்திலா ரேனும், இன்ன
மன்தொழில் பயன்பட்டு ஓங்க, மனத்துணிவு ஒன்றே சால்பாம் 17

வெந்(த)அகிற் சேக்கை நீங்கி, வெறுநிலத்து அடிகள்தாமே
வந்து,அதிற் கிடந்து நோற்ற வண்ணமே ஒழுகல் வேண்டா;
சிந்தையிற் சான்றோர் எள்ளும் தீவினை யொன்றை நீக்கி,
நிந்தையிற்(-று) இனிய தூய்நன் னெறியுறத் துணிதி என்றான். 18

பெண்ணாசையை ஒழித்தலரிது என வாமன் மீண்டும் உரைத்தல்

துணியும் பாங்கு அரியதன்றே? தூயநற் சுருதி வேடம்
அணியும் பாங்கு,அறத்தின் வாளால் ஐம்பொறி முழுதும் கோறிக்
கணியும் பாங்கு, அரிய நோன்பின் கடவுளோய்! என, மீண்டு, உள்நோய்
தணியும் பாங்கு,உயிர்ப்பு வீக்கிச் சழுக்கற வாமன் சொன்னான். 19

நரம்பை என்பில் நிரைபின்னி, நற்செம் புனல் தோய்த்துப்
பரம்பை போர்த்து, உள்தசைநிரப்பி, படமேல் மயிர் பொலிய,
வரம்பை அகல்பொற்பு இழைத்து, ஒன்பான் வாச லிட்டு, இனிதுஓர்
குரம்பை செய்தான் பெருந்தச்சன்; குறையென் பவர்உண்டோ? 20

---

16. பகைபட - ஒன்றினொன்று மாறுபட. தோன்று(ம்) ஆறும் - தோன்றும் விதமும். நவிர் அணி - அழகிய ஆபரணம். நரம்பு - நாடி நரம்பு

17. பால் எனில் — (பொதுத்) தன்மையென்றால். நசைக்கு இணை — ஆசைக்கு அளவாக. இன்னமன் தொழில் — இந்தச் சிறந்த தொழில் (அறம்)

18 அகிற்சேக்கை - அகிற்புகை காட்டின படுக்கை. நிந்தை இற்ற - இகழ்ச்சியில்லாத

19. பாங்கு-தன்மை, அழகு. கோறிக்கணியும் பாங்கு - கொன்று குறித்த தன்மையால். உயிர்ப்பு வீக்கி - பெருமூச்சினைவிட்டு. சழுக்கு அற-குறை தீர. பரம்பு - தோல்.

20. வரம்பை அகல் - அளவிறந்த. பெருந்தச்சன் - கடவுள்.

ஆதலேனும், நாறிய வெந்(த) அகிற்பூம் புகை தவழ்ந்து,
காதல் செய்நற் சுதைமுழ்கிக் கதிர்செய் மணிக்கலன் பெய்து,
ஊதல் செய்வண்டு அலம்சூடி உயிரிற் பேணினும்,ஊன்
ஈதல் செய்நாறு உடற்கு,உயிரை இறுகப் பிணித்தனனே. 21

மெய்யால் உயிரே உணர்வெய்த, மெய்யும் தானுணரா,
பொய்யால் உயிரே கெட,மலிபல் புரைகண் மூழ்கி,உடல்
மெய்யால் உயிர்கொல் பகையல்லால், முனைந்தோர் வேண்டுவதோ?
அய்யா! உயிர்உய் வகை அரிது,உள் அடும்இப் பகைவினையால். 22

உள்ளே வைகும் இப்பகையோடு உடன்பட்டு, எப்புறமும்
எள்ளே வைகும் பெரும்பகைசூழ்ந்து இகல்செய் முறையரிதே;
தெள்ளே வைகும் கவின்காட்டித் தீம்பால் கலந்தவிடம்
வள்ளே வைகும் உயிர்க்கு ஊட்டி, வதைசெய் பகைஅதுவே. 23

சொன்ன பகையும் யாதென்னில், சூழ்ச்சி நல(ம்)மிக்கோன்,
இன்ன உடம்பின் துணையாக, எழிற்பூங் கொடிச்சாயல்
மின்ன எழுதிச் சுரிகுழலார் மிளிர்ந்த இனம் செய்தான்;
அன்ன இனம்தான், உயிர்,அறநூல் அனைத்தும் கொல்பகையே. 24

மின்னார் வேல்,ஊன் உமிழ்ந்து ஒழுகும் வேழ மருப்பும், எதிர்த்து
ஒன்னார் வெம்போர் கடந்து, உருமொத்து உள்ளத்து அஞ்சா நான்,
'பொன்னார் மணிப்பூண் அணிச்சாயல் பூங் கொம்பு அனையார், போர்
முன்,ஆர் நிற்பார்' என்றெண்ணி முரிந்து, உள் குழைகிற்பேன். 25

முதிர்செய் உணர்வுற்று அறம்வெஃகி, முயல் நல் வினையுணர்கால்,
எதிர்செய் மதிவெண் முகம் கண்டால், எரிபூண் தூங்கி மின்ன,
கதிர்செய் குழைவில் வீச, இரு கண் செந் தீப்பொழிய,
பொதிர்செய் எரிமுன் மெழுகென, உட்புலன் ஐந்து உருகுமன்றே. 26

---

21. ஆதலேனும்-(இவ்வுடல்) குறையில்லாததாயினும், சுதை-சந்தனம். அலம் - மலர் மாலை.

22. மெய்யால் - உடல் வழியாக. எய்த - அடையவேண்டியிருக்க. பல்புரைகண் - பல பாவங்களில். முனைந்தோர் - (வேறு) பகைவர்.

23. இப்பகை - இவ்வுடற்பகை. எள்(ளே) வைகும் - இகழ்ச்சி பொருந்திய. இகல் செய்-போர் செய்யும். தெள்(ளே) வைகும்-தெளிவு பொருந்திய. வள்(ளே)வைகும்-வல்லமை பொருந்தின.

24. சுரிகுழலார் - சுருண்ட கூந்தலையுடைய பெண்கள்.

26. முதிர்செய் உணர்வுற்று - முதிர்ந்த நல்லுணர்வு எய்தி.

இருமஞ்சன்ன இருண்டுஒளிறும் இயல்புற்று அவிர் கூந்தல்,
மருவிஞ்சு அகிற்பூந் தவிசு, இருளே வகைதுஞ்சு இடமென்பார்;
செருவிஞ்சு ஒன்னார் கரந்து, உயிரைச் செகுக்குங் காடு, அதுவே;
கருநஞ்சதுவே; உயிருண்ணும் கடுங்கூற்று அதுதானே 27

புருவ வில்லால், கண்கணைகள், புண்பட்டு உள்ளுயிரும்
உருவ விட்டால், பலநாளும் உற்ற உணர்வழிந்து
வெருவ நெஞ்சம், உட்கலங்கி, விளைத்த புண்காட்டி
வருவ தல்லால், இச்சமரில் மருளா தவருண்டோ? 28

கடலைக் கடைய, அமிர்தமொடு கடுவும் பிறந்ததெனப்
படலைக் கதையால் அறிந்ததலால் பயனுய்க் கண்ட திலை;
மடலைக் குடைய ஊறியதேன் வதைத்த சொல்லமிர்தம்,
உடலைக் கொலை செய்து உயிருணும் நஞ்சு உகும்-பெண் வாய் மொழியே· 29

குழலால் பிறழாது உயிர் விசிப்பார்; குரலால் நஞ்சு உயிர்ப்பார்;
கழலாற் சிலம்ப மருட்டிடுவார், கண்ணுல் கணை தொடுப்பார்;
நிழலாற் கலன்கொண்டு இருள் மொய்ப்பார்; நிறைதம் உறுப்பெல்லாம்
அழலாற் சுடச் சுட்டு, உயிருண்டு, உண்டு ஆற்ருப் பசிகொள்வார். 30

போதுஅங் கையார் உளரியபண் புழுங்கிச் செய்கொலையோ,
ஏதங் கொண்டார் எண்ணுவர்மற்று, எண்ணும் பாங்குஅரிதே;
கீதம் பாலாய்ச் சுரந்தெனத் தீக் கிளையோ, வேலோ, நச்சு
ஓதங் கொல்லோ, இருசெவியூடு ஊட்டி உயிர் கொல்வார். 31

என்னே மற்றது யான் உரைப்பேன்? எரிவிண்டு இடித்(த)அசனி
மின்னே தொடராக் கால் உளதேல், மின்பெண் நசைக்குஇறுதல்
பின்னே தொடராக் காலமிலை; பெரும்புண் நீரொழுக
அன்னே அறிவேன் நானல்லால், அறியாய்பொறி வென்ருய்! 32

---

27. இரு மஞ்சு அன்ன - கரிய மேகம்போல. இருள் - நள்ளிருள். வகைதுஞ்(சு)ம் - நன்ருய்த் தூங்கும்.

29. படலைக்கதை-கோத்தகதை மடலை குடைய - பூவிதழை வண்டுகள் குடைந்தபோது.

30. சிலம்ப - ஓசை செய்வித்து. கலன் நிழல் கொண்டு - அணிகலன் களின் ஒளியைக் கொண்டு. உண்டு ஆற்ரு - உண்டாலும் ஆற்ருத.

31. போது அம்கையார் — மலர்போன்ற அழகிய கையினையுடைய பெண்கள். உளரிய - தடவிய மீட்டிய. ஏதம் கொண்டார் - துன்புற்றவர். மற்று - மற்றவர். தீக்கிளையோ - கிளைத்த தீயோ. நச்சு ஓதம் - நச்சுக் கடல்.

32. அசனி - இடி. உளதேல் - உளதேனும். அன்னே - அலைகளே.

சாதல் மிகவே, கார்முக வெஞ் சரத்தின் மழைபனிப்ப,
தாதல் மிகவே, கணைக் கண்ணார் அணிப்பூஞ் சாயலின்மேற்
காதல் மிகவே, கற்றபல கல்வி எவன்செய்யும்?
ஓதல் மிகவே நூல்துறைநீத்(த) உணர்வோய்! எனத் தொழுதான். 33

கூனை மீண்டும் கூறத் தொடங்குதல்

காதல் மிக்காங்கு எவன்செய்யும் கல்வி நலம் என்றாய்;
நாதன் மிக்க நீதி,வளர் நரகத்து எய்தியகால்,
சாதல் மிக்க இன்புஉண்டோர் தாம்,ஆங்கு எவன் செய்வார்?
வீதல் மிக்க மிடல் வேலோய்! என்றான்—வினைவென்றான். 34

என்றான் கூனை; என்றுஇரங்கி, எரிதன் நோய் காட்டி
நின்றா னவனைத் தழுவி, அழல் நிகர்த்த காம்அவிப்பத்
தன்தா ரையங் கண்ணீராட்டி, சாற்றிக் காட்டியபுண்
நன்றாய் ஆற்றும் மருந்தன்ன, நயந்தே மீண்டுரைத்தான். 35

காம நோயின் கொடுமையும் தீர்க்கும் வழிகளும்

கைவளர் மருத்துவ ரன்றி, காய்ந்த நோய்
மெய்வளர் பிணியுளர் அறிதல் வேண்டிலா;
பொய்வளர் உயிர்கொள் நோய், பொருந்திக் கொண்டவர்
மைவளர் நோய்அறிந் தலது, மாறுமோ? 36

புனம் செயும் பங்கமே புனம்ஒ ழித்தென,
மனம் செயும் பங்கமும் மனநொந்து ஆற்றலின்,
தினம் செயும் புகர்வினை தெரிகிலார்,அறத்து—
இனம் செயும் பயன்பட, ஈட்டல் ஏலுமோ? 37

---

34. மிக்காங்கு - மிக்கவிடத்து. வீதல் மிக்க - கொலைத்தொழில்மிக்க.

35. எரி - எரிகின்ற. காம் - காமம்.

36. பொய்வளர் உயிர்கொள்நோய் - பொய்யால் உயிரைப்பற்றி வரும் காமநோய்.

37. புனம் - புனல் - நீர். பங்கம் — சேறு புகர்வினை — பாவங்களை. அறத்து இனம் செயும் - அறங்களால் வரும் பயன்பட - பயனை அடையும்படி. ஈட்டல் ஏலுமோ - (அப்பாவத்தை) ஒழிக்க முடியுமோ.

நகைவழி, விரகநோய் வளர்ந்து நல்கிய
புகைவழி, உளத்துஇருள் பொருளக் கொண்டநோய்,
தொகைவழி உணர்வரிது எனினும், சூழ்ந்தஅவ்
வகைவழி அறிதிநீ; அறிந்து மாழ்கல் ஏன்? 38

அள்ளிய இருளறும் அலங்கல் வேலினோய்!
தெள்ளிய இடத்திலும், தெளிந்து நஞ்சுஉணல்
உள்ளிய பேதைய ரொப்ப, சிந்தையில்
எள்ளிய வினை,உளத்து இவறலாவது ஏன்? 39

நஞ்சு,அமிழ் தென்றுநீ நக்கி னால்,இமிழ்
விஞ்சுஅமிழ் தாகுமோ? வினைகொள் நல்லுயிர்,
எஞ்சுஅமிழ்ந் தியபுரை இயைந்து மாழ்கவும்,
நெஞ்சுஅமிழ்ந் தியநசை நீக்கி லாவதுஏன்? 40

காதலே பாசமாய்க் கால்கை வீக்குதல்
ஆதலே, பிரிவுனக்கு அரியதாம் என்றாய்;
காதலே பாசமாய், காதல் மிக்குஉளத்து
ஆதலே, நாள்தொறும் இறுக்க லாவதுஏன்? 41

கொந்தென விரகநோய் கொழுந்து விட்டெரிந்து
அந்தில அழல்அவிப்பு அரியதாம் என்றாய்;
கொந்தென எரிந்ததீ தூண்டிக் கொண்டு,நீ
அந்தில, நசைக்குஅறல் ஈட்ட லாவதுஏன்? 42

பாங்கெழும் எழில்நலம் பயத்த இன்பினால்,
ஆங்குஎழு நசைவெறுப்பு அரியதாம் என்றாய்;
பாங்குஎழுங் காஞ்சிரப் பழன்வி ரும்பிஉண்டு,
ஆங்கு,எழும் அணங்குற, அருந்த லாவதுஏன்? 43

---

38. நகைவழி - இன்பத்தா[illegible] தொகைவழி - அளவினை.

39. அலங்கல் - விளங்குதல். தெள்ளிய-தெளிந்த. சிந்தையில் எள்ளிய வினை - உணர்வில் இகழ்ந்த தீவினையை. இவறல்—விரும்புதல்.

40. இமிழ் விஞ்சு - இனிமை மிக்க. எஞ்சு - எஞ்சி - மெலிந்து புரை - பாவம். மாழ்கவும் - சோரவும். நசை - காம ஆசை. ஆதலே - ஆதலின்.

41. பிரிவு — காமத்தினை விட்டொழித்தல். இறுக்கலாவது ஏன் — அக்காம பாசதன. இறுக்குவானேன்.

42. கொந்து என - கோபித்தாற் போல. அந்தில- அந்தம் இல - முடிவில்லாத. நசைக்கு அறல் - ஆசை என்னும் விறகை. ஈட்டலாவது - குவிப்பது.

43. பாங்கு எழும் - பக்கத்தில் தோன்றிய, அழகு [illegible]ட்டிய பயத்த - கொடுக்கும். அணங்கு - வருத்தம்.

நெடிது நாளுற்ற நோய் மருந்தின் நீர்மையால்
கடிது தீர்ந் தால்,அருங் கரும மாம் என்றாய்;
நெடிது நா ளுற்றநோய் நீள, மீண்டுயிர்
கடிது மாய்ந்து ஒழிதர, கடுஉண் பாவதேன்? 44

கோட்பரும் எழிலெனக் கோதையார் முகம்
மீட்பரும் விடமதை விழித்து,உய் யார்என்றாய்;
கோட்பரும் எழில் உயிர் குழைய, நாள்தொறும்
மீட்பரும் விளிவுற விழித்த லாவதேன்? 45

மால் வளர் விரகநோய் வழங்கும் போரினை
வேல் வளர் சமரில்,நீ நோக்கல் வேண்டிலா;
கோல் வளர் போர் வெலும், எதிர்த்த கோல்;இவண்,
கால் வளர் ஓட்டமே வெற்றி காணுமால். 46

பட்டிலாக் கடையிலாப் பாவை யார்கள்தம்
மட்டிலா உறுப்பெலாம் வதைசெய் நஞ்சென்றாய்;
கிட்டிலால், காண்கிலால், கேட்கி லால்,அது
வெட்டிலால் கொல்லுமோ? வெயில் செய் பூணினோய்! 47

வள்ளுறப் பகைத்து,உயிர் வருத்தும் மெய்யலால்
அள்ளுறக் கொடுமைகொண்டு அடும்பு றப்பகை;
உள்ளுறக் கண்முதல் உள்ள வாயில் ஐந்து,
எள்ளுறத் திறப்பதேன்? எரிசெய் வேலினோய்! 48

---

44. கடு உண்பு - நஞ்சினை உண்ணுதல். நெடுநாட்பட்ட நோய் மருந்தினால்தீர்தல் அரிதென உணர்ந்தும், காமநோய் நீளவும் உயிர் ஒழியவும் நீ நஞ்சுண்பானேன்?

45. கோட்பு - கொள்ளுதல்.

46. கோல்வளர் போர்-அம்போடு செய்த போரை. வெலும்-வெல்லும். இவண் - இக்காமப் போரில். கால்வளர் ஓட்டம் - காலால் விரைந்து ஓடுதல்.

47. பட்டிலா - கெடாமலும். கிட்டிலால் - நெருங்காமலும். வெட்டிலால் - விரும்பாமலும். வெட்டை-காம இச்சை. வெயில் - ஒளி.

48. வள் உற - வலிமையாய். அள் உற-நெருங்கி. எள் உற-இகழ்ச்சியுண்டாகும்படி.

நிலையாமை உணர்வு

இருண்டுஇருங் களத்திடை எரிந்த மின்னென,
மருண்டுஇருண்டு உயிர்கெட மயல்செய் வாள்முகம்,
உருண்டு உருண்டு எறிந்தவெண் தலையென ஓர்ந்து,உளம்
தெருண்டு இருந்து இமத்திடைக் காண்மின், தேறவே. 49

பகைத்தகத், துகிர்த்துறை படலை முத்தெனும்
தகைத்து,அகப் பல்இதழ், பதவில், தார்விழி,
நகைத்தகப் பிறைநுதல் நளின வாயென
மிகைத்தகத் துகள்தரும் விழைந்த பொற்பு,இதோ! 50

போதென மலர்ந்(த)எழில், போதின் வாடி,அக்
கோதென மெலிவன, மூப்புக் கொண்டகால்
ஈது,'என உணர்கிலாது, இன்பம் வேண்டுவர்;
தீதென விளைத்தபின் தீயது எய்துவார். 51

இன்றுளார் நாளையே இறப்ப ரன்றி,மற்று
அன்றுளார் விழைந்தவை அருகிற் போகிலா
நின்றுளாய், செய்துகள் நெருங்கிப் பின்னுறச்
சென்றுளாய், விளைதுயர் செப்பவோ? என்றான். 52

அளிமுகத்து, இனையவும் பலவும், ஆரியன்
ஒளிமுகத்து உரைத்தவை அவன் உணர்ந்தபின்,
வளிமுகத்து அலையென மனத்து அலைந்தலால்
தெளிமுகத்து உறுதிஓர் துணிவு தேர்ந்திலான். 53

---

49. இமம் - ஈமம் - சுடுகாடு. தேறவே – உளம் தெளிய.

50. பகைத்தக – பகையாய் அழகு பெற. துகிர்த்துறை – பவளத்துறையிற்கோத்த. முத்துப் படலை எனும் தகைத்து - முத்து வடம்போல. இதழ் அகப் பல் - செவ்வுதட்டுள் தோன்றின பல்லும். பதவில் - குழைத்த வில்லைப் போன்ற புருவமும். தார் விழி - ஒழுங்காய் அமைந்த விழிகளும்: நகைத்தக- ஒளி பொருந்திய. விழைந்த பொற்பு – நீ விரும்பிய அழகு. இதோ – இந்த வெண்தலைதானே.

51. அக்கோது என – அந்த வாடிய மலர்போல். ஈது - இவ்வெழில்.

52. துகள் — பாவம். பின் உறச்சென்றுளாய் — பின்தொடர்ந்து சென்றதனால்.

53. ஆரியன் : மேலோனாகிய சூசைமாமுனி அவன் - வாமன். அலை- கடல். அலைந்து அலால் - அலைந்தானேயன்றி.

பாவமொழிக்க நரக நினைவுண்டாக்குதல்

கைக்கும்ஓர் மருந்து, பாலர்கனியஉண்டு, உயிரும்உண்ண,
இக்கும்ஓர் விளிம்பில் நீவியிட்டென, இயம்பல் என்னே?
'ஒக்கும்ஓர் பழம்புண்ஆற்ற உடன்(ற)அழல் வேண்டும் என்ன
வைக்கும்ஓர் அளவில், விஞ்சைமறைநலோன் வகுத்தான் மீண்டே. 54

புள்முழுது இறைஞ்சும்கோட்டுப் புழுங்கிய களிற்றேறு அன்னோய்!
விண்முழுது இறைஞ்சும் வேதம் விலக்கிய தீமை நீங்கி,
உள்முழுது இருளற்று, ஊக்கத்து ஒழுகவே துணிந்தாலல்லால்,
மண்முழுது இவர்தீது ஒவ்வா, மலிதுயர் நிரையம் சேர்வாய். 55

தொல்லை இம் மருளின் ஊழ்த்த துகள்விடத் துணிதலொன்றே,
ஒல்லைஇந் நசைநீங் காதேல், ஊழலில் வேத லொன்றே
எல்லையில் இரண்டி லொன்றே யாவரும் தவிராதென்ன,
வல்லை,இவ் வுணர்வில் தேர்தி; மாற்றலர் வணங்கும் வேலோய்! 56

மீய்முகத்து உடையில் தோன்றி, விசும்பு சூழ் வரையில் தூங்கி,
தூய்முகத்து அலைகள் ஓட்டித் துள்ளிவீழ் அருவி போல,
வேய்முகத்து இனிமை காட்டி, விரைவிலோடு(ம்)இளமை நம்பேல்;
காய்முகத்து அதிர்கால் வீசக் காய் முதல் வீழும் என்றான். 57

மக்கள் நரகத்தைப்பற்றி விளக்குமாறு கேட்டல்

காய் நரகு என்ற போழ்தில் கணங்கொடு நின்றார் சொல்வார்:
"தீய் நரகு என்ப தல்லால், தீநரகு, எந்நாடு? எப்பால்?
நோய் நரகு அரசர், பேயோ? நுகர்ச்சியும் நிலையும் யாதோ?
போய் நரகு உறைவர் யாரோ? புலமையோய் விரித்துச் சொல்வாய். 58

---

54 இக்கு - சருக்கரை. நீவி - தடவி. உடன்ற அழல் - சுடுகின்ற நெருப்பு.

55. புள்முழுது ...... ...... அன்னோய். கழுகு முதலிய பறவைகள் தமக்கு விருந்திடும் என்று வணங்கின கொம்புள்ள சினந்த மதயானையின் ஏறுபோல நின்றவனே. மண் முழுது இவர் - பூவுலகம் முழுவதும் அடங்கிய. ஒவ்வா - ஒப்பாகாத.

56. தொல்லை - நெடுநாட்கொண்ட. ஊழ்த்த - மலர்ந்த, பழுத்த. ஊழல் - நரகம்.

57. மீய் முகத்து உடையில் தோன்றி - ஆகாயத்தில் உடுத்த ஆடையாகத் தோன்றி. வேய் முகத்து - அழகிய முகத்தில்

58 கணங்கொடு நின்றார் - கூடி நின்றவர்.

வீய் முதிர் மதுவில் தீஞ்சொல் விரித்த நூற்கல்வி மிக்கோய்!
தீய் முதிர் உணர்வில், தீய செருக்கொடு, எம் உயிரை உண்ணும்
பேய் முதிர் குலம்யா தோ? அப் பேய்கள்செய் தவன்ஆர்? செய்த
நோய் முதிர் கருமம் யாதோ? நுவன்று இவை பணியாய்'' என்றார். 59

சூசை நரகத்தைப் பற்றி விளக்க முற்படுதல்

இனியவே கேட்டீர்; இந்நாள் எய்திய உணர்வில், தாழ்ந்து,
முனியவேம் அள்ளல் புக்கு, முதிர்ந்தநோய் உணர்ந்து கூசின்,
கனியவே பொன்றுங்கால்அக் கனலுறுது உவப்பீர் என்ன,
பனியவே அலர்ச் செவ்வாயால் பணித்துமற் றிதனைச் சொன்னான். 60

ஆடிய கடவு ளன்றி, அனைத்துமே படைப்புண்டாகி,
நீடிய உலக மூன்றும் நிமலனும் ஒருவன் செய்தான்;
கோடியது எவையும், கோதாற் கோடியதன்றி, முற்பால்
வாடிய குறையொன்றின்றி வனப்புற முடித்த தன்றோ. 61

கட்புலத்து உருவிற் புல்லாக் கவின்நலம் தீட்டி, வாய்ந்த
உட்புலத்து, உடலமில்லா உயிரென, விழுப்பம் ஓங்க,
மட்புலத்து இணையொன்றில்லா மனங்களை எண்ணி, நாதன்
விட்புலத்து இறைவன்சூழும் வீரரென்று அமைத்தான் என்றான். 62

தேவர்களும் சம்மனசுக்களும் ஒரேகுலமா என வாமன் கேட்டல்

"கடவுளர் தேவர் என்னும் களிகெழும் குலமே தானோ?
தடவுளர் வணங்கு நன்னூல் தகுதியோய்!" என்ன வாமன்;
முடவுளர் பறக்க வெஃகும் முயலென, பித்தர் காட்டும்
அடவுளர் மருள்என்? கேண்மின்! அறைகுதும்,' என்றான்—சூசை. 63

---

59. வீ—மலர் முதிர் தீ உணர்வில் - மிக்க தீய உணர்வோடு.

60. முனிய வேம் அள்ளல் - சினந்து வேகும் நரகத் தீ. பணியவே - சொன்னபின்பு.

61. ஆடிய - சொன்ன. கோடியது - கோணித் தோன்றியவை. கோதால் - பாவத்தால். முன்பால் - (உலகம் படைக்கப்பட்ட) முற்காலத்தில்.

62. உருவில் புல்லா - உருவினுல் அடையப்படாத. உட்புலத்து உயிர் - உளம் உள்ள உயிர். இணையொன்றில்லா மனங்கள் - சம்மனசுக்கள்.

63. தடஉளர் - பெரியோர். முடவுளர் - முடவர். முயல் - முயற்சி. அடவு உளர் - வழியினராய்.

சூசை, 'அவர், பெயரால்தான் விண்ணவர்—தேவர் அல்லர்' எனல்

விண்ணவர், அமரர், உம்பர், மேலினர், அமுதர், ஐயர்,
பண்ணவர், வானோர் என்னும் பல்பெயர் தருவதல்லால்,
திண்ணவர் படைப்புண்டாகித் தேவரென்று உரைக்கல் வேண்டா;
நண்ணவர் வணங்கும் தேவநாயகன் துணையற்று, ஒன்றும். 64

வானுறை குலத்தோ ராகி, வரங்களும் வயமும் மிக்கார்,
கோனுறை கோயில் வைகிக் கோக்கண மென்னத் தோன்றின்,
கானுறை உலகில், நாம்கொள் கசடற வரம்தந்து ஓம்ப,
மாணுறை வளமில் லாராய், வணங்குரித் தேவ ரல்லார். 65

வானோரின் செயலும், தேவர்களுக்கும் வானோர்க்குமுள்ள வேற்றுமையும்

வரம்தரும் தன்மைத்து,எல்லா வையகத்து, ஒன்றும் நாதன்
புரந்தரும் குணம்தன் பாலாய், புகன்றவன் ஏவும்தன்மைத்து,
உரம்தரும் உறுதிசொல்லி, உதவிய வரங்கள் கேட்டு,
சுரம்தரும் துயரில் தேற்றும் துணைசெயல், வானோர் பாலே. 66

விண்ணெனும் பதியோராகி மேவிநீர் உரைக்குந் தன்மை,
மண்ணெனும் பதியோர்க்கன்றி, வானவர்க்கு ஒவ்வாப் பாலாய்,
கண்ணெனும், இமையார் என்னும், கடிமலர் வாடா தென்னும்,
பெண்ணெனும் ஆணும் என்னும் பெயர்தகாது—உருவில் லார்க்கே. 67

திருத்தகும் தேவர் என்று, செயிர்தரு நுமது காமத்து
உருத்தகும் கதைகள் வீக்கி, உளத்துஉளை விரக நோயில்,
கருத்தரும் வினைகள் பாவிக் கைப்படை பலவும் தோற்றி,
செருத்தகும் பகையும் தம்மில் திளைத்துஉளம் மெலிவார்—என்பீர். 68

---

64. நண்ணவர் - நண்ணும் அவர் - பொருந்தும் அவரெல்லாம். துணையற்று - துணையொன்றின்றி, ஒன்றும் - ஒருவனேயாவான்.

65. வயம்-வலிமை. கோக்கணம் - அரசர் கூட்டம். மாண் உறைவளம் - மாட்சிமை பொருந்திய வல்லமை. வணக்குஉரி - வணங்கத் தகுந்த

66. புரந்தரும் - காப்பாற்றும்.

67. கண் எனும் - கண்ணுடையவர் என்றும்.

68. கருத்தகும் வினைகள் பாவி - கருவாகிப் பிறக்கும் செயல்கள் உண்டென்று பாவித்து

சிட்டிடை வான்நின்(ற) உங்கள் தேவர் பொன்னுலகந் தன்னில்,
நெட்டிடை நெறிகள் நீண்ட நெற்றிஅம் குன்றம், குன்று
மொட்டிடை மலர்ந்த பொய்கை, மொய்திரைக் கங்கை, கான்விள்
மட்டிடை மலர்ந்தசோலை வகுத்து,மண் ணொப்பச் சொல்வீர். 69

இனியவே பலவுங்கூறி, இருவிழிக் குருடர், யானை
அனையவே, முசலம் திண்மை, அடிஉரல், செவிகள் சூர்ப்பம்,
வனையவே உரைத்த வண்ணம், வடுமனுக் குலத்தின் சாயல்
புனையவே, உயர்ந்த வானோர், புன்மையில் வளாதல் நன்றோ? 70

ஒக்களவு அகன்று, மின்மீன் ஒத்திராப் புறத்து நீக்க,
தொக்களவு அகன்ற சீர்கொள் சுடருலகு உரிமை, அங்கண்
புக்களவு அறித லன்றிப் புன்கரத்து உளருந் தன்மை
நக்களவு அஃதும் இச்சீர் நயத்தளவு உணர்த லாமோ? 71

வானோருட் சிலர் பேய்களானார் எனல்

உள்ளுமாறு அகன்ற வாழ்வுய்த்து, உம்பரைப் படைத்த பின்னர்,
தெள்ளுமாறு அகன்று,ஆங் காரம் சிலர் உறீஇ, இறைவன்ஏவிக்
கொள்ளுமாறு அகன்ற, தீமை குணித்தளவு, உரைத்த சாபத்து
எள்ளுமாறு அகன்ற வானோர், எரியுழிப் பேய்க ளானார். 72

பேய்வினை வெருவக் கண்டு,அப் பேய்கள் செய்தவனார் என்றார்;
தூய்வினை வயத்தோன் செய்த தொழில்கெட, உணர்ந்த பாவம்
போய்,வினை கொணர்ந்து, பேய்தம் புழுங்குஇனம் செய்த தென்று,
தீய்வினை உளத்துட் புக்கால், செய்பகை அறிதீர்—என்றான். 73

---

69. சிட்டு — சிட்டம் — பெருமை. நெறிகள் — வழிகள். மண்ணொப்ப - பூவுலகொப்ப.

70. முசலம் - உலக்கை. சூர்ப்பம்-சுளகு. சாயல் புனையவே—சாயலாக.

71. ஒக்க அளவு அகன்று - அளவெல்லாம் (ஒவ்வாதென்று) அகன்று. ஒத்து இரா – ஒத்தன அல்ல என்று. தொக்க அளவு - கூடும் அளவு. உளரும் தன்மை - தடவினாற்போல

72. உள்ளும் ஆறு அகன்ற - நினைக்குந் தன்மைக்கு மேலாகிய. தெள்ளும் ஆறு அகன்று — தெளிவடையும் வழியைவிட்டகன்று. உரைத்த — (இறைவன்) கூறிய. எள்ளும் ஆறு அகன்ற - இகழும் முறையற்ற.

73. உணர்ந்த பாவம் போய் - நினைத்த பாவம் நுழைந்து. புழுங்கு பேய் தம் இனம் - புழுங்கின பசாசினம். புக்கால் - புகுந்தபோது.

வானவராக, வான்மேல் வாழ்ந்தநல் லுயிர்கள் கெட்டு,
தானவராகச் செய்த தகுதிமேல், கொடிய பாவம்,
ஊனவர் எமைப்ப கைத்தால் வறும் சிதைவு அளவோ? என்றுஆங்கு-
ஆனவர், அஞ்சிக்கூற, அருந்தவன் இனைய சொன்னான். 74

அசுரரே பேய்கள்

வானவரை உரைக்குங்கால், வாய்மையற உணர்ந்ததுபோல்,
தானவரை எண்ணுங்கால் தடம்நீங்கி மயல்வேண்டா;
மானவரை வேறெண்ணி, அழல்கிடக்கும் வெறிவேறாய்,
தானவரை மறை விதித்த நன்னூலால் எண்ணேனே. 75

விண்ணோர்க்குப் பகைசெய்து வெல்லறியா, அறம்குன்ற
மண்ணோர்க்கு வினைசெய்து, மன்னுயிர்கள் நரகுஉய்ப்ப,
புண்ணோய்க்கு வைத்தனதீப் புழுங்குமென, தாம்கதிநீத்(த)
உண்ணோய்க்குத் தகப்பகை ஓர்ந்து உயிர்அடும்தீது உணர்குலமே. 76

அசுரர்க்குக் கூறுவன பேய்களைக் குறிப்பன

நற்செய்கை அனைத்தும்அற நலம் பகைத்தோர், தூயதவம்
தற்செய்கை நெடுநாளும் தாம்முடிப்ப. வரம் பெற்று,
விற்செய்கை அமர்பூட்டி, விண்ணவரைப் புண்படுத்தி,
மற்செய்கை வழங்குஅசுரர் என்றறைதல் மருளன்றோ? 77

பேய்கள் வாழும் நரகம்

வீடுஇழந்த தீயினமே விளைத்த செருக்கு உளத்து ஒழியா,
பீடுஇழந்த தன்மை,எரி பிளிர்ந்துஇடித்துப் பிளந்த முகில்
நீடுஇழந்த அசனிகள் போல், நீதிபரன் வயப்பயத்தால்,
சேடுஇழந்த நரகுஊழித் தீவிழ்ந்து புதைத்தனவே. 78

---

74. தானவர் - அசுரர். தகுதி - அசுரர் தகுதி. பாவவினை. ஊனவர் - உடலுள்ளவர்.

75. தடம் - வழி. மானவர் - அசுரர். வெறி - பேய். நீங்கள் வானவரைப்பற்றித் தவறாய் எண்ணியதுபோல நான் அசுரர் வேறு பேய்கள் வேறு என்று எண்ணேன்; இரண்டும் ஒன்றேயாம்.

76. வெல் அறியா - வெல்ல மாட்டாமல். புழுங்கும் என - கோபித்தாற் போல. உள்நோய்க்குத் தக - உள்ளத் துயருக்குத் தக்கபடி தீது உணர்குலம் —பேய்க்குலம்

77. நலம் பகைத்தோர் - நல்வினையைப் பகைத்த அசுரர் மல் செய்கை-வல்ல செயல்கள்.

78 சேடு இழந்த - நன்மையில்லாத.

திரையுடுத்த பார்அகட்டுச் சேண்படர்தாழ் குழிதோண்டிக்
கரையுடுத்த கடல் பொங்கிக் கடந்துஎழுவ போல்,அலைகொண்டு
உரையுடுத்த நிகர்கடந்த ஊழித்தீ, குடிவைகப்
புரையுடுத்த உருக்கொடு,பேய் புதைத்து அலறுநரகன்றே?. 79

இடிகள்தவழ் ஓதைமறுத்து, எரிந்து அயர்வோர் ஓதையெழ
குடிகள்,தவழ் இடும்பையொடு கொடியதெலாம் மொய்த்துஅடர,
நொடிகள்தவழ் போழ்துபல நூறுண்டென்று உணர்ந்து அலற,
கடிகள்தவழ், இருள் தவழ், தீக்காணியெனும் அருஞ் சிறையே. 80

பேயோடு பாவிகள் உறும் துயர்

கண்மல்கும் துயர்பனித்த கலுழி-அவியாக்கனலாய்,
மண்மல்கும் துயர்வெள்ளம்–வாழ்வுருவாய் இனிதென்ப,
உள்மல்கும் துயராற்றுது, உளைந்துஅழத்,தாம் மற்றுயிரைப்
புண்மல்கும் துயர்ப்படுத்தல் புதவிடத்துப் பேய்அரசே. 81

ஓர்என்பான் தனைஏத்தார், ஒன்றும்மெய்ச் சுருதிவழி
சீரின்பால் நடவாதார், சினம்காமம் களவு கொலை
பாரின்பால் நச்சி,அடும் பாவம்முடித்தவரெல்லாம்,
சூரின்பால் நரகெய்திச் சோகினத்தோடு உளைந்துஎரிவார். 82

வீய்த்துணையும், அகித்துணையும், வேழமுடன் நரித்துணையும்,
தீய்த்துணையும், செயிர்த்துணையும், சிறியதீயோர்துணையும்,
நோய்த் துணையும், சினத்துணையும், நூறிஅடித்து உரம் சினந்த
பேய்த்துணையும் அன்றி,நலம் பெறுந்துணையற்று, இருப்பரிதே 83

---

79. பார் அகட்டு - பூமியின் வயிற்றில். புரை - பாவம்.

80. குடிகள் – குடிகளாக. கடிகள் – பேய்கள்.

81 கலுழி - வெள்ளம் வாழ்வு உருவாய் இனிது என்ப—இனிய வாழ்வின் உருவம் என்று தோன்றும்படி. புதவு — நரகம்.

82. ஓர் என்பான் - ஒன்றுன கடவுள். சூரின் பால் - அச்சத்தின் இயல் பமைந்த. சோகு - பேய்

83. வீ - வேங்கை. அகி - பாம்பு.

84. புல் அவை – சூழ்ந்த சபை. பூரியர் – கீழ்மக்கள்.

85. செயிர் – பாவம் மைத்துணைகொண்டு - மயக்குவித்து.

புல்லவையே பூரியராய், புழுங்கிய வெஞ் சினத்தினராய்,
கொல்லவையே குணுக்கினங்கள் கொந்தழலிற் சீறி, உடன்று,
அல்லவையே, செவிகேட்பதல்லது, அடுந்துயராற்ற,
நல்லவையே ஒன்றுஉரைக்கும் நற்றுணையற்று, இருப்பரிதே. 84

இத்துணைகொண்டு உளம்மாழ்கி, எய்தியதன் செயிர்செய்யும்
அத்துணைகொண்டு ஒழியாதால், அலைந்தலைந்து உள்துயர்பொங்க,
மைத்துணைகொண்டு இருண்டபுகை மண்டிஎழும் இருட்சிறையாய்,
மொய்த்துணைகொண்டு எரிப்பீடை முறை,மொழிவ கேண்மின்,அரோ. 85

நரக நெருப்பும் உலக நெருப்பும்

நோய்நிலை நிரையம் கொண்ட பற் பீழை,
    நுதலினுட் பனிப்பவே, ஊழித்
தீய்நிலை என்றால், உதவிய இன்ன
    தீயென உணர்தலும் வேண்டா;
வேய்நிலை வரையை நக்கினால் அத்தீ,
    வெந்து,கண் இமைக்குமுன் உருக,
காய்நிலை கொண்டு, நாரக நிலையில்
    காய்கொழுந்து எழுந்து,எரி தீயே. 86

ஆதிதன் அருள்,இத் தழலைநல் லவர்க்கும்
    ஆதரவு உதவியிற் படைத்து,
நீதிதன் மலிந்த சினத்திறம் காட்டி,
    நெறிதவிர் தீயரைத் தீக்க,
பூதிதன் அழலைப் படைத்தனன் என்றால்,
    பொருவ இவ் விருதழல் நோக்கின்,
சோதிதன் முகத்து மின்மினி போன்(று),அச்
    சுடர் முகத்து இச்சுடர் நிலையே. 87

---

84. புல் அவை - சூழ்ந்த சபை. பூரியர் - கீழ்மக்கள்.

85. செயிர் - பாவம். மைத்துணைகொண்டு - மயக்குவித்து.

86 நுதலினுள் - நினைத்த அளவில். பனிப்பவே - நடுங்க. உதவிய- (மனிதர்க்கு இவ்வுலகில்) உதவுகிற. காய்நிலைகொண்டு - வேகும் குணத்தைக் கொண்டு. நாரகம் - நரகம்.

87. பூதி — நரகம். சோதி — சூரியன்.

நரக வேதனை

பொறிப்படப் புழுங்கிக் கொழுந்துவிட்டு எரிந்து
புகைத்திரள் இருண்டெழ மண்டி,
நெறிப்படச் சுடரா, சுடச்சுடச் செந்தீ
நீறுமா காது, எலாம் வெந்து,
குறிப்படப், புணர்ந்த செயிரளவு உடற்றி,
குடைந்து உடல் கிழித்தவாய் புக்கு,
செறிப்படத் திரண்டு வெளிப்பட, கண்வாய்
செவிகள் மூக்கு எரியுமிழ்ந்து எரிவார். 88

படுப்பதற்கு அமைந்த பூவணை தீயே,
படும்பசிக்கு உணவுகள் தீயே,
உடுப்பதற்கு அணியும் கலிங்கமும் தீயே,
உயிர்ப்புளி ஆவியும் தீயே,
கடுப்பதற்கு எரிந்த தீப்புன லாட்டிக்
கனற் கடல் நீங்கில, நீந்தி
அடுப்பதற்கு அணையும் காண்கில மூழ்கி,
அலைந்தலைந்து எரிந்துளைந்து அயர்வார். 89

சூளையில் அடுக்கித் துறுவிய கல்லோ,
சுழன்றன பூட்டையில் திலமோ,
மூளையிற் புதைமுட் பிணங்கலோ, நாணி
முறுக்கதோ, கதிரினுட் கழையோ.
பாளையில் துவன்ற முகைகளோ, தம்மிற்
பதைப்ப உள் நெருங்கிய தன்மை
பூளையின் நொய்யங் குரம்பையர், பிறழாப்
புதவுளரி புதைத்து வெந்து எரிவார். 90

---

88. பொறிப்படப் புழுங்கி — பொறிகள் சிதறச் சினந்து. 'நெறிப்பட - நீதியின் தன்மையால்.

89. கலிங்கம் — டை. நீங்கில — பிரியாமல்.

90. பூட்டை - செக்கு. திலம் - எள். மூளை - சேறு. முள் பிணங்கல்- பின்னிக் கிடக்கும் முட்கள். நாணி - வில்நாண். கதிர் - ஆலைக்கதிர். பாளை -தென்னம்பாளை. துவன்ற - நெருங்கிய. பூளையின் - இலவம் பஞ்சினும். குரம்பையர் - உடலோர்.

தூய்வளர் மலர்ப்பூஞ் சேக்கையைப் பரப்பிச்
சூழ்அகில் நறும்புகை தோய்த்து,
மீய்வளர் செல்வோர் விளைத்ததம் செயிரின்
வினையினால் நரகுறீஇ,அங்கண்
தீய்வளர் சுள்ளை புதைத்துளி, கால்கை
திருப்பவும் நீட்டவும் ஆற்றா
நோய் வளர் வண்ணம், நூல்வளர் உரையால்
நுதலி,நான் இயம்பிடல் தேற்றேன். 91

பேய்கள் தரும் தண்டனை

மிடைந்து தாம் தம்முள் துயர்செய ஒருபால்,
மிடைந்தன குறுக்கினம் ஒருபால்,
அடைந்துதாம் உடற்றிச் சீறிய பகையோடு
ஆகுலக் கடல், கரை யனைத்தும்
உடைந்து பாய் வெள்ளம், முனிவொடு தீயோர்
உடல் பதைத்து உளைந்து அதிர்ந்து அலற,
விடைந்து பாய் வெறிகள் படுத்திய பீடை
விட்டொழி யாது எரிந்து உளைவார். 92

சொரிவன மழைபோல் அழல்விட ஒருபால்;
தோலுரித்து எரிப்பன ஒருபால்;
எரிவன அணைமேல் விரிப்பன ஒருபால்;
ஈய நீ ராட்டுவது ஒருபால்;
கரிவன உடல்கள் துமிப்பன ஒருபால்;
கனல்திரள் ஊட்டுவது ஒருபால்;
திரிவன உருவால் வெருட்டுவது ஒருபால்;
தேறில பகைத்தன பேயே. 93

---

91. மீ வளர் செல்வோர் - செல்வம் மிக்கவர்.

92. ஆகுலம் - துன்பம். விடைந்து பாய் - சினந்து பாய்ந்த.

93. அணை—மெத்தை. விரிப்பன—கிடத்துவன. திரிவன—திரிந்து காட்டின.

வாசநெய் யென்ன உருக்கிய ஈயம்
வலித்து,உடல் ஒருங்குடன் பூசி,
கோசர நீரென்று அழற் புன லாட்டி,
கொந்துஎரிச் சயமெய்ப்பை போர்த்து,
பூசண மாக நச்சரவு அணிந்து,
பூந்தவிசு உச்சிவாழ் கென்ன
வீசழல் விரிந்த மஞ்சமேல் இருத்தி,
விரகரை வருத்துவ தன்றோ. 94

சொறிபடர் அரியும் உரகமும் மலமும்
சுடச்சுட அமிர்தென ஊட்டி,
வெறிபடர் மலர்பூந் துகிற்கொடு பைம்பூ
மெல்லு டல் நீவுதும் என்னப்
பொறிபடர் கொழுந்திற் கனன்றகூன் இரும்பால்
புண்பட உடலெலாம் கீறி,
செறிபடர் விரக நோய் மருந் தென்னச்
சினந்து அணங்கு இயற்றுமாம் கடியே. 95

அன்னுமாறு இருண்ட புகைதுறும் சிறையூடு,
அலகைகள் வருத்திய வண்ணம்,
உன்னுமாறு அகன்று, நாவினுறு அகன்று,ஆங்கு
உறைந்தவர் பொறுக்குமாறு அகன்று,
தென்னுமாறு அகன்று ஈங்கு அவன் அவன் செய்த
செயிரளவு ஆகுலித்து, அங்கண்
என்னுமாறு இயற்றும் தீவினை செய்யும்
இரும்பகை அன்று தோன் றுவதே. 96

பாவிகள் நரகில் ஐம்பொறித் துன்பங்களும் அனுபவிப்பர் எனல்

மெய் முதற் பொறி ஐந்தொடும் மேவிய
பொய் முதற் புரை பூரியர் பூத்தென,
ஐமுதற் பொறி யின்வழி, ஆங்குஅதிர்
மொய் முதற்புதவு ஆகுலம் மொய்க்குமே. 97

---

94. கோசர நீர் – வாசமலர் நீர். சயமெய்ப்பை – இரும்புச் சட்டை. விரகர் – காமுகர்.

95. அரி – தவளை. உரகம் – பாம்பு. அணங்கு – துன்பம்.

96. சிறையூடு – சிறையாகிய நரகில். அகன்று – அல்லவாகி.

97. பூரியர் – நீசர்கள். பூத்தென – செய்தமையால். ஐமுதற்பொறி – பஞ்சேந்திரியம். மொய்முதல் – போர்க்களமாகிய. புதவு – நரகில்.

நாறு பூம்புகை, நாறும் அகிற்புகை,
ஊறு நானம்மற்று ஊறிய வாசமோடு
ஏறுகாமம் வளர்த்த இயற்கையால்
பாறு பூதி படர்கடல் மூழ்குவார். 98

பூதிநாறும் புகைத்திரள், நாசியூடு
ஊதி ஊதி, உலகம் உலாம் மலம்
ஆதி, நாறும் யாவும், அலைகொடு
மோதி மோத உள், தீயகும் மூழ்குவார். 99

கோதின் வாயுளம் கோட, இன்பு என்றுஅடும்
தீதின் வாய், வளர் தீயுரை, கேட்டன
காதின் வாய், கடுங் கோல் கடுத்து ஏற்றிய
போதின், வாய் வழி, பொங்குஅழல் ஊற்றுமால். 100

மாழ்வர் ஓதையும், என்மலி ஆர்ப்பொடு
சூழ்வர் ஓதையும், சுட்டெரி ஆழியை
ஆழ்வர் ஓதையும், அங்கணின் நாள்தொறும்
தாழ்வர் ஓதையும் செய்துயர் சாற்றவோ? 101

இனிய உண்டலும், இன்னல் உரைத்தலும்,
கனிய இன்பொடு காசு மலிந்தவாய்
நனிஅ முன்று, நஞ்சுண்டு பகைத்தபேய்
முனிய வந்த துயர் முடி யாது;அரோ. 102

கைத்த யாவையும், காய்கடு வும்,புழு
மொய்த்த உளத்தையும் முற்றிய பூதியும்,
துய்த்த வாய்,இரத்தம் சொரியத் துமித்து,
உய்த்த தீஉமிழ்ந்து, ஓவி அரற்றுவார். 103

---

98. பாறு பூதி படர் கடல் - நரகத் துர்க்கந்தமுள்ள கடல்.
100. கோதின்வாய் - பாவத்தைக்கொண்டு. கோட - கோணும்படி.
101. மாழ்வர் - மயங்கிப் புலம்புபவர்.
102. காசு - குற்றம்.
103. கடு - நஞ்சு. ஓவி - வருந்தி.

காவிக் கண்வழிக் காமம்உண் டார்என,
வாவிக் கண்,மலி வண்டுஉறழ் மொய்த்தபேய்,
தாவிக் கண் கிழித்து, ஊடுத ழற்பொறி
தூவிக் கண்ணரும் கண்துயர் தோன்றுமே. 104

அஞ்சி வீமம் அழுங்குஉருக் காண்டலும்,
எஞ்சிலா நிறை நீர்இழிந்து ஓடலும்,
துஞ்சிலாவிழி தோய்அழல் தூவலும்,
விஞ்சி, நேரில, வெய்துஉறீஇ மாழ்குவார். 105

நால்வகைப் பொறி நண்ணி,ஐந் தாம்பொறிப்
பால்வகைப் புரை விஞ்சிய பான்மையால்,
சால்வகைப் புதவு எங்கணும் சாற்றுரை
மேல் வகைத்துயர், மெய்த்துயர் ஆகுமால். 106

முடிவிலாத் துயர்

ஈறும் ஒன்றில, இன்னணம் தீயரே,
மாறும் ஒன்றில, மாழ்கி அழுங்குஉளம்
தேறும் ஒன்றில. தீக்கடல் மூழ்குவார்,
காறும் ஒன்றில, வேகஎக் காலுமே. 107

உலைகொள் தீயில் இரும்பு உறழ், வெந்துவெந்து
அலைகொள் தீயில் அமிழ்ந்திஅ மிழ்ந்தியே,
கொலைகொள் தீ,யுகம் கோடிகொள் கோடிபோய்,
புலைகொள் தீயவர் பூதியில் வேகுவார். 108

பாடி ஆடி இன் பாதல், பகற்பல
நீடில், ஆகுல மாம்என நீங்குவாய்;
வாடி லாவளர் நோய்கள் மலிந்து,உகம்
கோடி கோடி பொறுப்பது கொள்கையோ? 109

இலைகள் எண்ணி, முகில் துளி எண்ணி,நீர்
அலைகொள் நுண்மணல் எண்ணியும், அத்துணை,
புலைகொள் பூதியில் ஆண்டுகள் போயினும்,
நிலைகொள் பீடைகள் நீங்கில வேகுவார். 110

---

104. உறழ் - போல. கண்ண அரும் துயர் — மதிப்பிடுதற்கரிய துன்பங்கள். கண் தோன்றுமே - கண்ணால் அடைவார்.

105. வீமம் அழுங்கு உரு - அச்சந்தரும் உருவம். எஞ்சிலா - விடாமல்.

106. ஐந்தாம் பொறி - உடல். சால்வகை - மிகுதியாய்.

107, காறும் ஒன்றில - கால அளவில்லாமலும்.

நல்லது ஒன்றில, ஆகுலம் நல்கியது
அல்லது ஒன்றில, ஆவிய மேற்கதிச்
செல்லது ஒன்றில, தீவினை செய்பகை
வெல்லது ஒன்றில, யாண்டையும் வேகுவார். 111

வேக வேக, விளிவுற வேண்டுவார்;
நோக நோகவும், பொன்றிலர், நோன்றிலர்,
ஏக ஏக அருந்துயர் எஞ்சிலா,
ஆக ஆகுலம், ஆற்றிலர் விம்முவார். 112

நரகத்தில் பாவிகளின் புலம்பல்

அந்தோ அந்தோ வீட்டை இழந்துஈங்கு அழல் மூழ்க,
வந்தோம்; அந்தோ! புன் இமிழ் நக்கி, வரைவின்றி
வெந்தோம்; அந்தோ! மாறில வேவோம்; வினைமுற்றி
எம்தோம், அந்தோ! இப்பகை ஈட்டிற்று எனஆர்ப்பார். 113

கெட்டோம்; அந்தோ! மின்னென ஒல்கிக், கெடுநன்றி
இட்டோம், அந்தோ! ஈட்டதின் இஃதே பயன்,அந்தோ!
பட்டோம்; அந்தோ! புல் நயன் நக்கிப் பரவீட்டை
விட்டோம்; அந்தோ! வேகுதும் அந்தோ! எனவேவார். 114

'கண்மேல் வைத்த மாசென, ஆசை கவர் உள்ளம்,
விண்மேல் வைத்த வான்திரு எண்ணு, வெருள்வீங்கி,
மண்மேல் வைத்த வாழ்வினை ஈட்ட, மலிகள்வாய்,
புண்மேல் வைத்த தீத்திரள், சேர்த்தோம்-புதவு'என்பார். 115

ஆருக்கொண்டோம் வெம்பகை, ஆருது அடுகோபம்
தேருக் கொண்டோம், வெங்கொலை செய்தே பழிதீர்ந்தேம்,
ஈருக் கொண்டேம் தீநரகு; அந்தோ! எரிகின்றேம்;
'மாருக் கொண்டேம் பேய்ப்பகை' என்றே மருள்கிற்பார். 116

---

111. ஆவிய மேற்கதி - விரும்பின வான்கதி. செல்லது - செல்லும் வழி

112. பொன்றிலர் - சாகாமலும். நோன்றிலர் - துயரைப் பொறுமலும்.

113. புன் இமிழ் - அற்ப இனிமை. எம்தோம் - எம் தீவினை.

114. கெடு நன்றி - பொய்யான நன்மைகள். ஈட்டதின் - ஈட்டியதின்.

115. வெருள் வீங்கி - மயக்கம் மிஞ்சி. களவு ஆய் - களவு செய்ததால்.
திரள் - திரள்போல்.

116. ஈரு - அதன் முடிவாக.

காதல் மிக்கால், கற்றவை கண்ணாக் கசடுஉள்ளத்து,
ஆதல் மிக்காப் பற்றிய காமத்து அமிழ்கின்றேம்;
நாதன் மிக்காம் நீதிவளர்த்த நரகெய்திச்
'சாதல் மிக்கா வேகுதும்'என்றே, தளர்கிற்பார். 117

"மெய்யார் நன்னூல் வேதம் நகைத்து, விழைவொத்த
மையார் புன்னூல் பல்கதை எண்ணி, வடுமல்கப்
பொய்யார் மையார் தேவரோடு, அந்தோ, புதவெய்தி,
மொய்யார் தீயின் மூழ்கினம்"என்றுஉள் முரிகிற்பார். 118

ஆய்வார் எண்ணா, நல்லறம் நிந்தித்து அழிவுற்றார்,
நோய்வார் நஞ்சுண் பார்,பசி யாற்றார், நுகர்வாற்றார்,
காய்வார், ஆர்ப்பார், வீழ்ந்துஎரி ஆழ்வார், கரைகாணாத்
தோய்வார் நீந்தார், ஊழியும் வேவார், துகள்தீயார். 119

சூசை வாமனை நோக்கிக் கூறுதல்

அணியும் பாங்கே காமம் அறுத்து,ஈங்கு அறம்எய்தத்
துணியும் பாங்கே, நிற்குஅரி தென்றாய்; சுடும்ஊழற்கு
அணியும் பாங்கோ நிற்குஎளிது என்பாய்? கணைவார்வில்
பணியும் பாங்கோடு, ஒன்னலர்ஏற்றும் பரிசன்றோய்! 120

நசையுற்று உற்ற தீதற நொந்தே, நடைஒன்றோ?
வசையுற்று உற்ற தீயுறீஇ, என்றும் வயா ஒன்றோ?
தசையுற்று உற்ற யாவரும் இஃதே தவிராது'என்று,
இசையுற்று உற்ற நூல்விதி சொன்னான்—இசைமேலான், 121

நரகநினைவே, பாவ வழிகளை விலக்க வல்லது என மக்கள் கருதல்

விண்டார் ஏறுஉள் பட்டென, அன்னான் விரிநன்னூல்
கொண்டார், அன்னார் கொண்டவை உள்ளிக் குழைகின்றார்,
கண்டார் என்னாக் கண்கள் புதைத்தார் கலுழ்கின்றார்;
'மண்டார் வேட்கைத் தீயற, இஃதே வழி'யென்பார். 122

---

117. மிக்கால் - மிகுதியால். மிக்கா - மிகும்படி.

118. விழைவு ஒத்த மைஆர் — ஆசைக்கேற்ப மயக்கும் தன்மையுள்ள. வடு - பாவம்.

119. ஆய்வார் எண்ணா — மெய்யை ஆராய்ந்தவர் வாய்மொழிகளை எண்ணாமல். நோய் வார் நஞ்சு - நோயை விளைவிக்கும் நஞ்சு.

120. பாங்கே அணியும்-நீ இன்பமென்று அணிந்த. ஊழற்கு-நரகத்தில்.

121. நடை - ஒழுக்கம். வயா - வருத்தம்.

122. விண்டு ஆர் ஏறு - மேகத்திற் பொருந்திய இடி. மண்டு ஆர் - (மனத்தில்) மொய்த்தல் பொருந்திய.

'இன்பாற் கொண்ட பாவம் இ யற்றும் இயல்புஇஃதேல்,
துன்பாற் கொண்ட நோன்பு இனிது'என்பார்; துகள்மல்கிப்,
பின்பாற் கொண்ட ஆகுலம் எண்ணூர், பிறழா(த)ஓர்
அன்பாற் கொண்ட தீதுஇனிது என்பார்'-அதுஎன்பார். 123

'பொன்நேர் ஒள்பூஞ் சாயலை வெஃகல், புதவுய்த்தேல்,
அன்னோர் உண்டோ ஓர்பகை, காத லலது' என்பார்;
'மின்னேர் ஒல்கி, மாறிய இன்ப வினை காட்டிக்
கொன்னே மாளும் வாழ்வு,உயி ருண்ணும் கொலை'என்பார். 124

நரகம் கொண்ட தீநிலை இஃதேல், நனி ஓர்ந்தால்,
விரகம் கொண்ட தீயை அவிக்கும் வினை என்பார்;
பிரதம் கொண்ட தீயவர் வைகும் பெரிது ஊழல்
சுரதம் கொண்ட நாம் உறும் வீட்டின் சுரம் என்பார். 125

என்ன நொந்தார், நொந்து உணர் வெய்தி, எரியத் தீ
உன்ன, உள்ஆர் தீ யற, உள்ளத்து உறு தண்ணம்
துன்ன வாழ்ந்தார், நல்லறம் எய்தத் துணிவுற்றூர்—
மின்ன விண்ணில் வீழ்துளி யொப்ப விழிநீரார். 126

வாமன் கண்ணீர் சொரிந்து சூசைமுனிவரை வணங்குதல்

மதுக்கலத்து அலர்பூ வாயான்
வழிந்ததே ஞெத்த சொல்லால்,
விதுக்கலத்து இழிந்த வில்போல்
விரித்த நூ லனைத்தும் கேட்டுப்
புதுக் கலத்து எரித்த தீம்பால்
பொங்கல்போல், உளத்திற் பொங்கி,
ஒதுக்கலற்று அருவிக் கண்ணீர்
உயிர்த்தனன் வாமன்; மாதோ. 127

---

123. இஃதேல்-இந்நரகமாயின். நோன்பு-தவம். பிறழாது - விடாமல்.

124. புதவு உய்த்தேல் - நரகத்திற்கு வழியாமாகில்.

125. பிரதம்கொண்ட - (தீயமுறையில்) புகழ்கொண்ட. ஆழல்-நரகம். சுரதம் - அன்பு. சுரம் - வழி.

126. உள் ஆர் தீ அற - மனத்தில் பாவத்தால் பற்றின தீ அவிந்து. தண்ணம் துன்ன - குளிர்ச்சி பொருந்த.

127. விதுக் கலத்து - சந்திரன் என்னும் ஏனத்தினின்று. ஒதுக்கல் அற்று - ஒடுக்கமாட்டாமல்.

நூற்கடல் துறையின் கேள்வி நுணங்கிய புலமை யோன்சொல்,
பாற் கடல் பதும மன்ன, படர்ந்த கண் இமையாக் கேட்டு,
மேற்கடல் திரைகள் பொங்க மேல்வளி அடித்ததே போல்,
நாற்கடல் தானை ஏருன், நவையறுத்து எழுந்து சொன்னுன். 128

தீயவர் சொல்லும் செந்தீத்
தேக்குஇருள் நிலத்தைக் காட்டி,
தூயவர் செல்லும் வீட்டைத்
தொடர்வழி காட்டல் செய்தாய்;
காயவர் குளிர்ப்பத் தண்அம்
கருணையோய்! என அங்கண், வான்
மீயவர் உவப்பத் தாள்மேல்
விழுந்து நீராட்டி னுனே. 129

விழுந்துற எடுத்து,உள் தாபம்
விளைத்தகண் கலுழிப் போற்றி,
அழுந்துறத் தழுவி, மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற,
செழுந்துறவு இறைவன் சொன்ன
தேறிய உணர்வில் தேறி
எழுந்துறத், தெளிந்த நெஞ்சான்,
இதனை மீண்டு உரைத்தான்; மாதோ. 130

வாமன் சூசைமுனிவரை நோக்கிக் கூறிய அன்புமொழி

கான்முழுது(ம்) இறைஞ்சு(ம்) நோன்பின்
கடற்கரை கண்ட நல்லோய்!
தேன் முழுது இறைஞ்சும் தீஞ் சொல்
தேறலைத் துளித்து, நீயே
வான் முழுது இறைஞ்சும் நன்னூல்
வழங்கிய ஓதி கேட்க,
ஊன் முழுது இறைஞ்சும் கோட்டின்
உவா,மதம் மாறிற் றன்றே. 131

---

128. ஏருன் - ஏருக நின்ற வாமன்.

129. இருள்நிலம்-நரகம். காயவர் - காயுமனத்தவர். வான்மீயவர் - வானவர்.

130. கண் கலுழி போற்றி - கண்ணீரைத் துடைத்து. துறவு இறைவன் - சூசை.

131. கான் - கானகம். ஓதி - உணர்ச்சி. ஊன் முழுது இறைஞ்சும் கோட்டின் உவா-ஊன் வணங்கும் கொடுங்கொம்புடைய [illegible]ந்த யானை (வாமன்).

உள்ளூறத் தெளிநூலால் கீழ்
உலகமே சுடுந்தீ என்றாய்;
அள்ளூறக் காமத் தீயை
அவித்ததண் பொய்கை யன்றோ?
வள்ளூறப் புகைமொய்த்து, அங்கண்
மண்டிருள் தவழும் என்றாய்;
தெள்ளூறக் கண்முன் இட்ட
திருவிளக் காயிற்று; அன்றோ. 132

வாமன் தன் நெஞ்சை நோக்கிக் கூறியவை

சுழல்தரப் புகைகள் நாறும்
தூய்மலர்த் தவிசில், தேம்பூ
நிழல்தரத் தொடலைக் கூந்தல்
நீர்மையார் தோள்மேல் துஞ்சி,
அழல்தரக் கனன்ற மஞ்சத்து
அழன்று அழன்று, ஊழி காலம்
புழல்தரப் புண்பட்டு, அங்கம்
பொடிபடல் இனிதோ! நெஞ்சே! 133

உலைவைத்த பொறிச் செந் தீயோடு
உடன்றவேல் உருவிப் பாய,
மலைவைத்த அருவிக் கண்ணீர்
மலிந்து அழல், இனிய தென்றோ—
சிலைவைத்த பகழிச் சாயல்
திருநுதல் விழியை வெஃகி,
விலைவைத்த மகளிர் வஞ்ச
வினைக்கொடு, மருண்டாய் நெஞ்சே! 134

தீய்த்திரள் தளிர்த்த நோயால்
தீயவர் புலம்பும் ஓதை,
பேய்த்திரள் தளிர்த்த ஓதை
பிளந்தகாது உணல் இன்பு என்றோ,
வீய்த்திரள் தளிர்த்த தேன்போல்
விளம்பிய சொல்லென்று எண்ணிப்
போய்த்,திரள் தளிர்த்த பொய்யின்
போழ்ந்தவாய் விழைந்தாய்—நெஞ்சே! 135

---

132. கீழுலகம் - நரகம். அள்ளூற - நிறைந்த.

133. நிழல்தர - விளங்கின. தொடலை - மாலை. புழல்தர - துளைத்து.

135. தீய்த்திரள் தளிர்த்த - திரண்ட தீ விளைவித்த. நோய் - துயர். வீய் திரள் தளிர்த்த - மலரில் திரண்டு ஒழுகும். திரள் தளிர்த்த பொய்யின் - நிறைந்த பொய்யால். போழ்ந்த வாய் - (உயிரைக்) கொல்லும் வாய்மொழி.

அலைவிரவு ஊழல் வைகி,
அரவின் நஞ்சு அயின்று,எஞ் ஞான்றும்
கொலைவிரவு ஊழிச் செந்தீக்
குளித்தலே இனிய தென்றோ,
வலைவிரவு அணியிற் பின்னி
மலர்தவழ் கூந்தல் வெஃகிப்
புலைவிரவு உணர்ந்த காமப்
புணரியிற் குளித்தாய் — நெஞ்சே! 136

கோடிழந்து அழியும் பைம்பூங்
கொள்கை, வாடுஎழிலைப் பேணி,
ஏடிழந்து ஒழுகும் தேன்போல்,
இயைந்த புல்லின்பம் நக்க,
வீடிழந்து ஊழிச் செந்தீ
வீழ,நல் லறங்கள் செய்யும்
பீடிழந்து ஒழுகு வாரிற்
பேதையர் இல்லை; நெஞ்சே! 137

கால்வழி காயும் பூவும்
கடியுமென்று, இளமை நம்பா,
மால்வழி தளிர்த்த காம
வழிவளர் நிரையம், தந்த
நூல்வழி ஒழுகல் விள்ளா,
நுகர்ந்த நஞ்சு உமிழ்ந்தே உய்தி;
சூல்வழி சனித்த பாவத்
தொடர்பிேனாடு ஊழ்த்த நெஞ்சே! 138

வள்ளிய உருவம் தீமுன்
வல்லையே உருகும் வண்ணத்து,
உள்ளிய அருமை யாவும்
ஊழல்முன் கரைந்து நீங்கி,
எள்ளிய உள்ளங் கொள்மாசு
இசைத்த நூல் பளிங்கிற் கண்டு,
தெள்ளிய தவ நீராட்டிச்
செயிர் அறத் தெளிதி நெஞ்சே! 139

---

136. ஊழல் - நரகம்.
137. கோடு - கிளை. பீடு - மாட்சிமை.
138. கால்வழி - பெருங்காற்றின் முகத்து. காமவழி வளர் - காமத்தால் வளருகின்ற. நிரையம் தந்த நூல்வழி-நரகவேதனையாகிய நூலைக்கொண்டு. விள்ளா - விடாமல்.
139. வள்ளிய உருவம் - (மெழுகினால்) வளமாய்ச் செய்த பாவை.

'தொல்வினை இனிய' என்று துகளுறத் தோன்றுங் காலும்,
'நல்வினை அரிய' என்று நலங்கெடத் தோன்றுங் காலும்,
கொல்வினை நிரையச் செந்தீக் குளிப்ப, நல் உணர்வில் தாழ்ந்து,
வல்வினை ஊக்கம் பூண்டு, மருளல்; என் நெஞ்சே! என்றான். 140

*சூழநின்றவர் சொல்லிய புகழ்ச்சி*

என்னஇ யம்பினகால்,
உன்னரும் இன்பமுறீஇ,
துன்னவர் சூழ்மகிழ்வு
பன்னரும் பான்மையதே. 141

இனையஇ யற்றியநூல்,
அனைய, எ மக்களவோ?
வனைய அருஞ்சுடரைப்
புனைய ஓர் பூணுளதோ? 142

ஐவழி ஆசு, தரும்
பொய்வழி போக்கி, அற
மெய்வழி மேவி, நரகு,
உய்வழி ஒன்றுளதே. 143

காதல்அ லாது, கடும்
சாதல்இ லாது; தகும்
ஓதல்ஒ ழித்து, நரகு–
ஆதலும் வித்ததுவே. 144

இறந்தனர் வேகும்எரி,
பிறந்தனர் ஓர்ந்து பெறின்,
துறந்தனர் துஞ்சுளி, வான்
சிறந்தனர் சீர்த்துஉவப் பார். 145

என்றனர் என்று எவரும்
கன்றினர், காட்சியுறீஇ
நின்றனர், வீட்டுநெறி
சென்றனர் சீர்பெறவே. 146

---

140. தொல்வினை - முன்விரும்பிய பாவம். துகள் உற - பாவம் செய்ய.
141. துன்னவர் - சூழ நின்றவர்.
142. நூல் - வேத நூல். அனைய - உவமை கூற. சுடர் - சூரியன்.
143. ஐ வழி - ஐம்பொறி வழி ஆசு — பாவம்
144. நரகு ஆதலும் — நரக வேதனை விளைவதற்கு.
145. எரி - நரகத்தீயை. ஓர்ந்து பெறின் — நினைத்தால்.
146. கன்றினர் — வருந்தி. காட்சி யுறீஇ — தெளிந்து. துஞ்சுளி — இறக்கும் போதில்.

அள்ளிய வாமன்—அரில்,
எள்ளிய யாவருமே
தெள்ளிய சீர்இறுதி
உள்ளி, அன்று ஓதினரால். 147

செல்வர்—உறுஞ் செயிரும்,
வல்வரும் மாண்பு அறமும்,
எல்வரும் ஒத்து, எவனும்
சொல்வரும் தோற்றமதே. 148

சூசை, வாமனுக்கு உபதேசம் செய்தல்.

தெளித்த கால், உரைத்த விஞ்சை,
சிறப்புற, உழுத பூழி
துளித்தகால் விதைத்த லென்ன,
துணிவுறத் தெளிந்த வாமன்
களித்தகால் உணர்ந்த ஞானம்,
காய்ந்தகாற் சிதையுமோ' என்று
'அளித்த கால் இது'என்று ஆய்ந்த
அருந்தவன், இனிதிற் சொன்னான், 149

ஐம் பொறிப் பகைகண்டு அஞ்சி
அடக்கலின், ஆமை போல்வாய்;
வெம்பொறிப் புதலை ஓர்ந்து
வினைபகை சிறிதென்று எண்ணேல்;
பைம்பொறிப் பாந்தள் தம், கூர்
பல்பட மதநீர்க் குன்றின்
செம்பொறிப் புகைக் கண் யானை,
சிதைந்து உயிர் மாளும் அன்றோ? 150

147. அள்ளிய அரில் — மிகுந்த பாவத்தால். ஓதினர் — சொல்லிப் புகழ்ந்தனர்.

148. வல் வரும் — வல்லமையால் வந்தடையும். எல்வரும் ஒத்து—சூரியனும் ஒளியும் போலாகி. சொல்வரும் தோற்றமதே — சொல்லத்தகும் தன்மையுடையன.

149 தெளித்த - தெளிந்த. துளித்தகால் - மழை பெய்த காலத்தில். காய்ந்தகால் - (துன்பம் வந்து) மனம் காய்ந்தால். அளித்த கால் - இரட்சிக்கும் காலம்.

150 வெம் பொறிப் புதலை - செந்தீநரகத்தை.

பிரிந்த தென்று ஒழித்த பாவம்,
பெறுமிடத்து அணுகேல்; வேலோய்!
அரிந்த தென்று உறங்கும் ஆசை
அமைதியால் விழித்துக் கொல்லும்;
எரிந்தநின் காமத் தீயை,
இற்று,அற அவித்தது என்னேல்;
கரிந்ததென்று இருந்த, பல்கால்,
கால்முகத்து எரியும்-தீயே. 151

அசும்பிடை ஒளித்த செந்தீ
அறலென எடுத்தார் யூதர்;
தசும்பிடை எடுத்த நீரைச்
சமிதைமேல் தெளித்து வாரி,
விசும்பிடை நீங்கி, வெய்யோன்
வெங்கதிர் படத்,தீப் பற்றிப்
பசும்பிடி சூழ வாட்டிப்
படர் நெருப் பாயிற்று அன்றோ. 152

தண்ணுறும் குணங்கொண் டாலும்,
தழலும், தன் குணத்தைக் காட்டி,
விண்ணுறும் கதிரொன்று உண்கால்
வெங்கனல் எரிந்த தேபோல்,
கண்ணுறும் கனலுங் காமம்,
கண்ட ஓர் கவின்முன் காய்ந்து,
புண்ணுறும் கசடு ளாகப்
புழுங்கி வெந்து, எரியு மன்றோ? 153

குலம்புரி கொடிய பேய்கள்
கொலைத் தொழிற் கருவி சூழ்ந்து,
சலம்புரி வலையை வைக்கத்
தலைப்படின் பிரித லாற்று;
வலம்புரி தவத்தின், நாம்அவ்
வலையுறு விலகல் வேண்டும்;
கலம்புரி பைம்பூ மூழ்கிக்
கதிர்த்த பொற் குன்றின் மார்போய்! 154

---

151 இற்று - இது. பல்கால் - பல முறை.

152. அசும்பு - கிணறு. தசும்பு - குடம். சமிதை - விறகு. பசும்பிடி - பச்சிலை.

153. உண்கால் - உட்கொண்டபொழுது. கண்ணுறும் - கண்வழியாக.

154. சலம் - பொய் - தீவினை கலம்புரி - மணி வடத்தில் அணிந்த. கதிர்த்த - விளங்கின.

முற்பட உரைத்த விஞ்சை
மொழிகுதும் தளிர்ப்ப மீண்டே;
விற்பட எதிர்த்துச் செய்போர்
வினையிது நோக்கல் வேண்டா;
மற்பட வெற்றி வேண்டின்
மருள்படாது ஒடுங்கல் வேண்டும்;
கற்புஅட ஆவி சால்பு
காண்—எனத் தெளிக வேலோய்! 155

சூழ நின்றார்க்குக் கூறுதல்

கச்சொன்றிட்டு உணர்வோடு ஊக்கம்
கட்டி, மெய்ச் சகட்டை ஓட்டி,
நச்சொன்றிட்டு ஏதச் சேற்றுள்
நல்லுயிர் அச்சுஇற் றாய்,மற்று
அச்சொன்றிட்டு ஊர்தல் தேற்றாது
அழும்பலர் கண்டீர்; நல்லோர்
மெச்சொன்றிட்டு அச்சுஇ றாமுன்
வீடுற ஊர்மின்; பாகீர்! 156

உபதேசப் பயன்

விண்டுளி கமழக் கஞ்சம் வெங்கதிர் உண்டதேபோல்
பண்டுளி உரையிற் சொன்ன பயனெலாம் உண்ட யாரும்,
விண்துளி முத்தமாக வெள்வளை உண்டதேபோல்
பண்டுளி மருள்நீத்து ஓதி பரிந்து,அற மாகச் செய்தார். 157

கயல்பொருது உகளிப் பாயக் கலங்கிய குமரி யன்னம்,
அயல்பொரு சேவ லோடும் அதிர்ந்துஎழச் சாய்ந்த செந்நெல்
வயல்பொருவு ஒழிந்தநாடு, வளன்தரும் ஓதி தன்னால்
புயல்பொருது உயர்வான் வீட்டைப் புகும் மறுகு ஆயிற் றன்றோ? 158

155. மல்பட — திறங்கொண்டு. கற்பு அட - கற்பைக் கொல்வதற்கு. ஆவி சால்பு — ஓர் ஆவிபட்டால் போதும்.

156. அச்சு இற்று ஆய் — ஓர் அச்சு முறிந்த பின்பு. நல்லோர் மெச்சு ஒன்று — நல்லோர் மெச்சின. பொருள் — அறம். பாகீர் — பாகரே.

157. விண்டுளி கமழ - மலர்ந்து மணம் வீச பண்டுளி - பழைய. ஓதி - உணர்ச்சிகளை. பரிந்து - பேணி.

158. பொருவு ஒழிந்த - (சிறப்பில்) நிகராகாத மறுகு - பெருவழி

# 5. வேதக் கெழுமைப் படலம்

சூசை உரையை மக்கள் புகழ்தல்

தாய்அணி யாக, மார்பில் தனையனை துஞ்சல் போல,
வேய்அணி யாக வேய்ந்த வேதநூல் துஞ்சு மார்பன்,
காய்அணி யாக வாய்ந்த காவில்,மீண்டு ஒருநாள் வைகி,
வாய்அணி யாக, ஓதி வகுத்து,நீடு உரைத்தான் மாதோ. 1

ஏழ்வரும் கதிரைத் துய்ப்ப ஏடுஅவிழ் கமலம் போல
சூழ்வரும் குழாத்து யாரும், சுருதிநூல் செவியின் மாந்தி,
கேழ்வரும் பதுமம் பெய்தேன், கீடம்,உண்டு இமிரும் போல,
தாழ்வரும் புரைகள் நீக்கித் தகவுறீஇப் புகழ்ந்து நின்றார். 2

சுரமி எனும் கிழவி இகழ்தல்

கூனுருக் கோலில் ஊன்றிக் குலுங்கிய சென்னி ஆட்டி,
ஊனுருக் கழிந்த நீள்தோல் உடுத்தஎன்பு ஒழுங்கில் தோன்றி,
மீனுருக் கழிந்த கண்புண், மெலிமுகச் சுரமி என்பாள்,
வானுருத் தவத்தோன் சொன்ன மறைமொழி பழித்துச் சொன்னாள். 3

"விள்ளிய புதுத்தேன் பைம்பூ விரும்பிநற் கனிநீத் தன்ன,
தெள்ளிய தவத்திற் பன்னாள் தேடிய பயன்கள் யாவும்,
எள்ளிய அவத்தின் நீங்க, இறைஞ்சிய தேவர் நீக்கி,
உள்ளிய நவநூல் எண்ணி ஒழுகலோ உறுதி" என்றாள். 4

சூசையின் அறிவுரையும் சுரமியின் குதர்க்கமும்

"குடக்குநேர் வைகும் தேயம் குணித்தனர், செப்பம் மாறி,
வடக்குநேர் நெடுநாட் செல்ல, 'வழியதன்று,'என்று கேட்கின்,
தொடக்குநேர் தடஞ்செல்லாத துயரலால், காட்டுகின்ற
கிடக்குநேர் நெறிசெல் லாரோ?-கேள்வியர்" என்றான் சூசை. 5

---

1. துஞ்சும் போல - துயின்றாற் போல. காய் அணியாக - கனிகளை ஆபரணமாக. ஓதி வகுத்து - உணர்ச்சிகளை வகுத்து.

2. ஏழ்வரும் - (உதயத்தில்) எழுந்த. கேழ்வரும் - நிறத்தையுடைய. கீடம் - வண்டு.

3. மீன் உருக் கழிந்த - மீனொத்த வடிவை இழந்த. கண்புண் - கண் புண்ணாக நின்ற.

4. எள்ளிய - இகழ்ச்சியோடு. அவத்தின் - அவமாய்.

5. செப்பம் - வழி. கேள்வியர் - நல்லறிவுடையவர்.

"நின்னெறி கதியைச் சேரும் நெறியென, அறிய நாங்கள்,
'என்னெறி, வழாமை செல்லும்' என்னில் நீ, சால்போ?" என்றாள்;
"நன்னெறி உரையிற்கேட்கின் நணுகிலீர், உரைத்த ஞானத்து
அந்நெறி உரியதென்றால், அறிந்துஉளம் தெளிக"-என்றான். 6

"பண்மறைத்து, இனிதின் நீயே பணித்த சொல், மறுக்கலாற்றாக்
கண் மறைத்து இருட்டும் மாயைக் கட்டெனத் தோன்றும்" என்றாள்;
புண் மறைத் திட்ட பாலால் புண் ஆற, மாயை என்றோ?
உள் மறைத்து ஒளித்த நன்றி, உறும்பயன் காட்டும்"என்றான். 7

சுரமி கண்ட கருவும் கேட்டவர் நகைத்தலும்

சுனைவளர் குவளை யாதி சொரிமது மலர்கள் வாடி
நனைவளர் பொய்கை வற்ற நானின்று கனவிற் கண்டேன்;
வினைவளர் நவங்கள் நாட்டி, விரிந்தநின் சொல்லைக் கேட்டுப்
பனைவளர் நாடு நைந்த பரிசிதே என்றாள்—மூத்தாள். 8

"தெருள்தவழ் பகலின் நோக்கச்
சிதைந்தகண், கிழவி, இல்லாது,
இருள்தவழ் இரவின் நோக்கல்
இயல்பு"என எவரும் நக்கார்;
மருள்தவழ் சினங்கொண்டு, அன்னாள்,
"வடிவுறும் கனவும் பொய்யோ?
பொருள்தவழ் கிலதேல், தோன்றப்
பொருட்டு என்னோ? சொன்மின்" என்றாள். 9

சூசை கனவுதோன்றும் காரணங்களை விளக்குதல்

சினவிடை, மருண்ட உள்ளம்
தெளிவுறப் பொங்கல் வேண்டா;
கனவிடை உணர்ந்த காட்சி
கனவிடை அடைந்த பொன்போல்
மனவிடை எண்ணில், கொன்னே
வடுவலால், பயன்ஒன்று உண்டோ?
எனவிடை உரைத்த சூசை
இயல்பட விரித்துச் சொன்னான். 10

---

6. சால்போ - போதுமோ.

7. பண் மறைத்து - வீணைக்குரலை மறைத்து. மாயை என்றோ - மாய வித்தை என்பாயோ.

9. தோன்றப் பொருட்டு என்னோ - தோன்றுதற்குக் காரணம் என்ன?

10. சினவிடை பொங்கல் வேண்டா - கோபம் உட்பொங்க வேண்டாம். மனவிடை - மனத்தில்.

பகலிற் கண்டவை கனவில் தோன்றும்

படம் புனைந்து எழுதி னாற்போல்
பகலிடை இருகண் ணோடு,ஐந்து
இடம் புனைந்து உணர்ந்த யாவும்,
எழுதிய நினைவில் தோன்றி,
கடம்புனைந்து அதிர்கைம் மாவும்
காகமும் கண்ட பின்பு,
சடம்புனை கனவில் யானை
தலைக்குமேற் பறக்கக் காண்பார். 11

மனத்தில் மிகுந்த எண்ணம் கனவாம்

தெருள்புறங் கொண்ட அத்தம்,
சேர்ந்து அடுத் தவற்றைக் காட்டும்;
மருள்புறங் கொள்க ணவும்
மனங் கடுத் தவற்றைக் காட்டி,
அருள்புறங் கொண்ட தாயே,
அகன்ற தன் மகவைக் காண்பாள்;
வெருள்புறங் கண்டபேதை,
வினைப்படை எதிர்ப்பக் காண்பாள். 12

ஏக்கமும் எண்ணமும் விளைந்து கனவில் உருப்பெறும்

காய்ந்த ஓர் சுரம், மெய் நொந்தார், கடிமலர்ச் சுனைகள் காண்பார்;
வேய்ந்த ஓர் பழியைக் கொண்டார் வினைப்பகை முரியக் காண்பார்;
தீய்ந்த ஓர் மிடியின் மிக்கார், திருநலம் மருவக் காண்பார்;
வாய்ந்த ஓர் பற்றல் பாலால், வரும் கனவு உருவம்; மாதோ. 13

பித்த மிகுதியால் ஒழுங்கற்ற கனவுண்டாம்

இருள் படப் புகைமொய்த் தென்ன எஞ்சிய அறிவு குன்றும்,
மருள் படப் புகைந்து மண்டி மலிந்த பித்து ஏறுங் காலை,
தெருள் படத் தெளிந்த தேபோல், சீரிய கனவு காட்டி,
வெருள் படப் பதைத்து,உள் அஞ்சி வினைகொள்வார்-பித்தர் அன்றே. 14

---

11. ஐந்து இடம் புனைந்து - ஐம்பொறி வழியால். கடம் - மதம். கைம்மா -யானை.

12. தெருள்புறங்கொண்ட - தெளிந்த. அத்தம் - கண்ணாடி.

13. சுரம் - காய்ச்சலால் பற்றல் பாலால் - பற்றுதலின் தன்மையால்.

விஞ்சிய காலைப் பித்து, வினையினுல் பித்தர் செம்மை
எஞ்சிய நினைவுற்று, ஆயாது, இழிவுறப் பிதற்றும் சொல்லும்,
துஞ்சிய காலை, மெய்போல் தோன்றிய கனவும் ஒன்ரும்;
அஞ்சிய உளத்துஇஃது எண்ணில், அறிவிதோ' என்ருன்-சூசை. 15

கோபமுடன் கிழவி செல்லுதல்

நோயுடை இருகண், வெய்யோன் நோக்கிலா மூடிற்றென்ன,
தாயுடை அன்பிற் சூசை தந்தநூல் உளத்திற் கொள்ளா,
தீயுடை வெகுளி பொங்க, சீறிய சுரமி சாய்ந்து,
பேயுடை வஞ்சம் உள்ளிப் புகைந்த நெஞ்சு ஆற்ருள் அன்ரே. 16

காழ்வளர் தருவின் கோட்டம் கைக்கொடு நிமிர்க்கலாற்ரு,
ஊழ்வளர் புண்ணும் ஆரு, ஊழுழிக் கிழவர் கொண்ட
தாழ்வளர் கசடும் ஆற்ருர்; சாற்றிய அவரி னுங்கும்,
ஆழ்வளர் கடலின் வஞ்சத்து அறிவிலார், என்றும் தேருர் 17

தன் தேவர்க்குற்ற இழிவு கண்ட சுரமி புலம்பிச் சோர்தல்

விரைவாய்ப் பூந்தாழை முகைகள் விண்ட வெறி விம்மும்
கரைவாய்ச், சங்கங்கள் கதிர்முத்து ஈன்ற கடல் சூழும்
தரைவாய், பூணொக்க, எசித்து நாட்டில், தகவுய்க்கும்
உரைவாய் கதிர் வெள்ளம் ஒளிப்ப, சுரமி உணர்ந்தாள். 18

"உள்ளங் காய்ந்துஉலைய, பசும்பொற்
கோயில் ஒருங்கு,அந்தோ,
பள்ளங் காண்அடியே வீழக்
கண்டேன்; பழிப்பு உய்க்கும்
கள்ளங் காட்டியஓர் மறையும்
யாரும் கனிந்து உள்ளி,
வெள்ளங் காட்டுஅழிவும், இனிக்காண்
பேனே மெலிந்து" என்பாள். 19

---

15. செம்மை எஞ்சிய - ஒழுங்கில்லாத. ஆயாது - ஆராயாது.

17. தருவின் கோட்டம் - மரத்தின் கோட்டம். ஊழ் வளர் புண் - பழம் புண்.

18. பூண் ஒக்க - ஆபரணமாய் விளங்க. தகவு உய்க்கும் உரை வாய் - மேன்மையிற் செலுத்தும் வேதநூலாகிய. ஒளிப்ப - மறைக்க.

19. அடியே - அடியோடு. வெள்ளம் காட்டு அழிவும் - வெள்ளமாக வரும் அழிவும்.

"பொன்னார் உலகொப்பப் பசும்பொன்
இஞ்சிப் புகைதவழ,
மின்னார் மணம்தேக்கித் தொழுத
தேவர் வெறுத்து,அந்தோ,
கொன்னார் முனிவேடத்து ஒருவன்,
மாயைக் கொடுஞ்சொல்லால்,
ஒன்னார் கண்டுஉவப்ப, ஒழிந்தது
இந்நாடு ஒருங்கு" என்பாள். 20

"எந்நாடு எக்குலம் எம் முறை ஒன்று
அறியாது, இரந்தொருவன்
சொல்நா டினன்,அஃதே சுருதி
யாகத் தொடர்ந்து எண்ணி,
முன்னாள் துணையில்லா வாமன்
தானும், முயங்குகின்ற
பின்னாள், தொடரார் ஆர்? பொறுக்கும்
தன்மை பிழை" என்பாள். 21

என்ன வஞ்சனைகள் பலவும் கூறி, ஈர்த்துஅற, நான்
அன்ன நவமறைக்குக் கேடு,இன்று உய்ப்பேன், அரிது'என்று
சொன்ன தன்மைத்தே, வெகுளி விம்மும் துகள்பொங்கி,
முன்னம் மெலிந்தலைந்த பின்னர்ப், பள்ளி முயங்குகின்றாள். 22

பேய், சுரமி முன் தோன்ற அவள் வணங்குதல்

முன்னா ளுற்றஅரசு இழந்த பேயும், முனிதன்மேல்
பன்னா ளுற்றபகை செலுத்தும் தன்மை, 'பழிப்பின்றி
இன்னாள் உற்றபகை ஆகும்' என்ன, கனவில்தான்
அன்னான் உற்றசினம் தூண்ட அங்கண் தோன்றிற்றே. 23

வரிந்த மயில் அகவி, மலர்ந்த முகைவாய் மதுஊழ்த்துச்
சொரிந்த நெடும்பொழிற்கண், மெலிந்து வாடும் துயர்முகமாய்,
திரிந்த வண்ணம்தான் இறைஞ்சும் தெய்வம் சென்றெதிர்ப்ப,
கரிந்த கனவிடையிற் கண்டாள், கண்டு கைதொழுதாள். 24

---

20. இஞ்சி - மதில்.
21. துணையில்லா - நிகரில்லாத.
22. அரிது - அரிய முறையாக. பள்ளி முயங்குகின்றாள்-துயில்கின்றாள்.
23. முனி - சூசை. இன்னாள் - இவள்.
24. எதிர்ப்ப - எதிராக வர.

உலகிற்கு அளிசெய்தோய், துயரம் பூத்த உணர்வென்னே?
அலகிற்(ற) அருந்திறலோய், பகைநிற் கென்னே? அரிது என்னல்
விலகித் தவிர்தன்மை என்னே? என்ன விழுந்திறைஞ்சி.
இலகித் தகும் மின்போல் நோக்கி, உயிர்ப்போடு இயம்பிற்றே. 25

சுரமி கனவில் பேய் கூறுதல்

மின்னுயிர்த்து, எரி விளக்கு ஏற்றி, வெந்து அகில்
இன்னுயிர்த்து எழும்புகை தேய்க்கும் இஞ்சி சூழ்
பொன்னுயிர்த் தடமணிக் கோயில் போல்,எனை
மன்னுயிர்த்(த) இறைவனுய் வணங்கி லார்; அரோ. 26

நாடில குலமில நயந்த வாழ்வு செய்
பீடில முனிவரன் பிதற்றும் சொல்லினுல்,
கோடில உனையலால், குழைந்து நோக நான்,
ஈடில அனைவரும் என்னை நீக்கினுர். 27

பெய்த ஓர் மாரியாற் பெருகு வெள்ள(ம்)முன்
செய்த ஓர் அணையென, திளைத்த தீதெலாம்
கொய்த, ஓர் உதவிநீ குணித்துச் செய்கிலால்,
எய்த ஓர் பயன், இனி இலையென்றிட்டதே. 28

சுரமியின் அழுகை

கொல்லென அலறி,உட் குலைந்தெ ழுந்தனள்;
வில்லென உருவென ஒன்றும் வேய்ந்திலாது,
அல்லென இருண்ட நெஞ்சு அழுங்க நொந்தனள்;
ஒல்லென அருவிநீ ரொழுகும் கண்ணினுள். 29

ஒளித்ததன் உயிர்,உடல் தேடும் ஒத்து,அவா
அளித்த பால் உணர்வெலாம் ஆய்ந்துதேறிலள்,
சுளித்தநெஞ்சு உளைந்த பின் தோன்றும் சூழ்ச்சியால்,
களித்ததன் உளத்து,இவை கனியக் கூறினுள். 30

---

25. இலகித் தகும் - இலங்கிடும்.
26. மின் உயிர்த்து - மின்னி. மன் உயிர்த்த - நிலைகொண்ட.
27. கோடு இல - குறையில்லாத.
28. கொய்த - கொய்ய
29. வேய்ந்திலாது - தோன்றுமல்.
30. தேடும் ஒத்து - தேடினற்போல.

சுரமியின் சூழ்ச்சி

விண்தொழும் விதியென வளன் விளம்பிய
பண்தொழும் உரைக்கு,உரை மறுக்கும் பாலதோ?
புண்தொழும் அயில்கொடு பொருத தன்மையால்,
மண்தொழும் அரசுசெய் வலம் இஃதாம் அரோ. 31

வீரன் நாவகனுல் சூசையைத் தண்டிக்கக் கருதுதல்

பூஅகல் மாலேயோடு ஊக்கம் பூண்டு,கோல்
தூவுஅகல் முகிற்கையான், சுளித்த நெஞ்சினன்,
நாவகன் என்னு(ம்)நன் ஞமை வேல்ஒரு
சேவகன் உறுதியால், செயங் கொள் வாம்;அரோ. 32

நூல்முகத்து உரை நலம் நுதல்கிலான்,ஒளி
வேல்முகத்து எரிந்தமுன் வெகுளி - நீதியான்,
வான்முகத்து அசனியான், மனத்தில் ஓர்ந்தவை
கோன்முகத்து உகந்தனுய், முடிக்கும் கொள்கையான். 33

ஆயினன் அருகுபோய், அழுது காட்டிய
நோயினல் இரங்குஉளம் நுழைந்து, வெஞ்சினத்
தீயினல் அழற்றுதும் என்று தேறியே,
போயினள் - அரும்பகை புழுங்கும் நெஞ்சினள். 34

சுரமி நாவகனிடம் சென்று புலம்புதல்

சுதையொளி உச்சிஆடும் சுடர்க்கொடி மாடத்து ஏகி,
புதையொளி பரப்பி நாறும் பொன்மணி தவிசிற் சாய்ந்த
ததையொளி வைவேல் வல்லோன் தாள்முனர், அழுது வீழ்ந்தாள்
உதையொளி முன்னர் வீழ்ந்த ஒருங்குஇருள் அருந்து(ம்) நெஞ்சாள். 35

---

31. புண்தொழும் அயில் கொடு — ஊன் (அஞ்சி) வணங்கும் வேலேக் கொண்டு. அரசு செய் வலம் - அரசன் செய்ய வேண்டிய வன்செயல்.

32. கோல் தூவு - அம்பினேப் பொழியும்.

33. நுதல்கிலான் — ஆராயாதவனுய். கோன்முகத்து உகந்தனுய் — அரசனுக்கு உகந்தவனுய்.

34. ஆயினன் - அக்குணத்தையுடைய நாவகன்.

35. சுதை - வெண்சுதை, சுண்ணம்பு. ததை ஒளி - ஒளி நிறைந்த. உதை ஒளி - உதய சூரியன்.

சென்றுவீழ் சுரமிநோக்கிச் 'செப்புதி, கொடிய வந்த;'
என்று நாவகனும் கேட்ப, எழுந்துகூன் உடற்கோல் ஊன்றி,
நின்றுபேர் உயிர்ப்பு வீக்கி, நீர்மழை இருகண் தூவிக்
கன்றுவாள், சோர்வாள்; வஞ்சம் கக்கியே இனைய சொன்னாள் 36

சிலைவைத்த பகழிமாரி சிந்துபு, கடந்த வெம்போர்க்
கொலைவைத்த குருதிக் கோட்டுக் குஞ்சரத் தன்னோய்! முன்னாள்
அலைவைத்த உலகம் காத்தாய்; அவிர்ந்தபொன் னுலகம் காக்கக்
கலைவைத்த உணர்வோய்! இன்று கருதலே வேண்டு மன்றோ? 37

முந்துஅழல் தறுகண் தூவ முரண்படை முரிக்கும் யானை
வந்து,அழல் பரப்பும் சீற்றம் மயக்கிய வீரவல்லோய்!
சிந்துஅழ லுட(ன்)நின் ஒன்னார் சிதைத்தனை; தேவர்க்குற்ற
கொந்துஅழல் ஒன்னார் தம்மைக் கொன்று,இனி வெல்வாய் அன்றோ. 38

வேய்நிறக் கரும்பு நக்கும் விரிதலைக் கதலி ஊழ்த்துத்
தூய்நிறத் தேறல் பாய்ந்து, துணர்வயல் விளை இந் நாடே,
தீய்நிறக் கரிந்து வாடத் தேவரை ஒருங்கு நீக்கி,
நோய்நிறக் கருத்தில், யாரும் நூதனம் அணுகி னாரே. 39

முனிஉருக் காட்டி யாரோ, முறைகுலம் ஒன்று மில்லான்,
பனிஉருக் காட்டித் தண்ணம் பயத்த,அன்பு எழுவ கூறும்,
கனிஉருக் காட்டித் தீஞ்சொற் கண்ணியால் உளத்தை வீக்கி,
நனிஉருக் காட்டி வாய்ந்த நான்மறை ஒழியச் செய்தான். 40

'மாகையோ மயலோ யாதோ, வறுமையான் உரைகள் வெஃகி,
ஓகையோடு எவரும் போய்வே றொருமறை விரும்பிக் கேட்ப,
தோகையோடு ஒழிந்து வீழ்ந்த துணைமயி லென்னக் கோயில்
ஈகையோடு இனிஎம் தேவர்'என்று அழுது உரைசோர்ந்தாளே. 41

---

36. கொடிய வந்த - கருதி வந்த கொடுஞ்செயலை.

37. கோட்டு - கொம்புடைய.

38. தறுகண் - வீரக்கண்.

39. வேய் நிற - மூங்கில்போல் (வளர்ந்த) ஊழ்த்து - பதனழிந்து. தீய்நிற - (வெந்து) தீய்ந்த நிறமாய். நோய் நிறம் - மெலிந்த தன்மையான. நூதனம் - புது வேதம்.

40. அன்பு எழுவ - அன்பினைக் காட்டி. வீக்கி - பிடித்து. மாகையோ - மாயையோ. வறுமையான் - வறியவன்.

41. ஈகை கோயிலோடு - பொற்கோயிலோடு. இனி எம் தேவர் என்று - இனி எம் தேவரும் (விழுவாரோ) என்று. 'விழுவாரோ' என்பது சொல்ல நாவெழாமையாற் சோர்ந்த உரை.

நாவகன் பதில்

வீங்கிய துயரிற் சோர்ந்து வீழுளி சுரமி, கையால்
தாங்கிய சுடர்செய் வேலோன் தழுவினன் உறுதி சொன்னன்;
ஏங்கிய உளத்தில் தேற, இரவலர் ஈனர் நால்வர்
நீங்கிய தன்மைத்து,என்னை நீஅழுது அயர்வாய்? என்றான். 42

சுரமியின் கோள்

பூமனும் உணர்வில் தேர்ந்த புரட்டனும், செல்வத்து ஓங்கும்
தாமனும், சிரீத்தன் தானும், தகும்புகழ் கடந்த வீர
வாமனும், பலரும் சேர்ந்து மாரிநாள் வெள்ளம் ஒத்தார்;
காமனும் எஞ்சப் பைம்பூங் கவின்நலோய்! என்றுசொன்னள். 43

சுரமி தான் கண்ட கனவைக் கூறி வேண்டுதல்

துஞ்சிய கனவில் தெய்வம் துயர்முதிர்ந்து எஞ்சித் தோன்றி,
அஞ்சிய என்னை நோக்கி, அனைவரும் தன்னை நீத்து,
விஞ்சிய மாயை ஈர்த்தல் வேண்டும் என்று இரங்கிச் சொல்ல,
எஞ்சிய பின்னர், நின்னை எண்ணி,உள் தேறி னேனே. 44

பொன்வளர் உலகத் தேவர்பொருந்தி, ஈங்கு உனக்குத் தந்த,
மின்வளர் மணியும் பொன்னும் வீரமும் புகழும் யாவும்
கொன்வளர் செல்வ மாகக் கொடுத்ததோ? கொடுத்ததேவர்க்கு
இன்வளர் உதவியாக இயற்றலே வேண்டும்; இன்றே. 45

நூல்வழி போதல் வேண்டா, நுண்மதி முனிவன் வெல்வான்;
வேல்வழி குருதி பாய, வேந்தனே! வெகுளி காட்டின்
கால்வழி தழைக ளென்னக் கலங்கிய எவரும், மீண்டு,
கோல்வழி வில்லோய்! தேவர் கொண்ட வெம்பகையைத் தீர்ப்பாய். 46

---

42. இரவலர் ஈனர் நால்வர் — வறியவரும் நீசருமாகிய நான்குபேர். நீங்கிய தன்மைத்து - நீங்கியதனல்.

43. காமனும் எஞ்ச - மன்மதனும் (அழகிற்) குறைவுபட.

44. ஈர்த்தல் - வேரோடறுத்தல். எஞ்சிய - மெலிந்து வருந்திய.

46. கால் வழி தழைகள் என்ன - காற்றின் முகத்து ஆடிய தழைகளைப் போல. கோல்வழி - அம்பெய்யும் முறை (தேர்ந்த)

பண்முழுது இறைஞ்சும் நின்சொல்
　　பார்த்திபன் மறுக்கல் செய்யான்;
மண்முழுது அயிலாற் காத்தாய்;
　　வளங்கொள்இம் மறையும் நீத்தால்,
விண்முழுது இன்று காப்பாய்;
　　வேண்டுமேல், அரிது ஒன்றின்றி
'உண்முழுது உணர்ந்த தன்மை,
　　ஒல்லும்' என்று இறைஞ்சி ஞளே. 47

நாவகன் உறுதி மொழி

தொன்னெறி வாமன் நீக்கிச்
　　சூசை ஆங்கு உணர்த்தும் ஓதி
நன்னெறி யாகக் கொண்ட
　　நவத்தொடு, பலவும் ஓர்ந்தே,
'உன்னெறி போதி; எந்தாய்,
　　உவப்ப நீ செய்வேன் என்னச்
சென்னெறி அசனி ஒத்தான்
　　சிந்தையிற் பொங்குகின்ருன். 48

நாவகன் தந்தை குண்ணன், மகனுக்கு அறிவுரை கூறல்

கள்ளார் மலர்மணமோ, கனலார் புகையோ, கடுத்தொருவன்
உள்ளார் வினைமுகவேல் உருவுந் தன்மைத்து,அவன் உணர்ந்த
எள்ளார் வினைஇருகண் பட(ம்)மேற் கண்டான்; இவன்தாதை
கொள்ஆர் ஆறிருபத்து ஆண்டாய்க் குன்ருக் குண்ணனென்பான். 49

பால்செய் கடல்கிடந்து நுரைசூழ் பவளக் கட்டையெனக்
கால்செய் நரைமுத்தோன், வெண்தூய்க் கலைபூந் தவிசெழுந்து,
நூல்செய் புலன்மிக்கோன் நுனித்தஅன்பின், நோன்றுஈன்ற
வேல்செய் திறம்நம்பி, வினை கண்டு,'அற்க' என விளித்தான். 50

---

47. உள் முழுதும் உணர்ந்த தன்மை - நினைத்த யாவும் நினைத்த தன்மையில். ஒல்லும் - (உன்ஞல்) கூடும்.

48. ஓதி - வேதம். செல் நெறி அசனி - மேகத்தின் இடி.

49. உள் ஆர் வினை — மனத்திற்கொண்ட வினை. கண் படம் மேல் — கண்ணுகிய படத்தின்மேல். ஆறிருபத்து ஆண்டாய்க் குன்ரு - 120 ஆண்டுகளாகியும் மெலியாத. குண்ணன் - நாவகன் தந்தை.

50 கால் - காலம். அற்க - அணுகுக. நம்பி—நாவகன்.

நெஞ்சே கொள்பிணியை முகம்தந் தென்ன, நின்முகமும்,
நஞ்சே கொள்வினை,உள் நாட்டிற் றென்ன நல்குமதே;
அஞ்சேல் எனக்குஉரைமோ, அரிகண் இட்ட அஞ்சனம்போல்
செஞ்சேடு உருவோய்! தன் செயிர்ஆர் காண்பார் தெளிந்தென்றான். 51

இடக்கைத் தொகுவிரலால் எதிர்தோள் இட்ட வளை கவ்வி,
தடக்கை விரலால் வாய் புதையாச் சாற்றுது(ம்) அடிகளென,
நுடக்கை முதிர்சுரமி நுவன்ற தெல்லாம் நுவன்று,இருதாள்
படக்,கை தொழுது'இனிச்செய் பணியே பணிக்க' எனநின்றான். 52

'ஈங்கு நீஉரைமோ உணர்ந்ததுஎன்றற்கு, இளையோன்' மற்று
'ஓங்கு தேவர்பழி யென்ன, வேந்தற்கு உரைத்து,நவத்
தீங்கு கொய்த(ல்)ந(ல்)லது' என்றான்;அணைமேற் சேர்த்திருத்தி
வீங்கு கேள்வி நலோன், மெலியாத் தீஞ்சொல் விரித்துரைத்தான். 53

விள்ளா அரும்புஒப்ப வினைநன் ஞுகின் வேற்கடல்முன்
எள்ளா வில்தலைவன், யூதர் நாட்டில்இருந் தேன்நான்;
நள்ளா மதிதாழ்ந்தான் நைய,ஆங்குஅந் நாளருகே
உள்ளா வயத்து,உற்றது உரைப்பப் போற்றி உணர்க'என்றான். 54

## குண்ணன் யூதர்களின் பெருமையைக் கூறுதல்

*அசிரிய மன்னன் சினக்கரன் ஆட்சி*

கனக்கரம் தழுவ,மேற் கதிர் கொள் குன்றின்வீழ்
புனல்,கரம் தழுவ,மேற் பொலி,அ சீரியம்
எனக் கரந்து உறைநலம் இயைந்த நாட்டைஆள்
சினக் கரன் எனும் பெயர் சிறந்த வேந்தர் கோன். 55

மாற்றர சினமெலாம் வணங்கும் வாகையான்;
வேற்றரசினம் முடி விளக்கும் தாளினன்;
ஏற்றரசினம் கொணர் இறை கொள்,கையினன்;
நாற்றரசின மெலாம் நடுக்கும் ஆணையான். 56

51. உள் நாட்டிற்று என்ன - மனத்துள் நாட்டியதாக. சேடு உருவோய் - அழகு வடிவுடையவளே.

52. நுடக்கை - தளர்ச்சி.

54. நல் நாகில் — என் நல்ல இளமைப் பருவத்தில். நள்ளா மதி — (யூதரை) நட்புக்கொள்ளாத மதியிலி. உள்ளா வயத்து - உணர முடியாத திறத்தில்.

55. கனம் - மேகம். கரம் தழுவ - கையால் தழுவினாற் போல.

56. ஏற்ற அரசு இனம் - பணிந்த அரசர்கள். இறைகொள்-திறையைப் பெறும். நாற்று அரசு இனம் - பொலிவு மிக்க பிற அரசர்கள்.

ஓடை மால் மத கரி உயர்த்த வாகையான்,
கோடைநாள் அசனியைக் குழைத்த வில்லினான்,
பாடையாய் இகல் உரம் பழக்கும் வாளினான்,
வாடையால் வரும்விசை வாட்டும் தேரினான். 57

ஆலமும் அழலும் விட்டு அதட்டிச் சீறினால்
ஞாலமும் நடுக்கிய நச்சுக் கண்ணினான்;
மாலமும் மறலியும் வஞ்ச மாலையும்
சீலமொன் றிலது,அவை செறிந்த, நெஞ்சினான். 58

அருளிடு மொழி மறுத்து அழன்ற வாயினான்,
வெருளிடு பொய்ப்புகழ் விழுங்கும் காதினான்,
பொருளிடு முடியொடு புன் கண் பூத்தவர்த்
திரளிடு முறையெலாம் சுமந்த சென்னியான். 59

ஆற்று நீர், அலையி(ன்)நீர், அலந்தை நீரெலாம்
சேற்று நீர், உவர் குழைவெனச் செ குத்தவன்
ஆற்று(ம்)நீரில சலம் ஆற்றிலார்,விழி
ஊற்றுநீர் ஒன்றினை, 'உவப்பு' என்று ஆடுவான். 60

'கின்னரம் பயிலியாழ் கிளர்பொன் மாடக
இன்னரம்பு உளரலும், இனிதன்று' என்று,தன்
வில்நரம்பு ஒலிக்கணை வினையிற், கைமையார்
துன்னரம் பயிலொலி 'சுவை' யென்று ஆவுவான். 61

---

57. பாடையாய் - சாணைக் கல்லாக. இகல் உரம் - பகைவர் மார்பு. வாடையால் வரும் விசை - காற்றின் வேகம்.

58. மாலம் - பேய். மறலி - யமன்.

59· வெருளிடும் - அச்சத்தாற் கூறிய. பொருளிடும் முடி - பொன்முடி. புன்கண் பூத்தவர்த் திரள் - துயரடைந்தவர் கூட்டம்.

60. அலை-கடல். அலந்தை - குளம். குழைவு - சேறு. செகுத்தவன் - வெறுத்தவன். ஆற்றும் - செய்த. நீர் இல சலம் - ஒழுங்கற்ற நியாயம். விழி ஊற்றும் நீர் - கண்ணீர்.

61. கணை வினையில் - அம்பு செய்யும் ஓசையும். கைமையார் - விதவைப் பெண்கள். ஆவுவான் - விரும்புவான்.

கோதிலார் தனக்குவேற் றென்று கூட்டிலான்,
தீதுளார் தனக்குஎதி ரென்று சேர்க்கிலான்,
ஏதினுல் இணையிலான், எதிர்ந்(த) யாரையும்
பேதிலா மறத்தொடு பகைக்கும் பெற்றியான். 62

சினக்கரன் எருசலேம் மீது படையெடுத்தல்

அத்திறத்து ஆயினன், அரசர் யாரையும்
மொய்த்திறத்து அடக்குபு, முதிர்ந்த வேதநூல்
மெய்த்திறத்து யூதர்சீர் விளைந்த நாட்டுறீஇப்
பொய்த்திறத்து, அருஞ்செயம் உணர்ந்து போயினன். 63

வேற்கடல் பரிக்கடல் வேழம் தேரொடு
நாற்கடல் ஒருப்பட, நடுங்க நாற்றிசை,
நீற்கடல் எதிர்த்தென நினைப்பின் எய்தினன்,
நூற்கடல் வேந்துஉறை நகரை நோக்கினன். 64

தூது அனுப்புதல்

கார்வினை இடிமொழிக் கதத்தில், யூதர் தம்
சீர்வினை மறைநலம் செகுத்து வந்து,தன்
நீர்வினை மரையடி பணிதல் நேர்கிலால்,
போர்வினை சுடுமொழித் தூது போக்கினன். 65

எருசலேம் மன்னனும் தூதனும்

கோன்நலமும் குலநலமும் குலத்துரிய தொல்சுருதி
நூல்நலமும், அவர்தொழுத நுனித்தஒரு நாயகன்தன்
வான்நலமும் ஒன்றெண்ணு, வரைவறும்தன் கடல்தானை
வேல்நலமொன்று ஊன்றியசொல் வெடித்தான்,தூது உரைகொண்டான். 66

---

62. கோதிலார் — குற்றமில்லாத பெரியோர். ஏதினுல் — தீமையில். பேதுஇலா - பின்னம் இன்றி. வேற்று—வேற்றுமை.

63. மொய்த்திறத்து - போர் முகத்தில்.

64. நூற் கடல் வேந்து - நூற்கடலாய் நின்ற யூத அரசன்.

65. செகுத்து - விட்டு. நேர்கிலால் - உடன்படாராகில். போர்வினை- போர் வினையும் (என்னும்).

66. ஒன்று எண்ணு - சிறிதும் எண்ணுமல். வரைவு அறும்-அளவிறந்த.

தீமுகத்துப் பொங்கியபால் தெண்ணீரிட்டு ஆற்றுவர்போல்,
வீமுகத்துச் சுடுஞ்சொல்லான் விளைத்திட்ட வெம்வெகுளி,
காய்முகத்துக் கோன்,உணர்ந்த கருணையின் நீர் கொண்டு ஆற்றி,
ஆய்முகத்துத் தேறி,அயிர்ப்பு அற,வீர உரைவலித்தான். 67

"உன்னல்லால் இவ்வுரைசெய்து உய்வார்ஆர்? உன்னரசன்,
என்னல்லால், என்னிறைவன் இகன்றனபின், என்னிறைவன்
தன்னல்லால், விடைஇங்கண் சாற்றுவர் ஆர்? சடுதிப்போய்
வில்நல்லாய்! இம்மொழியை விளம்பு" என்றான் மறைக் கோமான். 68

பார்இறைஞ்சும் தேவர்கள்,எம் படைமுகத்துத் துஞ்சினரோ?
நீர்இறைஞ்சும் தேவன்வலி மிக்கதுகொல்? நெடிதுஎங்கும்
போர்இறைஞ்சும் வேல்வேந்தன் புகைந்துஉகுத்த புன்கண்உறு,
கார்இறைஞ்சும் உன்னாட்டைக் காமின்என்றான் கடுஞ்சினத்தான். 69

"துஞ்சினரோ மற்றெவரும் தொழுந்தேவர், நும்படைமுன்
எஞ்சினரோ, அறிகிலன்நான்; என் இறையோன் வலிகுன்றா
விஞ்சினனோ, கண்டுணர்க; வினைவெம்போர் வேண்டினும்,நான்
அஞ்சினனோ? அத்திறத்துஇன்று அமர்(க)" என்றான் அறநீரான். 70

அருள்புரிந்த தூதுரைத்தேன்; ஆர்ந்தமணி முடிநல்லோய்!
மருள்புரிந்த மனத்தெண்ணா மன்னனருள் மறுத்தாயே!
'வெருள்புரிந்த வெஞ்சினப்போர் வினைநின்பால்' என்று இறைஞ்சி
இருள்புரிந்த இரவிற்சென்று. இவை இறைவற்கு இயம்புகின்றான். 71

'சீர்மீதுஆடிய செருக்கில் தெளியாக்கோன், இவைகேட்டு,
போர்மீதுஆடிய சேனைப் பொலிவெண்ணா மறுத்தானோ?
கார்மீதுஆடிய கொடிநீள் மாடநகர் காடாக்கிப்
பார்மீதுஆடிய வெருவே படும்நாளை' எனத்துயின்றான். 72

---

67. வீமுகத்து - கொல்லும் முகத்தோடு. ஆய் முகத்து - ஆராய்ந்த உணர்வில்.

68. என் இறைவன் இகன்றன பின் - என் கடவுளோடு மாறுபட்டபின். வில் நல்லாய் - வில்லில் வல்லோனே.

69. மிக்கது கொல் - மிக்கவனோ. போர் இறைஞ்சும் வேல் - போர் முகத்து வணங்கப்பட்ட வேல். உகுத்த புன்கண் உறு - விளைவித்த துயரை அடையாதபடி.

71. வெருள் புரிந்த - வெருவிடும், அச்சம் உண்டாக்கும்.

பாசறையில் சினக்கரன் படைகள் மாய்தல்

குன்றுஉச்சிச் சுடர் பழியாக் கொளுத்திய புன் விளக்கென்றே,
வென்றுஉச்சி வாளுளும் வேந்தனெதிர், பூ வுலகில்
நின்றுஉச்சி நிறுவரசர் நினைத்த பகை யாம்—காணுய்;
அன்றுஉச்சி முடிகவிழ அவற்குஆங்கு—ஆ யவை கேண்மோ. 73

நேராறு நூல் தெளிவளவின், நீதிவலோன் பகைத்து, இரவில்,
பாராறு நூங்கு இரதம்,உகள் பரி கரி, வாள், வில், வேலென்று
ஆராறு நூங்கு அடல்தானை அற்றுஅறக்,கண் இமையாமுன்,
ஓராறுநூறு உறழ் முந்நூறு டைஐயா யிரர் மாய்ந்தார். 74

பான்இறைவன் செக்கர்வான் பந்தற்கீழ் விளக்குஎந்த,
ஈன் இறைவன் அறுதானை இற்றழிந்த நிலை கண்டான்;
வான் இறைவன் திறங்கண்டான் வாழ்க்கையற நகைகண்டான்;
'தான் இறைவன் அலன்' என்னத் தளர்ந்தஞ்சி ஓடினனுல். 75

நெடிது அழுங்கிப் பெருங்கள்வன் நீதித்திறத்து இறந்தென்னக்
கொடிது அழுங்கி எஞ்ச, அன்றுஅக் கொலைகாண விளியாக்கோன்,
கடிது அழுங்கி ஓட,எதிர் கடுகி,'நகை உய்த்தாய்' என்று,
இடிதழுங்கி வீழ்ந்தனைய இருமைந்தர் கரத்து இறந்தான். 76

மன்னன் நபூக்கன் கட்டளை

மஞ்சிவர் குன்றில் தெண்ணீர் வழங்கும்அந் நாட்டில் பின்னுள்
நஞ்சிவர் சினத்திற் காய்ந்த நபூக்கனென்(ற) அரசன்,செங்கோல்
நெஞ்சிவர் செருக்கிற் கோட, நீண்டநாட்டு எங்கும், யூதர்
விஞ்சிவர் இறைவன் தாழ்தல், வினைமிக, விலக்கினுனே, 77

---

73. சுடர் - சூரியன். விளக்கு என்றே - விளக்குப் போல.

74. நீதிவல்லோன் - கடவுள். பகைத்து — (சினக்கரனைப்) பகைத்து. பார்அறு - பூமியைக் கீறும். நூங்கு - உயர்ந்த. ஓர் அறுநூறு உறழ் முந்நூறுடைய ஐயாயிரர் = 600 × 300 + 5000 : 185000 பேர்.

75. பான் இறைவன் — சூரியன். ஈன் இறைவன் — ஈனங்கொண்ட சினக்கரன். அறு தானை - ஆறு படைகள். நகை - இகழ்ச்சி.

76. நீதித்திறத்து - நீதி முறையால். விளியாக்கோன் - சாகாத சினக்கரன். தழுங்கி - முழுங்கி

77. மஞ்சு இவர் - மேகம் தவழும். நஞ்சு இவர் - நஞ்சினை உமிழும். விஞ்சு இவர் - மிக உயர்ந்த வினை மிக - தன்வினை விளையும் காலமாகி.

கொன்வளர் தருக்கிற் பொங்கும் குணத்தவன், பினர், தம் சாயல்
பொன் வளர் உருவ மாக்கி, பூண்வளர் சிறப்பின் மண்ணி,
பின்வளர் இழிவெண்ணாத பேதமைத் திறத்த தொன்றை,
'மன்வளர் தேவனாக வணங்க'என்று ஏவினானே. 78

சூளைத் தீயில் வேகாத இளைஞர்

'சீர்தங்கும் வயத்துஒன் றாம்எம்தேவனை யன்றி,மற்ற
ஏர்தங்கும் உருவத்தேவர் இறைஞ்சிலேம்' என்னமூவர்,
கார்தங்கும் இடியிற் காய்ந்தோன் கடுகி,அவ் யூதர் தம்மைப்
பீர்தங்கும் உருத்தீச் சூளை பெய்மின்ஈண்டு'என்றான் மாதோ. 79

வம்மிய புகையிற் சூளை, வாய் அங்காந்து எரிந்த செந்தீத்
தும்மி,அவ்ஏவல் செய்தோர் தொகுஉயிர் நக்கிக் கோறி,
பொம்மிய உவப்பின் மூவர் புணர்ந்த கட்டுஅன்றி, வேகா,
பம்மிய பைம்பூஞ் சோலைப் பதியென அங்கண் வாழ்ந்தார். 80

அந்நிலை கேட்ட மன்னன் அதிசயித்து அணுகி நோக்க,
வெந்நிலைச் சூளை நால்வர், மெலிவற உவப்பக் கண்டே,
இந்நிலை வியப்பிற் பொங்கி, 'ஈண்டுஇவண் வம்மின்' என்னப்
பைந்நிலை மலரின்மூவர், பனிமுகத்து எய்தி நின்றார். 81

நபூக்கன் திகைப்பும் கடைசிக் காலமும்

'நால்வரும் கண்டேன்; மற்றோர் நவியன்எங்கு'? என்ன, அன்னார்
'மேல்வரும் திறத்து,எந் தேவன் விட்டவிண் ணவன்'தான் என்றார்;
போல்வரும் இன்றி, யூதர் போற்றிய கடவுள் மாண்பு
நூல்வரும் மறையின் சால்பு நோக்கினன், மருளும் நீக்கான். 82

---

78. கொன்வளர் - விணாய் வளர்ந்த. மண்ணி - அலங்கரித்து.

79. பீர் - அச்சம்.

80. வ(ம்)மிய — அக்கினியினின்றெழுந்த. கோறி — கொன்றபின். பொம்மிய-மிகுந்த. மூவர் புணர்ந்த கட்டு-மூன்று யூதரைக் கிடத்திய விறகுக் கட்டு. வேகா-அவர் வேகாமல்.

81. வெம் நிலை - வெப்பமான நிலையுடைய.

82. நவியன் - அழகன். மறையின் சால்பு - வேதத்தின் பெருமை. நோக்கினன் - நோக்கிய நபூக்கன்.

தன்திறத்து ஊக்கித் தேவன் தான்என உணர்ந்த பாலால்,
பின்திறத்து, எவரும் அஞ்சப் பெருஞ்சினத் தன்ன தேவன்
மன்திறத்து உயிரே மாறு மாவுருக் கொளீஇத், தன்னுண்டு
கொன்திறத்து எஞ்சிக் காவிற் குனிந்து,புல் மேய்ந்து நின்றார். 83

ஏழ்வரும் வருடத்து இவ்வாறு இழிபட, விலங்கின் சாயல்
போழ்வரும் நெஞ்சின் நோகப் புணர்அறிவு எஞ்சான், தன்னைத்
தாழ்வரும் உளத்து,அந் நாதன் தாழ்ந்தபின், உரித்தன் மெய்யும்
கேழ்வரும் முடியும் பெற்றுக் கெழும்விளக்கு எவர்க்கும் ஆனான். 84

யூதர் கோவிலிற் கொள்ளையிட்ட எல்லியோதுரன் கதி

மீட்டு,அன்னார் இறைஞ்சும் கோயில், மிக்கரும் திருவுண்டு என்னக்
கேட்டு,அந் நாட் டரசன் ஏவ, எல்லியோ துரன்போய், கேழ்த்த
நாட்டு,அன்னார் வெருவி நைய நண்ணி,எண்ணிலகொல் வேங்கைக்
கூட்டன்னார் அபயர் சூழக் கோயிலை இரவிற் புக்கான். 85

புக்கன அளவில், வானில் பொற்பரத்து ஒருவன் ஏறு
மிக்கன சினக் கொக்கு,அன்னான் வியன்ற மார்பு உதைத்து வீழ்த்த,
தொக்கன எவரும் ஓடச் சூழிரு வானோர் தோன்றி,
நக்கன கதத்து,அன்னானை நண்ணி,மத் திகையாற் பெய்தார். 86

ஈறுஉயி ராகநிற்ப இனைந்து,இருங் குரவன் வேண்டி,
வீறுஉயி ராகத் தேற்றி, விண்ணவர் இருவர், 'இவ்வாய்த்
தேறுயிர் இறைவன் வாழ்த்தத் திசையெலாம் உணர்த்தி', என்று,
ஊறுயிர் உய்ந்து வாழ்நா ளுள்ளவு(ம்)ஏத்தினானே. 87

---

83. பாலால் - தன்மையால் (பாவத்தால்). பின்திறத்து - பிற்காலத்து. மா உருக் கொளீஇ - மிருக வடிவங்கொண்டு.

84. இழிபட - இகழ்ச்சியுற்று. தாழ்வரும் உளத்து - தாழ்த்திய மனத்தோடு. உரித் தன் மெய்யும் - தனக்குரிய பழைய வடிவையும்.

85. வேங்கைக் கூட்டன்னார் - புலிக் கூட்டம் போன்றவர். அபயர்-வீரர்.

86. பொன் பரத்து - அழகிய கவசம் அணிந்து. கொக்கு - குதிரை. மத்திகை - சம்பட்டி.

87. ஈறு உயிராக நிற்ப - சாகா நிற்ப. வீறு உயிராக - விளக்கம் பெற்ற உயிராக. இவ் வாய் - இம் முறையில். உணர்த்தி - நடந்ததைச் சொல். ஊறு உயிர் உய்ந்து - துன்புற்ற உயிர் பிழைத்து.

இத்திறத்து உயர்அவ் வேதம் இகன்றன அரசர் ஈராறு,
அத்திறத்து இழிபட்டு எஞ்ச அறிதுநான்; அன்ன தேவன்
மைத்திறத்து இகன்ற யாரும் வையகத்து உய்யார், காளாய்!
பொய்த்திறத்து உணர்ந்த தீமை போக்குதி என்றான்-மூத்தோன். 88

நாவகனும் அவன் தந்தையும் வாக்குவாதம்

பால் நிமிர் கனிஅருட் பவளக் குன்றுஇழி
தேன் நிமிர் மொழிப் புனல் செறிந்த வாரியுள்,
கோல் நிமிர் வில்லினன் குளித்து,இன்பு உண்டலால்,
நீல் நிமிர் இருளுளம் நீங்கி லாயதே. 89

திங்கள் நீர்க் கதிர்அணி தியங்கும் மார்பினோன்,
தங்கள் நீர்க் கடவுளும் மறையும் தாம்உணர்ந்து,
அங்கண் நீர்த்து ஒழுக, மற்று அருளிக் கேட்டி ஒன்று,
இங்கண் நீர்த்(த)அடிகளே என்று செப்பினான். 90

உய்வகை யின்றிவந்து, உலைந்து,எம் நாட்டுரி
ஐவகை முறையற அணுகி ஓர்முனி,
மைவகை மொழியொடு மருட்டி, நாடெலாம்
பொய்வகை அழிப்பது பொறுப்ப வோ?என்றான். 91

தாதை,நெட் டுயிர்ப்பினோடு இரங்கிச் சாற்றினான்:
மேதைகெட்டு, இருண்டுஇரு விழிகெட்டு, எள்ளிய
பேதை,மட்டு உண்டெனப் பிதற்றிப் பில்கிய
காதைஉட் கொண்டு,நீ கலங்கல் நீர்மையோ? 92

---

88. இகன்றன-பகைத்த. அறிது-அறிவேன். மைத்திறத்து - மயங்கி. காளாய் - காளையே - மகனே.

89. பால் நிமிர் - பாலோடு ஒத்த. (நிமிர் - நெருங்கு). மொழிப்புனல்- மொழியாகிய வெள்ளம்.

90. திங்கள் நீர்க் கதிர் - சந்திரன் உமிழ்ந்த பாற் கதிர் போன்ற நீர் - குணம் (நிறைந்த). நீர்த்து - நன்முறையில் ஒழுக - ஒழுகுக. நீர்த்த - நற்குணமுடைய. அடிகளே - சுவாமி.

91. ஐவகை முறை :— தெய்வ முறை, குல முறை, நூன் முறை, வழக்கு முறை, ஒழுக்க முறை. மை வகை மொழி - கறுப்பு மொழி - பொய்ம் மொழி.

92. மேதை - அறிவு. மட்டு - கள். பில்கிய - கொப்புளித்த-சொன்ன.

கால்திறத்து ஆடிய கலைப்ப தாகைபோல்
மால்திறத்து உரைப்பவர் வழுது கேட்கிலாய்;
வேல்திறத்து அங்கண்நான் இருந்த வேலையின்,
நூல்திறத்து அவர்முறை நோக்கி வாழ்த்தினேன். 93

தம்முறை எவர்க்கு(ம்)நீர்த் தகுதி யாய்ப்,பொது
மெய்ம்முறைச் சுருதியும், வினைகள் தீர்அறத்து
அம்முறை அனைத்து(ம்) நன்ருகக் காண்டியேல்,
வெம்முறை வெருளொடு வெறுத்தல் வேண்டுமோ? 94

பூ நக, புன்நக, புனல்செய் பொய்கைகண்
டே நக, மலர்ந்த கா—சென்று,அன் னுன்சொலும்
பா நக உணர்வுகேட்டு, அறத்தின் பாலதோ
கூ நக இழிவதோ கூறு நீ; என்ருன். 95

நாவகன் குசையிடம் வருதல்

'அய்ய!நன் றிது'என அடியைத் தாழ்ந்துபோய்,
உய்யநன்று உகும்முறை உணரும்அ வாவிலா,
வெய்ய நெஞ்சு உணர்ந்ததீ வினைமு டித்திட,
மைய நெஞ்சு உணர்விஞேன், வளனை அண்டிஞேன். 96

தீமையை ஒழிக்குமாறு குசை பொதுவிற் கூறுதல்

தீயஉன் ளொளித்து, இனியவை முகத்திடை தீட்டிப்
போய்,அ லர்ந்தபூம் பொழிலிடத்து அவன்வரக் கண்டு,
தூய நற்றவ விளக்கெறிந்து இருளில குசை,
ஆய யாவையும் ஆசறக் கண்டெனு, அறிந்தான். 97

---

93. கால் திறத்து - காற்றின் தன்மைக்கேற்ப. கலைப்பதாகை - சீலைக் கொடி. வழுது - பொய்.

94. நீர்த் தகுதியாய் - இயல்பான உரிமையாக விட்டு. வெம்முறை - விரும்பத்தகும் யூதர் முறை. (வெம்மை - விருப்பம்)

95. கா - சோலை. பா நக உணர்வு - பாவினும் இனிய (மொழியோடு கூறும்) உணர்ச்சிகளை. கூ நக இழிவதோ - உலகம் நகைத்து இகழத் தகுவனவோ

96. அடியை - பாதத்தை. நன்று உகும் - பயன்தரும். மைய - மயக்க முடைய

97. தீய - தீமையை. ஆசு அற - மறைவின்றி.

வரைகி டந்து,இன மணிகொழித்து ஒழுகிய நதிசூழ்
கரைகி டந்தமா வழைமகிள் சண்பகம் கமழ்கா
நிரைகி டந்தவர்க்கு உரைத்தென, நாவகன் நெஞ்சிற்
புரைகி டந்தவை பற்றி,மா முனிஇவை புகன்றான். 98

"உயிரொன்றே யுடையீர்என, உயிருணும் கூற்றும்
செயிரொன் றே,முழுது(ம்) ஒருவுமின்; வித்திய செயிரே,
துயரொன் றேவிளைத்து அடுமெனச் சூழ்ந்துளி, துகள்தன்
பெயரொன்றே பெறல் அஞ்சுவர்-பெருந்தகை நீரார். 99

"அண்டமீவரை நெற்றியிற் பனியிலை; அறமே
மண்ட வாழ்பவர் மருளஓர் கேடிலை; அன்னார்
உண்ட நஞ்சும்,அவ் வுயிர்க்குஅமு தாகி,மற்று அமிர்தம்,
கொண்ட தீயவர்க்கு, அஃதுஉயிர் கொலும்விட மாம்ஆல். 100

"பொன்றும் யாவுமே; புரைசெயும் பகையொன்றே பொன்றாச்
சென்று சென்று,அடி சென்ற தன்நிழலென, நீங்காது;
இன்று தீமையை இவன்பிறர்க்கு எண்ணிய தன்மைத்து,
அன்று தீமையே அவன்தனக்கு அமைவது காண்பான். 101

தீய காஞ்சிரம் நட்டபின், தீங்கனி கொயவோ?
தீய வித்தினார், தீயவை விளைவது காண்பார்;
தீய செய்தனர் தீயவர் என்பவர்; 'மருளாத்
தீய பட்டனர், தேவரொத்தார்' எனப்படுவார். 102

---

98. நிரை கிடந்தவர்க்கு - கூட்டமாய் இருந்தவர்க்கு. புரை கிடந்தவை - கிடந்த தீமையை.

99. என - என்றறிந்து. செயிர் ஒன்றே - பாவம் ஒன்றனை. சூழ்ந்துளி- உணர்ந்தமையால் துகள்தன் பெயர் ஒன்றே - பாவத்தின் பெயரையும்.

100. அண்டம் மீ வரை — மேக மண்டலம் கடந்துயர்ந்த மலையின். நெற்றியில் - உச்சியில்

101. பொன்றா - அழியாமல்.

102. கொயவோ — பறித்தல் உண்டோ. என்பவர் — எனப்படுவார். மருளா - மனத்தில் தளராமல். தீய பட்டனர் - பிறர் செய்யும் தீமையை அனுபவித்தவர்.

"அடுஞ் செந்தீயினும் அட்(ட)அகில் மணம் இனி தன்றோ?
சுடுஞ் செந் தீயினும் சுட்(ட)ஒளி நிதி இனிதன்றோ?
கொடுஞ்செந் தீயெனக் கொதித்து இன்னு ஆக்கலின், இனிதாம்
படுஞ் செந் தீயெனப் பாசறை படுவதே"—என்றான். 103

நாவகன் சினவுரை

இனைய சாற்றலும், எரிநெஞ்சான், வியப்புற, நினைத்தது
அனைய கேட்டலும் அயர்ந்த பின், 'தீயவர், தீய
புனைய ஆக்கலே புண்ணியம்' என்று உளம் புழுங்கி,
முனைய ஓதினன்; முனிவனும் மீண் டுஇவை மொழிந்தான். 104

சூசையின் அமுதமொழி

"மெய்நினைந்து, பொய் விளைத்து எழு திய படம் போல,
மை வளர்ந்துள வஞ்சகர் மெய்யொன்றை ஊன்றிப்
பொய்வி ளைந்தசொற் பொருந்தி,உட் கொள்வதும் வேண்டா;
மொய் ம லிந்துளி, முழுதுஒன்னார் இறைஞ்சிய வேலாய். 105

"நிலத்தின் தன்மையால் நீர்திரிந் தனைய,பற் றுளம்தன்
புலத்தின் தன்மையால் புறத்தவை தோன்றலால், அன்பின்
நலத்தின் தன்மையால் தீயவும் நல்லவாம்; பகை கொள்
சலத்தின் தன்மையால் நல்லவும் தீயவாம் சகத்தே. 106

கண்பு றத்து எழில் காட்டிய காஞ்சிரம் இனிதோ?
முட்பு றத்தில்உள் முதிர் சுவைச் சுளைப்பலா இனிதோ?
விண்புறத்துஎரி மின்னொளி விரும் பில ராகி,
உட்பு றத்து,நல் லவைவும்–அல் லவையுமென்று உணர்வாய். 107

---

103. நிதி ஒளி - பொன்னொளி. இன்னு ஆக்கலின் - துயரைச் செய்வதைவிட. பாசறை - துன்பம்.

104. நினைத்தது அனைய - நினைத்தவை யாவையும். தீய புனைய - தீயவை நுகரும்படி.

105. பொய் விளைத்து — பொய்யைக் காட்டும். மெய்ஒன்றை ஊன்றி — மெய் ஒன்றைக் காட்டி. மொய் மலிந்துளி - போர் எழுமிடத்து.

106. பற்று உளம் தன் புலத்தின் தன்மையால் - மனம் தன் பற்றுதலின் தன்மைக் கேற்ப. சகம் - உலகம்.

107. உட்புறத்து - உள்ள தன்மையை ஆராய்ந்து.

செய்த தீமையே, செய்தவர் மேல்வரும் தன்மை,
பொய்த காதெனப் பொன்மணி வீங்கிய தோளாய்!
எய்த ஓர்ந்தவை இழுக்கென விடுதியென்று உரைத்தான்;
மைதகா மறை வளர்கொழு கொம்பனை நீரான். 108

நாவகன் சூசையின் கன்னத்தில் அறைதல்

விண்டெனா வீங்கு தோளான்
விஞ்வொளித்து உணர்ந்த யாவும்
கண்டெனா முனிவன் சொல்ல,
கனன்று உளம் புழுங்க, செந்தீ
யுண்டெனா வியப்பிற் கேட்ப,
உடைந்தென நாணி, பின்உள்
கிண்டெனா எழுந்த சீற்றம்
கிளைத்து,எரி இடியிற் பாய்ந்தான். 109

"பண்ணொன்று பாட லொன்றப்
பகர்வொன்று(ம்) செய்கை, நன்றே;
புண்ணொன்று படல் நன்று" என்றாய்,
'புண்படுக' என்ன எள்ளிக்
கண்ணொன்று கதத்திற் சீறிக்
கன்னமேற் புடைத்தான்; அன்னான்
விண்ணொன்று மதியிற் சூசை
மிகமகிழ்ந்து இலங்கி நின்றான். 110

சூசையின் அருட்பார்வையால் மனந்திரும்பிய நாவகன் கூற்று

தனிக்கதிர் உணர்வின் மிக்கோன்
தயையுறீஇ மகிழ நோக்கி,
பனிக்கதிர்ப் பகையாம் கஞ்சம்
படுத்திய முகம்செய் வில்லால்,
நுனிக்கதிர் சுரக்கும் வேலோன்
நொந்து,உளம் தெளியத் தேறித்
துனிக்கதிர் ஒழிய வீழ்ந்து,
துணையடி தொழுது சொன்னான். 111

---

108. பொய்தகாது - பொய்யாகாது. பொன்மணி வீங்கிய - பொன்னும் மணியும் அணிந்த ஓர்ந்தவை - நினைந்தவை. மைதகா - மயக்கமற்ற.

109. விண்டு — மலை. விஞ் ஒளித்து — கருத்தைக் காட்டாமல். உள் கிண்டெனா - மனத்தைக் கிண்டியது போல.

110. பண்.........நன்றே—வீணையின் இசையை ஒத்துப் பாடுதல்போல சொல்லுதற்கேற்பச் செயல்படல் நன்று.

111. தனிக்கதிர் —நிகரற்ற ஒளிபொருந்திய. பனிக்கதிர் — திங்கள்· கஞ்சம் படுத்திய முகம் - தாமரையை வென்ற முகம்.

துய்ப்பட இனிய சொல்லாற்
சுட்டிய உணர்வில் தேற்றேன்;
பொய்ப்பட உரைக்கின் றோரும்
பொருந்துநூல் எளிய சொல்வார்;
மைப்பட இவண் நான் செய்த
வடுவினைப் பொறுத்த சால்பே
மெய்ப்பட உரைத்த வேத
விதியெனத் தெளியக் கண்டேன். 112

வில்பொரு வாவல் எல்லை
விழுங்குவது உணர்ந்த தேபோல்,
சொல் பொரு வெளிற்றில் சொன்ன
பொய்யுணர்ந்து, இமிர் இவ் வேதத்து
எல் பொருப் பேதை நானும்
இகன்று அதை ஒழித்தல் ஓர்ந்தேன்;
அல்பொருது இலங்கும் நின்றன்
அருளினால் உணர்வுற் றேனே. 113

நாவலின் நிழல் செய் இன்ன
நாடலால் அறியா, வேற்றுக்
காவலின் நாட்டிலுள்ள
கலை நலம் உளத்தில் எள்ளி,
பூவலின் நின்ற மீன்போற்
பொலியுணர் வின்றி, பாவக்
கூவலின் நின்ற என்னைக்
குணுக்கினம் மருட்டிற் றன்றோ. 114

---

112. துய்ப்பட — தூய. மைப்பட — மயங்கி. பொறுத்த சால்பே — பொறுத்த தன்மையே.

113. வில்பொரு — ஒளியைப் பொருத. வாவல் — வௌவால். எல் — சூரியன். சொல் பொரு — சொல்ல முடியாத. வெளிற்றில் — பொய்யை இமிர் — உயர்ந்த. அல் பொருது — இருளைப் பொருமல்;

114. பூவலின் நின்ற — கிணற்றில் நின்ற. கூவல் — கிணறு.

கரை கொன்ற கடலிற் பொங்கிக்
கதத்து உண்மை யுணராப் பாலால்,
நிரை கொன்ற மனத்தில் ஓர்ந்த
நினைவெலாம், நிரையிற் கண்டு,
புரை கொன்ற தவத்தின் மிக்கோய்!
புகன்றபோது, உளத்தில் நாணி,
வரை கொன்ற திண்ண மார்பில்,
வடுவற உருகா தானேன். 115

'உணங்கிய மரத்தில், செந்தீ
உடன்றென, கொண்ட நாணத்து,
அணங்கிய நெஞ்சில் சீற்றம்
அழன்று, உனைப் புடைத்தக் கால்,நீ
வணங்கிய தன்மை காட்டும்
மாட்சி கண்டு, ஒருங்கு பாவத்து
இணங்கிய முறைக் கல்லூரி —
என் வழி ஒழியத் தேர்ந்தேன். 116

காமமே யன்றி நன்னூற்
கல்வி யொன்று அறியா, பூண்செய்
தாமமே யன்றி வாய்ந்த
தகவில பாவி நானே,
வீமமே யின்றி உற்ற
வினை, அறுத்து அளித்தி; மற்றுஉன்
நாமமே யன்றி நானும்
நயப்ப ஒன்று உரைக்கல் தேற்றேன். 117

---

115. கதத்து — சினத்தினுல். நிரைகொன்ற - ஒழுங்கில்லாத. வடு அற — தீவினை ஒழியும்படி.

116. பாவத்து இணங்கிய முறை — பாவஞ்செய்வதற்குத் தூண்டும் முறையமைந்த. கல்லூரி — பள்ளிக்கூடமாகிய. என்வழி — என் வேதம்.

117. தாமம் — ஒளி. வீமம் — அச்சம். அளித்தி — இரட்சித்தாய். நயப்ப — பற்றுதலாக.

முனிவர் நாவகனைத் தழுவுதலும் மக்கள் மகிழ்ச்சியும்

என்றுஇயை உணர்விற் சொல்லோடு
எரிவினை அவிப்ப, கண்ணீர்
குன்றுஇயை அருவி போலக்
கூர்ந்து எழுந்து ஒழுகிற் றாகி,
சென்றுஇயை அன்பும் மார்பும்
சென்று ஒன்றத் தழுவிச் சூசை,
அன்றுஇயை எவரும் தம்முள்
அதிசயித்து, உவப்பில் மிக்கார். 118

'தெளிவளர் அழலிட்டு ஊதிச்
செற்ற இரும்பு, இரதப் பாலால்
ஒளிவளர் பசும் பொன் ஞாதல்
உண்டு'என உரையிற் கேட்டேம்;
இளிவளர் கொடிய நீரான்,
இன்று நற் பொறையின் பாலால்
களிவளர் தரும ஞாதல்
கண்டு,அது தெளிந்தோம் என்றார். 119

தொல்வினை என்னும் சூலால்
தொடர்வினை தளிர்த்து விம்மும்
புல்வினை புல்லா, நோற்ற
புலமையோன் ஒருவன் செய்த
வல்வினை, உலகம் யாவும்
வளம் பெறப் பயத்த தன்றோ?
நல்வினை விளைவு காண்மின்
நயப்ப, என்று எவரும் வாழ்ந்தார். 120

---

118. சொல்லோடு - சொல்லுதலோடு. எரிவினை - தீவினை.

119. இரதப் பாலால் — இரசத்தின் தன்மைக் கேற்ப. இளிவளர் — இகழப்பட்ட.

120. சூலால் தொடர்வினை — சென்மப் பாவம். புல்லா — (தனக்குச்) சேராதபடி.

சூசை நாவகனுக்குக் கூறிய அறிவுரை

குடம்புரை இருபுயம் குழைத்த சாந்தினை
நடம்புரை அசைகுழை நக்கி, வில்செயப்
படம்புரை அருள்எழில் பரப்பி னற்கு,இவை
வடம்புரை சுருதி சூழ் வளன்,வி ளம்பினன்: 121

"நாடலே அருந்தவ நலத்தைக் கண்டு,நீ
நீடலே புகழ்வது நீர்மையோ? இனிது
ஆடலே முடவற்கும் இனியதாம் அன்றோ?
கோடலே குணமெனக் குறிப்பில் தேறுவாய். 122

"மின்னிழல் என மிளிர்ந்து ஒழி வெறுக்கைசெய்
கொன்னிழல் வெறுத்து,அறம் கொண்டு நிற்றியேல்,
நின்னிழல் என,நினை இறைவன் நீங்கிலாது,
இன்னிழல் இயற்றி,நீ இனிதில் வாழ்(க)" என்றான். 123

படைப்பதற் கரிய நற் பரிவில், தாதையும்,
கிடைப்பதற் கரியது ஓர் பொருள் கிடைத்தென,
உடைப்பதற் கரிய இன்பு உளத்தில் உண்டு, உளத்து
அடைப்பதற் கரிய அன்பு அருளைக் காட்டினான். 124

நல்லோர் நாவகனைப் புகழ்தல்

கழீஇயின மணியெனக் கசடற்று, ஆர்அருள்
தழீஇயின நாவகன் தயங்கி, அந்நகர்க்
கெழீஇயின திருவிளக் கென நின்று, ஏத்தினர் —
குழீஇயின நலோர்எலாம் குழாங்கு ழாங்கொடே. 125

---

121. குழைத்த — பூசின. நடம்புரை — நடனம் செய்வது போன்று. குழை — காதணிகள்.

122. நாடலே அரும் தவம்—தேடுதற்கரிய தவம். நீடலே—நெடிதாய். கோடலே — (தவத்தை மனத்துள்) கொள்ளுதலே.

123. மின் நிழல் என—மின்னலின் ஒளிபோல. மிளிர்ந்து—தோன்றி. வெறுக்கை—செல்வம். கொன்—வீண். நிற்றியேல்—நின்றாயாகில்.

124. படைப்பதற்கு அரிய — பெறுதற்கரிய. பரிவில் - அன்போடு.

125. நின்று — நிற்கவே

வாமனும் நாவகனும்

வேல் முகத்து ஒத்த நல் வீர நாவகன்,
நூல் முகத்து ஒத்தென நோக்கி, வாமனும்
தேன் முகத்து அலர்ந்தநெஞ்சு உவப்பச் சேர்ந்து,தாம்
வான்முகத்து இருசுடர் மருளத் தோன்றினர். 126

கேதகா ரணத்துஇவை சுரமி கேட்டலின்,
நாத கார் இடித்தென நைந்துஅ ரற்றினள்;
நீத காதலின் மிகு நீர நாவகா!
ஆ!த காதிது என அகடுஅ துக்கினள். 127

தீய்ந்த ஓர் கறல்எனக் கருகிச் சிந்தைகெட்டு,
'ஆய்ந்த ஓர் நிலைப்பயன் இதோ'என்று ஆர்த்து,உணுக்
காய்ந்தஓர் சுவா எனத், தனைக்க டித்து,அழல்
தோய்ந்த ஓர் அரவெனச் சுருண்டு விம்மினள். 128

தே இழுக்குற, இவன் சென்று யாவரும்,
பூ இழுக்குற உளம் பொறுப்ப தோஎனு,
நா இழுத்து இறந்து,எரி நரகில், தான்தொழும்,
ஆவி(இ)ழுக் கிடும் குணுங்கு உவப்ப மூழ்கினள். 129

தீயவை உணர்ந்தனள், தீய வுண்டு,எரி
போய்,அவை புகழ்ந்த நூல் புதைப்ப. உள்ளிய
வாயவை வளர்மறை வழங்கிற் றுயதே;
தூயவை தூயவாய்த் துளங்கும் பீடையால். 130

---

126. வேல் முகத்து — வேல் தொழிலில். ஒத்த — தன்னோடொத்த. நூல் முகத்து - வேத நூலுணர்விலும். மருள — போல.

127. கேதம் — துக்கம். நாத கார் — ஓசையமைந்த மேகம். நீதம் — நீதி. அகடு அதுக்கினள் — வயிற்றில் அடித்தாள்.

128. கறல்—விறகு. ஓர்நிலை—ஓர் உபாயத்துக்கு. உணு—உண்ணுமல். சுவா—நாய்.

129. தே இழுக்குற — நம் தேவர்க்கு இகழ்ச்சியாக. இவன் சென்று — இவனைப் பின்சென்று. பூ இழுக்குறல்—பூவுலகம் கேடடைதல். ஆவி இழுக்கிடும்—உயிரை வருத்தும்.

130. தீய உண்டு — தீமையை அடைந்து. அவை — அறிஞர் அவை. புதைப்ப — ஒழிக்க. உள்ளிய ஆயவை — உணர்ந்த அம்முறைகளால். பீடையால் — துன்பத்தால்.

# 6. மீட்சிப் படலம்

நன்மையிற் பொலிந்த எசித்து நாடு

ஏழ்பட வருடம் இவ்வாறு
இயல்பட ஒழுகிற் ருகி,
போழ்படக் கல்லும் செந்தீப்
புழுங்கிய வனம்போல்,பாவத்து
ஆழ்பட அழன்ற அந்நாடு,
ஆரண அருவி பாயக்
கேழ்பட மலர்ந்த சோலைக்
கிழமையின் எழுவிற்று அன்றே. 1

தீவிற்ருய், அலைந்த முந்நீர்த்
திரையினுள் அலைவிலாதான்,
ஓவிற்ருய், ஓவல் செய்தார்க்கு
உளத்தில் நைந்து, அருளிற் பேணிக்
காவிற்ருய், எவர்க்கும் நீழல்
காத்தமா முனிவன்,தானே
ஆவிற்ருய்த் தெய்வ மைந்தன்
அருள்நிழற்கு ஒடுங்கி வாழ்வான். 2

உள்ளூற விண்ணேர்க்கு ஆற்ரு
உயர் அருட் கடலாம் மைந்தன்,
தெள்ளூற அகன்ற மார்பில்,
சிதமுடித் தாயும் தானும்
அள்ளூற அன்பில் மூழ்கி,
ஆங்கு அவர் அருந்தும் ஞானம்—
எள்ளூற எஞ்சும்,—என்சொல்
இயம்பிடத் துணியுங் காலே. 3

---

1. ஏழ்பட வருடம் - ஏழு வருடமும். கேழ்பட — அழகோடு. சோலைக் கிழமையின் — சோலையின் தன்மையாய். எழுவிற்று—எழச் செய்தது.

2. தீவிற்ருய்—தீவின் தன்மையாய். திரையினுள்—உலக அலைவினுள். ஓவிற்ருய் — வருந்திலும். ஓவல் செய்தார்க்கு — வருத்தம் செய்வார்க்கு. ஆவிற்ருய் — விரும்பி.

3. விண்ணேர்க்கு உள்ளூற ஆற்ரு — வானவரும் உள்ளே முழுக முடியாத. சிதம் முடி — வெண்மையான மீன்முடி. எள்ளூற எஞ்சும் — இகழப்பட்டு மெலியும்.

கூர்த்துராய் உவப்பில் மூழ்கிக்
கொழுந்தவன் உண்ட ஞானம்,
பேர்த்துராய் உமிழ்வ தேபோல்,
பெரும்பயன் எவர்க்குமாக
சீர்த்துராய் நாட்கள் தோறும்
தேமொழி வாயாற் கூற
நீர்த்துராய் எழீஇ, அ(ந்)நாடு
நிகரில கேழ்த்தது அம்மா. 4

சொந்த நாடு திரும்ப சூசைக்கு வானவன் அறிவித்தல்

வினைப்பகை ஒழிந்த யாரும்,
மெய்ம்மறை விளைவு காண
எனைப்பகல் தோறும் வியா
இன்பமுற்று வந்த போழ்தில்,
சுனைப்பகைக் கோடை முற்றித்
துதைந்த பைங் கூழ்காய்ந் தன்ன,
முனைப்பகைத் தன்மைத்து, அன்னோர்
முரியவுற்றது, சொல்வாம்;ஆல். 5

வானிருந்து எவனும் ஆள்வோன்,
வளனிடத்து ஏவுகின்ற
தேனிருந்து அலர்சொல் வானோன்,
"திருமகற் கொல்ல ஓர்ந்தான்.
தானிருந்து ஒழிந்தான் ஈண்டே,
தாயொடு மகவும் கூட்டிக்
கானிருந்து அலர்கோ லோய்!முன்
கடிந்தநாடு அடைதி" என்றான். 6

---

4. கூர்த்து உராய்—மிகுதியாய்ப் பரவிய. தவன் - சூசை. பேர்த்து உராய் — இடம் பெயர்த்து எடுத்து. சீர்த்துராய் — சிறந்து விளங்கும். நீர்த்துராய் எழீஇ — நன்மையிற் பொலிந்து. கேழ்த்தது — விளங்கிற்று.

5. துதைந்த — நெருங்கி வளர்ந்த. முரிய உற்றது — வாடும்படி நேர்ந்ததை. காண — கண்டு.

6. ஓர்ந்தான் — நினைத்த ஏரோதன்.

குசை மக்களுக்குச் சொன்ன உறுதிமொழிகள்

பணி மொழி பணிந்து தாயும்
பாலனும் உறையுட் சென்று,
மணி மொழித் தேவ தூது
வகுத்தவை, வளனே கூற,
அணி மொழி இளவல் நன்றென்று,
அயனம்—ஓர்ந்து, எவர்க்கும் கூறுத்
துணி மொழி உறுதி யாகச்
சொல்லினன் — மதுப்பெய் கோலான். 7

வரையெனத் துயரிற் போன்மின்;
வாருதி நாடி ஓடும்
திரையென இறைவன் சேர்மின்;
தீயென அகன்மின் தீய;
நுரையென வாழ்க்கை காண்மின்;
நேரென உயிரைக் காமின்;
கரையெனக் கதியை வெஃ(கு)மின்;
கசடறு நெறியிது — என்றான். 8

குசையின் பிரிவு

பண், தீண்டில் ஏங்குதல் போல்,
அன்பும் பூசல் பரவுமென,
கண் தீண்டி மருட்டியகார்,
இரவின் நாப்பண் கரந்தது போல்,
விண் தீண்டி ஆடுகொடி
மாட நல்லூர் விட்டகன்று,
புண் தீண்டி ஆற்று(ம்)மருந்து
ஒத்த நீரார், போதலுற்றார். 9

---

7. உறையுள் — தங்குமிடம். அயனம் ஓர்ந்து — போக நினைத்து.

8. வரையெனப் போன்மின் — (அசையாத) மலைபோல் இருங்கள். வாருதி — கடல். வெஃகுமின் — விரும்புங்கள்.

9. பண் — வீணை. ஏங்குதல் — ஒலித்தல். பூசல் பரவும் — (புலம்பும்( ஓசை மிகும்.

நதி தள்ளி நீந்(த)அறியாச்
சுழிபட் டார் போல் நைந்து, எசித்தார்,
பதி தள்ளிப் போவதறிந்து,
'அயர்வார்' என்றுஉள் பரிந்து இரங்கி,
'கதி தள்ளி நடுநிற்பார்,
கயவர்' எனப்பின் தேறி,வளன்
'மதிதள்ளி யிடும் அன்பின்,
பகை நன்று' என்றே வழிநடந்தான். 10

மக்களின் புலம்பல்

ஊ ராழி அகன்று,இவர் போம்
துயர்த்தீப் பட்டென்று உருச்சிவப்ப,
நீராழி அகன்றுஇரவி
தோன்றி, மூவர் நீங்கினர்என்று
ஈராழி யுட் கவிழ்ந்த
கலமொத்து, அந்தோ! என்றலறிப்
பேராழி யொத்த நகர்
புலம்பும் ஓதை பெரிது அன்றே. 11

பொய்(ம்)மறுத்தீர்; புரை மறுத்தீர்;
பொய்த்த கொன்னூல் புகைந்(த)உளங்கொள்
மை(ம்)மறுத்தீர்; மறையுரைத்தீர்;
பிள்ளையைத் தாய் மறுத் தென்னக்
கை(ம்)மறுத்தீர்; போய்ஒளித்தீர்;
அந்தோ! என்னக் கைமறுத்து,
மெய்(ம்)மறுத்து ஈர்துயராற்றுது
உயிர் நீத் தன்ன மெய்மறந்தார். 12

இன்றொளித்த சுடரொடும்,முச்
சுடராம் நீவிர், இராவிருட்கண்
நின்றொளித்த திறமென்னோ?
எங்கள் தீதின் நிலைதானோ?
குன்றொளித்த மணியொத்தீர்,
அந்தோ! என்னக் குழைந்து அலறிக்
கன்றொளித்த கறவையனூர்
உளைந்து, விம்மிக் கலுழ்கின்றார். 13

---

10. நீந்த அறியா — அறியாமல் பதி — ஊர். நடு — நடுவழியில்.

11. ஊர் ஆழி — இரவிமாபுரம் என்னும் ஊராகிய கடலை. ஈர் ஆழியுள் — (மரக்கலம்) பிளந்த கடலுள்.

12. புரை — பாவம். கொன்நூல் - பயனற்ற நூலால். மை - மயக்கம். மறுத்தீர் - தடுத்தீர். கை மறுத்தீர் - கைவிட்டீர். கைமறுத்து - கைவிரித்து

'வரைநாட்டி நீர்கடைந்தாங்கு
அமுதும் நஞ்சும் வந்தன'என்று
உரைநாட்டி யுண்டெனமுற்
கதையிற் கேட்டேம்; ஒண் தவம்செய்
கரைநாட்டி, அறக்கடலாம்
இவர்தம் அன்பின் கனிவுண்டாய்,
விரைநாட்டில் அகன்று,இடரால்
உண்டாம் நஞ்சின் விளைவு"என்பார். 14

"கான்சுரக்கும் இளமுல்லை
நட்டுப் பொன்னுற் கடைகோலி,
வான்சுரக்கும் பனிமாலைப்
பந்தர், முத்த மணற் பாய்த்தி,
தேன் சுரக்கும் நீருட்டி
வளர்த்த பூங்காத் தீந்து அறவோ,
மீன்சுரக்கும் இராவொழித்துப்
போதீர் நம்மை விட்டு?"என்பார். 15

"தாளெழுந்த கஞ்சம் எஞ்சக்
கதிர்போய்,நாளைத் தான்உவப்பக்
கோளெழுந்த தேரெழுமே;
நீர்,போய் நெஞ்சம் குடைந் தழுந்தும்,
வாளெழுந்த புழை புழுங்கும்
பெரும்புண்ணுறி மகிழ்வதற்கு,எந்
நாள்,எழுந்த நுமைக்காணக்
கடவேம்? அந்தோ! நாம்"என்பார். 16

---

14. கடைந்தாங்கு — கடைந்தபொழுது. அன்பின்கனிவுண்டாய் — அன்பாகிய அமுதுண்டாகி.

15. கடை கோலி — வேலி வளைத்து.

16. கஞ்சம் எஞ்ச — தாமரை மெலியும்படி. கோள் எழுந்த தேர் — ஒளி மிகுந்த தேர் - சூரியன். வாள் எழுந்த — வாள் அழுந்திய. புழை — புண்.

"அன்புஉகுக்கும் கண்ணீரே
அன்பிற்குஆற்றுப் பெருந்தளை'யென்று,
இன்புஉகுக்கும் ஓர்இரு சொல்
கூறுது,அந்தோ இராவொளித்தீர்;
'துன்புஉகுக்கும் கான்துறுங்கால்,
துணைஇல் மஞ்ஞைத் துயர்கண்டு
நன்புஉகுக்கும் நெஞ்சுஉருகி
இரங்கீர் கொல்லோ நமக்கு – என்பார். 17

"கூண்டுண்டாம் குஞ்சுஅகலாது
ஓம்பும் பல்புள் குலமும், கார்
கீண்டுண்டாம் இடிக்குஅஞ்சும்
பிடியைத் தாங்கும் கெழுங்கரியும்,
ஆண்டுண்டாம் கான்துறுங்கால்
காண்பீர்; காண்கில், ஆதரவற்று
ஈண்டுண்டாம் தமைநினைமின்
என்பார்; 'ஆஅ! தகாது'—என்பார். 18

*திருக் குடும்பத்தாரைத் தேடிச் செல்லுதல்*

சீல நீர்க் கருமுகில்கள்
மின்னி ஆர்த்துச் செய்அரவும்,
நீலநீர்க் கடல் அரவும்
எஞ்ச, எஞ்சி நெடிதழுதார்;
சால நீர்க் கடல் மடையைத்
திறந்தாற் போலத் தணந்தாரை,
கோல நீர்க் கடலாம்அந்
நகர்நீத்து,ஈட்டங் கொடுதொடர்ந்தார். 19

"தேனூர் தெளியார் திருவார் மொழியார்
போனூர்,—உயிர்பின் உடல்போ வதென,
கானூர் வழிபோ வம்எனக் கடலும்
வானூர் கனமும் கலிமங் குவன. 20

---

17. துன்பு உகுக்கும் — துன்பம் விளைவிக்கும். நன்பு—நண்பு, நன்றி.

18. கூண்டு உண்டாம் — கூட்டில் உள்ள. கீண்டு — கீறி.

19 தணந்தாரை—பிரிந்தவராகிய மூவரை. கோலநீர்க் கடல்:- அழகுக் கடல். ஈட்டங்கொடு — கூட்டமாய்:

20. தெளி ஆர் — தெளிவு நிறைந்த. கனம் கலி மங்குவன — மேக முழக்கம் மெலியும்படி (முழங்க.)

மயிலும் குயிலும் அழுதல்

மிக்கார் துயர்கண் டனமேன்மையிலார்
நக்கார் என,முல் லைகள் நக்கு அலரப்
புக்கார் பொழில்;தோ கைமயில், புடையின்
தொக்கார் அனையத் துயர்ஆ லுவன. 21

பயிலுண்ட நரம்பு இளகும் பரிசில்,
மயிலும் அகவ, சிறைவண் டும்அழ.
அயிலும் துயர்ஆய்ந் து,தகா ததுஎனக்
குயிலும் குயில்கின் று,குரங்குவன. 22

மக்கள் இயற்கையை விளித்துப் புலம்பல்

மயில்காள், அளிகாள் வரிகாள், சிவல்காள்,
குயில்காள், கிளிகாள், கொடிகாள்! உரையீர்;
எயில்கா ளவனத்து இணையெஞ்ச,ந(ல்)லோர்,
வெயில்கா ள(ம்)மறைந் தென மேவுஇடமே. 23

வரைஈர் புனலே, மழைஈர் வரையே,
விரைஈ ரம்அரு விரிபூந் தடமே,
சுரைஈ ரமலர்த் தொடைசூழ் பொழிலே,
உரையீர் உயிர்இன் னுயிர்உள் ளுழியே. 24

மூவரின் திருவடித் தடம் கண்டு மகிழ்தல்

உருள் தேர் வழி ஒண் கொடி ஆ டும்என,
மருள் தீர் வழியற்று மனம் தளர,
அருள் தேர் வழியா யினரை, எவனும்
பொருள்தேர் வழிதே டினர்போல் துறுவார். 25

---

21. மிக்கார் — பெரியோர். புடையின் தொக்கார் என — சுற்றத்தார் போல. துயர் ஆலுவன — அழுதாற் போல ஒலித்தன.

22. பயிலுண்ட — மீட்டும். இளகும் பரிசில் — இளகி ஒலித்தாற்போல. குயில்கின்று — கூவி. குரங்குவன — பணிந்து இரங்கின.

23. வரிகாள் — காடைகளே. காளவனம் — கரிய காடு - சுடுகாடு வெயில் — சூரியன். காளம் — கருமை-மேகம். நல்லோர் :—அம்மூவர்.

24. சுரை—புன்னை.

25. பொருள் தேர்வழி - பொருளைத் தேடு முறையில். துறுவார் - தேடினர்.

விண்டார் மதுவிள் ளிய பூம் பொழில் போய்,
தண்டார் தகைநேர் தகைதாங் கிய மார்பு—
உண்டார் அவர்,போம் உழியோ இது, எனக்
கண்டார் கமலக் கழல்அம் சுவடே. 26

'எல்லோ, விதுவோ உடுவோ, இவை ஓர்
வில்லோ டுறும் ஓர் நகையோ, விரி நூற்
சொல்லோடு அடையாச் சுடர் செய் சிறுவன்
புல்லோர் அடிபோம் சுவடே இது,—என்பார். 27

'உண்மைச் சுருதிக் கொழு கொம்பு உருவாள்,
பெண்மைப் பெரிதாய விளக்கு அனையாள்,
தண்மைக் கனம் நேர் தயையாள் அவள்,போய்
மண்வைத் தன மன் அடியே இது,—என்பார். 28

அருள் வீங் கியமார்பு அணி ஈ ரறனே,
தெருள் வீங் கியநூல் துறையே, திருநூற்
பொருள் வீங் கிய போ தகன், ஏ கி மலர்ச்
சுருள் வீங் கிய காற் சுவடே இது,—என்பார். 29

அடி கா ணுளி ஆ ருயிர் கண்ட தென,
கொடி காண் மலரும், குளிர் கொம் பர்உயர்
முடி கான் மலரும், முளிநீர் மலரும்,
கடி கான் மலர் அங் கழல் மேல் அணிவார். 30

மூவரையும் நினைந்து புலம்புதல்

பூக்கா வலனு யபொலந் தவனே,
நீக்காது உனைநே டியஎந் தொடர்பைத்
தூக்கா மையினோ, தொடரா மையினோ
நோக்காது எமைநூக் குபுபோதி என்பார். 31

---

26. விண்டு - மலர்ந்து. விள்ளிய - சொரிந்த. மார்புண்டார் அவர் - மார்புடையவராகிய மூவர்.

27. எல் - சூரியன். விது - சந்திரன். வில் - ஒளி. சொல்லோடு - புகழோடு. புல் ஓர் அடி - பொருந்திய ஓரடி.

28. சுருதி - வேதம். தண் மை கனம் - குளிர்ந்து இருண்ட மேகம்.

29. தெருள் வீங்கிய - தெளிவு நிறைந்த. மலர்ச் சுருள் - சுருள் மலர்-தாமரை.

30. கொடியிலும், கொம்பிலும் நீரிலும் பூத்த மலர்களை மூவரின் மலர்ப் பாதச் சுவடுகளில் வைத்து வணங்கினர்.

31. பூ - பூவுலகில். தொடர்பை - அன்பை. தூக்காமையினோ - ஆராயாமலோ. நூக்குபு - தள்ளி.

இனி யார் உயிர்தேற் றுவர்? ஈர்த்து உயிர்கொல்
துனி, யார் புரிவோர்ந்து, துடைத் திடுவார்?
தனி, யார் வினைவென் றுதகை பெறுவார்?
'கனி ஆரும் இந்நாடு, எரிகா யும்,என்பார். 32

'திரைபோல் இடர்வந் துதிரண் டனகால்,
வரை போன் மினிர்'என் று,வகுத் தனையே;
நுரை போல் உயிர்பொங் க,நுகர்ந்த அழற்கு
இரை போல் உருகும் க(ல்)லும் என்று அயர்வார். 33

அயர்வார், உரும்ஏற் றின்அரற் றினராய்,
துயர்வார் இருகண் மழைதூ விஅழ
மயர்வார்; மெலிவார்; மனம்ஒங் கியபின்
பெயர்வார், நசையுட் பெயராத் தொடர்வார். 34

மக்களின் துன்பத்தை மூவரும், காட்சியிற் காணுதல்

'பேர்வளர் அன்பில் மிக்கார், பிரியுங்கால், தம்மில் தேறின்,
கூர்வளர் அழலைத் தூண்டிக் கொந்தல்போல், உரையிற் பொங்கும்
சூர்வளர் தன்மைத்து உள்ளம் சுடும்'என ஒளித்த மூவர்,
ஆர்வளர் துயர்கொண்டு, இஃதாங்கு ஆகி,நீடு அகன்று போனார் 35

மாண்நெறி வளர்ந்த அன்பின் மனம் ததை அருள்மிக்கார்க்கும்
சேண்நெறி உணர்வினோர்க்கும் சேணிலை;ஆக, அன்னோர்
வாள்நெறி குடைந்த நெஞ்சின் வருந்தி ஆங்கு ஆய யாவும்,
சேண்நெறி அகன்ற மூவர், சென்று கண்டன்ன கண்டார். 36

திருமகனை வேண்டுதல்

தேனகம் அலர்ந்த கோலான், தெளிஉளத்து இரங்கி, 'ஐயா
கானகம் அன்னோர் நண்ணில், காய்துயர் காமின் என்ன
வானக மிளிர்மீன் வாகை, மணிமுகில் ஊர்திகொண்டு
பால்நக அருள்கொள் தெய்வப்பாலனை, வேண்டினனே. 37

---

32. துனி - துயர் புரிவு ஓர்ந்து - தயை புரிந்து. கனி ஆரும் - (உன்னால்) இரக்கம் பெற்ற.

33. வரை போன்மினிர் - கல்மலைபோல் நிற்பீர். அழற்கு - துன்பத்துக்கு. கல்லும் உருகி இரைபோலும் - கல்லும் உருகி இரைபோல் தோன்றும்.

34. மயர்வார் - மயங்குவார். நசையுள் பெயரா - ஆசையை விடாமல்.

35. கொந்தல் - கோபம். சூர் - துன்பம்.

36. ததை - நிறைந்த.

37. பால் நக - பாலினும் இனிய.

திருமகன் ஆசியால் மக்கள் தேறித் திரும்புதல்

முச்சக முழுவெண் திங்கள் முக்குடை நிழற்றி ஆளும்
எச்சகம் அனைத்தும் ஏத்தும் இளவல்செய் ஆசி தன்னால்,
கச்சகம் வீக்கின்றற்போல் கான்நெறி உணர்வற்று, அன்னார்
நச்சகம் அமிர்த மாக நயக்கடல் அமிழ்ந்தி னாரே. 38

கரையுடைத்து அரவுய்த்துஓடும் கடல்,கரை யிட்டதேபோல்,
புரையுடைத் தவன்செய் ஏவல், புணர்ந்தநீள் கூலமாகத்
திரையுடைத் தொடர்பின் வந்தார், திறனுணர் கிலராய் நின்றே
உரையுடைத்து உயர்ந்த ஞானத்து ஒளிஎழீஇத் தேறினாரே. 39

'தீயவும் நல்ல வாமே திருவுள மாக வந்தால்;
தூயவும் தீய வாமே துகள்வழி வந்தால் என்னாக்
காயஉள் மெலிந்த நெஞ்சார், கருத்திடை குளிரத் தேறி,
பாயஉள் மலிஇன் பால்,தம் பதிநகர் மீளல் சூழ்ந்தார். 40

"அம்மையே, மகவே, வாய்ந்த அருந்தவத்து இறைவ னுசை,
நும்மையே உயிரென்றாக நுதலி,நும் நிழலில் வாழ்ந்த
நம்மையே அகன்று போதிர்; நட்பிடை அகலாது, அன்பின்
செம்மையே பேண்மின்" என்னாச் சென்று,மீண்டு எவரும் போனார். 41

மூவரும் எசித்து நாட்டைக் கடந்து செல்லுதல்

இப்புறத்து இனையன இவரும் எல்லையில்,
முப்புறத்து இணையில மூவர், எங்கணும்
ஒப்புறத் துணையில உவகை செய்து,எசித்து
அப்புறத்து, அமரர்சூழ் அணுகிப் போயினர். 42

---

38. அகம் கச்சு வீக்கின்றற்போல - மனம் நூற்கயிற்றால் கட்டப்பட்டது போல. கான்நெறி உணர்வற்று - காட்டு வழி செல்லும் உணர்வை விட்டு. அகம் நச்சு - மனத்திலுள்ள துயரமாகிய நஞ்சு.

39. அரவு - ஒலி. புரை - பாவம். கூலம் - அணை. திரையுடைத் தொடர்பின் - வெள்ளம்போல் தொடர்ந்து. உரை உடைத்து உயர்ந்த - சொல்லில் அடங்காது உயர்ந்த.

40. காய - காய்ந்த. பாய - பாய்ந்த.

41. நுதலி - கருதி.

42. இவரும் - பொருந்தும்—நடைபெறும். ஒப்புறத் துணை இல - ஒப்பிடத்தக்க நிகரின்றி. முப்புறத்து - மூவுலகிலும்.

தீயினர் உறவெனச் சிறுகும் பன்னெறி
போயினர், அமரர் சூழ் புடைபு டைப்புணர்ந்து—
ஆயினர், அருந்ததியோடு ஈரை யாயிரர்
தூயினர், துயர்க்கு,அறத் தொடர்பிற் போயினார். 43

மருத நிலக் காட்சி

விண்ணுளே பிறந்ததோர் தளத்தில், விண்ணவர்,
பண்ணுளே பிறந்ததோர் இசைகள் பாடிட
மண்ணுளே பிறந்ததோர் வடுவை மாற்றினர்,
தண்ணுளே பிறந்ததோர் தடத்தின் நண்ணினார். 44

மைக்கொடு குவளைகண் நோக்கி, வாரிசக்
கைக்கொடு விளித்தபூம் பொய்கை கண்டுளி,
பொய்க்கொடு மருட்டவோ என்று போயினார்;
மெய்க் கொடு சுருதிநூல் விளைத்த விஞ்சையார். 45

தூவி அஞ் சிறைஅனம் தொடர்கு டைசெய,
கூவி அங் குயிலியாழ் குளிற, மஞ்ஞைகள்
ஓவியம் சிறைவிரித்து உவப்பில் ஆடமுன்,
பூவியந் துணர்த்தடம் பொருந்திப் போயினார். 46

ஆவி நோய் செயும்புரை அழிக்கும் மூவர் போய்,
காவி நோய் செயும் தம கழற்கு நோய் செயா,
பூவில்நோய் செயும் அளி, குடைந்த பூ, மதுத்
தூவி, நோய் செயுந்தடம், துணரிற் றாயதே. 47

முல்லைக் காட்சி

தனம் கிடந் தெனக்கிளி தாங்கிலாத் தினைப்
புனம் கிடந் தனபரப்பு அகன்று போய்த், துளிக்
கனம் கிடந் தெனக் கரி கிடந்த காடும் போய்
வனம் கிடந் தனவழி மருவிற் றாயதே. 48

---

43. தீயினர் — தீயோர். புணர்ந்தாயினர் — பிரியாதவராய். தூயினர் - நல்லோர். அறத் தொடர்பில - அறத்தை விடாமல் கடைப்பிடித்தல்போல.

44. வடுவை மாற்றினர் — பாவங்களைப் போக்க வந்தவர். தடம் — தடாகம்.

45. வாரிசம் - தாமரை.

46. தொடர் குடை செய - தொடரும் குடையாக வரவும். குளிற-ஒலிக்க.

47. ஆவி நோய் செயும் - உயிரை வருத்தும். தம் கழற்கு - தம் பாதங்கள். நோய் செயா - நோகாதபடி. மது தூவி - தேனொழுகி. துணரிற்றாயது - பூவிதழ்போல் சிறப்புற்றது.

48. தனம் - செம்பொன். துளிக்கனம் - துளிமேகங்கள். மருவிற்றாயது- கிட்டியது.

பாலைநிலம் பன்மலர் பூத்தல்

தீர் அரும் சிலையின்நாண் முறுக்கின் சீர்மையால்,
பேர் அரும் தவத்தொடு பிறந்த ஞானம்போல்,
சோர் அரும் கருத்தினோர் தொடர்ந்த தம்கதி,
நேர், அரும் சுரத்திடை நெகிழ்வுஇ லாயினார். 49

நீர் முகத்து, இரவிகை நீட்டிப் பொற்புறப்
பார் முகத்து இரவுஇருள் படத்தை நீத்தென,
சூர் முகத்து அழல்துயர் துடைத்து, மூவர் வந்து,
ஏர்முகத்து எழுந்தகான் இலங்கிற் றாயதே. 50

‘புடம்புனைந்(த) இரும்பு,செம் பொன்னின் தன்மையாம்,
இடம்புனைந்து இட்டதோர் இரதத்தால் என்பார்;
தடம்புனைந்து இவர்வர, தழன்ற கான்,அலர்ப்
படம்புனைந் தெழுதிய பரப்பிற் றாயதே. 51

சொல் திறத்து ஒருகணத்து உலகம் தோற்றி,முன்
பல் திறத்து எழில்நலம் படைத்த பான்மையால்,
முன்திறத்து அழன்றகான் மூவர் கண்டுளி,
பொன் திறத்து அரிதினிற் பொறித்த தாயதே. 52

மை மறுத்து அலர்அணி வனங்கண்டு, ‘ஆ’ எனக்
கை மறுத்து அதிசயித்து அலர்ந்த காந்தளை,
பை மறுத்து அவிழ்அரா என்று பாய்மயில்,
பொய் மறுத்து, இனம்நக நாணிப் போயதே. 53

---

49. தீர் அரும் - மாறாத. சோர்(வு) அரும் - சோர்வில்லாத. தம் கதி - தம் வழிக்கு. நெகிழ்வு இலாயினார் - குழையாதவரானார்.

50. நீத்தென - தள்ளினாற்போல.

51. இடம் புனைந்து இட்ட - தக்க பருவத்தில் இட்ட. தடம் புனைந்து - பாலை வழியே.

52. சொல்திறத்து - சொன்ன தன்மையில். பல் திறத்து - பலவகையான. பொன் திறத்து - பொன்னால்.

53. மை மறுத்து-மாசு ஒழித்து. கைமறுத்து-கைவிரித்து. பை மறுத்து அவிழ்-படத்தை மிக விரித்த. பொய் மறுத்து-பொய்யென்று கண்டு வெட்கி.

54. தோகையின் எருத்து - மயிலின் கழுத்து. காசை - காயாமரம். உட்கு-அச்சம். எயிறு உடைந்ததே-பற்கள் போன்ற அரும்புகள் உடைந்தன.

தோகையின் எருத்தெனத் துணர்வின் காசைகண்டு,
ஆகையின் மயில்ஒளித் தாக, உட்குஉறீஇ,
ஏகையில் வண்டுகண்டு இளைய முல்லைகள்,
ஓகையின் நக்கென, எயிறுஉ டைந்ததே. 54

'மிகை யுடைத் தகவினர் மெலிவு காண்டுளி,
பகை யுடைத் தகவிலார் பரிசின் நக்கதோ?
நகை யுடைத்து உகுக்குவம்' என்ன நண்ணி,மென்
முகை யுடைத்து உதிர்த்தன மொய்த்த வண்டு;அரோ. 55

இயற்கைக் களிப்பின் இடையே மூவர்

பைச் சுடர் மரகதப் பலகை பாய்த்தி,மேல்
ஐச்சுடர் மணிபரப்பாக, பைம்புன்மேல்
நொய்சுடர் அலர்த்தடம் நொய்தென்று ஏகினர்;—
முச்சுடர் நடந்தென நடந்த மூவரே. 56

உள்முழுது அருள்,முகத்து உகளத் தோற்றிய
விண்முழுது இறைஞ்சு எழில் காண வேட்கையால்,
கண்,முழுது உடல்பெறு கலாப மஞ்ஞைகள்,
தண்முழுது அலர்ந்தகான் ததும்பி, ஆடுமால், 57

கற்றெனத் தகாதுஉரைத்து, அன்பு கைக்கொளப்
பற்றெனப் பொருளினைப் பற்றும் பூரியர்
அற்றெனத் தும்பிகள் அலர்க்கண் நட்பினைச்
சொற்றெனக் கனைந்து,சூழ் துணர் குடைந்தவே. 58

சாற்றின உரைகள்பொய்த்து, அன்பின் தன்மையால்
போற்றின பொருளறப் புலம்பும் புல்லர்போல்,
ஊற்றென வடிந்த தேன் உண்டு, மாறலின்
தூற்றென வருகளி துவைப்பப் போயினர். 59

---

55. மிகையுடைத் தகவினர் - பெருமையுடையவர். பகையுடை-பகைத்த. தகவிலார் பரிசின் - நீசரைப்போல. நகை - பல்

56. பாய்த்தி - நீட்டி. ஐ சுடர் மணி - அழகிய மணிகளை. நொய்தென்று - விரைவாக.

57. உகள - துள்ளும்படி. ததும்பி - திரண்டு.

58. கற்றஎன-படித்தாற் போல. அன்பு கைக்கொள-அன்பை விரும்பி. பற்றென - பற்றுக்கோடாகிய - கையிலுள்ள. பூரியர் அற்று என - கீழ் மக்களின் தன்மைபோல.

59. மாறலின் - மாறிய பின்னர்.

வல்உருத் தகவிஞர் கடந்த வாயெலாம்
தொல்உருத் தக,வனம் சுடஅ முன்றதால்;
வில்உருக் கணவனை விழித்த கண்ணினால்,
பல்உருக் காண்டில பாவை பான்மையே. 60

பாலைவனத்தில் வாழ்ந்த முனிவர்களைத் திருமகன் குறிப்பிடுதல்

நண்பு அக(ம்)மலர்ந்த மூவர்,
நடுவனம் சென்று,ஓர் நாளில்
ஒண்பகல் நெற்றிப் போதில்,
உயர் திடர் அகட்டில் வேய்ந்த
சண்பக நிழலின் வைகித்
தரணி ஆள் இளவல், நல்யாழ்
பண்புஅகல் உரை கொண்டு, அம்பூப்
பதுமவாய் மலர்ந்து சொன்னான். 61

நேர்அலர் மறுத்துச், செந்தீ
நிறைகினும், பலகால், வைகி,
நேர்அலர் வனத்தில் நாமே
நிகழ்ந்து அடி வைத்த பாலால்,
நேரலர் நேரும், நேரா
நீள்நிதி துஞ்சும் கோயில்
நேர், அலர் இக்கான், துஞ்சும்
நெடுந்த வத்து அறங்கள் தாமே. 62

பேர் நலம் பொறித்த கான்,தேன்
பெயர்க்கும்–ஓர் ஊற்றதாகி,
ஆர் நலம் பொலிதல் நோக்கீர்;
ஆயஇவ் வனப்பும் வாட்டி,
பார் நலம் துறந்து,இங்கு ஆர்ந்த
படிவர் எண்ணின்றி வைகி,
சேர்நலம் விரும்பி, வானோர்
சென்று,வான் ஒக்கும் கானே. 63

---

60. வல் உரு தகவிஞர்–சிறமையும் பெருமையும் உடைய அப்பெரியோர். தொல் உருத்தக – பழைய உருவாக. வில் உரு – அழகிய. பல் உரு – வேறு பல வடிவங்கள்—பிற ஆடவர். பாவை – (கற்புடைய) பெண்.

61. நண்பு – அன்பு. திடர் அகட்டில் – மேட்டின் நடுவே. பண்பு அகல் – இனிமை மிக்க.

62 நேர் அலர் – 1நேர்ந்து தந்த மலர், 2நீண்டு பரந்த. நேரலர் – பகைவர். கோயில் நேர் – கோயிலைப் போல.

63. ஆர் நலம் — நிறைந்த செல்வம். படிவர் – முனிவர்.

காஉள னாகி, என் மேல்
கருத்தில், வான் குடியன் வேத
நா உளன், தவத்தின் வாய்ந்த
நவ் வுளன், வினை நீர் நீந்தி,
மேவுளன் வளர்ந்து, எந் நாளும்
வேண்டும் – ஊண் காகம் உய்ப்பப்
பாவுளன் என்பான், நீடுஅப்
பறம்படி முறையுள் வாழ்வான். 64

இவா இயல் அடியின் நீழல்
என, அடும் சகடு நீங்கா
அவா இயல்பு அறிந்த தன்மைத்து,
அமரர்—ஒத் தெனக், க டாம் பெய்
உவா இயல் முதற்பன் மாவும்,
உவந்து அவற்கு ஏவல் செய்யத்
தவா இயல் முனிவர்க்கெல்லாம்
தலைவ னென்று ஒளிமிக்கு ஆவான். 65

வேள் அரிது அமர்போர் வென்று,
வியன்றகான் எய்திப் பேய்கள்,
கோள்அரி உழுவை மற்றக்
கொடிய மா உருவில் தோன்றி,
நீள் அரிது யுத்தத்து எஞ்சா
நெடிய அம் மலைக்கண், நோன்பின்
வாள் அரிது ஏந்தி வெல்வான்
வரங்கொள் அந்தோனி என்பான். 66

---

64. வான் குடியன் - மோட்சத்தில் குடியிருப்பவன்; நவ்(வி) உளன் - மரக்கலத்தில் ஏறியவனாய். பாவுளன் — எலியாஸ் முனிவன்.

65. இவர் இயல் - செல்லும் தன்மைக்கேற்ப. கடாம் பெய் உவா - மத யானை. தவா இயல் - கெடாத தவ இயல்பு.

66. வேள் - மன்மதன் (செய்யும்). வியன்ற - பரந்த. நோன்பின் வாள் - தவமாகிய வாள்.

நீரின்பால் இரவி மூழ்கி,
நினைத்ததோர் தியானம் விள்ளா,
தேரின்பால் இரவி மீண்டும்
திர்கிலன், உணர்ந்த காட்சி,
காரின்பால் உயர்ந்த வீட்டில்
கனிந்துஉறை காட்சி யொப்ப,
பாரின்பால் வரைமுகட்டு-ஓர்
படர் விளக்காக நிற்பான். 67

மீஇர வரசன் சூழ்ந்த
மீனென முனிவர் ஓர்மூ-
வாயிரர் தொடர, நெஞ்சத்து
அவாஅறத் தணித்து நிற்ப,
பாயிர உரையின், நாதன்
பார்த்து,அவண், இலரியோனே
தேய்இர வரசின் வெற்றிச்
சிலையின்-நாண் முறுக்கிற் போல்வான். 68

உரிவளர் தவத்தின் சால்பின்
உறுத்த மெய் உருவந்தானே,
எரிவளர் உலைகொன்று ஈன்ற
இலைப் பலி யாக மாறி,
அரிவளர் அங்கண், கொன்ற
ஐம்பொறி புதைத்துப் பல்கால்
சொரிவளர் வானும் காணுச்
சோணமா முனிவன் நோற்பான். 69

உறப்பகை நுழைவாய் என்று,ஐந்து
உட்பகை தவமே காக்க,
புறப்பகை பகழி தாங்கும்
பொற்பர மாகச் சீலம்
பெறப்,பகை செகுக்கும் வைவாள்
பெற்றியின் விரதம் ஓச்சி,
அறப்பகை வெறியை வென்றுங்கு,
அயோதரன் நெடிது நோற்பான். 70

---

67. விள்ளா - விடாமல். தேரின் பால் இரவி மீண்டும் - ஒளித் தேரில் கதிரவன் திருப்பி வந்தும்.

68. இரவு அரசன் — சந்திரன். தேய் இரவரசின் - தேய்பிறைபோன்ற.

69. சால்பின் - மிகுதியால். உறுத்த - வருத்திய. பலி — சாம்பல். சொரி - பெருங்கொடை.

70. வாய் — வாயில். பொன் பரம் — பொன் கேடயம். செகுக்கும் - வெல்லும். வைவாள் பெற்றியின்-கூரிய வாளின் தன்மையில். வெறி - பேய்.

அவாஎன மதத்தின் சீற்றத்து
அறிவெனப் பாகன் வீழ்த்த
உவாஎன உடலைக் கைக்கொண்டு,
ஊக்க(ம்)நல் தோட்டி மாற்றி,
விவாஎன தவக்க வட்டை
இட்டு,இரு விரதத் தூணின்
மவாவன முனிவன் சேர்த்தி,
வானமும் வியப்பச் செய்வான். 71

வீட்டரும் நாட்டிற் கேற்ற
விழுப்பொரு ளாக நாடி
ஈட்டரும் சீலக் குப்பை
ஏற்றி,நல் லுயிரோடு ஆக்கை
பூட்டரும் ஏராய்ப் பூட்டி,
புரைநசைச் சேற்றுட் செல்லா
வாட்டரும் தவத்தின் பண்டி,
மதித்நகன் கதியிற் சேர்ப்பான். 72

தேன் இமிர் முல்லை யாகத்
திருந்து அறத் தொகுதி நட்டு,
நூல்நிமிர் தவத்திற் காத்த
நெறிப்பொறி வேலி கோலி,
மேல்நிமிர் ஒழுக்க நீரை
விட்டு,அருள் மணலைப் பாய்த்தி,
வான்நிமிர் உலகில் நாறும்
வனத்தினங்கு, அசோரன் பூப்பான். 73

ஆற்றிய தவச்செந் தீயில்
ஐம்பொறி இரும்பிட்டு ஊதி
ஏற்றிய தெருளின் ஞான
இரதமிட்டு, ஆய பைம்பொன்
தேற்றிய மறை அச்சாகச்
சீலநன் மணிகள் சேர்த்தி,
போற்றிய தேவ மார்பில்
புரோதரன் அணிப்பூண் ஆவான். 74

---

71. அவா என - ஆசையாகிய. உவா—யானை. விவா என—மேன்மை பொருந்திய. கவடு - கயிறு. இரு விரதம் - முறியாத விரதம்.

73. நெறிப் பொறி - ஒடுங்கிய ஐம்பொறி. வனத்தின் ஆங்கு - பூங்கா வனம்போல். பூப்பான் - புண்ணியமாகிய மலரைப் பூப்பான்.

74, இரதம் — சாறு.

''மீனென விளங்கித் துஞ்சும்
மின்னென வாழ்க்கை நோக்கி,
'யானெனது' என்னும் பற்றல்
யாவுமற்று, எண்ணொன்று இன்றி,
வானென விளங்க இக் கான்
வருந்திஎன் அடியை வைத்தேன்
நான்'' என உணர்ந்து மொய்ப்பார்
நற்றவத்து உயர்ந்த நீரார். 75

போர்பொருள் பலவும் நாடிப்
போதல் ஆண் தொழிலாய்ப் போகில்,
ஏர்பொருள் நாணம்நா(டி),இல்
இருத்தல் பெண் தொழில தாகி,
தேர்பொருள் அறங்கள் நாடிச்
செய்த ஆண் துறவி னூங்கும்,
பேர்பொருள் வாழ்க்கை நாடாப்
பெண்துறவு, அரியதன்றோ? 76

தீயவும் நலவும் உள்ளின்
தேறிய பெண்ணின், தேறல்
ஆயவும் அரிதே; முன்னர்
அழிந்த நாண் வேலி தாவி
ஏயவும் காமத்து ஆழ்ந்த
ஏசிய மரியாள், பின்னர்
தூயவும் அரிதில் ஓர்ந்து
துறந்து, இவண் நெடுநாள் நிற்பாள். 77

கண்மையின், மற்று யாரும்
கண்டதன் பிழை,காண் பார்ஆர்?
நுண்மையின் உற்ற பாவம்
நுதலி,உள் தானே கண்ட
உண்மையின் உணர்ந்த ஊக்கம்,
உளத்துஇற காக எய்தி,
பெண்மையின் போர்வை நாணம்
பிரிவிலள், போர்த்து நிற்பாள். 78

---

75 பற்றல் - பற்றுதல்கள்.

76. ஆண்தொழில் - ஆண்மக்களுக்குரிய தொழில். ஏர் பொருள் நாணம் நாடு - அழகிய பொருளாகிய நாணத்தைக்கொண்டு.

77. தேறிய பெண்ணின் - துணிந்த பெண்ணைப் போல.

78 கண்மையின் - (பிறர்க்கேயன்றித் தனக்குத் தோன்றாத) கண்மை போல. நுண்மையின் - நுண்மணலினும் (அதிகமாய்).

காமமே பறவைத் தேர் மேல்,
கசடெனும் பாலை சேர்ந்தாள்,
வீமமே பறவைத் தேர்மேல்
விளைதவக் குறிஞ்சி,ஞான
வாமமே பறவைத் தேர் மேல்
வளர் அற முல்லை சேர்ந்து,என்
நாமமே பறவைத் தேர்மேல்
நயப்ப, வான் நாட்டைச் சேர்வாள். 79

இனைவரும், பலரும், எண்ணில்
ஈட்டமும் வேறு மாகி,
நனைவரும் பொழிலில் நிற்பார்,
நயப்பொடு நெடுங்கால் எஞ்சாக்
கனைவரும் திரண்ட தீயிற்
கனன்ற கால் நோற்று,ஈங்கு என்னை
அனைவரும் புகழும் ஓதை,
அலையும் நீல் முகிலும் ஆற்று. 80

தவநெறி நின்றார் பெருமை

துறவினால், உடலின் ஆக்கை
துறந்ததோர் உயிர்கள் ஒப்பார்;
உறவினால், அன்பில் மிக்கோர்,
உயிர்க்கெலாம் உடல்கள் ஒப்பார்;
அறவினா எழீஇய தன்மைத்து
அருள்மலி அமரர் ஒப்பார்;
நறவினால் அலர்ந்த கானும்
நலத்தில் வானுலகுஒப் பாமே. 81

---

79. பறவைத்தேர் - பறக்கும் தேர். வீமம் - (கடவுள்) பயம். தவக் குறிஞ்சி - தவமாகிய குறிஞ்சி நிலத்தில். நயப்ப - வாழ.

80. இனைவரும் - இவரும். ஈட்டமும் - கூட்டமாகவும். வேறுமாகி - தனித்தனியாகவும். நயப்பொடு - ஆசையோடு. அலையும் - கடலும்.

81. ஆக்கை - கட்டு. அறவினா - தரும ஆராய்ச்சி.

உள்ளிய தவ நவ் ஏறி,
ஊக்க(ம்)நீள் மரத்தை நாட்டி,
விள்ளிய அன்பும் உட்கும்
வியன்இரு பாயும் பாய்த்தி,
தெள்ளிய வரக்கால் வீசத்
தியானம்மீ காம ஞக,
அள்ளிய வினைநீர் ஈர்த்தூர்ந்து,
அரிதில் வீட் டுலகிற் சேர்வார். 82

வவ்விய தவம் கெட்டு, அம்மா
மரக்கலம் கவிழ்ந்த தேபோல்,
அவ்விய முந்நீர் மூழ்கி
அழுந்துவர் பலர்;இ வர்க்குள்
கவ்விய உணர்வின் தெப்பம்
கண்ணினீர்க் கடலை நீந்தி,
செவ்விய கதியின் வீட்டைச்
சேர்வர்—ஓர் இருவர் என்றுன். 83

மெய்க்குடத்து அமிர்துஉண் டன்ன
விரித்த சொற் செவியின் மாந்தி,
"பைக்குடத்து அனைய தீயார்
பான்மை' என்றுலும், சுட்ட
அக் குடத்து அழிவு தீர்த்தல்
அரிதெனத் தவம்நீத் தாரும்,
இக் குடத்து அனைய தேற்ருர்"
என்றனன்—மதுப் பெய்கோலான். 84

---

82. நவ்வேறி : நவ்வி ஏறி என்பதன் தொகுத்தல் விகாரம். நவ்வி - மரக்கலம். அன்பு - தேவபக்தி. உட்கு - தேவபயம். அள்ளிய - நிறைந்த. வினைநீர் ஈர்த்து ஊர்ந்து - வினைகளாகிய கடலை அறுத்துச் சென்று.

83. வவ்விய - பிடித்த. அவ்வியம் முந்நீர் - பாவமாகிய கடலில். கவ்விய உணர்வு - மனத்தாபம்

84. பை குடம் - பசுமண் குடம்—தவம் செய்யும் வாய்ப்புடைய தீயோர். சுட்ட குடம் - தவநெறியை விட்டவர். அழிவு தீர்த்தல் - உடைவைப் பொருத்துதல். இக் குடத்து அனைய-இந்தச் சுட்ட குடம் போல. தேற்ருர் - தெளிவுருர். பசுமண் குடம் உடைந்தாலும் திரும்பக் கூடுதலும் சுடுதலும் எளியது. சுட்ட குடம் உடைத்தால் பயனற்றுப்போம்.

வானவர் திருமகனை வணங்கிப் பாடுதல்

உரைத்தன மதுத்துறை உரைகள் கேட்டலும்,
உளத்துஎழும் உவப்பொடு, வரைவிலாப்புடை
நிரைத்தன, இருள்கெட வெயிலை ஆக்கிய
நிறத்துஅணி உருக்கொடு, அமரர் கோக்கணம்
வரைத்தன குருக்கதிர் இரவி, நீர்க்கடல்
மறுத்துஎழ, உடுக்கணம் விழுவபோல், திரை
இரைத்தன கடற்கலி மெலிய ஆர்த்து,உடல்
எடுத்து உலகு அளித்தவன் தொழுது சாற்றினர். 85

தகைத்தகு வனப்புஎழ மணிகள் ஈட்டுபு,
தவிர்த்தன திருத்தகு நகரின் வாழ்க்கையும்
நகைத்தகு வனத்துஉரி வளம்இது ஆக்கலின்,
நசைக்கொடு பகைத்தன பொறிகள் மாய்த்துஒளி,
மிகைத்தகு தவத்துரு வெருவு காட்டினும்,
விளைத்தன வரத்துஅருள் மலிய, வீட்டுயர்
திகைத்தகு நலத்தெழு வனமி தாய்ப்,புகழ்
திளைத்தன கவித்தொடை நிகரும் மாட்சியோ? 86

கொலைப்படு செருப்படை கொடுமைபோல்,கொலை
குணித்து,உயிர் செகுத்தன பொறிகள் ஆக்கிய
உலைப்படும் நெருப்பினும் அழலும் வேட்கையை,
உறுத்திய தவத்தினோடு அவிய மாற்றலின்,
நிலைப்படு வனத்துஅழல் திரளும் ஆற்றுபு
நிரைப்பட, அறத்தொகை வளரும் மாட்சியோடு,
இலைப்படு நிழல்கொடு மலரும் பூத்திரள்
இசைத்ததோர் பொழிற்குஇணை வனமிது, ஏத்தவோ? 87

---

85 புடை நிரைத்தன - புடையிற் சூழ்ந்து. நிறத்து அணி - அழகிய உருவோடு.

86. நகைத்தகு - நகைக்கத் தக்க. வீடு உயர் திகை தகு - உயர்ந்த வானுலகின் இடம் போன்ற.

87 கொலைப்படு செருபடை - கொல்லும் போர்ப்படை. ஆற்றுபு - ஆறி

உடுத்தன உடற்கொடு உலகு காத்தருள்
    ஒளி(க்)கெழு நிலத்தினர் தொழுத பார்த்திப!
எடுத்தன மலர்ப்பதம் நலமி தாய்த்,திரள்
    இருட்டுஇரவு ஒளிப்பகல் அனைய நீர்த்தலும்
கடுத்தன பொறித்தழல் குளிர மீட்டலும்,
    கடுத்துஅடும் விடத்தினை அமிர்த மாக்கலும்
விடுத்தன கடல்திரை நிலையின் வாய்த்தலும்
    விருப்பெழ அடுத்தநின் அடியின் ஆக்கமே. 88

விதுப்பட உருப்படும் அமரர் பாத்தொடை
    விளைத்து,இவை இசைத்து,அடி தொழுது வாழ்த்துளி,
சதுப்பட வகுப்பொடு பரவ தாய்ப்,பல
    சதத்துஅணி ஒருப்பட, எமவி ஞப்படப்
புதுப்பட வனப்பொடு, அரிதில் ஆக்கிய
    புகைக்குழல், குரற்கலம் உளரி, வாய்த்தன
மதுப்பட இசைப்படும் இனிய பாப்புகழ்
    வகுத்தனர் துதித்தனர் தொழுது வாழ்த்தினர். 8

வலித்தன கலக்குரல் தொனிகள் மாற்றிட
    மலர்த்துறை அடுத்(த)அளி இனிதில் ஆர்த்தலும்,
ஒலித்தன மடக்குயில் இசைகள் நீர்த்தலும்
    ஒளிச்சிறை புடைத்துஎனைப் பறவை பார்த்தலும்,
பொலித்தன விழித்தழை விரிய நோக்கிய
    பொறிக்கெழு மயில்திரள் அரிய கூத்தெழ,
கலித்தன இடைத்தொறும் உவமை நீக்கிய
    களிப்பொடு, வனப்பெழும் வனமது ஆக்கமே. 90

---

88. ஒளிகெழு நிலத்தினர் - ஒளிபொருந்திய வானுலகில் வாழ்வோர். பார்த்திபர் - அரசர். நீர்த்தலும் - விளங்கவும். குளிர மீட்டலும் - பின்னர்க் குளிரவும். நின் அடியின் ஆக்கம் - நின் திருப் பாத செல்வம்.

89 விது பட - சந்திரனின் அழகமைந்த. சதுப்பட - சதுக்கமாய். பரவதாய் - பரவின. சதத்து அணி - நூறு நூறான அணிகள். எம் விஞப்பட - எம்மால் நினைக்கப்படாத. கலம் - வீணை.

90. வலித்தன - இழுத்துக் கட்டிய. நீர்த்தலும் - பாட்டவும். பொலித் தனம் - தனம் பொலி - பொன் விளங்கும். இடைத்தொறும் கலித்தன - இடங்கள்தோறும் முழங்கின.

மூவரும் கானகத்தைக் கடத்தல்

எழுக என்றனன், ஏழுலகு ஆள்பவன்
மெழுக விட்டன மென்மலர்ப் பூந்தடம்
ஒழுக, மூவரும் உள்உவப் பின்கடல்
முழுக, ஏகுபு மொய்வனம் நீங்கினர். 91

நீங்கி னார்எனத் தம்மை நினைத்திலார்,
ஏங்கி ஆகுலத் தீயில் எரிந்தென,
பாங்கி னார்இவர் பாதம் அகன்ற கான்
வீங்கி, ஆர் அழல் தொல்லையின் மேய்ந்ததே. 92

நெட்டி டைத் தடம் பற்பல நீந்தினர்,
மொட்டி டைக் கனை வண்டினம் மொய்த்ததண்
மட்டிடைக் குளிர் காட்டினுள், வான்கதிர்
பட்டுஇடைக்கடல் பாய்ந்தெனப் போயினர். 93

காட்டுவழி

பகையது உள்ளெனப் பாந்தளின் செல்வென
நகைய மின்னென, நங்கையர் நெஞ்சென,
தகைய தோர்நெறி செம்மை த காது,உறும்
திகையது எய்தினர்; செம்மை உளத்தினர். 94

தேங்கொள் பூமலி நீள்திமிசு உச்சிமேல்
தூங்கு,ஒள் வாவல்இ றால்அறத், தூய்மடல்
ஓங்குஒள் பூகநன் முத்து உதிர் ஓங்கலைத்
தாங்கொள்,அத் தடம் சாய்ந்து,அருகு அண்மினர். 95

ஆலம் விற்பன கண் பொது வாட்டியார்
ஞாலம் விற்பன வாய்த்துகிர் நட்பென,
ஏலம் விற்பன வெற்புஅடி ஈட்டிய
கோலம் விற்பன காஞ்சிரக் கொள்கையே. 96

---

91. பாங்கினர் - அழகிய இவர்கள்.

93. மட்டு - மது. இடைக் கடல் - நடுக்கடல்.

94. உள் என - உள்ளம் (நினைவு) போலவும். செல்வு - செலவு, வழி. செம்மை தகாது – செம்மையின்றி

95. திமிசு – வேங்கை மரம். வாவல் – வெளவால் (போன்ற) இறால் - தேன்கூடு. ஓங்கல் - மலை.

96. பொதுவாட்டியார் - பொது மகளிர். துகிர் வாய் நட்பு என - பவள வாயின் பொய் நட்புப் போல. ஈட்டிய - திரளாய் நின்ற. காஞ்சிரக் கொள்கை– எட்டிமரத் தோற்றம்.

வலவ கம்கிரி வைத்து நடந்துபோய்க்
கலவ மஞ்ஞை களிப்புறத் தீங்குழல்
உலவ ஆயர் நிரைக்கொடு, உழைக்குலம்
குலவ,முல்லை நிலங்கொள ஏகினர். 97

கரவ நெஞ்சுஉணர் காமம்,ஓர் மூரலே
பரவக் காட்டின பான்மையில், அங்கணில்
குரவம், நீண்ட குடங்கை கரந்த,பூ
விரவ நக்க,முல் லைவிரை காட்டுமால். 98

முகை அணிந்துஅளி மொய்புவி கூந்தலின்
வகைஅ ணிந்தமுல் லைப்பினர், மற்றதன்
தகைஅ ணிந்த முகம்தரும், யூதர்தம்
திகைஅ ணிந்த சிலம்புஎதிர் எய்தினர். 99

சோலை மணலில் இளைப்பாறுதல்

புக்க யாவரும் போக்(க)அரி தாய்,எழில்
தக்க தோர்பொழில் சாய்ந்து,அடி நோயற,
மிக்க தேன்துளி செய்நளிர் மேவிவந்து,
ஒக்க வெண்மணல் திண்ணையில் ஓங்கினர். 100

மோரியமா மலை கண்ட திருமகன்

பொதிர் தரும் பூந்தரு பொலிந்து நாறி,ஆங்கு
எதிர்தரும் மோரியம் என்னும் வெற்புகண்டு,
உதிர்தரும் மலர்மது வொப்ப கண்ணினீர்
கதிர்தரும் முகத்துஉக, இளவல் காட்டினன். 101

---

97. வல அகம் - வலப்புறம். நிரைக்கொடு - பசுக்கூட்டங்களோடு (கலந்த). உழைக் குலம் குலவ - மான்கூட்டங்களை மேய்க்க.

98. கரவ - மறைவாக. அங்கணில் - அவ்வழியில். பூ - பூவனம்.

99 முகை அணிந்து - பூமாலை சூழ்ந்து. அளி மொய் - வண்டு மொய்க்கும். தகை அணிந்த - அழகு பொருந்திய. முகம் தரும் - முகம் எனத் தரும். யூதர் தம் திகை - யூதர் வாழும் நாடு.

100. எழில் தக்கது - அழகு பொருந்தியதாகிய. அடிநோய் அற - கால் வருத்தம் மாற. நளிர் - குளிர்.

101. பொதிர் தரும் - பருத்த. நாறி - வாசனை வீசி.

தீயுமிழ் உலையில்அம் கோதை தீந்தென
நோயுமிழ் நீரென நுதலி, நொந்ததாய்
வீயுமிழ் தேனினும் விழைந்த தீஞ்சொலாய்,
நீயுமிழ் நீர்உக நிலைமை யாதென்றாள். 102

மின்னிய கார்குழல் தாங்கி, வீழ்புனல்
துன்னிய கலையெனச் சூட்டி, ஆங்குஎதிர்
கன்னிய திருமலை காண்மின்; அம்மலை
உன்னிய திறத்து அழுது உயிர் நொந்தேன் — என்றான். 103

ஆபிராம் பலி கொடுத்த செய்தி

நொய்யவாய் மதுமலர் நொதுத்த கோலினான்,
வெய்யவாய் முகில்தவழ் வெற்பில் யாதென,
உய்யவாய் நமக்குஇட உதித்த நாயகன்,
செய்யவாய் அம்புயம் திறந்து செப்பினான். 104

"தேன் நலம் தோய்தயை சேர்த்தி, ஆபிராம்
கான் நலம் தோய்தவத்து ஈன்ற காதலன்,
வான் நலம் தோய்மகிழ்வு உய்த்த மைந்தனாய்,
நான் நலம் தோய்திரு நகுலன்" — என்பவே. 105

கலைபுறங் கண்டசேய் கனிவ ளர்ந்தபின்,
கொலைபுறங் கண்டவாள் கொண்டு 'கொல்'என,
அலைபுறங் கண்டநோய் தாதைக்கு, ஆண்டகை
உலைபுறங் கண்ட தீ யொப்பச் செப்பினான். 106

அப் பணி உயிர் அறுத்து அருந்திற் றாயினும்,
வெப்புஅணி பணிபணிந்து இயற்ற வெய்தென,
இப்பணி இல்லவட்கு இசைப்புஇல் ஆபிரான்
செப்பு அணி மலை, மகற் சேர்த்தி, நாடினான். 107

---

102. கோதை - மாலை நோய் உமிழ் நீர் - வருத்தத்தால் சொரிந்த கண்ணீர்.

103. கன்னிய - அழிவில்லாத. உன்னிய திறத்து - நினைத்த அளவில்.

104. நொதுத்த - தளர்த்திய, விரித்த யாது என - யாது விசேடம் என. உய்ய வாய் - உயிர் பிழைக்கும் வழி.

105. நானலம் - நான்கு நலம் : அற நலம், அருள் நலம், பொருள் நலம், கல்வி நலம். நகுலன் — ஈசாக்கு.

106. அலைபுறங் கண்ட நோய் - கடலினும் பெரிய துன்பத்தையுடைய.

107. வெப்பு அணி பணி - மனத்தைச் சுடுந்தன்மையுள்ள கட்டளை வெய்து என - விரைவாக சேர்த்தி - கூட்டிக் கொண்டு.

நாக(ம்)மேல் ஏறினர், நாதற்கு அப்பலி-
யாகமேல் இருவர்,ஓர் பீடம் ஆக்கினர்;
வேக,வேல் விறகு,அழல் மெய்யன் ஏந்துபு,
'சாகவே பலி எவண்'? என்று சாற்றினான். 108

"பொன்னையே காட்டிய தழலைப போன்ற,நோய்
தன்னையே காட்டிய தருமன், இப்பலிக்கு
உன்னையே காட்டினன்' என்று,உடை பிதா,
மின்னையே காட்டிய மகனை விள்ளினான். 109

அயிர் தந்தால்,உளம் அலுத்து அழுங்கக் கைப்புறும்
துயர் தந்தால், அரியஓர் தொடர்பைத் தோற்றுவித்து
உயிர் தந்தான்-அவற்கு,நான் உயிர்தந் தால்எனோ?
அயர் தந்தாய்! எனமகன் வலித்துச் சொல்லினான். 110

தாதைபெய் கண்மழை ஓம்பித் தாள்மிசை
கோதைபெய்து இறைஞ்சி,என் குறைபொ றுப்பஎன்று
ஓதைபெய் முகில்அறும் உச்சிப் பீடமேல்
மேதைபெய் திறத்துஎழீஇ, விழுக்கை கூப்பினான். 111

செவ்விய திருவுளம் என்றுதேறி, உள்
அவ்வியம் அறுத்து,அரிது ஓங்கும் ஆபிராம்,
கவ்விய சிகைத்,தலை கவிழ்ந்து வீழ்ந்துஅற,
வவ்விய வாள்கொடு மகனை வீசினான். 112

வீசின வாளொடு வினைக்கை தாங்குபு,
"கூசின உலகெலாம் களிப்ப, கோதறுத்து
ஏசில மகிழ்வுற இருவர், 'சால்பு'என,
ஆசியை இறைவன்அன்று அளவில் நல்கினான். 113

108 நாகம் - மலை. சாகவே பலி - சாகத்தகும் பலி. எவண் - எங்கே.

109. உடை - மனமுடைந்த. மகனை விள்ளினான் — (விள்ளல்-தழுவல்) மகனைத் தழுவினான்.

110. அயிர் — சருக்கரை, இன்பம். அயர் — வருந்தும்.

111. ஓதைபெய் — ஆரவாரத்தோடு. மேதை பெய் திறத்து - தெளிந்த அறிவு அமைந்த திறனால்.

112. சிகை - குடுமி.

113. கோது அறுத்து - குறையின்றி. சால்பு - (துணிந்தது) போதும்.

ஆபிராம் பலி தேவ பலியின் முன்னடையாளம்

மன்னுயிர் அளிப்ப,நான் மற்ருேர் வெற்புமேல்,
என்னுயிர் அளிப்பல்–'என்று இவைஅங்கு ஆயதே;
பின்னுயிர் அளிக்குங்கால் பெற்றலாதுஎனக்கு
இன்னுயிர் இலையென அழுதுஇ யம்பினுன். 114

சூசையின் துன்பம்

கரைகொன்ற தயைகண்டு
கலுழ்ந்து இரங்கி, தவத்து இறைவன்
'புரைகொன்ற அவ்விருவர்
புணர்துணிவே சால்பு'என்ருல்,
நிரைகொன்ற மன்னுயிர்கள்
நீ அளிப்ப இறப்பானேன்?
திரைகொன்ற அருள்விளைக்கும்
திருவல்லோய்! என்றழுதான். 115

திருமகன் தன் பலி பீடமாகிய சிலுவையை நினைத்தல்

துப்பும், காய்–எரி என்ருல்,
சுடுங்கொல்லோ? சொற்றியஓர்–
ஒப்பும், காட்டிய பொருளும்
ஒன்றெனவோ? அவன்நிகராய்த்
தப்பும் காசினி அளிப்பச்
சாகுதல்,என் பால்'என்னச்
செப்புங்கால், எமக்குஇரங்கித்
திருமைந்தன் மீண்டு உரைத்தான். 116

அந்நாளும் வந்தொழிய,
அகமகிழ்வு ஈங்கு எனக்குண்டோ?
பன்ருளும் நான்இறப்ப
பற்றியநீள் மரந்தன்னே,
இந்நாளும் காணுதால்,
இடர்க்கெல்லே இலே என்ருன்;
பின்ருளும் துணையற்றுப்
பெருகுதயைக் கடலன்னேன். 117

---

114. கால் — காலம்.

115. தவத்து இறைவன் - சூசை. திரைகொன்ற - கடலினும் பெருகிய.

116. துப்பும் — பவளத்தையும். ஒப்பு — உவமை. ஒன்றெனவோ — ஒன்ருய் இருத்தல் வேண்டுமோ?

117. அந்நாள் — (நான் இறக்கும்) அந்த நாள். வந்து ஒழிய - வந்தா லொழிய.

வானவர் சிலுவையைக் காட்டுதல்

மண்விளக்கும் சுடரன்னோன்
வருத்தமற, வானவர்தம்
விண்விளக்கும் கதிர்திரட்டி
மேல்வனைந்த ஓர்சிலுவை,
கண்விளக்கும் பகலினும் செங்
கதிர் பரப்பக் காட்டினரால்;
பண்விளக்கும் தேமொழியான்
பரிவற்று,உள் உவந்துரைத்தான். 118

திருமகன் சிலுவையைப் புகழ்ந்து தாவிப் பற்றுதல்

ஏரணியே, என் அன்பே;
என்அன்பிற்கு இரத மிதே,
சீரணியே உயர்வீட்டைத்
திறக்கும் கோல்இதே; இன்பத்து
ஆரணியே, எங்கணும் நான்
ஆண்டு ஓச்சும் செங்கோலே,
பேரணியே, எனதுஉயிரின்
பேருயிரே வாழியவே. 119

என்றான்தான்; அன்புவிசை
ஏந்திய தன் உடலும்எழீஇ,
சென்றான்தான்; அச்சிலுவை
திருமார்பிற் சேர்த்து அணைத்தான்
நின்றான்தான் அமுதுஆழி
நீர்முழுகி, இன்பத்துக்
குன்றான்தான், சுடர்குன்றக்
கொழுங்கதிர்சூழ் பரப்பினனால். 120

துயர்தவிர்ந்து மூவரும் வழிநடத்தல்

அலையீன்ற செஞ்சுடர்போல்
ஆங்கு எழும் சேய் உயிர்செல்ல,
கொலையீன்ற வெற்றுடம்பாய்,
கூற்றும்இலாது அசைவுமிலாது,
இலையீன்ற பூங்கொடிகொள்
எழும் தவனும் தாயும்அழுது,
உலையீன்ற தீஉருகும்
ஓவியங்கள் என நின்றார். 121

---

118. பரிவு அற்று - துயர் நீங்கி.

119. ஏர் — அழகு. சீர் அணியே — சிறந்த ஆபரணமே.

121. சேய் உயிர் — சேயாகிய உயிர். கொலை ஈன்ற — கொலை செய்த. எழும் தவன் - மிகுந்த தவமுடைய சூசை முனிவன்.

அழு(த)அன்னார் துயர்நோக்கி,அருட் கடலோன் மீண்டு இறங்கி,
முழுதுஅன்னார் உவப்ப ஒரு மூரலை யிட்டு, 'இயங்க' எனத்
தொழுது, அன்னார் தடம் கொண்டு துதிபாடி நெடு வழிபோய்,
பழுதன்னார் மனத்தின் இருள் பாய் சுரம்செல் வெற்புஅடைந்தார். 122

மலைக் காட்சி

தூசனை மின்னி ஆடும் துளிமுகில், தவழ்ந்து சூழக்
காசனை முகைத்த, சாந்தம் கலந்த நீள் திமிசு பூத்து,
பூசனை எனக்கற் பூரம் புழுகுடன் நானம், மற்ற
ஓசனை கமழக் குன்றத்து உதயமேல் ஏறினாரே. 123

சால்வளர் முகிலின் வேழம் சந்தனம் மேய்ந்து சீற,
வால் வளர் கலாபம் நீட்டி மயிலினம் உலவி ஆல,
நூல் வளர் கலனில் தூங்கி, நுரைவளர் அருவி ஓடக்
கால் வளர் உழைகள் பாயக் காவதம் ஒலிக்கும் குன்றே. 124

வருக்கையின் கனிகள் தோறும் வானரம் உலவிப் பாய,
செருக்கையின் குருதி போலச் சிந்துதேன் பெருக்குற்று ஓடி,
பருக்கையின் விளங்கும் தெண்ணீர் பரப்பும் ஆறு இடத்திட்டு ஏகி,
தருக்கையின் வனைந்த மாலைச் சாரல்கண், போயினாரே, 125

சண்பகம் மலர்ந்த சோலை, சந்தனம் நிழற்றும் சோலை,
விண்பகல் ஒளிப்பச் சூழ்ந்து, விழைந்துஇவர் எவரும் பேணும்
நண்பக மலிதல் போல நாண்மலர் பொதுளும் வாவி,
ஒண்பகல், நெற்றிப் போதில், ஒத்து ஒளிர் மூவர் சென்றார். 126

---

122. மூரல் - புன்முறுவல். இயங்க - நடக்க (வியங்கோள்). பழுதன்னார்- பாவிகள்.

123. தூசு அனை - (பட்டு) ஆடைபோல. காசு அனை முகைத்த - மணிகளொப்ப மலர்ந்த. சாந்தம் — சந்தனம். திமிசு — வேங்கை. ஓசனை — தூரம்.

124. நூல்வளர் கலனில் — நூலில் கோத்த மாலைபோல.

125. செரு கையின் — போர் செய்யுங் கையால். இடத்திட்டு ஏகி — இடத்தில் இட்டு வலமாய்ப் போய். தரு — மரம். கையின் வனைந்த — கொம்பாகிய கைகளாற் செய்த. மாலைச் சாரல் — மாலைகள் தொங்கும் மலைச் சாரல்.

126. நண்பு அகம் மலிதல் போல — நட்புள்ள மனம் விரும்புதல் போல. ஒண்பகல் ஒத்து — கதிரவனைப்போல். நெற்றிப்போதில்—உச்சி நேரத்தில்.

விண்முழுது இறைஞ்சும் தக்கோர்
விரிகரை வதிந்த பொழ்தில்,
பண்முழுது ஒழிக்கும் தீம்பாப்
பறவை சூழ் இமிழிற் பாட,
மண்முழுது அன்றி, வானும்
ஆற்றரும் வனப்புக் காண,
கண்முழுது உடம்புற் றென்ன
கயமெலாம் பூத்த தன்றே. 127

வேடர்கள் வரவேற்றல்

எல்லினைக் காண, மாலைக்கு,
இருள் குணக்கு எதிர்ந்த தேபோல்,
வில்லினைச் சுமந்த கையால்,
வேடரும் தழைத்தூசு ஏந்தி,
அல்லினைப் போல்நல் லாரும்
அடைந்து, அரிது அருள்மீக்கூற,
செல்லினைப் பொறுக்கும் குன்றின்
தீங்கனி, பரப்பி னரே. 128

சூழகத்து அன்பு காட்ட,
சூசை, வந்தவரை நோக்கி,
'வாழகத்து எவர்இக் குன்றில்
வைகு(ம்)நீர்' என்று கேட்ப,
காழகச் சேற்றுள் தீம்பால்
கலந்தென நரைகொள் மூப்பன்,
மேழகக் குரலிற் சொன்னான்;—
வெண்மணல் திண்ணை சேர்ந்தே. 129

வேடர்களின் மூப்பன் மக்கபேயரைப் பற்றிக் கூறுதல்

களித்தன முகத்திற் பொய்யாக்
கனிகள் தந்து எழும்இக் குன்றத்து,
ஒளித்தன மக்க பேயர்க்கு,
உதவிய குலத்தி னுரைத்
துளித்தன மதுவில் தண்ணம்
சுள்ளியின் நிழற்கீழ் சாய்ந்து ஆண்டு,
அளித்தன தலைவன் நானே;
அவிர்முகத்து இரவி போன்றீர்! 130

---

127. வதிந்த — தங்கிய. ஆற்ற அரும் — ஒவ்வாத.

128. தீம் பா — இனிய பாவாக. எல் — சூரியன். மாலைக்கு — மாலை நேரத்தில். அல்லினைப் போல் நல்லாரும் — இரவோடு ஒத்த நிறமுடைய மாதரும். செல் — மேகம்.

129. காழகம் — கருமை. மேழகக் குரலில் — கிடாய்க் குரலில்

130. மக்கபேயர் — யூதருள் ஒரு குலத்தார் சுள்ளி — மாமரம்.

பாங்குஒளித் துணர்விட்டு ஓங்கும்
படர்ந்தபல் காவு கவ்வி,
ஆங்குஒளித்து அலர்ந்த பொய்கை
அடுத்து,அகல் பரப்பு நோக்கீர்;
ஈங்குஒளித்து,உளத்தில் ஓங்கி,
எதிர்பகை செகுத்துப் பின்னால்
வீங்குஒளித் தடக்கை வீரர்,
வென்றன இடம் அஃ தாமே. 131

வானில்நின்று இழிந்த வாளால்
மன்னவன் பொருங்கால், வான்தன்
பானில்நின்று இழிந்த வில்போல்
படர்சுடர் செயப்,பாய் மாமேல்,
மேனிநின்று இழிந்த கற்றை
விண்ணவர் ஐவர், வில்லால்
ஊனில்நின்று இழிந்த செந்நீர்
உகக், கடற் படையை வென்றார். 132

மூப்பனின் ஐயவினா

பன்னிய படலை யாய், மேல்
பண்பெலாம் அடைந்த நாதன்
துன்னிய காலை, துன்னாத்
தோன்றிய அரிதொன்று உண்டோ?
கன்னிய குலத்தோர் ஏற்றும்
கடவுளைப் பணிந்த போழ்தே,
பின்னிய முறையால், இங்கண்
பிணிகள் நாம் பெறலேது? என்றான். 133

சூசையின் மறுமொழி

இன்வளர் உவப்பிற் கேட்ட
இவைமறுத்து, உரைக்கும் சூசை:
"கொன்வளர் பொருளின் செல்வம்,
கூவிடத்து எறிந்ததே போல்
பொன்வளர் திருமிக்கு ஊர்தல்
பூரியர் கண்ணும் கண்டாய்;
மின்வளர் உருவில் தோன்றி
விளிநலம், விரும்பல் வேண்டா. 134

---

131. படர்ந்த — மலர்ந்த காவு — சோலை

132. வில் - சுடர். பாய்மா - குதிரை. கடல் படை - கடலொத்த பகைவர் படையை.

133. பன்னிய — பின்னிய. படலை - மாலை. கன்னிய - அழிவில்லாத.

134. இன்வளர் - இன்பம் பொருந்தி, கொன் - வீணாக. கூவிடத்து - பூவுலகில். மின்வளர் - மின்னலைப்போல்

சலத்தெலா நிலையும் ஒன்றே?
தருக்கெலாம் கனியும் ஒன்றே?
நிலத்தெலாம் விளைவும் ஒன்றே?
நிலைபல நமக்கும் உண்டாய்,
குலத்தெலாம் பொதுவாய் நிற்கும்
கொழுந்தக அறத்தின் மாட்சி,
புலத்தெலாம் ஒல்லும்; ஒல்லின்,
பொருளிலாக் குறையொன்று உண்டோ? 135

கார் முகத்து அலரும் முல்லை,
கதிர்முகத்து அலரும் கஞ்சம்,
சீர் முகத்து அலரும் நெஞ்சிற்
சிலர்,துணிந்து அறத்தைச் செய்வார்;
சூர்முகத்து அலரும் ஊக்கத்
துணிவொடு சிலரே நோற்பார்;
பார்முகத்து ஆசொன்று அல்லால்,
பயன்படாதில்லை என்றான். 136

மெய்மறந்து உணர்வைக் கொல்லும்
வெறி மதுஉண்ணு, கள்வைக்
கை மறந்து ஒழுகி, காதல்
கசடுறப் பொறிகள் காட்டும்
பொய் மறந்து, இன்னு தெல்லாம்
போக்கி,நல் லறமே பூண்டு,
மைமறம் தவிர்ந்தீ ராகில்,
வானின் மேற் குலமாய் வாழ்வீர். 137

'பிறந்தகால், குலமும் செல்வப்
பெற்றியும் தெரிந்தார் உண்டோ?
மறம் தகாது ஒழுகும் சீரால்,
வான்திருத் தகுவது' என்றே,
இறந்தகால் இங்கண் தேர்ந்த
இயல்புடன், எவரும் வாழ்வார்
சிறந்தகால் வேண்டின், வேண்டும்
தீதுஅகன்(ற) அறத்தின் மாட்சி. 138

---

135. சலத்து - நீர் நிலைகளில். தரு(வு)க்கு எலாம் - மரங்களுக்கெல்லாம். புலத்து - (விரும்பும்) இடத்தில் ஒல்லும் - சேரும்.

136. சீர் - செல்வம். சூர் - துன்பம். பார்முகத்து - பூவுலகில். ஆசு - பாவம்.

137. கள்வை - களவுத் தொழிலை.

138. மறம் தகாது ஒழுகும் - பாவம் தகாது எனக் கருதி ஒழுகும்.

வருணமே, மக்கட் பேதம் வகுத்திடும் இங்கண்; அல்லால்,
அருணமே, இறந்த பின்னர் அவரவர் தமில்வே றாகும்;
கருணமே திரியும் குன்றில் கடிதுழ றைற நீரும், ஓர்ந்து,
தருணமே காத்துச் சீலம் தவிர்கிலீர் என்றான்சூசை. 139

வேடர் பெண்டிர் மலர் கொண்டு வருதல்

கழையிடைக் குளித்த தேன்வடிந் தென்ன
    கனிந்து இவை வளன்விதித் திடுங்கால்,
தழையிடைக் குளித்த நீனிற மேனித்
    தையலார் பொருக்கென ஓடி,
குழையிடைக் குளித்த குளுமது முகைகள்
    கொய்து கொய்து இமிழ்த்தலர் கண்ணி,
மழையிடைக் குளித்த மின்னெனத் தோன்ற,
    மழை யொத்தார், அதைக்கொணர்ந்து உய்த்தார். 140

திருமகன் சிரிப்பு

வாடும்ஓர் மலரைச் சேர்த்திய படலை
    மாலையைக் கொணரவோ ஓடி,
கூடும்ஓர் பயன்இ தோஎன நக்கான் —
    குழவியாய்த் தோன்றிய நாதன்;
கூடும்ஓர் இணையற்று இலங்கும்-நீ, ஐயா,
    கூவில் வாடிலா மல ரல்லால்,
வாடும்ஓர் மலரும் அன்றி ஈங்கு உண்டோ
    மலர்என, ஒருத்தி நக்கு உரைத்தாள். 141

வாடும் மலரும் வாடாமலரும்

"கோடிய மலரிற் கொம்பதோ, படரும்
    கொடிமலர் தான்கொலோ, நீரில்
ஆடிய பூவோ, வாடில மலர் எங்கு
    ஆவதென்று அறைதிநீ" என்றாள்;
"ஆடிய தவமெனும் அடவியிற் பூத்த
    அரிய கற்பு ஆதியே, மற்றக்
கோடிய குறைதீர் சீலமே, வாடாக்
    கொழுமல ராயின" என்றான். 142

139. அருணம் - ஆடுகள் - ஆன்மாக்கள். அவரவர் தமில் - அவரவர் அறத்தால். கருணம் - யானைகள். தருணம் காத்து - சமயம் காத்து.

140 இமிழ்த்த — கட்டிய. மழை ஒத்தார் — மேக (மின்னலை) ஒத்த பெண்கள்.

141. படலை மாலை — பூவும் தழையும் விரவித் தொடுத்த மாலை.

142. கோடிய — வளைந்த. கற்பு ஆதியே — கற்பு முதலான.

புலனடக்கம் பற்றிய உரையாடல்

''காவிபட்டு ஒளிறும் கண்ணினார் காணி
கற்பதே, பளிங்கினும் நொய்தாய்,
ஆவிபட்டு அழுக்குற்று ஒழியும்'என்று அறைவார்
அரியநூற் புலமையார்'' என்றாள்;
''ஆவிபட்டு ஒழியும் கற்பதே யாகில்,
ஆண்மை கொண்டு உறுதியே நிற்பக்
காவிபட்டு ஒளிரும் நீண்டகண் ணாதி
காமின்நீர் ஐந்தையும்'' என்றான். 143

''நகைஎழ எதிர்ந்த இன்பம், ஐம் பொறிகள்
நாடலின், காவலே ஆற்றா;
பகைஎழ ஐந்தும் பரமனே முன்னாள்
படைத்து,எமக்கு அளித்ததேது'' என்றாள்;
''பகைஎழ முனிந்து, பழுதுற எவையும்
பருகு அழல் உமக்கு வேண்டாதோ?
நகைஎழ உதவும் திறத்து,அவை பேணி,
நவையுறக் காமின்நீர்'' என்றான். 144

இனையவும் பலவும் கூறிய தன்மைத்து
எவரும் வேறாய்,மன ஊக்கம்
புனையவும், உணர்வில் தெளியவும் ஓங்கி,
புதிதுஉயர் பொருப்பெலாம் பூத்தது
அனையவும், மலர்ந்த நெஞ்சறம் வெஃகி,
அடிதொழுது அனைவரும் அழப்போய்,
வனையவும் அரிய மாட்சியின் மூவர்,
வாய்ந்த அவ் வரை கடந்து, அகன்றார். 145

143. காவிபட்டு ஒளிறும் — குவளை மலரினும் விளக்கமான. காணி — நிலம் (ஆகிய). கற்பதே — கற்பு.

144. நகை எழ — மகிழ்ச்சி எழும்படிக்கு. காவல் ஆற்றா — காத்தல் இயலாது.

145. எவரும் வேறாய் — எல்லோரும் நல்லுணர்வால் வேறுபட்டவராய்.

மூவரும் சோலைவழிச் செல்லுதல்

நாவியின் நறையும்,பூம் பொழிலின் நாற்றமும்,
வாவியின் வாசமும் மல்கி, வாய்தொறும்
மேவி இன்பு எழ,எதிர் எதிர் விருந்து செய்து
ஏவி இன்புற இவர் ஏகினார்;அரோ. 146

தேன்விளை மலர்விழி திறந்து நோக்கிய
கான்விளை காவெலாம் களிப்ப, அன்று இவர்
தான்விளை திருஎழத் தகும்,தம் நாடுநீஇ,
வான்விளை மகிழ்ச்சிஉள் மலியப் போயினார். 147

ஏரோதன் இறந்ததை இடையர் கூறுதல்

தகைமலி நாடுநீஇத் தளிர்த்த ஓகையின்,
பகைமலி கோமகன் ஆளும் பான்மையை,
முகைமலி முல்லையார் மொழியக் கேட்டலும்,
மிகைமலி சூசை,உள் வெருவினான்;அரோ. 148

வானவர் உரையால் தேறி நசரேத்தை நெருங்குதல்

'நிலத்தில் ஆள் அரசரை ஆளும் நீதியோன்
வலத்தில்,ஆள் பவன் அருள் வழங்கும்என்று,விண்
தலத்தில் ஆள் விடலைதூது அணுகிச் சாற்றிய
நலத்தில்,ஆழ் துயர்வளன் நயப்ப, நீக்கினான். 149

மாலையாய் நயம் துயர் மயங்கிச் சேர்ந்துற,
காலையாய் இரவிகாண் கஞ்சம் போல்,அறச்
சாலையாம் நாசரெத்து என்னும் தம்நகர்,
பாலையாய் மலர்ந்தெழப் பற்றி,அண்டினார். 150

ஆடிப் பலகொடி யாக அசையவும்,
தேடிப் பலகரம் நீட்டி வருகென,
ஓடிப் பலதுயர் ஓயக், கடிநகர்
நாடிப் பலவரம் நல்கக் குறுகினார். 151

---

146. நாவி — கஸ்தூரி நறை — வாசனை. வாய் தொறும் — இடந்தோறும்.
147. திரு எழ - செல்வம் வளரும்படிக்கு. உள் மலிய - உள்ளத்தில் மிக.
148. தகை - பெருமை. கோ மகன் - ஏரோதரசன் மகன். மிகை மலி- வருத்தம் மிகுந்த.
149. நீதியோன் வலத்தில் — நீதிபரன் வல்லமையால். ஆள்பவன் — ஆளும் ஏரோதன் மகன். நயப்ப — மகிழும்படி.
150. நயம் — இன்பம் அண்டினார் — நெருங்கினார்.
151. ஓய — ஒழியவும்.

வானார் குடைகொடி மல்கப் புடைபுடை
வானார் வருவது காணார், அனைவரும்,
கானார் துயர்இவர் காப்பக் கடிநகர்
கானார் மலரடி கண்டார் புகுதுக. 152

தேன்தோய் முகைமுகச் செல்வன் புகுதுக
மீன்தோய் மிளிர்முடி வேய்ந்தாள் புகுதுக
கான் தோய் கொடிவளர் கையான் புகுதுக
வான்தோய் மகிழ்வொடு கண்டார் வடுவற. 153

நகரின் வரவேற்பு முழக்கம்

"அறமே புகுதுக அருளே புகுதுக,
திறமே புகுதுக தெளிநூல் புகுதுக,
புறமே ஒழிநலம் எவையும் புகுதுக,
உறவே" என, நகர் எதிர்கொண்டு உறுமுமே. 154

வளைகொள் ஒலிஎழ, வயிர்கொள் ஒலிஎழ,
துளைகொள் குழலொடு தொனியாழ் ஒலிஎழ,
உளைகொள் முரசொடு பலவும் ஒலிஎழ,
விளைகொள் ஒலி நகர் எதிர்கொண்டு உறுமுமே. 155

துன்னும் திரையலைத் தொனியே ஒழிதர,
மின்னும் கருமுகில் ஒலியே மெலிதர,
பொன்னும் கெழுமணிப் பொலிவும், கிளைகடல்
என்னும் திருநகர் எதிர்கொண்டு உறுமுமே. 156

கான்நீர் மலர்வனம் காய்ந்தா லென, முனர்
நாம்நீர் அழுதுஉக, நம்மைப் பிரிதரப்
போனீர்; மெலிபயிர் போற்றும் துளியென
வான்நீர் அருளிட வந்தீர்— உயிரென. 157

---

152. கான்ஆர் இவர் துயர் — காட்டு வழியிற்கொண்ட இவர் வருத்தம். காப்ப - நீக்கிக் காக்க புகுதுக — புகுவது

154. புறமே ஒழி நலம்—புறத்து நின்ற மற்ற நன்மை. புகுதுக-புகும்படி. உறவே—வருகவே உறுமும் — முழங்கினது.

155. வளை — சங்கு. வயிர் — ஊது கொம்பு. உளை கொள் — ஒலிக்கும்.

156. கிளைகடல் என்னும் — நிறைந்த கடலொத்த.

157. கான் — வாசனை. வான் நீர் அருள் — மோட்ச முறையமைந்த. கருணை — வரம்.

எரிசேர் சுரவழி, எஞ்சா மதம் இழி
கரிசேர் மலைவழி, காவாது உயிர் அடும்
வரிசேர் வனவழி வந்தே, மெலிவில,
புரிசேர் உமதுஅடி கண்டேம் பொலிவுற. 158

பண்தேர் மொழியுறப் பன்மாப் பணிவன;
கண்தேர் அழகுறக் காய்கான் மலர்வன;
மண்தேர் உமது அடி வந்தே வடுஇல—
வெண்தேர் ஒழுகிடம், விண்ணோர் ஒழுகுவார். 159

நகர் நீத்து அகலவும், நாமே மெலிவுறீஇ
நிகர் நீத்து அரசிடும் நீங்காப் பகையொடு,
மகர் நீத்து அழஅழ; வாழ்நீர், அரு மகன்
புகர் நீத்து உடையினிர் என்றே புகழுவார். 160

---

158. வரி - புலி.

159. பண் தேர் மொழி உற — வீணையும் இனிமையைத் தெரிந்துகொள்ளுதற்குரிய உங்கள் வாய் மொழிகளைக் கேட்க. பன்மா — பல விலங்குகள். கண்தேர் அழகு உற — கண்கள் தேர்ந்து (இன்புறுதற்குக் காரணமாகிய உங்கள்) அழகினைக் காண. மண்தேர் — அழகிற் பொலிந்த. வெண்தேர் - கானல். ஒழுகுவார் — திரிவார்.

160. நிகர் நீத்து அரசு இடும் — நிகரின்றி ஏரோதரசன் செய்த. அழ அழ — மிக அழுதோம். வாழ் நீர் — (இறைவனுல்) வாழ்வு பெற்ற நீர். புகர் நீத்து — குறையின்றி உடையினிர் — வைத்திருக்கிறீர்.

# 7. பிரிந்த மகவைக் காண் படலம்

முன்னுரை

ஆழி சூழுலகு அனைத்திலும் ஆழியொன்று உருட்டி
வாழி யாவரும் வளம்பெறத் தோன்றின நாதன்,
ஏழி யாக்கையோடு, ஈங்கிரும் அருள்எழும் தன்மை
சூழி யாப்புள தொடையினுள் யாப்புறும் பாலோ? 1

வளிகொண்டு ஓடிய மரக்கலம் போயின வழியும்,
களிகொண்டு ஓதிமம் ககனமேற் பறந்தன வழியும்,
உளிகொண்டு ஓதினும், உலகிடை வதிந்த நாள், நாதன்
அளிகொண்டு, ஒகையில் அயர்ந்தவை, அடைந்தவர் உண்டோ? 2

நசரேத்தூர்ச் சிறுமனையில் திருக்குடும்பம்

மதியெ ழுந்ததாள் மடந்தையும், மலர்க்கொடித் தவனும்
கதியெ ழுந்தவான் கணங்களும் அன்றி,ஈங் குண்டோ?
நிதியெ ழுந்தமேல் நிலம்நிகர் சிறந்தஅம் மனையின்
பதியெ ழுந்தகால் ஆயவை, கண்ணிய பாலார். 3

ஏமம்சால் உலகு இணை,மனை மல்கிய கருணைத்
தாமம், சால்பொடு தான்அதில் அடங்கில புரண்டு,
நாமம் சால் அருள் நாடெலாம் வெள்ளமாய் மொய்ப்ப,
வாமம் சால்நில மன்னவன் தோன்றினன், புறத்தே. 4

---

1. ஏழ் யாக்கையோடு — எடுத்த மனித உடலோடு. எழும் தன்மை — வளரும் தன்மை. சூழ் — ஆராய்ந்து. யாப்புறும் பாலோ — அடங்குந் தன்மையோ.

2. உளி—உள்ளி. அளிகொண்டு—கருணை கொண்டு. ஓதினும் — சொன்னாலும். ஒகையில் அயர்ந்தவை — இனிதாய்ச் செய்தவற்றை.

3. நிதி எழுந்த மேல் நிலம் — பொன்னுலகம். பதி எழுந்த கால் — திருமகன் எழுந்தருளிய காலத்தில். பதி—தலைவன் கண்ணிய பாலார் — மதிக்க வல்லவர்.

4. ஏமம் சால் உலகு — பொன்னுலகு. தாமம் — ஒளி. நாமம் சால் அருள் — திருநாமத்தில் நிறைந்த அருள். வாமம் சால் நிலம் — அழகிய விண்ணுலகம்.

ஒளி(ப்)படப் படும் கேவண நிறைமணி யொப்ப,
இளி(ப்)படப் படும் எங்குறை தீர்ப்ப, ஈங்கு உதித்தோன்,
வெளி(ப்)படப் படும் விழிமழை வழி,இழி கருணைத்
துளி(ப்)படப் படும் — சுட்டெரி துகள்துயர் ஒருங்கே. 5

மூவரும் எருசலேம் கோவிலுக்குச் செல்லுதல்

அருளின் முற்றிய பன்னிரு வயதுளன், அம்பொன்
பொருளின் முற்றிய புரிசைசூழ் எருசல நகரில்,
தெருளின் முற்றிய திருமணிக் கோயில்தான் செல்ல,
இருளின் முற்றிய இரவுஅறக் கதிரென எழுந்தான். 6

பூவும் வாசமும், பொதுளிய தாமமும் மணியும்,
காவும் நீழலும், காயமும் உயிரும் போற் பிரியா,
மேவும் கேண்மையின் மிடைந்தகைத் தாதையும், தாயும்
நீவும் தாளினை நீங்கிலர், பின்செலச் சென்றார். 7

விண் ணுளோர் இவண் மிடைந்துற அருத்தி செய்து,அங்கண்
மண் ணு ளோர் உற வழியென நின்ற அக் கோயில்,
புண் ணு ளோர் மருந்து ஒத்தென புதல்வன்காண் பொழுதில்
பண் ணுள்-ஓ தையில் பனிமொழி மதுவுகப் பணித்தான். 8

யாக்கோபு கனவிற்கண்ட ஏணி பற்றித் திருமகன் கூறுதல்

மண்மேல் அடியை வைத்து, எந்தை வலக் கை யால்
விண்மேல் விருப்பொடு தாங்க விண்ணவர் வந்து
எண்மேல் இழிந்தெழுந்து உலவ, இயாக்கோபன்
கண்மேல் அறிவில்—இங்கு ஏணி கண்டனனால். 9

சீர்மீது ஆடிய காட்சிச் சிறப்பு உள்ளி,
கார்மீது ஆடிய கொடிகொள் கவின் சிகரத்து,
ஏர்மீது ஆடிய எரிவாய் மணிகுயிற்றி,
பார்மீது ஆடிய படர், இவ் வாலயமே. 10

---

5. கேவணம் — மணி பதித்திருக்கும் குழி. இளிபட — நிந்தைபட.

6. தெருள் — தெளிவு.

7. நீவும் — தடவும்.

8. மிடைந்து உற — செறிந்து வர. பண்ணுள் ஓதையில் - வீணையின் குரலோடு.

9. எண்மேல் இழிந்து — அளவின்றி இறங்கி. கண்மேல் அறிவில் — கண்கடந்த அறிவில்.

10. உள்ளி — நினைத்து. படர்—கொடி.

முன்னோன், இவை இவண் காண்கால், முற்று(ம்)உவப்ப
'பின்நாள், உனது இனத்து உதிக்கும் பிள்ளை அருள்
தன்னால், உனக்குஒளி தளிர்ப்பக் கண்டதெலாம்
அன்னான் முடிக்குவன்' என்றான் அன்று,—இறையோன். 11

அன்ன பிள்ளை நான்; அன்ன ஏணியும், நான்
இன்ன நகரிடை இறக்கும் மரந்தானே;
சொன்ன முறையில் ஈருலகும் தொடர்ந்து ஒன்றாய்,
மன்ன மகிழ்வுற மாள்வேன் நானென்றான். 12

"வேல்நேர் நுழைந்தசொல் விளைத்த புண்ணிடும் நீர்
போல்,நேரில அயர்ந்(த) இருவர் புலம்பியழ,
தேன்நேர் மலரெனச் சிறுவ(ன்)நகைத்து,உலகம்
வான்நேர் மகிழ்வதுஆ காதோ வளர்ந்து" என்றான். 13

கோவிலில் வேண்டுதல்

'எஞ்சாத் திருவுளம் இது'என்று உளம் தேறி,
மஞ்சார் வரையென மணிப்பூம் புகைக் கோயில்,
துஞ்சாத் தயைமகன் தொடர்ந்து புக்கு,ந(ம்)மை
நெஞ்சார் அருளொடு நினைத்தே, வேண்டினரால். 14

திருமகன் பிரிவு

விரிந்தன கடல்திரை மயங்கி வீழ்ந்தெனத்
திரிந்தன மனுத்திரள் செறுத்துப் போகையில்,
அரிந்தன மனத்துஅஞர் அழுங்க, ஆங்குஇவர்
பிரிந்தனன் யாண்டையும் பிரிவி லான்; அரோ. 15

சூசையும் மரியும் திருமகனைத் தேடி அழுதல்

ஏர் வழி மாதருள் இவள் சென்று, ஆடவர்
சேர்வழி அருந்தவன் செல்ல, வேறுபோய்
ஓர்வழி சேர்ந்தபின், உயிர்எங் கெங்கென
நீர்வழி முகங்கெட நேடி அஞ்சினார். 16

---

11. முன்னோன் — முன் கூறிய யாக்கோபன்.
12. மன்ன — நிலைகொண்ட. ஒளி தளிர்ப்ப — புகழுண்டாக.
13. நேர்இல அயர்ந்த — நிகராது வருந்திய. மஞ்சு ஆர் — மேகம் தவழும். துஞ்சா — நிலைபெற்ற.
15. செறுத்து — நெருக்கி.
16. நீர்வழி முகம் — கண்ணீர் வழியும் முகம்: கெட — அழகு கெட.

உன்னிடை இலைகொல்என்று இவளும் ஓதினாள்;
நின்னிடை இலைகொல்என்று அவனும் நேடினான்;
என்னிடை இலையென இருவர் சாற்றினார்
மின்னிடை அசனிபட் டெனவெந்துஏகினார். 17

பத்திய மணிவிழப் படர்ந்த கேவணம்
ஒத்தியல் உயிர்மணி மகன்ஒ ளித்தலான்,
நித்திய நயநலம் நீங்கி வாடினார்—
தத்திய உயிரில் வெற் றுடம்பின் தன்மையார். 18

குன்று ஒளித்து அகல்கதிர் ஒத்த கொள்கையான்,
அன்று ஒளித்(த), அவன்தனைத் தேடற்கு ஆங்கு வேண்டு(ம்)
என்று ஒளித் தனஉயிர், யாக்கை மீண்டுநீ இ,
கன்று ஒளித் துளி,கரை கறவை மானினார், 19

செல்அகத்து அனைத்திலும் சென்று தேடினார்
தொல்லகத்து உறவினோர் தொடர்ந்து நாடினார்
வல்லகத்து உலகம்-ஆள் மகவைக் காண்கிலார்,
கல்லகத் தாரும்உள் கலங்க, விம்மினார். 20

தாயு(ம்)நீ, சேயும்நீ, தவறி நாம் செயும்
தீயு(ம்)நீ பொறுப்பவன்; சிறுவ எம்விழி
பாயு(ம்)நீ ருடன்,உயிர் பறிப்பவோ? இதோ,
போயு(ம்)நீ அருந்துயர் புகுத்தி னாய்-என்பார். 21

எல்லையில் எங்கணும் இருந்து அடங்கிலோய்;
ஒல்லையில் வரும்பொழுது ஒன்றி லோய்,எலாம்
தொல்லையில் அறிந்துளோய், துதைந்த எம்துயர்
வல்லையில் அருது,எமை மறந்தியோ என்பார். 22

---

17. அசனி — இடி.

18. பத்திய — நிரைபட வைத்த. தத்திய உயிர்இல் — அப்பாற் சென்ற உயிர் இல்லாத.

19. அகல் கதிர் — சூரியன். மானினார் — ஒத்தவராயினார்.

20. செல் அகம் — நடந்த இடம். தொல் அகத்து — பழமையான. வல் அகத்து — திறமைகொண்டு. கல் அகத்தாரும் - கல் நெஞ்சினரும்.

21. தீயும் - தீமைகளையும்.

22. ஒல்லையில் - விரைவில். தொல்லையில் - முற்காலத்தில். துதைந்த - செறிந்த.

இனையவும் பலவும்-ஓர்ந்து, இரிந்துஉறும் துயர்
சினையவும் பொருது,ஒளி திரையில் தாழ்ந்து,இருள்
புனையவும். இரவெலாம் இசலிப் பொங்குஅலை
அனையவும் படவளர் அருரில் விம்மினார். 23

மரியாளும் சூசையும் மாறி மாறிப் புலம்புதல்

"கருணாகரனே, களிஆ லயனே, கவினார் மகனே,
மருள் நான் அருர்மா கடலில் வருந்தக் கரையேற்றிட,நீ
அருள்நா டி,அகன்று உறைகின்(ற) அகமே அருளாய் கொல்லோ?
தெருள்நா யகனே," என்றாள்-திறம்பா அருவிக் கண்ணாள். 24

"இறந்தான் கொல்லோ முதல்ஈறு இல்லோன்; தனதார் தயையை
மறந்தான் கொல்லோ மறவா அன்போன்; கடல் சூழ் வையம்
துறந்தான் கொல்லோ, உன்னை என்னைத் துறந்தோன்; இதுவே
அறந்தான் கொல்லோ, மகனே! அறை(க)"என்று அழுதாள் வளனே.25

"மெய்யார் தவமே, திருவின் திருவே, என்போல் வெந்தீ
மொய்யார் வனமே முடுகி, முனிஆ யினனோ" என்றாள்;
"பொய்யார் புரையே துடைப்பப் பொன்றல் காத லித்தோன்,
ஐயா உயிரே அவன்இன்று அளித்தான் கொல்லோ?" என்றான். 26

தேறு அன்போன் தேறச் சிலுவை கொணர வாரோர்,
ஆறு மொய்ம்பால், 'நான் ஈங்கு ஆண்டுஓச் சிய கோல் இதுவே,
மாறு நலஞ்செய் இதின்மேல் மாய்ந்தா லல்லால், வாழ்நாள்
ஈறு கவருந் தினனே' என்றான் அன்றோ,—என்றான். 27

"வையத்து அடிவைத்து, உயர்வான் மன்னன் கையிற் சாய,
பொய்யற் றஅருந் தவன், முன் பொலியக் கண்ட ஏணி,
உய்யத் தரணி நானே உலக்கும் சிலுவைக்கு ஒப்பாய்,
மெய்யற்று இவனே விளிவேன்" என்றான் அன்றோ? -என்றான். 28

---

23. இரிந்து உறும் - திரிந்து அடைந்த சினையவும் - தோன்றவும். ஒளி - சூரியன். அருர் - துன்பம்.

26. வெம் தீ மொய் ஆர் - கொடிய தீ பற்றி (எரியும்). பொய் ஆர் புரை - பொய் விளைவித்த பாவம்.

27. ஆறு மொய்ம்பால் - அசையாத திறத்தால்.

28. உலக்கும் - இறக்கும்.

"பற்றார் பழையம் பழியைப் பரிவான் படுவாய் என்னாக்,
கற்று,ஆ ரணங் காட்டிய காட்சி அறிந் தன்றோ, உன்னைப்
பெற்றா யினதே; பிரியா அன்போய், பெயரா முன் வந்து,
உற்றுஆ சினனக் குறைத்தால் ஆகா தேயோ?" என்றான். 29

"இன்றோ அன்றோ என்றோ ஒருநாள், எம்மைக் காக்க
மென்தோடு ஒன்றுஉடன் உடல் வீ வுற வேண் டியதேல், இருவர்க்கு
ஒன்றே டொன்று ஒத் தன அன்பு உ ளதேல் மகன் நீ பிரியாது,
உன்தோள் என்தோள் மரமொன்று உறலா காதோ?" என்றான். 30

"மடவா ரில்அனந் தமலிந் து,மகிழ்ந் தமடந் தைஎனைத்
தடவா னில்உயர்ந் த,தளங் கள்தணிந் து,மொழிந் தனிரே;
நடவா முறையால் நடலை நரலை நடுவே, அடியாள்
கடவா மல்அலைந் து,கலங் குபகண் டிலரோ?" என்றாள். 31

அஞ்சேர் அஞ்சீர் அடை,இத் தலம்அண் டியகால் அடியாற்கு
'அஞ்சேல், அஞ்சேல், நயமாம்' எனஆ டினவா னவனே;
அஞ்சேழ் அஞ்சேழ் கடலான் ஒவ்வா த,அஞர்க் கடலாழ்ந்து,
அஞ்சேர் எஞ்சா நயன்,இங்கண் அகன் றதுவே–"என்றான். 32

வானவர் தேற்றுதல்

என்றான் இவனும், மென்தாள் அவளும் என்றாள், என்றாங்கு
ஒன்று உரைகொண் டுபுலம் பினர்உள் துயர் கண்டதனால்,
குன்று நயவா னவரும் குழைந்துஆ குலித்தால் எனநின்று,
அன்று,ஆர் இடர்ஆ ற,இவற் கும்-அவட் கும்அறைந் தனரால். 33

"துயர்ஏன்? அஞர்ஏன்? உள(ம்)ஆழ்ந் துறுதொல் நயமாக் கடலிற்
பெயரேல், பெயரேல்; பெயராப் பெருமைத் தனையன் பிரிவால்,
மயர்ஏன்? மயர்ஏன்! வளனே! மரியே! மருள்நெஞ்சு உருகி,
அயரேல், அயரேல்; மகன்மாண் டலன் மாண் டலன்"என்று அறைந்தார். 34

---

29. பற்றார் - பகைவராகிய பசாசுகள் பரிவான் - அறுக்க. படுவாய் - பாடுபடுவாய்.

30. மென்தோடு ஒன்று - மெல்லிய மலரொத்த மரம் ஒன்று உறல் - மரமொன்றில் அறைபடுதல்.

31. தளங்கள் - படைகளாகிய வானவர். நடலை நரலை - துன்பக் கடல்.

32. அம் சேர் - நீரின் மிகுதியால். அம்சீர் அடை - அழகும் செல்வமும் பொருந்திய. நயம் - இன்பம். ஆடின - சொன்ன. அஞ்சு ஏழ் அஞ்சு ஏழ் கடல் — $5 \times 7 + 5 \times 7 = 70$ கடல். அம்சேர் எஞ்சா நயன் - அழகு சேர்ந்த குறையாத இன்பம்.

33. ஆகுலித்தால் என - வருந்தினாற்போல.

34. மயர் - மயக்கம்.

"ஐயன் போக, அவர்சாய்ந்தியஆ குலம்,அச் சொல்லால்
ஐயம் போகத் தணிவாம், எனினும், அன்றுஆங்கு இரவி,
மையல் போக வரினும், மனமே விளக்கும் சுடராம்
மெய்யன் போக, விழிபோயிற் று"என்று அழுதார். 35

நகருக்கு அப்பால் சூசை திருமகனைத் தேடி அழுதல்

செம்மா மணியிற் செல்வனைத் தாய்தே டி,அகல்
அம்மா நகர்க்கண் அழுதுஅன் றேஅலை யுங்கால்,
பைம்மா மலர்பெய் காவழி யில்,பரி வோங்கத்
தம்மா மகனைத் துருவுகின் றான் தவ வல்லான். 36

புள்ளும் புலம்ப, வண்டும்-அழப், பூவு(ம்)நைய,
விள்ளும் காவும் வினைகொண்டுஉள் மெலிந்து இரங்க,
கொள்ளும் துயரில் கண்டதெலாம், கொழுந் தவன்தான்,
உள்ளும் தன்மைத்து உருகி அழ, வினு வினனே. 37

ஆற்றங்கரையில்

"என்றன் சிந்தை போல் நிலையாது இரி சிந்தே!
நின்றன் சிந்தை போல்கடல் நான் தேடியலைந்து,
இன்றுஎன் சிந்தை எஞ்ச,இவண் அருட் கடலோன்,
உன்றன் சிந்தை எழ உற் றானோ?" என்றான். 38

பூங்காவனத்தில்

"கண்ணே, மணியோ கமழ்மதுப் பெய் மலர்க் காவே,
பண்ணே, தேனே, பணிந்துஇளையாக் கனி சொல்லான்,
உள்நோய் அருந்துஎன் உளம் வாட, அருள் பூத்து,
விண்ணோர் மலர்போல் வேய்ந்தனனே, இவண் என்றான். 39

சோலையில்

"என்னெஞ்சு ஒப்ப, இரு பொழு தும் இருட் பொழிலே!
உன்னெஞ்சு ஒப்ப, உயிரெல்லா நிழற்றி, அருள்
தன்னெஞ்சு ஒப்பத் தந்துஓம்பும் தயைப்பெருமான்,
நின்னெஞ்சு ஒப்ப நிறுத்தினையேல், காட்டு"என்றான். 40

---

35. தணிவுஆம் எனினும்-தணிந்தாலும். மையல் போக-இருள்போக.
36. பை மா மலர் - பசுமையான சிறந்த மலர். காவழியில் - சோலை வழிகளில்.
38. சிந்து - ஆறு. சிந்தை எழ - மன மகிழ. உற்றானோ - வந்தானோ.
39. வேய்ந்தனனோ - பொருந்தினனோ-வந்தானோ.

தடாகக் கரையில்

"இரவிற் குன்றும் இதழ்க்கஞ் சம் அணி தடமே!
இரவிக்கு ஒப்பான், இருபொழுதும் மலர் மரைத்தாள்
விரைவிற்கு இங்கண் வைத்து, உன்னை மேவி, அருள்
புரவித் தெண்தீம் புனலுண் டானோ?" என்றான். 41

மலையருகில்

"மனமொத்து உயர்மா மலையே! நீ தலையில் அணி
கனமொத்து இருள்என் மனம்கரியக் கனைத்து இழிஉன்
புனமொத்து இழிநீர் துறந்து, உன்கண் புக் கனனோ?
இனம்ஒத் திலன், நேர் இலன், ஓர் என் பான் என்றான். 42

பறவைகளை நோக்கி

"பொன்னார் சிறகால் புட்கரஞ்சேர் புட்குலமே!
என் ஆருயிரே, என்னெஞ் சத்து ஆள் அரசே,
ஒன்றார் மன(ம்)நேர் வனம்சேர உற்றவழி,
அன்னான் நாட அறையீரோ! எனக்கு" என்றான். 43

"குயிலே, கிளியே, வெண்குருகே, கோவனமே
மயிலே, இனைந்துஎன் மனங்குளிர்ப்ப அன்னான் கொள்
எயிலே, வனமே இயம்பீரேல், போய் அவற்கே
துயிலே இலநான் துஞ்சுவன் என்பீர்" என்றான். 44

இயற்கையும் இசைந்து அழுதல்

கிளியோடு அன்னம் அழக், குயில்கள் கெழுமியழ,
அளியோடு அலரும் அழப், புனலும் விம்மியழ,
வளியோடு அங்கா வருந்திஅழ, வளன் அழுவான்
களியோடு அகன்றான்என் காவலன், என்(று) ஓதையினன். 45

பொய்யா வரத்தோன் போய்ப், பூங்காத் திரியுங்கால்,
கையால் நையும் கஞ்சமென வாடியதாய்
உய்யா வண்ணத்து உருகி, நகர்த் தெருவெல்லாம்,
நையா அன்பால் நாடிக், காணாது அழுவாள். 46

---

41. விரைவிற்கு - விரைவில். அருள் புரவி - அருள் தந்து.
42. கனம் - மேகம். புனம் - மலைசார் கொல்லை, அருவி.
43. புட்கரம் - ஆகாயம்.
44. இனைந்து - இரங்கி. எயில் - ஊர். துஞ்சுவன் - இறப்பேன்.
45 ஓதையினன் - (புலம்பும்) ஓசையினால்.
46. நையா அன்பால் - மெலியாத அன்பால்,

தாமரைத் தடாகத்தின் அருகிற் சென்று மகனை நினைந்து மரியன்னை மறுகி அழுதல்

படமே எழுதிப் படர்பங் கயம்நீள்
தடமே அணுகி, தட(ம்)மே வியபூ
வடமே இணையா(ம்) மகவு உள்ளினள்;அவ்
விடமே, மதுவின் இசை,தாய் அறைவாள்: 47

தேன்தோய் மலர்தீட் டியசேடு உலவிக்
கான்தோய் தடமே! களிகூர்ந்து, உனைநேர்,
வான்தோய் எழில்தோய், மதுமாறில பூத்
தான்தோய், எனதுஉள் தடம்,-ஓங் கினதே. 48

பூமா றினதோ? பொருவாப் பகையோர்
தாம்,மா றிலதாது எழில்,கொய் தனரோ?
தே(ம்)மா றிலபூ இல,தேம் பிஉளம்
வேமா றிலவெப் பொடு,காய்ந் ததுவே. 49

துளிமா ரிஇழந் துளிகாய் சுனையோ,
நளிவா சம்இழந்து அழிநை நனையோ,
களிநான் உள்இழந்து அயரக் கடிதுஇவ்
வுளி,நீயும் இழந்து உறைவாய்—மகனே! 50

அன்னச் சிறைநீ அலர்தா மரைநான்,
என்னச், செறிஇன் பொடு-இருந் தனமே!
முன்நச் சியதேன் முருகு இல் லதெனு,
மன்னச் சவியோய்! வனம்ஏ கினையோ? 51

இன்புஈ ரம்அருந் திஇருந் தனையே,
அன்புஈ ரம்அகன் றொடுஅகன் றனையோ?
முன்புஈ ரம்உலாம் முளரித் துணரே,
பின்புஈ ரமிலாது, அதுபோர் குவதோ? 52

---

47. மதுவின் இசை - மதுவினும் இனிய இசையோடு.

48. சேடு உலவி - அழகு பெற்று. மதுமாறில பூ - மது மாறுத தேவ மலர். உள்தடம் - உள்ளமாகிய தடாகம்.

49. வேம்-வேகம் என்பதன் இடைக்குறை. வெப்பொடு-வெப்பத்தோடு.

50. நளி - குளிர்ந்த. நைநனை - வாடின மலர். இவ்வுளி-இவ்விடத்தை.

51. முருகு - வாசனை. மன்னச் சவியோய்-நிலைபெற்ற அழகுடையோய்.

52. அன்பு ஈரம் அகன்றொடு அகன்றனை - அன்பின் ஈரம் அகன்றதென்றோ நீ போனுய். ஈரம் இலாது - ஈரம் இல்லாவிட்டாலும்.

மடலொத்து அடிவாட, நடந்து செலேல்;
அடலூற்று, எனதுஆ, வியில்ஆண் டுறைவாய்;
கடலொத்து, உயிர்கெட் டனகால், அலைகொள்
உடலொத்து, இன்நான் உளையப் பெயர்வுஏன்? 53

தருமத்து, அழலும் தகுதி, தகுமோ?
உருமத்து அழலும் தழல்ஒப்பு அற,நீ,
மருமத்து, அழலும் வதைசெய் தொடு,இதோ
இருமத் திரிகொண்டு எரிபற் றியதே. 54

வெண்ணெய்க் கிரி வெந் தன போல் அழுது,என்
கண்ணைக் கிழி நீர் கடிந்து ஓட,நெடும்
புண்ணைக் கிழி தீ யை உள் ஊற் றியபின்,
விண்ணைக் கிழி மின் னென,ஏ கினையோ? 55

இன்புஓதம் – அமிழ்ந் திஇருந் தனகால்,
உன்போது அவியாது எரி என் னுளமே,
துன்புஓ தம் உறீஇச் சுழியில் முழுக,
அன்புஓதம் அகன் றொடு,அகன் றனையோ. 56

கதிராய மணிக் கலம் ஏந் திய பால்
எதிராய, அருள் கிளர் என் மகனே!
பொதிராய இருட் கதிர் போக் கென வந்து,
அதி ரா யஅகத் துயர்ஆற் றிலையோ? 57

கயலாம் விழியே! கடலாம் அவனை
அயல் ஆ டல்இலாகி, அகன் றனனே;
இயலா த இடுக் கண் இயைந்து,இனிநான்,
உயலாம் வழியொன்று உளதேல், உரையீர். 58

---

53. அடலூற்று - (உன்) திறமைகொண்டு. பெயர் ஏன் - பெயர்வு ஏன், போனது ஏன்?

54. தருமத்து - தருமத்துக்கு. அழலும் தகுதி - சுடுங்குணம். உருமம் - நடுப்பகல். மருமம் - நெஞ்சு. செய்தொடு - செய்ததொடு என்பதன் இடைக்குறை. மத்திரி - துருத்தி.

55. வெண்ணெய்க் கிரி - வெண்ணெய் மலை.

56. உன்போது - உன்னும்போது எரி - எரியும். துன்பு ஓதம்-துன்பக் கடல். அன்பு ஓதம் - அன்பு ஈரம். அகன்றொடு - இல்லாமல்.

57. பால் எதிராய - பால்போல. பொதிராய - நிறைந்த. அதிராய - அதிர்ந்த.

58. ஆடல் இலாகி - ஆடாததால்.

மஞ்சே மருளா, மதுவே குறையா,
விஞ்சுஏ டவிழ்வீ அனைவிள் முகனை,
நெஞ்சே! நனி பே ணிலநீங் கினனே,
நஞ்சே இனியுண்டு உண,நைந்து அழல்வாய். 59

என்று,அத் தடம் ஓங்க இனைந்து அழுவாள்—
குன்றத்து அருவித் திரள் குன்று(ம்)க(ண்)ணள்;
பொன்றத் தகநொந் து பொரு மலும், மீண்டு,
அன்று,அத் தெரு யா விலும்,ஆய்ந் தனளே. 60

பெண்ணொருத்தி மரியன்னையிடம் துயர்க் காரணம் கேட்டல்

மீயுலாவிய மீன்முடி யாள், நகர்
போய் உலாவிய போழ்து,ஒரு கோதையாள்,
"தீயுலாவிய புண்ணெனத் தீந்து, உளத்து-
ஆய்,உ லாவியது ஏது"என, அண்மினள். 61

மரியாளின் மறுமொழி

"தேசி கத்துஉயர் சேடுஅமைந்து, ஓதிய
தேசி கத்துஉயர் சேடனைத் தேடி,நான்
தேசி கத்துஅயர் வேன்"எனச் செஞ்சுடர்
தேசி கத்துஉயர் செங்கலை யாள்;அரோ. 62

அடையாளம் யாதென அப் பெண் கேட்டல்

'தனையர் ஈன்றனள் நான்'எனத் தாய்படும்
அனைய யாவும் அறிந்து,அகத்து ஏங்குவேன்;
நனைஅ லர்ந்தென ஈன்றநின் நந்தனன்
எனைய னோ?எனச் சாற்றுதி நீஎன்றாள். 63

திருமகன் அடையாளங்களைத் தேவதாய் உரைத்தல்

அரிய தோர்வினை கேட்டி, அந்தோ எனாப்
பெரிய தோர்உயிர்ப்பு இட்டனள்; பின்,தனக்கு
உரிய தோர்நசை ஊங்குஉளம் தூண்டலால்,
சரிய தோர் மதுப் போல், உரை சாற்றினாள். 64

---

59. மஞ்சு மருளா-அழகு கெடாமல். விஞ்சு-மிகுதியான. விள் முகனை - மலர்ந்த முகம் உடையவனை.
60. பொன்றத் தக - சாகத்தக்க முறையில்.
61. தீந்து - மனம் வாடி. உளத்து ஆய் - உள்ளத்தில். உலாவியது- கொண்ட துயர்.
62. தேசிகம் - [1]பொன், [2]புகழ், [3]திசை, [4]ஒளி. சேடு - அழகு, செங்கலையாள் - செம்மையான ஆடையாக உடுத்தவள்.
63. நந்தனன் - மகன்.
64. நசை ஊங்கு - ஆசை மிகுதி.

பாவி தந்த மகற்குஉரி பான்மை கேள்:
வாவி தந்த தண்டாமரை வாயினன்,
காவி தந்த களிப்புஉமிழ் கண்ணினன்,
ஆவி தந்த அருஅருட் சொல்லினன். 65

பானுயிர்த்த கதிர்ப்படப் பங்கியான்,
வானு யிர்த்த மதிப்பட நெற்றியான்,
தேனு யிர்த்த முல்லைச்சிறு மூரலான்,
கானு யிர்த்த மலர்முகக் காமரான். 66

பொருளில் வீங்கிய பொச்சைப் புயத்தினன்,
அருளில் வீங்கிய ஆர்கலி மார்பினன்,
தெருளில் வீங்கிய சீர்முகிற் கையினன்,
சுருளில் வீங்கிய தோடுஅலர்த் தாளினன். 67

ஈரஞ் சாம்வரு டத்துஇரண்டு ஆண்டுளான்,
நீர்எஞ் சாஅரு ளால்,நிறை மாட்சியான்,
கார்எஞ் சாஒளி காட்டிய காட்சியான்,
சீர்எஞ் சாஉரை வெல்லுயர் சீர்த்தியான். 68

முகத்தின் தாமம் முகிழ்ந்தெனப் பார்த்தகால்,
அகத்தின் தாமரை உள்அவிழ் கண்ணினன்;
செகத்தின் பாசறை தேய்ந்து,உளம் இன்புற,
சுகத்தில் தாய்வினை துன்னிய அன்பினன். 69

'நளிமு கத்துஅலர் நல்கிய தேன்'என,
அளிமு கத்துஅவன் சொல்அறைந் தால்,பகல்
ஒளிமு கத்து-இருள் ஓடிய வாறுபோல்,
விளிமு கத்துஉறும் வெந்துயர், நீங்குமால். 70

---

65. காவி தந்த – கருங்குவளையொத்த.

66. பானு உயிர்த்த – சூரியன் விடும். பங்கி – ஆண்களின் தலைமயிர். மதிபட – மதியை அகப்படுத்திய – மதியினும் விளங்கிய. காமரான் – அழகுடையவன்.

67. பொருளில் வீங்கிய – பொன் மிகுந்த. பொச்சை – பொற்றை – மலை. ஆர்கலி – கடல். தெருளில் வீங்கிய – தெளிந்த. சுருளில் வீங்கியதோடு அலர் - சுருண்டு பருத்த இதழ்களையுடைய தாமரை அரும்பு.

68. நீர் எஞ்சா - நீர்மை குன்றாத. கார் அஞ்சா - இருளுக்கு அஞ்சாத.

69. தாமம் - ஒளி. பாசறை - துன்பம். சுகத்து - சுகத்தைப் பேணுவதில். தாய்வினை துன்னிய - தாயின் செயலைக் கொண்ட.

70. நளிமுகத்து - குளிர்ச்சியோடு. அளிமுகத்து - அன்பின் முகத்து. விளிமுகத்து - சாவின் முகத்து.

உனக்கு இசைத்து இனி என்னுரைப் பேன்? இவண்,
தனக்கு ளதிர்த்து இணை தான் இலன்; ஆகையால்
நினக்கு ளதிர்த்து நின் றுல் அறி வாய், என
எனக்கு இயற்று அருள் தாய்' இவை சாற்றினுள். 71

நின் பாலனைக் கண்டேன் என அப் பெண் கூறுதல்

இனைய கேட்டலும் இன்புறக் கோதையாள்,
'வனைய வேட்டுறும் மாண்பொடு காட்டின
அனையன், ஈங்குகண் டேன்; அருள்—அன்னை, நின்
தனைய னும் அவன் தான்' எனச் சாற்றினுள். 72

மரியாளின் வினு

மண்த ழன்றுளி வாடிய பூந்தரு,
உண்ட நல்லுயிர் உற்ற நீ ரொத்த சொல்,
கொண்ட தன்மையில், தாய்களி கூர்ந்து, அவன்
கண்டது எவ் விடம்? கண்டதுஎப் போழ்து? என்றுள். 73

பெண்ணின் மறுமொழியும் மரியாள் விடை பெறலும்

மின்ன லே, நனி கேள்—என வேட்புறும்
கன்ன லே கடந்து இன்பம் செய் காதலன்,
நென்ன லே, இருள் நேரிய கால், எனது
இன்ன லே அற, என்மனை எய்தினுன். 74

புரிந்த தாம முகச் சுடர்ப் பொற்பினுல்,
விரிந்த தாமரைக் கையை விரித்து, மேல்
எரிந்த மீன்விழி தாழ்ந்து, இணை யா அருள்
சொரிந்த தான், உணும் துப்பு இரந் தான்; அரோ. 75

அன்ன தன்மையி னுற்கு, இரவு ஆவதேது
என்ன, உண்டியை ஈ ந்து அளித் தேன்; அவன்
மன் அ மிர்தம் மனத்து அளித்து, ஆதலால்,
முன்னம், அன்று முகிழ்த்தென ஓங்கினேன். 76

---

71. எனக்கு அருள் இயற்று தாய் - எனக்கு அருள் புரியும் தாய். (கவிக்கூற்று)

72. வனைய வேட்டுறும் - அலங்கரிப்பதற்கு ஆசை விளைவிக்கும்.

73. மண் தழன்றுளி - நிலம் வெந்தாற்போல. நல்லுயிர் உற்ற நீர் - நல் உயிராக வந்த மழை.

74. நென்னல் - முன்னுள், நேற்று.

75. துப்பு - உணவு.

76. இரவு - இரத்தல். அளித்தாதலால் - ஊட்டியதனுல். முன்னம் - கருத்து. மனம் - முகிழ்த்தென - மலர்ந்ததுபோல.

அள் அம்பு ஆடிய வாசமோடு ஆடிய
கள் அம் பாடு இயை கட்டுரை யானும், போய்,
புள்,அம்பு ஆடியது ஒத்து, அவன் பூமுகம்
விள் அம்பு ஆடிய என்விழி, பேர்கிலேன். 77

மாச றுத்து,ம னத்துஇவை ஆக்கிய
ஆச றுத்து,இணை அற்றனன்,— ஐயமற்று
ஏசறுத்(த) நின் தன் மகன் என்றனள்;—
காசறுத்த சங்கு ஏந்திய கையினாள். 78

'பருகி வாழ்உயிர், பற்றிய ஊண்எலாம்
பெருகி ஈந்த பிரான்,இரந் தான்'என
உருகி, ஆசி அவட்குஉரைத்து, அன்னைபோய்,
மறுகு யாண்டிலும் மைந்தனைத் தேடினாள். 79

*மரியாளும் சூசையும் திருக்கோவிலுக்குச் செல்லுதல்*

கழீஇயின மணியில், அன்னை களித்து, இவை ஓர்ந்துபோகில்
விழீஇயின உயிரைக் காணா வெய்துறும் உடலின்,சூசை,
எழீஇயின நகரிற் சேர்ந்தாங்கு எதிர்ப்பட, உயிர்ப்பு வீக்கி,
'குழீஇயின துயர்தீர் பாலன் கொணர்ந்தனை இலையோ? என்றான். 80

ஆயவை உரைத்து, 'ஈங்குஉள்ளாய்அவன் காணேன்' என்ன,
தாயவை வருந்திச் சாற்ற, ''தமனியக் கோயில் சேர்ந்து,
தீயவை துடைக்கும் நாதன், செம்மலைக் காட்ட வேண்டின்,
நோயவன் நீப்பன்'' என்றான்—நுண்மறை வடிவம் பூண்டான். 81

---

77. அள் அம்பு - நெருங்கிய. கள் அம்பு ஆடு இயை - தேனாகிய நீரை வென்று அமைந்த. புள் - வண்டு. *அம்பு - தாமரை. முகவிள் அம்பு ஆடிய - முகமாகிய மலர்ந்த தாமரையில் மொய்த்த. அம்பு என்பது நீரைக் குறிக்கும் ஒரு சொல்; இஃது இச் செய்யுளில் நீரில் தோன்றும் தாமரையைக் குறித்து நின்றது, இடவாகு பெயர். (தாமரை நீரில் முளைப்பது பற்றியே அம்பு + ஜம் எனப்படுகிறது.)

78. மாசு, ஆசு, ஏசு - குற்றம். காசு - மணி. சங்கு - சங்கு வளையல்.

79. பற்றிய - விரும்பிய. மறுகு - தெரு.

80. போகில் - போகையில். விழீயின - விழுந்த. உயிர்ப்பு வீக்கி - பெருமூச்சுவிட்டு.

81. அவன் நோய் நீப்பன் - அவன் துயரைத் தீர்ப்பான்.

வேத நூல் வல்லார் அவையில் இயேசு திருமறை உண்மைகளை விளக்குதல்

முப்பகல் இவர் இவ்வாறே முற்றிய துயர்கொண்டு ஏங்க,
ஒப்புஅகல் மாட்சிப் பாலன் ஒளிமணிக் கோயில் தன்னில்,
தப்புஅகல் மறையின் வல்லோர் சபையினுள், பலவைக்கேட்ப,
அப்பகல் மூன்றும் வைகி, அனைவரும் வியப்பச் செய்தான். 82

மறைவல்லார் ஆய்வுரை கேட்டல்

'உற்றநூல் ஊன்றி,நாதன் உருவொடுஉற் றனனோ?என்ன,
பெற்றநூல் தெளியா நீரார் பிதற்றலின், மூன்றும் நாளில்,
கற்றநூல் இல,நூல் வல்லோன் கற்கவந் தெனச் சேர்ந்து, ஓர் ஒப்
பற்றநூற் படிதான் உற்ற'தல்ல என்று அறையக் கேட்டான் 83

இயேசுவின் வினா

கேட்டலும் இரங்கி, அன்னார் கிளந்தவை மறுத்து நீக்க
வேட்டலும், தன்னைக் காட்டா, மெல்லிசை இரங்கும் நல்யாழ்
கூட்டலும் கனிபால் மற்றுஅக் குளுஞ்சுவை திரட்டிக் காதில்
ஊட்டலும் அனைய தீஞ்சொல், ஓர் என்பான் ஓத லுற்றான். 84

ஊட்டுஅ ரக் குண்ட பதுமம் விண்டுஉவப்ப,
ஒளிச்சுடர் உதித்தது போன்றே,
தீட்டு அரக்கு உடலின் நாதன், நாம் உவப்ப,
சிறுவனாய்ப் பிறந்ததும் கேட்டேம்;
மீட்டு,அரக்கு ஒளிபோய் வருடம் ஈ ராறுமுன்,
வெயிலென இராவுமாய்க், கீதம்
கேட்டு அரற்று இடையர், அரியதோர் காட்சி
கிளர்ஒளி கண்டதும் கேட்டேன். 85

---

82. பலவைக் கேட்ப - பலவற்றை வினவி.

83. பெற்ற நூல் - படித்த நூலில். தான் உற்றது அல்ல - இரட்சகன் பிறந்தான் அல்லன்.

84. வேட்டலும் - ஆசைகொண்டு. யாழ் கூட்டல் - வீணை விளைவித்த சுவையும்.

85. விண்டு உவப்ப - மலர்ந்து மகிழ. அரக்கு ஒளி - செஞ்சுடர்.

வான்தந்த நன்னர் வானமே காட்ட,
வழுக்கில நாவென, நவமீன்
தான்தந்த நிலை மூ வரசர் கண் டெழுந்து
தரணி காப் பவனை வந்து இறைஞ்ச,
மீன்தந்த வழிவந்து, 'எவண் அவன்' என்ன
'விளங்கிய பெத்திலம் தன்னில்,
ஊன்தந்த உருவொடு ஈங்கு உதிப் பவன்'என்று
உரைத்தது நீரன்றோ? என்றான். 86

மறையவர் மறுமொழி

"கான்முகத்து அலர்ந்த மதுமலர் வடிவோய்!
களிப்ப நீ உரைத்தவை, நாம் ஓர்ந்து,
ஊன்முகத்து எந்தை உற்றதென்று ஐயம்
உற்றன மாயினும், வேத
நூல் முகத்து அரசர் இறைஞ்சவந்து, எங்கும்
நுதல்வரும் ஆண்மையில் ஆள்வான்,
வான் முகத்து இறைவன் என்றது ஆய்ந் தல்லோ
'வந்தது அன்று', என்றனம் — என்றார். 87

இயேசுவின் வினா

"சொல்லிய தன்மைத் தன்றியும், அன்னான்,
துறும் துயர்க் கடையிலன், மிடியே
புல்லிய தன்மைத்து உறவிலன்; நசைசெய்
பொருளிலன்; மனையிலன்; உலகில்
ஒல்லிய தன்மைத்து எளியனாய்த் தோன்றி
ஒருமரத்து இறப்பது,அவ் வேதத்து
இல்லிய தன்மைத்து உளதன்றோ" என்றான்—
இளமுகத்து அனாதி யான் அன்றே. 88

86. நன்னர்-நன்மை. வழுக்கில நாவென-பொய்யாத நாவைப்போல.

87. ஊன் முகத்து - உடலோடு. நுதல்வு அரும் - உணர்தற்கரிய. துறும்துயர்க் கடையிலன் - அடையும் துயரில் முடிவிலனாய்.

88. ஒல்லிய - பொருந்திய. இல்லிய தன்மைத்து உளது - மறைவான தன்மையில் அமைந்துளது.

'வேறுபட்டு எதிர்த்த மாற்றம்ஒன் றுக,
வெளிற் றிளம் சொல்ஒரு வீரேல்,
ஈறுபட்டு அனைத்தும் கற்றவர் சொன்னது
இயம்புதும்' எனத் தொழுது உரைப்பான்:
"மாறுபட்டு அழிந்த மனுக்குலத்து, அறநூல்
வகுத்தளித்து உற்றபின், உலகம்
நீறுபட் டிடும்நாள், பயன்தர வருவான்—
நிமலன்" என் றது—மறை அன்றோ. 89

படி முடித்து, எவர்க்கும் பயன்தர வருங்கால்,
பரமன், நீர் சொல்லிய வண்ணத்து
இடி யிடித்து எரிந்த விசும்பெலாம் முழங்க,
எங்கணும் வெருவினை வீசக்
கொடி பிடித்து, அமரர் முன்ன(ம்)மற் றெவரும்
குழைந்து சூழ் இறைஞ்ச, வான் அரசாய்,
கடிது இடித்து எரிகார் ஆசனத் தெழுந்து,
கதிர் முகத்து இயல்வது-நன்றே. 90

'ஒளி பொருள், இன்பம்' வெஃகிய வினையால்,
உயிர்கெட நுழைந்த தீது ஒழிப்ப,
'விளி பொருள் இவை'யென் று, 'எளிமையே பொறையே
வெறுமையே மெய்த்திரு' என்னத்
தெளி பொருள் மறையாய்ப் பயிற்றவந் தவன்தான்,
திருவெறுத்து, எளியனுற்று, எவர்க்கும்
தளி பொருள் ஓதல், தயைதளிர்த்து அளிப்ப
நண்ணுங்கால், உரிதன்றோ?—என்றான். 91

---

89. வேறுபட்டு எதிர்த்த மாற்றம்- (அவதரித்த நாதன் ஆளவும் படவும் வருவான் என்று) வேறுபட எதிர்த்துச் (முரண்பட) சொன்ன மொழிகள். வெளிறு இளம் சொல் - அறிவில்லாத சிறியவன் மொழிகள். ஒருவீரேல் - தள்ளுவீரானல்.

90. படி - உலகம். முன்ன - முன்போக.

91. விளிபொருள் - அழியுஞ் செல்வம். அளிப்ப - இரட்சிக்கும்படி. உரிது - உரிய முறை.

அவையோர் வியந்து நீ யார் எனக் கேட்டல்

இத்திறத்து எதிர்த்த காதைகள் பொருந்தி,
எய்திய நவங்கள் கண்டு அளிப்ப,
மெய்த்திறத்து இறைவன் பிறந்தனன் என்னில்,
வெளிறதோ என்றனன் பாலன்;
அத்திறத்து, எவரும், தாம்தமை நோக்கி,
அதிசயித்து, எவர்மகன்? எவ்வூர்?
எத்திறத்து உரிய குலத்தன் நீ? என்றார்,
இளவலும் மறைவுறச் சொன்னான். 92

திருமகன் மறைபொருளாய்க் கூறிய மறுமொழி

தாதை யுண் டென்னில் தாயிலை; அவனும்,
தாயுளது எனில்இலை; உதித்த
காதையும் தெளிப்ப எனக்கு—ஒரூர் இல்லை;
கலந்துஇரு குலத்துஉதித்து,இல்லை—
கோதையுண்டு அழிந்த குலம் எனக்கு'என்றான்;
'கூவிடத்து இன்னவர் இலை'யென்று,
ஓதையுண்டு எவரும் வியப்புறீஇ நக்கு,ஆங்கு
உணர்ந்தவை ஓர்ந்து, போயினரே. 93

சூசையும் மரியும் திருமகனைக் கண்டு தழுவுதல்

தப்புஅடும் உரைஉணர்ந்து, எவரும் சாய்ந்து போய்,
வெப்புஅடும் வேலையாய், தாயும் மெய்யனும்
ஒப்புஅடும் ஒளி மணி பதித்த ஒண்துகிர்ச்
செப்புஅடும் சிறுவனைச் சென்று நோக்கினர். 94

எல் ஒளி பட, மலர் கஞ்ச மேஎன,
வில் ஒளி முகத்து முன், விண்டுஅலர்ந்து உளம்,
அல் ஒளி படத்,துளி அளித்த காந்தம் போல்,
செல் ஒளி விழியினர், அழுது சேர்கின்றார். 95

---

92 எதிர்த்த காதைகள் – தம்முள் வேறுபடத் தோன்றின வேத வசனங்கள். வெளிறதோ – பேதைமையோ.

93 ஓதையுண்டு – ஆரவாரித்து.

94. தப்பு அடும் – தப்பாத. வெப்பு அடும் – துயரை ஆற்றும். வேலை – வேளை. துகிர்ச் செப்பு அடும் – பவளச் செப்பின் அழகை வெல்லும்.

95. எல் – சூரியன். அல் ஒளி – இரவின் நிலவொளி. செல் ஒளி – மேகத்தின் மின்னல்.

சுனையனை, விழி,விடாத் தொடுத்த நீரினால்,
நனையனை முழுமெய்யும் நனைப்ப, அன்னவர்,
புனையனை அன்பு உயிர் புணர்ந்துஒன் றாகவும்,
தனையனை முறை முறை தழுவி னார்; அரோ. 96

தேவ தாயின் அன்புரை

கற்றை நாண் முகத்தினாய்! பிரிந்த காரணத்து,
அற்றை நாள் ஆதியாய், உயிரற்று ஆகுலித்து
இற்றை நாம் நுகர,நீ இரங்கி லாயதேன்?
மற்றை நாள் ஒன்றின்,நாம் வாழவோ?என்றாள். 97

திருமகன் கூறிய ஆறுதல்

'பட்டவை அறிந்து இனைந் தேனும், பற்றெலாம்
அட்டு, அவை புதைத்தென, அருளி, எந்தை தான்
சுட்டவை செயென் கொலோ' என்று சொன்னபின்,
நட்டவை ஓம்புநீர் என,நட்பு ஊட்டினான். 98

வானவர் வாழ்த்து

மருஅணி மலர்மழை வாரி, யாழ்குரல்
வருஅணி இசையொடு, மதுர வாய்க்குரல்
உருஅணி உம்பர்சூழ் உவந்து பாடி,வான்
தெருஅணி விழாவரும் சிறப்பில் வாழ்த்தினார். 99

மூவரும் நசரேத்தூருக்குத் திரும்புதல்

விட்டிடைக்கு இறுகி,அன்பு இன்பம் மிக்கவர்,
கட்டிடைக் காப்பியக் கவிகள் போலவும்,
மட்டிடைக் கமழ்மலர் மாலை போலவும்,
நெட்டிடைப் பழம்பதி நேடிப் போயினார். 100

---

96. சுனை அனை - சுனை போல. நனை அனை - மலரம்பு போன்ற. புனை அனை - கட்டுப் போல.

97. கற்றை நாண் - கதிர் வீசிய. இற்றை - இத்தன்மையான துயரை. மற்றை நாள் - இன்னும் ஒருநாள்.

98. இனைந்தேனும் - இரங்கினேனாயினும் பற்று எலாம் அட்டு - பற்றுதல்கள் எல்லாவற்றையும் கொன்று. சுட்டவை - சுட்டியவை-காட்டினவற்றை. செயென் கொலோ-செய்யேனோ. நட்டவை-நட்ட பயிரை.

99. வாரி-பொழிந்து. விழாவரும் சிறப்பில்-விழாவுக்குரிய சிறப்போடு.

100. விட்ட இடைக்கு-விட்டுப் பிரிந்த பிரிவுக்கேற்ப. கட்டிடை - இறுகக் கட்டப்பட்ட. மட்டு - மது. நெட்டிடை - நெடும் வழியமைந்த.

# 8 புரோகிதப் படலம்

மூவரும் சென்ற வழியின் சிறப்பு

மேக மாலை மிடைந்துஉறை, மேல்வரை,
மேக மாலை மிடைந்(த)அரைக் கீழ்உறை
நாக மாலை நடந்தென நீள்நகர்
நாக மாலை நடந்தகன் றார்;அரோ. 1

காலின் ஆடிய கான்அலர் ஆடுகள்
காலின் ஆடிய கான்மணம் ஆடுமால்;
பாலி நாடிய பொற்பறவைக் குலம்
பாலி னாடிய பொற்புஅறப் பாடும்;ஆல். 2

சேத கம்தரு மாசயிற் சென்றஅச்
சேத கந்தரு மாசையிற் செந்தழல்
சேத கந்தரு செவ்வொளி நீத்தவான்
சேத கம்தரு செவ்வொளி நீர்த்ததே. 3

---

1. மேகம் மாலை மிடைந்து உறை - மேகங்கள் மாலையாகச் சூழ்ந்து நிற்கும். மேல் வரை - உயர்ந்த மலையின். மேகம் மாலை மிடைந்த - குளிர்ந்த மலரை அணிந்த. அரைக் கீழ் உறை - அடிப் பகுதியில் இருந்து. நாகம் மாலை நடந்தென - பல மலைகள் தொடர்ந்தாற் போன்ற (பெரிய மாளிகைகளை யுடைய). நீள் நகர் - எருசலேம் நகரை (விட்டு). நாகம் - வானத்தில். மாலை அடைந்து - மாலைப்பொழுது வருகையில் அகன்றார் - (மூவரும்) அகன்று போனார். அரோ - அசை.

2. காலின் ஆடிய - காற்றில் ஆடின, கான் அலர் ஆடு கள்-வாச மலருள் இருந்த மது. காலின் - கொப்புளித்தலால். ஆடியகால் - வீசியகாற்று. மணம் ஆடும் - வாசனை வீசும் (ஆல்—அசை). பாலி—பாலி மரக்கிளைகளில் நாடிய பொற்பறவை - நாடிச் சேர்ந்த அழகிய சிறகுள்ள பறவைகள். பாலின் நாடிய பொற்பு - பாலின் இனிமை. அற - குறைய. பாடும் - பாடின (ஆல் - அசை)

3. சேதகம் தரும் - அளறுதரும். மாசு - மாசுகளுக்கு. அயில் சென்ற - வேலாக வந்த அச்சே(ய்)—அத்திருமகனுடைய. தகம் தரும் — மாட்சியை விளைவிக்கும். ஆசையில் — ஆசையினால். செந்தழல்—செந்தீயைப்போல். சேதகம் தரும் — செந்நிறமான, செவ்வொளிநீத்த — சூரியன் மறையவே. வான் — வானம். சேதகம் தரும் செவ்வலர் - சேற்றில் தோன்றிய செந்நிற மலர்களைப்போல். நீர்த்ததே - (விண்மீன்களைப்) பூத்துத் தோன்றியது.

தெண் கண் ணாடிய சந்திரம் சேர்வனத்து
எண் கண் ணாடிய சந்திர னின்றி, மீன்
மண் கண் ணாக மலர்ந்(த)அருட் காணியார்,
மண் கண் ணாக மலர்ந்துறக் காணும்;ஆல். 4

பல்லி யங்கனி பாட,விண் ணோங்கிய
பல்லி யங்கனி பாட,விண்ணோர் செயும்
எல்லி யங்க விலங்குமண் பான்மையே
எல்லி யங்க விலங்கு(ம்)விண் பான்மையே. 5

மாலைப் பொழுதில் இடையர் வீதியில் தங்குதல்

உளரி யங்குஒலி ஓதி உலாவுவிண்
உளரி யங்குஒளி சோதி ஒளிஎன
விளரி பங்கய மாலையில் விள்ளவே,
விளரி பங்கய மாலையில் விள்ளும்;ஆல். 6

---

4. தெண் கள் நாடிய - தெளிந்த கள்ளை நாடின. சந்திரம் சேர் - சந்திர மாகிய வண்டுகள் மொய்க்கும். வனத்து—பூங்காவனத்தைப் போல். (வானம்) எண் கண் ஆடிய சந்திரன் - எண்ணும் அழகு (கலை) உடைய சந்திரன். இன்றி - இல்லாமல். மீன்-விண்மீன்களை. மண்கண்ணாக மலர்ந்து - அழகிய கண்களாகக் கொண்டு மலர்ந்து. அருள் காணியார் — கருணைக் காணியா ராகிய மூவர். மண் கண்ணாக — பூவுலகின கண்களாக மகிழ்ந்து உற — மகிழ்ந்து வருவதை. காணும் - பார்த்தது. (ஆல் - அசை)

5. பல்லியம் கனிபாட — (மூவரைச் சூழ்ந்த வானவர்) இன்னிசைக் கருவிகளை இனிமையாக மீட்டிப் பாட. விண்ணோங்கிய - வானுலகுக்கேற்ற பல்லியம் - பல இசைகளை. கனிபாடும் — (விண் மீன்கள்) இனிது பாடும். விண்ணோர் செயும் எல் இயங்க - வானவர்கள் விடுங்கதிரொளி பரவுவதால். இலங்கு மண்பான்மை — விளங்கும் பூவுலகின் தன்மை. எல் — சூரியன். இயங்க இலங்கும்—திரிவதால் ஒளி வீசும். விண்பான்மையே — வானுலகின் தன்மை போன்றது.

6. அங்கு - அங்கே. உளரி - (வீணைகளைத்) தடவியும். ஒலிஓதி-பாடியும். உலாவும்—திரிந்த. விண் உளர் இயங்கு ஒளி—வானவர் விடும் ஒளி. சோதி ஒளி என - சூரியனின் ஒளி என்று கருதி. விளரி - மிகுதியாய். பங்கயம் - தாமரைகள். மாலையில் விள்ளவே-மாலை நேரத்தில் மலரவே. விளர் இபம்— இளங் கொம்புகளும். கயம் மாலையில் — குளிர்ந்த மாலைகள் போல். விள்ளும் — (திரளாய்) மலரும்.

கைப்ப டங்கம ருந்தகக் காந்தனும்
கைப்ப டங்க மருந்தகக் காந்தையும்
செப்ப டங்க இ ருந்தவச் சேடனும்
செப்ப டங்க இ ருந்தனர் சேடியே. 7

விடியலில் மூவரும் புறப்படுதல்

தீத்தன் பள்ளியை நீத்துஎழீஇச்; செய்துயில்
தீத்தன் பள்ளியை நீத்துஎழிற் சேயுயிர்த்
தீத்தன் கைபணி யப்,படி சேர்ந்தகால்,
தீத்தன் கைபனி யப்படி சேர்ந்தவே. 8

ஈர நீர விழத்துண ரே வரை
ஈர நீர விழத்திரை யே, வனத்து
ஈர நீர எழச்சிகியே அறத்து
ஈர நீரர் எழீஇத் தடம் ஏகினர். 9

---

7. கை படங்கு — ஒழுக்கமென்னும் கூடாரத்தில் அமரும் — அமர்ந்த. தக காந்தனும் — மாட்சியுடைய திருக்குமாரனும். கைப்பு அடங்க-(எம்) துன்பங்கள் அடங்க. மருந்து — மருந்தாக வந்த அகம் காந்தையும் — ஞானமுள்ள மரியாளும். செப்பு அடங்க—சொல்லும் தன்மை (போதாமல்)அடங்க. இரும் தவச் சேடனும்—பெருந்தவமுள்ள பெரியோனுகிய சூசையும். சேடியே-வித்தியாதரர் உலகிலே - (இடையர் வீதியிலே). அடங்க இருந்தனர்-பயணம் நிறுத்தி யிருந்தனர். எப்பொழுதும் இடையர் காடு மலைகளில் ஆடுகளை மேய்த்துத் திரிவதனுல் அவர்களை வித்தியாதரர் என்று உயர்த்திக் கூறினர்.

8. தீ-தீயாகிய சூரியன். தன் பள்ளியை நீத்து எழீஇ - தன் பள்ளியை விட்டெழுந்து. செய்துயில் தீத்து - செய்யும் துயிலை ஒழித்து, அன்பு அள்ளி — அன்பை அள்ளிக்கொண்டு. ஐ நீத்து —(புற) அழகை நீக்கி. எழில் சேய் — வனப்பு மிகுந்த குமாரன் ஆகிய. உயிர்த் தீர்த்தன் — உயிர் தரும் தேவ குருவை. கை பணிய — கையாகிய கதிரைக் கொண்டு வணங்குதற்கு. படி சேர்ந்தகால் — பூவுலகில் வந்தபோது. தன் கை தீ — தன் கை சுடும் தீயென்று கருதி. பனிய — பனியோடு சேர்ந்து, (குளிர்ந்த தன்மையாய்). படி சேர்ந்தவே - பூமியில் பொருந்தியது. உயிர்த்தீர்த்தன் என்பது எதுகை நோக்கி தீத்தன் என வந்தது.

9. துணர் - மலர்கள். ஈரநீர் - குளிர்ந்த மதுவை. அவிழ - பொழியவும். வரை ஈர — மலையை அறுத்து. நீர்த்திரை அவிழ - ஆறு ஓடவும். வனத்து-காவில். ஈரம் நீர — பசுமைத் தன்மையுடைய. சிகிஎழ — மயில்கள் எழுந்தாடவும். அறத்து ஈர நீரர்—அறத்தின் இயல்பமைந்த தகுதியாராகிய மூவர். எழீஇ — எழுந்து. தடம் ஏகினர்—வழிச் சென்றார்.

ஆதி மாலை அகற்றி அழற்று மென்று
ஆதி, மாலை அகற்றி அளிப்படச்
சீத மாலை செறிந்தன மேலெலாம்
சீத மாலை செறிந்தன கீழெலாம். 10

நகரேத்துரை அடைதல்

சுனைய நீலமும் கமலமோடு ஆம்பலும் துளித்தேன்
நனைய நாகமும் நாறிய கோங்கமும் நறும்பூஞ்
சினைய சாந்தமும் செண்பக மும் கனி விருந்து,ஆங்கு
இனைய யாவும்-இட்டு இமிழில் வந்து, உறைபதி அடைந்தார். 11

வானவர் சூசைமரியை மகிழ்வித்தல்

வேல் செய் ஆகுலத்து இருவர்முன் பட்டநோய் விழுங்கிச்
சால் செய் ஓகையில் தளிர்த்து,உளம் உவப்ப,வான் தளங்கள்,
பால் செய் ஆவியிற் பைந்துகில் உடுத்து,ஒளி பரப்பிக்
கால் செய் ஆவியிற் கவரிகள் கமழ,வீ சினரே. 12

எரி மணிப்புகை எடுத்தனர், மலர்மழை பொழிந்தார்,
அரி மணிக்குரல் யாழெடுத்து உளர்ந்து, இசையேற்றி,
உரி மணிக்குரல் ஒருப்படப் பாவிசை கூட்டி,
விரி மணிக்கதிர் விண்திரு விழாவினை விளைத்தார். 13

வினை விளைத்தன வெப்புஅற, குளுமுகத்து உதித்தோன்
தனை, விளைத்தன தயைவழி, அளவறப் புகழ்ந்து,
கனை விளைத்தன களிப்பில்,ஓ ராயிர நாமம்,
நினை விளைத்தன நெறி,வரும் கனிநயம்,—அளவோ? 14

---

10. ஆதி—ஆதித்தன் (சூரியன்) மாலை அகற்றி-இரவை ஒழிப்பதற்கு. அழற்றும் என்று—வெங்கதிர் வீசும் என்று (எண்ணி). ஆதி—ஆதியாகிய திருக்குமாரனின். மாலை அகற்றி—துன்பத்தை நீக்கி. அளிபட—குளிர்ச்சி படும்படி. மேல்எலாம் — வானமெங்கும். சீத மாலை—குளிர்ந்த மேகங்களை. செறிந்தன - கொண்டிருந்தன. கீழ் எலாம் - தரையெல்லாம். சீத மாலை—குளிர்ந்த பூமாலைகள் போல (பூக்கள்). செறிந்தன - நிறையப் பூத்தன.

11. கனி விருந்து - இனிய விருந்து. உறைபதி - தாம் இருக்கும் ஊர்.

12. நோய் விழுங்கி - வருத்தத்தை மறைக்க. சால்செய் - மிக்க. ஓகையில் - மகிழ்ச்சியோடு. கால்செய் ஆவியில் - தென்றல் மணம் வீசினாற்போல.

13. உளர்ந்து — தடவி. உரி — உரிய. ஒருப்பட — இசைய. விண் திருவிழா — வானுலகுக்குரிய திருவிழா.

14. வினை — பாவ வினை. வெப்பு — வருத்தம். கனை — ஒலி. நினை விளைத்தன நெறி — நினைவிற்கொண்ட தன்மையால். கனி நயம் — இன்பத்தின் தன்மை.

*சூசை மகிழ்ந்து திருமகனைத் துதித்தல்*

முருகுவாய்ச் சுளை முட்புறக் கனியொடு, பூங்கா
அருகு,வாய்க்கனி பலவும்-ஊழ்த்து, அளித்த தீந் தேனும்
முருகு வாய்இறால் உடைந்துஉமிழ் தேனும்ஆர்ந்து ஒழுகிப்
பெருகு வாய்ப்புனற் பெற்றியோடு, ஓங்கினன் வளனே. 15

வினைகெ டப்பெரும் வெறுக்கையர் பொழிநிதிக் குப்பை
தனைகெ டத்திருத் தாள்மிசை நவமணி கூப்பின்,
நனைகெ டக்கவின் நந்தன! சால்பதோ? என்றான் —
சுனைகெ டக்கலுழ்ந்து ஊற்றதாய்த் துளித்த கண்சூசை. 16

முற்றி வேம்அழற் பாலையிற் காய்ந்(த)எரி முள்ளின்
நெற்றி மேல்,நறை நீலமும் கமலமும் பூப்ப
உற்றி யேஎன, ஒழுக்கம் ஒன்றில்ல நான் உயர்வான்,
பெற்றி யேஉ(ன்)னுற் பெற்றனன்; இதற்கு மாறுளதோ? 17

உன்னைச் சேர்ந்தநான் உம்பருள் ஒருவனே ஆனேன்;
என்னைச் சேர்ந்தநீ, இயலும்இல் இல்லனு யினையோ?
'தன்னைச் சேர்ந்தகால், தாழ்வினை விளைவுஇதே' என்ன,
பொன்னைச் சேர்ந்தகாற் போற்றினன்-அன்புஅள வற்றான். 18

*திருமகன் வருங்கால நிகழ்ச்சி யுரைத்தல்*

ஆச வா அறும் அருந்தவன் அறைந்த சொற் கேட்டு,
வாச வாய்த் தென்றல் தீண்டிய முல்லைகள்,மதுவை
வீச வாய் மலர்ந் தென,நகை காட்டிய விமலன்,
பேச வாய் மலர்ந்து, எதிர்ந்தகால், பெரும்பயன் விரித்தான். 19

தேன் அருந்தினர் தீயவேம்பு இன்பமென்று அருந்தார்,
வான் அருந்திய வளத்தநான், வாழவோ, மண்மேல்
ஊன் அருந்திய உடலொடு தோன்றினேன்? மிடிநோய்
நான் அருந்திட நண்ணி,உன் மனைதெரிந்து உதித்தேன். 20

---

15. முருகு — வாசனை. வாய் — வாய்த்த. ஊழ்த்து அளித்த — பத னழிந்து உகுத்த. பெருகும் வாய்ப்புனல் பெற்றியோடு - பெருகும் ஆறுபோல.

16. வெறுக்கையர் — செல்வமுடையவர். நனை கெட — பூவரும்பின் அழகை மறைக்கும். நந்தன — மகனே. கலுழ்ந்து — அழுது. கெட — கெடும்படி, மறைக்க

17. முள்ளின் நெற்றிமேல் — முள் மரத்தின் உச்சிமேல். உற்றியே — வந்தாயே.

18. இயலும் இல் — உனக்கு ஏற்ற வீடு. பொன்னைச்சேர்ந்த கால் — பொற் பாதம்.

19. ஆசு அவா அறும் — குற்றமுள்ள ஆசைகளை அறுத்த

20. வான் அருந்திய — வானுலகில் உள்ள. தகவு இலார் — பெருமை யில்லாதவர்.

மனே செயும் தகம் தேடுவர், தகவிலார்; மலர்ந்த
நனே செயும் கடி, நறைவனத்து எழிலென நண்ணலி,
வினே செயும் பகை வீழ்ந்த நாள் தெரிந்த இம்மனேயே
தனே செயும், திறன் தவிர்ந்து, எழும் தகுதிகேள் —என்றான். 21

இத்தாலிய நாட்டினேப் புகழ்தல்

சென்னுகம் நீர்பொழியத் தேன்பொழியும்
புன்னுகம் திருவிற் பூப்ப
கன்னுகம் நீருமிழக், கவி நாகம்
வெருண்டு அஞ்ச, கல்லூடு ஊர்ந்த
கொன்னுகம் ஒப்ப,மணி கொழித்து அருவி
பாய்ந்தோடக் கொழுஞ்செய் வாய்ப்ப,
பொன்னுகம் ஒப்பவளர் புகழ்இத்தா
லியநாட்டுப் பொலிவிது அன்றே. 22

விரைவாய்ப்பூந் தாழை உலாம் வெள்வனே பூ
வயலூர்ந்து மிளிர்முத்து ஈன்ற
கரைவாய்ப் பூஞ் சுனேபூப்பக் களியாழ் வண்டு
இமிர்ந்து ஒகரம் களிகூர்ந்து ஆடும்
சுரை வாய்ப்பூம் பொழில் காய்ப்ப, ஈரறமும்,
முச்சீரும், சுகம் ஓ ரேழும்,
நிரைவாய்ப்பூங் குடியாக நிமிர்இத்தா
லியநாட்டு நிலேயிதன்றே. 23

பொருள்ஈன்ற பெருஞ்செல்வப் பொலிவு ஒழிக்கும்
வளம்புணரப் புகன்ற நாடு,
மருள்ஈன்ற அவாஒழிப்ப, வையகத்தில்
நான்உதித்து, மறையென்று ஓதும்
தெருள் ஈன்ற நூல்ஒருங்கே திருவிளக் கென்று
ஏற்றி,எலாத் திக்குந் தானே
அருள்ஈன்ற விளக்காகி, அவனியெலாம்
ஆளும் இத்தா லிய நா டன்றே. 24

---

21. தனே செயும் — தன்னே உயர்த்தும். திறன் தவிர்த்து — கோட்பாடு இன்றி. எழும் தகுதி - சிறப்புப் பெறும் தன்மை.

22 செல் நாகம் — (பெரிய) மேகம். புன்னுகம் — புன்னே (மரங்கள்). கல்நாகம் — மலே. கவி நாகம் — குரங்கு. கொன் நாகம் — பெரிய பாம்பு. பொன் நாகம் — தேவலோகம் செல் நாகம்; கல் நாகம்; கவி நாகம் இவை ஒரு பொருட் பன்மொழிகளாக வந்தன.

23. ஒகரம் — மயில். சீர் — செல்வம். நிரைவாய் - ஒழுங்குபட. முச் செல்வம்: அருள், பொருள், கல்வி. எழுவகை இன்பம்: இடம், உணவு. உடை, அறம், கல்வி பொருள், துணேவர் பற்றி வருவன.

24. செல்வப் பொலிவு ஒழிக்கும் வளம் — செல்வப் பெருமையை மறைக்கும் ஞான மாட்சிமை.

ஓராழி உருட்டிய நான் வீற்றிருக்கும்
கோயில் எனக்கு உலகில் ஆகிப்
பாராழி ஒன்று இணையாப் படர்செல்வ
நாட்டு இயல்,யான் பகர்வ தென்ன?
நீராழி கடந்து,அங்கண் இம்மனை சென்று,
அடைக்கலமே நிலத்திற் செய்தாங்கு,
ஓராழி இரவியின் இவ் வில் இலங்கச்
செயும் இத்தா லிய நா டன்றோ 25

சிறுமனைக்கு உண்டாகும் சிறப்பு

பிறைதந்த கொடிஉயர்த்தோர், பின்பு,இங்கண்
ஆண்டு,எவரும் பெரிது அழுங்க
மறைதந்த நெறிநீத்து,இம் மனைக்கு அழிவாம்
என்று,இதனை வானோர் ஏந்திச்
சிறைதந்த விசையொடு போய்த் தெண்கடலைக்
கடந்து,இத்தா லியநன் னாட்டில்
இறைதந்த விளக்காக, மலைநெற்றி
இரவியைப்போல் இலங்க உய்ப்பார். 26

ஓங்கியதோர் உடல் முகமோ, முகக் கண்ணோ,
கண்மணியோ, ஒளிசெய் மார்பில்
தூங்கியதோர் பூண்கலனோ, சுடர்முடியோ,
முடிமணியோ? சொல்லுந் தன்மை
நீங்கியதோர் வனப்புஇவ்வில், நிலத்தெல்லை
நிகரில்லா நேமி தன்னில்,
வீங்கிய தோர் பேரின்ப வீடதுவே;
மேல்வீட்டு வாயில் அஃதே. 27

அடிகோடி தாங்கி,எழுந்து அந்தரமேல்
மணிச் செகரத்து அகன்ற நெற்றி,
கொடிகோடி ஆடிட,உள் குழல்கோடி,
குரல்கோடி குயின்று பாட,
முடிகோடி கீழ்பணிய, முன்விளக்குஓர்
கோடி,பகல் முற்றி மின்ன.
துடிகோடி சூழ்முழங்க, துணையறும்ஆங்கு
இம் மனையின் தோற்றம் அன்றோ. 28

---

25 பார் ஆழி ஒன்று இணையா — உலகிலுள்ள அரசுகள் எல்லாம் ஒப்பாகாத. ஓர் ஆழி இரவியின் — ஒற்றைச் சக்கரமுடைய சூரியனைப்போல.

27. நேமி - பூமி. இவ் இல் - இவ்வீடு.

28. கோடி அடி — கோடித் தூண்கள். செகரம்-சேகரம் — முடி. துணையறும்—நிகர் இன்றி. (செகரம் - குறுக்கல் விகாரம்).

மிடிசென்ற வீடென்ன விருப்புடன்நான்
இவண்சென்றேன்; மேவி என்றன்
அடிசென்ற வீடென்ன ஆசையெழுந்து,
அனைவரும்போய், அவனி யெல்லாம்
குடிசென்ற வீடென்னக் கொழுமணிபொன்
பூந்தொடைகள் குவித்துப் போற்ற,
படிசென்ற வீடென்ன வளம்பெறும் இம்
மனையென்றான் படர்நூல் வல்லோன். 29

*முனிவர் தம் ஐயந்தீர விளக்கங் கேட்டல்*

எனையீன்ற இணையா இத் தாவிய நாடு
அளவின்றி இயலும் மாட்சி,
சுனை யீன்ற மலர் வாயான் துளி மதுப் போல்
இன்பம்—உகும் சொல்லாற் சொன்ன
வினையீன்ற வியப்புடன்,உள் மிகவேய்ந்த
ஐயம்அற வினவித் தண்தேன்
நனையீன்ற நறுங்கொடியோன், நளினம்-அடும்
தாள் தொழுதே நவின்றான்; மாதோ. 30

"ஏமுற்றுக் காத்தனகால் எவன் நில்லா?
மற்றுஅடிகள்! இடைநீ காய்ந்தால்,
பூ முற்றும் பெயர்ப்பது,அரும் பொருள் உனக்கோ?
ஆயினும்,நீ புகழ்ந்த நாடர்,
காமுற்றுச் சீலம்அறக் காசினிமுற்று(ம்)
அழிந்து இறைஞ்சும் கடவுள் எல்லாம்
தாமுற்றுப் போற்றுவராம்; பின்புஉரைத்த
தகுதியுறும் தடமேது?" என்றான். 31

*திருமகன் தான் உலகை இரட்சிக்கும் முறையைக் கூறுதல்*

செவ்வழி உளத்துச் சான்றோன் செப்பிய உரைகள் கேட்டு,
எவ்வழி அனைத்தும் தாவி எல்லையைக் கடந்த காட்சி
அவ்வழி அணுகி, யாவும் அணுகுமுன், முன்னும் நூலோன்,
மெய்வ்வழி விதிப்ப, மென்பூ விள்ளென விளம்பலுற்றான். 32

---

29. மிடிசென்ற — வறுமை புகுந்த. படி சென்ற — பூமியில் வந்த.

30. நளினம் அடும் தாள் — தாமரையினும் அழகிய பாதம்.

31. ஏம் உற்று - இன்பமுற்று. எவன் - என் - என்ன. பூ முற்றும் - பூமி முழுவதும்.

32. முன்னும் நூலான் - கண்டறியும் நூலோனாகிய திருக்குமாரன். விள் என - மலர்ந்தாற்போல.

கண்கடந்து அறிந்த யாவும் கடந்து,நான் அருபியாய் நின்று,
எண்கடந்(த) ஏதங்கொண்ட இவ்வுல கனைத்தும் காத்து,
விண்கடந்து, எவரும் வீட்டை மேவுதற்கு உருவாய்த் தோன்றி,
மண்கடந்து அரசாம்ஆறு வகுத்தலே கேண்மோ-என்றான். 33

மழைக்குலம் பொழியும் மாரி வழங்கிலா நாளில், உண்நீர்,
உழைக்குலம் கண்டுவீழும் ஒத்து,எலாத் துகள்மேல் வீழ,
பிழைக்குல மாக மாக்கள் பேருயிர் வினைகொண்டு எஞ்சித்
தழைக்குலம், வளிநாள் வீழும் தன்மையே, நரகில்வீழ்வார். 34

தீயவை விழைந்த மாக்கள் தீஎரி வீழ்வர் என்று,
தூயவை இரங்கிக் காட்டத் துன்னி,நான் துன்பம் இன்பம்-
ஆயவை விழைந்து. வேதத்து அருநெறி ஓதி,சீற்றம்
காயவை இயற்றும் யாவும் காதலித்(து), இரியா நிற்பேன். 35

தாய்வினை இயற்றி, யாரும் தமரினூரங்கு இனிய ராக,
தீய்வினை நோயும் சாவும் தீர்த்துநான் ஒழுகும் வேலை,
தூய்வினை செய்த பாலால், சுடுவினை தீயோர் செய்ய,
நோய்வினை, மகிழ்ந்து நானே நுகர்கிற்பேன் அளவிற் றன்றே 36

பொருந்தலர் தடிந்து வீழ்த்து, புட்குலத்து இனிதுஎஞ் ஞான்றும்
விருந்தமர் அமர்செய் கிற்பார் வெற்றியே இங்கண் கொள்வார்;
வருந்தலர், யாரும் உய்ய, வருந்திநான் ஒருவன், தெய்வ
மருந்தமர் இரத்தம் சிந்தி, மாள்தலின், கொற்றங் கொள்வேன். 37

மனிதரை அறத்தில் நிலைக்கச் செய்யும் வகையாதென வினுதல்

என்றனன் இளவல், என்ற இவையெலாம் சூசை கேட்டு,
பொன்றனன் எனநீ பொன்று, பொன்றிலா வெற்றி கொள்வாய்;
'வென்றனன்' என்ன ஏகி, விலக்கரும் இடுக்கண், பாரில்
நின்றனர், உறுதி நிற்ப நெறியெனோ? உரைத்தி-என்றான். 38

33. எண் கடந்த - கணக்கற்ற.

34. உழை - மான். எஞ்சி - கெட்டபின்பு. தழைக்குலம் - இலை தழைகள்.

35. தூயவை-தூய அறத்தின் வினைகளை. சீற்றம் காய் இயற்றும் அவை- கோபத்திற்காய்ந்து செய்யும் வருத்தம். இரியா - இரிந்து - திரிந்து.

36. தூய்வினை செய்த பாலால் - நன்மை செய்த தன்மைக்கு.

37. பொருந்தலர் தடிந்து - பகைவரை வெட்டி. வருந்தலர் - வருந்தாமல். யாரும் உய்ய - யாவரும் ஈடேற.

38. பொன்றனன் என - இறந்தாற்போல. உறுதி நிற்ப நெறி - (தருமநெறியில்) உறுதியாய் நிற்கும் வகை.

வேத போதகரும் ஏழு வரங்களும் பற்றித் திருமகன் கூறுதல்

தேன்செயும் மாலையின் வாடுபு, நீர்செயும்
திரையின் ஆடித் திறனில்லாது
ஊன்செயும் ஈனமுற்று எஞ்சிய தன்மையில்
உளத்துஓர் நிலையும் இலமாக்கள்,
நான்செயும் நல்லருள் பெற்றன ரேல், அவர்
நலம்நிற் பதுவோ அரிது?என்னத்
தான்செயும் நன்முறை யின்தயை காட்டிடத்
தனையன், மீண்டு,இவ் வுரைகொண்டான். 39

நூல்நலம், வான்பொருள் செய்நலம் இன்றியும்,
நுனிவேல் சூழ்ந்து நிலம்ஆளும்
கோல்நலம் இன்றியும், ஈங்கெனக்கு ஒத்தனர்
குறும்பாட்டு இல்லோர் தமைத் தேர்ந்து,
வான்நலம் நான்தரத் தந்தன நூல்மறை,
வையத்து எங்கும் வகுத்துஓத,
சூல்நலம் கொள்முகில் ஒத்தவர் ஏகி,என்
சுருதி பரவுற்று, உலகாள்வேன். 40

இத்திறத் தோர்தமை வேந்தரும் போற்றுப,
எல்லை யில்லாக் கலைவல்லோர்,
பொய்த்திறத்து ஆய்ந்ததம் நூல்மறுத்து ஏத்துப,
புவனம் யாவும் வியந்துஅஞ்ச,
மெய்த்திறத்து அற்புத நாவொடு, நூலெலாம்,
விண்நின்று எய்தி வரத்து ஓங்கும் —
அத்திறத்து, எத்திறத்து அற்புத மாட்சியும்
அன்னோர் காட்டி, நிலம் மீட்பார். 41

பாடிய ஓதையும் வீணைசெய் ஓதையும்,
பகையற்று, உவப்ப எவர் கேளார்?
ஆடிய நூல்மறை ஒத்து,அற நன்னெறி
அன்னோர், நீங்கா ஒழுக்கத்தால்
கோடிய உள்ளமும் இன்புறீஇச் சொன்னது,உட்
கொண்டு குன்றாத் தெளிவெய்தி
நேடிய நன்றுற, உற்றவை நீங்கில
நிலையே பெற ஏழ் வரம் ஈவேன். 42

---

39. வாடுபு - வாடி. நீர்செயும் திரை - நீர்த்திரை.

40. குறும்பாட்டு இல்லோர் - சிறு வருத்தமுடைய வறியவர். சுருதி - வேதம்.

41. வரத்து ஓங்கும் அத்திறத்து - சிறந்த வரங்களின் தன்மையால்.

42. நேடிய நன்று - விரும்பிய நன்மை.

வெண்ணிறத் தூசுகொள் மாசற, வெண்மதி
கதிருள் தோய்த்த வினையென்னப்
புண்ணிறத்து ஆர்புரை போக்கி,உள் தேவருள்
பொழிநீராடல் முதற்கீந்து,
தண்ணிறத்து எய்தினும், உட்சுடும் ஆசையில்
தவறி,மீண்டே தளர்ந்து, உள்ளம்
தெண்ணிறத்து ஆசுகொள் ளாநிலை, ஆண்மைசெய்
திருநெய்ப் பூசல் இடச் செய்வேன். 43

தாய்வினை அன்பு,இணை யாதெனப் பின்புறத்
தயையின் மிக்க ஓர் முறை உள்ளி,
மீய்வினை இன்பொடு யாவரும் வாழ்ந்துஉண
விரும்பி, நானே விருந்துஆவேன்;
நோய் வினை நஞ்சுஉறழ் தீயவை இன்பென
நுகர்ந்து, மீண்டே புரைகொண்டால்,
தீய் வினை அப்பிணி தீர்க்கும் மருந்தெனச்
சிறந்(த)ஓர் தேவ முறைசெய்வேன். 44

துஞ்சிய கால், பழிப் பேய் அமர் வென்று எழத்
தூய் நெய் பூசல் திறன்தந்து,
விஞ்சிய மா இருள் நீக்கும் விளக்கென
விதி செய் அத்தர் வினைவு ஈந்தே,
அஞ்சிய கோதுஇல வாழவும் மன்றலை
அருள் செய் யாக்கை எனச்செய்வேன்;
எஞ்சிய மாக்களும் இத்திறத்து ஏழ்வரம்
எய்திக் குன்றத்து இணை,நிற்பார். 45

---

43 தூசு - ஆடை. புண்நிறத்து ஆர் புரை - புண்பட்ட தன்மையிற் பொருந்திச் செய்த பாவங்களை. தேவ அருள் பொழி நீராடல் - ஞானஸ்நானம். தெள்நிறத்து - தூயதன்மைக்கு. ஆசு - மாசு. ஆண்மை செய் திருநெய்ப் பூசல் - உறுதி பூசுதல

44. விருந்து - தேவ நற்கருணை பிணிதீர்க்கும் மருந்து - பச்சாத்தாபம்.

45. துஞ்சிய கால் - இறக்கும் பொழுது. தூய் நெய்பூசல் - அவஸ்தை பூசுதல். விதி செய் — நெறி காட்டும் அத்தர் — அத்தன்மார், குருமார். அத்தர் வினைவு — குருத்துவம். மன்றல் - திருமணம். யாக்கை - கட்டு.

கார்உரு என்னுடல் மாமலைக் கோட்டுயர்
கருணைச் செந்நீர் மழை பெய்யப்
பேரொரு வெள்ளமும் ஓடலில், இவ்வரம்,
பிரிந்த ஏழாறு என ஓடி,
தேரொரு நன்றி இல் லாமையின், தீவினை
தீக்கும் பாலை என வைகும்
பாரொரு பூங்குளிர் சோலையென்று ஆக்கலும்,
பரிவற்று, உய்வார் நரர் என்றான். 46

வானுரும் மாமையில் தோன்றிய வானவர்
மகிழ்ந்து, யாவும் மனத்துஉள்ளி,
தேனுரும் தீங்குரல் யாழிசை ஏற்றுபு,
திருச் சேய் நாமப் புகழ்பாட,
கானுரும் பூங்கொடி யோனும்அத் தாள்மிசை
கமழ்பூ ஏற்றித் தொழத் தானும்
ஊனுரும் ஆக்கையை ஏந்திய நாதனை
உணர்ந்து பாடத் தொடங்குகின்றான்: 47

சூசை. நாதன் அருளைத் துதித்தல்

ஒன்றில்லாது எல்லாம் உளவாக்கி னோன் அல்லால்,
நன்றில்லா வையத்து,இந் நன்றிசெய் வான்யாரே?
நன்றிசெய் வார்இல்லா, நாம்வாழத் தான் இறந்து,
வென்றிசெய் வான்எமக்கு நீயல்லால், வேறுயாரே? 48

அன்புடையார் என்பும் அரிந்தளிப்பார்; தன்னுயிரோடு
என்புடைய மெய்யெல்லாம் ஈந்து,உண வென்பான் யாரே?
ஈய்ந்து உணவென்று எவ்வுயிர்க்கும் எவ்வுணவும் ஈட்டி,இவண்
வேய்ந்து,உணத் தான் ஊண் இரந்த நீயல்லால், வேறுயாரே. 49

கைம்மாறு இவண்வெஃகாக் காமுற்று, இவையெல்லாம்
மெய்ம்மாறு எமக்களிப்ப விஞ்சுஅருள் கொண் டோன் யாரே?
விஞ்சுஅருள் கொண்டு ஆசற,நாம் மீவாழத் தான்நொந்து,
நெஞ்சுஅருள் கொண்டு ஈங்குஇறக்கும் நீயல்லால் வேறுயாரே? 50

---

46. கார் உரு — மேகமாக. தீவினை தீக்கும் — பாவத் தீ பற்றி எரியும். பரிவு அற்று - துயர் நீங்கி

47. வான் உரும் மாமை - வானுலகு சிந்தும் அழகோடு.

48 இவண் வேய்ந்து - இவ்வுலகில் தோன்றி.

50. வெஃகா — விரும்பாமல். மெய்மாறு எமக்கு — உண்மை யறியாத நமக்கு அருள் சென்றோன் - அருளின் பின் சென்றவன்.

மேன்மைற் பொலிந்த அரசர்கள் கூட்டம்

இனையவும் பலவும்—ஆங்கு இயல, நாள்தொறும்,
வனையவும், புவி நிகர் மடிய, வானுலகு
அனையவும் அம்மனை, அரிய தேவநூல்
புனையவும், மாமுனி பொருவற்று ஓங்குவான். 51

பூவது கொடியினேன் பொலிய மீட்டுஓர் நாள்,
ஆவதும் ஆயதும் ஒன்று மாய், எலாம்
தாவது உணர்பிரான் தந்த காட்சியை,
நாவது வருந்தினும் நவிலும் பான்மையோ? 52

மண்ணிடத்து இருள் அறும் மாலி நாணவும்,
விண்ணிடத்து உலாவி வில் விளங்கு வேந்தரை
எண்ணிட இடமுமொன்று இன்றி, எண்டிசை
கண்ணிடத் தகவில கனிவிற் கண்டுளான். 53

பொன்நெடுங் குடைகளும், பொன் அம் பூண்களும்,
வல்நெடும் இரதமும், மணிக்கொ டிஞ்சியும்,
துன்னெடுங் கொடிகளும், தொகுதியொன்று இல்லா
மின்னிடும், வெயிலிடும், மீனின் வில்லிடும். 54

அரியினம் பூட்டிய அணிவி மானமும்,
வரியினம் பூட்டிய இரத வையமும்,
பரியினம் பூட்டிய திகிரி பான்மையும்,
கரியினம் பூட்டிய தேரும் கண்டுளான். 55

பைம்பணிப் பசுங்குடை, பவளச் செங்குடை,
ஐம்மணிச் சிதங்குடை, தரள அம்குடை,
செய்ம்மணிக் குருங்குடை, திங்கள் வெண்குடை,
மைம்மணிக் கருங்குடை மயங்கித் தோன்றின. 56

---

51 நாள்தொறும் இயல - நாள்தோறும் நடந்து வருகையில். வனையவும் - புகழும்படி. புவி நிகர் மடிய - பூவுலகின் ஒப்புமை கடந்து. புனையவும்- புனைந்து.

52. தாவது உணர் - கடந்து அறியும். பிரான் - திருக்குமாரன்.

53. மாலி - சூரியன். கண்ணிடத் தகவு இல - கருதும் தன்மை கடந்த. கனிவில் - இன்பத்தோடு.

54. தொகுதி - தொகை.

55 வரி - புலி. வையம்-திகிரி - தேர்.

56 ஐ மணி - அழகிய மணி, வச்சிரம். சிதம் - வெண்மை. குரு - ஒளி.

மயில் அகல் தோகையும் மணியும் வில்செய,
வெயில் அகல் நிழல் செயும் வெயில்செ யுங்குடை;
துயில் அகல் ஒளி மணி தொடுத்த பான்மையால்,
வெயில் அகல் வளி செயும் வெயில்செ யுங்கொடி. 57

பேரொலி முரசொடு பிறங்கும் பல்லியத்து
ஆரொலி, பரியொலி, அதிர்கைம் மா ஒலி,
தேரொலி, கொடியொலி, தியங்கும் பூண் ஒலி,
காரொலி ஒளித்து,ஒலி கலந்து ஒலித்தவே. 58

மீன்நிகர் வெயில்திரள் எறிக்கும் மேனியார்,
வான்நிகர் மகிழ்வுறீஇ, மகர யாழொடு
தேன் நிகர் தொனிக்குழல், திளைத்த ஓதைசெய்
பால் நிகர் இசைக்கொடு, இசைகள் பாடுவார். 59

நள் நிலவு அனிகமே நயந்து சூழ்வர,
ஒள் நிலவு எறித்த பூண் உலாவும் மார்பினர் —
தெள் நிலவு இமைத்த பொன் மகுடச் சென்னியார் —
எண்ணில குருசிலர், இரிந்துஉலாவுவார். 60

மேக மொத்து இழிமத வேழம் மீசிலர்;
நாக மொத்து எழுந்த தேர் நவி ரம்மீசிலர்;
ஆக மொத்து அகன்று பாய் அயங்கள் மீசிலர்,
யூக மொத்து அணிஅணி உலவி ஏகுவார். 61

மின் நிறத்து உருச்சிலர், விரிவில் வீசிய
பொன் நிறத்து உருச்சிலர், பொறி செய் தூய்அழல்
நல் நிறத்து உருச்சிலர், அயர்ந்த நாண்மலர்
இன் னிறத்து உருச்சிலர், ஏந்தி ஏகுவார், 62

---

57. வில் செய - ஒளி பரப்ப. துயில் - துகில். வெயில் - 1·3 வெப்பம். 2·4 ஒளி.

58. பல் இயம் - பல இசைக் கருவிகள். கார் ஒலி-மேக முழக்கம்.

60. நள் நிலவு - மிக்க ஒளி. அனிகம் - சேனை தெள்நிலவு - தெளிந்த ஒளி.

61. வேழம் மீ — யானை மேல். ஆகம் — நெஞ்சு. ஆகம் ஒத்து—மன வேகத்தை ஒத்து. நாகம் - மலை. நவிரம் — உச்சி. அயம் — குதிரை.

62. மின் நிறத்து உரு — மின்னல் ஒளி உருவாக.

விண்ணழகு வாய்ந்த அரிவையர் காட்சி

தோட்டழகு அலர்ந்தபூந் தொடை தொடுத்து,ஒளி
தீட்டழகு அமர்ந்தபூண் தியங்கிச் செஞ்சுடர்
காட்டழகு உருக்கொடு கலந்து,அன் றுருடன்,
வீட்டழகு அரிவையர், விளங்கக் கண்டுளான். 63

பால்நுரைத் தகுதியைப் பழித்த ஆடையும்,
தேன்நுரைத்து அலர்தொடை செறிந்த பூண்களும்,
மீன்உரைத்து ஒளிமணி மேனி மாமையும்,
யான் உரைத்து இணைசெய இயலும் பான்மையோ? 64

வாவிசேர் முளரிசேர் வதன வாமமும்,
காவிசேர் வடிவுசேர் களித்த நாட்டமும்,
நாவிசேர் குழலும்சேர்ந்து, இலங்கும் நங்கையார்,
ஆவிசேர் அழகும்சேர்த்து, அனுக்கம் சேர்க்கிலார். 65

முடிமணி துளங்கவும், மார்பில் மொய்த்துஉலாம்
கடிமணி விளங்கவும், கைஅம் காந்தள்சூழ்
தொடிமணி இலங்கவும், எழில்மு கத்தினர்
வடிவுஅணி உடுவில்–ஊர் மதியம்,—மானுவார். 66

உந்துகேழ் மதியவெண் குடைகள் ஊர்ந்து,உயர்
வந்துகீழ் அணிவரும் மணிமு கத்து,ஒளி
சிந்துகேழ் இனமணி திளைபொற் பாவையார்,
இந்துகீழ், இந்துவந்து இரியல் மானுவார். 67

வன்மலை, சிறைக்கொடு வான்ப றந்தென,
மின்மலை உருக்கொடு விளங்கு தேர்மிசை,
சொன்மலை பழித்துஎழீஇத் தோன்றும் மங்கையர்,
பொன்மலை முடியுறை சுடரைப் போலுவார். 68

---

63. தோடு அழகு அலர் — அழகிய இதழ் மலர்ந்த. வீட்டு அழகு அரிவையர் — வான்வீட்டுக்குரிய அழகுடைய பெண்கள்.

64. பால் நுரை தகுதி — பால் நுரையின் தன்மை-மென்மை. மாமை — அழகு.

65. வாமம் - அழகு. நாட்டம் - கண். நாவி - மயிர்ச்சாந்து. அனுக்கம் - வருத்தம்.

66. மானுவார் - ஒப்பார்.

67. உந்து கேழ் - வீசும் ஒளி. இந்து கீழ் இந்து - சந்திரன் கீழே பல சந்திரர். இரியல் - செல்லுதல்.

68 சொல்மலை — சொல்லும் உவமை.

காட்சியை விளக்குமாறு சூசை திருமகனைக் கேட்டல்

எண்திசை இரிந்துவந்து, இன்ன வாறுஎழில்
கொண்டு,இசை அரசரோடு எழிலிக் கூந்தலார்,
விண்திசை நெருக்குற மிடையக் கண்ட,பூஞ்
செண்டுஇசை கொடிநலோன், வியந்து செப்பினன்: 69

"மின் இனம் என நனை விரித்த கொம்பனர்,
மன் இனம் என நிமிர் வயிரக் குன்றனர்,
பொன் னின் அங்கு அண்டமேற் போவது ஏதென,
என் இனம் புரக்கும்நீ இயம்பு" என் றன்;அரோ. 70

மைத்திறத்து ஒளித்துஎதிர் வருவது ஆதியே,
மெய்த்திறத்து அனைத்தையும் விழுங்கும் காட்சியான்,
அத்திறத் தவர் எவர் என்ன, ஆம்பல்வாய்
இத்திறத்து அலர்ந்து,இவை இயம்பி னன்;அரோ. 71

'வருங்காலத்தில் என் திருமறை போற்றும் வண்மை மிக்க வேந்தர்களே அவர்கள்' என விளக்குதல்

மீன் செய்த சுடரேய்க்கும் மேனியொடு,ஆங்கு
ஒளிசெய்அவ் வேந்தர் ஈட்டம்,
கான் செய்த மலர்மொய்க்கும் கடிநாடு
பல ஆண்டு, கசடற்று, இங்கண்
யான்செய்த மறைநலம் ஓர்ந்து இனிவரும் பின்
காலையில்தாம், என்னைச் சேர்ந்து,
வான் செய்த மறை முறையில் மனம் வழுவாது,
என்ஞான்றும் வான்விட் டான்வார். 72

இருள்பாய்ந்த நிசிபருகும் இரவியெனச்
சுடர்வெள்ளம் இமைத்துப் பைம்பொன்
பொருள் பாய்ந்த முடிசூடி, ஆகிலப்புள்
விருதேந்திப் பொலிந்து, ஆங்கு உள்ளோர்
தெருள் பாய்ந்த மணிகொழித்த தெண்திரையாய்ச்
செழுங்கழனி திருவிற் பூப்ப,
அருள் பாய்ந்த உரோமை நாடு ஆண்டளிக்கும்
பல்லரசர்க்கு அரசர் ஈட்டம். 73

---

69. எழிலிக் கூந்தலார் - மேகங்களையொத்த கூந்தலையுடைய மகளிர்.
70. மின் இனம் - விண் மீன்கள். மன் இனம் - மன்னர் கூட்டம். என் இனம் - என்னைப்போன்ற மனிதர்.
71. மை திறத்து - இருளில். விழுங்கும் - கடந்த.
72. காலையில் - காலங்களில்.
73. இமைத்து - பரப்பி, விளங்கி. ஆகிலப்புள் - இருதலைப் பறவை.

வாமஞ்சால் ஓடைநுதல் மா,எருத்தம்
மீது,இங்கண் வரும்இவ் வேந்தர்,
காமஞ்சால் விளைசெல்வம் கவர், உங்கா
ரிய நாட்டைக் காக்கும் ஈட்டம்;
ஏமஞ்சால் அணிதியங்க, எறிவேல் கொண்டு,
அங்கண்பாய் இவுளிமேல்,ஓர்
நாமஞ்சால் வெற்றிதர, நண்ணர் தொழும்
புலோனியநன் னாடர் ஈட்டம். 74

மேய்ந்தகதிர் உயிர்த்துஇமைக்கும் விருந்தென வேல்
முன்னி,இவண் மிடைந்த வீரர்,
வாய்ந்த கதிர்ப் படை ஒன்னார் வணங்கு அயில்கொள்
பாவரர்தம் மன்னர் ஈட்டம்.
பாய்ந்தகதிர் உ(ண்)ணும் குடையார் பாய்இருள்உண்
முடிசூட்டிப், பகல்அங்கு உய்ப்போர்,
தோய்ந்தகதிர் எறிமணிகொய், சுவேரியநாடு
இனிதுஆள்வார் தொகுதி ஈட்டம். 75

செய்பரந்த மணிக்கொடிஞ்சித் திண்தேர்மீது,
ஆங்கு,அரிபோல் திறந்த வல்லார்,
மைபரந்த நிழற்சோலை மதுமலர்கொய்
தானியம்ஆள் மன்னர் ஈட்டம்;
மெய்பரந்த கலன்மின்ன, மீன்பரந்த
விசும்புளர்போல் வேய்ந்த அன்னார்,
ஐபரந்த வெற்புஅருவி அதிர்ந்து, அரிகொய்
ஆச்சியநாட்டு அரசர் ஈட்டம். 76

---

74. ஓடை நுதல் மா - நெற்றிப் பட்டம் அணிந்த யானை. உங்காரிய நாடு - ஹங்கேரி. நண்ணர் - நண்ணார் - பகைவர்.

75. வேல் விருதென - வேல் விருதாக. பாவரர் - பவேரியா நாட்டார். குடை ஆர் பாய் இருள் - குடைகள் செய்யும் மிக்க இருள்.

76. தானியம் - டென்மார்க்கு. ஆச்சிய நாடு - ஆஸ்திரியா.

மீன் முழுகும் கொடித்திண்தேர் மீ,வரி மா
விருதுஏந்தி வேய்ந்த வேந்தர்,
கான் முழுகும் குன்றம் சால் கவவுமுடி
முராவியமே காக்கும் ஈட்டம்;
ஊன் முழுகும் ஒளிமுழுகும் உவணியைக் கொண்டு
உவந்து,இப்பால் உறைந்த கோமார்,
தேன் முழுகும் பூம்பொழில்வாய் சிலீமு கமார்
சிலேசியர்ஆள் செல்வர் ஈட்டம், 77

செற்றாறு கடந்(து)அனில விசைகடந்த
தேர் எழும்அச் செல்வ வல்லோர்,
பற்றாறு கடந்து,இருசீர் பயந்து, இணையா,
புலேமியர்தம் பதிகள் ஈட்டம்;
சொற்றாறு கடந்தசினம் சூட்டுஆளி
ஏந்தி, அவண் தோன்றும் மன்னர்,
கற்றாறு கடந்(த) உரத்துக் கருணைமிகும்
சரோனியமே காக்கும் ஈட்டம். 78

சினம் பழுத்துச் சீறி,விரி சிறைச் சிங்கம்
உயர்ந்து,இங்கண் செல்லும் செல்வர்,
தனம் பழுத்துத் திருவாய்ப்பத் தாழ் கடல்சூழ்
வினேரியர் தம் தலைவர் ஈட்டம்;
மனம் பழுத்துக் களி யார்ந்த வடிவுற்றாங்கு
இவுளிமிசை வாய்ந்த மன்னர்,
கனம் பழுத்துப் பனிவரை சூழ் கலைமிக்(க)ஏந்
திறாதியரைக் காக்கும் ஈட்டம். 79

---

77. கான் முழுகும் – வாசனை மிக்க. கவவு – சூழ்ந்த. உவணி – வாள். சிலீமுகம் – அம்பு.

78. செல் தாறு கடந்த – மேகத்தின் அளவைக் கடந்த. உயரத்தால் மேகத்தைக் கடந்த. அனிலம் - காற்று- பற்று ஆறு - பற்றும் இயல்பு - ஆசை. இருசீர் பயந்து - பொருளும் அருளுமாகிய இருவகைச் செல்வமும் கொண்டு. சொல்தாறு-சொல்லுந் தன்மை கல்தாறு கடந்து-கல்லின் தன்மை கடந்த. கல்லினும் உரத்து – திண்ணிய.

79. கனம் பழுத்து - மழை பெய்து. பனி வரை – குளிர்ந்த மலை.

மையொக்க மின்னலென, மதகரிமீது
ஒளிவயிர மணிக் குன்றன்னார்,
பொய்யொக்க வளர்கருப்பம் பொழில்மொய்க்கும்
சசீலியர்ஆள் பொருநர் ஈட்டம்,
நெய்யொக்கக் கதிர்தும்மும் நீடியவாள்
ஏந்தியஅந் நிருபர் தாமே,
மெய்யொக்கத் திருவொடு,அறம் விசித்து,ஒளிகொள்
நாப்புலிஆள் வேந்தர் ஈட்டம். 80

கண்கடந்த கவின்காட்டிக் கமழ்கமலக்
கண்ணிஅணி களிமார் பன்னார்,
பண்கடந்த குரல்அ(ன்)னம்கண் படும்வயல் கொய்
மாந்துவம்ஆள் பரிவோர் ஈட்டம்;
விண்கடந்த பூங்கொடியை விரித்தார்க்கும்
தேர்நடவி, மிளிரச் செல்வோர்,
எண்கடந்த நிரைத்தீம்பால் இனிதொழுகும்
பார்மநிலத்து இறைவர் ஈட்டம். 81

திரைபுறங்காண் கடற்பவளச் சிலுவைவிருது
உயர்த்தி,இவுளி செலுத்தும் அன்னார்,
புரைபுறங் காண் துகிர்க்கொடியே, புணரியிற்கொய்
சேனுவம்ஆள் பொருநர் ஈட்டம்,
விரைபுறங்காண் தொடைமார்பில், வெண்புறவு
கதிர்பரப்ப, வேய்ந்த அன்னார்,
வரைபுறங்காண் கோநதிசார் வளம்பெறவாழ்
சாவோய மன்னர் ஈட்டம். 82

மீன்நலங்கொள் மணித்திண்தோள் வீங்கி,அரித்
தேர்ஏறி வேய்ந்தாங்கு அன்னார்,
வான்நலங் கொள் படம் உயிர்பெற் றென்ன,வளர்
கல்லியம்ஆள் மன்னர் ஈட்டம்;
தேன்நலங்கொள் அலங்கல்வேற் சேவகர்சூழ்ந்து,
ஆங்குலவும் திண்தேர்ச் செல்வர்,
நீல்நலங்கொள் கடல்பிரித்த நிலம் சேர்ந்துஆள்
இசிப்பானு நிருபர் ஈட்டம். 83

---

80. கருப்பம் — கரும்பு. விசித்து — கட்டி.

82. புரை புறங்காண் - குறையில்லாத. துகிர்க்கொடி — பவளக் கொடி. புணரியில் கொய் — கடலினின்றெடுக்கும். வரைபுறங்காண் — மலையினின்று ஒழுகும்.

83. வீங்கி - ஓங்கி. ஆங்கு வேய்ந்த அன்னார் - அங்கே தோன்றினவர். கல்லியம் - பிரான்சு. இசிப்பானு - ஸ்பெயின்.

போர்எல்லை கடந்துஉகளும் பொற்கலின
மாஏறிப் பொலியுங் கோமார்;
சேர்எல்லை வாழ்வுறச்,சீர் எல்லையில
விபெரியம்ஆள் செல்வர் ஈட்டம்;
நேர்எல்லை இல்லையென நிமிர்கவிகை
நெடுஞ்செங்கோற் கொற்ற மன்னர்,
பார்எல்லை அல்லதுஇல, படர்இலுசிந்
தானியம்ஆள் பரிவோர் ஈட்டம். 84

கொக்கொக்கும் தேரின்எழீஇக் குணக்கொக்கும்
சுடரொத்த குணத்தக் கோமார்,
இக்கொக்கும் மலர்மணிசேர் இழையொக்கும்
அங்கிலியந்தீவு இறைவர் ஈட்டம்;
புக்கொக்கும் புயலொக்கப் பொழிமதமால்
களிறுக்கும் பொலிகோல் அன்னர்,
திக்கொக்கும் செல்வமெலாம் திரண்டொக்கும்
ஈர்லாந்த தீவுஆள் ஈட்டம். 85

கோலுண்டே விசையம்கொள் கோலுண்ட
அப்பசும்பொன் கோல்,கை யுண்டோர்,
பாலுண்டே பூந்துகில்,தம் பாலுண்ட
பார்த்தவர்ஆள் பதியர் ஈட்டம்;
காலுண்டே விசை கடுத்த காலுண்ட
இரதமிசை களித்த அன்னர்,
நூலுண்டே நீதிவழா நூலுண்ட
நொர்வெற்கர் தலைவர் ஈட்டம். 86

---

84. சேர் எல்லை வாழ்வுற - சேர்ந்த இடத்தை வாழ்விக்கும். எல்லையில சீர்—எல்லையற்ற செல்வம். விபெரியம் - பவேரியா. பரிவோர்—அன்பர்.

85. கொக்கு — குதிரை. இக்கு — மது. அங்கிலியத்தீவு — ஆங்கிலத் தீவு. ஈர்லாந்த தீவு - அயர்லாந்துத் தீவு. ஒக்கும் - பூட்டிய, ஒத்த. புக்கு - புகுந்து.

86. கோல் - அம்பு, குதிரை, செங்கோல். பால் உண்ட பூந்துகில் - பாலாவி போன்ற மெல்லிய துகில். பார்த்தவர் - போர்த்துக்கல் நாட்டார். பதியர் -அரசர். கடுத்த - வென்ற. நூல் உண்ட-நூலினும் (வளையாத). நொர் வெற்கர் - நார்வே நாட்டார்.

விண்தீண்டி ஆடுகொடி விமானமிசை
விரிகதிர்ப்பூண் வேய்ந்த அன்னார்,
மண்தீண்டி உலாங் கடல்சார், வயம் எஞ்சாப்
பிறாசியர்தம் மன்னர் ஈட்டம்,
பண்தீண்டி எழுங்குரலிற் பாடினர் சூழ்
வர, வானோர் பரிசொத்து அன்னார்,
கண்தீண்டி இன்பு உகுக்கும் கவின்தீட்டும்
பவோனியரைக் காக்கும் ஈட்டம். 87

துப்புஅப்பால் உருச் சிவப்பத் தொக்குஉம்பர்
என விருதாய்ச் சுடர் மீன் கொண்டார்,
ஒப்புஅப்பால் உலகுஅணிகொள் ஒளிச்செப்பாம்
சிப்புருத்தீவு உடையர் ஈட்டம்;
வெப்புஅப்பால் ஒளிஎறிக்கும் வெண்மணி,மார்
பிடைத்தூங்க, வெயில் செய் அன்னார்
தப்புஅப்பால் தீங்கனிகள் தந்துஉவக்கும்,
காண்றியதீவு அதிபர் ஈட்டம். 88

ஐயறும் ஓர் வகுப்புஅப்பால் அலகில நாட்டு
அரசரைத்தான் அங்கண் காட்டி,
மையறும் ஓர் விளக்கென்ன வந்து,இவண்நான்
மனத்துஇரங்கி வையத்து ஓதும்
பொய் யறும் ஓர் மறைநன்னூல், பொற்சுடரோன்
கதிர்பட்ட புவனத்து,எங்கும்
மொய்யறும் ஓர் முறைதானும் உற்று,உலவி
வழங்கும்என்றான் முருகுச் சொல்லோன். 89

சூசை, வானின்பம் உறல்

பண்கடந்து இனிய சொல்லான் பகர்ந்து காட்டியஅக் கோமார்,
கண்கடந்து இயலும் மாமை, கண்கட வாமை நோக்கி,
எண் கடந்து அரிய இன்பம் ஈதி என்று அடியைப் போற்றி,
மண்கடந்(த)அமரர் ஒத்தான் மதுக்கடந்து அலர்ந்த கோலான். 90

---

87. பிறாசியர் - பிரஷ்யா நாட்டவர்.

88. துப்பு அப்பால் - பவள நிறத்திலும். ஒப்பு அப்பால் - ஒப்புக் கடந்து. சிப்புருத் தீவு - சைப்பிரஸ் தீவு. தப்பு அப்பால் - தவறுமல். காண்றிய தீவு - ஸ்காண்டிநேவியா.

89. ஐ அறும் ஓர் வகுப்பு - 5 × 6 + 1 = 31 வகுப்பு. மொய் அறும் ஓர் முறை - பகையற்ற ஒரு முறையில்.

90 ஈதி - தந்தாய்.

ஒரு நரகபூதம் சேவகர் புடைசூழத் தோன்றுதல்

கனிவரும் இனைய வாகிக் கதங்கொடு கடலும், காரும்,
தொனிவரும் முழக்கத்து, இப்பார் துணுக்கெனப் பிளந்த வாயால்
நனிவரும் புகைமொய்த்து, எங்கும் நடுக்குஇருள் பரவச் செந்தீ
முனிவரும் நரக பூதம் முழங்கி,மேல் தோன்றிற் றன்றே. 91

நோய்வினை சினங்கொடு ஆவி நுகரவந்து எதிர்த்த கூற்றே,
தீய்வினை நரகப் பேயோ, அவற்றிலும் தீய தொன்றே
மீய்வினை தலையேழ் கொம்புஏழ் விரிசிறைச் சர்ப்பம் ஏறி,
வாய்வினை அழல்விட்டு ஆர்ப்ப, மண்பிளந்து எழுந்த தன்றே. 92

நேரொன்றும் இலது,இவ் வாறே நினைப்பினும் பனிப்ப,உள்ளம்
காரொன்று முழக்கத்து, அஃதே கதத்து அர சாக எய்த,
பாரொன்றும் திசைகள் எஞ்சப் படர்ந்ததற்கு ஒத்த வீரர்,
சீரொன்றும் அலகி லாத சேவகர், மருங்கிற் சென்றார். 93

நாயினம் என்னச் சீறி நலதுஎலாம் பகைத்த அன்னார்,
பேயினம் உவப்ப, வேதப் பெயர்அற வெகுண்டு தாக்கி,
தூயினம் ஒருங்கும் கோற, சூழ்எங்கும் அரவம் பொங்கி
வேயினம் அழிப்பப் புக்க வெந்தழற் கதத்தில் ஒத்தார். 94

பேயின் செயலால் நல்லோர் சிலர் மாய்ந்தும், பலர் தோன்றுதல்

இடத்திடத்து அலகில் நல்லோர் இறந்து,உயிர் எஞ்ச மாய்ந்து,
சுடச்சுடப் புதுக் கலத்தில் சுவையபால் பொங்கல் போலப்
படப்படச் சிலர்,எண் ணின்றிப் பலர் எதிர்த்து, உவப்பில் ஆவி
கெடக்கெடத் தந்து, வான்மேல் கேழ்முடி சூடி நிற்பார். 95

பேர்பகை எஞ்ச, எஞ்சாப் பெருமையோர் வாய்ப்பக் கண்டு,
'சேர்பகை யாதென்று ஐயா செப்புதி' என்னச் சூசை,
ஆர்பகைக் காதை கேண்மோ அருந்தவ! என்று சொல்வான்—
நேர்பகை மறுப்ப, நேரா நிமிர் நெடுங் காட்சி நீரான். 96

---

91. கனி வரும் - இன்பத்தோடு. இனைய ஆகி - இவையெல்லாம் நடைபெற்று. கதம் கொடு - சின முழக்கத்தோடு.

92. மீ வினை - மேலெழுந்த.

93 கதத்து - கோபங்கொண்ட. திகைகள் எஞ்ச - திசைகள் மெலிய - நெருக்கப்பட.

94. கோற - கொல்ல. வேய் - மூங்கில்.

96. ஆர் பகைக் காதை - நிறைந்த பகைச் செய்தி.

பேய்ப்பகைக்கு உட்படாதவர் சிறப்பினைத் திருமகன் எடுத்துரைத்தல்

கூவில் வந்து,நான் குணுங்கரசு எங்கணும் பறிப்ப,
பூவில் வந்து,தான், நமரெலாம் பகைத்து, அதிர் புலிகள்
காவில் வந்துமான் கடுத்தென, மக்களும் அப்பேய்
ஏவி வந்து,மா பகைவிளைந்து எங்கணு மாம்;ஆல். 97

கடையர் என்பவர், கசடர் என்பவர், கலைகடிந்த
மடையர் என்பவர், மறைமுறை குலம்திரு விழந்த
புடையர் என்பவர், புரை,துயர், இழிவு,நோய் ஒருங்கே
உடையர் என்பவர்—தூயஎன் சுருதிநூல் உடையோர். 98

தாயுந் தந்தையும் தமரெலாம் பகைசெய, என்றும்
ஓயுந் தன்மையும் ஒன்றில, நகைத்து அடித்து அகற்றி,
நோயும் துன்பமும் நுகர்ந்து,எமர் யாவரும்,செம்பொன்,
காயும் தன்மையில் கதிர் செயல் போல்,வளம் கொள்வார். 99

கோலும் கோடிய கோக் கணமும்,பகைத்து என்றன்
நூலும், கோடரும் நூலுடை யாவரும் மடிய,
வேலும் கோலும் மற்று அரும்படை கொடு மிகவெகுண்டு,எப்
பாலும் கோதிலர் குருதியோடு, உயிர் நலம் பறிப்பார். 100

கொடிய வேலினர், கொடுமைசெய்து அயருவார்; அயரார்—
நெடிய வேதனை நீர்த்த இன் னமுதென நுகர்ந்தோர்;
'கடிய ரே,உமக்கு உரியதோர் கருமம்இத் துணையோ?
மடியவே, உடல் மடியுமோ உயிர்'என நகைப்பார். 101

எரிந்த வெந்தழல், இக்குஉகும் பனிமலர் என்பார்;
அரிந்த வெம்படை, அணிந்த பொற்பு அணிநலம் என்பார்;
பிரிந்து நல்லுயிர் பருகும் நஞ்சு அமுதென்பார்; பெருகப்
புரிந்த வெந்துயர் புரிமண இன்பமே என்பார். 102

இத்திறத்தவர் இறத்தல் காண் பலரும் அம் மறைசெய்
மெய்த்திறத்தில்,இவ் வீரமாம் என உளம் தேறி,
அத்திறத்தில் அங்கு ஒருவர் மாய்ந்து, ஆயிரர் தெளிந்து,
பொய்த்திறத்த நூல் போக்கி,மெய்ச் சுருதிகைக் கொள்வார். 103

---

97. கூவில் - பூவுலகில். கடுத்தென - சினந்து கொன்றாற்போல.
98. புடையர் - இழிந்தவர்.
100. எப்பாலும் - எங்கும்.
102. இக்கு உகும் - மதுப் பொழியும். பிரிந்து - பிரித்து.

விரைத்த வேலியே விளைவுறப் பாய்புனல் போன்றே,
நிரைத்த சோரியால் என்மறை விளைவுநீள் வது;மற்று
உரைத்த ஓகையால் உலந்தவர், அரசுறீஇ வான்மேல்
வரைத்த மாமையால், விரைவில வாழ்வது நோக்காய். 104

பொன்னைக் காட்டிய பொறிஅழல் போல்வதே யல்லால்,
கொன்னைக் காட்டிய கொடுமைநொந்து எஞ்சநன் மறையோடு,
என்னைக் காட்டிய ஈடுளோர் பகைவெல்வார் என்றான்,—
மின்னைக் காட்டிய விரிமணி மேகவா கனத்தான். 105

குசையின் வேண்டுதல்

என்னைப்பற்றிநீ இறந்து,உலகு அளிப்ப, மற்றுஉமர்தாம்
நின்னைப் பற்றிமாய்ந்து, இகல்வெல நினக்குஇனி நிகர்யார்?
உன்னைப் பற்றிநான் உதிரம்தந்து அரசுற,இரங்கிப்
பின்னைப் பற்றிநீ தருகெனப் பெருந்தவன் தொழுதான். 106

திருமகள் குசை முனிவர்க்கு அளிக்கும் பரிசு

களிப்ப வானமும், நாய்கன்ஓர் புன்னகை காட்டி,
அளிப்ப ஆர்வமும் ஆவியும் ஒன்றுறத் தழுவி,
துளிப்ப மாதுவம், துணர்விரி மலர்நலோய்! உன்னைத்
தெளிப்ப, ஆசையில் செப்பிய தகுதி,சால்பு—என்றான். 107

"தீய்வ ரும்படை சிந்துசெந் நீர்அரசு—எனக்காய்,
நோய்வ ருந்துயர் நுகர்பொறை அரசுஉனக்கு" என்றான்;
மீய்வ ருந்திரு வுளம்,வளன் மேவி,உள் வலிப்பத்
தூய்வ ரும்படும் துயர்அற, இவன்பிணி சொல்வாம். 108

---

104. சோரி - இரத்தம். உலந்தவர் - இறந்தவர்.

105. ஈடுஉளோர் - தைரியமுள்ளவர். நாய்கன் - நாயகன்.

107. மாதுவம் துளிப்ப - மதுவைப் பொழிய.

108. தீய்வரும் படை - கொடிய ஆயுதங்கள். உள்வலிப்ப - உள்ளம் இசைந்தமையால். தூய்வரும் - தூயவரும். துயர் அற - துன்பம் நீங்க, ஆறுதலாக.

# 9. பிணி தோற்று படலம்

*திருமகன் தன் கைத்தாதையைப் பொறுமையின் அரசனுக்கப் பிணிகளை அனுப்பினான் எனல்*

**வேல்முகத்து அசடர்கையால் வீழ்ந்துஇறப்பு அரிதென்கேனோ?**
**நான்முகத்து உறுநோய்க்கு எஞ்சா நயத்துஅமைவு அரிதென்கேனோ?**
**'கோல்முகத்து ஈண்டேசாதல் குணம்'எனப் பலநாள் வெந்நோய்ப்**
**பால்முகத்து அவலம் ஆற்றாப் பலர்,தமைக் கொல்வார் அன்றோ? 1**

**தீங்குஇயன் றுயதுன்பம் திரிந்து,அற(ம்) விளைவுகாண,**
**ஈங்கு இயன்றுஉதித்த நாதன், எளியனாய்த், தனக்கு மற்றை**
**ஆங்கு இயன்று அமைகைத் தாதை, அனைத்திலும் அரிய துன்பப்**
**பாங்குஇயன்று அரசுகொள்ளப் பலபிணி படச் செய் தானே. 2**

நோயின் கொடுமையும் சூசையின் நோன்மையும்

**மேன்மையே பொருளால்ஆகி, மிக்கவை, இங்கண் உண்டேல்,**
**கோன்மையே மனிதர்க்கு ஆகும்;குன்றும் அஃதுஎன்று, வான்மேல்**
**நோன்மையே அரசுஈந்து, அங்கண், நுண்தகை மேன்மையாகும்**
**பான்மையே, சூசை,புன்கண் பட்டதோர் நிலையிற் கண்டோம். 3**

**வெவ்வினை அனைத்தும் பாவ விளைவுதான்; மீண்டு,அத் துன்பம்,**
**செவ்வினை வளர்வுகாட்டத் திருவுளம்என, நல்லோர்கண்டு,**
**அவ்வினை நுகர்ந்து மாழ்கா, அருந்தவன் தானும், பன்னோய்**
**மொய்வ்வினை கொண்டு,உள் எஞ்சா, முற்றுஇவண் திலதமானான். 4**

---

1. அசடர் - தீயோர். நான்முகத்து - நாலா வழியிலும். எஞ்சா - (துணிவு) குறையாமல். நயத்து — மகிழ்ச்சியோடு. அமைவு - பொறுப்பது. கோல் முகத்து - அம்பு முனைமேல் (விழுந்து). நோய்ப்பால் முகத்து - நோயினால் வரும். அவலம் - துயர்.

2. தீங்கு இயன்றுய - பாவத்தால் வந்த. துன்பப் பாங்கு இயன்று - துன்பத்தின் குணத்திற்கேற்ப நடந்து.

3. மிக்கவை - மிக்க செயல்கள். கோன்மை — அரசு. நோன்மை — பொறுமை. நுண்தகை — அரிய மாட்சி.

4. வெவ்வினை — துன்பம். மாழ்கா - மயங்காததற்கு. உள்எஞ்சா - மனத்தில் தளராமல். திலதம் - திலகம்.

இறைக்கொரு தாதையாக எழுந்துஎலா அறங்கள் பூத்து,
மறைக்கொரு கொழுகொம்பு அன்றன் வருந்தி நோயுற்ற பாலால்,
பொறைக்கொரு நிலைச்சார்புஅல்லால், புலம்பிநாம் எய்தும்பீடை
முறைக்கொரு மருந்துமாகி, முற்று(ம்)நாம் உவப்ப நொந்தான். 5

விரைகிடந்து அலர்ந்த பைம்பூ வெந்தழற் பட்ட தேபோல்,
நரைகிடந்து இரிந்த மூப்பில், நைந்து உடல் தளர்ந்து வாட,
வரைகிடந்து அதிர்ந்து மல்கும் வாரியின் மலிந்த நோய்கள்,
சிரைகிடந்து இழுத்து,என் பெல்லாம் சினங்கொடு குடைவ தாமால். 6

போர் முகத்து அஞ்சா வீரப் புழைக்கையோ? புணரி மோத
நீர் முகத்து அசையாக் குன்றோ? நெடும்பிணி முகத்துஎஞ் சாதான்,
கார்முகத்து அலர்ந்த முல்லைக் காவெனத் திரண்ட பன்னோய்
சேர்முகத்து அலர்ந்து, தேவ திருவுளம் துதித்தல் விள்ளான். 7

சூசை தன்னைத்தானே தேற்றுதல்

தீய்வரும் துகள்கள் வெஃகித் தீயவோ வருந்த லாற்றோம்;
மாய்வரும் புரைதீது அல்லால், வழுவும்–ஒன்று உண்டோ?என்பான்
மீய்வரும் துன்பம் இன்பம் வீற்று வீற்றாகக் கொள்ளார்
ஆய்வரும், திரியாத் தேவ அன்புஉணர் நீரார்–என்பான். 8

பொய்க்கும்–ஓர் இன்பம் மாந்திப் புரையெனும் நஞ்சுஉட் கொண்டால்,
கைக்கும்ஓர் மருந்துஉண் ணுதோ கடுத்தநோய் ஒழியும் என்பான்;
தைக்கும் ஓர் அம்பிற்பீடை, தகைகெட மிகுங்கால், வான்மேல்
மொய்க்கும் ஓர் இன்பம் உள்ளி முற்றெலாம் அவியும் என்பான். 9

முக்குடை நிழலில் யாவும் முற்றும் ஆள் இறைவன், பாரில்
புக்குடைப் புரைகள் தீர்த்துப் பொன்றவே உதித்த பின்னர்,
இக்குடை இன்ப மல்லால், எமக்குஇடர் தகாதுஎன் பாரோ?
மிக்குடைச் செல்வ வல்லோன், விரும்பிய நன்றிது என்பான்.10

5 இறைக்கு - அவதரித்த நாதனுக்கு.

6. விரை - வாசனை. இரிந்த - சாய்ந்த, வரை கிடந்து - மலையினின்று. வாரி - வெள்ளம். சிரை - நரம்பு

7. புழைக்கை - யானை புணரி — கடல். விள்ளான் - விடான்.

8. தீய்வரும் துகள்கள் — தீய பாவங்கள். வெஃகிவிடான் - விரும்பி. மாய்வுஅரும்புரை - ஒழிதற்கரிய பாவம். வழு - கேடு. மீய்வரும் - மேல் நின்று வரும்.

9 உண்ணுதோ ஒழியும் - உண்ணுமல் ஒழியுமோ. உண்ணுது + ஓ வினவிடைச் சொல் பிரித்துக் கூட்டப்பட்டது. தகை - மாட்சி.

10. உடைப் புரைகள் - நம்முடைய பாவங்கள். இக்கு - தேன். இது - இத்துன்பம்.

அத்திறத்து இன்ப மாக அழுங்கிய துன்பம் தாங்கி,
கைத்திறத்து இயற்ற லின்றி, கால்திறத்து இரித லின்றி,
மெய்த்திறத்து உருகி வாடி, மேல்திறத்து ஊக்கம் வாடா
எத்திறத் தாலும் ஒவ்வா இருமையிற் பொலிந்தான் சூசை. 11

வானவர் சூசைக்கு வீட்டின்பம் விளைத்தல்

வரிந்த மாமை உருக் கொடு, வானவர்
இரிந்த ஓகையில், ஏந்திய வீணை வாய்
சொரிந்த ஓதை தொடர்ந்து, இசை பாடலில்
விரிந்த வாம விழா அணி, ஆயதே. 12

ஆடுவார், திரு நாமங்கள் ஆடுவார்;
பாடுவார் பிணியோன் துதி பாடுவார்;
தோடுவார் வெறித் தொங்கலிட்டு ஓடுவார்;
வீடுவார் நயம் செய்குவர், வீடிலார். 13

ஆய இன்பம் அருமை அருந்தவும்,
நேய வண்தவன் நேரிசை பாடவும்,
காய வெந்துயர் காண்ட லனத் துயர்
ஓய, உம்பருள் உம்பனென்று ஆயினன். 14

துனிவரும் துயர், ஆக்கை துகைத்துளி,
நனிவரும் களி, நல்லுயிர் உண்டலான்,
முனிவரும் தழல் மொய்த்துஎரி பாலையில்,
பனிவரும் துணர் பூத்தன பான்மையே. 15

துகைத்த நோய் தணிவும் தொகை யும் படாப்
பகைத்த பான்மை, பணிப்பத மங்கை கண்டு,
உகைத்த ஏவலில், ஓரிரு போது, அது
தகைத்த பின்பு, சினங்கொடு தாக்குமால். 16

---

11. கால்திறத்து - காலால். இருமை - பெருமை.

12 வரிந்த - எழுதப்பட்ட. மாமை - அழகிய. இரிந்த - வந்து தோன்றின. வாமம் — அழகு.

13 ஆடுவார் — ஆடும் வானவர். ஆடுவார் — புகழ்ந்து சொல்வார். பாடுவார் — வருத்தம் செய்யும். தோடுவார் - இதழினின்று எழும். வீடுவார் - வான்வீட்டுக்குரிய. வீடுஇலார் - முடிவில்லாதவராய்

14. காயம் — புண். உம்பன் — வானோன்.

15. துனி — துன்பம். துகைத்துளி — வருத்தும்போது. பனிவரும் துணர் - குளிர்ந்த மலர்கள்.

16. பணிப்பதம் - பொற்பாதம். உகைத்த — செலுத்திய - செய்த. ஏவலில் - பணிவிடையால்.

மரியன்னையின் பணிவிடை

விதுப்படும் பத மென்மலர்ச் சுந்தரி,
மதுப்படும் கொடி வாட்டுஇடர் முற்றற,
பொதுப்படும் தனிக் கோல்,சுதன் போற்றினள்,
புதுப்படும் பனித் தேனுரை போக்கினள். 17

நோய் தணிக்க மகனிடம் வேண்டுதல்

வேண்டும் என்பதும், வேண்டுவது ஆக்கலும்,
யாண்டும் ஒன்றென யாவும் இயற்றிளேய்,
நீண்டு நொந்து,நின் தாதை படுந்துயர்
காண்டு,உளங்கனி யாது கொலோ என்றாள். 18

துவர்க்கும் வெம்பகை யோர்க்குஅருள் சூட்டி,மற்று
எவர்க்கும் நோய்ஒழித்து, இன்னுயிர் ஈய வந்து,
அவர்க்கும் செய்தயை ஈங்குஅளி யாய்கொலோ?
உவர்க்கும் வேலை ஒவ்வா அருளோய்,—என்றாள். 19

அல்லது, 'அன்புடை யாவருக்கு(ம்) ஆகுலம்
நல்லது'என்று இவற்கு இத்துயர் நல்கினேல்,
வல்ல நந்தனே, வந்தஇந் நோய்கள், நான்
புல்ல அன்புடன் ஈகெனப் போற்றினாள். 20

திருமகன் திருவுளம்

மீனில் நின்றுஒளி மேய்முடி யாட்கு,அவன்
வானில் நின்று,இவண் நான்வந்து தேடிய
ஊனில் நின்றுஉறும் துன்ப(ம்) நன் றாயினும்,
தேனின் இன்துயர்ச் செய்தியைக் கேளென்றான். 21

'நோய்அருந்தல் இவற்கென, நொந்துஉடல்
காய முண்டல் எனக்கெனக், கண்டுஉளம்
தீஅருந்தல் உனக்கெனச் சீர்த்த ஓர்
தாய்அருந்தயை சூழ்ச்சி இஃதாம்' என்றான். 22

---

17. விதுப்படும் - இளம் பிறைமேல் ஏந்திய. பொதுப்படும் - பொது வாய் ஆளும். போக்கினள் - செலுத்தினள் - சொன்னாள்.

18. காண்டு — கண்டு. (நீட்டல் விகாரம்)

19. துவர்க்கும் - முதிர்ந்த பகைமைகொண்ட. வேலை - கடல்.

20. நல்கினேல் - நல்கினையேல். நந்தன் - மகன்.

மரியன்னையின் பணிவிடையால் சூசை மகிழ்தல்

இனைய கேட்டலும் தாயே, 'இதுதிரு வுளம்'என இணங்கித்
தனையன் ஏத்தினள், தணியாத் தலைவன்நோய்க்கு இனைந்தழுது ஆற்றுச்
சுனைய தாமரை இருகண் சுட்டெரி அழல்திரள் உண்டது-
அனைய வாடினள், அந்நோய் ஆற்றவும் வருந்தினள்; மாதோ. 23

இனிய தேனினும்,இனிய யாவிலும்இனிய தீஞ்சொல்லைக்
கனிய ஆடுவள், உயிரைக் காத்தமெய் யென,இரு பொழுதே
நனிஅ வாவொடு பிரியா நயந்துசெய் ஏவலால்,உடலை
முனிய வந்தநோய்,முத்தி முற்றுகும் வாழ்வினும் இனிதே. 24

தேன்க லந்ததோ, சுவையிற்சீரிய தெளிந்த பா கதுவோ,
வான்க லந்தநல் லமுதோ, வான்மலர் மதுவதோ, யாதோ,
மீன்க லந்தநீள் முடியாள் விளைந்ததன் அன்பு கூட் டியதோர்
கான்க லந்ததீம் விருந்தைக் கனிவில்எந் நாளும்ஓம் புவளால் 25

தாயுடன் திருமகனும் பணிவிடை செய்தல்

ஆவல் செய் அருள் தாயும், அனைத்தையும் தொக்குளவாக்கிக்,
காவல் செய்திரு மகனும், கண்ணிணைக் காத்தகண் இமைபோல்,
ஓவல் செய்பிணி மாறு உளைந்தமா தவனைக்காத்து, இருவர்
ஏவல் செய்தனர், வானும் இயம்பரும் வியப்புற; மாதோ. 26

எது செல்வஉணவு

உண்டு வாழ்உயிர்க் கெல்லாம் உணவெலாம் அளித்தவன் உண்ண,
பண்டு, தான்உழைத்து உணவுபகுத்தலே செல்வம் என்கேனோ?
வண்து ழாய்க்கரத்து ஏந்தி,வான்தொழும் அரசிடும் உணவு
கொண்டு, தான்உயிர் வாழ்ந்தகொள்கையே செல்வம்-என்கேனோ? 27

நடலை யோடுஅருந் தேவநயங்களும், இன்னணம், மாறுப்
படலை மாலையாய்ப் புணர, பகைப்பிணி சுடச்சுடத் துகைத்த
உடலை வாட்டிய தன்மைத்து, உயிர்எழச் சூசையே,
விடலை யாயின தகுதி விளம்பவோ?-புலமையின் வல்லோர். 28

---

24. கனிய ஆடுவள்-அன்புடன் கூறுபவளாய். முத்தி முற்றுகும் வாழ்வு - மோட்ச வாழ்வு. ஓவல் - ஒவுதல் - முடிதல்.
27. துழாய் - துளசி. செல்வம் - மேன்மை.
28. நடலை - துன்பம் விடலை - தலைவன்.

# 10. தூதுரைப் படலம்

ஒன்பது நாட்கள் வானவர் சூசைமுனிவர்க்கு வானின்பம் தருதல்

நீடிய பிணிகள்எண் வருடம் நீங்கிலா,
வாடிய உடற்கு,உயிர் வாடிலா வளர்ந்து,
ஓடிய மீன்மிதித்து உயர்ந்து, வான்நலம்
சூடிய தன்மையிற் சூசை ஆயினன். 1

கட்புலம் கடந்து,உருக் கடிந்த வானவர்,
உட்புலம் தரும்தகவு ஒத்த மாட்சியான்,
மட்புலம் தணந்துஇனி உரிய வாழ்வுற,
விட்புலம் தணந்தனர், விளிப்ப எய்தினர்; 2

பணிவளர் மாமையில் பளிக்கு மேனிகொண்டு,
அணிவளர் மகரயாழ் ஆதி மற்றையும்
மணிவளர் மலர்க்கையால் தடவி, வாய்க்குரல்,
பிணிவளர் துயர்அறப் பேணிப் பாடுவார். 3

மீமழை பொழிந்தென விண்ணிற் பூத்ததோர்
பூமழை, மணமழை, பொழிநன் னீர்செயும்
தேமழை, துதிமழை, செறிந்த பாடல்செய்
நாமழை, பகல்இரா நயந்து நல்குவார். 4

பத்தாம் நாள் சூசை இறைமையைக் காணுதல்

சுகமுகத்து, இன்னவாய் தொடர்ஒன் பான்பகல்
நிகர் முகத் தாய், வளன், நிகரிலா வயத்து,
அகமுகத்து ஒருமறை வின்றி, அன்றுஒளி
முகமுகத்து, இறைமையை முழுதும் கண்டுளான். 5

---

1. வாடிலா - வாடாமல்.

2. உருக் கடிந்த-உருவில்லாத. உட்புலம் தரும்-மனத்தில் அடைந்த. தகவு ஒத்த - மேன்மையால் (தம்மோடு) ஒத்த. தணந்து - விட்டு. விளிப்ப - அழைக்க.

3. பணி — ஆபரணம். மாமை — அழகு.

5. சுகமுகத்து - இன்பமுகமாய். பகல் — நாள் நிகர் முகத்தாய் - ஒளியின் சிறப்பில். அகமுகத்து - மனத்தின்கண். இறைமை - தேவசுபாவம்-

உரைகடந்து உணர்வரும் இறைமை ஒண்முக
வரைகடந்து ஒழுகு,ஒளி மகிழ்ச்சி நீத்தமுன்
தரை கடந் தென அருந் தவன்குளித்து,எலாக்
கரைகடந்து உறுநயம், கருதும் தன்மையோ? 6

தோடுசெய் கொடிநலோன் துலங்க, நாயகன்,
வீடு செய் நயத்தொடு விரும்பி நோக்கினன்;
சேடு செய் கமலவாய் துளித்த தேனுரைப்
பாடு செய்து, இன்னவை பரிவில் கூறினன் 7

சூசைக்கு ஆண்டவன் உரைத்தவை

உன்னுயிர் தன்னிலும் ஓம்பித் தாய்மகன்
இன்னுயிர் காத்தனை; இனிப் பயன்கொளீஇ
மன்னுயிர் பெறுங்கதி வானில் வந்துறீஇ
நின்னுயிர் வாழ்தலே நீதி யாம்;அரோ. 8

ஆயினும், அரிதின்நீ வளர்த்த ஆண்டகை,
தாயினும் அன்பொடு தரணி காக்குப
வீயினும் அன்றி,மேல் வீடு றுது,உடல்
ஓயினும், நீசெய்வது ஓம்பிக் கேட்டியால். 9

ஈடுஅடைந்(து) அருந்தவம் இயன்ற முந்தையார்,
நீடு அடைந்து உறையும்,என் தயைநிழற்றிய
நாடுஅடைந்து, ‘இறை, இறந்து அளிக்கும் நாளுறீஇ,
வீடுஅடைந்து உவப்பர்’—என்று அருள் விளம்புவாய். 10

உடல் கடிந்து வந்துஉயிர் உறையும் நாடெனு,
மடல் கடிந்து எரிபட வாடும் பூவினை,
அடல் கடிந்து இளைத்த நின் ஆக்கை நீக்கி,இவ்
விடன் கடிந்து, அங்கண்,நீ விரைவில் ஏகுஎன்றான். 11

---

6. இறைமை ஒண்முகம் — தேவ முகமாகிய. வரைகடந்து — மலையினின்று. நீத்தம் - வெள்ளம். தரை கடந்தென — பூவுலகை விட்டதுபோல.

7. தோடுசெய் கொடி — மலர்பூத்த கொடி. சேடுசெய் — அழகிய. தேன்உரைபாடு செய்து — இனிய சொல்லின் முறைமை கொண்டு.

9. வீயினுமன்றி - இறந்தாலன்றி. வீடு உறுது - (ஒருவரும்) மோட்சம் சேரார்.

10. ஈடு - பெருமை. தயை நிழற்றிய நாடு - அருள் நிழலில் வாழும் இடம். ‘லிம்போ’ எனக் கூறப்படும் இடம். இறை - (மனிதனை) கடவுள்

11. மடல் கடிந்து — இதழ்கள் இழந்து.

என்றலோடு, உயிர்தனில் இனிய மைந்தனும்,
மன்றலோடு இயைந்தமா மரியும் நீக்கலே,
பொன்றலோடு உலைக்கினும், பொலிதிரு வுளத்து
ஒன்றலோடு இனிதிலென்று உணர்வில் தேறினான். 12

சூசை திருமகனோடு உரைத்தவை

களிமுகத்து இணங்கி, அன்னான் கடவுளைப் பணியும் வேலை,
வெளிமுகத்து உற்ற காட்சி மின்னென மறைந்து, தானே
ஒளிமுகத்து இலங்கிச் சூழ, உவப்புற மகனும் தாயும்,
அளிமுகத்து இருப்ப நோக்கி, அறைதல்பே றுயிர்ப்போடு உற்றான். 13

ஓர் இயல்பாக உன்னோடு, ஓரென்பான் பணித்த ஏவல்,
பேர் இயல்பு அறிவிற் கண்டாய்; பிரிதலே வேண்டும், இஃதே
சூர் இயல் துன்பத்து எல்லாம் துன்பமாய் வருத்தும், ஆகில்,
சீர் இயல்பு இயற்றும் தேவ திருவுளம், நன்றின் நன்றே. 14

‘மைந்தனே! மைந்தன் என்ப வரம்எனக்கு அளித்தி நீயே;
தந்தநேர் அகன்ற நன்றி தனக்கு,எ(ன்)னால் கைம்மாறு என்னோ?
சிந்துநேர் எனக்குச் செய்த சீர் அளவு, இடுக்கண் யாவும்,
கொந்தல்நேர் விளையக் கொய்தி; கொய்துஅருள் விளைத்தி நல்லோய்! 15

நிந்தை என்றுடைநான் ஓங்க, நிமிர்ந்தவான் வியப்ப,என்னை
‘எந்தை’ என்றனை நீ; உந்தைக்கு இரங்கி,நல் லாசி,தேவ
தந்தை யின்பணியைச் செய்யத் தருதி,என்று அடியில்வீழச்
சிந்தையின் எழுந்தது ஆற்றாத் திருமகன் தாங்கி னானே. 16

சூசை உயிர் விடுங்காட்சி

மூவுலகனைத்தும் தாங்கும் முதல்வன் ஒரு பால், ஓர்பால்
தேவுலகனைத்தும் ஏத்தும் தேவதாய் தாங்க, சூசை
மேவுலகு உள்ளி, யாக்கை விடும் உயிர்தனை,அன் பொன்றே,
பூவுலகு இருத்தி னாற்போல், பூங்கரம் கூப்பி நின்றான். 17

---

12. நீக்கல் - விடுதல். பொன்றலோடு - சாதலினும். உலைக்கினும் - வேதனை செய்தாலும். ஒன்றலோடு - ஒன்றி நிற்பது போன்ற. இனிது இல் - நன்மையில்லை.

13. அளிமுகத்து இருப்ப - களிகூர்ந்திருப்பதை. அறைதல் உற்றான் - சொன்னான்.

14. ஓர் இயல்பாக - ஒரே தேவ சுபாவமாதலால். ஓர் என்பான் - ஒன்றாகிய கடவுள். சூர் - கொடுமை. ஆகில் - ஆயினும். நன்றின் நன்றே- நன்மையினும் நன்மையே.

15. நேர் அகன்ற - நிகராத. சீர் அளவு - செல்வங்களின் அளவு. கொந்தல் நேர் - சினத்தோடு. கொய்தி-பலனைக் கொண்டாய் சிந்து-ஆறு.

16. நிந்தை என்று(ம்) உடை — என்றும் இகழ்ச்சியையுடைய.

"பன்னலால் நிகராவண்ணம் பயன்உ(ன்)னால் பெற்றேன் நானே;
மின்னவாய், உனக்குஈங்கு என்னால் விளைந்தபல் கசடுஉண் டாமே;
தின்னலால் பொறுப்பார் யாரே? நீத்துஇவை, அருளின் ஆர்வம்
உன்னலால், ஆசிசெய்க" என்று உயர்தவன் தொழுது நின்றான். 18

இருவரும் இருபால்ஆசி யிட்டு,அருள் உரையில் தேற்ற,
உருவரும் வானோர் சூழ, ஒலிக்குழ லிசையிற் பாடி,
மருவரும் மலரைச் சிந்தி, வயவையில் விளித்து, முன்ன,
திருவரும் ஆக்கை நீக்கித் தெள்ளுயிர் போயிற்று; அம்மா. 19

கல்லறையில் அடக்குதல்

மெய்யிலார் நாட்டில் தூது விளம்பமெய் உயிர்விட்டு ஏகிப்
பொய்யிலா உயிராய், அன்புஉள் புக்கெனக் கிடந்த யாக்கை,
மையிலா மலர்ந்த கொம்போ, வரைந்தநற் படமோ, தோன்றி
நையிலாத் துயில் கொண்டென்ன நளிஒளி வீசிற்று; அம்மா. 20

விதுவளர் பதநல் லாளும், விண்வளர் அரசர் கோனும்,
பொதுவளர் முறைமேல், அன்ன பூட்சியைப் பேணி, வானோர்
சதுவளர் அணியிற் சூழ்ந்து, தனிவளர் புகழ்ச்சி பாடி,
மதுவளர் மலரைச் சிந்தி மலர்வனத்து அடக்கினாரே. 21

திருமகன் பூமிக்கு இட்ட கட்டளை

'தூதுற உயிர்போய் மீண்டு தோன்றளவு உடலை, பூவே!
பாதுறக் காமின்' என்னப் பரமனே பகர்ந்த ஆசி
காதுற, மகிழ்ந்தபூமி, கைக்கொண்ட நன்றி மூட,
போதுற விரித்த பைம்பூம் போர்வை,மேல் போர்த்த தன்றே. 22

சூசையின் உயிர், பிதாக்கள் வாழ்ந்த அருள்நிறை நாடுசெல்லுதல்

மடல்க டிந்த நருமது வாகையான்,
உடல்க டிந்து,உட லம்கடிந் தோர்இடை,
கடல்க டிந்துக னிந்தசொற் கூற,மெய்
அடல்க டிந்த,தன் ஆவியோடு எய்தினான். 23

---

18. பன்னலால் - சொல்லுவதற்கு நிகராவண்ணம் - ஒப்புக் கடந்த கசடு - குறை. ஆர்வம் உன்னலால் — அன்பை நினைத்து.
19. வயவையில் - வழியில். முன்ன - முன்னேபோக
20. மெய்யிலார் நாடு: 'லிம்போ' என்னும் இடம். மெய் உயிர் விட்டு ஏகி - மெய்விட்டு உயிர் ஏகி; மைஇலா - மாசிலா. நையிலா - வருத்தமின்றி. நளி - குளிர்ந்த.
21. விது - பிறை. பூட்சி - உடல். சதுவளர் அணியில் - சதுரப்பட வகுத்த அணிகளாக.
22. பூவே - பூமியே. காது உற - காதினுட்படவே. நன்றி - நன்மை.
23. மடல் கடிந்து - இதழினின்று ஒழுகும். உடல் கடிந்து - உடலின்றி. கடல் கடிந்து கனிந்த - அமிர்தக் கடலினும் இனிய. மெய்அடல்கடிந்து - உடலின் வலிமை இல்லாத.

நிந்தை ஆகுலம் நீத்து,அற நீர்மையால்
தந்தை யாம்இறை தாழ்விலா தாள்தொழுது,
எந்தை யால் கதி எய்துப, நம்பிய
முந்தை யார் உறை முற்றருள் நாடதே. 24

மையி ழந்து, மயக்கம்–இ ழந்து, அவாப்
பொய்யி ழந்து, புரைகள்–இ ழந்து,தோற்
பையிழந்து, உறு பாடும் இழந்து,அருள்
மெய்யிழந்திலர் வேய்ந்துஉறை நாடதே. 25

காட்டும் ஆசை களிப்புற, நாதன்ஆங்கு
ஈட்டு(ம்)நன்றி இசைப்பது பாலதோ?
பேட்ட வீடு,அவர் பெற்றில ராயினும்,
வீட்டு வாயில் எனு மிளிர் நாடதே. 26

அன்ன நாட்டை அன் னுன் அடைந் தாங்கு,மீன்
மின்ன, மீன் அரசுற்று இடை வேய்ந்தென,
மன்ன மாதவ ருடு வயங்கினுன்;
சொன்ன மாமறை சூட்டு,உளத் தூயினுன். 27

புக்குஅ டைந்த பொலிந்த அந் நாட்டிடை,
மிக்குஅ டைந்த நலோர் வியப் புற்றெழ,
சொக்குஅ டைந்த உருக்கொடு தோன்றினுன்—
இக்குஅ டைந்த இளந் துணர் வாகையான். 28

ஆங்கிருந்த தவத்தோர் இன்பம்

“மட்பு லம் தவிர் நாம் களி மாந்திட,
கட் புலம் தவிர் தன் கவின் காட்ட,ஈங்கு
எட் புலம் தவிர் சாந்தியோடு எய்தினேன்,
விட்பு லம் தவிர் விண்ணவ னே?”என்பார். 29

---

24. அறம் நீர்மையால் - அறத்தின் தன்மையால். தாழ்விலா - தாழ்வின்றி. எந்தையால் - எந்தையாகிய திருக்குமாரனுல்.

25. மை இழந்து - இருளின்றி. புரைகள் - பாவம். தோற்பை - உடல். அருள் மெய் - தேவ அருள் உண்மையை.

26. பேட்ட - விரும்பின.

27. மீன் அரசு - சந்திரன். தூயினுன் - தூயவன்.

28. இக்கு அடைந்த - தேன் நிரம்பிய.

29. எள் புலம் தவிர் - இகழ்ச்சியைக் கடந்த, மாசில்லாத.

"ஆதி ஈறில நாயகன், அம்புவி
மீதில் ஈறுஉயி ராக விளிந்து, ஒரு
தீதி லாக் கதி வாயில் திறந்த பின்,
ஏதில் நாம் அடை மாட்சி இதோ —என்பார். 30

"ஆயி னான்உல கத்தை அளித்தபின்,
தா யின்ஆர் அருள் தாங்கிய தன்மையான்,
மீயின்நாம் கதி வீட்டுளமைச் சேர்த்திடத்
தூயி னான் அடை தோற்றம் இதோ? என்பார். 31

ஐயம் தோன்றும் மனத்துஅயர்வு அற்றிட,
சையம் தோற்றிய தோள்தவழ் தாரினான்,
துய்யம் தோடுஅவிழ் பூங்கொடி சுட்டுபு,
மையம் தோன்றி,இவ் வாயுரை போக்கினான். 32

'தாதன் அனுப்பிய தூதன் நான்' எனச் சூசை கூறுதல்

"வையத்தார் கசடழித்து வழுவின்றி மன்னுயிர்கள்
உய்யத்,தான் மனுவாய உயர்கடவுள், உமக்கின்பம்
செய்யத்தான் இன்றுஇங்கண் செலுத்தியதோர் தூது அடியேன்;
அய்யத்தால் ஆசையதால் அயர்வுண்ட அறவோரே! 33

"தூயாக மறைவடிவாய்த் தொக்கிணை வெல் மாட்சிமையாள்,
தாயாக கன்னியுமாய்த் தாரணிமேல் அரிதுஈன்ற
சேயாக எம் இறையோன் சென்று,ஐயைந்து ஓர் ஆண்டாய்,
தீயாக வருத்து(ம்)வினை தீர்த்திடும்நாள், நண்ணியதே". 34

"அன்னவட்கே மணத்துணையாய், அன்னவள் ஆங்கு இனிதுஉயிர்த்த
மன்னவற்கே கைத்தாதை வரமுளனாய், ஈங்குஅடியேன்,
இன்னவற்கே தூதுற்றேன்; இந்நாளும் சிறைநீங்கிப்
பின்னவற்கே வீட்டில் துணை பெரிதுஉவப்பீர் இனி"என்றான். 35

---

30. விளிந்து - இறந்து.

31. மீயின் — மேலே.

32. சையம் — மலை. துய் — தூய. மையம் தோன்றி - நடுவே நின்று.

34. தூய் ஆகம் - தூய மனத்தில். தொக்க இணை - கூடிய ஒப்பு- ஒப்பெல்லாம்.

35. துணை - துணைவராக.

அனைவரும் சூசையை வணங்கிக் கூறியவை

தேன்பொதுளும் கனிதீஞ்சொல் தெளிபயன் கேட்டு, அவன்ஏந்தும்
கான்பொதுளும் மலர் வாகை கண்டுண்ட நயம்பெருகி,
ஊன்பொதுளும் குலத்துஇம் மாண்பு உண்டோ என்று உளம் வியப்ப
வான்பொதுளும் வரத்தோனை வணங்கிநின்றார் ஒருங்கு அன்னார். 36

"ஆரணனே, ஆரணம்சேர் கொழுகொம்பே, அரிதுஉவப்பக்
காரணனே கண்டுஅணைத்த கைத்தாதையே,அருளாற்
பூரணனே, நாம் விழைந்த பொழுது அடைந்தாய்;இன்பம்மலி
வாரணனே தவத்துஆசைக் கரைகண்டாய், வரத்தவனே!" 37

"முக்காலம் காட்டும்–ஒளி முகவிளக்காம் தவத்தொடு,நாம்
அக்காலம் காண் மறைவில், ஆங்குஉரைத்த நாதனை,நீ
இக்காலம் காட்டினையே, ஏந்தினையே, வளர்த்தனையே,
மெய்க்காலம் காட்டியவான் வேந்தன் இயல் விளம்பு"என்றார். 38

சூசை, அவதரித்த நாதன் இயல்பைக் கூறுதல்

கோட்பதுஅரும் குணத்து இறையோன், குணக்குஒளிபோல் நிலத்துஉதித்து
வேட்பதுஅரும் தயைபுரிந்து, விளங்கு(ம்)நிலை யாதென்னக்
கேட்பது அரும் வினை கேட்டீர் கெழுந்தவரே என்றான்;பின்
மீட்பது அரும் சொல் தொடுத்தான் விம்மிதக் கற்பு உளத் தூயான். 39

நோயொக்கு மவர்க்கு இன்பம் நுனித்த உயிர் மருந்து ஒக்கும்;
தீயொக்கும் புரையார்க்கே சீதமொக்கும் புயலொக்கும்;
வீயொக்கும் வடிவத்தால்; வியன்தயையால் கடலொக்கும்;
தாயொக்கும், தாதையொக்கும், சகத்துஎங்கும்–அத்திருவோன். 40

மீனொக்கப் பாவ இருள் விலக,மிளிர் விழி கொண்டான்;
கானொக்க மறை உமிழக் கமழ் கமல வாய்கொண்டான்;
தேனொக்கத் துயர்க் கைப்பு சிதைப்ப, இனிது உரைகொண்டான்;
வானொக்கக் கவின் காட்ட மலர்வதன நலம்கொண்டான். 41

---

36. ஊன் பொதுளும் குலத்து — மனுக்குலத்து.

38. காண் மறைவில் — கண்ட மறைவோடு.

39. கோட்பது அரும் — வளையப்படாத.

40. சீதம் ஒக்கும் — குளிர் படப் பெய்யும். வீ — மலர்முகை.

41. கான் ஒக்க — வாசனை பொருந்த. மறை — வேத நூல். துயர்க் கைப்பு — கசக்கும் துயர்.

தீது ஒருங்கும் மலிபு அறியாத் தினை அருளார் நெஞ்சத்தான்,
கோது ஒருங்கும் குறையொருங்கும் குறைத்து ஒழிக்கும் புயற்கரத்தான்,
நீது ஒருங்கும் தோற்றுவிக்கும் நெறிவழுவா அறப்பதத்தான்,
வாது ஒருங்கும் சிதைத்து,அலகை வெல் நாம வயவேலான். 42

அருள்விஞ்சிப் பகைவெள்ளம் அறக் கடந்தான்; மறை ஓதும்
தெருள்விஞ்சிச் செயிர்ப்புகையால் தேக்கியதீது இருள் கடந்தான்;
பொருள்விஞ்சிப் பொங்குபுரைப் புணரி,இரந்து, அவன் கடந்தான்;
மருள்விஞ்சிப் பெருகு(ம்)நசை மடுக்கடந்தான்—தவமிக்கான். 43

"என்உரைப் பதுஇனி யானே; எந்தைமனு வாயுளி,நீர்
முன் உரைப்ப எடுத்தநிலை முற்று,ஒழித்தான் கடந்து,என்றால்,
பின்உரைப்பது எவனுண்டோ? பெருந்தவரே" என்றான்—சூழ்
பின்னுரைப்ப ஒளிஎறிக்கும் மெய்ச்சுருதி விளக்கன்னோன். 44

அன்னம்மாள், தன் மகள் ஈன்ற திருமகனைப் பற்றிக் கேட்டல்

பேர்நல மணிக்குன்று உச்சியிற் பெயர்ந்து
பெருகிவீழ் வெள்ளமொத்து, அன்னோன்
சீர்நலத்து உரைத்த திவ்விய மதுர
சீரிய தேனுரை கேட்டாங்கு,
ஆர்நலத் தவத்தோர் களிப்புறீஇ நிற்ப,
அன்புமிக்கு, 'என்மகள் ஈன்ற
ஏர்நல புதல்வற்கு உற்றவை அறைதி'
என்றனள் — அன்னமை என்பாள். 45

சூசை, திருமகன் பிறப்பு முதல் இனி அடையவிருக்கும் சிலுவை மரணம் வரையிற் கூறுதல்

நனைவரும் கொடியோன், இவ்வுரை கேட்டு,
நசைகொள்—தாய் மகிழ,மற்று அங்கண்
அனைவரும் உவப்ப, கன்னிமை முகையோடு,
அங்கனி கனிந்தென, மரியே,
புனைவரும் கன்னி தாய்வரத்து இசைப்ப,
புகழ்வரும் தேவசூல் கொண்டு,
வினைவரும் ஐய முற்றவாறு(ம்) அதனை
விட்டவாறு(ம்) ஒருங்கெலாம் உரைத்தான். 46

---

42. தீது ஒருங்கு — தீவினையாவிலும். மலிபு அறியா - (தன் கருணையின் அளவு) மிகுதியை அறியாத. கோது ஒருங்கும் — குற்றங்கள் யாவையும். நீது — நீதி. வாது — வாதனை — துன்பம்.

43. நசை மடு — ஆசையென்னும் நீர்நிலை.

44. முன் உரைப்ப — முன் உரைத்தபடி. எடுத்த நிலை முற்று — கொண்ட தன்மை எல்லாவற்றையும். கடந்து ஒழித்தான் — மேற்படச் செய்தான்.

46. வரத்து இசைப்ப — வரத்தினைப் பெற்று.

ஆவலர் உறவோர் அகற்றலில், வெளிமேய்ந்(த)
    ஆவடை குகையிடத்து, இறைவன்,
காவலர் தன்மைத்து அமரர்சூழ் நிற்ப,
    கங்குலிற் பிறந்தன வாறும்,
கோவலர் காணக் குழீயின வாறும்,
    கோக்கணம் இறைஞ்சிய வாறும்,
பாவலர் வாழ்த்திப் பலர்பழித்து, அங்கண்
    பழிபகை முற்றிய வாறும். 47

கொள்வினை வெருவில் புழுங்கிய அரசன்,
    கொடும்பகைக்கு அஞ்சிய பாலால்,
இன்வினை நாடும் இனமு(ம்)நீத்து இழந்தே
    எசித்திடத்து எய்திய வாறும்,
பொன்வினை சிறப்பிற் கோயிலும் உருவும்,
    பொய்வினை தேவரோடு, அங்கண்
மின்வினை ஒளிசெய் திருமகன் முகத்தில்
    வீழ்ந்து, ஒருங்கு ஒழிந்தன வாறும். 48

ஒளிவளர் பிறைபோல் வளர்ந்தவன், மலர்த்தாள்
    ஊன்றிமுன் நடந்தன வாறும்,
களிவளர் உவப்பில்,எம்வினை தீரக்
    கனிந்தசொல் தொடங்கிய வாறும்,
வளிவளர் ஆடி ஏழுபோய், மீண்டு
    வந்துநாடு அடைந்தன வாறும்,
தெளிவளர் உரையில் இனையவும் பலவும்
    செழுந்தவன் செப்பி, மீண்டு உரைத்தான். 49

மணிக்கலத்து அமிர்தம் ஏந்திய நெஞ்சான்,
    வையகத்து இயற்றிய யாவும்,
பணிக்கலத்து உரைப்பது என்இனி யானே?
    பகர்வதும் செய்வதும் ஒருங்கே
அணிக்கலத்து இருமா மணியெனத் தயையும்
    அன்புமாய் ஒருப்படத் 'தானே
பிணிக்கலத்து எடுத்த உடலொன்றே, எல்லாப்
    பிறர்உயிர்க்கு உயிர்'எனக் கொண்டான். 50

---

47. ஆவலர் — நண்பர்.
48. கொள்வினை வெருவில் — வினைக் கொண்ட பயத்தால்.
49. ஆடி : இங்கு, வருடத்தைக் குறித்து நின்றது.
50. பிணிக்கலத்து — துன்பமுறையால். தன் துன்ப உடலை எல்லோருடைய உயிருக்கும் உயிராக்கினன் இறைவன்.

"ஓர்மரக்கனியால் வந்த தீது அகற்றி,
ஒருங்கு மன்னுயிரெலாம் உவப்ப,
பேர்மரத்து இறத்தல் வேண்டு,மென்று அதுவே
பெறற்கரு நலம் தனக்கு என, நோய்
கூர்மரச் சிலுவை, தனக்கொர்செங் கோலே,
கொலுவதே, அமளியே" என்று,
சூர்மரத்து உயர்,தான், இளமையில் தொடங்கிச்
சுகமெனத் துயில்கொள்வான்; அம்மா. 51

ஆங்குளோர் அனைவரும் திருமகனை நினைத்துத் துதித்தல்

தன்னுயிர் தனிலும், 'தமர்'என, மக்கள்,
தகுதியை மேவிய அன்பால்,
மன்னுயிர் உய்ந்தா லொழிய, ஆங்கு ஒழியா,
வருத்தமே தனக்கென நசைகொண்டு,
இன்னுயிர் மெலிய இரங்கிய தன்மைத்து,
எல்லையொன்று இல்லதும் அல்லால்,
உன்னுயிர் வருந்த உரைப்ப தேது? என்ன,
உள்ளத்தில் நைந்து, அருந்தவன் நொந்தான். 52

என்றான்—மென்தாது ஏந்திய கையான்; இவையெல்லாம்;
சென்றுஆங்கு உண்டாம் மாண்பினர் கேட்பத் தெளிவுண்டார்,
பின்றா அன்பால் யாரும் இரங்கப் பெரிதுஏங்கி
நின்றார்; ஒன்றாய் ஆர்புகழ்மாலை நிறை சொன்னார். 53

தன்நே ரில்லான் தன்வய னாகி, தனிவல்லோன்,
முன்நே ரில்லான், கார ணனாகி, முழுதுஒன்றாய்ப்
பின்நே ரில்லான், தான்மனு வாகிப் பெரிது ஏங்க
என்நேர் ஆனா னோ?அருள் நாளோ—இதுஎன்பார். 54

தன்பால், எல்லா நன்றுள னாகித் தகைவல்லோன்,
பின்பால் இல்லாது ஏதுஉளது உண்டோ, பெற அஃதை,
என்பால் எல்லா நோயுள னாகி, இவண் எய்தான்
அன்பால், எல்லா ஒப்பில னாய அரசென்பார். 55

---

52. தமர் — தம் உறவினர். தகுதியை - மோட்சத்துக்குத் தகுதியாதலை.

53. மாண்பினர் - பெருமையோர். தெளிவுண்டார் — தெளிவடைந்தவராய்.

54. நேர் இல்லான் - உவமையில்லாதவன். தன்வயன் ஆகி - தன்னால் தான் ஆகி. முன் நேரில்லான் — முன்பு (மற்றொருவன்) உடன்பாடின்றி. என்நேர் — எனக்கு நிகர். அருள் நாளோ — அருள் தொழிலை முடிக்கும் நாளோ.

55. தகை வல்லோன் — பெருமையோன். பின்பால் இல்லாது - பின்பு தனக்கில்லாதது. என்பு - உடல் - (ஆகுபெயர்). எய்தான் - அடைந்தான்.

வாழ நாமும், தான்அழு வானோ? வளர்நீள் நாள்
மூள நாமும், தான்மடி வானோ? முழுமுந்நீர்
ஆழ நாமும், தாழ்ந்துறின், எந்தை அருளாழி
சூழ யாருண் டோ?இதில் உண்டோ துறை யென்பார். 56

'எல்லை இல்லை என்றவன் அன்பிற்கு இணைகூற
வல்லை இல்லை' என்றது, பொய்யோ? 'வசைமண்ணர்,
தொல்லை இல்லை, என்றுஉள நாளும் தொடர் தீது,ஒப்பு
இல்லை இல்லை' என்றது,பொய்யோ? இதுவென்பார். 57

அன்பிற்கு உண்டோ மாத்திரை யாக அளவு?எம்பால்
முன்பிற்கு உண்டோ ஓர்பயன்? வானுள் முதல்வற்கே
என்பிற்கு உண்டோ வெஃகும்-ஓர் நன்றி? இவையாகிப்
பின்பிற்கு, உண்டோ மானிடர் ஆசை பெற-என்பார். 58

அணியே, அன்பே, அன்பது சிந்தே, அருள் வேந்தே,
மணியே, உன்பேர் ஆர்வம் நிகர்ப்ப வ(ல்)லர் உண்டோ?
பிணியே கொண்டாய் பேராசு ஆகி, மனிதர்க்கே
பணியே நின்றாய், உன்தயை ஈதோ பரிசென்பார். 59

இவ்வாய், எஞ்சா நாள்தொறும் அன்னார் இசைபாடி,
மெய்வாய் வல்லோன் சூளை உரைப்ப, விழைவு ஓங்கி,
உவ்வாய் இன்னு நீங்கிய மிக்கோர், உருகு உள்ளச்
செவ்வாய் துய்த்த திவ்விய இன்பம், திதிவிள்ளா. 60

---

56. சூழ — ஆராய.

57. வல்லை — வல்லமை. மண்ணர் — மனிதர். தொல்லைஇல்லை — முன்னுள் மட்டுமன்று. என்று உள நாளும் — உள்ள நாள் முழுவதும்.

58. முன்பிற்கு - முன்பு. வெஃகும் - விரும்பத்தகும். என்புக்கு - எடுத்த உடலுக்கு

59. சிந்து - கடல்.

60. இவ்வாய்-இங்ஙனம். உவ்வாய் - உவவுஆய் - தவம்செய்து. திதி விள்ளா - நிலைபெறுதல் மாறுது.

# 11. உத்தானப் படலம்

*தேவதிருக்குமரன் தன் திருமறையைப் போதித்த முறை*

இன்னவை, அங்கணில் இனிதில் ஆகையில்,
உன்னவை உன்னிய உரிமைத்து ஆக்கினேன்,
பன்னவை பயத்தபேய் பகைத்த மன்னுயிர்
துன்னவை யாவையும் துடைத்தல் ஓர்ந்துளான். 1

*தான் தவநெறியில் நிற்றல்*

நனைவரும் சண்பக நறு நிழற்கு இணை
அனைவரும் குளிர்பட, அருள் நிழற்றினேன்,
புனைவரும் துணிவொடு புவிபுரந்திட,
நினைவரும் தவம் வழா நெறிநின்றான்; அரோ. 2

திடம் துதைந்(த) அருமறை தெளித்த நூற்படி
நடந்து, முன் அறநெறி நல்கிப் பூமதுக்
கடந்து, பின் இனியவை கனிய ஓதுவான்—
கிடந்து மின் பிழம்பு உகக் கிளர்த்த காட்சியான். 3

*'கடவுள் ஒருவரே, பலரை வணங்கற்க' எனல்*

செய்வினை உரைவினை திரிபிலாச்செயிர்
கொய்வினை ஆகையில், குறுங்கு இங்கு உய்த்த, பல்
பொய்வினை அனைத்தையும் போக்கி, யாண்டையும்
மெய்வினை உணர்த்துவான்—மெய்யின் காணியான். 4

ஒப்பிலான் ஒரென்பான் என்று உணர்கிலா,
துப்பிலாத் தேவரைத் தொழுதல், அந்தகற்கு,
அப்பில்ஆழ்ந்(த) அந்தகன் துணை அமைந்தெனத்
தப்பிலா வழு, இவர் தவிர்க்குமோ? என்பான். 5

---

1. உன்னவை — நினைத்தவை. பல் நவை பயத்த — பல தீவினைகளை விளைவிக்கும். துன் நவை — அடையும் பாவங்கள்.

3. திடம் துதைந்த — உறுதி நிறைந்த. மின் பிழம்பு உகும் — மின் திரளை உகுக்கும். கிளர்த்த — மிகுந்த.

5. அப்பில் — நீரில்.

மின்னுரைத்து இழைத்தபொற் கோயில் வேய்ந்தினும்
கொன்னுரைத் தன உருக் கொள்கைத் தெய்வமோ?
பொன்னுரைத்து ஒளிபடப் புனைந்த பாவைகள்,
என்,உரைத் திடுவதோர் இயல்பு உண் டோ? என்பான். 6

உலகிடத்து, ஓரென்பான் உரைத்த நூற்படி,
விலகிடப் பளகுஎலாம் விலகி, ஈரறம்
இலகிடத்து, இடர்அறுத்து இயலும் நற்பயன்
அலகிடத் தகுதியை அறிவர் யார்? என்பான். 7

ஈகை - புகழ் - பணிவு பற்றிய போதனைகள்

மருள்வரும் நசை,பிறர் பொருளில் வைத்திடாது,
அருள்வரும் முகத்தில்,தன் பொருள்அ ளித்தலே
பொருள்வரும் வழியெனப் புயலின் வான்கொடை
தெருள்வரும் அறிவுளார், திருத்துவார் என்பான். 8

'அறத்தினால் வருவதே இன்பம்; அல்லதோர்
மறத்தினால் வசைவரும்' அன்றி, வான்நெறிப்
புறத்தின்ஆம் என்று,தான் புகன்ற வேதநூல்
திறத்தினால், உளத்துஇருள் சிதைப்ப ஓதுவான். 9

"கள்வரும், பொருள்தகாக் கடந்த சொற்புகழ்
கொள்வரும் அனையவர்; கொண்ட அப்புகழ்,
எள்வரும் இழிவதே; இயன்ற தாழ்ச்சியால்
ஒள்வரும் புகழ்"என்பான் உலகில் ஓரென்பான். 10

'இக்கெனப் பொருள்ஒளி இன்பம் மூன்றுமே
புக்கெனப் புரையெலாம் புவி புகுந்தன
மிக்கு'-எனத் துடைத்து,அவை வெல்லு வான், பொறை
சிக்கெனத் தாங்கி,எம் செயிரைத் தாங்கினான். 11

வென்றியும் குனித்தனன்; வென்றி வாளொடு
பின்றையும் உள,பல பெரும்ப டைக்கலம்
இன்றியும், பொறுத்தலோடு இகல்வெல் லப்,பொறை
ஒன்றையும் தாங்கினான்—உலகம் தாங்கினான். 12

6. வேய்ந்தினும் — பொருந்தினாலும். கொன் உரைத்தன உரு — வீணாய் மெருகிட்ட உருவங்கள்.
7. விலகிடத்து — விலக வேண்டிய இடத்து. பளகு — குற்றம்.
8. திருத்துவார் — செம்மையாய்ச் செய்வர்.
10. பொருள் தகா — உண்மைக்குப் பொருந்தாத. அனையவர் - ஒப்பர்.
11. இக்கு என — இனிமையோடு. ஒளி—புகழ்.
12. குனித்தனன் — நினைத்தான். பின்றையும் — மற்றுமுள்ள.

தீய்வரும் இகழ்ச்சியைச் சிந்தி யாப் பிரான்,
தாய்வரும் அருளினால், தரணி எங்கணும்
போய்வரும் துயர்அறப் புதுமை ஆக்கி,உள்
காய்வரும் குளிர்ப்பவே கருணை காட்டுவான். 13

கண்தரும், கரம்தரும், செல்லக் கால்தரும்,
உண்தரும், களிதரும் உயிர்த ரும்,தரும்
பண்டுஅரும் துயர்கள்நோய் பலவை தீர்வரும்,
மண்டுஅருந் தயைநலம் வழங்கத் தந்துளான். 14

பொறுமையை அணிகலனாகக் கொண்டு இரட்சணிய வேலையைத் தொடங்குதல்

தந்தநன்று எவர்க்குமாய், தனக்கு யாவரும்
அந்தமொன்று இலா,மலி அல்லல் ஆக்கலும்,
வந்ததன் துய்ரெலாம் மனத்துஎண் ணுப், பொறைக்
கந்தளம் தரித்தனன்—கருணை வேலையான். 15

புரைசெயும் தன்துயர் பொறுத்து, நொந்திலான்,
'உரைசெயும் நெறியுரு உயிரைத் தீநரகு
இரைசெயும் பாவம்என்று இரங்கி, விம்முவான் —
கரைசெயும் கடல்இணை கடந்த அன்பினன். 16

''நக்கும்ஓர் சிறுசுவை நச்சி, நீங்கலாச்
சிக்கும்ஓர் நிறைதுயர் சிந்திப் பாரிலா
தக்கும்ஓர் அறிவில, தரணி கெட்டது''என்று,
ஒக்கும்ஓர் இணையிலான், உளைந்துஇ ரங்குவான். 17

"தீதுஅளித்து ஓச்சிய தீய கோன்மையால்
கோதுஅளித்து உயிருணும் குணுங்கை வெல்லவும்,
நீதுஅளித்து எரிந்தநின் வெகுளி நீக்கவும்,
ஏதுஅளித்து இயற்றுவேன்? என்பிதா!"என்றான். 18

"முற்பழி ஒளித்து,நின் முனிவை ஆற்றிட,
தற்பழி இலாப்பலி, தரணி மீது இலாது,
அற்(ப)அழிவு இலாதஎன் உயிர் அளித்து,யான்,
தொல்பழி, பிதா!இதோ துடைக்கு வேன்"— என்றான். 19

---

14. மண்டு — மிக்க.
15. கந்தளம் — கவசம்.
16. உரை செயும் நெறி உரு - சொன்ன நன்னெறி ஒழுகாத.
17. தக்கும் — பயனுள்ள.
18. நீது அளித்து — நீதியின்படி அமைந்து.
19. தன் பழியிலா-தன்னிடம் குற்றமில்லாத. இலாது-இல்லாமையால்.

பிதாவின் திரு வுள்ளம்

என்றனன், கடல்நீர் வெள்ளத்து இளை கடந்து,அரிய அன்பால்;
'நன்று'எனப் பிதாவும் என்றான்; நரதுவத்து இறைமை சேர்த்தி,
நின்றன நாய்கன்,செந்நீர் நீத்தமாய்ச் சிந்தித் தானே
சென்றன உலகின் மாசு தீர்த்து,அறக் கழுவல் நேர்ந்தான். 20

கலையினால் அளக்க லாற்றாக் கசடெலாம் ஒருங்கு தீர்ப்ப,
கொலையினால் உயிரைச் சிந்தா, கூறும்ஓர் உரைசால் பேணும்,
விலையினால் உயர்,வான் வீட்டு விழுப்பமே எவர்க்கும் காட்ட,
அலையினால் உவமி யாத அலக்கணுற்று, இறத்தல் நேர்ந்தான். 21

பேய்கள் இரட்சகருக்குப் பகை உண்டாக்குதல்

இத்திறத்து இறைவன் நேர்ந்த இயல்பிதென்று அறிந்த பேய்கள்,
மைத்திறத்து உடன்ற வஞ்சம், மறப்பகை, இவன்மேல் தீயோர்
கைத்திறத்து இயற்றல் உள்ளி, காய்தழல் தூண்டி னாற்போல்
அத்திறத் தினரை ஏவி, அரும்பகை முற்றிற் றன்றே. 22

இரட்சகர் பகைவரால் குருதி சிந்தி மரித்தல்

கண்கிழித்து ஒழுகச் செந்தீக் கதத்தினர் அடித்த பாலால்,
விண்கிழித்து ஒழுகு மாரி விதப்பென, எந்தை யாக்கை
புண்கிழித்து ஒழுகும் செந்நீர், புரைவினை மலங்கள் தீர்ப்ப,
மண்கிழித்து ஒழுகும் வெள்ளம் மலிவொடு ஆங்குஒழுகிற் றன்றே. 23

கடுமரத்து இழிந்த நஞ்சு,உள் கடுத்துஅடும் வினையைக் காக்க
நெடுமரத்து இழிந்த தேவ நிலமருந்து உரிய தென்ன,
வடுமரக் கனியால் மாக்கட்கு அமைந்ததொல் பழியை,எந்தை
கொடுமரத்து அறையுண்டு எம்மைக் குணித்து,இறந்து ஒருங்கு தீர்த்தான். 24

'மக்கள்,தம் கடன்கள் தீர்ப்ப வயமிலார்' என்ன, நாதன்
திக்குஅடங் கலும்உள் கூச, திளைத்தஅக் கடன்மேல் போட்டு,
மிக்குஅடங் கில அன்பால்,தான் மெய்யொடு மகனாய்,இங்கண்
புக்கு,அடங் கிலநோய் இவ்வாய் பொறுத்து,எமை உள்ளி மாய்ந்தான். 25

---

20. நரதுவம் — மனுத்துவம். அற — முற்றிலும்.

23. கதத்தினர் — கோபங்கொண்ட பாவிகள். மாரி விதப்பு என — மழைத்தாரையாக. விதப்பு — மிகுதி. புரைவினை — தீவினை.

25. வயம் — வல்லமை. இவ்வாய் — இம்முறையில்.

எம்சிறை ஒழித்துத் தான்தன் இன்னுயிர் தந்து,யாக்கை
அம்சிறை ஒழித்து வாய்ந்த ஆவியால், முந்தை யோர்கள்
தம்சிறை ஒழித்து, வீட்டின் வளம்தர அருள் ஓர்ந்து, ஆசை
விஞ்சு இறை யவன்,தன் தூது விளம்பிய நிலையிற் போனன். 26

முற்பிதாக்கள் (பரிசுத்த ஆன்மாக்கள்) வாழ்ந்த இடம் செல்லுதல்

பால்நலம் ஒழித்துஅமரர் பாவிசைகள் பாட,
தேன்நலம் ஒழித்தபெரும் இன்பம்,முனர் செல்ல,
மீன்நலம் ஒழித்துஇரவி எஞ்சஒளி விஞ்ச,
கால்நலம் ஒழித்தஇறை யோன்,கடிது அடைந்தான். 27

முற்பிதாக்களுக்கு மோட்சதரிசனம் தருதல்

இருள்பொதிர் இராஉணா விளங்குஇரவி போன்றே,
மருள்பொதிர் அவாஅமர் மனத்துஒளி, வயங்க,
தெருள்பொதிர் முகத்தில்,திரு ஆசியுரை செய்தே,
அருள்பொதிர் கதிக்குரிய காட்சியை அளித்தான். 28

முற்பிதாக்களின் பேரின்பம்

வில்திறம்,ம னத்தில்தரும் விஞ்சை நலம் விஞ்ச,
மல்திற ந(ல்)லோனை மறை வற்று இனிது காண,
நல்திறம்இ யற்றிய தவத்துஅரிய நல்லோர்,
சொல்திறம் அகன்றநயம் உண்டு,தொழு கின்றார். 29

காட்சியை அடைந்துளி, களிப்புஉளம் அடங்கா
மாட்சியை அடைந்து,அரு வரத்தில்—அவர் வாய்ந்த
சூட்சியை அடைந்து,அடி தொறும் தொறும் இறைஞ்ச,
ஆட்சியை அடைந்து,ஒளி அடைந்து,அருள் அடைந்தார். 30

பணிந்தனர், புகழ்ந்தனர், பதந்தனில் உயர்ந்தே
தணிந்தனர், தணிந்தில நலங்களில் தயங்கத்
துணிந்தனர், துளங்கினர் துதைந்தன நயங்கள்
அணிந்தனர்; அருந்துதி அவிழ்ந்தனர் ஒருங்கே. 31

---

27. பால் நலம் ஒழித்து — பாலின் இனிமையை வென்று. இரவிஎஞ்ச— கதிரவன் ஒளி குறையும்படி கால்நலம் ஒழித்த-காற்றின் விசையை வென்ற- காற்றினும் விரைவாய்.

28. இருள் பொதிர் — இருள் மிகுந்த.

29. வில்திறம்—(காட்சி) ஒளித்திறத்தால் மல்திறம் — வல்லமை மிக்க.

30. தொறும் தொறும் — கூட்டங் கூட்டமாய். ஆட்சி — ஆளுகை.

31. தயங்க — ஒளிவிட. துளங்கினர் — விளங்கினர். துதைந்தன — நிறைந்த. அவிழ்ந்தனர் — வாய் மலர்ந்தார்.

சூசை முனிவர் இரட்சகரைத் துதித்து வணங்குதல்

ஓசைவரு நீத்தமொடு நீர்பிறழ்வது ஒப்ப
சூசை,வரு நாதன்ஒளி தோன்றலில், அடங்கா
ஆசைவரும் ஆர்வநிலை யாய்,அருள் வழிந்த
பூசைவரு மா,புகழ் புரிந்து புக லுற்ருன். 32

துன்னுயிரை ஓம்பும்அருள் தோன்றி,எனை ஆளும்,
என்னுயிரில் இன்னுயி ரெனும் தயையின் நல்லோய்!
உன்னு யிர் அ ளித்துஎமை அளிப்ப,உயர் வீட்டை
மன்னுயிரெலாம் உற, வருத்த முறீஇ மாய்ந்தாய். 33

"உரைக் கடல் கடந்த எழி லுண்திலகம் நீயே
வரைக் கடல் கடந்த துய ரோடுஉனை வளர்த்தேன்;
கரைக் கடல் கடந்த பயன் இன்றுஇனிது கண்டேன்—
புரைக் கடல் கடந்த களி உள்பொதுள" என்ருன். 34

என்று எழும் அவாவொடு விழுந்து,இரு விழும்தாள்
அன்று எழு முடிக்குஇணை அணிந்து தொழு சூசை,
நன்று எழும் அருநகை நயத்தசவை யோடு,
சென்று எழும் மகிழ்ச்சிஅலை மூழ்கி,நசை தீர்ந்தான். 35

இரட்சகர் அழைப்பால் உத்தரிக்கும் தலத்தோர் வந்து வணங்குதல்

அளிபொதுள வாகி,இவை அன்று தயை நாளாய்,
ஒளிபொதுள வே,நிதியின் ஒவிஅழல் வெந்தார்;
களிபொதுள அத்துயர் க டிந்துவர, வானோர்
தெளிபொதுள ஏகி, இடர் தீர்த்த உயிர், மீட்டார். 36

ஆசைதரும் அல்லல்அற அவ்வவையும் சேர்ந்தே,
சூசைதரு திவ்விய துதித்தொடை தொடுத்த
ஓசைதரு நாமம்,ஒரு ஆயிரமும் ஓதி,
பூசைதரு பூசுபுகழ், பூசல்தரு வாரால். 37

---

32. பூசை வருமா — பூசையாக.

34. உரை — சொல் - புகழ். எழில்உண் — அழகமைந்த. களி உள் பொதுள — மகிழ்ச்சி உள்ளத்தில் நிறைய.

35 விழும்தாள் — சிறந்த பாதங்களை. சவை — சபை.

36. நிதியின் — (சுடும்) பொன்னைப் போல. ஒவி அழல் —உத்தரிக்குந் தலம்.

37. அவ்வவை - அச்சபை. பூசு புகழ் - இயைந்த புகழை. பூசல் தருவார் - முழங்கினர்

மின்புரிய மீனதினும் மின்ஞெளி மிளிர்ந்த
அன்புரிய அன்னவர், அருந்துதிகள் ஆடி,
பின்புஉரிய ஒப்புமில பேருவகை, பேரா(த)
இன்புஉரிய தொல்லேயிலே; எல்லேயிலே அன்றே. 38

இரட்சகர் எல்லோரையும் திருக் கல்லறைக்கு அழைத்து வருதல்

அயிர்கடந்(த) இனியஇன்பத்து, அங்கணில், இருநாள்போக்கி,
உயிர்கடந்து ஒழிந்தயாக்கை உறைந்து,கல் லறைக்கண்,எந்தம்
செயிர்கடந்து அளித்தநாதன், செறிந்தஅவ் வவையோர் நாப்பண்,
வயிர்கடந்து உடன்ற ஓதை வழங்க,வில் பரப்பிப் போஞன். 39

எல்பிழம்பு எறித்த வாஞேர் எண்ணிலர் முனர்ப்போய்ப் பாட,
அல்பிழம்பு அற,வில் லார்மற்று அனேவரும் பினர்வந்து ஆர்ப்ப,
கல்பிழம்பு உருகஇன்பம் கனிவளன், புடையிற் செல்ல,
செல்பிழம்பு உறையின் ஆர்ந்த திருவளர் நாதன்போஞன். 40

மெய்கிடந்து உறைந்த அங்கண், விரைவில்ஓர் கணத்திற் சென்று,
பொய்கிடந்து அமைந்த பாவம் போக்கத் தன்உடலிற் பாய்ந்த
நெய்கிடந்து அடைந்த காயம், நின்றஅவ் வவைமுன் காட்ட
துய்கிடந்(த) உடலேப் போர்த்த துகிற்படம் நீக்கி ஞனே. 41

அயநலம் போர்த்த பார்காத்து, அருளொடுஇன்று உமக்குத் தந்த
நயநலம் கொள்ள, நானே நல்கிய விலேஇ தோ என்று
இயல்நலம் தவிர்ந்த மெய்போர்த் திடும் கலேநீக்கி, நீங்கா
வயநலம் பொலிந்த தூயோன், வாய்மலர்ந்து அறைந்தான் மீண்டே. 42

இரட்சகர் தம் பாடுகளே அவர்களுக்குக் காட்டுதல்

வானகத்து உவகை செய்யும் வனப்புடைச் சிரத்தை நோக்கீர்,
கானகக் கொடிய நெஞ்சார், கண்டக முடியைச் சேர்த்தி,
மீனகத் தெளிந்து மின்னென் விழியகத்து உருவத் தாக்கி,
ஊனகத்து இரத்தம் பாய உறுந்துயர், உரைப்பப் பாலோ? 43

---

38. மின் புரிய - மின்னின. பேராத இன்பு - விடாத மகிழ்ச்சி. தொல்லே - முன்பு.
39. அயிர் - சருக்கரை. வயிர் - ஊதுகொம்பு. ஓதை வழங்க - முழங்க. வில் - ஒளி.
40. எல் பிழம்பு - கதிர்த்திரள். அல் பிழம்பு - இருள் தொகுதி. செல் - மேகம். உறையின் ஆர்ந்த - மழையினும் நிறைந்த.
41. நெய் - இரத்தம்.
42. அயம் - நீர் (கடல்).
43. அயில் - கூரான. செந்நீர் அயில் - இரத்தத்தையுண்ட. கிளர்த்து - நிறைந்து.

பகையரசு ஒழித்து,ஒன் றாய்நான் படைத்து அளித்து அழிப்ப வல்ல
தகைஅர சாகி, மாக்கள் தம் செருக்கு ஒழிப்ப, என்னை
நகைஅர சாக்கி, நீசர் நகைத்துமுள் மகுடம் சூட்டி,
மிகைஅர சாகி, ஆய வெருவிடும் உருவங் காணீர். 44

கண் வழி உயிரைப் போக்கி, கண்டவை வெஃகி வெஃகும்
விண்வழி ஒழித்த தீது விலகுவான், கொடியர் கையால்,
புண் வழி குருதி ஓட, பூவென வாடி, வான் மீன்
ஒண் வழி கடந்த என் கண், ஒளி ஒழிந்து இருளல்,நோக்கீர். 45

தேன் உகும் உரையால் யார்க்கும் தெருள் உகு மருந்து மான,
மீன் உகும் வானோர் ஏத்தும் வேதநூல்,உலகில் தந்த
கான் உகும் கமல வாயே, கடிது அடி மிதிபட்டு, அந்தோ
ஊன் உகும் உதிரம் தோய்ந்த உதட்டுஅலர், வாடல் நோக்கீர். 46

தூய் இரக்கு ஒழித்த நீசர் தூணோடு எனைச்சேர்த்து, ஓர்ஐ
யாயிரத்து ஒருநூற்று ஐம்மூன்று அடிஅடித்து,இடமொன்று இன்றி,
வாயிரக்கமும் அற்று, ஆய வடுஅடித்து, என்பும் தோன்ற,
பாய் இரத்தமும் ஆறு ஓட, பழிஉரு உடலை நோக்கீர். 47

படியதோர் தனிக்கோல் ஓச்சி, பாரெலாம் தாங்க நானே
நெடியதோர் சிலுவை தாங்கி நீசருள் நீசன் என்ன,
கடியதோர் வஞ்சர், நிந்தை கான்று அடித்து உதைப்ப வீழ்ந்து,
கொடியதோர் தடத்து உயர்ந்த் குன்றுமேல் அரிதிற் சென்றேன். 48

ஓர்அயில் குன்றின்கோட்டில் உலகெலாம் வெருவிக் கூசப்
பேர்அயில் ஆணி தன்னாற் பெருமரத்து அறையுண்டு, என்செந்
நீர்அயில் புவிதன்தீது நீத்து,அருள் கிளர்ந்து வாழக்
கூர்அயில் ஆணிக் காயம் கொண்டகால் கரங்கள் நோக்கீர். 49

ஆட்டியால் அமைந்த தீமை அகற்றி,மீது உயர்வீட்டு ஆறு
காட்டி,யான் உயிரை நீக்க கடும்பகைநீங்கா நெஞ்சான்,
ஈட்டியால் விலாவைத் தாக்க, அடைக்கலம் எவர்க்கும் செய்யப்
பேட்டு,யான் திறந்த நெஞ்சிற் பெரியதோர் வாயில்,நோக்கீர். 50

---

47. இரக்கு — இரக்கம். வாய் இரக்கம் — சொல்லளவில் இரக்கம். வடு — காயம்.

48. படியது - உலகில்.

49. அயில் — கூர்மையான. செந்நீர் அயில் — குருதியையுண்ட. கிளர்ந்து - மிகுந்து.

50. ஆட்டி - பெண் - ஏவை. பேட்டு - விரும்பி.

பெய்ததோர் மாரி யென்னப் பெருகி,என் இரத்தம் சிந்தி,
கொய்ததோர் கனியால்கொண்ட குறைகள் தீர்த்து, உலகம் காக்கச்
செய்ததோர் வினை ஈது; என்றும் பெய்வதும் இனியாது உண்டோ?
எய்தஓர் பயனும் உம்மால் எனக்குஉண்டோ? என்றான் நாதன். 51

குசை பெருமூச்சு விட்டுக் கூறிய மொழிகள்

உருக,மா வயிரக் குன்றும், உரைத்தசொல் எறிவேல் பாய்ந்து
திருக,வாய் பிளந்த புண்ணுள் திரண்டதீ யாக,ஆவி
பருக,நோய் ஆற்றாக்குசை, பரிவளவு அழுந்தும் துன்பம்
பெருகவோ, ஆற்றவோ,ஓர் பேருயிர்ப்பு உயிர்த்துச் சொன்னான். 52

இன்றுநீ, உலகம் கூச இத்துயர் படவோ,அஞ்சி,
அன்றுநான் எசித்துநாட்டை அடைந்துநின் உயிரைக் காத்தேன்;
பொன்றுநீமரத்தில், செந்நீர்ப் புணரிஆழ்ந் திடவோ, வீட்டைச்
சென்று,நான் உவப்பில் வாழ்வேன் தேவருள் திருவில் நல்லோய்! 53

அருள்மிக இறத்தல் வேண்டின், அத்திறத் துயரோ வேண்டும்?
மருள்மிக அசடர் உன்னை மரத்துஅறைந்து இறத்தல் வேண்டின்
பொருள்மிக 'உன்தோள் என்தோள் பொருந்திஓர் மரத்தில் தூங்கி,
இருள்மிக முகில்சூழ் குன்றத்து இருவர்வீ தலும் வேண்டாதேன்? 54

"பிறந்து,உயிர் பிழைத்தபோது, பெயர்கிலாத் துணையென் றானேன்;
இறந்து,உயிர் அளித்த போதும் என்னையும் துணைவேண் டாதேன்?
சிறந்து உயிர் அனைத்தும் காத்த திருமருந்து அன்னோய்!" என்ன,
மறந்து,உயிர் அளிப்ப நொந்தான்-வளன்;விட, உடலுண் டானால். 55

முற்பிதாக்களின் அன்பு மொழிகள்

விண்டார் பைம்பூ வாகையன், இவ்வாய் மெலிவெய்த,
மண்டார் துன்பத்து ஆழ்,உடல் கொண்ட வடுவெல்லாம்
கண்டார் ஆய்ந்தார்; கண்டுளி யாரும் கலுழ்கின்றார்;
உண்டார் உன்னாப் பீழைகள்; மீட்டு,ஓர் உரையுற்றார். 56

---

52. பரிவுஅளவு - தன் அன்பின் அளவு.
53. நீ பொன்றும் — நீ இறக்கும்.
54. வேண்டாதேன் - விரும்பாதது ஏன்?
55. மறந்து - (துயரத்தால்) தன்னை மறந்து. விட உடலுண்டானால் - உயிரை விடுதற்கு உடலிருத்தல் போல.
56. உன்னாப் பீழைகள் - மதிக்கப்படாத துயரம். விண்டு - மலர்ந்து.

ஐயா, இவ்வாறு எங்கள் பொருட்டால் அயர்வுற்ருய்;
மெய்யார் துன்பத்து ஒன்றெனை உன்பால் விளைவுஉண்டோ?
மையார் பெட்பால் தீவினை செய்த மனுவெல்லாம்
உய்யார் என்றன்ரே, உயிர் சிந்த உணர்வுற்ருய். 57

கோன்பால் நின்பால் என்று,எதிர் இன்றிக் குறையின்றி
வான்பால் நின்ருய், எங்கணும் நின்ருய், மகிழ்கின்ருய்;
ஊன்பால் நின்(று)ஓர் மேனி எடுத்தாய்; உயிர்சிந்தத்
தேன்பால் நின்(ற)ஓர் இன்பமதென்ருய்; திருவல்லோய்! 58

வாராயோ, எம் மேலும்இ ரங்கி, மனுஅல்லல்
பாராயோ? எம் பேயினம் வென்றே பகையெல்லாம்
தீராயோ? என் ரேம்;நசை யின்மேற் சிறைதீர்த்தாய்;
தாராயோ இன்று உன்தயை? ஏத்தத் தகவன்ரே? 59

விண்மேல் வைத்த நன்றுஇவ ரு,நாம் வினைசெய்ய
மண்மேல் வைத்த காவல் நினக்கே, வரைவின்றிப்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தோம்;
எண்மேல் வைத்த எம்செயிர், ஆர்ஆர் இணைசொல்வார்? 60

வேண்டா இன்பம் வெஃகிய தன்மை விளைதீதால்,
தாண்டா இன்மை கொண்டு பி றந்தாய், தகுதண்மை
பூண்டாய் புன்கண் பால்என உண்டாய்; புரிவுஓங்கி
மாண்டாய்; ஓர் கைம் மாறு வழங்கக் கடவேமோ? 61

பொய் மாறு கின்ருய், ஆசை விளைக்கும் புரை உய்த்த
மை மாறு கின்ருய், பேய் உரு நாக வயம் நூறிப்
பை மாறு கின்ருய், நிற்கென எம்மால் பயனுண்டாய்,
கை மாறு உனக்கே யாங்கள் வழங்கக் கடவேமோ? 62

---

57. மையார் பெட்பால் - மயங்கிய ஆசையால். ஒன்றெனை-ஒன்றேனும்.

58. கோன்பால் — அரசுபுரிதல். நசை — ஆசை.

60. நன்று இவரு — நன்மையை விரும்பாமல். எண்மேல் வைத்த — எண்ணப்படாத.

61. தாண்டா இன்மை - நீங்காத வறுமை. புரிவு - அன்பு.

62. பொய் மாறுகின்ருய் - பொய்யிருளை மாற்றுகின்ருய். நாக வயம் — பாம்பின் வலிமை. நூறி — கெடுத்து. பை மாறுகின்ருய் - விரித்த படத்தை மாற்றுகின்ருய். நிற்கென — உனக்கென.

உன்னை உள்ள சீர்க்கு,அறி யோமே; உலகுள்ள
முன்னை பின்னை யாம் அறி யோமே; முரியாமல்
நின்னை ஏத்தி, நன்னெறி நிற்ப அறியோமே;
பின்னை, ஓர் கைம் மாறு பி ணிக்கக் கடவேமோ? 63

தாயும் நீயே, தந்தையும் நீயே, தவரு நன்று
ஈயும் நீயே என்று அறி வோமே; இதுவல்லால்,
காயும் பாவத் தன்மையும், நின்றன் கனிஅன்பும்
ஆயும் காலத்து, அஃது அறியோம், நாம் அறியோமே. 64

பாய் ஓர் செந்நீர் கொண்டு,உனது அங்கப் படமீதே,
நீயோ, நாமோ இவ்வரி வைத்த நிலையென்போம்?
மாயா வஞ்சத்து இவ்வரி, நாம் செய் வரியென்றால்—
ஓயா அன்பால் உன் வரி யென்றால், உரைபொய்யோ? 65

பற்றக் கற்போர், நூல்பல கற்றால் பயனென்னே?
ஒற்றக் கற்றால் இவ்வரி ஒன்றே உணர்வெல்லாம்
முற்றக் கற்பார்; ஆயினும், எம்மால் முழுது(ம்)ஆகா;
கற்று,அக் கட்டாம் நுண் பொருள் காட்டாய் கலைவல்லோய். 66

நன்றாய்க் கற்றோம் நின் தயை; நாம் செய் நவை கற்றோம்;
பொன்றாய்! எம்மால் பொன்றினை; எந்தம் புரையெல்லாம்
வென்றாய் வென்றாய் நின் அருள் மிக்காய் பெரிதன்றோ
என்றார் உள்ளத்து ஒவி இறைஞ்சி எதிர்வீழ்ந்தார். 67

ஐந்து காயங்கள் அடங்கிய பொலிவுபெற்ற மேனியோடு இரட்சகர் எழுதல்

வாள் அழுந்திய வருத்தமே கண்டு,உயிர் புக,முந்
நாள் அழுந்திய நவைவடு நீத்துஎழுந்து, இறைவன்,
கோள் அழுந்திய கொள்கையின், விலாவிஞேடு இருகை,
தாள் அழுந்திய காயம் ஐந்து ஒளிவிடத் தரித்தான். 68

---

63. உள்ள சீர்க்கு — உள்ளபடி. முன்னை — முற்காலம்.

65. அங்கப்படம் — திருமேனியாகிய படம். வரி வைத்த — வரிகளை எழுதிய.

66. பற்ற - ஆசைகொண்டு. ஒற்ற - நன்றாய். கட்டுஆம் - கட்டப் பட்ட.

68. கோள் அழுந்திய கொள்கையின் - விண்மீன் பதித்த தன்மைபோல.

உலக முடிவுநாளில் மனிதர்களின் உத்தானத்தை உணர்த்த
சூசையை உயிர் பெற்றெழச் செய்தல்

விண்விளக்கிய வெஞ்சுடர் எழுந்தென எழுந்து,
மண்விளக்கிய மணியொளிப்(ப), ஒளிஅணி தயங்க,
கண்விளக்கிய கவின்மனம் விளக்கநின்று, எந்தை,
பண்விளக்கிய பனிமதுப் பனிமொழி பகர்ந்தான். 69

'தீய்முகத்துஉலகு அழிவுறுங் கால்,அறம் சினந்த
பேய்முகத்து,எனைப் பெயர்கிலார்க்கு, இயல்பிது என்று அறிய,
நோய்முகத்து இறந்து,அரியதூது உரைப்ப நீ நுதலி,
வீய்முகத்துஇவண் விட்டமெய் யெடுத்து எழு(க)'என்றான். 70

சூசை உயிர்த்த பரம நாதனை வணங்குதல்

அலைபுறங் கொளீஇ ஆதவன் எழுந்து,ஒளி முகத்தில்
கலைபுறங் கொளீஇ கவின்நிறை திங்கள் சேர்ந் ததுபோல்,
இலைபுறங் கொளீஇ ஏடவிழ் கொடிநலோன் எழுந்து,எம்
நிலைபுறங் கொளீஇ,நிமலனைத் தொழுது,முன் நின்றான். 71

போற்றினான்;இணை போக்கிய புகழ்பொழி மாரி
தூற்றினான்;மதுத் தூற்றிய பூங்கொடி அடிமேல்
ஏற்றினான்;அடிஏற்றுபு தழுவினான்; ஆசை
ஆற்றினான்,அரிது, அமரரும் வியப்பஅன்பு ஆற்றான். 72

கான்அரும்பின கைக்கொடி; அரும்பின மலர்பூத்
தேன்அரும்பின; செறிந்தமற்று அருந்தவர் சூழ
வான்அரும்பின வடிவுமீன் ஒத்தனர்; வயங்கும்
மீன்அரும்பின விண்ணவர்; விழாஅணி விளைத்தார். 73

வானவரின் மகிழ்ச்சி ஆரவாரம்

மொடமொட என இன முரசொலி முழவொலி
    மோதிய யாவும் முழங்கி அதிர,
நெடநெட எனஉள குழலிசை கலஇசை
    நீரிய ஓதை கலந்து கனிய,
படபட எனமழை இடியொலி கடலொலி
    பாடென நேரில் ஒழிந்து மெலிய,
விடவிட எனவெளி உலகு,அலை உலகிடை
    வீரிய ஓதை மயங்கி எழுமால். 74

---

69. பண் விளக்கிய - வீணையினும் இனிய.
70. நுதலி — சொல்லி. வீய் முகத்து — சாகும்பொழுது.
71. அலைபுறங்கொளீஇ - கடலைவிட்டு. கலை புறங்கொளீஇ - கலையைக் கடந்து. இலைபுறங்கொளீஇ — இலையைப் புறத்தில் கொண்டு.
74. கலம் — வீணை. நீரிய - இனிய. பாடுஎன - வருந்தினாற்போல. நேர்இல் - நிகரின்றி. வீரிய - மிகுந்த. ஓதை - (தேவ வாச்சிய) முழக்கம்.

விளை ஒளி உருவுறீஇ அணியணி அமரர்கள்,
வீரிய ராக மிடைந்தது ஒருபால்;
திளை ஒளி மணியணி அணிமுடி கொணர்வன
சேடிய ராக மலிந்தது ஒருபால்;
கிளை ஒளி வடிவுஅடி மலரிணை தலைமிசை
கேழ்அணி யாக அணிந்தது ஒருபால்;
இளை ஒளி உருவொடு புகழ்இசை ஒலியெழ
ஈரணி யாக மகிழ்ந்தது ஒருபால். 75

துளிவரு மழையென நிறைவரும் மதுமழை
தூவிய மாலை நிறைந்தது ஒருபால்;
அளிவரும் உரையென வளிவரு கவரிகள்
ஆடிய மாலை அமைந்தது ஒருபால்;
ஒளிவரும் மதியென உயர்வரு கவிகைகள்,
ஊர்ஒளி மாலை ஒசிந்தது ஒருபால்;
களிவரும் ஞிமிறென கலைவரும், கனிவன
காமர மாலை இடங்கள் தொறுமே. 76

ஒருவரும், உளபல உலகுள அதிபதி
ஊழுள ஊழின் அறைந்து புகழ்வார்;
ஒருவரும், இளைவன நினைவு,அவன் உடலுடன்
ஓர்மக ளுக இயைந்தது அறைவார்;
ஒருவரும், அடிபட மிதிபட உயிர்பட
ஒலிய காதை வியந்து மொழிவார்;
ஒருவரும், இரவியின் ஒளிமிக இவன்எழும்
ஓரையின், ஓகை நவின்று தொழுவார். 77

---

75. வீரியராக - படை வீரராக. இளைஒளி - இளங்கதிரொளி.

76. அளிவரும் - அன்போடு வரும். மாலை - ஒழுங்கு. மாலை ஒளி ஊர் - மாலைக்காலம் ஒளிசெய்து ஊர்ந்து வந்தாற் போல. ஒசிந்தது - சாய்ந்தது. கனிவன காமரம் - இனிய இசைப்பாட்டுகள்.

77. ஒருவரும் - சிலர். உள - உண்டாகிய. ஊழுள — ஊழியுள்ள — நித்தியமான. ஊழின்-குணத்தை. இளைவன-இரங்கிய. ஒலிய-வருந்தின. ஓரையின் - பொழுதில். ஓகை நவின்று - மகிழ்ச்சியைச் சொல்லி.

அனைவரும் அணுகுவர், நயமிக உருகுவர்,
ஆசையில் ஆசி வழங்கி மெலியார்;
சுனைவரும் மலரடி தொழுகுவர் அணுகுவர்;
சோபனம் ஆடி அனந்த முடியார்;
நினைவரும் உணர்வொடு புகழுவர், புகழ்இசை
நேரில வாட வருந்தி ஒழியார்;
புனைவரும் அழகுள முகமுகை அயிலுவர்;
பூகதர் பூசை புணர்ந்து பிரியார். 78

கனைவினை கதம்இல, கதம்மலி பகையில,
காதலில் ஆர்வம் மலிந்து பெருக,
வினைவினை நசையில, நசைவினை செயிர்இல,
மேவிய மேதை அனந்தம் இலக,
சினைவினை இழிவில அழிவில ஒழிவில
சீரிய யோகம் ஒருங்கு விளைய,
புனைவினை நலம்உறீஇ உலகுளழ, நிகர்இல
பூதல மீதில் எழுந்தது இறையே. 79

மெலிவன உயிருணும் அயர்வு,அஞர், சிலுகு,இடர்
பாசறை யாவும் ஒழிந்து மறைய,
நலிவன உடல்உணும் மிடிபசி மடிபிணி
ஆகுலம் யாவும் அகன்று பெயர,
மலிவன பகையொடு பழிமலி வெறியினம்
மாறில, மாயை மடிந்து சிதைய,
பொலிவன பலநலம் அருகுவ, ஒளியொடு
பூதல மீதில் எழுந்தது இறையே. 80

*இரட்சகர் திருக் கூட்டமுடன் மரியன்னைக்குக் காட்சியளித்தல்*

வானகம் முதல்எவ் வுலகும்வாழ்ந்து உவப்ப
மீனக உருவுற்று எழுந்த மெய்த் திறலோன்,
தேனக மொழியாள் தன்னைச் சீர்த்து உயிர்த்தாள்,
தான்நக, மற்று சவை யோடுஆங்கு எழுந்தான். 81

---

78. முகமுகை-முகமலரை. அயிலுவர் - நுகர்வர். பூகதர் - புகழ்வோர்.

79. கனை - பேரொலி கதம் இல - கோபம் இல்லாமலும். மேதை - ஞானம். இலக - விளங்கவும் சினை - கருப்பம். யோகம் - அதிட்டம். செல்வங்கள். இறை எழுந்தது - இறைவன் எழுந்தனன்.

80. சிலுகு, இடர், பாசறை - துன்பம்.

81. சீர்த்து-செல்வத்தில். உயிர்த்தாள் - பெற்றதாய். நக - மகிழ.

ஒளிமுகத்து, இருமா சுடரோடுஒத்து,இருவர்
தெளிமுகத்து இலங்க எடுத்த சீர் உடலை,
களிமுகத் தவளே கண்டாள்;கண்டு, அடிவீழ்ந்து,
அளிமுகத்து இறைஞ்சி, அயின்றநோய் ஒழிந்தாள். 82

மரியன்னை இன்பக் கடலுள் மூழ்குதல்

உணங்கிய முல்லைக்கு உயிர்பெய்நீர்த் துளிபோல்,
அணங்குஇயல் உள்ளம் மலரஅக் காட்சி
இணங்கிய தன்மைத்து,இழி தேன்இணர் ஏற்றி
வணங்கிய இன்பம்,கடல் நீர்வளம் ஆற்று. 83

மாய்அளவு அரிய மகனைக்கண்டு,அயின்ற
நோயளவு இன்பம் நுகர,மற்ற நல்)லோர்,
மீயளவு உடுப்போல் விளங்கக்கண்டு,உவக்கும்
தாய்,அள விலவாழ் தகவின்புகழ் அறைந்தாள். 84

ஆயதும் அறைந்து,அவ் வவையைக் காட் டியதன்
சேயது மொழிகேட்டு, இதுநீ செத்து அடைந்த
நோயது பயனென்று இரங்கிநொந் தழுத
தாய்,அது நமக்குஆம் என,நோய்தாங் கினளால். 85

இரட்சகர் சிலநாள் இவ்வுலகில் மோட்ச பேரின்பம் நிலவச் செய்தல்

இந்நிலை பலவும் பலநாள் இயைந்து,அன்னார்
தந்நிலை செல்லாத் தரித்தகால்,இவண்,வீட்டு
அந்நிலை சென்ற தன்ன ஆனந்தம்,
செந்நிலை வடிவம் காட்டிச்செலுத் துவரே. 86

---

82. அயின்ற - நுகர்ந்த.

83. அணங்கு - துன்பம். இணர் - மலர்.

84. மாய் அளவு - (சிலுவையில் அறையுண்டு) இறக்கும்போது. தகவின் - தன்மையுடைய.

85. ஆயதும்-முன்னுள்ள எல்லாம். அது-அப்பாடுகள். ஆம்-நலமாம்'

86. செந்நிலை - செஞ்சுடர். செலுத்துவர் - (பேரின்பம்) விளைவித்தார்.

# 12 முடிசூட்டு படலம்

நாதன், சூசை முனிவருடன் விண்ணுலகம் ஏகும் செய்தியை மரியன்னையிடம் கூறுதல்

அன்புஅ ருந்திய ஆண்டகை மாய்தலால்
துன்புஅ ருந்திய யாவரும், தொய்யலில்
பின்புஅ ருந்திய காட்சியின் பெற்றியால்,
இன்புஅ ருந்தலில், எல்லையொன்று இல்லையால். 1

நீத நன்னெறி தந்து,அருள் நேமியான்
நாதன், இன்னணம் நாற்பது நாளிருந்து,
ஆத வன்திரி அந்தர மேற் செல
காத லுண்டு கருத்துமுண்டான்; அரோ. 2

விதிஎ ழுந்தமெய் வேதநன் னூதனும்
துதிஎ ழுந்தகைத் தாதைஅம் சூசையும்
மதிஎ ழுந்த பதத்தினள் வாழ்த்தினர்;
'நிதிஎ ழுந்தவிண் நேடுதும் நாம்'என்றார். 3

வருந்திய மரியன்னைக்கு ஆசியளித்து மலையை அடைதல்

புண்கு டைந்த வேல் போல்உரை கேட்டு,நான்
விண்கு டைந்த இடிப்பட, மின்னி(ன்),நீர்
கண்கு டைந்தவில் காட்டிப் போ தீர் என,
பண்கு டைந்த சொ லாள் பணிந்து ஏங்கினாள். 4

'எல்லின் வேந்துஅகன்று, ஆம் இருள் ஈர்த்துஅவிர்
அல்லின் வேந்தென நாம் அகன்று, ஆகுலம்
புல்லின், யாவரும் போற்றுதி நீஎனச்
சொல்லின் ஆசிதந்து, ஓர் வரை துன்னினார். 5

---

1. அன்பு அருந்திய — அன்பை உண்ட — நிறைந்த அன்புடைய. அருந்திய - உண்ட, நுகர்ந்த, பெற்ற, அடைந்த. தொய்யலில் - மகிழ்ச்சியோடு.

2. உண்டான் - கொண்டான்.

3. நிதி எழுந்த விண் - பொன்னுலகாகிய மோட்சம்.

5. எல்லின் வேந்து — சூரியன்.

களிஅ ழுந்திய காட்சியு ளோர்களும்
ஒளிஅ ழுந்திய உம்பரும் முன்புறத்
தெளிஅ ழுந்திய சீடரும் பின்வர
வெளிஅ ழுந்திய வெற்பினைத் துன்னினர். 6

இயேசு சீடர்க்கு ஆசி தரல்

விரைகி டந்தவெற்பு ஏறி,விண் வேந்தனும்,
கரைகி டந்தகடல் கடந்(த) இன்புற,
நிரைகி டந்தனர் ஆகுலம் நீத்துஅற,
சுரைகி டந்தசொல் ஆசிதந் தான்;அரோ. 7

சூசையை நோக்கிக் கூறுதல்

மேவி மீஎழு முன்,விரைத் தாமரை
வாவி மீஎழும் வான்கதிர் போன்று,அருள்
தூவி மீஎழச் சூசையை நோக்கி,உள்
ஆவி மீஎழும் அன்பொடு கூறினன். 8

புண்ணைக் காக்கும் மருந்தினைப் போன்றுளோய்!
கண்ணைக் காக்கும் இமைக்குஇணை, காதலான்,
மண்ணைக் காக்கு(ம்)எனை, மண்ணிடை காத்தலால்,
விண்ணைக் காக்கும் அரசாக விளங்குவாய். 9

ஒழிவ ரும்தவ தாவிதற்கு ஓதிய
மொழிவ ரும்படி, முற்றவன் கோத்திர
வழிவ ரும்சுதன் நீ;மண்ணும் வானமும்
அழிவ ரும்தக வோடு அரசாளுவாய். 10

நான் அளித்த மனுக்குலம் நன்றுஉற,
கோன் அளித்த முடிக்குடம் சூடி,நீ
வான் அளித்த வளங்கொடு வாழ,வில்
மீன் அளித்த விசும்புயர் வா—என்றான். 11

---

6. முன்பு உற - முன்னே போக. அல்லின் வேந்து என - சந்திரனைப் போல. வெளி அழுந்திய - வானளாவிய.

7. நிரை கிடந்தனர் — சூழ நின்ற சீடர். சுரை — தேன்.

8. மீ — வானம்.

10. முற்று அவன் — முற்றும் அவன்.

*திருக்குமாரனும் சூசையும் பரலோகத்துக்கு எழுந்தருளல்*

பொருளில் வீங்கிய தாள்,வளன் போற்றலும்,
தெருளில் வீங்கிய சேனைகள் வாழ்த்தலும்,
அருளில் வீங்கிய ஆண்டகை பால்,வளன்,
மருளில் வீங்கிய வையம்விட்டு ஏறினன். 12

வெளிபொ திர்ந்த கணங்களுள் வேய்ந்த,நல்
ஒளிபொ திர்ந்த இருசுடர் ஒத்து,இவர்
களிபொ திர்ந்த கணங்களின் நாப்பணே,
நளிபொ திர்ந்த நயங்கொடு ஏறினர். 13

வான் வ ழங்கு தளங்கள் வகுப்பெலாம்
மீன் வ ழங்கும் உருக்கொடு வேய்ந்துநீஇ,
தேன் வ ழங்கு தெரியல் வழங்கிட,
கோன் வ ழங்கு வளங்கொடு ஏறினர். 14

*கதிரவன் தோற்றம்*

வில்எழுந்தது காணவி ரும்பி, அன்று,
எல் எழுந்து இணை தோற்றென நாணலின்,
மெல்லெழுந்து சிவந்தது மிக்கு;அவர்
சொல்லெ ழுந்த சுடர்க்கொடு ஏறினர், 15

*இருவரும் மேகத்தினூடே எழுந்து போதல்*

மிகை விரிந்த வியப்பு, இமையாது இவண்
தொகை வி ரிந்து நின் றுர் துயர் தீர்ப்ப, வான்
முகை வி ரிந்த மணிமுகில் மூடி,அவ்
வகை வி ரிந்தவில் வாகனத்து, ஏறினர். 16

*நல்லோர்க்கு வான் வீட்டுவாயிலைத் திறத்தல்*

விண்திக்கு இரிந்த உருமன்ன
  வீழ்ந்த வஞ்சப் பேய் வினையால்
உண்(ட), இக்கு ஒழுகும் கனியொன்றால்
  உளதீது அடைத்த வான் வாயில்,
மண்டிக் குமுறும் அலைகள் தவழ்
  வையம் அளித்த அருட்பயத்தால்,
எண்திக்கு உறைமன் னுயிர்க்கெல்லாம்,
  எந்தை அன்றே திறந்திட்டான். 17

---

12. வையம் — வையகம்.

13. வெளி பொதிர்ந்த - வானில் நிறைந்த. நளி பொதிர்ந்த - பெருமை மிகுந்த. நயங்கொடு - இன்பத்தோடு

14. தெரியல் - மாலை. கோன்வழங்கு வளம் - அரசுரிமைச் சிறப்பு.

15. வில் - கதிரொளி. எல் - சூரியன்.

17. உரும் — இடி. வையம் அளித்த - உலகை இரட்சித்த. அருட் பயத்தால் - தனயின் வல்லமையால்.

"அடைத்த வாயில் திறந்தானை
அணுகி, அணுகும் அணங்கெல்லாம்
உடைத்த வண்ணத்து, உளத்துளஞ்சா
ஒத்தநெறி நின்றா ரல்லால்,
படைத்தது இவறிப் படைத்தானைப்
பகைப்பார் இங்கண் புகார்என்னா,
துடைத்த நோய்க்கு,ஓர் மருந்தன்னான்
தொடர் நற் குழுச் சூழ் வரப்புக்கான். 18

இறைவன் அடியில் வீழ்ந்த இரட்சகரின் வேண்டுதல்

புக்க அனந்த நர தேவன்,
பொலிவா னவர்தம் நிலைகடந்தே,
தொக்க சிந்தை நிலைகடந்த
சுகத்தில், பிதாவீற் றிருந்துஆளும்
மிக்க சுடர்சூழ் ஆசனத்தில்
வீழ்ந்தான், தொழுதான், உளம்தூண்டி
மக்கள் தம்மேல் அருத்திஎழீஇ,
வரையா அன்பால் உரைகொண்டான். 19

"மன்னா இன்ப வினைஆற்றா
மக்கட்கு இரங்கி மகன் ஆனேன்,
அன்னார் வாழ உயிர் நொந்தேன்,
அயர்ந்தேன் நிந்தை பட்டிறந்தேன்,
முன்னாள் பிதா! நீ பணித்ததெலாம்
முடித்தேன், பகைப்பேய் வென்றேன்" என்று
இன்னார் கொணர்ந்து,ஈங்கு ஆண்டுஉவப்ப,
இதோமீட்டு இன்றுஉன் அடிசேர்த்தேன். 20

நமர்என்று இரங்கி அன்புமிக,
நான்மீட்டு அளித்த நரர்குலமே,
நுமர்என்று இரங்கி அருள் நோக்காய்;
நூறாப் பழிப்பேய் அக்குலத்தார்
தமர்என்று ஆள்வது இனிநன்றோ?
தயைக்கு என் இனத்திற்கு இரங்கிப்பேய்
அமர் என்று அவர்வென்று, ஈங்குஎம்மோடு
ஆள,அருள் செய்(க)எனத் தொழுதான். 21

---

18. அணங்கு - துயர். இவறி - விரும்பி.
19 புக்கவன் — புகுந்தவனாகிய. அருத்தி - ஆசை.
20. மன்னா - நிலைபேறில்லாத.
21. நமர் - நம் சுற்றத்தார். தயைக்கு - தயையோடு. அவர் பேய் அமர் வென்று என்று - அவர் பேயின் போரை வென்றார் என்று.

பிதாவின் அன்பும் சுதனின் வேண்டுதலும்

களிகூர்ந்து, ஆர்வத்து அருமகனைக்
கனியத் தழுவி கண்கடந்த
ஒளிகூர்ந்து உரியதன் ஆசனத்தின்
உகப்பில் அருத்தி யோடுஇருத்தி,
அளிகூர்ந்து, 'ஏதோ, என்மகனே
அமைவ கேள்'என்று அவன்கூற,
நளிகூர்ந்து, ஆற்றா அருளேந்தும்
நவின நெஞ்சான், மீட்டு உரைத்தான். 22

நின்பால் இருந்துஉன் பணியால்நான்
நிலப்பால் இறங்கும் வேலை,இவன்
தன்பால் இருந்து, நீதந்த
தண்தேன் துளிக்கும் பூங்கொடியின்,
மின்பால் இருந்து, நிழல் ஒதுங்க
விரும்பி, அரிதாய் எனை வளர்த்தான்;
உன்பால் இருந்து தொழும் வளன்தான்,
உலகில் நிகரா உளத்தூயான். 23

பூத்தான் அரிய வரமெல்லாம்;
புவனத்து என்தா யுற்றதுயர்
நீத்தான்; பிறநாடு அடைந்துஅடுங்கோன்
நிருபன் வஞ்சத்து, என்னுயிரைக்
காத்தான்; பிரியா அன்புஇயக்கிக்
கலுழ்ந்தான், கனிநான் சுவைஅருந்த
ஏற்றான், உளைந்தான், வேர்த்துஉழைத்தான் —
எட்டாக் கருணைக் கரை கண்டான். 24

உன்னோடு ஒன்றாய், மூவுலகம்
ஒருங்கு நிழற்றும் வயத்து, எனக்கும்,
என்னோடு என்னைக் கன்னி வழாது
ஈன்றாட் கும், தான் நிழல்செய்த
மின்னோ டியவான் மணியொப்ப
விரிபூங் கொடியோன் தருமாட்சி,
நின்னோடு இனியான் என்னுரைப்ப?
நினைவும் கடந்த காட்சிநலோய்! 25

22. உகப்பு - மேல். தளி கூர்ந்து - (மனம்) மிகக் குளிர்ந்து.
24. நீத்தான் — நீக்கினான்.

இன்னான், இன்ன தகவுளனாய்,
என்னோடு உடல்கொண்டு ஈங்குஅடைந்தான்;
பன்னாள் தொடர்ந்த பழியற.நான்
பாய்செங் குருதி தந்துஇறப்ப,
என்னால் ஆய பயன் காட்ட,
'இவனே மக்கட்கு அரசன்' என,
மின்னார் மணியார் முடிசூட்டல்
வேண்டும் ஐயா! எனப்பணிந்தான். 26

பிதாவாகிய இறைவன் சூசைமுனிவரைத் தழுவுதல்

ஆய்ந்தே இமிழிற் சொன்னவைகேட்டு,
ஐயன் வான்மேற் பேருவகை.
தோய்ந்தே, எவரும் மகிழ்ந்து ஓயாத்
துதிகள் துவைப்ப' நன்று என்றான்;
வாய்ந்தே மகிழ்ந்து தொழா நின்ற
வளனை நோக்கி, ஆசிநலம்
ஈய்ந்தே, மீளா அன்பு அருளால்,
'எழுக'என்று இறுகத் தழுவினனே. 27

இறைவன் சூசை முனிவர்க்கு ஏழு மணிகள் புறத்தில் ஒளிவிடும்
முடியைச் சூட்டுதல்

வான்புறத்து இலகும் செஞ்சுடர் காண
வந்தென வனைந்தவாள் மகுடம்,
தான்,புறத்து ஒருவேறு ஏழ்சுடர் பூண்ட
தன்மை,ஏழ் மணியொளி இயக்கம்,
மீன்புறத்து அகற்றும் செல்வவீட்டு உவகை
மிக,அள வின்றி, அம் முடியைக்
கான் புறத்து அலர்கோல் சூசைதன் தலைமேல்,
களிப்பெழ, முதலவன் புனைந்தான். 28

, திருக்குமரன் முடிசூட்டுதல்

ஆர்த்தன தேவ மகிழ்வொலி அரவம்,
ஆர்த்தன தொடர்துதித் துழனி,
ஆர்த்தன தேவ வீணைவாய் அமலை,
ஆர்த்தன இனியபா இசைகள்,
ஆர்த்தன பொலிந்த சோபன வகுளி,
ஆர்த்தன அதிசய குமுதம்,
ஆர்த்தன உவப்பில், ஆர்ஒளி மகுடம்
அருந்தவற்கு அருட்சுதன் புனைந்தான். 29

29. அரவம், துழனி - ஒலி. அமலை - ஆரவாரம். வகுளி - ஒலி. குமுதம் - பேரொலி.

தேவ நேயன் முடிசூட்டுதல்

ஆர்த்தன பல்லாண்டு, ஆர்ந்தன உவகை,
ஆறறு நூற்றுமூ வைம்பூச்
சீர்த்தன மதுவில் பூத்தன, சூசை
சேர்த்தகைக் கொடியில்;அம் மலரால்,
கோர்த்தன ஆறுறு அணிகளே,கடவுள்
சூளும் சுடர்ப் பதத்து,அவை வாஞேர்,
நீர்த்தன இன்பத்து அணிய,மா தவற்கே
நேயனும் ஒளி முடி புனைந்தான். 30

சூசையை ஆசனத் திருத்தி இறைவனும் பிதா பேசுதல்

புனைந்த மா மகுடம் பொழிஒளி பெருகிப்
பொற்பதம் பாய்ந்து உற, போற்றிச்
சுனைந்த பா உவமை நாண,மிக்கு உவகை
சுவைத்தவன், துதித்து முன் நிற்ப,
இனைந்த மா மகனது இருக்கையின் அருகே
இலங்கு மீன் மணியொடு நிரைத்து,
வனைந்த ஆ சனத்தில் பொலிந்துஉற, இறையோன்,
வளன்தனை இருத்தியே உரைத்தான்: 31

"தாவிது என் பவற்கே சாற்றிய வண்ணம்,
தவிர்கிலாது அரசுஉனக்கு அளித்தேன்;
தூவி மின் பிலிற்றும் சுடிகை சூழ் பயிற்றித்
துளங்கும் ஏழ் மணிகளோ — உன்னை
மேவிநின் றவர்க்கு, வேண்டுவ வெறுப்ப
விரும்பி நீ அளிக்கும் — ஏழ் வரங்கள்
ஏவிஇன்று உனக்குத் தந்தது காட்ட;
இனி,இவற்று உரிமைகேள் — என்ருன். 32

முதல்மணி—கற்புநலம் தரும்வரம்

களங்கமுற் றதுகண்டு இந்துதேய்த்து ஒளிரும்
கழலினன், கன்னிமை காத்து,
துளங்க முற் றிய செஞ் சுடரின்,உன் கற்பும்
துகளறக் காத்தனை என்ரு,
உளங்கண்,உற்று அழற்றும் விரகநோய் அறக்,கற்பு
உரிநலம் தரவரம் தந்தே
விளங்க,முன் பதித்த முதல்மணி தந்தேன் —
வெண்கொடி ஒத்(த)உளத் தூயோய்! 33

---

30. நேயன் - பரிசுத்த ஆவி. சுனைந்த - சுனைந்து - வாடி. இனைந்த — இரங்கிய.

32. சுடிகை - முடி.

33. துளங்கம் - துளக்கம் - ஒளி.

இரண்டாம் மணி — வினைவிலக்கும்வரம்

போய்வினை கொணரும் பொறிகள்—ஐந்து அடக்கி,
பொலந்தவ வேலியைக் கோலி,
தூய்வினை உளத்தில் துகள்புகாக் காத்துச்
சுடர்விளக் காயினன் என்று,
தீய்வினை வருமுன் காக்கவும், வந்த
தீது நேர்ந்து ஒழிக்கவும் உணர்த்தி,
காய்வினை விலக்கும் வரத்தை,இவ் விரண்டாம்
கதிர்மணி காட்டு(ம்)மா தவனே! 34

மூன்றும் மணி—தேவதாயின் அன்பை அருளும் வரம்

'பரிதியே உடுத்துப் பனிச் சுடர் இயக்கிப்
பரமனைப் பயந்ததாய் தன்னைக்
கருதியே, கருத்துக் கடந்த அன்பு, அருளால்
காத்து,அரிது ஓம்பினாய்' என்று,
சுருதியே வடிவாய்த் தோன்றிய தாயின்
தொடர்புஅருள் உதவி,சார்பு எய்தத்
தருதியே என, மூன் று(ம்)மணி தந்தேன்—
தயைக்கடல் கடந்(த)அருள் மிக்கோய்!. 35

நாலாமணி—பேய்களை வெல்லும்வரம்

'கனம் பழுத்து இரிந்த உருமென, விண்ணில்
கடிந்தபேய் கொண்ட தொல் பகையால்
மனம் பழுத்து இயற்றும் வஞ்சனை நாண,
வழுவிலா வென்றனை' என்று,
சினம் பழுத்து எதிர்த்த குணுக்கினம் ஒடிச்
செல்ல,நின் நாம வேற்கு அஞ்சித்
தனம் பழுத்து எரி,நா லாமணி வரமே
தந்ததாம்—வெற்றியங் கொடியோய்! 36

ஐந்தாம் மணி—பிள்ளைவரம்

தேவருள் திளைத்த நிரப்பினால், கன்னி
சினையையுற்று ஈனினும், ஈன்ற
மேவருள் மகவை, மகனென இனிதாய்
விருப்பொடு வளர்த்தனை' என்று,
நோவருள் புதல்வர் இலாக் குறை தீர்த்து,
நுண்தகைச் சந்ததி அளிப்ப,
காவருள் கமழ்பூங் கொடிநலோய்! ஐந்தாம்
கடிஒளி மணிவரம் தந்தேன். 37

---

36. கனம் - மேகம். தனம் - பொன்.
37. சினை - கரு. ஈனினும் - (குழந்தை) பெற்றாலும்.

ஆறும் மணி—நோய் தீர்க்கும் வரம்

'விருந்தினைக் கண்டார் முகத்து,அள வின்றி
வினைசெய மிடைந்தநோய் அருந்தி,
திருந்தினை பொறையின் உள்முறை எல்லாம்,
திருமணிக் குன்றுஒத்தாய்,' என்று,
மருந்தினைப் போன்று, வருந்தினர் வருத்தம்
மறுத்து,உளம் குளிப்ப, நல் வரமே
அருந்தினை என,ஆறுமணி அளித்தேன்—
அரும்பொறை அருளரசு உடையோய்!. 38

ஏழாம் மணி இறப்போர்க்குத் துணையாம் வரம்

தாயொடு புதல்வன் இருபுடை தாங்கி,
தரும்துயர் ஆற்று(ம்)அருள் இயக்க,
தீயொடு தீந்த தளிர்உடல் நீக்கிச்
சென்று,தூது உரைத்தனை என்று,
நோயொடு மெலிந்த உடல் கெடும் எல்லை,
நொந்தவர்க்கு உதவநீ, ஒளியின்
வாயொடு மலர்ந்த கடைமணி வரமே
வகுத்ததாம்—வான்தொழும் மரபோய்! 39

பிதா ஆசியளித்தல்

தேன்பயில் மதுரத்து இனிதில்நீ வளர்த்த
திருமகன் அளித்த மன் னுயிர்கட்கு,
ஊன்பயில் உடலால் உறுங்கசடு அகற்றி,
உரியநல் லறநெறி நிறுத்தி,
மீன்பயில் வான் வீட்டு அவ் வுயிர் சேர்த்தி,
விழைந்து அர சாள,இன்று உனக்கே
நான்பயில் வரங்கள் வகுத்தி என்று ஆசி
நல்கினன் பொதுவற முதலோன். 40

---

38. முகத்து - முகம்போல. வினை - துன்பம்.

39. அருள் இயக்க - அருளைக் காட்ட. எல்லை - பொழுது.

40. வகுத்தி - வகுத்திடுவாய். பொதுவற—பொதுவற்ற - தனி.

தேவசுதன் வாழ்த்தும் வரமும்

“கரைகொன்(ற) அருள்கொண்டு, அவ்வுலகு உறைகால்,
களிப்பில்–உன் உரை மறுக் கிலன் நான்;
திரைகொன்ற நயங்கொள், இவ்வுல கிலும்நீ
செப்பு(ம்)உரை மறுக்கிலாது,என்றும்,
நிரைகொன்ற நசைகொள் மன்னுயிர்க்கு இரங்கி,
நீஎனைக் கேட்பவை அளிப்பேன்—
புரைகொன்ற வளங்கொள் ந(ல்)லோய்!”எனத் தேவ
புதல்வனும் ஆசியைத் தந்தான். 41

தேவநேயன் அருளிய வரம்

“மீன்நிலம் முடியாள் திருமண நாளில்,
வினையறு நேயமா(ம்) நானே,
தேன்நிலம் துணர்கொய் இக்கொடி தந்தேன்;
சேர்ந்து உனை அண்டின யாரும்,
கான்நிலம் கொடியின் நீழலில் உய்யக்
கருணைசெய் வேன்”எனத், தேவ
வான்நிலம் காத லாம் பிரான், ஆசி
வகுத்து,அருள் வெள்ளமும் பொழிந்தான். 42

சூசைமுனிவர் திரியேக கடவுளை வணங்குதல்

நல்கிய ஆசி நயத்துஉயர் சூசை,
நறுமையிற் பிரிவிலாது, ஒன்றாய்
மல்கிய செல்வத்து உரியஓர் கடவுள் –
வழங்கும் ஆள் மூன்றையும் வணங்கி,
பில்கிய நயனில், உம் வயங் காட்டப்
பிழைத்தஇத் தொழும்பனை நோக்கி
அல்கிய புன்மை வளம்படச் செய்தற்கு,
அருச்சனை உமக்கு’எனப் பணித்தான். 43

---

41. *திரைகொன்ற* - கடலினும் பெரிய. *திரை கொன்ற*-நீதி முறையைக் கடந்த.

42. *மீன் நிலம்* — விண்மீன்கள் நிலைநிற்கும். *காதல் ஆம் பிரான்* - அன்பெனும் கடவுள். (பரிசுத்த ஆவி)

43. *நறுமை* - நன்மை. *பில்கிய நயனில்* - பொழியும் அன்பால். தொழும்பன் - அடிமை. அல்கிய புன்மை - (என்னிடம் உள்ள) சிறிய நன்மை. செய்தற்கு — செய்ததற்கு.

குசைமுனிவர் உலகின் அருள் அரசர் (கவிக் கூற்று)

அன்னான், அன்றுஅடை அன்ன வ ரங்களினால்,
உன்னு வண்ணம் அருந்தயை ஓம்பி,வாழாப்
பொன்னால் நாறுஉல கிற்புக உய்த்தஉயிர்,
என்னால், ஈங்கு,அளவு ஏத்துவது ஏலுவதோ? 44

தாயே ஒக்க அருந்தயை ஒக்கும், அரு
நோயே ஒக்க மருந்தினை ஒக்கு(ம்), நுழை
பேயே ஒக்க அரண் பிணை ஒக்கும்,உயிர்
மீயே ஒக்க, விடாத்துணை ஒக்கும், - இவன். 45

தாக்கி வெம்பகை தந்த சவத்தை, இவன்
நோக்கி, நண்பகல் முன்,இருள் நூறுவபோல்
போக்கி, அம்புவி பூத்தன புன்கணெலாம்
நீக்கி, இன்ப நிழற்கொடி யாற்பரிப்பான். 46

நொந்தால் ஆதர வாம்,உறு நோய் ஒழியா
வந்தால், நாள்ஒழி வன்று,மருங்கில் உற்றி,
செந்தா ரால்நிழல் செய்து,வழித் துணையாய்க்
கந்தாம் வான்கதி யின்கரை ஏற்றுவனால். 47

பின்ரு(த) ஓர்நசை யாற்பெய ராதுஅணுகி,
குன்று(த) ஓர்அருள் கொள்இவன் நம்பினருள்,
பொன்று(த) ஓர்துயர் பூத்து,ஒழி யாமெலிவில்
நின்றார் ஒரொரு வர்,நில(ம்)மீது உளரோ? 48

எண்ணென்று ஆயின திக்கு,இவை யாவும்உற,
விண்நின்(ற) ஆர்ஒளி விஞ்சிய மாமுடிசூழ்
மண்நின்று ஆள்,பல மன்னவர் மன்னவனே—
கண்,நின் றுயின காதை, உரைத்திடுவாம். 49

---

44. வழா - குற்றமற்ற. பொன்னால் நாறு உலகில் - பொன்போல் விளங்கும் மோட்சத்தில்.

45. தயை ஒக்கும் - தயை செய்யும். பேயே ஒக்க - பேயைப் பிற்படச் செய்ய. பிணை அரண் - கட்டிய கோட்டை. மீயே ஒக்க - மேற்கதிசேர. ஒக்கும் - ஒத்திருப்பான்.

46. சவம் - பேய். நூறுவபோல் - கெடுவதுபோல். பரிப்பான் - தாங்குவான்.

47. ஒழிவு அன்று - இறக்கும் காலத்தில். மருங்கில் உற்றி - அருகிற் சென்று. செந்தார் - பூங்கொடி. கந்தா - பற்றுக் கோடாகிய.

48. பின்ருத - பின்னிடாத.

49. எண்ணென்று ஆயின திக்கு - எட்டுத் திக்கு. மன்னவனே கண் - அரசனிடத்தில்.

உரோமை அரசன் லெயுபோல்தின் மாட்சிமை

அயப்போது அலர்வே லிஅணிந் து,அழியா
நயப்புஓ கையின்,ரோ மைநாடு இனிதுஆள்,
வியப்போ டுவணங்கு இகல்வெம் படைவெல்
லெயுபோல்து எனும்நா ம வெள்வேல் இயலான். 50

கோடா துதனித் தகுகோன் மையினான்,
வாடா தநறு மரைமா லையினான்,
விடா தநிழற் குடைவே லையினான்,
ஓடா அடல்தா னையுடைக் கடலான். 51

தவர்க்கும், கடிதாம் தக வுற்றுஇகல்கின்
றவர்க்கும், கனிநன் றிடும் அன்பு இயலான்,
உவர்க்கும் கடல்சூழ் உலகிற்கு உளராம்
எவர்க்கும், தயைஏந் தியதா தையினான். 52

முயலே கடந்தான், முரணால்; அருள்தாய்
இயலே கடந்தான், இயை அன்பு இயலால்;
புயலே கடந்தான், புரிவான் கொடையால்;
மயலே கடந்தான், மணிகாட் சியினால். 53

தன்தாள், இகலோர் தொழுது,ஆம் தகைமேல்,
ஒன்றாய் உலகாள் உயர்வான் இறையோன்
முன்,தான் தொழுதுஏ வல்முடித் தலின்,நாம்
குன்றா நிறைவேட்டு உயர்கொள் கையினான். 54

சூசை முனிவர் மீது பக்தி செலுத்திப் பயனடைதல்

அனையான், அவியா தஅருத் திஎழீஇ,
நனையார் கொடியோ னைநயந் துஅணுகி,
வனையா வழிபா டுவனைந் துதொழ,
புனையா உயர்பா டுபுனைந் தனனால். 55

---

50. அயப் போது - நீர்ப் பூ. நயப்பு - பற்று.
51. மரை - தாமரை. விடாத - மாறாத.
52. தவர்க்கும் - முனிவர்க்கும். கடிதாம் தகவுற்று - செய்தற்கரிய தன்மைகொண்டு.
53, முயல் - போர். முரணால் - வல்லமையால். மயல் - உலக மயக்கம்.
54. இகலோர் — பகைவர். தகைமேல் — பெருமையிலும். நிறைவேட்டு — மாட்சியை விரும்பி.
55 வனையா — செய்யாத. புனையா - அடையாத. உயர்பாடு - உயர்வு.

தண்ணங் கொடிதந் தநிழற்கு, அணுகும்
வண்ணங் கொடுவாய்ந் தவளங் கொடு,சூழ்
தெண்ணங் கடல்சேர்ந் தசெகத்து, ஒருவன்,
எண்ணம் தவிர்மாட் சியைஏந் தினனால். 56

உற்றான் நிறைசீர் வளம்;உற் றபகை
இற்றான், உயிர்ஈ றுறஎய் தியநோய்
அற்றான், நெடிதுஆ வியசந் ததியைப்
பெற்றான்,-விரிபூ நிழல் பெற் றமையால். 57

பகைவர் நஞ்சுணவை வைத்தமையை அரசற்குக் காட்சியிற் கூறல்

நெஞ்சில் தகவுற் (ற)இழிவார் நிகரார்,
எஞ்சித் தகுபோர் வெலஈ டிலதால்,
'வஞ்சித் துவெல்வாம்' எனவந்து, ஒருநாள்,
நஞ்சிட்டு உயிர்ஈ றிடநா டினரால். 58

ஈண்டு,ஆங்கு உதவத், தனிஎய் திவளன்,
வேண்டா வினைமா யைவிளம் பி,'அதைத்
தீண்டா' தென,எண் டிசைகாத் துவழாது
ஆண்டான் உயிர்,அன் பொடுகாத் தனனால். 59

அரசன் சூசைமுனிவர்க்குக் கைம்மாறு செய்யக் கருதல்

மைமா றியஅன் புவலித் தவளன்,
மெய்மாறு உயிர்காத் தவினைக்கு, இனிஓர்
கைமாறு இடுதன் மைகணித் தனனால்—
பொய்மா றியமாண்பு உயர்பூ பதியே. 60

வேந்தர்க்கு ஓலைபோக்குதலும் அவர் வருகையும்

ஒல்லென்று உலகெங் கணும்ஓ லைகள்விட்டு,
எல்லென்று ஒளிஏ வியதன் குடைக்கீழ்,
நல்லென்று உறைநா டர்விளித் தனனால்—
செல்லென் றுமுழங் கியதிண் முரசான். 61

---

56. வண்ணம் கொடு-வகைக் கேற்ப. எண்ணம் தவிர்-மதிக்க முடியாத.

57. ஆவிய - விரும்பிய.

58. தகவு இற்ற - நிறையில்லாத. இழிவு ஆர் நிகரார் - இகழ்ச்சி கொண்ட பகைவர். உயிர் ஈறிட - கொல்ல.

59. வேண்டார் - பகைவர். தீண்டாதே + என — தீண்டாதென— தொகுத்தல் விகாரம்.

60. மை மாறிய — (பகைவர்) வஞ்சனையை மாற்ற. அன்பு வலித்த — அன்பினை நினைத்த. கணித்தனன் - நினைத்தான். பூபதி - அரசன்.

61. ஒல்லென்று - விரைந்து. எல் என்று - கதிரவனைப்போல். நல் என்று உறை - நன்றாய் வாழும்.

கோலைப் பொருவக் கடு கொற் றர்கொணர்
ஓலைக் கதைகேட்டு,உணரத் தொழுதே,
வேலைப் படைவேந் தர்எலா ரும் எழீஇ,
காலைக் கடியக் கடிதுஎய் தினரால். 62

மஞ்சஞ் சுகவன் னிவிழிக் களிறும்,
மஞ்சஞ் சுகமேல் வளர்தே ரு(ம்)நிலா
மஞ்சஞ் சுகவாள் அபயா ரும்உறீஇ
அஞ்சஞ் சுக மாய் வதி நாடு,அதிரும். 63

கூடார் முகில்ஆர்த் தனகோ டையென,
கூடார் தொழுகோ முரசின் குரலே,
கூடார் பறவைக் குலம்அஞ் சிஎழ,
கூடார் படையால், புவிகூ சினதே. 64

புண்கீ றினவே லினர்சூழ் பொதுள,
மண்கீ றின—வல் லுருள்தேர் கள்திரள்;
விண்கீ றின—வெண் கொடியும் குடையும்;
கண்கீ றிய—பல் படைகால் ஒளியே. 65

நீர்ஏந் தியநித் திலநீள் குடையும்,
சீர்ஏந் தியசெய்ப் பவளக் குடையும்,
நேர்ஏந் தியநீ லமணிக் குடையும்,
ஏர்ஏந் தியநல் இருள்ஏந் தினவே. 66

தண்தா ரின்தருச் சரிதேன் துளியும்,
விண்தா ரையின்வே ழம்உகும் கடமும்,
பண்தா வியபாய் வயமாக் குரமே
கொண்டுஆ யதுகள் குவை,நீத் தனவே. 67

---

62. கோலைப் பொருவ - அம்புபோல. காலைக்கடிய - காற்றினும் வேகமாய்.

63. மஞ்சு அஞ்சு — முகட்டுத் தீயினும் (சூளைத் தீயினும்) மேலாக. வன்னி - தீ. மஞ்சு அஞ்சுக - மேகங்கள் அஞ்சும்படி. நிலா மஞ்சு — நிலாவின் அழகு. அபாயர் - அபயர் - வீரர். உறீஇ - வருமாதலால். அஞ்சம் - அன்னம்.

64. கூடுஆர் - (மலையின் உச்சிமேல்) கூடி நிறைந்த. கோடை முகில்- கோடை காலத்து மேகம். [2]கூடார் — பகைவர். [3]கூடு ஆர் — கூட்டிற் கிடந்த. [4]கூடுஆர் - கூடிநிறைந்த

65. கண்கீறிய — கண்ணைக் கிழித்து மின்னின.

66. இருள் ஏந்தின — இருளைப் பரப்பின.

67. தரு சரி — வாசனை வீசும். கடம் - மதம். பண்தாவிய — கலன் அணிந்த. குரம் — குளம்பு. நீத்தன - அடக்கின.

மலைநேர் இரதம், வளிநேர் பரி,வான்
கலைநேர் குடை,வான் கனம்நேர் கரி,நீர்
அலைநேர் அபயர், அடிநேர் தொழுதே,
நிலைநேர் வலிநேர் அரசு,அண் டினரால். 68

பரிபூட் டியதேர் பலவேறு அரசர்,
கரிபூட் டியதேர் கடிது ஓட்டு(ம்)அரசர்,
எரிபூட் டியதேர் மிசை எய்து(ம்)அரசர்,
அரிபூட் டியதேர் அரசுஅண் டினரால். 69

வந்து கூடிய அரசர்கள் இராயனை வணங்குதல்

பொங்குஆர் கலிமேல் பொலிவெஞ் சுடர்போல்,
அங்குஆர் அரசர் கடல்மீது அவிர,
சிங்கா சனமேல் ஒருசிங் கமென
மங்கா ஒளிமன் னன்,-எழுந் தனனே. 70

விண்திக் கில்விளங் கியவெஞ் சுடரை
அண்டிக், கிளர்மீன், அடிஏத் துவபோல்,
மண்திக் கில்,எலா முடிமன் னவர்வந்து,
எண்திக் கில்இரா யனைஏத் தினரே. 71

அன்னார் அவை,ஆ ரணர்ஆ ரவை,மெய்
மன்னார் அவை,மந் திரிமார் அவை,மற்று
ஒன்னார் தொழும்ஓங்கு அயில்ஓங்கு அவை,சூழ்
பொன்னார் அடிபொற் புற,நண் ணினரே. 72

வயிர்செய் ஒலி,மற் றொலிமா றியபின்,
செயிர்செய் பகைதீர்த் த சிறந் தமுகத்து,
அயிர்செய் இனிதுஓ ருரைஆய்ந்து, அறைவான்,-
உயிர்செய் அமிர்ந்துஏந் தியமார்பு உரியோன். 73

---

68. வான்கலை — திங்கள். வான்கனம் — மேகம்.

69. எரி — எரிவேகப்புரவி. அரி — சிங்கம்.

70. ஆர்கலி — கடல். அவிர — விளங்க.

72. அன்னார் அவை — அவ்வரசர் கூட்டம். மெய் மன்னார் அவை — உடலைப் பகைத்த முனிவர் கூட்டம்.

73. வயிர் செய் ஒலி — ஊது கொம்பொலி. சிறந்த முகத்து - மகிழ்ந்த முகத்தோடு. அயிர் — சருக்கரை-இனிமை.

அரசன் லெயுபோல்து, 'நிலையாமை' பற்றி அவையோரிடம் கூறுதல்

இன்றே உள்ளோர் அன்றே மாள்வார்; இதுவல்லால்
பொன்றார் உண்டோ பூதலம் எங்கும்; புகழ்விஞ்சக்
குன்று மின்னும் காசொளி கொள்மா முடிகொண்டே,
நின்றாருள்ளும், பொன்றுஉயிர் நீங்கா(த) எவனுண்டோ? 74

'ஒன்னார் அஞ்சும் வண்சிலை அஞ்சா, உரிநன்னூல்
சொன்னார் சொல்லும் பாவுரை அஞ்சா, சுடர்மொய்ப்ப
மின்னார் மன்னர் கோல்ஒளி அஞ்சா, விரியாப்பூ-
அன்னார், சேடுஅஞ் சா-விளிவு' என்று அறிவார் யார்? 75

மேலார் கீழார் யாவரும் ஒன்றாய் விளிவாரேல்,
கோலால் ஓங்கு,ஆங் காரம்உளத்தே கொ(ள்)ளுவானேன்;
சேலார் முந்நீர் சூழ்புவி ஆண்டே, செயிர்மொய்க்கும்
பால்ஆய்ந்து, என்கோல் நீக்குதல், நீங்காப் பயனாமால். 76

சூசை முனிவர்க்கு முடிசூட்ட எண்ணியதன் கருத்தைக் கூறுதல்

வீடாச் செல்வன், நோய்அற என்றும் விளியாதான்,
கோடாக் கோலான், தண்ணருள் மாறாக் குடைவல்லான்,
வாடாத் தண்பூ வாகைஅ ணங்கான், வளர்அன்பான்,
ஈடா டாத்தன் மைத்து,எமை, அன்னான் இனி ஆள்வான். 77

அன்னான் என்னான் அன்ன அறைந்தால், 'அருளார்ந்து
மின்னார் விண்ணும் மண்ணும் ஒருங்கே வினைதீர்ப்ப,
தன்னால் தான்ஆண்டு ஓம்பி நிழற்றும் தயையாற்கே,
மன்னா நிற்கும் தண்ணிழல் செய்த வளனன்றோ? 78

'நஞ்சிட்டு, எஞ்சா வஞ்சனை நல்கும் வினைநீக்கி,
எஞ்சித் துஞ்சாது என்னுயிர் காத்தான் இவன்'என்று,
மஞ்சிற்கு எஞ்சா(த) ஆர்அருள் பெய்த வளம் ஓர்ந்து,என்
நெஞ்சில், துஞ்சா மின்முடி சூட்டல், நினைவுற்றேன். 79

---

74. அன்றே — (குறித்த) அந்நாளில்.
75. விரியாப் பூவன்னார் — இளைஞர். சேடு — அழகு. விளிவு — சாவு.
76. பால் ஆய்ந்து — தன்மையை ஆராய்ந்து. என்கோல் நீக்குதல்— என் செங்கோலாட்சியைத் துறந்து விடுதல்.
77. வீடாச் செல்வன் - கெடாத செல்வன். அணங்கான் — அழகுடையவன். ஈடுஆடா — நிகரில்லாத.
78. என்னான் — யார்.
79. மஞ்சிற்கு எஞ்சாத — மேகமாரியிற் குறையாத.

'பின்றாது ஓம்பி, நோய்பசி பேராப் பகைபொன்று,அப்
பொன்றா அன்பால் ஆண்டு,எனை உம்மை, பொலிஇன்பம்
குன்றா வீட் டுஉய்ப் பான்,மலர் குன்றாக் கொடிக்கோமான்
என்றான்—நின்றார் உள்ளுருகப் பேர் இயல்வல்லான். 80

வேந்தரின் மகிழ்ச்சியும் வேண்டுதலும்

'உள்ளிய துறவிற் சொன்ன உரையிதோ' என்ன அஞ்சி,
தெள்ளிய வான்மேல் ஆள்வோன்,சென்றுஎமை, ஆளல்நன்றேல்,
விள்ளிய கொடியோன் ஏவும், விடைப்பணி நீதந்து, எம்மை
அள்ளிய குறைதீர்த்து ஆள்வது, அமைதியென்று, உவப்பில் தேர்ந்தார், 81

அரசன், சூசைமுனிவர்க்கு முடிசூட்டு விழாபற்றி முரசறையுமாறு வீர குன்றனிடம் கூறுதல்

கோ முரசு அரசன், வீர குன்றனை முகத்து நோக்கி,
மாமுரசு ஒலிப்பச் சொல்லும்; வளன்முடி, பத்தாம் நாளில்,
பூமுரசு ஆர்ப்பச் சூடப் பொற்புற நகரம் பூண
வே,முரசு அறைவி" என்றான்; விரைந்து அவன் தொழுதுபோனான். 82

வீரகுன்றன் முரசறைதல்

வார்பிணி முரசம், யானை வளர்எருத்து ஏற்றிப் பைம்பொன்
தார்பிணி மார்பன், வான்மேல் தவழ்மனை கொடிமூ தூரில்,
கார்பிணி வரைமேல் மின்னிக் கதித்து இடி முழங்கி னாற்போல்,
பார்பிணி ஒழிய, ஓதை படர்முரசு அறைவித் தானே. 83

"கேண்மினோ கேண்மின், இன்பம் கிளைத்தசொல் கனியக் கேண்மின்;
வாழ்மினோ, பசிநோய் வஞ்சம் மறப்பகை ஒழிய வாழ்மின்;
பூண்மின்ஏ வியவான் வேந்தன், புவிமிசை முடியைச் சூடல்
பேண்மினோ; நகர மெங்கும் பெருநகை அணிமின் ஈண்டே." 84

வான்அரசாகில், இப்பார், வானுல காகப் பூண்மின்;
பானு அரசாகில், கங்குல் பட்டு,ஒளி பரவுமன்றோ?
கோன்நர தேவன் ஏவல் கொண்டமா வரத்தோன்,இங்கண்,
தான் நரபதியாய், ஒவ்வாத் தயைதளிர்த்து,எம்மைஆள்வான். 85

---

80. பின்றாது — விடாது. பொன்று — ஒழித்து. பேர் இயல் வல்லான் — பெருமையிற் சிறந்த இராயன்.

81. நன்றேல் — நல்லதாயினும். விடைப்பணி - பணிவிடை.

83. கார்பிணி - மேகம் சூழ்ந்த.

84. பூண்மின் ஏவிய — அணிகலனாக மீன்களைப் பூண்ட.

85. வான் அரசாகில் — வான்வாழ் அரசனாதலால். பானு அரசாகில்— சூரியன் அரசனாய் நிற்குமிடத்து.

தேவுலகு உரிய வண்ணம், திருவிழா ஒன்பான் நாளில்
பூவுலகு இயற்றி, பின்னாள், பூங்கொடிச் செல்வக் கோமான்
யாவுலகு அனைத்தும் வாழ, யாணர்மா மகுடம் சூடல்
மேவுலகு எழுக"என்ன, வியன்முரசு அதிர்ப்பச் சொன்னான்.86

மக்களின் மகிழ்ச்சி

தார்புனை முரசின் பேழ்வாய் தழங்(கு)குரல் கேட்ட காலை,
கார்புனை மனைமூ தூரில் கதத்த காற்று அதிர்ந்து வீச,
நீர்புனை புணரி பொங்கி நெருங்குஅலை மயங்கிற் றென்ன,
நார் புனை உவப்பில், யாரும் நடந்து இரிந்து எதிர்ந்து,- ஓயாரே. 87

தெருக்கள் தோறும் அலங்காரம்—நவ நாள் கொண்டாட்டம்

கன்னியங் குமரி வாழை கமுகொடு மயங்க நாட்டிச்
சென்னியந் தளிரும் பன்னம் சேர்ந்த தீங் கனியும் பூவும்
பின்னி, அங்கு இடங்கள் தோறும் பெருக மொய்த்து, எவணும் நாற
மின்னி,அந் நகர்,வண்டு ஆர்க்கும் விரிமலர்க் காவிற் றாமே. 88

நெட்டொளி மாடத்து உச்சி நேரிடை விடாது, நீலப்
பட்டுஒளிப் பந்தர் பாய்த்தி, பத்தியிற் பயிற்றிக் கோத்த
கட்டுஒளி மணிகள் நாறக் கதிர்ப் பகற்கு அஞ்சா,மின்மீன்
விட்டுஒளி பூத்த வான்போல், வியென்னமா நகரம் அன்றே. 89

செம்பொடி மணியின் தூசி, செம்பொனின் தூசி, சுண்ணத்து
அம்பொடி, சிந்து ரத்தோடு அயிர்மணல் முத்த மீதில்,
பைம்பொடி அலரும் சிந்த, படர்ந்த வான் மிரண்டு மீன்கள்
தம்பொடி மிதித்த லாகும்;– தகும் ஒளித் தெருவின் தோற்றம். 90

தெருத் தொறும் ஒழுங்கிற் பாய்ந்த திருவொளிப் பளிக்குத் திண்ணைப்
பருத்தொறும் பசும்பொற் பாவை பவள நீள் குறட்டி லேற்றி,
உருத்தொறும், இரவில், வில்வாய் ஒளிமணித் தீபம் மின்ன,
கருத்துறும் எல்லைக்கு ஏலாக் கவின்நகர், கேழ்த்த தன்றே. 91

---

86. யாணர் — அழகிய.

87. பேழ் — பெருமை. தார்புனை - அன்புகொண்ட.

88. சென்னி - உச்சியில். பன்னம் — இலை. எவணும் நாற — எங்கும் பரிமளம் வீச.

89. பகற்கு — சூரியனுக்கு.

90. அயிர் மணல் — நுண் மணல்.

91. பரு பளிக்குத் திண்ணை-பெரிய பளிங்குத் திண்ணை. உருத்தொறும்- ஒவ்வொரு உருவின் முன்னும். கேழ்த்தது - ஒளிர்ந்தது.

நகுமணிப் பாவை யாக, நங்கையர், மாலைத் தாமம்
தகுமணி நிரைத்து, வாய்த்த சாளரத்து ஒசிந்து நோக்க
தொகுமணிப் பறைகள் ஆர்ப்பும், சுட்(ட)அகிற் புகையும் சொல்ல,
மிகுமணி விழாவைக் காண,விண்ணவர் வந்தது ஒத்தார். 92

இச்செவி மதர்,கண் கையால், ஈறில முகந்து மாந்த,
மெய்ச்செவி, இனிய யாழில் விளை,இசை மதுவை மேய்ந்து,
கைச்செவி வளை,வில் வீச, களித்தமின் ஆடிப்பாடி,
எச்செவி மிக்கதுஎன்பது, ஈடிலா வியந்து நிற்பார். 93

பத்தாம் நாள்—பளிங்கு மண்டபப் பொலிவு

பண்நிறவாய் வண்டுஆர்க்கும் பனிப்பூ நாற, படர்மழை,மின்
தெண்நிறவாய்ப் பூம்புகையுள் மணிவில் வீசும் தெருவெல்லாம்,
விண்நிறவாய் மலர்ந்து,இவ்வாறு ஒன்பான் நாளும் விழாஅணி கண்டு,
ஒண்நிறவாய் இரவிஎழீஇ, விழைந்த நன்னாள் உதித்ததுவே. 94

பொற்பரப்பில் பவளத்தூண் நிறுத்தி, மற்றோர் புறம் படிகக்
கற்பரப்பிச் சுவரேற்றி, கவிழ்ந்த வான்போல் கதிர்மணியின்
நற்பரப்பில் சிரம்கூட்டி, நிலைக்கண் ணாடி நகநிரைத்து,
வில்பரப்பிக் கதிர்ப்பதிபோல் வேய்ந்தது ஆங்குஓர் மண்டபமே. 95

கலையீன்ற முறைஒல்காது,அங்கண் நாப்பண், கதிர்ப்பொன்னால்
உலையீன்ற அரிமுந்நான்கு எருத்தில் தாங்க, ஒளிஅல்கா
மலையீன்ற இனமணியால் குறட்டை ஏற்றி, வானோர்சேர்
நிலையீன்ற எழில்காட்ட, நிமிர்ந்ததுஓர்சிங் காசனமே. 96

சூசைமுனிவரின் உருவம்

கண்கனிய, மின்தெளித்துக் கதிரால் வீக்கிப் பானுயிராய்,
மண்கனியக் கனிவானோர் களிப்பிற் செய்த வடிவாக,
புண்கனிய மருந்தன்னோன் உருவம் அங்கண் பொலிந்து உயிர்போல்,
விண்கனிய எண்கனியத் திருவில் வீசி வேய்ந்த தன்றே. 97

---

92. மாலைத் தாமம் — மாலை ஒழுங்கில். உயர்ந்த சாளரங்களில் நின்று நோக்கிய மங்கையர், பறையொலியும் அகிற்புகையும் வான்மேற் செய்தியைச் சொல்ல, விழாவைக் காண வந்த விண்ணவர்போல் தோன்றினர்.

93. 1 3 4 செவி-செவ்வி-அழகு. மதர் - மிகுதி (மெய்ச்செவி - காது. செவி - செவ்வி என்பதன் இடைக் குறை.) என்பது - என்பதற்கு.

94. பண் நிற வாய் - வீணையிடத்து எழுந்த ஒலிபோல. நாற — மணம் வீச. மழை - மேகம். விண் நிற வாய் - வானுலகுபோல்.

95. சிரம் — சிகரம். பதி - இருக்கை.

96. ஒல்காது — தவிராமல். உலை ஈன்ற — உலையிலிட்டு வார்த்த. அரி எருத்தில் — சிங்கத்தின் பிடரியில். அல்கா - கெடாது.

97. கண் கனிய - கண்ணால் இன்பம் நுகர. பானு உயிராய் - சூரியன் உயிராக. புண் கனிய - புண்ணை இனிதாய் ஆற்றும்.

வான்பூத்த சுடர்க்குழவி மான வாய்த்த திருமகவை,
மீன்பூத்த பூங்கொடியோடு ஏந்தி, கண்டார் வினைதீர்ப்ப,
கான்பூத்த வாய்மலர்ந்து,உள் குளிர்ப்ப நோக்கும்களிமலர்க்கண்
தான்பூத்த தயைதளிர்ப்ப, உயிராய் உள்தங் கினது என்பார். 98

சூசையின் திருவுருவின் மேல் மாலைகள்

விரிமாலைத் தாமத்து விரிபூங் கோலான் மேல்,சுடரைச்
சொரிமாலை, பூமாலை, சுடர்பொன் மாலை, துகிர்க்குளும் தீ
எரிமாலை, மணிமாலை, முத்த மாலை இவை ஒருங்கு,ஓர்
உரிமாலை தலைகூட்டிக் கதிர் நீப்பு ஒப்பப் பரப்பினரே. 99

அரசன் சூசை முனிவரை வணங்குதல்

சென்னுக முழக்கொடுபல் பறைகள் ஆர்ப்பத், திருமணியாழ்
புன்னுக வண்டு,இசையால் புகழ்ந்து பாட, தொழப் பொருநர்,
பொன்னுக மணிமுகிற்பூம் புகைசூழ் தேக்கு(ம்) மண்டபத்தில்,
மின்னுக மணிமார்பன், மிளிர் தாள் ஏத்தி, விரைந்துற்ருன். 100

அலை,வரம்புஅற்று ஓடுவபோல், நகர மெல்லாம் அடர்ந்துநீஇ,வான்
நிலைவரம்புஅற்று, உம்பர்,மிசை 'பல்லாண்டு' ஓதி நிற்ப,மறைக்
கலை,வரம்புஅற்று உணர்ந்தோர்,தம் கருமம் ஆற்றி, மாதவற்கே
விலைவரம்புஅற்று அமைத்தமுடி, வேந்தர் வேந்தன் தொழுதணிந்தான். 101

அனைவரும் வணங்குதல்

படிவ ணங்குஅரசன் அடிவ ணங்க,எழ விழ,மறு
படிவ ணங்க, நிமிர் கிளைவ ணங்க,எனை குருசிலர்
அடிவ ணங்க,மறை யவர் வ ணங்க,அணி பணிபடை
யவர் வ ணங்க,அனை யவர் வ ணங்க, விரை விரிபுகை
முடி வ ணங்க,மலர் மழைவ ணங்க,விரி கொடிகுடை
முனர் வணங்க,முர சொலிவணங்க, முழ வொடும்எனை
துடிவ ணங்க,இசை குழல்வ ணங்க,மிசை அமரர்கள்
துதிவ ணங்க,முடி வில வணங்கும்-இரு உலகெலாம். 102

---

99. சொரி மாலை - சொரியுந் தன்மையில். துகிர் - பவளம். கதிர் நீப்பு ஒப்ப - கதிர்கள் விரிந்து பரவுதல் போல்.

100. செல் நாகம்—மேகம். தேக்கும்—நிறையும்.

101. வான் நிலை வரம்பு அற்று—வானின் எல்லை கடந்து.

வானக நகரமோ!

மழைவ ழங்க,இடி ஒலிமு ழங்கல்நிகர் பலபறை
　　வயின்அ டங்கல்-ஒலி மிகமு ழங்க,முத லவன்மணி
மழைவ ழங்க,முடி யணிஅ ணிந்தஎளை யவர்நிதி
　　மழைவ ழங்க,நிறை கலைய ணிந்தமறை யவர்துதி
மழைவ ழங்க,இவர் மதும லிந்தநற விடுமலர்
　　மழைவ ழங்க,அவர் புழுகுஇ யைந்துகமழ் பலபுனல்
மழைவ ழங்க,வெளி மிசைவ ழங்குமழை மெலிவுற
　　மணிவ ழங்குநகர், மிசைவ ழங்குநகர் பொருவுமே. 103

அழுகையொலி அமர்ந்த இடங்கள்

நகவ ளர்ந்தஅறம், நகம லிந்ததவம், வினை அழ;
　　நகமி டைந்ததிரு, நக,மி குந்தகொடை, மிடிஅழ;
நகவ ளர்ந்தகலை, நகஅ னந்த மறை,-வெளிறு அழ;
　　நகநி வந்தமுயல், நக்இ யைந்தபொறை, பிணியழ;
நகவ ளர்ந்தநயம், நகஅ லர்ந்ததயை,-பகைஅழ;
　　நகமு திர்ந்த வளம் நகஉ யர்ந்தகளி, துயர்அழ;
நகவ ளர்ந்தநரர், நகம கிழ்ந்துஅமரர், வெறிஅழ;
　　நகந நலங்கள்நக, நகம்எ ழுந்தது,அழ நரகெலாம். 104

மகிழ்ச்சி மிதந்த இடங்கள்

குழல்எ ழுந்தஇமிழ் இசைஇ சைந்தகுரல், இணையில;
　　குயில்ஒ ழிந்தவயி ரியர்க ளிந்ததுதி, இணையில;
கழல்எ ழுந்தஅணி நகந யந்தநடம், இணையில;
　　கடல்பி றண்டதென மறுகுஅ டர்ந்தகுழு, இணையில;
அழல்எ ழுந்தமணி குளிர, விண்டஒளி இணையில;
　　அருள்அ லர்ந்தமுகம் நகமு யன்றகொடை, இணையில;
நிழல்எ ழுந்தநிலை நிறைஅ மைந்தஅமுது, இணையில;
　　நிழல்எ ழுந்தகொடி வளன்உ மிழ்ந்தவரம், இணையிலால். 105

---

103. வயின் அடங்கல்—இடங்கள் தோறும். முதல்வன்-அரசன். மிசை வழங்கு நகர்—வான் மேலுள்ள நகரம்.

104. வளர்ந்த அறம்நக-வளர்ந்த தருமம் மகிழும்படி. வெளிறு-அறியாமை. நிவந்த முயல்-மிகுந்த முயற்சி. வெறி-பேய். நகம்-பூமி.

105. குயில் ஒழிந்த-குயிலினும் இனிதாய் நடம்-கூத்து. மறுகு-தெரு. நிலை - இடந்தோறும்.

முகைஅணிந்தஅணி மதுஉமிழ்ந்தமணம், அளவில;
முருகுஉமிழ்ந்தசுதை கலவை சிந்துரமும் அளவில;
புகைஅணிந்தமனை தொறும்எழுந்தகொடி, அளவில;
பொறிநுகர்ந்தநயம், மனம்நுகர்ந்தநயம், அளவில;
நகைஅணிந்தநகர் நனிகுவிந்தபயன், அளவில;
நவைகொணர்ந்தவினை அறவொழிந்தகுறை, அளவில;
தகைஅணிந்தஅருள் மிகவளர்ந்த நலம், அளவில;
தவம்அணிந்ததிரு வளன்உமிழ்ந்தவரம், அளவிலால். 106

அரசன் செய்த தானம்

செல் மழைக் கொடையான் அரசர்கோன், கோயில்
சென்றுபுக்கு, அந்தணர்க் காதி
நன்மறை நெய்பால் அமுதளித்து, எவர்க்கும்
நசையற வான்பொருள் வழங்கி,
வில் மழைப் போரில் மீண்டெதிர் பகைவர்
வெம்படை காண்பது மறுத்தோன்,
பொன் மழைக் கொடையால் 'இடு'வெனும் சொல்,இப்
புவனியிற் கேட்பது மறுத்தான். 107

அரசன் தேரை எழுந்தருளச் செய்க எனல்

கைவினை கொடையிற் பொழுதெலாம் இனிதில்
கடிந்து,வெங் கதிர்கடிந்து ஒளிப்ப,
தெய்வினை சுடர்வாய்த் திருமணித் தீபம்
நிறைந்து,ஒளி மணிகளோடு எறிப்ப,
மைவினை கங்குல் நுழைந்து,இருள் உலகில்
மல்கினது அந்நகர் அறியா,
மெய்வினை ஒற்றர் உரைப்ப, ஈண்டு அரசன்,
'விரி மணித் தேர்எழ' என்றான். 108

தேரின் அமைப்பு

அடியென வெள்ளி உருளை, பொன் அச்சிட்டு,
அவிர்ந்தெழு(ம்) மரகத மலையில்,
கொடியென வெண்முத் தாரமே தவழ,
குடியென மணிஉருக் கிளம்ப,
கடியெனப் பசும்பொற் பரப்பில், வம்பு அலராய்க்
கதிர் மணி பூப்ப,மேல் ஒளி வான்
முடியெனச் சிகரம் வயிரத்தூண் தாங்க,
முனிப்பதிக்கு அமைத்ததோர் இரதம். 109

---

106. சுதை — சுண்ணம்.
107. காண்பது மறுத்தோன்—காணாதபடி செய்தவன்.
108. தேர் எழ — தேர் எழுந்தருளச் செய்க.
109 மணி உரு — அழகிய உருவம். கடி — விளக்கம். முனிப்பதி — முனிவர்களின் தலைவன் - சூசை முனிவர்.

சூசையின் திருவுருவைத் தேரில் ஏற்றுதல்

ஒற்றையாம் ஆழித் தேர்நலம் நாண,
ஒற்றைநன் மாமையில் வனைந்த
கற்றைஆர் இரதத்து உயிரென, பகல்செய்
கதிரென, கடியொளி வடிவம்
முற்றையார் மணிபொன் முத்துஅலர் வழங்க,
முரசினம் முகிலினும் முழங்க,
மற்றையா வரும்சூழ் மன்னரோடு இறைஞ்ச,
மறையவர் ஏற்றினர் தொழுதே. 110

தேரோட்டம்

கள்ளுற மலர்ந்த கடிமுகை பரப்பிக்
கதிருற விளக்கிய தெருவில்,
தெள்ளுற விளங்கி, வான்தெரு இரவி
திரிவதே போன்று, பேருவகை
உள்ளுறத் தொழுவார் நசையள வொடு,மெல்
உருண்டு, கண் கூசுவ பேணி,
அள்ளுற மணிப்பூம் புகைமுகில் சூழ
அருளுற நடந்ததே—இரதம். 111

குடை, சாமரை, பொன் மணிப் பொடிகள், தீபங்கள் இடுதல்

புல்பதிக் குழாத்தின் நிரைத்தன பிச்சம்,
புயற்குழாத்து எழுந்தன புகைகள்,
அல்பதித் திங்கள் பொழிகதிர்க் குப்பை
அணிக் குழாத்து இரட்டின கவரி,
தன்பதி பெயர்ந்து வீழு(ம்)மீன் குழாத்தின்
தனத்துகள் மணித்துகள் சிந்த,
பொன்பதிச் சுடர்கள் குழாத்து,எரி மணிவாய்
பூப்ப,தண் பகல்விளக்கு, அளவோ? 112

110. ஒற்றை நன்மாமையில்-நிகரில்லாத நல்லழகோடு. முற்று ஐ ஆர்-முழு அழகு நிறைப்ப.

111. நசையளவொடு — ஆசையளவில்.

112. புல்பதி—பனைமரம். பிச்சம்-குடை. தனத்துகள்-பொன்துகள்.

பாடல் ஆடல் முதலிய காட்சிகள்

பண்கவர் குரலால், பண்ணிசைக்கு, இசைப்பாப்
பாடலும், ஆடலும், ஒளிமின்
மண்கவர் சுடர்வாய் மணித்தெருத் தொறு(ம்)எல்
வாய்த்தலு(ம்), மற்றழகு அனைத்தும்
கண்கவர் வனப்பிற் கண்டனர், கணியாக்
களிப்பொடு வியந்து,கை விதிர்ப்ப,
வெண்கவர் தயையிற் பார்த்தென, சூசை
விழித்தகண் விளையருள், அளவோ? 113

சூசையின் திருவுருவைக் கண்டு மக்கள் கூறிய மகிழ்ச்சியுரை

பணிநிலா வீசும் மணித்திரள் பூத்து
பகல்செயும் கைக்கொடி நோக்கீர்;
அணிநிலாப் பிறையை மிதித்தெழுந்து, ஒளிசெய்,
அடிந(ல்)லாட்கு அன்றியே, அன்றுள்
மணிநிலாப் பிறைபோல் ஈன்ற,தன் தேவ
மகற்கும்,—அன்பு அருள்நிழல் செய்த
துணிநிலாக் கொடியே; இந்நிழல் கொண்டார்
சுடும்துயர்க்கு அஞ்சவோ? என்பார். 114

மறையணி தவத்தோன் அரசுற்றி,தானே
மறைக்குஅணி யாயினன் என்பார்;
பிறையணி பதத்தைத் தான் அணிந்து,அன்ன
பிறைக்கு,அணி யாயினன் என்பார்;
பொறைஅணி குறைகள் தீர்ப்ப,இன்று அரசாய்,
பொறைக்குஅணி யாயினன் என்பார்;
இறையணி முடிகொண் டான்,இனி நாம்இவ்
இறைக்குஅணி யாகுதும் என்பார். 115

தான் செய்த தவம் செய் அரசுஇதோ, நாமே
தவப்பயன் பெற்றனம் என்பார்;
கான் செய்த கொடியோன் புனைமுடி காணக்
கண்பெற்ற பயன் பெற்றும் என்பார்;
ஊன் செய்த பிறப்பில், உருவில வானோர்க்கு,
உயர்பயன் பெற்றனை என்பார்;
வான் செய்த உவகை பெற்றனம், உன்னை
மன்னனுப் பெற்ற நாம் என்பார். 116

---

113. எல் வாய்த்தலும் — பகலொளி வாய்ப்ப விளங்கலும். கணியா — நினையாத. விதிர்ப்ப-விரிந்திருப்ப. எண்கவர்-மனம் கவரும்.
115. பொறை—பூமி.

*தேர் சுற்றி வந்து நிலை நிற்றல்*

பன்னரும் உவப்பொடு பலவும் கூறியே,
பொன்னருங் கொடியினேன் இருக்கை போற்றி,முன்
மன்னரும் வியப்புற வனைந்த கோயில்வாய்,
மின்னரும் கொடிஞ்சித்தேர் விளங்க நின்றதே. 117

கோவிலுள் சூசையின் திருவுருவை வைத்தல்

செய்முறை அனைத்தையும் திருத்தி, வேதியர்
கைமுறை தொழப்,பறை கறங்க, யாவரும்
மெய்ம்முறைத் துதியொடு விழுந்து போற்ற,நேர்
நைமுறை, கோயிலுள் உருவம் நாற்றினர். 118

சூசையின் திருவுரு வைத்த இடத்தின் மாட்சி

மிடிவினை பசிபிணி வெறுப்பு நோய்,பகை,
மடிவினை அடைந்தபல் அரக்கர் வண்ணமே,
அடிவினை என்றுகீழ்க் கிடத்தி,அஞ்சிய
கடிவினை முகத்திடைக் காட்டி நின்றவே. 119

நாவமணி யானைகள், நவின்ற தீயவை,
கால்மணி பட மிதித்து, உயர் தம் கைதொழ,
வான்மணி பூத்ததோர் மரக தக்கிரி,
நீல்மணி எருத்துஉயர் சுமந்து நின்றவே. 120

பைம்மணி மலையின்மேற் பணிசெய் பாவையாய்,
வெம்மணி உருக்கொடு வேய்ந்து,எண் விண்ணவர்
கைம்மணி தொழச்சிலர், சிலர் கலாநிதித்
துய்ம்மணிக் குறட்டினைச் சுமந்து தோன்றினர். 121

வையகத்து அரசர்கோன், வெற்றி வாகையாம்
ஐயகத்து இருதலைப் பறவை ஆகிலம்,
மொய்யகத்து அலர்ந்தபொற் சிறகின் மொய்ம்புமேல்,
மெய்யகத் தவத்துஅரசு, உயர்வி ளங்கினன். 122

---

118. நேர் நைமுறை-ஒப்புமை மெலியும்படி. நாற்றினர்-அமைத்தார்.
119. மிடி—வறுமை. கடி—அச்சம்.
120. எருத்து உயர் — பிடரிமேல்.
121. பைம்மணி - பசுமை + மணி. பணி - பணிவிடை. வெம் மணி - சிவந்த மணி. கலாநிதி - திங்களின் கதிர் (போன்ற).
122. ஐயகத்து—அழகு மிகுந்த. மொய்ம்பு—தோள்.

மண்பட உலகெலாம் விற்ப வாய்த்தன
விண்படம் எனமணி விளங்க, ஓர் ஐவில்
உட்பட வளைத்தமா மூடி,ஓர் வானியாய்,
புள்படப் பறந்தவான் பொருநர், ஏந்தினர். 123

மின்தவழ் மணிவரை வேய்ந்த ஆசன(ம்)
முன்,தவழ் திருவொளி முகிழ்த்(த)ஐ, விற்கிடை,
பின்,தவழ் அணிக்கொடு, வியவர் பெற்றியால்,
பொன்தவழ் பாவைகள் போற்றி நின்றவே. 124

பாவைகளின் தன்மையும் இடமும்

சார்வயின் படாத்தயை தானம் அன்புஅருள்
ஓர்வயிற்று உதித்தன நால்வர்,ஓர்முகத்து
ஏர்வயின் கரத்துஅணி, எண்ணில் ஏந்துபு,
நேர்வயின் தென்கிழக்கு இறைஞ்சி, நின்றவே. 125

பேர்விளை காட்சியில் பிறந்த பாவைகள்,
சீர்விளை ஞானமும் நிறையும் சீலமும்
ஏர்விளை தாயொடு,இன் னமிர்தம் ஏந்தி,எல்
ஆர்விளைவுஉற, வட கிழக்குஅ மைந்தவே. 126

வாட்டிய உடற்கு,உயிர் வளர்ந்த மாட்சியைக்
காட்டிய முக(ம்)நகை, கதிர்ப் பொற் பாவைகள்,
ஈட்டிய கனி கொணர்ந் தெனத், தென் மேற்றிசை,
பூட்டிய கற்பொடு தவம்,பொ லிந்தவே. 127

பெண்ணுருக் காட்டி,உள் பெருகும் ஆண்மையில்,
வண்ணுருக் காட்டு பொற் கவசம் மார்பு அணிந்து,
ஒண்ணுருத் தொடை கொணர், பொறையும் ஊக்கமும்,
விண்ணுருக் கொடு,வட மேற்கு வேய்ந்தவே. 128

---

123. ஐவில்-ஐந்துவில். வானியாய்-மேற்கட்டியாய் வான்பொருநர்—வானவர்.

124. ஒளி முகிழ்த்த-ஒளிபூத்த. வியவர்-ஏவலர்.

125. சார்வயின் படா - சாருமிடத்துக் குறைவேற்படாத.

126. எல் ஆர் விளைவுஉற — பகல் விளைய.

128. தொடை — மாலை. வண்(மை) உரு — அழகு உருவம்.

குசைமுனிவரின் திருவடியில் அனைவரும் விழுந்து வணங்குதல்

தண்வாய்க் கொடியோன், இன்னணம்தன் தவத்துஈ ருலகின் அரசுஎய்தி,
மண்வாய், இன்ன நிலை பெற்று மணிவாய் முகத்து வீற்றிருக்க,
பண்வாய் மணிப்பூங் குரல் முரலப், பனிப்பூங் குரல்வாய் துதிதுவைப்ப,
விண்வாய் மணப்பூம் புகைமொய்ப்ப, விள்ளா இன்பத்து, அடிதொழுதார். 129

வானவர் கொணர்ந்த மாலையின் தன்மையும் கூறும்.

மன்னக் களிப்போடு இவையாகி,
 வான்வாழ் வான், இங்கு அரசுற்றான்
என்னக் காண, அவ்வுலகின்
 இறைவர் மொய்த்தா ரென, வானோர்
மின்னக் கதிர்வாய் உருக்காட்டி,
 வியந்து யாரும் கை விதிர்ப்ப,
பொன்நற் கலத்தின் மதுப்பெய் பல்
 புனையல் கொணர்ந்து, இவ் வுரைகொண்டார். 130

வான்மேல் மகுடம் புனை நாளில்,
 வரமா தவன் தன் கொடிபூத்த
தேன் மேல் தளம்பு(ம்)ஆறுஅறுநூறு
 சேர்ந்த மூவைந்(து) திருமணிப்பூ
நூல் மேல் முறைநை யாத் தொடுத்த,
 நுண்மண் ஆறுறு அணியிதென,
மீன் மேல் விளங்கும் வளன் பதத்தில்,
 விரும்பிச் சாத்தி மீண்டுஉரைத்தார். 131

"நாம்பா அணிப் பூங் கொடிபூத்த
 நறும்பூ வனைய சொல்மலரால்,
காம்பா அணிவில் வீசியதன்
 கன்னித் துணைவி, களித்துஇசைத்த
தேய்பாஅணி இஃது, இதைஅணிவார்
 திருவீட்டு உயர்வார்; அவ்விருவர்
சாம்பா அணித் தம் மைந்தனொடு,ஆர்
 தயையிற் காப்பார்" எனமறைந்தார். 132

---

129. பனிப்பூங் குரல் — குளிர்ந்த (மங்கையர்) குரல்.
130. மன்ன—நிலைபெற்ற.
131. நையா-வழுவாமல். நுண்மண்-நுண்ணழகுடைய. ஆறுறு அணி-$6 \times 6 = 36$ மாலை.
132. நாம்பா - மெலியாத. காம்பா - குறையாத. அணிவில் - திருவில். சாம்பா - கெடாத.

முனிவரின் வணக்கம்

திருவாய் மணித்தேன் மலர்சேர்த்த
நேர்பா வணியைத் தொழுதுஏந்தி
மருவாய் மணிப்பூம் வயல்நாடு
வடுவற்று உய்ய, ஈங்குஉற்றேன்;
உருவாய் வேய்ந்த என்இறையோ
னுடன்,மூ வரின்பொற் பதத்துஅணிய,
வெருவாய்ப் புன்சொல் அஞ்சியபின்,
விருப்பம் தூண்டத் தொழுதுஅணிந்தேன். 133

---

133. தேம்பாவணி — சூசை. மருவாய் — வாசனை பொருந்திய. வெருவாய் — அஞ்சி.

(தேவதாய் முன் வாய்மொழியாற் சொன்ன தேம்பாவணியை நானும் பொருளும் அளவும் மாருமல் தமிழிற் சொன்னேன் என்கிறுர் வீரமாமுனிவர்.)

---

தேம்பாவணி முற்றியது.

ஆகப் படலம் 36-க்கு விருத்தம் 3615.

# செய்யுள் முதற்குறிப்பகராதி.

( எண் பக்கத்தைக் குறிக்கும் )


| | |
|---|---|
| அக்கணம் | 9 |
| அங்கண் | 31 |
| அசும்பிடை | 127 |
| அஞ்சி வீமம் | 118 |
| அஞ்சினால் | 21 |
| அஞ்சேர் | 198 |
| அடல் வண் | 48 |
| அடாவிடா | 16 |
| அடிகாணாளி | 163 |
| அடிகோடி | 218 |
| அடிப்பணி | 72 |
| அடியென | 288 |
| அடுஞ் செந்தீ | 149 |
| அடைத்த | 270 |
| அடைந்த | 33 |
| அணித்தகு | 60 |
| அணியும் | 120 |
| அணியே | 251 |
| அண்ட | 148 |
| அண்ணாத் | 30 |
| அத்திறத்து | 141 |
| அத்திறத்து | 238 |
| அந்தோ | 119 |
| அந்நாளும் | 182 |
| அந்நிலை | 144 |
| அப்பணி | 180 |
| அம்மையே | 165 |
| அயநலம் | 258 |
| அயப்போது | 278 |
| அயர்வார் | 164 |
| அயிர் கட | 258 |
| அயிர்தந் | 181 |
| அய்ய | 147 |
| அரிந்த | 55 |
| அரியதோர் | 203 |
| அரிய வேத | 75 |
| அரியினம் | 224 |
| அரும் பொருள் | 90 |
| அருளிடு | 140 |
| அருளின் காணி | 51 |
| அருளின் முற் | 194 |
| அருள் திறந்த | 62 |
| அருள் புரிந்த | 142 |
| அருள் மிக | 260 |
| அருள் விஞ்சி | 248 |
| அருள் வீங் | 163 |
| அலை புறங் | 263 |
| அலை யீன்ற | 183 |
| அல்லது | 239 |
| அல்லறத் | 23 |
| அலை வரம் | 286 |
| அலை விரவு | 124 |
| அவா என | 172 |
| அவ்வுலகும் | 49 |
| அழுத | 184 |
| அளி அழ | 40 |
| அளி பொதுள | 257 |
| அளி முகத்து | 106 |
| அள் அம்பு | 206 |
| அள்ளிய அலர் | 27 |
| அள்ளிய அபயர் | 13 |
| அள்ளிய இருள் | 104 |
| அள்ளிய வாமன் | 126 |
| அள்ளுமாறு | 116 |
| அறத்து | 13 |
| அறத்தினால் | 253 |
| அறமே | 191 |
| அறமொன் | 69 |
| அறவினா | 45 |
| அற்ற வல் | 73 |
| அனையான் | 278 |
| அனைவரும் | 265 |
| அன்பு அருந் | 267 |
| அன்பு உகுக் | 161 |
| அன்புடையார் | 223 |
| அன்பும் | 34 |
| அன்பு வித் | 61 |
| அன்பிற்கு | 251 |
| அன்று உற் | 5 |
| அன்னச்சிறை | 201 |
| அன்னதன் | 205 |
| அன்னபிள்ளை | 195 |
| அன்னவாய் | 92 |
| அன்னநாட் | 245 |
| அன்னவட் | 246 |
| அன்னார் | 291 |
| அன்னான் | 277 |
| அன்னான் ஈங் | 4 |
| அன்னான் என | 282 |
| அன்னை | 39 |

| | |
|---|---|
| ஆக்கத்து | 6 |
| ஆசவா | 216 |
| ஆசெனும் | 86 |
| ஆசை ஏராக | 59 |
| ஆசை தரும் | 257 |
| ஆடகம் | 99 |
| ஆடிப் | 190 |
| ஆடிய | 108 |
| ஆடுவார் | 238 |
| ஆட்டியால் | 259 |
| ஆதலேனும் | 101 |
| ஆதி ஈறில | 246 |
| ஆதிதன் | 113 |
| ஆதிநீடு | 13 |
| ஆதிமாலை | 215 |
| ஆதியிலா | 76 |
| ஆதியீறு | 85 |
| ஆய இன்பம் | 238 |
| ஆயதும் | 266 |
| ஆயவை | 206 |
| ஆயினுன் அரு | 135 |
| ஆயினுன் உல | 246 |
| ஆயினும்அரி | 242 |
| ஆயினும்அவ | 10 |
| ஆயினும்வய | 43 |
| ஆய்ந்தே | 272 |
| ஆய்வார் | 120 |
| ஆரண வடி | 25 |
| ஆரணனே | 247 |
| ஆர்த்தன தேவ | 272 |
| ஆர்த்தனபல் | 273 |
| ஆலமும் | 140 |
| ஆலமே | 20 |
| ஆலம்விற் | 178 |
| ஆவலர் | 249 |
| ஆவல்செய் | 240 |
| ஆவிநோய் | 166 |
| ஆழி | 193 |
| ஆளஆசை | 1 |
| ஆருக்கொண் | 119 |
| ஆற்றிய | 172 |
| ஆற்றுநீர் | 140 |
| இக்கென | 253 |
| இங்கும் | 85 |
| இச்செவி | 285 |
| இடக்கை | 139 |
| இடத்திடத் | 233 |
| இடிகள் | 112 |
| இடிக்குவார் | 17 |
| இத்திறத்தவர் | 234 |
| இத்திறத்து இறை | 255 |
| இத்திறத்து உயர் | 146 |
| இத்திறத்து எதிர் | 210 |
| இத்திறத்தோர் | 221 |
| இத்துணை | 113 |
| இந்நிலை | 266 |
| இப்புறத்து இவள் | 17 |
| இப்புறத்து இனை | 165 |
| இரங்கிய | 45 |
| இரவலர்தம் | 72 |
| இரவலர்மாட் | 90 |
| இரவிற் | 200 |
| இருண்டு | 106 |
| இருந்த | 35 |
| இருமஞ்சன்ன | 102 |
| இருமணி | 68 |
| இருவரும் | 244 |
| இருவகைப் | 74 |
| இருவகை வழங் | 93 |
| இரும் | 35 |
| இருளடர்ந் | 87 |
| இருள்சொரி | 3 |
| இருள்படப் | 131 |
| இருள்பாய் | 227 |
| இருள்பொதிர் | 256 |
| இலங்கெழு | 24 |
| இலைகள் | 118 |
| இவா இயல் | 170 |
| இவையெலாம் | 46 |
| இவ்வழி | 24 |
| இவ்வாய் | 251 |
| இவ்விதி | 79 |
| இறந்தனர் | 125 |
| இறந்தான் | 197 |
| இறைக்கொரு | 237 |
| இற்று | 84 |
| இற்றெலாம் | 78 |
| இற்றை | 95 |
| இனம் சேர் | 51 |
| இனியஉண் | 117 |
| இனிய தேனி | 240 |
| இனிய யாவி | 35 |
| இனியவே கேட் | 108 |
| இனியவே பல | 110 |
| இனியார் | 164 |
| இனையஇயற் | 125 |
| இனைய கேட் | 205 |
| இனைய கேட் | 240 |
| இனையசாற் | 149 |
| இனையபல | 31 |
| இனையயா | 51 |
| இனையவும் | 224 |
| இனையவும் | 189 |
| இனையவும் | 197 |
| இனையன | 47 |
| இனைவரும் | 174 |

| | |
|---|---|
| இன்பு ஈரம் | 201 |
| இன்பு ஓதம் | 202 |
| இன்பாற் | 121 |
| இன்வளர் உவப் | 186 |
| இன்வளர் தலை | 10 |
| இன்றுநீ | 260 |
| இன்றுளார் | 106 |
| இன்றே | 282 |
| இனரொளித் | 159 |
| இன்றோ | 198 |
| இன்னவாறு | 44 |
| இன்னவை | 252 |
| இன்னன் | 272 |
| ஈங்கு நீ | 139 |
| ஈடு அடைந்து | 242 |
| ஈண்டு | 279 |
| ஈரஞ்சாம் | 204 |
| ஈர நீர | 214 |
| ஈரமொன் | 60 |
| ஈறில | 91 |
| ஈறு அடி | 12 |
| ஈறு உயிராக | 145 |
| ஈறும் ஒன் | 118 |
| உடல்கடிந் | 242 |
| உடுத்தன | 177 |
| உணங்கிய மரத் | 152 |
| உணங்கிய முல்லை | 266 |
| உண்டுவாழ் | 240 |
| உண்மைச் | 163 |
| உயிரொன்றே | 148 |
| உந்து சேழ் | 226 |
| உய்முறை | 43 |
| உய்ய நீள் | 50 |
| உய்வகை | 88 |
| உய்வகை | 146 |
| உரிவளர் | 171 |
| உரு ஒளித்து | 86 |
| உருகமா | 260 |
| உருக்கொடு | 72 |
| உருட்டிய | 3 |
| உருத்துணை | 45 |
| உருமணிக் | 80 |
| உருவளர் | 58 |
| உருவி | 17 |
| உருள் தேர் | 162 |
| உரை கடந் | 242 |
| உரைக்கடல் | 257 |
| உரைத்த | 27 |
| உரைத்தன | 176 |
| உலகிடத | 253 |
| உலகிற்கு | 134 |
| உலகு யாவும் | 56 |
| உலை கொள் | 118 |
| உலை வளர் | 42 |
| உலை வைத்த | 123 |
| உவணியால் | 34 |
| உளரி | 213 |
| உள்முழுது | 168 |
| உள்ளங் | 132 |
| உள்ளிய | 175 |
| உள்ளிய | 283 |
| உள்ளுறத் தெளி | 123 |
| உள்ளுறத்திரு | 46 |
| உள்ளுறவின் | 156 |
| உள்ளுமாறு | 110 |
| உள்ளே | 101 |
| உறப்பகை | 171 |
| உற்ற கோலம் | 85 |
| உற்ற நூல் | 207 |
| உற்றுன் | 279 |
| உனக்கு | 205 |
| உன்னல்லால் | 142 |
| உன்னிடை | 196 |
| உன்னுயிர் | 242 |
| உன்னைஉள் | 262 |
| உன்னைச் | 216 |
| உன்னோடு | 271 |
| ஊக்க ஏர் | 48 |
| ஊக்கமே | 36 |
| ஊக்கவித் | 36 |
| ஊட்டு அரக் | 207 |
| ஊராழி | 159 |
| ஊழ்வினை | 79 |
| ஊன்முகத் | 9 |
| எஞ்சா | 195 |
| எண்ணின் | 21 |
| எண்ணினும் | 10 |
| எண்ணொன்று | 277 |
| எண்திசை | 227 |
| எந்நாடு | 133 |
| எந்நாட்டு | 84 |
| எப்பொருள | 93 |
| எம்சிறை | 256 |
| எம்மை | 34 |
| எரிகாய்ந்த | 53 |
| எரிசேர் | 192 |
| எரிந்த | 234 |
| எரிமணி | 215 |
| எல்ஒளி | 210 |
| எல்பிழம்பு | 258 |
| எல்வினைக் | 185 |
| எல்லின் | 267 |
| எல்லை இல்லை | 251 |
| எல்லையில் | 196 |
| எல்லையிற்று | 89 |
| எல்லையே | 92 |

எல்லோ 163
எழுக 178
எழும்சுனை 41
எனையின்ற 219
என் உரைப் 248
என்கணே 18
(எ)ன்பவன் 46
என்றவாச 2
என்றலோடு 243
என்றனர் 125
என்றனன் 14
என்றனன் 220
என்றனன் 255
என்றன் 199
என்ருன் ஆடி 5
என்ருள் சூசை 103
என்ருன் தான் 183
என்ருன் இவனும் 198
என்ருன் மென் 250
என்று அத் 203
என்று இயை 153
என்று இரங் 39
என்று எழும் 257
என்று கூறிஞன் 37
என்று கூறி இன 49
என்ன இயம்பி 125
என்னெஞ்சு 199
என்ன நொந் 121
என்னமா 56
என்னவஞ் 133
என்னே மற் 102
என்னை உன் 37
எனைப் 235
எனையின்ற 219
ஏமம் சால் 66
ஏமம்சால் 193
ஏமுற்று 219
ஏரணி 183
ஏர்வழி 195
ஏரவிலை 99
ஏவியன் 10
ஏழ்பட 156
ஏழ்வரும் கதி 129
ஏழ்வரும் வரு 145
ஏற்றருங் 28
ஏற்றரும் 79
ஏற்றிஞன் 70
ஐம்பொறி 126
ஐயம் 246
ஐயறும் 232
ஐயன் 199
ஐயா இவ் 261
ஐவழி 125
ஒக்களவு 110
ஒப்பிலான் 252
ஒரு கைம் 64
ஒருவரும் 264
ஒல்லும் 56
ஒல்லென்று 279
ஒழிவரும் 268
ஒளிந்த 134
ஒளி பொருள 209
ஒளிபட 184
ஒளிமுகத் 266
ஒளிவளர் 249
ஒ[illegible]கை 94
[illegible]ற்றை 289
ஒன்[illegible]ல் 223
ஒன்[illegible] 282
ஓங்கய 213
ஓசை 257
ஓடை 140
ஓம்பு 50
ஓராழி 218
ஓர் அயில 259
ஓர் இயல் 249
ஓர் என 112
ஓர் என் [illegible]
ஓர்திறத 72
ஓர்நத 25
ஓர் மரக் 250
கசசொன்று 128
கடலுடை 20
கடல்வண் 22
கடலைக் 102
கடவுளா 108
கடுமாத 255
கடுவுயிர்த 56
கடையர் 234
கட்புலத்து 108
கட்புலம் 241
கட்புலன் 13
கண் அவாவு 55
கண் கடந்த 230
கண கடந்து 220
கண்கவர் 24
கண்கனிந்து 38
கண் கனிய 285
கண் கிழித் 255
கண்ணே 199
கண்ட 38
கண்ணிலான் 8
கண்தரும் 254
கண்புதைத் 26
கண்புறத் 149
கண் பொழி 20

| | |
|---|---|
| கண் மல்கும் | 112 |
| கண்மேல் | 119 |
| கண்மையின் | 173 |
| கண் வழி | 81 |
| கண் வழி | 259 |
| கதிராய | 202 |
| கதிர்செயும் | 40 |
| கயலாம் | 202 |
| கயல்பொருது | 128 |
| கயில் துணை | 25 |
| கரமும் | 16 |
| கரம் அணித் | 85 |
| கரவு | 179 |
| கரிநத | 197 |
| கருணைகர | 197 |
| கரைகொன்ற | 152 |
| கரைகொன்ற | 276 |
| கரையுடை | 165 |
| கலை செய் | 53 |
| கலைபுறங் | 180 |
| கலைபிறைல் | 255 |
| கலையின்ற | 285 |
| கழி இயின | 81 |
| கழி இயின | 154 |
| கழி இயின | 206 |
| கழை யிடை | 181 |
| களங்க | 271 |
| களி அழுந் | 268 |
| களிகூரந் | 271 |
| களித்தன | 185 |
| களிப்ப | 235 |
| களிமுகத | 243 |
| கள்வரும் | 253 |
| களளார் | 138 |
| கள்ளுண்ட | 58 |
| கள்ளுற | 289 |
| கற்ற நூல் | 98 |
| கற்றுறும் | 12 |
| கற்றென | 168 |
| கற்றை தாண் | 211 |
| கனக்கரம் | 139 |
| கனி நுழைந் | 55 |
| கனம பழுத் | 274 |
| கனிமுகம் | 81 |
| கனியே உண் | 83 |
| கனியே பார் | 32 |
| கனிவரும் | 233 |
| கனைவரும் | 87 |
| கனைவினை | 265 |
| கன்னலும் | 47 |
| கன்னியக் | 284 |
| காஉள | 170 |
| காட்சியை | 256 |
| காட்சியோடு | 35 |
| காட்டும் | 245 |
| காதல் அலாது | 125 |
| காதலே | 104 |
| காதல் மிக் | 80 |
| காதல் மிக் | 108 |
| காதல் மிக் | 120 |
| காமமே | 152 |
| காமமே | 174 |
| காய் நரகு | 107 |
| காய்ந்த | 131 |
| காய்பதம் | 70 |
| காய்முதிர் | 43 |
| கார் உரு | 223 |
| கார் முகத் | 187 |
| கார்வினை | 141 |
| காவினை | 212 |
| கால் திறத்து | 147 |
| கால் முகத்து | 66 |
| கால் வழி | 124 |
| காழ் வளர் | 132 |
| காவிக்கண் | 118 |
| காவிநேராய் | 67 |
| காவிபட்டு | 189 |
| காறுபடும் | 78 |
| காறுர் | 84 |
| காறுலகு | 58 |
| கான் அரும் | 263 |
| கான்சுர | 160 |
| கான்முகத்து அலர் | 208 |
| கான்முகத்து உயர் | 8 |
| கான்முழுது | 122 |
| கான்நீர் | 191 |
| கிளியோடு | 200 |
| கினைவரம் | 140 |
| குடக்கு | 129 |
| குடம்புரை | 154 |
| குயிலே | 200 |
| குரவமே | 47 |
| குருசிலர் | 90 |
| குலநலம் | 89 |
| குலமபுரி | 127 |
| குழலால் | 102 |
| குழல் எடுத் | 53 |
| குழல் எழுந் | 287 |
| குழல் நிகர் | 58 |
| குவிமதத் | 88 |
| குன்று இணை | 15 |
| குன்று உச்சி | 143 |
| குன்று ஒளித் | 196 |
| கூகையே | 59 |
| கூடார் | 280 |

கூண்டுண்டாம் 161
கூர்ந்து 159
கூவில் 234
கூறிய 79
கூனுரு 125
கூனமுகத் 77
கெட்டோம் 119
கேட்ட 7
கேட்டலும் 207
கேண்மின் 283
கேதகாரண 155
கேழ்வார் 30
கேள்வி 24
கொக்கொக் 231
கொடியஓர் 71
கொடியவேலி 234
கொடுந்தொல் 61
கொடைதரும் 73
கொடைவரும் 63
கொந்தென 104
கொல்லும்அச் 7
கொல்லும்வேலி 55
கொல்லென 134
கொலைகொள் 33
கொலைப்படு 176
கொழுமலர் 20
கொன்விளை 249
கோடாது 278
கோடிய 188
கோடிழந்து 124
கோட்பது 247
கோட்பரும் 105
கோதணி 51
கோதிலார் 141
கோதின் 117
கோதுகொள் 75
கோதைவாய் 71
கோமுரசு 283
கோலமிட் 73
கோலும் 234
கோலுண் 231
கோலைப் 280
கோல்கொண் 5
கோவில் 85
கோன்நல 141
கோன்பால் 261
கைஅடங் 49
கைக்கும் 107
கைப்படங் 214
கைதளர் 61
கைத்த 117
கைம்மாறு 223
கைவளர்கொடை 23
கைவளர்மருத் 103
கைவிளை 288
சண்பகம் 184
சலத்தெலா 187
சலத்தெல் 77
சாதல 103
சார்வளர் 292
சார்வையின் 292
சால்வளர் 184
சாற்றிக் 62
சாற்றின 168
சிட்டிடை 110
சிலையின 55
சிலைவளர் 97
சிலைவைத்த 136
சினம்பழுத்து 229
சினவிடை 130
சீரிய 93
சீரெலாம் 94
சீர்ச்செல் 65
சீர் தங்கும் 144
சீர்மீது 194
சீர்மீது 142
சீர்வளர் 93
சீலநீர்க் 161
சுகமுகத் 241
சுதையொளி 135
சுருதிநூல் 98
சுழல்தர 123
சுனையநீகமே 95
சுனையநீலமும் 215
சுனையனை 211
சுனைவளர் 130
சூர்முகத்து 34
சூல்புறத்து 99
சூழகத்து 185
சூளையில் 114
செங்கதிர் 68
செண்பகம் 26
செம்பதின் 13
செம்பொடி 284
செம்மாமணி 199
செய்த உதவி 33
செய்ததீமை 150
செய்தநற் 74
செய்பரந்த 228
செய்முறை 291
செய்வினை 252
செருக்கிடை 45
செல்அகத் 196
செல்மழை 288
செல்முகத் 1
செல்வர் 126

| | | | |
|---|---|---|---|
| செவ்வழி | 219 | தாயுநீ | 196 |
| செவ்விய | 181 | தாயும் நீயே | 262 |
| செற்ருறு | 229 | தாயுந் | 234 |
| சென்றுவீழ் | 136 | தாயுணர் | 54 |
| சென்ருகம் | 217 | தாயே | 277 |
| சென்ருக | 286 | தாயொடு | 275 |
| சேதகம் | 212 | தாய் அணி | 129 |
| சேய்வினை | 11 | தாய்முறை | 40 |
| சொரிசுமந்து | 4 | தாய் வளர் | 47 |
| சொரிந்த சீர் | 34 | தாய் வினை | 222 |
| சொரிந்த தேனி | 35 | தாய் வினை | 220 |
| சொரிவன | 115 | தார் புனை | 284 |
| சொல்திறத் | 167 | தாவிது | 273 |
| சொல்லரும் | 52 | தாளெழுந்த | 160 |
| சொல்லிய | 41 | தான் உயிர்த் | 86 |
| சொல்லிய | 208 | தான் செய்த | 290 |
| சொறிபடர் | 116 | தான் தனது | 46 |
| சொன்னகுர | 82 | திங்கள் நாண் | 70 |
| சொன்னபகை | 101 | திங்கள நீர்க் | 146 |
| சொன்னமுற் | 75 | திடம் துதைந்த | 252 |
| சோலைவாய் | 96 | திருத்தகும் | 109 |
| தகைத்தகு | 176 | திருந்த | 7 |
| தகை மலி | 190 | திருமணி | 71 |
| தசை செய் | 55 | திருவாய் | 294 |
| தணிவரும் | 21 | திரை புறங் | 230 |
| தண்ணங் | 279 | திரை போல் | 164 |
| தண்ணுறும் | 127 | திரையுடுத்த | 112 |
| தண்தவத் | 97 | திரை வளர் | 67 |
| தண்தாரின் | 280 | திலம் கலந் | 36 |
| தண்வாய் | 293 | திறங் கொளீ | 86 |
| தந்த நன்று | 254 | திறம்தகா | 78 |
| தப்பு அடும் | 210 | தீ அளித்த | 85 |
| தப்புற | 11 | தீங்கு இயன் | 236 |
| தம்துயர் | 68 | தீட்டிய | 79 |
| தம்முறை | 147 | தீது அளித் | 254 |
| தருமத்து | 202 | தீது ஒருங் | 248 |
| தவர்க்கும் | 278 | தீத்தன் | 214 |
| தனம் கிடந் | 166 | தீமுகத்து | 142 |
| தனிக்கதிர் | 150 | தீய உள் | 147 |
| தனையர் | 203 | தீயகாஞ் | 148 |
| தன் உயிராக | 8 | தீயதம் | 56 |
| தன்தாள் | 278 | தீயவர் | 122 |
| தன் திறத்து | 145 | தீயவும் | 165, 173 |
| தன்நேரில் | 250 | தீயவை | 155 |
| தன்பால் | 250 | தீயவை விழை | 220 |
| தன்முகம் | 44 | தீயினர் | 166 |
| தன் வயத் | 91 | தீயின் | 37 |
| தன்னுயிர் | 250 | தீயுமிழ் | 180 |
| தாக்கி | 277 | தீயொக்கும் | 61 |
| தாதை நெட் | 146 | தீய்த் திரள் | 123 |
| தாதை பெய் | 181 | தீய்ந்த | 155 |
| தாதையுண் | 210 | தீய் முகத் | 26 |
| தாயர் | 18 | தீவிற்ரு | 156 |

| | |
|---|---|
| தீய் முகத் | 263 |
| தீய் வரும் | 235 |
| தீய் வரும் | 237, 254 |
| தீர் அரும் | 167 |
| துகைத்த | 238 |
| துஞ்சித் | 5 |
| துஞ்சிய கண | 137 |
| துஞ்சியகால் | 222 |
| துஞ்சினரோ | 142 |
| துடைத்த | 28 |
| துணியுடை | 26 |
| துணியும் | 100 |
| துப்பு அப் | 232 |
| துப்பும் | 182 |
| தும்பி | 49 |
| துயர் ஏன் | 198 |
| துய்ப்பட | 151 |
| துவர்க் | 239 |
| துளிமாரி | 201 |
| துளிவரு | 264 |
| துள்ளி | 43 |
| துறவினுல் | 174 |
| துறை கெழு | 98 |
| துனிவரும் | 238 |
| துன்னமும் | 57 |
| துன்னும் | 191 |
| துன்னுயிரை | 257 |
| தூக்கினன் | 86 |
| தூங்கு | 42 |
| தூசனே | 184 |
| தூதுற | 244 |
| தூம்புடை | 69 |
| தூயாக | 246 |
| தூய் இரக்கு | 259 |
| தூய்வளர் | 115 |
| தூவிஅஞ் | 166 |
| தெண்கண் | 213 |
| தெண்ணம் | 35 |
| தெண்ணிற | 48 |
| தெருட்செல் | 77 |
| தெருத்தொறும் | 284 |
| தெருளால் | 29 |
| தெருள்தவழ் | 130 |
| தெருள்புறங் | 131 |
| தெளிகொள் | 37 |
| தெளித்த | 126 |
| தெளிவளர் | 153 |
| தெள்ளிய | 59 |
| தே இழுக் | 155 |
| தேங் கொள் | 178 |
| தேசிகத் | 203 |
| தேசிகப் | 25 |
| தேம்பு | 3 |
| தேர் எழும் | 21 |
| தேவருள் | 274 |
| தேவுலகு | 284 |
| தேருஅன் | 197 |
| தேறிய | 12 |
| தேற்றரும் | 39 |
| தேனகம் | 164 |
| தேனுர் | 161 |
| தேனுகும் | 19 |
| தேன் அருந் | 216 |
| தேன் இமிர் | 172 |
| தேன் உகும் | 259 |
| தேன் கலந் | 240 |
| தேன்குழை | 54 |
| தேன் செயும் | 221 |
| தேன்தோய் | 191 |
| தேன்தோய் | 201 |
| தேன்நலம் | 180 |
| தேன்பயில் | 275 |
| தேன்பொது | 247 |
| தேன்விளை | 190 |
| தொகையிலா | 12 |
| தொல்லை | 107 |
| தொல்வினை | 125 |
| தொல்வினை | 153 |
| தொன்னெறி | 138 |
| தோகையின் | 168 |
| தோடுசெய் | 242 |
| தோட்டழகு | 226 |
| நகர்நித்து | 192 |
| நகவளர்ந்த | 287 |
| நகுமணி | 285 |
| நகை எழ | 189 |
| நகைத்து | 7 |
| நகை வழி | 104 |
| நக்கும்ஒர் | 254 |
| நசையுற்று | 120 |
| நஞ்சிட்டு | 282 |
| நஞ்சினுர் | 17 |
| நஞ்சினேடு | 87 |
| நஞ்சு அமிழ் | 104 |
| நஞ்சு இனி | 53 |
| நஞ்சு நல் | 63 |
| நடலை | 240 |
| நடுவொக்கும் | 6 |
| நண்புஅகம | 169 |
| நதி தள்ளிக் | 94 |
| நதிதள்ளி நீந் | 159 |
| நமர் | 270 |
| நம்பி | 66 |
| நரகம் | 121 |
| நரம்பை | 100 |
| நல்கிய | 276 |

நல்லது 119
நலவினை 71
நவமணி 44
நளி முகத் 204
நள் நிலவு 225
நற்செய்கை 111
நனி அவா 62
நனைவரும் 95
நனைவரும் 248
நனைவரும் 252
நனுருய் 262
நனறு என் 6
நாகமேல் 181
நாடக 60
நாடலே 154
நாடிலகு 134
நாடு இழந்து 36
நாதன் அன் 22
நாதன்மிக் 96
நாம் செய் 88
நாம்பா 293
நாயினம் 233
நால்வகை 118
நால்வரும் 144
நாவலின் 151
நாவியின் 190
நாறிய 4
நாறுபூம் 117
நாற்கடல் 14
நான் அளிக் 2
நான் அளித்த 268
நான் மணி 291
நான் முகத் 60
நிதியில் 32
நிந்தை ஆகு 245
நிந்தை என் 243
நிரப்பு 99
நிருதி 28
நிரை எலா 46
நிலத்தில் 190
நிலத்தின் 149
நின் தன் 29
நின்பால் 271
நின்னெறி 130
நீங்கினுர் 178
நீடிய 241
நீட்டிடை 42
நீதநன் 267
நீதவாய் 29
நீரின் பால் 171
நீரெழும் 41
நீர் ஏந்தி 280
நீர்த்த 27
நீர்முகத்து 167
நூல் இயல் 11
நூல்நலம் 221
நூல்முகத் 135
நூலவழிகொணர் 70
நூல்வழி போதல் 137
நூறு 37
நூற்கடல் 122
நெடிது அழுங் 143
நெடிதுநாளு 105
நெடிதுநேடி 50
நெட்டிடை 178
நெட்டொளி 284
நெஞ்சில் 279
நெஞ்சே 139
நேராறு 143
நேரொரான் 233
நேர் அலர் 169
நொந்தால் 277
நொய்ய 180
நோயுடை 132
நோயொக் 247
நோய்அருந் 239
நோய்நிலை 113
நோய் வினை 233
பகைதீர்ந் 54
பகைத்தக 106
பகைத்த வெம் 8
பகைபடக் 100
பகையது 178
பகையரசு 259
படம் புனைந்த 64
படம் புனைந்து 44
படம் புனைந்து 97
படம் புனைந்து 131
படமே 201
படலையாய் 38
படிமுடித் 209
படியதோர் 259
படிவணங்கு 286
படுப்பதற்கு 114
படைப்பதற்கு 154
பட்டசெங் 29
பட்டவை 211
பட்டிலா 105
பணிநிலா 290
பணிந்தனர் 256
பணிமொழி 158
பணிவளர் 241
பண்கடந்து 232
பண்கவர் 290
பண்ணழ 65
பண்ணென்று 150

| | |
|---|---|
| பண்தீண் | 158 |
| பண்தேர் | 192 |
| பண்நடை | 69 |
| பண்நிற | 285 |
| பண்மறைத் | 130 |
| பண்முழுது | 138 |
| பத்திய | 196 |
| பயிலுண் | 162 |
| பரவுஅலர் | 23 |
| பரிதியே | 274 |
| பரிபூட் | 281 |
| பருகுதேனி | 39 |
| பருதிமுன் | 84 |
| பருகி வாழ் | 206 |
| பல்தொழிற் | 100 |
| பல்லியங் | 213 |
| பறவை | 69 |
| பற்றக் | 262 |
| பற்ருர் பழை | 198 |
| பற்ருர் வெம் | 4 |
| பனிமதி | 44 |
| பன்னலால் | 244 |
| பன்னரும் | 291 |
| பன்னிய | 186 |
| பாங்குஒளித் | 186 |
| பாங்கெழும் | 104 |
| பாசமாம் | 61 |
| பாடலோடு | 52 |
| பாடிய | 221 |
| பாடி ஆடி | 118 |
| பாயா | 6 |
| பாய் ஓர் | 262 |
| பார் இறைஞ் | 142 |
| பார்முகத் | 76 |
| பால் செய் | 138 |
| பால் நலம் | 256 |
| பால் நிமிர் | 146 |
| பால் நுரைத் | 226 |
| பால் நேரா | 48 |
| பாவிதந் | 204 |
| பானுயிர்த் | 204 |
| பான் இறை | 143 |
| பான் நலம் | 25 |
| பிடித்திழுத் | 78 |
| பிணித்த | 31 |
| பிரிந்த | 7 |
| பிரிந்தகன் | 29 |
| பிரிந்ததென்று | 127 |
| பிழை யிடை | 26 |
| பிறந்த | 2 |
| பிறந்த கால் | 187 |
| பிறந்து | 260 |
| பிறப்பதும் | 73 |
| பிறைதந் | 218 |
| பின் இயற் | 12 |
| பின்ருது ஓம்பி | 283 |
| பின்ருதுஓர் | 277 |
| புகன்ற | 99 |
| புக்க அனந்த | 270 |
| புக்கயா | 179 |
| புக்கன | 145 |
| புக்கு அடை | 245 |
| புடம் புனை | 167 |
| புண்கீறின | 280 |
| புண்குடைந் | 267 |
| புண்ணைக் காக்கும் | 268 |
| புண்தக | 59 |
| புண்தகா | 80 |
| புண் துதைந் | 52 |
| புராதனம் | 1 |
| புரிந்த | 205 |
| புருவ | 102 |
| புரை செயும் | 254 |
| புலக்கதம் | 15 |
| புல்பதிக் | 289 |
| புல்லவை | 113 |
| புல்லுடம் | 40 |
| புள்முழுது | 107 |
| புள்ளும் | 199 |
| புனம் செயும் | 103 |
| புனைந்த | 273 |
| புன்மலர்க் | 40 |
| பூ அகல் | 135 |
| பூக்காவ | 163 |
| பூக்கையை | 40 |
| பூட்சியின் | 23 |
| பூண்தார் | 82 |
| பூதி | 117 |
| பூத்தான் | 271 |
| பூ நக | 147 |
| பூ மனும் | 137 |
| பூ மாறி | 201 |
| பூ முற்று | 66 |
| பூ வது | 224 |
| பூவிடைக் | 25 |
| பூவிடைப் | 57 |
| பூ வும் | 194 |
| பெண்ணுரு | 292 |
| பெய்தஓர் | 134 |
| பெய்ததோர் | 260 |
| பெறுதியாக | 39 |
| பேதையாய் | 80 |
| பேதைவாய் | 73 |
| பேய் வளர் | 68 |
| பேய் வினை | 110 |
| பேரற | 23 |

| | |
|---|---|
| பேரொலி | 225 |
| பேர் நல | 87 |
| பேர் நல | 248 |
| பேர் நலம் | 169 |
| பேர்ந்த பூ | 45 |
| பேர்ந்தபேரு | 49 |
| பேர் பகை | 233 |
| பேர் வளர் | 164 |
| பேர்விளை | 292 |
| பைச்சுடர் | 168 |
| பொங்குஆர் | 281 |
| பொதிர் தரும் | 179 |
| பொய்க்கும் | 237 |
| பொய்த்த | 62 |
| பொய்மறுத் | 159 |
| பொய்மாறு | 261 |
| பொய்யா | 200 |
| பொருந்தலர் | 220 |
| பொருந்தலர் | 15 |
| பொருளில | 204 |
| பொருளில் | 269 |
| பொருள் இழந் | 69 |
| பொருள் ஈன்ற | 217 |
| பொறி குலாய் | 98 |
| பொறிப்பட | 114 |
| பொற்பரப் | 285 |
| பொன தொழில் | 11 |
| பொன்நெடு | 224 |
| பொன்நேர் | 121 |
| பொன்வளர் | 137 |
| பொன்விளக் | 75 |
| பொன்றும் | 148 |
| பொன்னார்உல | 133 |
| பொன்னார்சிற | 200 |
| பொன்னார்மணி | 81 |
| பொன்னைக் | 235 |
| பொன்னொளி | 72 |
| பொன்னையே | 181 |
| போக்கிய | 68 |
| போது அங் | 102 |
| போது வாய்மது | 46 |
| போதுவாய் மலர்த்த | 97 |
| போதுவாய் மலர்ந்து | 58 |
| போதென | 106 |
| போய்வினை | 274 |
| போர்எல்லை | 231 |
| போர்பொருள் | 173 |
| போர்முகத்து | 19 |
| போர்முகத்து | 237 |
| போர்முகத்துற்ற | 57 |
| போழ் வினை | 8 |
| போற்றினான் | 263 |
| பைம் மணி | 224, 291 |
| மக்கள் தங்கி | 28 |
| மக்கள் தம் | 255 |
| மஞ்சஞ் | 280 |
| மஞ்சிவர் | 143 |
| மஞ்சே | 203 |
| மடலொத் | 202 |
| மடல்கடிந் | 244 |
| மடவாரில் | 198 |
| மட்புலம் | 245 |
| மணிக்கலத் | 249 |
| மண்ணளவு | 9 |
| மண்ணிடத் | 234 |
| மண்ணுறக் | 47 |
| மண்தழன் | 205 |
| மண்நரம்பு | 41 |
| மண்நலம் | 81 |
| மண் பட | 292 |
| மண்மேல் | 194 |
| மண்விளக் | 183 |
| மதிஅகடு | 67 |
| மதியெழுந் | 193 |
| மதுக்கலத் | 121 |
| மந்திரி | 4 |
| மயில் அகல் | 225 |
| மயில் காள் | 162 |
| மரு அணி | 211 |
| மருளகொள் | 2 |
| மருள்வரு | 253 |
| மருள்விளைத் | 74 |
| மலைநேர் | 281 |
| மழைக்குலம் | 220 |
| மழையின் | 49 |
| மழைவழங் | 287 |
| மறையணி | 290 |
| மற்றவர் | 91 |
| மற்றியா | 36 |
| மனத்துளே | 50 |
| மனமொத் | 200 |
| மனைசெயும் | 217 |
| மனையிடை | 57 |
| மன் அரசு | 9 |
| மன்ன | 293 |
| மன்னா | 270 |
| மன்னு நீர் | 1 |
| மன்னுயிர் | 182 |
| மாகையோ | 136 |
| மாசறுத் | 206 |
| மாண்டகை | 24 |
| மாண்நெறி | 164 |
| மாய் அளவு | 266 |
| மாரியாற் | 28 |
| மாலை ஏந்து | 3 |
| மாலையாய் | 190 |

மால்வளர் 105
மாழ்வர் 117
மாற்றா 139
மாறு 33
மாறுவிட 82
மிகையுடை 168
மிகை விரிந் 269
மிககதும் 92
மிககார் 162
மிடிசென் 219
மிடிமுகத் 73
மிடிவினை 291
மிடைந்து 115
மின் எதிர் 27
மின சுடர 66
மின் தவழ் 292
மின் புரிய 258
மின்னலே 205
மின்னல் 56
மின்னார் 101
மின்னினம் 227
மின் நிறத் 225
மின்னிய 180
மின்னிழல் 154
மின்னின் 50
மின்னுயிர்த்து 134
மின்னுரைத் 253
மின்னை 22
மீ இரவரசன் 171
மீட்சி 9
மீட்டு 145
மீமழை 241
மீயுலா 203
மீய்முகத் 107
மீனில் நின்று 239
மீனென 173
மீனைக் 247
மீன்கறி 52
மீன்செய் 227
மீன் நலங் 230
மீன் நிகர் 225
மீன் நிலம் 276
மீன்முகத் 2
மீனமுழு 229
முகத்தின் 204
முகைஅணிந்து 179
முகையணிந்த 288
முகையின் 28
மூக்காலம் 247
முக்குடை 287
முச்சக 165
முடிமணி 226
முதிர்செய் 101
முதிர்ந்தன 24
முநது அழல் 136
முப்பகல் 207
மும்மழை 59
முயலே 278
முரல்வாய்ச் 64
முருகுவாய் 54
முருகுவாய் 216
முலை அணி 18
முலைமுக 16
முற்பட 128
முற்பரி 254
முற்பிறப் 76
முற்றி 216
முனி உரு 136
முன்பிறந் 74
முன்னாளுற் 133
முன்னான் 195
மூவரும் 48
மூவுல 243
மெய்கிடந் 258
மெய்கொள் 32
மெய்க்குடத் 175
மெய்த்துணை 45
மெய் நினைந் 149
மெய்மறந்து 187
மெய்முதற் 116
மெய்யால் 101
மெய்யார் தவ 197
மெய்யார் தன் 120
மெய்யிலார் 244
மெய்யுண்ட 14
மெய்வகை 87
மெலிவன 265
மெழுகினால் 35
மேகமாலை 212
மேகமொத்து 225
மேலார 282
மேவிமீ 268
மேவிய 67
மேய்ந்த 228
மேன்மை 236
மைக்கொடு 166
மைத்திறத்தால் 69
மைத்திறத்து 227
மைந்தனே 248
மை மறுத் 167
மை மாறிய 279
மையிழந் 245
மையொக் 230
மைவகை 42
மொட மொட 263
மொய்த்த 80

| | |
|---|---|
| மொய்யொடு | 44 |
| யாபபு உரி | 26 |
| வம்மிய | 144 |
| வயிர் செய் | 281 |
| வரம்தரும் | 109 |
| வரிந்த மயில் | 133 |
| வரிந்த மாமை | 238 |
| வரிவளர் | 51 |
| வருக்கை | 184 |
| வருணமே | 188 |
| வரைசர் | 162 |
| வரைகிடந் | 148 |
| வரை நாட் | 160 |
| வரையென | 158 |
| வலவகம் | 179 |
| வலித்தன | 177 |
| வல் உருத் | 169 |
| வவ்விய | 175 |
| வழுக்குடை | 11 |
| வளர்ந்த பூங் | 64 |
| வளர்ந்த வெண் | 42 |
| வளிகொண்டு | 193 |
| வளிவிள் | 21 |
| வளைகள | 7 |
| வளை கொள் | 191 |
| வள்வாய் | 5 |
| வள்ளலின் | 67 |
| வள்ளிய | 124 |
| வள்ளுற | 105 |
| வற்றியே | 27 |
| வன்மலை | 226 |
| வாச நெய் | 116 |
| வாடிய | 67 |
| வாடும் | 188 |
| வாட்டிய | 292 |
| வாமஞ் | 228 |
| வாயே | 82 |
| வாய்ந்தன | 60 |
| வாயமணி | 42 |
| வாராயோ | 261 |
| வார்பிணி | 283 |
| வாவிசேர் | 226 |
| வாழ நாளும் | 251 |
| வாள் அழுத் | 262 |
| வானகத் | 258 |
| வானகம் முதல் | 265 |
| வானர | 283 |
| வானவரா | 111 |
| வானவரை | 111 |
| வானோர் | 191 |
| வானிருந்து | 157 |
| வானில்நின்று | 186 |
| வானுகும் | 223 |
| வானுறை | 109 |
| வான்கலந்த | 36 |
| வான்தந்த | 208 |
| வான்தோய் | 48 |
| வான்புறத்து | 272 |
| வான்பூத்த | 286 |
| வான்மேல் | 293 |
| வான்வழங்கு | 38 |
| வான்வழங்கு | 269 |
| விஞ்சியகாலை | 132 |
| விஞ்சியவயத் | 89 |
| விஞ்சும் | 63 |
| விடுதி | 3 |
| விடையொடு | 68 |
| விட்டிடை | 211 |
| விட்புலம் | 2 |
| விண்கனிய | 48 |
| விண்செய் | 94 |
| விண்டார் | 260 |
| விண்டார் | 120 |
| விண்டார் | 163 |
| விண்டின் | 50 |
| விண்டுளி | 128 |
| விண்டென | 150 |
| விண்ணவர் | 109 |
| விண்ணுளே | 166 |
| விண்ணுளோர் | 194 |
| விண்ணெனும் | 109 |
| விண்ணோர் | 111 |
| விண்திக்கில் | 281 |
| விண் திக்கு | 269 |
| விண்தீண் | 232 |
| விண்தொழும் | 135 |
| விண்பால் | 30 |
| விண்முழுது | 185 |
| விண்மேல் | 261 |
| விண்விளக் | 263 |
| விதிஎழுத் | 267 |
| விதுப்பட | 177 |
| விதுப்படும் | 239 |
| விதுமுகத் | 98 |
| விதுவளர் | 244 |
| விரிந்தன | 43 |
| விரிந்தன | 195 |
| விரிந்து | 83 |
| விரிமாலை | 286 |
| விருந்தினை | 275 |
| விரும்பித் | 6 |
| விரைகிடந் | 237 |
| விரைகிடந் | 268 |
| விரை செய்கான் | 37 |
| விரைசெய்கொடி | 83 |
| விரைத்த | 235 |

விரைவாய்ப் 132
விரைவாய்ப் 217
வில் எழுந் 269
வில்செய் 99
வில்திறம் 256
விலபொரு 151
வில்வின் 22
விழுந்தென 47
விழுநதுற 122
விளை ஒளி 264
விள்ளா 139
விள்ளிய 129
வினைகெட 216
வினை செய் 95
வினைப்பகை 157
வினைமுதிர் 74
வினைவிளைத் 215
வீங்கிய 137
வீசின 181
வீடாச் 282
வீடு இழந் 111
வீட்டரும் 172
வீயும் 38
வீய்த்துணை 112
வீய்முதிர் 108
வீய்வரம் 65
வீய்வினை 10
வீரியர் 10
வீழ்ந்தகொம் 39
வீழ்நதவர் 63
வெண்ணிறத் 41
வெண்ணிறத் 222
வெண்ணெய் 202
வெந்த 100
வெருவின் 33
வெருள்தருங் 63
வெவ்வினை 236
வெவ்வினை 19
வெளி பொதிர் 269
வெறியிற் 95
வென்றி 253
வேகவேக 119
வேண்டா 261
வேண்டும் 239
வேய்நிற 136
வேய்ந்த 29
வேல்செய் 215
வேல் நேர் 195
வேல்முகத்து 155
வேல்முகத்து 236
வேள் அரிது 170
வேறுபட் 209
வேற்கடல் 141
வைகறை 77
வையகத்து 9
வையகத்து 291
வையத்து 197
வையத்தார் 246

# பிழை திருத்தம்

| பக்கம் | செய்யுள் எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 35 | 62 | சிநந்தாள் | சிறந்தாள் |
| 49 | 147 | கூர்ந்தாயுடன் | கூர்ந்தாய், உடல் |
| 76 | 94 | பேது இலா | பேதியிலா |
| 85 | 132 | நீர்த்தணித்த | நீர்த்தணிந்த |
| 95 | 173 | நவிழ்ந்த | அவிழ்ந்த |
| 100 | 19 | சமுக்கற | சழக்கற |
| 110 | 70 | வனைநல் | வனைதல் |
| 111 | 75 | மானவர் | தானவர் |
| 112 | 83 | சிறிய | சீறிய |
| 120 | 120 | ஏற்றும் | ஏத்தும் |
| 132 | 18 | உணர்ந்தாள் | உணர்ந்தாளே |
| 236 | 1 | கோல்முத்து | கோல்முகத்து |
| 248 | 44 | பின்னுரைப்ப | மின்னுரைப்ப |
| 250 | 52 | உள்ளத்தில் | உளத்தில் |
| 250 | 7 | விலகிடப் பளகு எலாம் | விலகிடத்துகளெலாம் |
| 290 | 113 | வேண்கவர் | எண்கவர் |

| பக்கம் | உரை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 49 | 147 | வருந்தி | நோய்கூர்ந்தாய்-வருத்தம் மிகுந்து |
| 74 | 85 | மருள்வினை | மருள்வினைத்த |
| 76 | 94 | பேது இலா | பேதியிலா (பேதி—பேதம்) |
| 111 | 75 | மானவர் | தானவர் |
| 121 | 125 | ஆழல் | ஊழல் |
| 156 | 2 | திரையினுள் – உலக அலைவினுள் | முந்நீர்த் திரையினுள்-உலகம், பேய், உடல் என்னு மூவகை அலைவினுள் |

| பக்கம் | உரை எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 184 | 123 | சாந்நம் | சாந்தம் |
| 206 | 77 | நெருங்கிய | நெருங்கிய தாமரையிதழில் |
| 223 | 47 | வான்உடும் | வான் உகும் |

முதற் காண்டத்துள்

| | | | | |
|---|---|---|---|---|
| பக்கம் | 5 | செய்யுள் 1 | திணை திரைப்ப | திரை திணைப்ப |
| ,, | 98 | ,, 121 | அருணம் | அருமணம் |
| ,, | 194 | ,, 63 | மலிவு | மலிர் |
| ,, | ,, | உரை ,, | மலிவு-மிகுதி | மலிர்—நீருற்று. |
| ,, | 191 | ,, 53 | சிலையொத்த | ஆடையணிந்த |



தமிழ்ச்சுடர், செயல்வல்லார்

# இளமுருகு பொற்செல்வி

அவர்களின்

# மணிவிழாக் காணிக்கை